உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய

திருவாசகம்

மூலமும்

தமிழ்ப் பேராசிரியரும், தலைமைச் சட்ட விரிவுரையாளருமாகிய

திருநெல்வேலி

திரு கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்

எம். ஏ., எம். எல்., (அட்வொகேட்) இயற்றிய

உரையும்

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது

சென்னை - 1

உரிமை
பதிப்பாசிரியருக்கே

— —

ரூபாய் 7—00

தோற்றுவாய்

திருவாசக ஆசிரியரது வரலாற்றினைப் பற்றித், திருவாசகம் யாது நமக்கு அறிவுறுத்துகின்றதென்பதைச் சுருக்கமாக ஈண்டு ஆராய்வாம். திருவாசக ஆசிரியர் தமது திருப் பெயரைத் தெளிவாகத் தமது நூலுள் கூறவில்லையாயினும், ஆசிரியரது திருப்பதி திருவாதவூரென்பது 'வாதவூரினில் வந்தினிது அருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்' என்ற அடிகளாற் றுணிபாயறியக் கிடக்கின்றது.

பண்டாய நான்மறையின் இறுதிச் செய்யுளில் 'மாசில் மணியின் மணிவார்த்தை பேசி' என்ற குறிப்பால், அடிகளியற்றிய நூல் மணிவார்த்தையாகிய மணிவாசகம் என்று கருத இடமுண்டு. மணிவாசக ஆசிரியர் மணிவாசகனெனவும், மாணிக்கவாசகனெனவுங் கூறப்படுதலியல்பே.

அருட்பத்திலே, 'திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்த மேவியசீர்' என்றமையால், அவர்க்குத் திருப்பெருந் துறையிற் குருந்த மரத்தடியில் இறைவன் அருள் புரிந்தனனென்பது தெளிவு.

இறைவன் அந்தணனாகி ஆண்டு கொண்டருளியதும், குதிரைச் சேவகனாய் மதுரைப் பெருநன்மா நகரில் எழுந் தருளியதும், பாண்டியனுக்குப் பரிமா விற்றதும், நரியைக் குதிரையாக்கிய தன்மையும், அடியவர்க்காகப் பாங்காய் மண் சுமந்தருளிய பரிசும், நந்தம்பாடி, உத்தரகோசமங்கை, திருப் பூவணம், பூவலம், திருவிடைமருதூர், திருக்கழுமலம், திருக் கழுக்குன்றம், தில்லை முதலியவிடங்களில் அடிகட்குக் காட்சி கொடுத்ததும், பெருந்துறையில் ஆண்டபோது, 'தில்லையுட்

கோலமொரு நாள் பொதுவினில் வருக' என அடிகளைப் பணித்தது, உடன்சென்ற அடியவர் ஒன்ற ஒன்ற உடன் கலந்தருளியது, திருவார் பெருந்துறையிற் கருவார் சோதியில் கரந்த கள்ளமும் கீர்த்தித் திருவகவலுட் குறிக்கப்பட்டன.

அடிகள் திருப்பெருந்துறையில் அருளிய பதிகங்களிற் சில இறைவன் தமக்கு எளிவந்தருள் புரிந்ததை வியப்பனவாகும். அச்சோப்பத்து, சென்னிப்பத்து, அற்புதப்பத்து, அதிசயப்பத்து என்பவை அத்தன்மையன. திருவாலவாய்க்குச் சென்று அடிகள் திருப்பெருந்துறைக்கு மீளுங் காலை, திருவுத்தரகோசமங்கையிற் றங்கி நீத்தல் விண்ணப்பம் பாடியிருத்தல் கூடும் ஆதலால், திருப்பெருந்துறைக்கு மீண்டு வந்தவுடன் அடிகள் பாடிய சில பதிகங்களும், இறைவன் அடியாரோடு தாம் உடனேக முடியாமை பற்றி வருந்தி இறைவன் தம்மை உடனே வீடு சேர்க்கவேண்டுமென்ற விருப்பத்துடன் அடிகள் பாடிய பதிகங்களாகும். அவை ஆசைப்பத்து, அடைக்கலப்பத்து, பிரார்த்தனைப் பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, திருச்சதகம், செத்திலாப்பத்து முதலியனவாகும். திருப்பெருந்துறையில் தங்கிய காலை சிவாநுபோக முதிர்ச்சியுற்றுப் பாடிய பதிகங்கள் பண்டாய நான்மறை, திருவார்த்தை, திருவெண்பா, குழைத்தபத்து முதலியனவாகும். பிறர்க்கு வீட்டு நெறியை அறிவுறுத்துவான் பாடிய பதிகங்கள் திருப்பள்ளியெழுச்சி, திருப்பாண்டிப் பதிகம், திருத்தசாங்கம், சிவபுராணம், திருவம்மானை முதலியன. கோயில் திருப்பதிகமென்பதும் திருவம்மானைப் பதிகமென்பதும் திருப்பெருந்துறையிற் பாடப்பட்டனவாகவே தோன்றுகின்றன. அடிகள் திருப்பெருந்துறையை நீங்கித் தில்லைக்குச் செல்லுங்காலை திருவாரூரிற் பாடப்பட்டது திருப்புலம்பல். பின்னர் திருவிடைமரு

தூரிற் பாடப்பட்டது திருவேசறவு என்பது 'அருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட' என்றமையாற் காண்க.

பின்னர் அடிகள் திருக்கழுமலம் அடைந்து பிடித்த பத்துப் பாடியருளினார். திருவண்ணாமலையில் திருவெம்பாவையும், திருக்கழுக்குன்றத்தில் அத்தலப் பதிகமும் பாடிய பின்னர், தில்லையை அடைந்து கண்டபத்து, குலாப்பத்து முதலியவற்றில் தமது அனுபவத்தை இனிதுரைத்த ஆசிரியர், பிறர்க்கு உண்மையறிவு அளிக்கற் பொருட்டு அகவல் மூன்றினையும், குயிற்பத்து, கோத்தும்பீ, திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருத்தெள்ளேணம், திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல், திருவுந்தியார், அன்னைப்பத்து முதலியவற்றைப் பாடியருளியபின், வீடுபேற்று விருப்பால் கோயில் மூத்த திருப்பதிகம், எண்ணப்பதிகம், ஆனந்தமாலை யாவற்றையும் பாடி, வீட்டிற்கு அடியவரொடு எழுவான் திருப்படை யெழுச்சி, யாத்திரைப்பத்து என்பவற்றை இயற்றி, இறுதியாகச் சீவோபாதியை யொழிக்குந் திருப்படையாட்சியைப் பாடியிருத்தல் கூடும். அல்லது யாத்திரைப்பத்தை இறுதியாகப் பாடியிருத்தலும் கூடும். மேற் குறித்த பதிகங்களுட் போந்த கருத்தை ஒரு சிறிது ஆராய்வோம்.

அச்சோப்பதிகத்தில், இறைவன் தம்மை மும்மல மறுத்து ஆட்கொண்டு வெண்ணீறணிவித்துத் தையலார் மையலிலே தாழ்ந்து விடாது ஓங்காரத்துட் பொருளை யருளிச் செய்து நெறிகாட்டிச் சிவமாக்கித் தன் கழலே சேரும் வண்ணம் பணித்தமை கூறப்பட்டது. இது திருப்பெருந்துறையில் அடிகளை யாட்கொண்டதை வியந்து கூறப்பட்டதாகும். சென்னிப்பத்திலுள் எவராலுமறியப்படாத திருப்பெருந்துறை நாயகன் தனது சேவடியைத் தமது சென்னி

யிற் கூட்டித் தமதுள்ளத்தைக் கவர்ந்ததை அடிகள் இயம்பியதோடு, பக்தர்கள் இறைவன் திருவடியை யடைந்து பாசந்தீரப்பெற வேண்டுமென்று குறிப்பித்தார். இறைவன் அடியார்களைத் தலைவியாகக்கொண்டு அவர்கள் கையில் வளை கொண்டதுங் கூறப்பட்டது காண்க. அதன் ஐந்தாம் பாட்டில் 'வேயதோளுமை பங்கன்' என்றது தேவாரத்துள் 'வேயுறு தோளிபங்கன்' என்பதை நினைவுறுத்தும்.

அதிசயப்பத்திலுள்ளதும் அற்புதப்பத்திலுள்ளதும் உலக வாழ்க்கைத் துயரினின்று தம்மை யாண்ட அதிசயத்தை அடிகள் விளக்கினார். உயிருண்ணிப்பத்தினுள் தாம் பெற்ற சிவானந்தத்தை வியந்தனர்

நீத்தல் விண்ணப்பத்தில், 'மங்கைகளைத் தாழ் குழல்வன்' என்றமையால் அடிகள் காலத்தில் பஞ்சபாசமென்ற கருத்துப் பயின்றமை தெளியப்படும். உலக வாழ்க்கைப் பேரிடர்களுள் பெண்டிர் மையலே மிக்க வலிமையுடைத்து என்பதும், அடிகள் இறைவனை ஏசினும் எத்தினும் தன் பிழைக்கே குழைந்து வேசறுதலும் அதனுட் கூறப்பட்டன. ஆசைப் பத்தினுள் உடற்பொறையின் இழிவும், தாம் உடலிற்பற்றின்றிப் புளியம்பழம் போன்றிருந்தமையும், இறைவன் திருவருட் சோதியைக் காணவும் பேராயிரமும் பரவித் திரியவும் ஆசைப்பட்டமையும், இறைவன்வந்து வாராவுலகந் தந்தாட் கொள்வான் என்பதும் குறிப்பிக்கப்பட்டன. அடைக்கலப் பத்தினுள் பழுத்த மனத்தடியார் இறைவனுடன் போயினமையும், பெண்டிர் வெகுளி வலையிலே தாம் அகப்பட்டு வருந்தினமையும், இறைவன் அருளாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்ற காலை விக்கினமையால் தண்ணீர் தந்து இறைவன் உய்யக் கொள்ள வேண்டுமென்பதையும் அடிகளியம்பினமை காண்க.

பிரார்த்தனைப் பத்திலே, அடியாரெல்லாம் அருளாரமுதப் பெருங்கடல் புக்கழுந்தத் தாம் இருளாராக்கை பொறுத்து எய்த்து அலந்தமையும், பேரா ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா மாளா இன்பமாகடல் புகுதற்கு மெய்யன்பு தமக்கு வேண்டுமென்பதும் கூறு முகத்தான் அடியார்க்குக் கிடைத்த பேரின்பம் தமக்குக் கிடையாமைபற்றிய வருத்தம் குறிப்பிக்கிறார்

புணர்ச்சிப் பத்திலே இறைவனைக் கலந்து இன்புறும் பெற்றி தமக்கு எக்காலத்துக் கிட்டுமோ வென்று ஏங்குற்று இரந்தமை காண்க. வாழாப்பத்திலே இறைவன் தம்மை அழைத்துக்கொள்ளாவிட்டால் உலகில் தாம் வாழ்வதில்லை என்று வற்புறுத்துகிறார்

அதிசயப் பத்திலே, வாசனைமலத்தை யொழிப்பதாகிய திருநாம அஞ்செழுத்தைத் தாம் எண்ணாமை குறித்தார். அருட்பத்திலே தாம் இறைவனை யாதரித்தழைத்த காலை அவன் அபயந் தாராமை குறிப்பித்தார். செத்திலாப் பத்திலே வீடடைதற் பொருட்டுத் தாம் தம் முடலை விட்டு விடாமை பற்றிய தமது கலக்கத்தை யறிவித்தனர்.

திருச்சதகத்துள், அடிகள் இறைவன்பால் இடைவிடாத பேரன்பு செய்ய உறுதி கொண்டதும், திருவருளாலே நரகம் புகுந்தாலும் அதனை இகழாத மன நிலையுற்றதும், வீடு பெறத் தாம் நாடகத்தால் விழைவதும், தாள் நின்று உசலிவரை உருகாமை பற்றித் தாம் வருந்துவதும், தமக்கு இறைவன் காட்டாதனவெல்லாங் காட்டிக் கேளாதனவெல்லாங் கேட்பித்துப் பிறவாமற் காத்தாட்கொண்டமையால் தாம் யார்க்கும் குடியல்லாத் தன்மை யெய்தியதும், தம் நெஞ்சை அன்பின்மைக்காகக் கடிந்துகொள்வதும்,

காய வாழ்க்கையைத் தாம் தரிக்க இயலாமையையும், ஆடிப் பாடி அன்புசெய்து அம்பலத்தாடும் பெருமான் கழலடி அடைய விரும்பினமையையும் அறிவுறுத்தினமை காண்க. 'பண்டாய நான்மறையுள்', பெருந்துறைப் பெருமானை வாயாரப் பேசித் தாம் பிறப்பறுத்தமை தெரிவிக்கின்றார். திருவெண்பாவினுள், இருவினை நீங்காமையால் உடல் நீங்காதிருந்த தம்மை இறைவன் தமக்கு ஆனந்தமால் ஏற்றியதும், மூவருமுப்பத்து மூவருங் காணாத அவன் யாவரும் பெற்றறியா இன்பத்துள் தம்மை வைத்ததைத் தம்முடைய நெஞ்சையே ஊராக் கொண்டதும் உரைக்கின்றார். திருவார்த்தையுள், பெருந்துறைப் பெருமான் மண்ணிடை வந்திழிந்து தமக்கு ஆதிப்பிரமம் வெளிப்படுத்திய வகையறிவார் எம்பிரானாவார் என்றார். குழைத்தபத்தினுள், உடலை நீக்கி வீட்டினையருள வேண்டுமென்று வேண்டினும் தம் செயலற்று இறைவன் திருவுள்ளக் கருத்தின் வழியே நிற்கும்படி தம்மை அவன் குழைத்து விட்டதாகக் கூறினமை காண்க. திருப்பள்ளியெழுச்சியுள், 'யாவருமறிவரியாய் எமக்கெளியாய்', 'திருப்பெருந்துறையுறை கோயிலுங் காட்டி', 'அந்தணனாவதுங் காட்டி' என்றமையால் தமக்கு இறைவன் அந்தணனாய் எழுந்தருளியதும் அவன் திருப்பெருந்துறையில் கோயில் கொண்டமையும் தெரிவித்தமை யறிக. திருப்பாண்டிப் பதிகத்தில், இறைவன் பரிமேலெழுந்தருளி வந்து பாண்டியமன்னனுக்குப் பிறவியறுத் தருளியதுங் கூறிப், 'பாண்டிப்பிரான் தன்னடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்துமுந்துமினே' என்றார். இறைவனைப் பாண்டியனார், தென்னவன், மீனவன் என்ற பெயர்களா லழைப்பது இதனுட் காண்க.

திருச்சதகம் பெருந்துறையிற் பாடப்பட்டதாகவே தோன்றுகிறது. பெருந்துறைக்கோன் திருநாடு தென்

பாண்டி நாடெனவும், ஊர் உத்தரகோசமங்கை யெனவும், ஆறு ஆனந்தமெனவும், மலை அருள்மலையெனவும், ஊர்தி குதிரையெனவும், படை கழுக்கடையெனவும், பறை நாதமெனவும், தார் தாளியறுகெனவும், கொடி ஏற்றுக்கொடியெனவு மியம்பினார். சீர்த்தித் திருவகவலுள், நீற்றுக் கோடியும் கழுநீர்மாலையும் அவனுக்குரியன வென்று செப்பினர், கொடியும் மாலையு மொழிந்த பிறவெல்லாம் தசாங்கத்துட் கூறியவாறே கூறினர். திருவம்மானையும் திருப்பெருந்துறையிற் பாடப்பட்டதாகவே தோன்றுகிறது. அதனுள், இறைவன் நீறணிந்த கோலத்தைத் தமது சிந்தையை உருக்கியதும், சிவம் காட்டிக் கருணைத்தேன்காட்டி, நாட்டார் நகை செய்யத் தம்மையாட் கொண்டதும், நாம் மேலை வீடெய்துமாறு ஆட்கொண்டதும், மதுரையில் ஈசன் மண் சுமந்து கூலி கொண்டு மன்னனால் மொத்துண்டு புண் சுமந்ததும், அவன் தன்னூர் தமிழ் விளங்கும் தென் பாண்டிநாட்டுறை யிருப்பதும், பாண்டிநாட்டைச் சிவலோகமாக்கி வைத்ததும், நாம் ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்ப் பிறவாய்ப் பிறந்திறந்தெய்த்ததும் இயம்பினர். தமது முந்தைவினை முழுதும் ஓயச் சிவபுராண முரைப்பார், தாம் புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்ததும், தாமுய்யத் தம் முள்ளத்தே இறைவன் ஓங்காரமாய் நின்றதும், தமக்கு நிலந் தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டியதும் அறி வுறுக்கின்றார். திருவேசறவினுள், நரிகளை யெல்லாம் குதிரையாக்கியது கூறியபின், தாம் தவஞ்செய்து சிவாயநம எனப்பெற்றதை யறிவித்தனர். திருப்புலம்பலுள், இறைவன் திருவடியன்றித் தாம் வேறொன்றும் புகழ்வதில்லை என்பதும், இடையறாத அன்பு ஒன்றே தாம் வேண்டியதெனவுங் குறிப்பித்தார். பிடித்தபத்தினுள், பிறப்பிறப்பு மயக்கம் துன்பம் என்பவற்றின் தொடர்பெல்லா மொழித்த இறைவனைத்

தாம் இடைவிடாது சிக்கெனப் பிடித்ததாகக் கூறினார். திருவெம்பாவையுள் மார்கழி நீராடலை விளக்கினர். திருக்கழுக்குன்றப்பதிகத்தில், உணர்விலாததோர் வித்து மேல் விளையாமல் தன் வினையொத்தபின் கணக்கிலாத திருக்கோலம் இறைவன் தமக்குக் காட்டியதும், ஞாலமே கரியாகத் தாம் இறைவனை நச்சியதும், இறைவன் தமக்குப் போதநிலை தோர் கற்பித்ததும் விளக்கினர்.

அடிகள் தில்லையுட் சென்றவுடன் பாடிய பதிகம் கண்டபத்தாக விருத்தல் கூடும். அதனுள், உருத்தெரியாக் காலத்தே உள் புகுந்து உளம் மன்னி கருத்திருத்தி ஊன் புகுந்தமையும், பல்லோருங்காணத் தம் பசுபாசம் அறுத்தமையும், சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறுந் தம்மை யாட்கொண்டமையும், பித்தனிவனெனத் தம்மை யாக்குவித்துப் போமாறே சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்ததையும், அளவிலாப் பாவத்தால் அழுக்குண்டு அறிவின்றி நின்ற நிலைமை மாற்றினமையும் அடிகளியம்பினார். குலாப்பத்தினுள், ஓடுங் கவந்தியுமே உறவாகச் சிவன் கழலே நாடி நின்ற தமது துறவு நிலையையும், தமது ஆனந்தக் கூத்தினையும், அன்பர்களொடு [illegible] தூய்மை செய்தமையும், செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்யுந் தமக்கு இம்மைப் பயனைத் தில்லையிற் கண்டேனெழுந்து வீடருள்வானென்பதையுங் குறிப்பித்தார். திருவண்டப்பகுதியுள், தேவநாயகன் சிவபெருமான் புவனியிற் சேவடி தீண்டித் தம்மை யாட்கொண்டருளினமையும், பிச்சேற்றினமையும், தமது அவயவங்களைக் கோல் தேன் கொண்டு செய்தமையும், சொல்ல முடியாத ஆனந்த அமுதத்தை மயிர்க்கால் தோறும் எலும்புத் துளைதோறும் தேக்கிடச் செய்தமையும், உள்ளத்தை இன்ப ஊற்றுக்கினை

மையும், அடியார்களை யெல்லாம் அருட்பெருந் தீயின் வழாமை யொடுக்கினமையுங் குறிப்பித்தமை காண்க. போற்றித் திருவகவலுள், 'கடையேனடிமை கண்டாய் போற்றி', 'என்னையுமொருவனாக்கி யிருங்கழல் சென்னியில் வைத்த சேவக போற்றி', 'பரகதி பாண்டியற்கருளினை போற்றி', 'பிழைப்புவாய்ப் பொன்றறியா நாயேன் குழைத்த சொன் மாலை கொண்டருள் போற்றி' என்பன அடிகள் சரிதத்திரச் சார்பானவை. திருப்பொற்சுண்ணத்தில், அடியார்கட்கு அறிவுரையாக 'வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள் கூவுமின் தொண்டர் புறநிலாமே, குனிமின் தொழுமின்', 'நமு முழுதேவர் கணங்களெல்லாம் நம்மிற்பின் பல்லது எடுக்க வொட்டோம்' என்றமை காண்க. திருக்கோத்தும்பியுள், 'நானாரென் னுள்ளமாரா ஞானங்களா ரென்னை யாரறிவார் வானோர் பிரான் என்னை யாண்டிலனேல்', 'எப்போதும் ஆனந்தத் தேன் சொரியுங் குனிப்புடையான்', 'கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பனென்னையு மாட்கொண்டருளி', 'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை,' 'வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே' என்ற வரிகள், அடிகளின் அநுபவத்தை விளக்குவன. அவ்வாறே திருத்தெள்ளேணத்துள், 'உருநாமறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்', 'திருவார் பெருந்துறை மேயபிரானென் பிறவிக் கருவேரறுத்த பின் யாவரையுங் கண்டதில்லை',

'அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர் கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெல்லாஞ் சிரிக்கும்',

'ஆவா அரிஅயன் இந்திரன் வானோர்க் கரிய சிவன்
வாவாவென் றென்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்',

'கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவமென் றிரண்டச்சந் தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்',

'அடியேனை யாண்டுகொண்டு
பத்திக்கடலுட் பதித்த பரஞ்சோதி',

'உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாஞ்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ',

'ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென்னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'

என்னும் வரிகள், இறைவன் அடிகளை நேரில் ஆட்கொண்டருளியதற்கு அகச் சான்றுகளாகும். திருப்பூவல்லியுள், 'இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்' என்ற வரிகள், அடிகளது துறவுநிலையைக் குறிப்பன. திருத்தோணோக்கத்துள்,

'புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்க மாடாமோ',

'ஊழிமுதற் சிந்தாத நன்மணி வந்தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ'

என்னுந் திருப்பாட்டுகள் அடிகளது அநுபவத்தை விளக்குவன. திருப்பொன்னூசலுள், 'நாண் மலர்த்தாள் நாயடியேற் கூடாகத் தந்தருளும்', 'தன்னீறெனக் கருளித் தன்

கருணை வெள்ளத்து மன்னூற மன்னும்', 'ஞாலமிகப் பரி மேற்கொண்டு நமையாண்டான' என்பனவும், அன்னப் பதிகத்துள், 'உள்ளநின்றுருக்கி யுலப்பிலா ஆனந்தக் கண்ணீர் தருவரால்', 'பாண்டி நன்னாடா பரந்தெழு சிந்தையை ஆண்டன்பு செய்வரால்' எனனுமடிகளும் அத்தன்மையனவே.

ஆனந்தமாலை யுள்ளும் கோயில் மூத்த திருப்பதிகத் துள்ளும் எண்ணப் பதிகத்துள்ளும், தில்லையுட் காத்திருந் தும வீடு விரைவில் இறைவன் அருளவில்லையே என்று அடிகள் வருந்திய குறிப்புக்கள் காணப்படும்.

"கன்னேரனைய மனக்கடையாய்க் கழிப்புண்டவலக்கடல் வீழ்ந்த
என்னேரனையே னினியுன்னைக் கூடும்வண்ணம் இயம்பாயே",

"கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே",

"தேய்வ தில்லைநடமாட திகைத்தேன் இனித்தான் தேற்றாயே",

"முகந்தான தாராவிடின் முடிவேன்
பொன்னம்பலத் தெம்முழுமுதலே",

"அரைசே பொன்னம்பலத்தாடு மமுதே யென்றுன் னருள்நோக்கி
இரைதேர் கொக்கொத்திரவு பகலே சற்றிருந்தேவே சற்றேன்",

"இரங்கு நமக்கம்பலக் கூத்தனென் றென்றே மாந்திருப்பேனை
அரங்கத்தனை கற்பித்தாண்டா யாள்வாரிலி மாடாவேனோ",

"பல்காலுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம்பல மென்றே
ஒலகா நிற்குமுயிர்க் கிரங்கி யருளாயென்னை யுடையானே",

"பெரியோரொருவன் கண்டுகொ ளென்றுன் பெய்கழலடி காட்டிப்
பிரியே னென்றென் றருளியவருளும் பொய்யோ வெங்கள்பெரு
[மானே",

“பத்திலனேனும் பணிந்திலனேனும்
உன்னுயர்ந்த பைங்கழல்காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும்
பிறப்பறுப்பாய் எம்பெருமானே
முத்தனையானே மணியனையானே
முதல்வனே முறையோவென(று)
எத்தனையானும் யான்தொடர்ந்துன்னை
இனிப்பிரிந்தாற்றேனே”.

திருப்படையாட்சியுள், ‘எண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை எய்துவதாகாதே’ ‘எல்லையிலாதன எண்குணமானவை எய்திடும் ஆகாதே’ என்றமையால், வீடுபெறுதற்கு முன்னே அடிகள் அவைகளையுடையராயினரென்பது உணக்கிடப்படும். திருப்படையாட்சியுள், இறைவனோடு உயிர் இரண்டறக் கலந்து பேரின்பம் நுகருங்கால் பிறநினைவுகளைந்து பின்மையை இனிதுரைத்தனர். திருப்படையெழுச்சியால், தொண்டர் பத்தர் சித்தர் யோகிகள் யாவர்க்கும் அடிகள் தலைவராந் தன்மை யறியக்கிடந்தது. ஞானத்தின் ஞானத்தினைத் தலைப்பட்டு அநுபவாதீதமுற்ற அடிகள் யாத்திரைப் பத்தினுள், அடியார் யாவரையும் தாம் பெற்ற பேரின்ப நிலைக்கு விரைந்து வருமாறு அறிவுரை பகர்ந்தருளிய அருட்டிறங் காணப்படும். அது பின் வரும் அடிகளா லறியப் படும்.

“போவோம் காலம்வந்தது காண்பொய்விட்டுடையான்
கழல்புகவே”

“புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றேவந் தாளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இதுசெய்ம்மின்”

"விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர் காலம் இனியில்லை உடையான் அடிக்கீழ்ப் பெருஞ் சாத்தோடுடன் போவதற்கே ஒருப்படுமின், அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார்கத வதடையாமே, புடைபட்டுருகிப் போற்றுவோம் புயங்கன் ஆள்வான் புகழ்களையே."

"நிற்பார் நிற்க நில்லா வுலகில் நில்லோம்இனி நாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்
நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே ஒருப் படுமின் [கே
பிற்பால் நின்று பேழ்கணித்தாற் பெறுதற் கரியன் பெருமானே."

திருவாசகப் பொது ஆராய்ச்சியும் மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தைப்பற்றிய குறிப்பும் 'மாணிக்க வாசக சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்' என்ற நூலிற் கண்டு கொள்க.

பதிகவகராதி

பதிகம்	பக்கம்
அச்சப்பத்து	௪௫௧
அச்சோப்பதிகம்	௫௩௬
அடைக்கலப்பத்து	௩௭௪
அண்டப்பகுதி	௪0
அதிசயப்பத்து	௩௮௬
அம்மானை	௨௧௪
அருட்பத்து	௪0௬
அற்புதப்பத்து	௪௮௫
அன்னைப்பத்து	௩௧௬
ஆசைப்பத்து	௩௮0
ஆனந்தமாலை	௫௩௫
உந்தியார்	௨௭௪
உயிருண்ணிப்பத்து	௪௪௪
எண்ணப்பதிகம்	௫0௫
எம்பாவை	௧௬௪
ஏசறவு	௪௭௧
கண்டபத்து	௪௨௩
கழுக்குன்றப்பதிகம்	௪௧௮
கீர்த்தித்திருவகவல்	௧௮
குயிற்பத்து	௩௨௫
குலாப்பத்து	௪௭௬
குழைத்தபத்து	௪௩௭
கோத்தும்பி	௨௪௬
கோயிற்றிருப்பதிகம்	௩௫௫
கோயின்மூத்த திருப்பதிகம்	௩௪௭
சதகம்	௬௧
சாழல்	௨௬௯
சிவபுராணம்	௧
செத்திலாப்பத்து	௩௬௪
சென்னிப்பத்து	௪௬௨
தசாங்கம்	௩௩௨
தெள்ளேணம்	௨௫௮
தோணோக்கம்	௩0௩
நீத்தல் விண்ணப்பம்	௧௬௩
படையாட்சி	௫௨௭
படையெழுச்சி	௫௧௮
பண்டாய நான்மறை	௫௨௩
பள்ளியெழுச்சி	௩௩௮
பாண்டிப்பதிகம்	௪௫௭
பிடித்தபத்து	௪௬௩
பிரார்த்தனைப்பத்து	௪௨௬
புணர்ச்சிப்பத்து	௩௬௩
புலம்பல்	௪௭௭
பூவல்லி	௨௮௨
பொற்சுண்ணம்	௨௩0
பொன்னூசல்	௩௧௧
போற்றித்திருவகவல்	௬௫
யாத்திரைப்பத்து	௫0௬
வார்த்தை	௪௬௮
வாழாப்பத்து	௪0௧
வெண்பா	௫௧௮

திருவாசகப் பெருமை

நேரிசை வெண்பா

வள்ளுவர்நூ லன்பர்**திரு வாசகந்**தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்
தொண்டர் புராணந் தொகைசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம். (௧)

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். (௨)

நேரிசை யாசிரியப்பா

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசக மிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே. (௩)

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த**வா சகமே**
வாசக மதற்கு வாசியம
ஆசணி நுண்மருங்குற் றேழையிடத் தவனே. (௪)

வலமுழு உயரிய நலமலி கயிலை
நதிகலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப உகந்தமா ணிக்க
வாசகன் எனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து

**

காவெறுமை புகுந்தில் நடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனும் வயல்புக வூன்றிய வன்பாம்
வித்திற சிறந்தே மென்முளை தோன்றி
வளர் பத்திக் கொடியினை மலர்ந்து
விளக்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. (௫)

நலமலி மணிமொழி நல்லிசைப் புலவ!
மனத்தின் றுருக்கு மதுர வாசக!
கலகுறு புலனெறி விளங்குறு வீர!
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யெனு முணரா னொன்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று மயங்கித் தோன்றும்
பழிப்பி லென்று விழிப்பி னரிய
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே. (௬)

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நிழல்வா யுண்ட நிகரிலா னமுதத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற
பொற்கல நிகர்க்கும பூசுரர் நான்மறை
மட்கல நிகாக்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பயனறமே. (௭)

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. (௮)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

மாசறு மணிபோற் பன்னுள் வாசக மாலை சாத்திப்
பூசனை செய்து பன்றைட் புண்ணிய மன்று ளாடும்

ஈசன தடிகணீ ழெய்தி யீறிலா வறிவா னந்தத்
தேனொடு கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார். (௯)

திருவாசக உண்மை

சிவபுராணம்

தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்திற
பேசுதிருச் சிவபுரா ணத்தகவல் பெருமை சொலில்
ஈசர்தமக் கியல்பான திருநாம முதலெவையு
மாசறவே வாழ்கவென வாழ்த்துமென்ற வருட்குறிப்பாம். (௧)

கீர்த்தித்திருவகவல் - திருவண்டப்பகுதி

புகழ்பெருகுஞ் செய்கையெல்லாம் புகலகவ லொன்றாக
திகழ்திருவண் டப்பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவா
யகலமுறத் தேர்ந்திடவே யருளியதற் பொருளாகும். (௨)

போற்றித்திருவகவல்—திருச்சதகம்—நீத்தல்விண்ணப்பம்

முத்திபெறு நெறியறியு மொழிபோற்றித் திருவகவல்
சத்தியஞா னந்தருதே சிகமோகஞ் சதகமதா
மித்தையுல கினையகற்றி விடாமலெனை யாண்டருளென்
றத்தரறிக் கிடநீத்தல் விண்ணப்ப மறைந்ததுவாம். (௩)

திருவெம்பாவை—திருவம்மானை

மலவிருளுற் றுறங்காமன் மனனுபரி பாகருட்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை
நலமுறுமந் தணர்வடிவாய் நாரணன்கா ணரியபத
நிலமதில்வந் தாள்கருணை நினைந்தாட லம்மானை. (௪)

திருப்பொற்சுண்ணம்—திருக்கோத்தும்பி

சத்திகளால் தனுகரண புவனபோ கங்கடமை
யத்தனுக்குச் சுண்ணமமை யாமிடிக்கக் கூவுதலே
யொத்ததிருச் சுண்ணமுயர் போதமொரு வண்டாகச்
சித்தவிகா ரத்தூது செப்பிவிடல் கோத்தும்பீ. (௫)

திருத்தெள்ளேணம்—திருச்சாழல்

பொன்றார்மெய் யண்ணலரும் போதவின்ப மேயிருந்து
தென்றுதென் றெனவே தெள்ளேணங் கொட்டியதா
முன்னோர் கலையுமுண ராமூசை யாமேடி
தன்னாற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல் (௬)

திருப்பூவல்லி—திருவுந்தியார்

தேவரறி யாதசிவன் தேடியே யாண்டால
மாவலொடுஞ் சொல்லி யடியாரோ டுடகூடிப்
பூவியந்து கொய்தல்திருப் பூவல்லி யாமரன்சீர்
பாவமுறு தீமையறப் பாடல்திரு வுந்தியதே. (௭)

திருத்தோணோக்கம்—திருப்பொன்னூசல்

சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமாய
அத்தன் செயுங்கருணைக் காரமை யுண்மிகுந்து
பொத்திய கைகொட்டிப் புகழுதல்தோ ணோக்கமருட்
சத்தியிரு தாடததா லாட்டிடுதல பொன்னூசல (௮)

திருவன்னைப்பத்து—குயிற்பத்து

நேயம்மி குந்த நிலைகுலையக் கூடுதலே
யாயவருட் டாய்க்கங் கறைதலன்னைப் பத்தாகுந்
தூயவருட் குயிலோடு சோதியெனக் கூடுதற்குன்
வாயினூற் கூவெனமுன் வாழ்த்தல்குயிற் பத்தாமே. (௯)

திருத்தசாங்கம்—திருப்பள்ளியெழுச்சி

பேர்நாடு நாறுமலை பெயரூர்தி படைமுரசு
தார்கொடியெ லாமரற்குச் சாற்றுறுசாங் கமதா
மேன்மரு திருப்பள்ளி யெழுச்சியணி விடைகேட்
டார்வமுட னண்டவரற் கன்புசெயு மியல்பே (௰)

கோயின்மூத்ததிருப்பதிகம்—கோயிற்றிருப்பதிகம்
செத்திலாப்பத்து—அடைக்கலப்பத்து

கோயின்மூத்த திருப்பதிகஞ் சிதம்பரத்தி லருளடையுங் குறிப்பதாகு, மேயுங்கோயிற் திருப்பதிகம் பெருந்துறைத் தேசிகர் மோகமியம்பலாகு, மாய பசுபோ தம்முற்றுங் கெடவேண்ட லேசெத்தி லாப்பத தாகு, மோதுவல்வாதனைகள் வந்தணுகாம லடைக்கலப்பத துரைததாமே. (௧௧)

ஆசைப்பத்து—அதிசயப்பத்து

கருவியுறு மூனுடற்கண் வாராமற் றிருவருளிற் கலப்பதற்கே, யாணடியைப் புகழ்ந்துபெரு காரவமொடு பாடுதலே யாசைப் பத்தாம், வெருவிமலத் தினைசிலத் தொன்றாகு மடியர்குழாத் துடனே கூட்டுப், பரமருட் பெருமைமிகு தியைப்புகழ்ந்து பாட லதிசயப்பத்தாமே. (௧௨)

புணர்ச்சிப்பத்து—வாழாப்பத்து

ஆண்டகுரு வைப்பிரியா தணைந்துபணி
புரிந்துமிகு மன்போ டின்பம
பூண்டுகிடக் கப்பெறுவ தென்றுகொலோ
வெனும்விருப்பம் புணர்ச்சிப் பத்தாம்
நீண்டவுல கத்தினிற்பற் றொன்றிலே
னிவணுற்க வினின்று வாழேனை
மாண்டருளின பதிமிழற்கீழ வருகவருள்
புரியெனுஞ்சொல் வாழாப் பத்தே (௧௫)

அருட்பத்து—திருக்கழுக்குன்றப்பதிகம்

சோதியருட் சுடாவிளக்கே துயாப்பிறவி
சுடல்விடுத் தன்றருள் சோதற்
காதரித்திங் குனையழைத்தா லெதந்துவெனக்
கேளென்றுஞ்சொ லருட்பத் தாகும்
நீதிமறை பாவுதிருப் பெருந்துறையிற்
குருவடியாய் நிகழ்ந்த கோலங்
காதலொடுங் காட்டினையே யெனுங் களிப்புப்
பகர்திருக் கழுக்குன் றமே. (௧௬)

கண்டபத்து—பிரார்த்தனைப்பத்து

இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத
தானுக்கு மெழிலா னந்தங்
கந்தமலி தில்லையினுட் கண்டேனென்
றுவந்துரைத்தல் கண்ட பத்தாம்
அந்தமிலா வானந்தத் தகளாம
லெனையழுத்தி யாள்வா யென்று
சிந்தைகலந் துரைத்ததுவே பிரார்த்தனைப்பத்
தாய்ப்புகலுஞ் செய்கை யாமே. (௧௭)

குழைத்தபத்து—உயிருண்ணிப்பத்து

இழைத்தேனிவ வாக்கைபொறுத் தினிக்கணமும்
பொறுக்கலே னேழை யேனை
குழைப்பதேன் பிழைபொறுத்தா ளெனவிரங்கிக்
கூறுதலே குழைத்த பத்தாம்
தழைத்துவளர் பேரின்பந் தானுகி
யுயிர்தோன்றுத் தன்மை யாய்த்தன்

பொழிதருசீர் வைப்பெருந் தாயிருணனிப்
பத்தாகி துரைத்த தாமே (௧௬)

அச்சப்பத்து—திருப்பாண்டிப்பத்து

கரையில்லவளர் வினைமுழுதும் யாறிறுபருதேசன்
சிவசமயத் தொண்டரா ராதா
உருகின்வழக்க மாகின்றனை மன்கவினை
விகழ்ந்துணைத் தகவசப் பதாமே
புரவியின்மேற் பாணையெண்பூன் வருமெபருந்தகை
யாமவெருமற் புறம்போல் யாரும்
விரவுமின்க ளென்றடியார்க் குறுதிசொலல்
திருப்பாண்டி விருத்த மாமே. (௧௭)

பிடித்தபத்து—திருவேசறவு

மிககபிற வித்தாயரொ லாபொழிந்த
விபுத்தவ ஙெ களித்த லாலே
சிக்கறசிக் கெனப்பிடித்தே னின்னையென்று
துணிவுசெப்பல் பிடித்த பத்தாம்
தக்கபரி யாய்நரியை யாக்குதல்போ
லெனைப்பெரி தாய்த் தாக்கித் தாட்கீழ்
அக்கணம்வைத் தனையேயென் றிரங்கல்திரு
வேசறவென் றியம்ப லாமே (௧௮)

திருப்புலம்பல்—குலாப்பத்து

கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே
கற்றாவின் மனம்போ லென்றுந்
திருந்தும்வகை யெனக்கருள்க வெனக்கேட்டல்
திருப்புலம்ப லாகும் உள்ளம்
விரும்புசிவா னந்தவெள்ளம் விழைந்ததில்லை
நாயகனை மிகக்கொண் டாடி
விரப்புமனக் களியிருத்த விறுமாப்பே
குலாப்பத்தாய் திகழ்த்த லாமே. (௧௯)

அற்புதப்பத்து—சென்னிப்பத்து

மாயவுருக் கொண்டுளத்தை மயக்குமின்னார்
கண்வலையுண் மயங்கு வேற்கிங்
காயுமறி வளித்தான லதிசயமென்
றுரைத்தலற்பு தப்பத் தாகும்

மயக ... ... கூட்டிநற்குப
... ... தலை ...
செய ... ... நந்தமை ... ... ஒம்
... ... பதமே. (௨௰)

திருவார்த்தை — எண்ணப்பதிகம்

அறம்பெருகு ... துறையில் தமையாண்ட
செயன்முதலா ... ...
திறமறிவா ... ...
வறுதலைந்திரு வார்த்தை யாகும்
நறும் ... ... மாமிழில் சூழ் தோணுகுதிருத்
தில்லை ... ...
திறம்பெருகு ... வென்றல் எண்ணப்
பதிகம் ... ... (௨௧)

யாத்திரைப்பத்து — திருப்படையெழுச்சி

பொல்லாத பவத்தைவிட்டுச் சிவன்கழற்கீழ்ப்
புகுதக்கால் புணர்த்த தெற்றிற(கு)
எல்லாரும் யாருமெனக் கருணையினை
வைழுந்திட ல்யாத்திரைப்பத் தாகும்
அல்லாத தூர்க்குணமா யப்படைகள்
விளையாம வருள்வா யோர்ந்தி
நல்லோர்க ... யாருமெம்போ லெய்ய தமெனப்
படையெழுச்சி நவிற லாகும். (௨௨)

திருவெண்பா — பண்டாயநான்மறை

தொ ... ... அருக்கப் பெருக்கிப்
பெரு ... துறைவாழ் சோதி யென்றன்
சிந்தனையை யுடைக்க கொண்டிருந்தார்
என்று ... திருவெண் பாவாம்
எந்தைதிருப் பெருந்துறையை யேய ...
... ... தீடர்சேர் பாச
பந்தமறுத் திடுமெனப் பண்டாய
நான்மறையும் பகர்ந்த தாமே. (௨௩)

திருப்படையாட்சி — ஆனந்தமாலை — அச்சோப்பதிகம்

வாகுதிருப் பெருந்துறையா ரெழுந்தருளப்
பெறிலெல்லா வணங்கன் முற்றும்

ஆகுமெமக கல்லாத தாகாமற்றன்
னியம்பல்படை யாட்சி யாகும்
மோகமிகு மடியரொடும் கூடவிரும்பிய
தானந்த வொழியு மீசா
போகசுக மெனக்களித்தா ரார்பெறுவா
ரெனுமருமை புகறல் அசசோ. (உ௬)

திருப்பதிகங்களின் பெயரும் தொகையும்

சிவபுராணங்கீர்த்தி திருவண்டப் பகுதி
திருப்போற்றி யுடனகவல் திருச்சதக நூறு
நவநீத்தல் விண்ணப்ப மைம்பதாம் பாவை
நலந்திகழு மம்மானை நல்ல பொற் சுண்ணம
புவனமகிழ் கோத்தும்பி திருவார்தெள் ளேணம
பொருவரிய திருச்சாழல் பூவல்லி யுந்தி
இவையிருப தாமீரே ழாகுந்தோ ணோக்கம்
எழிற்பொன்னூ சலுமேயொன் பானென்ப விவையே. (௧)

திருவன்னை குயிற்பத்துத் திருத்தசாங்கம்
திருப்பள்ளி யொடுகோயின் மூத்ததிருப் பதிகம
அருட்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலைக கலமே
யாசையதி சயம்புணர்ச்சி வாழாப்பத்(து) அருட்பத்(து)
ஒருபதெனை வுரைசெய்வர் கழுக்குன்ற மேழா
முயர்பிரார்த் தனைகள்பதி னொன்றுகுங காண்பத்
திருமைபெறுங குழைத்தபத் தாயிருண்ணெணி யசசம்
எழிற்பாண்டி பிடித்தபத்தொ டேசறவு பத்தே. (௨)

திருப்புலம்பல் மூன்றுகுலா வற்புதமே சென்னி
திருவார்த்தை பத்(து)எண்ணப் பதிகமொரு வாறும்
பரற்குரிய யாத்திரைப்பத் தொருபதா மற்றைப்
படையெழுச்சி யிரண்டாகும் பதினொன்றும் வெண்பா
அருட்டவமும் பண்டாய நான்மறையே யாகும
வலியபடை யாட்சியெட் டானந்த மேழாம
அருட்பெறுமச் சோவொன்ப தைம்பதொன்றும பதிகம்
அகவலொடு செய்யுள் அறு நூற்றைம்பத தெட்டே. (௩)

சிவமயம

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

சிவபுராணம்

சிவனது அநாதி முறைமையான பழமை

கலி வெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க

(க) திருவாசகம் என்ற சொற்றொடர், அழகிய மொழியென்று பொருள்படும். அதாவது, வீடு விரும்புவாரது உள்ளத்தைக் கவரும் பேரழகுடைய அருட்பாடல்களாலாகிய நூல் என்பதாம். அழகு - கண்டாரால் விரும்பப்படுந் தன்மை

(உ) திருவாசகம் - வீடளிக்கும் அருண்மொழி நூல். திரு - வீடு

சிவபுராணம் - சிவனைப்பற்றிய பழைய வரலாறு. அதாவது, மண்ணுயிர்களை உய்வித்தற் பொருட்டுச் சிவபெருமான் அளவில்லாத காலமாக இயற்றிவரும் பழமையான திருவருட்செயல் முறையைக் கூறும் பகுதி என்பதாம்.

உரை:—(க-ரு) (தலைவனது பெருமையை யுணர்த்தும நாமமாகிய) நமசிவாய வென்னுந் திருவைந்தெழுத்தானது என்றும் நிலைபெறுக. தலைவனது திருவருட் சக்தியானது என்றும் விளங்குக. கண்ணை மூடி விழிக்கும் நேரமளவுங்கூட அடியேனுடைய உள்ளத்தைவிட்டு அகலாதவனுடைய திருவடிகள் வாழ்வனவாக. திரு

கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
௫ ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வாவடுதுறை அல்லது திருப்பெருந்துறையில் எழுந்தருளி (அடியார்க்கு மெய்யுணர்த்தி) ஆட்கொண்டருளிய தலைமையருட் பேராசிரியராகிய முதல்வனின் திருவடிகள் என்றும் விளங்குக. வீட்டுநூல் கூறும் தனிப்பொருளாய் நின்று இனிமை தருவானுடைய திருவடிகள் (உள்ளத்தில்) என்றும் நிலைபெறுக. (தன்னிலையில்) ஒருவனாய், (அன்பர் நினைக்கும்) பல வடிவமுடையவனாய் (உலகுயிரோடுங்) தங்குவானுடைய திருவடிகள் என்றும் பொலிவு பெறுக.

குறிப்பு —"நமசிவாய" என்னுஞ் சொற்றொடர் வடமொழியில் "வணக்கம் சிவனுக்கு" என்று பொருள்படும். நமஸ் - வணக்கம், சிவாய - சிவனுக்கு. சித்தாந்த நூல் முறைப்படி, "நமசிவாய" என்பதற்கு எழுத்துப்பொருள் கொள்ளுமிடத்து, **நகரம்**, உயிர்கள் உலகியலிற் செல்லுதற்குத் துணை புரிந்து நிற்கும் கடவுளது மறைப்புச் சத்தியைக் குறிக்கும். **மகரம்**, மலமாகிய உலக பாசத்தைக் குறிக்கும். **சிகரம்**, சிவமாகிய கடவுளைக் குறிக்கும். **வகரம்**, வீடடைதற்குத் துணைபுரியும் அருட் சத்தியைக் குறிக்கும். **யகரம்**, உயிரைக் குறிக்கும். ஆணவத்துட் கிடக்கும் உயிரினைப் பிறவிக் கட்டினுட்படுத்தி, உலகியலிற் செலுத்தியும், ஆணவம் நீங்குதற்குரிய பக்குவம் வந்தபோது, கட்டுக்களை யொழித்து அருட்சத்தி வாயிலாகத் தன்பால் வீடு பெறுவித்தும், உயிருக்கு நன்மை புரியுங் கடவுளின் பெருந்தன்மையைத் திருவைந்தெழுத்து விளக்குதலால், "நாதன் நாமம் நமசிவாய" வெனப்பட்டது. நாதனை அவன் நாமத்தால் வழுத்தியபின், நாதனது சத்திக்கு வாழ்த்துக் கூறப்பட்டது. "நமசிவாய" என்பதைப் பரிய ஐந்தெழுத்து (தூல பஞ்சாக்கரம்) எனவும், "சிவாயநம" என்பதை நுண்ணிய ஐந்தெழுத்து (சூக்கும பஞ்சாக்கரம்) எனவுங் கூறுப. கட்டுநிலையை நமசிவாய வென்பதும், வீட்டுநிலையைச் சிவாயநம என்பதுங் குறிக்கும்.

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

நாதன், என்பதற்கு நாததத்துவ முதல்வனென்று பொருள் கொள்ளுவதுமுண்டு. தாள் - அருளாற்றல். இமைத்தல் - இயற்கையாகக் கண் மூடி விழித்தல். இமைப்பொழுது, மிகச் சிறிய கால அளவைக் குறிக்கும். கோகழி - பசுத்தன்மை கழிதல். இப்பொருளில் அது திருவாவடுதுறையைக் குறிக்கும். கோ - பெரிய, கழி - துறை. இப் பொருளில் அது திருப்பெருந்துறையைக் குறிக்கும். அடிகள் காலத்திற்கு முன்னமே, நவகோடி சித்த புரமென்னும் திருவாவடுதுறையிலே, இறைவன் பலர்க்கு அருள் புரிந்திருத்தல் கூடும். கோகழி, இத்திருப்பதிக்கே பெருவழக்கான பெயர். திருப்பெருந்துறை யென்ற பொருள், அடிகள் வரலாற்றிற்கு மிகவும் பொருத்தமானது. மணி - மாணிக்கம். அது இரத்தினங்களுட் சிறந்ததாதல் பற்றித் தலைமையையுங் குறிக்கும். ஆகமம், ஆகமப் பொருள். ஆகமம் வீட்டு நூலாதலின், கடவுள் ஆகமப் பொருளாயினமை கூறினார். "அண்ணிப்பான்" என்பதற்கு அணுகி நிற்பானென்று பொருள் கொள்வாருமுளர். இறைவன், "இறு" என்பதனடியாகப் பிறந்தது; இறு - தங்கு.

உரை (௬-௧௦) :—(உய்தி கூடுதற்கு அருட்குரவனை நாடியலைந்த மனத்தின்) விரைவைத் தொலைத்து (திருவருள் தந்து) ஆட்கொண்ட மன்னனது திருவடிகள் மேம்படுக. பிறவியை வேரறுக்கவல்ல தலைக்கோலப் பெருமானுடைய வீரச் சிலம்பு நிறைந்த திருவடிகள் சிறந்து விளங்குக. (அன்பிற்குப்) புறமாயுள்ளவர்கள் (அணுக வொண்ணாத) தூரத்திலுள்ளவனுடைய அழகிய மெல்லடிகள் வெற்றியுடன் திகழ்க. கைகூப்பித் தொழுவார் தமது நெஞ்சத்தில் (நினைந்து நினைந்து) களிப்படைதற்கேதுவாகிய அரசனுடைய திருவடிகள் (நிலை பெற்றுச்) சிறக்க. தலை

ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
கரு சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி

குவித்து வணங்குவாரை மேன்மையடைவிக்கும் புகழுடையானது திருவடிகள் வெற்றியுடன் மிளிர்க.

குறிப்பு (அ-கo) — வேகம் - விரைவு; பிஞ்ஞகம் - தலைக்கோலம்; பிஞ்ஞகம் - பின்னகம் - பின் + நகம் (தலையின்) பிற்பகுதியில் விளங்கும் அணி. இறைவனுக்குப் பிறை அவ்வணியாகு மென்ப. "பெய்கழல்" என்பதில், "பெய்" மிகுதியாகச் சாத்தப்படுதலைக் குறிக்கும். இறைவனது ஒப்பற்ற வெற்றிச் செயல்களைக் கண்ட விண்ணவரும் வீர அன்பர்களும் அவன் திருவடிக்கண் கழல்களைச் சாத்தினமை குறிப்பித்தவாறும். கழல் திருவடிக்கு ஆகுபெயர். உள் - உள்ளம். கரங்குவித்தல் பெரும்பாலும் நெஞ்சிற்கு நேரே புறத்து நிகழ்தலின், அது அகமகிழ்வின் விளைவாயிற்று. சிரம், உயர்ந்த உறுப்பாகலின், கைகுவித்தல், சிரங்குவிதலின் பயனாகக் கூறப்பட்டது.

உரை (கக-கசு):—ஆண்டவனுடைய திருவடிகள் (நம்மைக்) காப்பனவாக; நமது அப்பனுடைய திருவடிகள் காக்க; ஒளி மேனியனுடைய திருவடிகள் காக்க; மங்கலப் பொருளாகிய சிவபெருமானுடைய செவ்விய பாதங்கள் காப்பனவாக; அன்பிலே விளங்கி நின்ற மாசிலாதவன் திருவடிகள் காக்க; வஞ்சப் பிறவியை வேரறுக்கும் வேந்தன் திருவடிகள் காக்க; அழகு நிரம்பிய திருப்பெருந் துறையில் வீற்றிருந்த நமது இன்பன் திருவடிகள் (நம்மைக்) காக்க; தெவிட்டாத இனிமையை (ஆருக) நல்கும் மலைபோலும் பெருமான (நம்மைக்) காக்க.

குறிப்பு (கக-கசு).—ஈசன், ஆளுதல் என்று பொருள்படும். வினையடியாயப் பிறந்தது தேசு - ஒளி. நிமலன் - மலமில்லாத

சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
உ0 முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி

வன். மாயம் - வஞ்சனை, நிலையாமை. எடுத்த பிறவி நிலையா மையானும், வரும் பிறவி யாதென்றறியப் படாமையானும் "மாயப்பிறப்பு" என்றார். தேவன் - தே+அன் - இனிமையன்; தேவன் என்னுஞ் சொல் வடமொழியிலே ஒளியுருவினன் என்று பொருள்படு மென்க. ஆராத - உண்டு நிரம்பாத, 'மலை' என்ற மையால், உரையுள், இனபம, ஆறெனப்பட்டது.

உரை நடை (கஎ - உஉ) —உக, உஉ - வது அடிகளை கஎ, கஅ - வது அடிகளின் பின் சேர்த்துக்கொள்க சிந்தை மகிழ, முந்தை வினை முழுதும் ஓய, யான் சிவபுராணந்தன்னை உரைப்பன

உரை (கஎ - உஉ) — சிவபெருமானாகிய முழுமுதற் கடவுள் எனது நினைவின்கண் நிலைபெற்றிருந்த காரணத்தால், (என் செயலற்று) அவனது திருவருட்டுணை கொண்டு அவனது திருவடி களைத் தொழுது (இயற்றிய நற்றவத்தின் பயனாக), நெற்றிக்கண் முதல்வன் ஆசிரியனாக எழுந்தருளி வந்து தனது அருட்பார்வை நல்கவே (சிவஞானம்) பெற்று, மனத்தாற் கிட்டவொண்ணாத (மாறிலா) அழகு நிறைந்த அவனது திருவடிகளைப் பணிந்து, எனது நெஞ்சம் மகிழ்ச்சியடையவும், முற்பிறவியிற் செய்த எனது பழவினை முற்றிலும் ஒழிந்து போகவும், சிவனது பழமையான அருட்செயல் முறையினை யான் சொல்லுவேன்.

குறிப்பு (கஎ - உஉ) —"சிவனவன்" என்பதில் "அவன்" என்பது பல்சமயத்தாரும்பொதுவாகக்குறிக்கும் முழுமுதற்கடவுள் என்று பொருள்படுவதாகும். திருவருள் பெற்ற காலையும், எடுத்த உடம்புகொண்டு நுகர்தற்குரிய முன்வினைப்பயன் எஞ்சி நிற்ற

விண்ணிறைந்து(ம்)மண்ணிறைந்து(ம்)மிக்காய் விளங்கொளி
எண்ணிறந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர் [யாய்
உ௫ பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

லின், "முந்தைவினை முழுதும் ஓய" என்றார். சிவஞானம் பெற்ற பெரியோருக்கு அறிவு புறத்தே சென்ற காலை, இறை புகழ்பாடுதல் எண்ணத்திற்கின்பம் பயத்தலின், "சிந்தை மகிழ" என்றார். இறைவனது ஞானத்தைப் பெறுதற்கு முன்னேயே, சரியை, கிரியை, யோகமென்னும் நற்றவ வழியில் நிற்றற்கு அவன் திருவருள் வேண்டற்படுமாதலின், "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றார். ஞானம் பெற்றபின் ஆற்றப்படும் சுட்டிறந்த வணக்கம் "எண்ணுதற்கெட்டா" என்பதனா லுணர்த்தப்பட்டது.

உரை (உ௩ - உ௫) :—(மேலுள்ள) வானுல (கெங்கும்) நிறைந்தும், (கீழுள்ள) மண்ணுல (கெங்கும்) நிறைந்தும், அவற்றிற் கப்பாலுமாய் விளங்குவானே, (எங்கும்) திகழுகின்ற ஒளிமேனியனே, கணிக்கப்படுஞ் சுட்டுப்பொருளனைத்தையுங் கடந்து நிற்கும் அளவிலாத் தன்மையனே, நினது (ஒப்புயர்வற்ற) பெரிய புகழினை (அறிவு விளக்கத்தைத் தடைசெய்யுந்) தீயவினையுடையேன் எடுத்தோதும் வகை யாதுந் தெரியாதேன்.

குறிப்பு (உ௩ - உ௫) :—"நிறைந்து" என்பது இறைவனது பூரணமான அறிவுஞ் செயலும் விளங்குவதைக் குறிக்கும். அது காற்று, வான் முதலிய சடப்பொருளின் வியாபகம் போன்ற விரிவினைக் குறியாது. இறைவனது வியாபகத்தின் ஒரு பகுதியுள் உலகெலாம் அடங்குதலின் "மிக்காய்" என்றார். "தேசமார் ஒளிகளெல்லாம் சிவனுருத்தேசது" என்ற கருத்துப்பற்றி, "விளங்கொளியாய" என்றார். தத்துவம், புவன முதலியன எல்லாம் நூல்களாற் கணிக்கப்படுவன. அவற்றைக்கடந்த இறை நிலை, "எண்ணிறந்து" என்பதாற் குறிக்கப்பட்டது. "வினையினிங்கு

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

விளங்கிய அறிவின்" என்றமையால் வினை, அறிவு விளக்கத்திற்குத் தடையென உரையுட் கூறப்பட்டது. உயிர் இயற்கையாகவே சிறு தொழில் உடையது. தன் சிறு செயல்கொண்டு இறைவன் பெருஞ் செயலை யளக்கவல்ல தன்றென்பார், "பொல்லா வினையேன" என்றார்.

உரை நடை —(உகூ-௩க):—எம்பெருமான் (பல்) கல்லாய்ப் புல்லாகிப் பூடாய் மரமாகிச் செல்லாஅ நின்ற இத்தாவரத்துள், புழுவாய்ப் பாம்பாய்ப் பறவையாய்ப் பல்விருகமாகி மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅநின்ற இச் சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன்.

உரை (உகூ-௩க) —(உலகத் தோற்றத்தில்) கற்பாறை யணுக்களில் அடங்கிக் கிடந்து, (பின்) புல்லாகியும் அடர்ந்த புற் செடிகளாகியும், மரங்களாகியும் (படைக்கப்பட்டு) நிகழுகின்ற (பல்கோடி) நிலையியற் பொருள்களுள்ளும், புழு, பாம்பு முதலிய ஊர்வனவாகியும், பறப்பனவாகியும், விலங்குகளாகியும், மக்களாயும், பேயினங்களாயும், பூதகணங்களாயும், வலிய அசுரராயும், முனிவராயும், விண்ணவராயும், (படைக்கப்பட்டு) இயங்குகின்ற பல்கோடி பிராணிகளுள்ளும், (அடங்கிய) எல்லா வகையான பிறப்பிலும் உடலெடுத்திறந்துழன்று அலுத்தேன்.

குறிப்பு (உகூ-௩க).—உயிர்த் தோற்ற நூலார் முறைப்படி பிறவிகளைத் தொகுத்துப் பொருள் கூறப்பட்டது. விருகம்-மிருகம் - விலங்கு. "பல்" என்ற அடையை எங்கும் கூட்டலாம்.

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
௪0 அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

உரைநடை (௩௨-௩௫).—முதலடியை இறுதியடியாக்கொள்க.

உரை (௩௨-௩௫) —(ஆணவ விருளிற் கிடந்த யான்) உடம்பெடுத்துழன்று, பக்குவம் வந்தகாலை உன் திருவடியைக் கூடிப் பிழைக்கும் வண்ணம், எனது நெஞ்சத்துள் (ஐந்தொழிற்குங் காரணமான) ஓம் என்ற மூல மொழிவடிவாய் நின்ற உண்மையனே, கட்டிலாதவனே, (அருவுருவாகிய) காளைமேலெழுந்தருள்பவனே, அறிவு நூல்கள் (நின்னுடைய பேரளவினைக் காணமாட்டாது) ஐயனே என்றலற, (அவற்றின் எல்லையைக் கடந்து) உயர்ந்தும் தாழ்ந்தும் விரிந்தும் (விளங்குகின்ற பெருமையுடைய அவற்றாற் காண வொண்ணாத) நுட்பப் பொருளாய் எவற்றினுங் கலந்துள்ளவனே, (பிறவியில் உழலாது) நிலைபெற இருத்தற்கேதுவாய உனது அழகிய திருப்பாதங்களை இப்போது காணப்பெற்றுப் பாச நீக்கம் அடைந்தேன்.

குறிப்பு (௩௨-௩௫) —உயிர்கள் உய்யுமாறு இறைவன் ஐந்தொழிலியற்றுமிடத்து, உயிர்க்குயிராய் நின்று ஓங்காரத்தின் பிரிவாகிய அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதமென்பவற்றின் வாயிலாகக் கருவிகளை இயக்குவதாலும், ஓங்காரம், இறைவனது சிறந்த மந்திரவடிவமாதலாலும், "ஐய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற" என்றார். இறைவன் ஐந்தொழிலியற்றினும், தனது மெய்யியல்பில் மாற்றமிலாதாகலின், "மெய்யா" என்றார். அங்ஙனம் இருத்தற்குக் காரணம் இயல்பாகவே கட்டிலாமை யாகலின், 'விமலா' என்றார். வி - இன்மை. மலம் - கட்டு. இறைவன் நடுநிலையன் என்பார், "விடைப்பாகா" என்றார். அவன் பெரியதிற் பெரியதாயச் சிறியதிற் சிறியதாய், எங்குங் கலந்து நிற்கு முறை, நூலுணர்வானறியப் படாமையின், "வேதங்கள் ஐயா என" என்

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்

ன்றார் "மெய்யேயுன்" என்பதில், மெய் நிலைப்பு, எய் - பொருந்து; பொன், மாற்றமிலா ஒளி நயமுடையது. வீடு - (பாசத்தினின்று) விடுபடுதல்.

உரை (௩௭-௪௦) —வெப்ப முடையவனே, குளிர்ச்சியுடையவனே, (அத்துவிதக்கலப்பால்) உயிராய் விளங்கு மாசிலாதவனே, (யான் பற்றிய) நன்மையிலாதனவும் நிலையாதனவு மாகியவைக ளெல்லாம் என்னைவிட்டு நீங்கி யொழியுமாறு குருவாய் வந்து அருள் புரிந்து மெய்யறிவாய் விளங்குகின்ற உண்மை யொளியே, எவ்வகையான அறிவும் விளங்கப்பெறாதேனுக்குப் (பேரறிவின் பயனாய) பேரின்பம் நந்தருளும் பெருந்தன்மையனே, (பொய்யை மெய்யென வுணரும்) திரிபுணர்ச்சியை நீங்கச் செய்யுந் தூய அறிவானவனே

குறிப்பு (௩௭-௪௦) —"வெய்யாய்" என்றது ஞாயிறுபோல ஆண் தன்மையுடையனாதல் குறித்தற்கு; "தணியாய்" என்றது திங்கள்போலப் பெண் தன்மையுடையனாதல் குறித்தற்கு. இயமானன் - உயிர் இது வடமொழியில், வேள்வி யியற்றுவானுக்குச் சிறப்புப் பெயராய் உயிர்க்குப் பொதுப் பெயராய் வழங்குவது. உயிர்க்குயிராய்க் கலந்து, உயிர்களை ஆணாகவும் பெண்ணாகவும் பிறப்பித்தற்குரிய சிவமுஞ் சத்தியுமாய் இறைநிலை குறிக்கப்பட்டது அங்ஙனம் உயிரொடு கலந்து நின்றும், தனது தூய இயல்பு மாறாதவ னென்பார், "விமலா" என்றார். பொய் - தீயவற்றையும், நிலையாதவற்றையுங் குறிக்கும். பாச நீக்கத்தில் விளங்கும் மெய்யறிவு பதி ஞானமெனப்படும். இறைவன் கதிரவன்போலவும், மெய்ஞ்ஞானம் கதிர்போலவு மிருத்தலின், "மெய்ஞ்ஞானமாகி" என்றார். எவ்வகையறிவு மில்லாநிலை, ஆணவத்தோடு கிடந்த உயிரின் தனிநிலை. அஞ்ஞானமென்பது, நல்லறிவுக்கு மாறாய புல்லறிவு. நல்லறிவு என்பதில் "நல்" என்பது "பெரும் பயன்

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
௪௫ மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
௫0 மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

தரும" என்ற பொருளுடைத்தென்றலும ஒன்று "நற்றாள" என்பதிற்போல.

உரை நடை (௪௧-௪௩):—அழிப்பாய, என்னைப் போக்குவாய், நின்தொழும்பிற் புகுவிப்பாய், அருள் தருவாய்.

உரை (௪௧-௪௩) —படைக்கப்படுதல், ஒருகால அளவாக நிலை பெறுத்தப்படுதல், ஒடுக்கப்படுதல் என்பன இல்லாதவனே, எல்லா உலகங்களையும் நீயே படைப்பாய், நிறுத்துவாய், ஒடுக்குவாய், (மல பரிபாகம் வரும்வரை) என்னைப் பிறவியிற் செலுத்துவாய். (உய்தி கூடுங்காலம் வருங்கால) நின் திருத்தொண்டாகிய நற்றவத்திற புகுவிப்பாய். (பின்னர், பிறவியறுதற் கேதுவாய) நின் திருவரு ளைத் தருவாய்.

குறிப்பு (௪௧-௪௩):—தொழும்பு - தொண்டு. இறைவனது மூன்றொழிலும், அவற்றை யாற்றவல்ல அவனது தனிச்சிறப்பும் இங்கே கூறப்பட்டன.

உரை (௪௪-௫௮):—(பூவின்) மணம்போல நுட்பமாயிருப்ப வனே, நீ, தூரத்திலிருப்பவனுமாவாய், அருகேயிருப்பவனுமாவாய், (எவவாறெனில்) சொல்லையு மனத்தையுங் கடந்து நிற்கின்ற இரக சியப் பொருளாயுள்ளாய். எனினும், நின் மெய்யடியார்கள் உள் ளத்திலே சிறப்பாக விளங்கி(ப் பசுவிலே உடன்) கறந்த புனித மான பாலோடு சர்க்கரையும் நெய்யுங் கலந்து இனிமை பயந்தாற் போல, இன்பம் ஊற்றெடுக்குமாறு நிலைபெற்றருளி எடுத்த பிறவியை யொழிக்கும் எங்கள் பிரானாயுள்ளாய்.

குறிப்பு (௪௪-௫௮)—கண்ணிற்றெரிந்தோன்றும் பூவிலே அதன்

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே.

மணமானது தோன்றாது கலந்திருத்தல்போல, உலகுயிர்களிலே இறைவன் தோன்றாது கலந்திருத்தல் குறித்தவாறும். நேர் - நுட்பம்; ஒப்பு என்றும் பொருள்படும். "மணம் போன்றிருப்பவனே" என்றும் பொருள் கொள்க. தேன் - இன்பத்திற்கு அறிகுறி யென்க. ஊறி - ஊற. அறிவிற்குப் பாலையும், செயலுக்குக் கன்னலையும், விழைவிற்கு நெய்யையும் உவமை கூறுவதுண்டு.

உரை (௪௧-௫௦):—எமது பிரானே, (பூதங்களைத் திருமேனியாகக்கொண்ட நீ அவற்றிற்குரிய) ஐந்து நிறங்களையு முடையாய், (அன்பர்க்குப் பூத நிறங்களோடு தோன்றும் நீ) செருக்குடைய வானோர் உன்னைத் துதித்தபோதும், நீ அவர்கட்குத் தோன்றாது ஒளித்திருந்தனை.

குறிப்பு (௪௧-௫௦):—பொன்னிறம், வெண்ணிறம், செந்நிறம், கருநிறம், புகைநிறம் என்பன, நிலம், நீர், தீ, கால், வான் என்பவற்றிற்கு முறையே நிறமாகக் கொள்க. இறைவன் ஓர் இயக்கன்போலத் தோன்றி நின்ற காலை, விண்ணவர் அவனை அறிந்திலர் என்ற கதை கேந உபநிடதத்துட் காண்க.

உரை நடை (௫௦-௬௧):—விமலா, வல்வினையேன் றன்னை மறைந்திட மூடிய இருளை மாய, அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி, புழுவழுக்குப் புறந்தோல் போர்த்து மூடி மலஞ்

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே

சோரும் ஒன்பது வாயிற்குடிலை நல்கி மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச்செய்ய, விலங்கு மனத்தால் உனக்குக் கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும் நலந்தானிலாத சிறியேற்கு நிலந்தன் மேல் வந்தருளி ... ... தத்துவனே.

உரை (௫௪-௬௧) —குற்றமிலாதானே! கொடிய வினையனைத்து (அறவிசைச் செயல்கள்) மறையும்படி மூடிய இருளாகிய ஆணவம் மாயும் வண்ணம், நல்வினை தீவினை யென்னும் காண்டற்கு மரிய இருவகைக் கயிறுகளினால் பிணிப்புற்றுத் தன்னகத்தே தங்கு மூளை புழுக்களும், மாசுகளும், புறத்தேயுள்ள தோலினாற் போர்த்து மூடப் பெற்றது அனைத்து நவத்துவாரங்களிலும் அழுக்கு வடியுங் குடிசையை எனக்குக் கொடுத்தருளி, யான் கலங்கும்படி ஐம்பொறியறிவு (தத்தம் வழியில்) என்னை யிழுத்துத் தந்திரமாகக் கேடு செய்தலினாலும், அவற்றின் சார்பாய் நின்று உன்னை யணுகவொட்டாது தடைசெய்யு மனத்தின் இடர்ப்பாட்டினாலும், உன்னோடு கலந்துறவாகி உள்ள முருகி அழுது தொழுதலாகிய நற்செயல் யாதுமில்லாத சிறியனேனைப் பொருட்டு, இந்நிலவுலகத்தே (அருட்குருவாய்) எழுந்தருளி வந்து நீண்டு புகழ்மிக்க திருவடிகளை எனக்குக் காட்டியருளி நாயினுங் கீழ்ப்பட்டவனாய்க் கிடந்த அடியனேற்குத் தாயினு மேம்பட்ட கருணையுடையான மெய்யனே

குறிப்பு (௫௪-௬௧) —"இருளே" என்பதில் ஏ-சாரியை. அதனை வேற்றுமை யுருபாகக்கொள்ளின், "மாய" என்பதைப் பிறவினைப்

இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே [தின்
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே

பொருளில் வந்ததாகக்கொள்க. தான் மலத்தின் வேறுதல் குறிப்பான், "வல்வினையேன் தன்னை" யென்றார். 'குடிலை' என்பதில் ஐ இரண்டாம வேற்றுமை யுருபு. மலங்க-கலங்க. விலங்கு-தடை. கசிந்து - அழுது. நீள் - நீண்ட - புகழாற் சிறந்த. நாய், உடையானைச் சார்ந்தொழுகும்; உடையானைத் தான் சார்ந்தொழு காமை கருதுதலின், "நாயிற்கடையாய்" என்றார். தாய - கைம் மாறு கருதாது உதவுமியல்பினள். அவள் என்றும் யாண்டும் உதவ இயலாமையின், என்றும் யாண்டு முதவு மெய்யன் தாயிற் சிறந்தானாதல் காண்க

உரை (௬௨-௬௬):—குற்றமில்லாத ஒளியானது இதழ்களாக மலரப்பெற்ற பூப்போன்ற ஒளிமேனியனே, குரு முதல்வனே, இனிமை நிறைந்த பிறவி மருந்தே, சிவலோகனே, கட்டுப்படுதற் கேதுவாகிய அவாவினை வேரறுத்து அறிவினை விரிவுறச் செய்யு மேலோனே, காதலொடு கூடிய இரக்கம் வைத்து என் மனத் துள்ள களங்கம் ஒழியும்படி (எனது உளளத்தை விட்டு) நீங்காது விளங்கிய பேரருள் வடிவாகிய (வற்றாதோடும்) பெரிய ஆறு போன்றவனே, (உண்ண உண்ணத்) தெவிட்டாத இன்னமுதம் போன்றவனே, அளவிலடங்காத பெருமையுடையவனே, ஆய்ந் தறியாதா ருள்ளத்திலிருந்தும் அவர்கட்குப் புலனாகாத சோதியே, (எனது கல்மனத்தைக் கரைத்துத) தண்ணீராக உருகும்படி செய்து பிரிவாற்ற வொண்ணாத உயிர்க்குயிராய் நின்றவனே.

ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற [ய்
தோற்றச்சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வா
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே

குறிப்பு (௬௪ - ௬௯):—இறைவனது திருமேனி ஒளிநயமும் மென்மையு முடைமையால், ஒளியாலாகிய பூவிதழ் போன்ற உறுப்புடைய திருவடிவமென்று குறித்தார். தேசன் - ஆசிரியன். தேன்-இனிமை. அமுது - சாவாமருந்து. பாரிக்கும - விரிக்கும், வளர்க்கும். ஆரியன் - மேலோன். நேசம், தாயன்பு போன்ற விருப்பம்.

உரை (௭௦ - ௭௮):—(உலகுயிர்களினால் வரும்) இன்பமுந் துன்பமு மில்லாதவனே, (அன்பர் பொருட்டு) அவற்றையுடையவனே, கலப்பினால் எப்பொருளுமாய், பொருட்டன்மையால் ஒன்று மல்லாதவனுமா யிருக்கின்ற அறிவுருவனே, அடர்ந்த இருள் போன்றவனே, தோன்றாத பெருமையை யுடையவனே, (எப்பொருளின் தோற்றத்திற்கும்) மூலகாரணனே, (எவற்றையு மொடுக்கும்) இறுதிக் கடவுளாயும், எப்பொருளினும் முன்னீடாயு மிருந்து, தனக்கொரு முதலு முடிவு நடுவுமில்லாதவனே, என்னை வலிய இழுத்து ஆட்கொண்டருளிய எமது அப்பனாகிய பெருந் தன்மையனே, கூரிய மெய்யறிவினாலே கேட்டுச் சிந்தையுட் கொண்டு தெளிந் துணர்வாருடைய உள்ளத்தே சுட்டிறந்தறியப் படும் பொருளே, சுட்டப்படாத அனுபவப் பொருளே, நுகரப் படும் நுட்பப் பொருளே, ஒன்றை நாடிப் போதலும் அதனை யடைதலும், அதன்கணின்று மீளுதலுமில்லாத நன்மையனே, உயிர்களை உய்தி கூட்டுவிக்கும் எமது அரசனே, நீ அங்ஙனஞ் செய்வதை (உயிர்கள் தமதறிவாற்) காணுதற்கரிய பெரிய அறிவே.

குறிப்பு (௭௦ - ௭௮):—இறைவன் தானே இன்பமுடையவன்; பிற பொருளால் வரும் இன்பத்தை நாடுபவனல்லன். அவன் துன்பமில்லாதவனென்பது தெளிவு. தன்செயலற்ற அன்பர்க்கு

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்

வருமின்ப துன்பங்களைத் தன்னுடையனவாக ஏற்றுக்கொள்ளும் இயல்பு இறைவற்குக் கூறப்படுதலின் "அவையுள்ளானே" என்றார் இதற்குக் காரணத்தை "அன்பருக்கன்பனே" என்பதாற் குறித்தார். சோதி-அறிவு. உலகப்பற்றுவிட்டு இறைவனைப் பற்றக்கருதும் பரிபாக முடையார்க்கு அவன் கதிரவனுதயத்திற்கு முன் உளதாய காரிருள்போல்வா னாதலின், "துன்னிருளே" என்றாரென்பதுமுண்டு. ஐம்புலனால் ஒரு சிறிதும் அறியப்படாமை பற்றித் "துன்னிருளே" என்றாரென்ப. "உன்றனை யெதிரே கண்டும் அம்புயத்தோனுணர்ந்திலன், மால் சொலவுணர்ந்தான்" என்றபடி இறைவன் வெளிப்படையாகத் தோன்றினாலும், தன்னை உயிர்கட்கு அறிவித்தாலன்றி, உயிர்கள் அவனை யறியமாட்டாத இயல்பினவாதலின், 'தோன்றாப் பெருமையன்' என்றார். இறைவன் பல அருளுருவமெடுத்துத் தோன்றி மறைதலின், ஆதியுநடுவு மந்தமு முடையானென்பாரு முளர். நடு என்ற சொல், அந்தரியாமித்துவங் குறிக்குமென்பர். இறைவன் எவற்றினுள்ளு மிருத்தலின் அவை காக்கப்படுகின்றன வென்ப. குதிரை வாங்கப்போன அடிகளை வலியத் தன்பால் வருவித்து ஆட்கொண்டமையின் "ஈர்த்து" என்றார். வினையிலே கிடந்தேனைப் பக்குவகாலம் வருமுன்னரே ஆட்கொண்டானென அடிகள் பிறவிடங்களிற் கூறுதல் காண்க. தீவிர உணர்ச்சியைக் கூர்த்த மெய்ஞ்ஞானம் என்றார்போலும். நோக்கு அறிவையும், உணர்வு அநுபவத்தையும்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

குறிக்குமென்ப "சோதி" என்பது இறைவனது அகண்ட வியல்பையும், "நுண்ணுணர்வு" என்பது அவனது அதி நுட்ப வியல்பையுங் குறிக்கு மென்பாருமுளர். "போக்கும் புணர்வும் வரவுமிலா" என உரைநடை கொள்க.

உரை நடை (எக-அக).—"மாற்றமாம் வையகத்தின்" என்பதை "மிக்காய்" என்பதன் முன்வைக்க.

உரை (எகூ-அஉ).—ஆற்றின் தூய புனல்போலத் துன்பங் கலவாத இன்பப்பெருக்கே, அப்பனே, மாறுபாடடைகின்ற உலகத்திற்கு அப்பாற்பட்டவனாய் நிலைபெற்ற விளக்கமுடைய சுடரொளிப் பிழம்பாய, மொழியாலுணர்த்துதற்கரிய நுட்ப அநுபவமாய, உலகத்தே வெவ்வேறாகக் காணப்பட்டு வந்து முடிவாக அறிவாய்த் தெளியப்படுந் தெள்ளியனே, (கேட்டுச் சிந்தித்துத்) தெளிந்தவிடத்தே விளங்குந் தெளிவான பரம்பொருளே, எனது உள்ளத்திலே ஊற்றாகத் ததும்பிய உண்ணத் தெவிட்டாத அமுதமே, (கட்டிலும் வீட்டிலும் என்னை அடிமையாக) உடையவனே.

உரை (அசா-கூஉ).—எமது தலைவனே, வெவ்வேறு விரிபுகளுடைய ஊனுடம்பினுள்ளே கிடத்தலை யான் பொறுக்கமாட்டேன். (அவ்வுடம்பைத் தொலைக்கவல்ல) அரனே, ஓலம் என்று கூவிக் கூவி, வழிபட்டுப் பாடி நினைந்திருந்து நிலையாதவற்றின் பற்றற்று நிலைப்பொருளோ டொன்றுபட்டவர்கள் மீண்டும் இவ்வுலகில் வந்து வினைக்கீடாய பிறப்பினையடையாமே, வஞ்சமாகிய ஐம்புல வேடர் சிறுமனையாய உடம்பை முற்றிலும் தொலைக்குந் திறமையனே, நடுஇரவு போன்ற, முழுது முடிவுற்ற காலத்தே தனது திருக்கூத்தினைப் பழகி(ப்பின் தோற்றக் காலத்தே) பெருமை புரியு முதல்வனே, (இவ்வுலகில்) தில்லை மன்றினுள் ஆடுவானே, தென்றிசைக் கணுள்ள பாண்டி நாட்டை யுடையவனே, துயருடைய

இப்பிறப்பினை யொழிப்பானே ஓலம் என்று, சொல்லாற் கூற வொண்ணாதானை வழுத்தி.

குறிப்பு (௮௯-௯௨) —வேற்று விகாரம், அறிவு நிலைக்கு மாறுபட்ட திரிபு என்று பொருள் கொள்வாருமுளர். விடக்கு - ஊன். கட்டழித்தல் - முற்றிலு மழித்தல். தென் - இயற்கை யுடை. அரன் - பாசத்தை யழிப்பவன். பயிலுதல் போதலின் (பயின்று) என்றார்.

உரை (௯௩-௯௫) —அவனது திருவருளை வயமாய் நின்று மொழிந்த இக்கலி வெண்பாட்டின் பயன்தெரிந்து ஓதுபவர்கள் சிவலோகத்தினுள்ளே புகுவார்கள். ஆண்டுச் சிவ முதல்வர் திருவடிக்கீழ் அன்பர் பலரும் வணங்கிப் புகழுமாறு இருப்பராவர்.

குறிப்பு (௯௩-௯௫) —அடி - அருள். பயன் உணர்ந்தியம்புவார் பயனைப் பெறுதற் குரியராவர். திருவடி என்பது இறைவன் அறிவு செயல்களைக் குறிக்கும். உயிரினறிவு செயல்கள் இறைவனுடைய அறிவினுள் அடங்கி நிற்றலே திருவடிக் கீழிருத்தலாமென்ப. சிவபுரமென்பது வீட்டினை யுருவமாகக் குறிப்பதாய், சிவனொடு கலத்தலைக் குறிக்கு மென்ப.

தில்லையில் அருளிய

கீர்த்தித் திருவகவல்

சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை

நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

தில்லைமூ தூரா டியதிரு வடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை யிருளை ஏறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்பு மீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்

கீர்த்தித் திருவகவல் - இறைவன் அன்பர்க்கருள் புரிந்த செய்திகளைக் கூறும் வாயிலாக அவனது புகழினை வியம்பும் அகவற்பா. இது தில்லையிலருளிச் செய்யப்பட்டமை, 'தில்லை' யென்று தொடங்கியதால் விளங்கும்.

உரை (க - அ) — தில்லையென்னும் பண்டைத் திருப்பதியின் கண்ணே கூத்தியற்றிய பொற்பாதங்கள் பலவகைப்பட்ட உயிர்கள் எல்லாவற்றினுள்ளும் பொருந்தச் செய்பவனாகி, கணக்கில் அடங்காத தனது பல்கோடி அருட் பண்புகளும் சிறந்து தோன்று மாறு வெளிப்பட்டு, மண்ணுலகிலும் விண்ணுலகிலும் (அதற்கு மேற்பட்ட) வானவர்கள் உலகிலும் பொருந்திய கலைகளைத் தோற்று வித்தும் ஒடுக்கியும், என்னை மேற்கொண்ட அறியாமையை முற்றிலும் ஒழித்தும், அடியவர்கள் நெஞ்சத்திலே மெய்யன்பு பொங்கி

மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்

மேற்படும் பொருட்டு அதனைத் தமதிருக்கையாகக் கொண்ட உறுதியுந் தலைமையும் (உடையனாகியும்.)

குறிப்பு (க - அ) —பயின்றனன் என்பதில், பயிலுதல் பொருந்துதல் என - முற்றிலும கொள்கை - உறுதி தில்லையானது ஐம்பூதங்களுள் வானைக் குறிக்குந் திருப்பதி. வான் வெளியிலே பிற பூதங்களடங்குவது போல, அருள் வெளியிலே தத்துவம், புவன முதலிய யாவும் அடங்கும். அவ்வருள் வெளியில் நடமாடும் அப்பன், படைப்புக் காலத்தில் உடம்பெடுக்கும் உயிர்களின் நெஞ்சத் தாமரையிலும் பொருந்திக் கூத்தியற்றுங்கால் எவ்வுயிரு மியங்குவனவாம் தில்லை உலகிற்கிதய மென்றுங் கூறுப தில்லை மரங்களடர்ந்த இடமாயிருந்தமைபற்றி அப்பெயர் ஏற்பட்டதென்ப. இறைவனது பலகுணங்கள் நல்லுயிர்கட்கு அங்கங்கே தோன்றுவன. கலைகள் சிறப்பாக அவனையடையும் வழியை யுணர்த்துவன. உய்திகூடத் தகுதியுற்ற காலத்தே அவனே அறியாமையை முற்றிலு மொழிப்பன். பின்னர் அன்பர் நெஞ்சிற் குடிகொண்டு அதனை நீங்காது தலைமை பூண்டிருப்பன். இக்கருத்து இப்பகுதியிற் றெரிவிக்கப்பட்டது. இருள் - ஆணவமாகிய மூலமலம. மலநீக்கத்தின் பின் சிவப்பேற்றிற்குரிய அயரா அன்பே, மீதூரும் அன்பாகும தன்னைப் பற்றிய அன்பரைக் கைவிடாத உறுதியும், ஆட்கொள்ளுந் தலைமையு முடையானென்பது கருத்து.

உரை (கூ-க0) —(புகழால் என்றும்) நிலைபெற்ற பெருமலையாகிய மகேந்திரமென்னு மிடத்திலே, (உமையம்மையார்க்குக்) கூறிய வீட்டு நூலை (உலகினர் பொருட்டுக்) காட்டியருளியும்.

குறிப்பு (கூ-க0) —மகேந்திரம், பொதியைக்குத் தெற்கேயுள்ள தெனச் சிவதருமோத்தரங் கூறும். 'சொன்ன' என்பதற்கு மேலுலகிற் கூறப்பட்ட எனவும், தோற்றுவித்து என்பதற்கு எழுதுவித்து எனவும் பொருள் கொள்ளுவதுமுண்டு.

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டு மின்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்
துற்ற ஐம்முகங் களாற்பணித் தருளியும்

உரை (கக-உ0) — கல்லாடமென்னும் பதியிலே, இயற்கை நல்லியல்புடைய உமையம்மை வழிபட்ட திருவடியிற் கலந்து இனிதாய் இனைவருள் புரிந்து அவளோடு பேரின்ப நட்புக்கொண்டும், பஞ்சப்பள்ளி யென்னும் ஊரிலே பால்போலுந் தூய மொழியுடைய உமையம்மையோடு கலந்திருந்து அடியவர்கட்குக் குறையாது யாவரும் இனிய கருணையைப் பெருக்கியும், வேடன் வடிவு கொண்டு முள் முருக்கம்பூப்போன்ற சிவந்த வாயினையுடைய அருட்சத்தியின் நெருங்கிய நகிலாகிய புனிதப் பொய்கையில் முழ்கியும், வலைஞர் வேடம் பூண்டு (வலை வீசிக்) கெளிற்று மீனொன்றினை வலையுள் வீழ்த்தி அதனாலிருந்த பெரிய வட்டு [illegible] மீளப்பெற்றும், பின் இருபத்தெட்டாகமங்களாகிய அவைகளை மகேந்திர மலையில் இருந்து திருமுகங் கொண்டு வீற்றிருந்து அவற்றின் வாயிலாக ஐந்து பெரு முனிவர்க்கு ஓதியருளியும்.

குறிப்பு (கக-உ0) — நயப்பு - இன்பம். உறவு - கட்டு [illegible] நல்குவான புரியும் கருணை, குறையாது மிகு வியலவிற்று. இன்பம், அதன் விளைவாகும். கிராதன் - வேடன். கிஞ்சுகம் - முள் முருக்கு. விராவு - நெருங்கு. தடம் - பொய்கை. படிதல் - முழ்குதல் [illegible] இடந்த அருச்சுனனுக்கு அருள்புரியச் சென்ற காலை இறைவியும் வேட்டுவ வடிவங்கொண்டு சென்றமை பாரதத்துட் காண்க. வேட்டையாடும் இறைவனுக்கு நீர் வேட்கை மிகுதியுமுளதாத

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமி லாரிய னாய்அமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்

மாதலின், அதனைத் தீர்த்தற்குரிய பொய்கை இஃதென அடிகள் கவிநயம்பற்றி யோதியருளினார். உய்தி கூட்டும் ஞானந் தருவது முலைப்பால், ஞானத்துட் காணப்படுவது சிவமாதல்பற்றி, 'கொங்கை நற்றடம்படிந்' தென்றார். கேவேடர் - வலைஞர். மாவேட்டு, என்பதற்குப் பெரிய விருப்பத்தைத் தருவதாகிய என்றும் பொருள் கொள்ளுதலுண்டு. வேட்டு - விருப்பம். 'அவை தம்மை' என்றமையால் ஆகமம் பல வாதல் தெளிவு. முதற்கண், உமையம்மைக்கு ஆகமம் உபதேசித்தகாலை, அம்மை, நந்தி முதலியோர் செய்த பிழைக்காக, அவர்கள் வெஞ்சாபம் பெற்றனரென்றும், கெளிற்று மீனை நந்தி பெருமான் ஆகம ஏட்டைக் கடற்கண் சுமந்து திரிந்தனரெனவும், இறைவன் வலைஞனாய் ஏட்டை மீளக் கொண்டானெனவுந் திருவிளையாடற்புராணங் கூறுவது காண்க. இரண்டாவது முறை, அகத்தியர் முதலிய ஆதி சைவக் குடி முதல்வராகிய ஐவருக்கும், ஐம்முகங்கள் வாயிலாக ஆகமங் கூறப்பட்டன. ஐவரும், ஐந்து திருமுகங்களிலே ஒவ்வொன்றில் இறைவனை வழிபட்டமையால் 'உற்ற ஐம்முகங்களால்' என்றார். ஐம்முனிவராவார் — அகத்தியர், காசிபர், கௌதமர், பாரத்துவாசர், கௌசிகர்.

உரை (உக-உஉ): நந்தம்பாடி யென்னுமிடத்திலே நான்மறை யுணர்ந்தவனாகிய ஈறிலாப் பேராசிரியனாய் வீற்றிருந்தருளியும்.

குறிப்பு (உக-உஉ):—நமது பாடி யென்று பொருள் கொள்ளின், நந்தம்பாடி யென்பது திருவாதவூரைக் குறிக்கலாம். ஆரியன் - ஆசிரியன். நான்மறையாய பொது நூல் வெளிப்படுத்தினவனும் இறைவனென்பது இங்கே குறிக்கப்பட்டது. இறைவன்

குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்,

பொதுச சிறப்பு நூல்களை வெளிப்படுத்தினமை கூறி, அவனது திருவிளையாடல்களை விதந்தோதுவான் தொடங்குகின்றார்

உரை நடை (உ௩-உ௬) —கடைசி யிரண்டடியை முதலிலும் முதலிரண்டடியைப் பின்னுமாகக் கொள்க. 'வந்தருளி' யென்பதை 'இயல்பினதாகி' என்பதற்குப் பின்னும் கொள்ளலாம்.

உரை (உ௩-உ௬) — (அழகாகிய) காலையை (தாமரையாக) உடைய ஆண்டவன் இவ்வுலகினரை உய்வித்தற் பொருட்டுத் தனது திருமேனியிலே ஒரு பகுதிகொண்ட மாதுநல்லாளும், (அடியாரின் பக்குவ வேறுபாட்டிற்கேற்ப) வெவ்வேறு திருவடிவமும் வெவ்வேறு தன்மைகளும் கோடி முதலிய எத்தனையோ முறைகளாக அமையும்படி எழுந்தருளித் தோன்றி

குறிப்பு (உ௩-உ௬) —'ஆட்பாலவர்க்கருளும் வண்ணமுமாதி மாண்புங் கேட்பான் புகில் அளவில்லை' என்ற கருத்தே இங்கு வந்தமை காண்க. உய்ய-உய்விக்க. சத்தி இறைவனது திருமேனியாதலின், 'மங்கையுந் தானும்' என்றார். அருட்சத்தி வாயிலாகவே உய்தி கூட்டுமுறை சிறப்புத்தற்பாலது. நூறு நூறாயிரம் என்பது கோடி என்ற எண்ணைக் குறித்ததாயினும், 'பலப்பல' என்ற பொருளில் வந்ததாகும். அளவில்லை யென்பதே கருத்து.

உரை நடை (உஎ-௩உ) —முதலிரண்டடியையு மிறுதியிற் கொள்க.

உரை (உஎ-௩உ).—வேலம்புத்தூர் என்னுமிடத்திலே (உக்கிர குமாரனுக்கு வேல்கொடுத்தருளித் தனது திருவடிவச் சிறப்பினைக் காட்டிய (அருட்) செயலும், சாந்தம்புத்தூ ரென்னுமிடத்திலே வில்லினாற் போர் புரியும் வேடன் ஒருவனுக்குக் கண்ணாடியிலே

மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டு கொண்டருள அழகுறு திருவடி
பாண்டியன் றனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனக மிசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

தோன்றி அவன் தவத்தின் பயனாக வாள் முதலியன கொடுத்தருளியதும், குதிரைகளை நடாத்திக்கொண்டு மேலை நாட்டிடத்தே வணிகர் கூட்டத்தினையுடைய திறமையொடு தானே புறப்பட்டு வந்தருளியதும்

குறிப்பு (உஎ-௩உ) — திருப்பெருந்துறைக்கு மேற்கே மதுரைக்குப் போகும் வழியிலுள்ள நாடு குடநாடெனப்பட்டது. (கொடுந்தமிழ் நாட்டில் ஒன்றாகிய 'குட்டநாடு' வேறு. இது திசை நோக்கிக் கூறப்பட்டது) குடக்கு - மேற்றிசை. சதுர் - திறமை; தன்னைப் பிறர் அறிய வொட்டாத சதுரப்பாடு. படு - பொருந்த. சாத்து - வணிகர் கூட்டம். விட்டேறு - வேல். கொள்கை - செயல். தாப்பணம் - கண்ணாடி. 'ஈந்த விளைவும்' என்பதை விளைவு ஈந்ததும் என மாற்றுக.

உரை நடை (௩௩-௪௧) — 'ஆண்டான் எங்கோன்' என்பதை முதலிற் கொள்க.

உரை (௩௩-௪௧) — ஆண்டவனாகிய எமது தலைவன், (குதிரை வாயிலே) கொள்ளுப் பையைக்கட்டி யருளுதற்பொருட்டு (இறங்கிய காலை) முற்றிலும் நெருப்புப்போல இலங்குந் தனது திருமேனியை அழகியதாகக் காண்பித்த பண்டை முறையும், திருமாலோடு பிரமனும் அளந்தறிய முடியாதவன் நரிகளைக் குதிரைகளாக்கிய நற்செயலும், பாண்டியனை ஆட் கொண்டருள்வான், அழகு மிக்க தனது திருவடியோடு அவனுக்குக் குதிரைகளை

அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
௪௰ குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்

விற்று, அயனைத் தந்த திண்டோள் பொன்னனை [illegible] பட்டது, அவன் செயலற்றுத் தனை [illegible] (அருள் [illegible] நேரம்) நிற்றற்பொருட்டு அவன் [illegible] ஒளியினைக் காட்டியருளிய பண்பைப் [illegible]

குறிப்பு (௩௰-௪௰) — மேசகம் [illegible] அருளும் பொருட்டு தாய செம்மேனியெம்மான், [illegible] மேனி' என்றார் சொக்கப் [illegible] அழகுடையது ஆட்டு [illegible] அடியார்க்குத் தன அருள் வடிவங்களைக் [illegible] மான பழைய முறையென்பார் 'தொன்மை' என்றார். முழுப்பழுதன் மேனி அழகு காட்டப்பட்டது 'ஆணையிலே' [illegible] குதிரைத் தோற்றம் [illegible] பட்டது. திருவடி - திருவடியும் ([illegible]) [illegible] கனகம் - திரள் பொன், விலை தொகை. இறைவன் திருப்பொலிவைக் கண்டு அவ்விடத்திலே பாண்டியன் தன் [illegible] சென்னி மேற் கரங் குவித்தனனாதலின், 'அருள் பெற்ற' என்றார்.

உரை (௪௨-௪௭) — அழகிய அந்தணனாய் [illegible] வினைஞனாகி என்னை யாட்கொண்டருளி, (மாயையினை [illegible] யாகிய) இந்திர ஞாலம்போன்ற திருவிளையாடல் காட்டிய தன்மையும், மதுரையாகிய பெரிய நல்ல சிறந்த நகரத்திலே வீற்றிருந்து, (சுந்தர சாமந்தனை என்ற) அன்பனை வேண்டிக்கொண்டதற்காகக் குதிரை வீரனாகி வெளிப்போந்து அருள்செய்தமையும், அம்மதுரை நகரின்கண்ணே, தனது மெய்யன்பினள் (செம்மனச் செல்வியென்னும் பிட்டு வாணிச்சியின்) பொருட்டு கூலியாளாய் மண் சுமந்தருளிய பண்பும்

குறிப்பு (௪௨-௪௭) — இந்திர ஞாலம் - இந்திர ஜாலம்-இந்திர

உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

ரன் வலை - இந்திரன் தன்னை நரிகளை வல்லசெய்த சூழ்ச்சிகள். அவை போல்வன வற்றையும், அச்சொற்றொடர் குறிப்பதாயிற்று. சுந்தரசாமந்தன் என்ற பாண்டிய அமைச்சன் அரசன் பொருளை அடியார்க்களிக்கப் பயன்படுத்தினவன் அவன் கதை திருவிளையாடற் புராணம் மெய்காட்டிட்ட படலத்துட் காண்க. திருவாதவூரடிகளுக்குக் கீழ்த்திசையினின்று குதிரை கொணர்ந்தனர். சுந்தர சாமந்தனுக்கு மதுரையிலிருந்தே குதிரைப் படை காட்டினார். மன் சாமந்த வரலாறு வெளிப்படை. பாங்கு - உரிமை, அவனினத்தான் போல வந்து அவர் செய்ய வேண்டிய வேலையைச் செய்தமையின் அவ்வாறு கூறினார்.

உரை (௨௯-௩௪) — உத்தரகோசமங்கைப் பதியிலே எழுந்தருளிப் போதக ஆசிரிய வடிவங்காட்டிய தன்மையும், திருப்பூவணமென்னும் திருப்பதியிலே (சிவலிங்கத்) தோற்றங்கொண்டு (அடியவர் வேட்டபடி) பொலிந்திருந்தருளித் தூய (பொன்) வண்ணத் திருவடிவைக் காண்பித்த பழைய முறையும், (இறைவன் பாண்டியனுக்குக் குதிரை கொண்டு வரும்பொழுது) திருவாதவூர் வழியாக எழுந்தருளி வந்து திருவடியிற் றரித்த சிலம்பின் ஓசையை நன்கு காண்பித்த நயமும், அழகு மிகுந்த திருப்பெருந்துறையிலே கலைவல்லானாகி (அருள் புரிதலின்) பெருமை பொருந்திய சோதிப் பிழம்பில் மறைந்த கள்ளமும்.

குறிப்பு (௨௯-௩௪) — இறைவனே தமக்குக் குருவாய் வந்து ஆகமங் கற்பிக்க வேண்டுமென்று உத்தரகோசமங்கையில் தவங்

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய தன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய அதுவும்

கிடந்து அடியவர் அறுபத்து நால்வரொடு, அவர்க்கு அவ்வாறு உபதேசித்தனன் என்ப. விழுக்கம் - ஞானம், கல்வி. உத்தர கோசம் - உயர்ந்த நூல் (வெளியான இடம்) மங்கை - ... மங்கையின் பெயர்ப்பெயராகக் காயிற்று. திருப்பூவணத்திலே பொன்னனையாள் என்றும் நன்மாது கடவுளிடத்தும் அடியாரிடத்தும் மெய்யன்புடையளாய் விளங்கினள். இறைவற்குப் பிடியற்ற ஒரு பொன் திருவுருச் சமைப்பிக்க விரும்பினள். அவள் கைப் பணம் அடியார்க்கு அமுதளிக்கவே போதியதாயிருந்தமையால், திருவுருவத்திற்குப் பொன்னின்றி வருந்தினள். அப்போது இறைவனே ஒரு சித்த வேடங் கொண்டு அவள் வீட்டிற்குச் சென்று அங்கிருந்த இருப்புச் சாமான்கள் பலவற்றையும் எடுப்பித்து அவற்றைக் குளிகையாற் பொன்னாக்கி விட்டு மறைந்தனர். திருவருள் திறத்தை அடியவள் தெரிந்தும் வியந்து தான் கருதியபடி பொற் திருவடிவஞ் சமைப்பித்து வழிபாடியற்றினள். இனிது - நன்று. சிலம்பு - வீரக்கழல். தரு - பெருமை, மேன்மை. கரு - காரணம், வித்து. உருவப்பொருள் எவற்றிற்குங் காரணமாகிய சோதி யெனவுங் கூறலாம். இறைவனது அருவுருவத் திருமேனி சோதியாதலின், அது உருவங்கட்குக் கருவாயிற்று. செல்வன் - ஞானச் செல்வமுடையான். திருப்பெருந்துறையில் அடிகட்கு அருள் புரிந்த பின், சோதியில் இறைவன் மறைந்தமை வேம்பத்தூரார் திருவிளையாடலிற் காண்க.

உரை (௫௬-௬௩)—பூவலம் என்னும் திருப்பதியிலே சிறப்பாக

வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ள மும்
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவன் ஆகிய தன்மையும்

விளங்கி யருளி அடியவர் தீவினையைத் தொலைத்த திறனும், (போரிலே பாண்டிய னொருவனுக்கு) வெற்றி கிடைக்கும்படியாக (அவன் படைகளின் விடாய் தீர்த்தற்பொருட்டு) தண்ணீர்ப்பந்தல் அமைத்து அவணிருந்து, நல்ல நீரை வழங்கும் ஆளாகிய பேருபகாரமும், முன்னொரு காலத்திலே திருவெண்காட்டிலே, புதிதாக உண்ண வந்தவனாகிக் குருந்த மரத்தடியின்கீழ் வீற்றிருந்த அருட்செயலும், பட்டமங்கையென்னும் ஊரின் கண்ணே, உரிமையுடன் வீற்றிருந்து, அவண் (இயக்கிகள் அறுவர்க்கு) எட்டுப் பெருஞ் சித்திகளை அறிவுறுத்தியருளிய நயமும்

குறிப்பு (௨௯-௩௧) —இனிது-சிறப்பாக. பொலிந்து-விளங்கி. திருவிளையாடற் புராணம் தண்ணீர்ப்பந்தல் வைத்த படலத்திலே சோழனோடு சேர்ந்து தன்னோடு போர்க்கு வந்த தனது தம்பியை வெல்வதற்கு இராசேந்திர பாண்டியன் கடவுள் துணையை நாட, அவர் தண்ணீர்ப்பந்தல் வைத்ததாகக் கூறினமை காண்க. சயம - ஜயம; வெற்றி. சேவகன் - வேலையாள். விருந்து - புதிதாக வந்தோன். பட்டமங்கையில் உபதேசம பெற்ற நங்கையர், முன்னாக கயிலையினின்றிழிந்து ஒரு சாபத்தாற் கல்லாய்க் கிடந்து சாபம நீங்கப்பெற்று இறைவன் உபதேசங் கேட்டனர். மூன்றொடர்பிருத்தல்பற்றிப் 'பாங்காய்' என்றார். எட்டுப் பெருஞ் சித்திகளாவன: அணுவாதல், மேருவாதல், எளிதாதல், பளுவாதல், எங்கும் மியாப்பித்தல், விரும்பிய இன்பம் பெறுதல், முத்தொழில் புரியும் முதன்மை, தன் வயப்படுத்தல் என்பனவாம்.

உரை (௩௨-௩௭) —(பாண்டியனுக்காகச் சோழனோடு போர் புரிதற் பொருட்டுக் குதிரைமேல்) வேடனாக (அச்சமயத்திற்கு) வேண்டிய திருவடிவமெடுத்து, (அவனால் தொடரப்பெற்று)க் காட்டினகத்தே மறைந்த தந்திரமும், உண்மையைக் காட்டி விடுவதற்கு

[illegible] திருவி[illegible]

[illegible] ஞெகிழ [illegible]

[illegible] யமெடுத்து [illegible] றூ[illegible] பல்பும

குறிப்பு (௧௭–௧௮) —[illegible] கை. [illegible]
[illegible] யாடற் புராணம் [illegible] பாடலிற் [illegible]
[illegible] கொடர [illegible] காட்டக்கூ
[illegible] மையகி வ, சொழ
[illegible] காடு ஆழக
கிடாததமையால் காட்டு [illegible] காட்
டி காட்டு விட [illegible] காள் [illegible] ண்
[illegible] யானை [illegible] மனை
[illegible] வெளி
விட்டு [illegible] வாள் [illegible] ஞானாசிரியருக்குத்
[illegible] வாய்
திருவிளையாடற் புராணம் [illegible] காணக
[illegible] குறிப்பைக் கொண்டு [illegible] விக்கு
[illegible] றனர்.

உரை (௧௯–௩௦) —[illegible] பெய [illegible] ணை
([illegible] ஒருத்தியை ஆட்கொண்டவர்) [illegible] இறக்கி
மீளும்படி அருள் செய்து [illegible] திலையும (அ[illegible] ஞானாட்டக்
கூடிய) [illegible] பெருமையை [illegible] பண்பும்

குறிப்பு (௧௯–௩௦) —திருவிளையாடற் புராணம் [illegible] திருத்[illegible]
பாலனை படலத்தில் இக்கதையைக் காணலாம். [illegible] மறை
யோன் [illegible] யார் பத்தியிற் சிறந்த [illegible] மகளை திருமால்
வழிபாடுடைய [illegible] மணஞ் செய்வித்தான். அப்
பெண்ணின் மாமியார் [illegible] வைத்துக்
கொடுமையாய் [illegible] கணவனும் மாமி
[illegible] போய்விட,
[illegible] யார் அப்பெண்ணிருக்க [illegible] உணவு
[illegible] னர். மாமி உணவுப் பொருள்களை [illegible] வைத்துவிட்டு [illegible]

பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்
தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்
கோவார் கோலம் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்த அப்பரிசும்
ஏகம் பத்தின் இயல்பாய் இருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்தில் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

வைத்துவிட்டுப் போயினதை அவருக்கு அவள் தெரிவிக்கவும், அவர் அவளை நோக்கி "நீ கதவின் பக்கம் போ, அது திறக்கும்" என்றார். உடனே, அவள் அவ்வாறு போய்க் கதவு திறந்ததைக் கண்டு வியந்து உட்சென்று உணவு சமைத்து அவ்வடியார்க்கிட்டாள். வயது சென்ற அவ்வடியார் உண்டபின், ஓர் இளைஞன் வடிவங்கொண்டனர். பெண்மணி அத்திருக்கோலத்தைக் கண்டு வியந்து நடுங்கி நிற்கும்போது வெளியேபோன மாமியார் திரும்பி வந்துவிட்டாள். அப்போது இளைஞராயிருந்தவர், குழந்தையாய் ஒரு தொட்டிலிற் கிடந்தனர். மாமியார் சினங்கொண்டு மருமகளையும் குழந்தையையும் வெளியே தள்ளிவிடவே, குழந்தையாயிருந்த அடியார் விடையவராகத் தோன்றி அப்பெண்மணியை உமையடியாளாக்கிச் சிவலோகம் புக்கனரெனப் புராணம் பகர்கின்றது. பார் - நிலவுலகம். இரும் - பெருமையுடைய.

உரை (எ0 — அ0) — பாண்டூர் என்னுந் திருப்பதியின்கண் (அடியார்க்கு விருந்தாக) வீற்றிருந்தருளியும், தேவூர்க்குத் தென்பக்கத்திலே விளங்குகின்ற தீவின்கண், அரசியற் றன்மை பொருந்திய திருவடிவைக் கொண்டெழுந்தருளிய செயலும், வண்டுகள் தங்கும் பொழில்களையுடைய திருவாரூரிலே (முனிவர் பலர்க்கு உயர்ந்த) சிவஞானத்தைக் கொடுத்தருளிய உபகாரமும், திருவிடைமருதூர்

சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்
துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்

ரிலே அடியார்க்கு விளங்க வீற்றிருந்தருளித் தனது தூய திருவடிகளை (அவர் சென்னிமீது) வைத்த (கருணைத்) திறனும், காஞ்சிபுரத்திலே தமது இயற்கையான (அருவுருவ) திருமேனியோடு வீற்றிருந்து (தம்மை வழிபட்ட உமை) அம்மையைத் தனது இடப்பாகத்தமர்த்தி வைத்துக்கொண்ட சிறப்பும், திருவாஞ்சியமென்னுந் திருப்பதியில் திருமணச்சீர் பெறுதற்குரிய அழகுடன் வீற்றிருந்து இயற்கை மணமுடைய கூந்தலினளாகிய அம்மையோடு கலந்து மகிழ்ந்த திருவிளையாட்டும்.

குறிப்பு (௭0-௮0) —பாண்டூர் தேவூர் என்பன பாண்டி நாட்டிலுள்ளன. தேவூர்க்குத் தெற்கே கடலில் இருப்பது தீவு. ஈண்ட - நெருங்க, விளங்க. கோ - அரசத்தன்மை. தேன் - வண்டு. இங்கே கூறிய ஞானம் வீடு பயக்கு முணர்வாதலின், 'தன்னை' யெனச் சிறப்பித்தார். படிமம் - ஒளிவடிவம், தூய்மை. ஏகம்பநாதர் காஞ்சிப்பதியமர்ந்த சிவபிரான். திருக்கயிலையில் இறைவர் திருக்கண்களைப் பொத்தி உலகிற் கிருளுண்டாக்கிய குற்றம் நீங்க, உமையம்மையார் காஞ்சியில் ஒரு மாமரத்தினடியில் மணலாற் சிவலிங்க வடிவமைத்து வழிபட்ட காலை, வெள்ளம் வரவே சிவபெருமானைத் தழுவிப் பின்னர் அவரது இடப்பாகங் கொண்டனரென அறிக. மரு - இயற்கை வாசனை. கற்புடை நங்கை கூந்த

அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்(டு)
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்து வந்(து) அழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்

னுக்கு இயற்கை மணமுண்மை நக்கீரர் கதையால் விளங்கும் திருவாஞ்சியம், சோழநாட்டிலுள்ளது.

உரை (௮௧-௯௧)—பாண்டியனுக்கு வெற்றி யுண்டாகுதற் பொருட்டு) வில் வீரர் வடிவங்கொண்டு வலிமிக்க வில்லைக் கைக்கொண்டு பலப்பலவகையான இயல்புகளைத் தோற்றுவித்த சிறப்பும், திருக்கடம்பூரிலே கோயில் கொண்டருளி வீற்றிருந்ததும், ஈங்கோய் மலையிலே அழகுமிக்க (மரகதத்) திருமேனி காண்பித்ததும், திருவையாற்றிலே (பூசனை புரியும்) சைவ ஆசாரியன் ஒருவனின் வேடத்தோடு தோன்றியும், திருத்துருத்தியிலே அடியவர்கட்கு அருள் புரியும் ஆசையோடு அமர்ந்திருந்தும், திருப்பனையூரில் (வேண்டுவார் வேண்டுவன ஈயும்) விருப்பத்தினராய் வீற்றிருந்தும், சீகாழிப் பதியிலே திருக்கோலங் காண்பித்ததும், திருக்கழுக்குன்றத்திலே ஞானவடிவத்தோடு தவறாது எழுந்தருளியும், திருப்புறம்பயத்திலே தருமச் செயல்கள் பல ஆற்றியும், திருக்குற்றாலத்திலே (சிவ) லிங்க வடிவாய்த் தோன்றியும்.

குறிப்பு (௮௧-௯௧)—திருவிளையாடற் புராணம், 'யானை எய்த படலத்'துள், சோழன் விடுத்த யானையைக் கொல்லுதற்பொருட்டு, இறைவன் வில் வீரராய்த் தோன்றி யானை எய்தமை கூறப்பட்டது. இடம்-கோயில். 'எழிலது' என்பதில், அது திருமேனியைக் குறிக்கும். திருவையாற்றிலே இறைவனைப் பூசனை புரியுஞ் சைவாசாரியருள் ஒருவர் காசிக்குப்போய், நெடுநாளாக மீண்டும் வாராமையால், அவர் மனைவி மக்கட்குரிய பொருளைப் பிறர் கவர்ந்து

௧00 மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்

கொள்ளக் கருதியகாலை, அதனைத் தடுத்தற் பொருட்டு, காசிக்குப் போன சைவரின் வடிவத்தோடு இறைவன் தோன்றியருளினமை இங்கே குறிக்கப்பட்டது. திருக்கழுமலத்திலே அடிகட்கு இறைவன் காட்சி நல்கினமையும், திருக்கழுக்குன்றிலே கணக்கிலாத திருக்கோலம் அடிகட்குக் காட்டினமையும் அடிகள் வரலாற்றானறிக. 'வழுக்காது' என்பதற்கு மறவாது என்று பொருள் கொள்ளுதலுமுண்டு. திருக்குற்றாலத்திலே விண்டு வடிவமே அகத்தியர் வேண்டுகோளால் சிவ வடிவமாக மாறினமை 'திருக் குற்றாலத் தலபுராண'த்துட் காண்க. திருக்கடம்பூர், ஈங்கோய்மலை, திருப்பனையூர் முதலியன சோழநாட்டிலுள்ளவை. திருத்துருத்தி-இப்போது சோழநாட்டிலே குத்தாலமெனப்படும் இடமென்ப. திருக்குற்றால மென்பது, பாண்டி நாட்டிலே யுள்ளதென்பது வெளிப்படை. திரிகூட பருவதத்தினடியில் அழகிய அருவியுடன் கூடியது.

உரை நடை (கூஉ-கக) :—இறுதியயல் இரண்டடியில், 'அந்தரத்திழிந்து சந்திர தீபத்து வந்து அழகமர் பாலையுட் சாத்திரனாகி' எனக் கொள்க.

உரை (கூஉ-கூக) — அளவற்ற பெருமையுடைய சோதி வடிவத்தை மறைத்து அழகிய (பிரணவவடிவமான) காதணியோடு ஒப்பற்ற (ஞான) முதல்வனுக வடிவங்கொண்டு, இந்திரஜால வித்தை (யிற் பொருள்கள் எதிர்பாராது தோன்றுதல்) போலத் திடீரென எழுந்தருளி வந்து, எவ்வகைப்பட்டவர் இயல்பையும் தன்பாலாகித் (தன்னுடைய அருட்செயலே மேலிட்டுத் தோன்ற) தானே எல்லாமாய் விளங்குங் கருணையாளனாகிய எமது தலைவன் வானின்று இறங்கிச் சந்திர தீபமென்னும் பதியிலே அழகுமிக்க பாலை

௧௦௫ ஊனந் தன்னை யொருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே ஆறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்

யென்னுமிடத்தில் கலைவல்ல ஆசிரியனாகி வனப்பு நிறைந்த இயல்போடு வீற்றிருந் தருளியும

குறிப்பு (௯௨-௯௯) —அழலுருவென்பது இறைவனது தெய்வ வடிவை அல்லது அடிமுடியறியாச சோதியாய் நின்ற வடிவைக் குறிக்கும். வேடம - காதணி, வட்டவடிவமாய்ச சைவ ஆசாரியர்களா லணியப்படுவது. சுநதரம் ‘துதைநத தன்மையொடு இருந் தருளியும்’ என உரை நடை கொள்க. துதைத்தல் - நெருங்குதல், நிறைதல், பாலை - பாலை நிலததிற்குரிய மரங்களடர்ந்ததாய் அழகு வாய்நததாயிருக்கலாம அல்லது, இடத்தின் பெயர் பாலை யாதல் கூடும. ஒரு காலததுப் பாலையாயிருநது பின்னர் பொழிலாய பின்னும, அப்பெயா அதற்கு வழஙகுதல் கூடும்

உரை (௧௦௦-௧௧௪) —மந்திர நூலாகிய ஆகமம வெளிப்பட்ட பெருமலையாகிய மகேநதிரததின் தலைவனாகியஎல்லையற்றஆற்றலும் அருளும உடைய பெருமான (அடியேஙகளாகிய) எஙகளை ஆட்கொணடருளிய வகையைச செப்புமிடத்து, வலிமையுடையதாய், வனப்புப் பொருநதியதாயுள்ள திருமேனியில் (நெற்றி, மாாபு, புய முதலிய இடஙகளில) திருநீறறு (மூவடையாளமாகிய) கொடியினை, (எடுப்பாகத் தோன்றுமபடி) இடையிட்டுத் தரித்துக காட்டியும், பாசமாகிய குற்ற (முழுவதையும)ஒருசேர, ஒரேகாலத்தில் வேரறுத்து(க்களையும்) பேரின்பததையே தமது ஆறாகக்கொண்டருளியும், உமையமமையை ஒரு பாகததிலுடைய கைமாறற்ற பேரருளாளன், நாதத்துவமாகிய பெருமபறையானது இடைவிடாது ஒலிப்பக் கொண்டும், வாசனைமலநதாககாமல் அன்பர்களைத தடுத்தாட்கொள் பவன் மூவிலைச சூலததைத தனது திருக்கைகளிற் கொண்டருளியும், உயிர்களை அநாதியேபற்றிய (இருள், வினை, மருள் எனனும்) மூவகைப் பாசஙகளையும் வேரறுக்கவல்ல மாசற்ற திருமேனியுடன் எழுநதருளி அறிவுக் கதிர்பரப்பும் ஒளியுருவனாகிய முதல்வன் அடி

நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்
மூல மாகிய மும்மலம் அறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்

யாரிடம் அன்பு பூண்டவனாகி, அடியாருள்ளங்கள் பக்குவ மெய்துதற்குப் பொருத்தமான முறையில் எழுச்சி பெறும் வண்ணம், (அவருள்ளங் கவருஞ்) செங்கழுநீர் மாலையைச் சூடியருளியும்.

குறிப்பு (௧0௨-௧௧௪) — கொடியென்பது கோடியென நீண்டது. எல்லாவற்றையும் ஒடுக்கும் ஆற்றலையும், அருளொளியையும் திருநீறனது குறித்தலின் “ஆற்றலது வுடை அழகமர் திருவுரு” என்றார்போலும் நிமிர்ந்து-(முக்குறியாக) இடையிட்டுத் தரித்து; திருமேனியிற் பல பாகங்களில், கொடி யிலங்குவதுபோல நீற்றுக்குறி துலக்கமாய்த் தோன்றியது என்றவாறும். பேரின்ப வுணர்ச்சியில் உயிர் ஈடுபட்ட விடத்து, வாசனாமலமுந் தொலைதலின், மலம் மூவ்வதையும் ஒருங்கு அறுக்கும் என்றார். ஆனந்தமே, என்பது ஆனந்தமமேயென விரிந்தது. அது, ஆனந்த மேலீட்டைக் குறிக்கும் ‘மாதின்’ என்பதில், இன்-சாரியை ‘மாபெரு’ என உரைகொடுத்தது, கைமாறின்மையையும் அளவின்மையையும் குறித்துநிற்றலென்க. நாதத் தத்துவத்திலுள்ள சூக்குமவாக்கு என்றும் ஒலித்துக் கொண்டிருப்பதனாலே உலகெலாமியங்குமாதலின், அதனைப் பெரும்பறை என்றார். நவிலுதல்-இடையின்றிப் பயிலுதல். இறைவன், உயிர்கள் மேல் வைத்த கருணையாலே, தூயமாயையினின்று சிவதத்துவமாகிய நாதத்தத்துவத்தைத் தோற்றுவித்தலின், ‘கருணையன்’ என்பதோடு, நாதப்பெரும்பறை யென்பதை உடன்புணர்த்துக் கூறினார். அழுக்கு நீங்கிய பின்னும், அது அடையாமற் காத்தலின், அழுக்கு, உரையுள் வாசனாமலம் எனப்பட்டது. மலமூன்றாதலின்; இறைவன் அதனை நீக்குவதற்கு மூவிலைச் சூலத்தைக் கைக்கொண்

அரியொடு பிரமற்கு அளவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத்(து) உய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

டனார் போலும். கழுக்கடை - மூவிலை வேல். ஆணவமுள்ள விடத்து, வினையுமாயையும் நுட்பமாக உண்மையின், மூன்றையும் மூலமாகியவை என்றார். மலங்காரணமாக வரும் உடம்பு இறைவற்கின்மையின் 'தூயமேனி' என்றார். தூயமேனி யுடையவனே அழுக்கை நீக்க வல்லவனாவனென்பது கருத்து. சுடர்-சிவஞானம். தலைவியினுள்ளத்தைத் தனது மாலையாற் கவருந் தலைவன்போல, இறைவன் அன்பருள்ளத்தைத் தமது தூய அடையாள மாலையாற் கவர்வனாதலின், காதலனாகி 'ஏலுடைத்தாக எழில்பெற' என்றார். ஏல் பொருத்தம். எழில் - எழுச்சி, கிளர்ச்சி.

உரை (௧௧௫-௧௨௦) —(செருக்கினாலே) திருமாலும் நான்முகனும் அடி முடி தேடி அளந்தறிய வொண்ணாத பெருமான், (தாழ்மனமுடைய அடியார் பொருட்டுக்) குதிரையாகிய விலங்கின் மீதேறி வந்த திறமும், (வீடுபேற்றிற்குரிய அன்பர்) திரும்பிப் பிறவியில் வாராத வகையை அருள்செய்யும் பெருமான், பாண்டி நாட்டினையே தமது பழைய திருநாடாகவும், மெய்யன்பு செய்யும் அடியாரை அபர முத்தி பரமுத்திகளிற் சேர்ப்பவன் உத்தரகோச மங்கையினைத் தமது நகரமாகவும்,

குறிப்பு (௧௧௫-௧௨௦):—பாண்டிய நாட்டிலே இறைவன் முதற்கண் தக்க தவத்தினர்க்கு ஞானமும் வீடும் நல்கினமையில், நிலவுலகிலே அதனைப் பழையபதி என்றார். பதி நாட்டையுங் குறிக்கும். உத்தரகோசமங்கையில் அறுபத்து நால்வர்க்கு இறைவன் சிறப்பாக ஆகமம் அறிவுறுத்தினமையின், அதனை, ஊரென்றார்.

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
அப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி

உரை (௧௨௧-௧௨௬):—காரணேசுரர்களாகிய முதல்வர்கட்குத் திருவருள் புரிந்து அதிகாரம் நல்கிய 'மகாதேவன்' என்பதைத் தனது திருநாமமாகவும், அடியார்க்கு ஆணவத்தை நீக்கிப் பேரின்ப வாகன மருளிய தனது அருட்பெருந்தன்மையே, கருணை மலையாகவும் கொண்டு, எவ்வகைப் பட்டவர்களுடையவும் எத்தகைய பேரியல்பையும், பக்குவத்தையும் அறிந்து அவரவர்க் கேற்ற முறையினால், அவ்வவரை ஆட்கொண்டருளியும்.

குறிப்பு (௧௨௧-௧௨௬) — சுத்ததத்துவங்களிலுள்ள, அயன், அரி, அரன், அனந்தர், அனுசதாசிவர் முதலியோர் கீழ்ப்பட்ட தத்துவங்களிலுள்ளோரை யியக்குவதாற் காரணேசுரராய் ஆதிமூர்த்திக ளெனப்பட்டனர். சிலர், மும்மூர்த்திகளை ஆதிமூர்த்திக ளெனக்கொண்டு, அவர்கள் தலைவனாகிய சிவபெருமானைத் தேவதேவ னென்பர். பேரின்ப வுணர்ச்சியானது பரமுத்தியடைதற்கு உயிர்களை மேற்கொண்டு சேறலின், அதனை 'ஊர்தி' என்றார். ஈற்றடிகளிலே இறைவனது வரம்பிலாற்றல் கூறப்பட்டது. மேற்போந்த அடிகளில், அரசர்க்குரிய கொடி, ஆறு, பறை, படை, மாலை, ஊர்தி, நாடு, ஊர், பெயர், மலை யென்னப்படும் பத்துறுப்பும் பகரப்பட்டமை காண்க.

உரை (௧௨௭-௧௩௧):—நாய்போலுங் கடையேனாகிய என்னை, நன்மை மிகுந்த தில்லைப்பதியின்கணுள்ள அழகு நிறைந்த அம்ப

அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்கம் எய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத என்றழு தரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநாடக என்று
இதஞ்சலிப் பெய்தநின் றேங்கினர் ஏங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை அம்பொற்

லத்தின் கணணே வந்து (கலப்பாயாக) என்று, என் வினைக்குப் பொருத்தமாக, என்னை இந்நிலவுலகத்தே கழித்தொதுக்கி, என்னை ஆட்கொண்ட அன்றே, வீடு கூடுதற்குரியராய்த் தன்னோடு போந்த அடியார்கள் தங்கள் பக்குவ வளவில் தன்னோடு வந்து சேரச் சேர அவர்களோடு இரண்டறக் கலந்தருளியும், அங்ஙனம் தன்னோடு உடனே கலக்கப் பெறாதவர்களுட் சிலர், நெருப்பில் வீழ்ந்து (தன்னொடு கலக்கவும்), சிலர், வீடெய்தும் ஆசை மயமாகி மயங்கி உயிர் நீத்துத் தன்னை யடையவும், சிலர் வீடு உடனே பெறாத வருத்தத்தால், நிலத்தின்மீது வீழ்ந்து புரண்டு, அழுது தன்னையடையவும், விரைந்து நடந்தோடிக் கடலில் விழுவதற்கு நெருங்கித் தலைவனே, தலைவனே என்று அழுது அலறி உடம்பு நீத்துத் தன் திருவடி யடைந்தனர். அவ்வாறடையவும், பதஞ்சலி முனிவர்க் கருள்புரிந்த மேலான அற்புதக் கூத்தனே யென்று தொழுது உள்ளஞ் சலிப்படைய நின்று ஏக்கமுற்றவர், அவ்வா றேங்கித் (தன்னை யடையவும்).

உரை நடை (௧௪௦-௧௪௩) —'ஒலிதருகயிலை யுயர்கிழவோனே' என்பதை முதலிற் கொள்க.

உரை (௧௪௦-௧௪௩):—மந்திர ஒலிகள் பயிலும் (புகழ்மிக்க)

பொலிதரு புலியூர்ப் பொதுவினில நடம்நவில
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்

கயிலை மலையின் பெருநதலைவன, மிக்க எழுச்சிபெற்ற பனிமலை போல் ஓங்கிய தன்மையுடைய அழகிய பொனனொளி திகழுகின்ற புலியூராகிய தில்லை யமபலததின் கணணே தன்னொடு கூத்துப் பயில்கின்ற இனிமை மிகக சிவநத வாயினையுடைய உமையம்மைக் கும காளியம்மைக்கும் அருள் புரிதற் பொருட்டுத் தனது திரு முகத்தினிடமாகக கவின் மிகுநத புன்சிரிப்புக காட்டும்.

குறிப்பு (௧௪௦-௧௪௩) —சுத்த தததுவச சாாபுடையது கயிலை யாதலின், அத்தத்துவததிலெழும் மநதிர ஒலி ஆண்டுப் பயிலுதல் கூறப்பட்டது. கயிலையிற் பிற அதிகார மூர்ததிகளுளராயினும, இறைவனே முழு முதலாட்சியுடையவனாதலின், 'உயாகிழவோன்' என்றா. இமயமலை, மிக்க உயர்வுடையது வெளிப்படை. அது பொன்னிறத்த தென்ற கொள்கையுண்டு. 'நடம நவில்' என்பதை 'இறைவன்' என்பதொடுங கூட்டலாம. பாணிதநது உடன் உலவு தலின், உமை நடம நவில்கின்றாளென்னலாம. காளி இறைவ னொடு வாதாடி நடம் பயின்று ஊன நடனமியற்ற இயலாது தோறறனளென்ப. அருளிய - 'செய்யிய' என்னும வாய்ப்பாட்டு வினையெச்சம். மகிழ்சசிபற்றி உமைக்கும், இகழசசிபற்றிக காளிக்கும் புன்னகை காட்டினனென்றலு முண்டு.

உரை (௧௪௪-௧௪௫) —எமது அரசனாகிய கடவுள் தம்மை நெருங்கிய அடியவர்களுடன் மெய்ஞ்ஞான விளக்கம் மிக்க சிற்றம் பலத்துட் புகுநதருளி இன்பம் மிக எனக்குப் பேரருள் புரிந் தனன்.

குறிப்பு (௧௪௪-௧௪௫):—அம்பல மாதலின், தனியே செல் லாது அடியரோடு சென்றான்போலும். 'மெய்ஞ்ஞானமே' அம் பலமெனப் படுதலின், பொலிதருதல் ஞானத்தாலென்பது குறிக்

கசநி பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கயிலை யுயர்கிழ வோனே.

கப்பட்டது. கயிலை, கலைஞானச் சிறப்பெய்திய புலியூர், பரஞானச் சிறப்பெய்தினமை கூறப்பட்டது கீர்த்தித் திருவகவலியற்றுவித்தமையும் அருளினமையின் பாற்படும். வீடு, தமக்குத் தில்லையிலருளும் உறுதிபற்றி, 'இனி தருளினன்' என்றாரென்றலுமொன்று. புலி, உபாயத்தாற் பாய்ந்து தன் இரையைப் பற்றுதல்போலப் பேரின்பத்தை உயிர் முயன்று விரைவிற் பற்றுதற்குரிய இடமென்ற கருத்து புலியூர் என்பதிற் புலனும்.

தில்லையில் அருளிய

திருவண்டப் பகுதி

சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன், தெரியின்

(– அண்டப்பகுதி யென்று தொடங்கும் திரு அகவல்)

(– சிவபெருமானது வியாபகப் பெருமையும் வியாபக நுட்பமும் பாராட்டியது.)

உரை (க-சு) — ஆராயுமிடத்து, அண்டமாகிய பேருலகின் பகுதிகளின் உருண்டை வடிவான விளக்கமும், அவற்றின் எல்லையற்ற இயல்புகளும், பலவகை வளம் பொருந்திய பெருமைமிக்க தோற்றங்களும், அவை ஒன்றிற்கொன்று மேலாக நின்ற எழுச்சியின் வேறுபாடுகளைக் கூறுங்கால், நூற்றொருகோடிக் கதிகமாக அளவில்லாமற் பரந்து பெருகியுள்ளன. (அத்தகைய உலகுகளெல்லாம்) வீட்டினுள்ளே (பலகணி வாயிலாகப்) புகுகின்ற பகலவன் கதிர்களிலே நெருக்கமாகக் காணப்படும் அணுக்களை யொப்பச் சிறியனவென்று சொல்லும்படியாகத்தான் பெரியனாய் விளங்கும் முதல்வன்.

குறிப்பு (க-சு) — தெரியின் என்பதை முதலிற்கொள்க. அண்டம்-பல உலகத்தொகுப்பு. கதிரவனைச் சுற்றியுள்ள உலகங்களின் தொகுப்பை ஒரு அண்டமென்னலாம்; உலகங்கள் அண்டத்தின் பகுதிகளாய உருண்டை வடிவினவா யமைதல் காண்க. 'நூற்றொரு கோடி' என்பது அளவின்மையைப் பெரிதாகக் குறித்து நின்றது

(தெரியின்)
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறைமா ருதத்(து)
எறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்;

வானிலே முத்துக்கள்போலத் தோன்றும் விண்மீன்கள் வெவ்வேறு உலகங்களாகும். அவை எண்ணிலாதனவாய்ப் பரந்து தோன்றுதலின் 'அளப்பருந்தன்மை' என்றார். அவை பல்வகை வடிவும், அளவும், தன்மையும் உடையனவாகலின், 'வளப்பெருங் காட்சி' யென்றார். அவற்றின் தூரம் முதலியன அளவிலடங்காமையின், 'நூறொரு கோடியின் மேற்பட' என்றார் எல்லா உலகங்களும் இறைவன் திருமுன் அணுக்கூட்டம் போலுதலின், இறைவன் வியாபகப் பெருமை அளவிடற்பால தன்றென்பது குறித்தவாறும்.

உரை (எ-கஉ) —படைப்புக் கடவுளரின் கூட்டமும், காப்புக் கடவுளரின் அதிகமான எண்ணிக்கையும், தோன்றுதலும், நிலைத்து வளர்தலும், ஒடுங்குதலும் நிகழ்தற்குரிய காலப்பகுதிகள் தன்னுள் அடங்கப்பெற்ற மிகப்பெரிய ஊழிக்காலங்களின் தொடக்கமும், நிலைபேறும், முடிவும், சிறு சுழற்காற்றுகளாகிய நுண்பகுதி பல தன்னகத்துட்கொண்ட வெளிப்படையான பெரிய சூறாவளியின் வீசசுக்காற்றுப்போலச் சுழலுமாறு, அவை முழுவதையும் இயக்கும் இளைஞன் (ஆகவும் விளங்கு முதல்வன்)

குறிப்பு (எ - கஉ) :—அண்டங்கள் பலவாதலின், அவை தோறும், அவற்றைப் படைப்போருங் காப்போருமாய கடவுளர் பலதிறப்பட்டனர். ஒடுங்குவோர் இறைவனோடு ஒற்றித்து ஓதப்பட்டனர். உலகம்யாவுந் தோன்றி யொடுங்கும் பேரூழிக் காலமானது பெரும் புயற்காற்றுப் போலவும், அண்டத்தின் கடவுளரின் காலங்கள் பெரும் புயலிலடங்கிய சிறு சுழற்காற்றுப் போல

படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரு கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன்;

வும் கருதப்பட்டன. சூக்கம்-சூக்குமம்; நுட்பம் தூலம்-பெருமை. சிறு புடலங்கள் நுட்பப் பகுதிகளாகவும், பெரும் புயல் தூலமாகவும் கருதப்படும். சூறை மாருதம் - சுழற்பெருங் காற்று. எறிதல் - வீசுதல். என்றும் ஒரு படித்தாய் முதிராச்சியிலனாகலின், இறைவன் இளைஞன் ஆயினன். எல்லாந்தோன்றி முதிர்ந்து ஒடுங்கி யொழியத் தான் ஒருவனே அம்மாறுபா டில்லாதவனென்பது கருத்து. 'முழுவதும்' என்பதைக் 'கொட்க' என்பதனோடு சேர்க்க. கொட்க - சுழல. மாப்பேரூழிக் காலமும், மீண்டு மீண்டும் வருதலின 'சுழல' என்றார்.

உரை (கந-ககூ) —படைப்புக் கடவுளைப்படைக்கும் பழமைப் பெரியோன், படைத்தனவற்றைக் காக்குங் கடவுளைக் காப்பாற்று மேலோன், காக்கப்பட்டவற்றை உரிய காலத்தில் ஒடுக்குபவன், ஒடுக்கப்பட்டவை (இளைப்பாறும் வரை, அவற்றைப் படைத்துக் காக்க) எண்ணுத திருவுள்ளமுடைய பெருமான், மேதக்கனவாகிய அறுவகைச் சமயநெறியில் நின்ற அறுவகைப்பட்ட தவத்தினர்க்கும் முத்திப்பே றளித்தற்குரியராய் நின்ற கடவுளரின் தொகை தன்னை நோக்கப் புழுக்கூட்டம் போலத் தோன்றத் தானே (உயர் முத்தியளிக்கும்) உரிமையுடையோனாய் விளங்குபவன்.

குறிப்பு (கந-ககூ) :—உலகங்களை ஒடுக்கஞ் செய்யும் உருத்திர வர்க்கத்தார் தஞ்செயலற்று இறைவனோடு அத்துவிதக் கலப்புடையராதலின், அவர் செயல் இறை செயலாகவே கூறப்பட்டதுணர்க. கருத்து - திருவுள்ளம். அடிகள் காலத்துச் சமயங்கள் மணிமேகலையுட் கூறப்பட்டனவாக இருத்தல் கூடும். அவற்றுட்

நாடொறும்

அருக்கனிற் சோதி யமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன்

சில, கடவுட் கொள்கையில்லாதன. கடவுட் கொள்கையுடைய அறுசமயங்களே 'திருத்தகும்' எனச் சிறப்பிக்கப்பட்டன. சைவம், வைணவம், பிரமம், நையாயிகம், வைசேடிகம், ஆசீவக முதலிய மதங்கள் ஒருவகையான கடவுட் கொள்கையொடு விளங்கின. ஆண்டுக் கூறப்பட்ட சைவம், உருத்திர வணக்கமா யமைந்திருத்தல் பற்றி, அறுவகைச் சமயத்துள் வைத்தோதப்பட்டன போலும் அச்சமயங்களின் தெய்வங்கள், அவை முடிவாகக் கூறுந் தத்துவத் தலைவராகிய உயிர்களா யமைதலின், அவைகள் இறைவனை நோக்கப் புழுப்போன்றன. மெய்யான வீடுபேற்றைத் தரத்தக்க கடவுள் ஒருவனே யாதலின், அவனைக் 'கிழவோன' என்றார்.

உரை (௨0 - ௨௮) —ஞாயிற்று மண்டலத்திலே ஒவ்வொரு நாளுந் திகழுகின்ற ஒளியினை அமைத்தவன், அழகு பொருந்திய திங்கள் மண்டலத்திலே (வெய்யோன் கதிரைக் குளிர்விக்குங்) குளிர்ச்சியைப் பொருத்தினோன், மிகுந்த ஆற்றலுடைய நெருப்பிற்கு வெப்பத்தை உண்டாக்கினவன், (பூதங்களுள்) நிலையாகவுள்ள வானிலே, எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்துக் கலந்து நிற்குமியல்பினை அமைத்தோன், மேலெழுந் தன்மையுடைய காற்றிலே கிளர்ச்சியைப் பொருத்தினோன், பொருள்களின் தோற்றம் விளங்குதற்கேதுவாகிய நீரிலே, இனிய சுவையைப் புலப்படுத்துந்

அஃதான்று

முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
அன்னதொன் றவ்வயின் அறிந்தோன் காண்க

தன்மை யமைத்தோன். தெளிவாக, நிலத்திலே கடினமாகிய திரட்சியை இயற்றினேன். இவ்வாறே எவ்வெக் காலத்திலும், எத்தனையோ பலகோடி பொருள்களிலும் (அவற்றிற்கினமாய) எத்தனையோ பிறவற்றிலும், அவ்வவற்றின் தன்மையை அவ்வவற்றினிடமாகப் பொருத்தினேன்.

குறிப்பு (௨௦-௨௮) —கொடிநிலை, வள்ளி, கந்தழி என்றபடி ஞாயிறு, திங்கள், நெருப்பு ஆகிய மூன்றும், முதற்கண் விதந்தோதப் பட்டன. அவை முத்தொழிற் குரியன வாதல் காண்க. பொய் தீர் - நிலையாமையற்ற. நீரானது கண்ணாடிபோல வடிவங்களின் நிழல் காட்டுதலின், 'நிழல்திகழ்' என்றார். கடினப் பொருள்களின் சுவையைப் புலப்படுத்துவது நீரே. இன்சுவை - நல்ல சுவை. திகழ்ந்தோன் - திகழ்வித்தோன்.

உரை (௨௯-௩௮):—அஃதன்றியும் (படைப்புப்பொருள் யாவற்றிற்கும்) முன்னேயுள்ளவன் நோக்கியருள்க (அல்லது முன்னேயுள்ளவனென்றறிக.) எல்லாவற்றையும் உடையவனென்றறிக. தனக்கு யாரும் நிகரில்லாதவனாய்த் தனக்குத்தானே யொப்பானவன் (என்றறிக.) பண்டை(க்காலத்தில் நிலத்தைப்பாதாளத்தினின்றெடுக்கத் தோன்றிய) பன்றியவதார முடையானின் பற்களைப் பிடுங்கி மார்பிலணிந்தவன் (என்றறிக). (தாருகாவனத்து முனிவர் வேள்வி செய்து விடுத்த) காட்டுப் புலியினைக் கொன்று அதன் தோலை யுடையாக அரையிலணிந்தவன் என்றறிக திருநீறணிந்த

பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க

பெருமான் (அவன் அருள்திறத்தை) எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், அவனின் பிரிவாற்றாது வருந்துவேன்! (பிரிவு அதிகப் பட்டால்) ஐயோ நான் கெட்டொழிவேன்! இனிய ஓசையானது வீணையின் கண் நுட்பமாய்க் கலந்திருத்தல்போல அவன் உயிரிற் கலந்துள்ளோன் என்றறிக அத்தகை இசை யொன்றினை (வீணையாகிய) அதனிடத்தில் அறிந்து அருள்புரிந்தனனென் றறிக எவற்றிற்கும் மேலானவனென்றறிக. எவற்றிற்கு முற்பட் டவனென்றறிக. அயனும் அரியும் அளந்தறிய வொண்ணாப் பெரு மையுடையா னென்றறிக

குறிப்பு (௨௭-௨௮) —‘காண்க’ என்பதை அசையாகவுங் கொள்ளுப நோக்கியருள்கவென்றும், நீயறிக என்றும் இருவகையாகப் பொருள் கொள்ளுதலுமுண்டு ஆதியில்லாதவ னென்பார், ‘முன்னோன்’ என்றார் ஒரு காலத்திலே நிலத்தைப் பாதாளத்திற் சுருட்டிச் சென்ற இரணியாக்கனைக் கொன்று நிலத்தை மேலெடுத்த போது, பன்றியுருவெடுத்த திருமால் அவன் குருதியைக் குடித்துப் பிறரைத் துன்புறுத்தினமையால், அப்பன்றியின் பல்லைப் பறித்துத் தன மார்பிற் சிவபிரான் அணிந்த கதை சிவரகசியத்துட் காணக தாருகாவனத்தை வெளிப்படை எல்லாவற்றையும் ஒடுக்கி, அவற்றின் சாம்பலையணிந்தமையால், ‘நீற்றோன்’ என்றார். திருப்பெருந் துறையிலே நீறணிந்த பெருமான் பிரிந்த காலமுதல், வீடு பேற்றைத் தலைப்பட அவாக்கொண்ட அடிகள் பிரிவாற்றாமை தெரிவித்தார் வீணையில் இன்னிசை யொப்ப இசைந்தோன் என்றது இறைவன் தோன்றாது சார்பாயிருக்குந் தன்மை குறித்த வாறாம். பயிற்சியினால் வீணையில இசை தோன்றுவதொப்ப, அன் பினால அறிவில இறைவன் விளங்குவனென்றலு மொன்று. இரா வணன் வரலாறு தெளிவு. ‘பரமன்’ என்றது மேலான முத்தி யருள்பவன் என்று குறித்தற்கு. எக்காலத்தும் வீடருள்பவன் அவனேயாதலின் ‘பழையோன்’ என்றார். யானெனதென்னுஞ்

அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க

செருக்குள்ளபோது இறைவன் தோன்றானாதலின், 'பிரமன் மால் காணா' என்றார்.

உரை (௩௯-௪௨) —வியத்தகு செயல்கள் புரிவோன்: பலவடிவமுடையோன், புகழ்ப்பதவிகளைக் கடந்த பழமையோன், அல்லது சொல்லின் தரத்தைக் கடந்த முன்னோன், (சொல் மாத்திரமன்றி) மனமுஞ் சென்று எட்டவொண்ணாத தூரத்திலுள்ளவன்.

குறிப்பு (௩௯-௪௨).—கடவுள் அருஞ்செயல்களை உயிர்கள் கணக்கிடவல்லன வல்ல; அவை அவற்றிற்கு வியப்பு விளைப்பனவே. சிலர் இயற்கைச் சட்டங்களனைத்தையும் உணர்ந்தார்போலக் கடவுள் செயல் இயற்கைக்கு மாறானதெனப் பேசி, அற்புதங்களை மறுப்பர். அது பொருந்தாமை ஈண்டுக் குறிக்கப்பட்டதென்னலாம். வழிபடுவார்க்கு அவ்வவர் பொருளாய் நின்றருளுதலின், 'அநேகன்' என்றார். சொல்-புகழ்ச்சி. புகழ்ச்சி மிக்க விண்ணவர் பதவிகளைத் தோற்றுவித்தவனாய் அவற்றிற்கு முற்பட்டவனாய் இறைவன் இருத்தலின், அவனைப் பதவிகளிலுள்ள தெய்வங்களோடொருவனாகக் கணித்தல் தவறென்பார், அவன் பதங்கள் யாவையுங் கடந்தவன் என்றார். பதங்களைக் கடந்து உயிர் பரமுத்தியடையினும், அது பழமை யுடையதாகாது; இறைவனே 'தொல்லோனாவ'னென்பது. பதம் என்பதற்குத் தரம் என்று பொருள் கொண்டு, சொல்லினாலே புணர்த்தப்படாது, 'சொல்' தோன்றுவதற்கு முன்னே யுள்ளோன் என்றாரென்றலுமொன்று. 'சித்தமும்' என்றமையால், வாக்கிற்குங் காயத்திற்கு மெட்டாதவனென்பது கூறியவாறாயிற்று. தம்மை மறந்து செய்யும் மெய்யன்பினுள் அகப்படுவனென்றது, ஒன்றிற்கும் எட்டாதவனென்றால், அவனாற் பயன் பெறுதல் இயலாதோ என்ற ஐயத்தை நீக்குதற் பொருட்டென்க.

பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையி லீசன் காண்க,

உரை (சஉ-சஅ)—ஆனால் அன்பாகிய வலையிலகப்படுவோன்: ஒப்பற்றவனென்று சொல்லப்படும் ஒரு கடவுள்; விரிந்த உலகமெங்கணும் பரந்து நின்றோன். அணுவிற் காணப்படும் நுட்பத் தன்மையிலும் வியக்கத்தக்க நுட்பமானவன்; ஒப்பிடுதற்கரிய பெருமையுடையவற்றுள் தலை நின்றவன். ஆய்ந்தறிதற்கு அல்லது பெறுதற்கு அரிய பலவற்றுள்ளும் அருமையி லருமையுடையோன்; எல்லாப் பொருள்களையுந் தழுவி நின்று அவற்றை வளர்த்துக் காப்பவன்.

குறிப்பு (சஉ-சஅ)—அன்பால் இறைவன் தானே வந்தருளுதல், மீன் மான் முதலியன வலையுள் தாமே வந்து சிக்குதல் போலுதலின் அவ்வாறு கூறினரென்ப. வலையைப் பரப்பினவர் செயலற்றிருத்தல்போல, அன்பரும் அன்புமாத்திர முடையராய்ச் செருக்கற்றுச் செயலற்றிருத்தல் குறித்தவாறும் யானே கருதவர நாடார், 'சும்மா வருவார்' என்றதுமது வலையிற் சிக்கியவை வெளிப் போகாமைபோல, அன்பிலீடுபட்ட கடவுள் அன்பரை விட்டக லாமையுங் குறித்தவாறும். பொழில் - உலகம். விரிந்தோன் - இயல்பாகவே வியாபகமுடையோன் மிக நுணுகியவற்றுள் நுணுகியனாயப் பெரியவற்றுட் பெரியனாய் அரியவற்றுள் மிக அரியனாயுள்ளவன், பெருங் கருணையால் எவற்றிற்குஞ் சார்பாய் அவற்றைப் பாதுகாப்பா னென்பது பிற அடிகளிற் குறிக்கப் பட்டது.

உரை (சகூ-ருஅ)—(பொருள்களைச் சுட்டியறியுங்) கல்வியறிவினாலே நேரே அறியப்படாத நுட்பமுடையோன்; மேலுங் கீழு மாய எங்கும் நிறைந்தவன்; முடிவும் மூலமுமில்லாதவன்; பிறவிக் கட்டையும், பிறவி நீக்கத்தையும் உண்டாக்குவோன்; இயங்

அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் உணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானுங் கண்டேன் காண்க

காப்பொருள், இயங்கும்பொருள் எல்லாவற்றினுங் கலந்து அவையேயாய் நின்றவன்; ஊழி நிகழ்ச்சியும் அதன் முடிவும் பார்த்தவன்; (பக்குவம் வந்தகாலை) எல்லாரும் தன்னை அடையும்படியாக வந்து ஆட்கொள்ளும் முதல்வன். ஆனால் (மலம் நீங்கப்பெறாத) எத்தகைய விண்ணவரும் காணவொண்ணாத மங்கலப் பொருளானவன்; பெண்ணாகவும் ஆணாகவும் இருதன்மையு மிலாதாகவுமுள்ள வடிவொடு தோன்றுவதால் அவற்றின் தன்மை யுடையானெனப்படுவோன், அவனை (ஒன்றுக்கும் பற்றாத) அடியேனுங் கண்ணாற் காணப்பெற்று மகிழ்ந்தேன்.

குறிப்பு (சஉ-ருஅ) —நூலறிவு தூயமாயையிலெழும் நால்வகை வாக்கிற்கப்பாற்பட்டதன்று அதனால், தூயமாயையுங் கடந்த முதல்வனை அவ்வறிவால் அறிய முடியாதென்றலு மொன்று. மேன்மையுடையார்பாலுந் தாழ்மையுடையார்பாலும் இறைசெயல் காணப்படுதலின், 'மேலொடு கீழாய் விரிந்தோன்' என்றாரென்க. கற்பம்-படைப்பு முதல் இறுதிவரையுள்ள பெரும்பொழுது. இறைவன்றான், காலமனைத்தும் ஒருங்கே தோன்றுதலின் 'கற்பமு மிறுதியுங் கண்டோன்' என்றாரென்க 'தேவர்' என்றது ஞானம் பெற்ற உருத்திர வாக்கத்தாருக்குக் கீழ்ப்பட்ட வானவரையே

அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானு முடனே காண்க

குறிக்கும். பெண், ஆண், அலி என்ற மூவகைத் தோற்றங்கட்கும் காரணமாய பெருமானை, அத்துவிதக் கலப்புப்பற்றி, அத்தன்மைகளை யுடையானென்றலுமொன்று. இறைவன் ஆண்மூர்த்தங்களாகவும், சத்திமூர்த்தங்களாகவும், அருவுருவ மூர்த்தமாகவுந் தோன்றுதலின், அவ்வாறு கூறினரென்பாருமுளர். அடிகட்கு இறைவன் திருவடிவு காட்டினமை தெளிவு. திருவருளை நாடா நிலைமை தன்பாலுள்ளதாக அடிகள் கருதுதலின் 'யானும்' என்றார்; தன் சிறுமையும் இறைவன் பெருமையுங் குறித்தவாறும்.

உரை நடை (௬௪-௬௫) —இறுதி இரண்டடிகளையும், 'அவனெனை காண்க' என்ற அடிக்கு முன் வைத்துப் பொருள் கொள்ளுக.

உரை (௫௯-௬௫) —அவன் அருளானது மிகுதியாக முகிழ்க்கும் அமுத ஊற்றானவன்; அவனது இரக்கத்தின் பெருமையை யுணர்ந்தேன். (என்னை?) இந் நிலவுலகத்திலே, (என்னை ஆட்கொள்ளவேண்டித்) தனது செவ்விய பாதங்கள் பொருந்த வந்தவன்; பேரின்பமளிக்கும் பரம்பொருளானவன் என்று சிறியேனும் தெளிந்தேன். அவன் குவளை மலர் போன்ற கண்களையுடைய உமையொருபாகன். திருவருட் சத்தியுந் தானுமொருங்கு வந்து என்னைப் பிறவிக் கடலினின்று எடுத்தாட்கொண்டு பேரருள் புரிந்தவனென்றறிக.

குறிப்பு (௫௯-௬௫) —மேலே 'தானுந் தன்றையலும் தாழ்சடையோனுண்டிலனேல்' என்றதுங் காண்க. பாசம் நீங்கிய காலை, திரு

பரமா னந்தப் பழங்கடல் அதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
எo ஐம்புலப் பந்தனை வாளரவு இரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாளொளி மிளிர

வருட் சத்தியின் துணைகொண்டு சிவத்தை யடைதலின் அம்மையை யுடன் கூறினர். குவளை-தண்ணருளைக் குறிக்கும். அது நீலோற்பல மெனப்படும். பாசநீக்கத்திற்கு அவனும் சிவப்பேற்றிற்கு அவனுங் காரணராதலின், இரண்டையும் ஒருங்குபெற்ற அடிகள் தம்மை அவனுந் தானும் உடனே யாட்கொண்டருளினமை கூறினார்.

உரை (கூகூ-எஉ) —மேன்மையான பேரின்பக் கடல் முழுவதுமே, சூல்கொண்ட கரிய பெருமேகம் போல வடிவெடுத்து, அழகு நிறைந்த திருப்பெருந்துறை யெனனும் மலைமேலேறித் தக்க அருளாகிய மின்னல் வெளிச்சமானது ஒவ்வொரு திசையிலும் பரவ, ஐவகை வேட்கைப் பிணிப்பாகிய, வாளபோன்ற கொடிய பாம்புகள் கெட்டோட, (பிறவியின்) கடுந்துன்பமாகிய வேனிலானது தனது விரிந்ததலையை மறைத்துக்கொள்ள, மிகுந்த அழகுடைய தோன்றிச் செடிபோல, ஆட்கொள்ளத் தோன்றிய ஆசிரியரது ஞான வொளி விளங்க.

குறிப்பு (கூகூ-எஉ) —'அதுவே' என்பது பரமானந்தப் பழங்கடலில் ஒருபகுதி மாத்திரமின்றி முழுவதுமே என்பதைக் குறித்து நின்றது. கரு-சூல்; நிறைநீர். புலம்-பொறியறிவாலாகிய அவா; பந்தனை-பந்தம்; கட்டு. விடமானது, உடம்பிலுள்ள குருதியைப் பிணித்தாற்போல ஐம்புல அவா உயிரைப் பிணித்து அறிவைத் தொலைத்தலின் அவை பாம்பிற்கு ஒப்பிடப்பட்டன 'வெந்துயர்' என்பதில் வெம்மை, கடுமை குறித்தது. துயர், பலதிறப்பட்டு விரிதலின் அதற்கு 'மாத்தலை' கூறினார். தோன்றி—மழைக்

எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கி
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட,
வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளரொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன

காலத்துச் செடி. தோன்றிய ஆசிரியன்—தோன்றி எனப் பட்டனன். வாள், ஞானத்திற் கறிகுறி.

உரை (௭௩-௮௨)—எங்கள் பிறவிகளாகிய தம்பலப் பூச்சிகள் செறிந்து தோன்ற, கடவுளின் பெரிய இரக்கமானது முரசடித் தாற் போல இனிய முழக்கஞ் செய்ய, பூப்போன்றதாயுள்ள (அடியாரது) கூப்பிய கைகள் காந்தள் மலர்போல விளங்க, குறையாத இன்பந்தரும் அருளானது சிறிய துளி வடிவங்கொள்ள, நேர்மையான பேரறிவாகிய வெள்ளம் திக்கெங்கும் திரண்டோங்க, ஒரு வரையறைப்படுமாறு (மக்கள் தத்தஞ் சிற்றறிவிற் கேற்ப) ஏற்படுத்திக் கூறும் கொள்கைகளின் கூட்டமானது எல்லையற்று உயர்ந்து பரந்தமையாலாகிய அறுசமயங்களாகிய கானல் நீரினை நணுகி விடாயுந்தப்போந்த நீண்ட கண்களையுடைய மான் கூட்டம் போலக் கதியடையும் விருப்பால் ஆராய்ச்சியுடன் சென்ற சிற்றறி வுயிர்கள், அக்கானல் நீரினைத் தமது அகன்ற பெரிய வாயினாற் பருகியும், நடந்த தளர்ச்சியும், மிகக் கொடியதான தாகமும் நீங்கப் பெறாது உழன்றன.

குறிப்பு (௭௩-௮௨):—பிறவிகள் மழைத்தொடக்கத்திலெழுந்து செத்தொழியும் பூச்சிகட் குவமிக்கப்பட்டன. இடி முழக்கம் இங்கே

ஆயிடை வானப் பேரியாற் றகவயின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம பந்தமாக் கரைபொரு தலைத்திடித்(து)
ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேரறுத் தெழுந்(து)
உருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்

கருணை முழக்கமாயிற்று. கருணை யிடி; ஐம்புலப் பாம்பு சாதற்கிடமாயிற்று. முரசு, வெற்றி குறிப்பது. 'மாப்பெருங் கருணை முரசெறிந்து இன்முழங்கி' என உரைநடை கொள்க. அஞ்சலி - கை கூப்புதல். காந்தள், மழைக்காலத்துத் தோன்று மலர் அதற்குவமேயம், கை. பிற அடிகளில் விண்ணிலே வான் யாறு நிறைவதாகக் கூறியதென உணர்க. செஞ்சுடர் என்பதில், செம்மை, நேர்மையெனப் பொருள்படும். சுடர் மெய்யறிவைக் குறிக்கும். கேதம்-சங்கேதம், ஏற்பாடு, கொள்கை. குட்டம்-கூட்டமென்பதன் முதற் குறுக்கம். கை - எல்லை. 'கேதம' என்பதற்குத் துன்பமென்றும், 'குட்டம'என்பதற்குக குளமென றும் பொருள்கொள்ளுதலுமுண்டு. நீர்நசை - அருள்வேட்கை. நெடுங்கண், ஆராய்ச்சி மான்கணம்-சமயிகளின் கூட்டம். அறுவகைப் புறச சமயங்களாற் கதி கைகூடாமையின் உயிர்கள் பெருநெறி நோக்கி உழன்றமை குறித்தவாறும்.

உரை (௮௩-௯௬)—செஞ்சுடர்வெள்ளம் வான்யாற்றிறபெருக, மான்கணம் பெருவிடாயால் அலமரும. அத் தருணத்திலே அந்த வானப் பேராற்றின் உள்ளிடத்தே புகுந்து கலந்து பேரின்பமாகிய பெரிய சுழலினைச சுழித்து, (மெய்யாகிய மணிகளை) வாரிக் கொண்டு, எமது பாசக்கட்டாகிய கரைகளை மோதி அலைத்து, உடைத்து, வரிசை வரிசையாக மேன்மேலும் வளர்ந்து சென்று

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
கூரு அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க

நல்வினை, தீவினை யென்னும் இருவினைகளாகிய பெருமரங்களை வேரோடு பிடுங்கி மிகுந்துவந்த அழகு மிக்க அருள்வெள்ளத்தைச் செலுத்தித் தொண்டராகிய பயிர்த்தொழிலோர் கடத்தற்கரிய எல்லையையுடைய சாந்த மென்னும் பெரிய கால்வாயைக் கட்டி, வாசனை வீசுகின்ற தேன் மலர் போன்ற இருதயக் குளத்திற்கு உண்மையாகிய நீர்வாயினை யமைத்து, பொறியடக்க மென்னுஞ் சிறந்த அகிற்புகை சேரும் வரம்பினையுடைய ஓங்காரமாகிய சங்கொலிக்கும உள்ளமாகிய குளத்திலே அருள் வெள்ளமானது மேன்மேலும் பெருகுவதை மகிழ்ச்சியோடு பார்த்து, வழிபாடு என்னும் வயலுள அன்பு என்னும் வித்தை விதைத்துப் பயன் கொண்டு துய்கக உதவிய உலகெங்கும் பெறுதற்கரிய முகில் போன்றவன் வாழ்க.

குறிப்பு (அங-கூரு)—வான் யாற்றிலே இறைவனுகிய மேகம் புகுந்து அருண் மழை பெய்விதது, அன்பர் பயன் கொண்டு இன்பம் நுகரும்படி செய்வித்தமை கூறப்பட்டது. உருவம் - அழகு; ஓட்டா - ஓட்டி, செலுதகி, சந்து - பொறை, சாநதம்; சிறை - எல்லை; நிறை - பொறியடக்கம்; வண்டு - சங்கு, ஓஙகாரத் திற் கறிகுறி, மகிழதலின் - மகிழசசியொடு; அண்டம் - உலகத் தொகுப்பு. தூய்மையாகிய வாசனையும் பற்றுதலாகிய இனிமையு முடையது நல்ல உள்ள மென்பது. வெறி - பற்றின்மையைச் சுட்டும். மலர்க்குளவாய் - மலரின் குளவாய், வாய்மையாகிய என்பது வருவித்துரைக்கப்பட்டது. 'ஓட்டா' என்பது, 'தந்த' என்பதோடு முடிகின்றது. தொண்ட உழவர் கட்டி, கோலி, நோக்கி, இட்டு, ஆர என முடிகக.

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

உரை (௯௬-௯௮)—கரிய படத்தையுடைய பாம்பை அரைப் பட்டிகையாக அணிந்த கடவுள் வாழ்க; செயற்கரிய பெருந்தவத் தினார்க்கு அருள் புரியும் முதல்வன் வாழ்க. (பாண்டியன் முதலி யோர்க்கு அபாயம் வந்தபோது) பயத்தை நீக்கி யாட்கொண்ட வீரன் வாழ்க. அல்லது எனது பிறவிப்பயத்தை நீக்கியாட் கொண்ட வீரன் வாழ்க.

குறிப்பு (௯௬-௯௮) —பணம் - படம், அதனையுடைய பாம்பிற் காயிற்று. பாம்பு - குண்டலி சத்திக்கு அறிகுறி உலகியக்குஞ் சத் தியைத் தன்பாற் கொண்டவன் என்பது கருத்து அது வானில் நுட்பமாக வுள்ளது. வானிறம் புகைநிற மென்பதால், அதற்குக் கருநிறங் கூறப்பட்ட தென்பாரு முளர் காணப்படும் உலகிற்கும் காணப்படா வுலகிற்கும் நடுநிற்கத்தாய் உள்ள அச சத்தி, இரண்டி னும் நிறைந்த இறைவனுக்கு அரைநாண்போ லாயிற்று

உரை (௯௯-௬௦௫)—நாடோறும் வினையிற்படாது இழுத்து என்னை ஆண்டருள்பவன் வாழ்க. எதிர்பாராது வந்து கவியும் பெருந் துயரத்தை அறவே யொழிப்பவன் வாழ்க; தன்னை யடைந்தார்க்குக் கிடைத்தற்கரிய அமுதமாகிய பேரின்பத்தைக் கொடுப்போன் வாழ்க. மிகுதிப்பட்ட இருளிலே வளைந்தாடுவோன் வாழ்க. பெரிய மூங்கிலை யொத்த நயப்புடைய தோளினளாகிய

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்றவல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச

திருவருட்சத்தி கணவன் வாழ்க (தன்னைச்) சார்தலில்லாதவர்க்கு இயைபு காட்டாத எமது தலைவன் வாழ்க. அன்பர்க்கு, இளைப்புக் காலத்துப் பயன்படும் ஈட்டிய பொருள்போல்பவன் வாழ்க

குறிப்பு (௯௯ - ௧௦௫).—நிச்சல் - நித்தியல் - நித்தியம் - ஒவ்வொரு நாளும் சூழ்தல் - முன்வினைப் பயன் எதிர்பாராது வந்து மூடுதல் உலகம் ஒடுங்கிய காலையும் இறைவன் நுட்பமாய (சூக்கும) ஐந்தொழில் இயற்றுதலின், 'கூரிருட் கூத்தொடு குனிப்போன்' என்றார். கூரிருட்கூத்து, சூக்கும ஐந்தொழிலையுங் குனித்தல் தூல ஐந்தொழிலையுங் குறிக்குமென்ப. கூரிருள், என்பதைக் காளிக்கு ஆகுபெயராகக் கொண்டு, அவளொடு நடம்புரிவோன் என்பாரு முளர். மூங்கில், பசியநிறம், மென்மை, ஒளி இவற்றைக் குறிக்கும். கூரிருட்கூத்தில் இறைவனுக்குத் துணையாய் நிற்பவள் சத்தியேயாதல் கூறினவாறும் கலித்தொகை கடவுள் வாழ்த்துள் அக்கருத்துக் கவினுறத் தெரிந்தமை காண்க. இறைவன் நலங்கொடுப்பினும், அதனைத் துய்க்கும் இயைபில்லாதார், ஏதிலராவர் அவர்கட்கு இறைவன் பேருதவி தெளிவாகப் பயன்படுமாறில்லை என்பது கருத்து. அடுத்த அடியில் அன்பர்க்கு உற்றவிடத்து உறு பேருதவியாமென்றார். எய்ப்பு - முதுமை, நோய் முதலியவற்றால் உளதாகும் இளைப்பு வைப்பு - சேமித்து வைத்த பொருள்.

உரை (௧௦௬-௧௧௪).—திருப்புறம்பயத்தில் பாம்பு தீண்டி இறந்த ஒருவனை உயிர்ப்பித்தற் பொருட்டுக் கொடிய பாம்பொன்றினை ஆட்டி (அதனால் விடந்தீர்ந்து அவனை உயிர்ப்பித்த) நம்பெருமான்

சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவின் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை

காத்தருள்க. (விடத்தை இறக்கினது போல) எனக்கு மாலேற்றிய பெரியவன் காத்தருள்க. (அகண்டப் பொருளா யிருந்தும்) அடியரை ஆட்கொள்ளத் திருநீறணிந்த திருமேனியோடு தோன்ற வல்லவன் அருள்க. நான்கு திக்கிலுமுள்ள நடப்பனவற்றை நடப்பித்தும் கிடப்பனவற்றைக் கிடப்பித்தும் நிற்பனவற்றை நிற்பித்தும், இன்ன தன்மையனென்று சொல்லும் மொழியின் தரத்தைக் கடந்த பழமையோன், மனங்கொண் டுணருமுணர்ச்சியினாற் பற்றப் படாதவன், கண் முதலிய (ஐந்து) பொறியறிவினாற் காணப்படாதவன், வான் முதலிய பூதங்கள், ஐவகையாகத் தோன்றும்படி அவற்றை வகுத்தவன்.

குறிப்பு (௧0௬-௧௧௪).—திருப்புறம்பயத்தில் கணவனையிழந்த காதலியின் பொருட்டு இறைவனே பாம்பாட்டியாக வந்து கணவன் உடம்பிலுள்ள விடத்தை இறக்கி உயிர்ப்பித்தானென்பது குறித்தவாறு. பிச்சு - பித்து - அன்பினாலாகிய பெரு விருப்பம். நீறு என்பதற்கு அழித்தல் என்று பொருள்கொண்டு, தோற்றம் என்பதற்குப் படைத்தல் எனப் பொருள்கொண்டு அந்தமுமாதியுமாயிருக்க வல்லான் என்று பொருள் கூறுவாருமுளர், எவ்வகைச் செயலும் இறைவன் செய்விக்கவே நிகழ்கின்றதென்பது கருத்து. ஆதலின், நடத்தல், கிடத்தல், நிற்றல் மூன்றையும் விதந்தனர். அப்படித் தொழிற்படுபவற்றிற் கெல்லாம் முற்பட்டவனாதலின், 'பழையோன்' என்றார். மனமொழி மெய்களைக் கடந்தவன் என்பதைப் பிற அடிகளிற் குறித்தார்.

உரை (௧௧௫-௧௧௯):—மலரினின்று எழுகின்ற மணம்போல

இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரு மாக்கை யொழியச்செய்த வொண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரு மாக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்

மேம்பட்டு உலகெங்கும் நீக்கமற நிறைந்து (எவற்றிற்குஞ் சார்பாய்ப்) பொருந்திய பெருந்தன்மையை இக்காலத்தே எனக்கு எளிதின் வந்து அறிவுறுத்தி அருளி அழியுந் தன்மையுடைய உடம்பெடுக்கும் பிறவியானது நீங்கும்படிச் செய்த ஞானமுதல் இற்றைநாளிலே என்பால் எளிதாக வந்தமர்ந்தோன், அவனுக்கு வணக்கம்.

குறிப்பு (௧௧௫-௧௧௮) —மலர்-தோன்றும் பொருள், நாற்றம்-நுட்பமாய்த் தோன்றாதுள்ளது. முகர வல்லார்க்குத் தோன்றும்; அங்ஙனமே இறைவன் தோன்றாச் சார்பாயிருந்து அன்பர்க்கே புலப்படுவன். பிற பொருட்சார்பும், எளிதினறியப்படுதலுமிலன் என்பார், 'உயர்ந்து' என்றார். திருவாசகத்திற் பிறிதோரிடத்திலும் 'உற்ற வாக்கையினுறு பொருள் நறுமலரெழுதரு நாற்றம் போற் பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' என்றது காண்க. தனது அகண்ட வியாபகப் பெருமையை இறைவன் தமக் கறிவுறுத்தினமை குறித்தார். சிவஞானத்தால் அது உணரப்படுதலின் பிறவி யறுதற்கு ஏதுவாயிற்று. தமதுள்ளத்தே வீற்றிருந்தமை கூறுவார் 'எளிவந்து இருந்தனன்' என்றார். போற்றுதல் என்று பொருள்படுந் தொழிற்பெயராகப் போற்றி என்பதைக் கொள்ளின், அது வணக்கமென்று பொருள்படும்.

உரை (௧௨0-௧௨௬):—உருக்கம் மிக்க உடம்பைத் தந்தவனுக்கு வணக்கம். இன்ப ஊற்றாக உள்ளத்தே அமர்ந்து அதனை

கஉ௬ மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும
ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்(து)
உற்றவர் வருந்த உறைபவர்க் கொளித்தும்
கஙo மறைததிறம் நோககி வருந்தினர்க கொளிததும
இததந திரத்திற் காண்டுமென் றிருநதோர்க்கு
அத்தந் திரததின் அவ்வயின் ஒளிததும
முனிவற நோக்கி நனிவரக் கௌவி

மகிழ்விப்போனுக்கு வணககம் தாஙகமுடியாத பேரின்ப வெள்ள மானது பொஙகிப் பரநது அலைவீச, அதனைப் பேண இயலாத இவவுடம்பை நான் தாஙக விரும்பேன் பசசை மணிக குவியலும் சிவநத பெரிய மாணிக்க ஈட்டமும காணுகின்ற மின்னலொளி யைத தன்னகததுட்கொண்ட பொன்னொளி (விளஙகினாற்போலச சததியுஞ் சிவமுமாம) இறைவன் விளஙகவும், அவனை நானமுக னுந (திருமாலும) போய முயனறு தேடினராக, (அவர்கட்குத தன் மெய்யியல்பினை) மறைத்தும

குறிப்பு (கஉo-கஉ௬) —அளி - அனபாலாய உருக்கம அன் பின் மிகுதியின பயனாக இனபப் பெருககம் எழுகின்றது அதனை முற்றிலும நுகர, உடம்பு தடையாதல் கூறியவாறு. இறைவியின் நிறம் பசுமை யாதல பற்றி, 'மரகதக் குவாஅல்' என்றார இறைவ னுருச செவவிய தாகலின், 'மாமணிப் பிறக்க' மென்றார தூய்மை மின்னொளியாலும், ..றின்மை பொன்னொளியாலுங குறிக்கப் படும. ''தேடினா' என்ற பன்மையால் திருமாலுங கொள்க. செருக்குபற்றி அயனரிக்கு இறைவன் வெளிப்பட்டிலர் நற்ற வத்திற்குரிய வெவவேறு படிகளில் நிற்போர்க்கும், இறைவன் வெளிப்படாது, தவம் முற்றிய தாழ் மனத்தோர்க்கே அவன் தன் தனமையைத தானே காட்டுவானென்பதைக கீழ்ப்போந்த அடி களில் விளககினமை காண்க.

ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
கஉ-ரு வாள்நுதற் பெண்ணென வொளித்தும்
சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத்(து) அருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்

உரை (கஉஎ-கஉரு) —முறையாக நூல் வழியிற் பொருந்தித் தன்னைக் காண முயன்றவர்க்குத் தன்னை மறைத்தும், (உலகப் பொருள்களி லீடுபடாமைக்காக) உறவினர் வருந்தவும் (அதனைப் பாராட்டாது) மனவொருமை கொண்டு இறைவனைக் காணும் விருப்பொடு உறுதியாக நின்றவர்க்கு ஒளித்தும், மந்திர முறையாற் கடவுட்காட்சி காணப்பான் வருந்தி முயன்றவர்க்குத் தன் மெய்த் தன்மையை மறைத்தும், இந்த உபாயத்தாற் காணபோ மென்று முயன்று எதிர்பாராதிருந்தவர்க்கு அந்த உபாயத்திலேயே அவ்விடத்தில் ஒளித்தும், பரம்பொருளைச் சாந்தமாகப் பார்க்கவும் மிகுதியாகப் பற்றவும் முயன்றவர்க்கு, ஆண் வடிவங்கொண்டு தோன்றியும், ஒளி பொருந்திய நெற்றியுடைய பெண் திருமேனியோடு தோன்றியும், இரண்டுமிலாத வடிவாகத் தோன்றியும் மறைந்து தன்னியல்பினைக் காட்டாமலும்

குறிப்பு (கஉஎ-கஉரு) —முதலிலே நூலிற்சொன்ன ஒழுக்க முறைப்படி நிற்றல் கூறப்பட்டது. மன அடக்கம் அல்லது மனோலயம் அடைதற்கு முயலும் முறை பின் கூறப்பட்டது. மந்திர வகைகளைக் கையாளுவதாலும், வேறு உபாயங்களைக் கையாளுவதாலும் இறைவன் வெளிப்படான். சூழ்ச்சிக்கு மேற்பட்ட சூழ்ச்சியனாதலின், உபாயத்திலேயே ஒளிக்கவல்லான் என்றார். சாந்தமாக அன்பு செய்தலின் பயனாக, இறைவனது உருவத் திருமேனியின் காட்சி கிடைப்பினும், மெய்யிலன்பு புலனாகாமை காண்க.

உரை (கஉசு-கசஉ) —நெடுந் தூரத்திலே, ஐம்பொறி யறிவினைப் போகும்படி நீக்கி, கடத்தற்கரிய மலைகள்தோறும் போய்

பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்னே ரில்லோன் தானே யான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி

நுகாவனவற்றை வெறுத்தமையால், உயிர் மாத்திரமுள்ள தசை யற்ற வெற்றுடம்புடைய செயற்கரிய தவத்தினரது பார்வையுள் விளங்கினும், அவர்கள் திருந்த மெய்தற்பொருட்டு முற்றிலும் தோன்றுதொளித்தும், ஒருபொருள் உண்டோ; இல்லையோ வென்ற உணர்ச்சி யுடையார்க்கு ஒளித்தும், முன்னாட்களிற் பயிலுந்தோறும் இந்நாளிற் பயிலுந்தோறும் மறைந்து போகின்ற கள்ளனைக் கண்டோம், கூடுங்கள், அன்றலர்ந்த பின்னல் மாலையால் அவனது திருவடியில் விலங்கிடுங்கள், வலம் வாருங்கள், சூழ்ந்து நில்லுங்கள், பின்தொடருங்கள், விடாதேயுங்கள், பிடித்துக் கொள்ளுங்கள் என்றவர்களுடைய பிடிக்கு முழுவது மொளித்தும்.

குறிப்பு (௧௩௬-௧௪௫):—பற்றற்ற யோகியர்க்கும், சிவஞானம் பெறாத விடத்து இறைவன் முற்றிலும் வெளிப்படான். அவர்கள் திருந்துதலாவது, ஞானம் பெறுதற்குரிய பக்குவம் அடைதல். இறைவனைக் காணப் பெறுவிடத்து உயிரின் சிற்றறிவு முனைத்து, ஐயுறவு தோற்றுவிப்பின், அது ஞானப் பேற்றிற்குப் பெருந்தடையாகும். இறைவன் திருவருட் காட்சி ஒருகாற் பெறினும், செருக்கற்ற நிலையில் நில்லாது, உயிரின் தற்போத முயற்சி மேற்பட்டெழுமாயின், இறைவன் வெளிப்படா னென்பது உறுதியாகக் குறித்தவாறு.

உரை (௧௪௬-௧௫௭) —தனக்கு யாரும் ஒப்பில்லாத பெருமான் தானே எல்லாவற்றோடும் அத்துவிதமாய்க் கலந்து அவையான

அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
௧௬0 உளையா அன்பு என்புருக ஓலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
௧௬௫ கடக்களிறு ஏற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்

தன்மையையும், தன்னில் தானாயுள்ள தனியியல்பையும், என்னைப் போன்றவர்கள் கேட்கும்படி வந்து அறிவுறுத்தியருளி, வலியப் போர்க்கழைத்தாற் போலழைத்து அடிமையாகக் கொண்டருளி, அந்தணனாகிய ஆசிரிய வடிவங் காட்டி யருளியதோடு, அவ்வா றருளினவுடனே, சலிப்பில்லாத அன்பினாலே எலும்பும் உருகும் படியாக முறையிட்டு, நான் கொந்தளிக்கிற கடலின் அலைபோலக் கூவிக்கூவி யெழுந்து தலைமயங்கிக் கீழேவீழ்ந்து உருண்டு கதறிப் பித்துக்கொண்டவர் போல மால்கொண்டு, வெறிகொண்டார் போலக் களித்து, நாட்டிலே பார்த்தவர்கள் திகிலடையவும், கேட்ட வர்கள் அதிசயிக்கவும், தன்மேற் பாகனை ஏறவிடாதபடி மிகுந்த பெருமதங் கொண்ட மதயானைபோல, (மிகுதிப்பட்ட இன்ப அன் பினைத்) தாங்க இயலாதேனாகும்படி, எனது உறுப்புக்களை யெல் லாம் சுவைக்கக் கொம்புத் தேன் போன்ற இன்ப வுணர்ச்சியாற் செய்தமைத்தனன்.

குறிப்பு (௧௬௬-௧௬௭) —சிற்றறிவுடைய உயிர்கட்குப் பேரறிவும் பேரின்பமும் தலைப்பட்டவுடன், அவற்றின் பாரம் தாங்க இயலா வென்பதும் அவற்றினாலாய மெய்ப்பாடுங் குறித்தவாறாம். அருள லும் என்பதை ஈற்றடியிற் 'செய்தனன்' என்பதோடு முடிக்க. 'உருக' என்பதோடு முடித்தலு முண்டு.

ஏற்றார் மூதூர் எழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்(கு) அன்று
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆஆ! செத்தேன் அடியேற்
கருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்

உரை (௧௫௮-௧௬௭):—(திரிபுரத்தினராகிய) எதிர்த்தவர்களது பழைய ஊர்களை அழகுமிக்க புன்னகையிலெழுந்த நெருப்பினாற் சுட்டெரித்து வீழ்த்தியதுபோலத் தனது அருட்பெருந் தீயினால் அடியேங்கள் ஒருத்தரும் தவறாதபடி எங்களுடைய அடிமையுடம்பாகிய குடிசையை ஒடுக்குவித்தான். வளைந்த (உள்ளங்) கையில் நெல்லிக்கனியைப் போலத் தவறிப்போகாத கைகண்ட அமுதமாயினன். எம்பெருமான் வாழ்க. (அவன் எவ்வாறு எனக்குக் கிட்டினனென்பதைப்) பிறர்க்குரைக்க அறியேன். அவன் என்னைச் செய்த வித்தை நாய்போன்ற யான் தாங்கமாட்டேன். அதை அறியு மாற்றலிலேன். ஆ ஆ! செருக்கற்றொழிந்தேன். அடியேனுக்கு நல்கியதை (பேரின்பத்தை) அளந்தறிய வல்லேனல்லேன். அதனைக் குடித்தும் நிறைவெய்தல் பெறேன். மிகுதியாக விழுங்கவும் ஆற்றலில்லேன்.

குறிப்பு (௧௫௮-௧௬௭):—முப்புர தகனம். மும்மல நீக்கத்தைக் குறிக்குமென்ற திருமந்திரக் கருத்து இங்கே புலனாதல் காண்க. கையை வளைத்து உள்ளங்கையிலுள்ள பொருள் கீழே விழாதபடி வைத்த காலை, அது தடக்கை யெனப்படும். உருண்டு போகும் நெல்லிக்கனி உள்ளங்கையில் உருளவிடமில்லாதிருப்பதோடு அதன் எப்பகுதியும் காட்சிக்குச் செவ்விதிற் புலனாமென்ப. நெல்லிக்கனி-

செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்து நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தனன்

கருநெல்லியைக் குறிப்பதாய்ச் சாவாமருந்தாகிய கற்பமாமென்பர். அது பேரின்பம் தரும் இறைவனுக்கு உவமையாயிற்று. பேரின்ப அவா மேலீட்டினாற் பருகியுமாரேன் என்றார். தனது ஆற்றலுக் கேற்றவாறே அதனை உட்கொள்ள முடியுமன்றி மிகுதியாக முடியாதென்பார், 'விழுங்கியு மொல்லகில்லேன்' என்றார்.

உரை (௧௬௮-௧௭௭) —முழு மதிக்காலத்தே கடல் நடுவிற் பொங்கும் நீர்போல, உள்ளத்தினுள்ளே பேரின்பமானது நிறைந்து வளமிக்க பாற்கடலைப்போலத் ததும்பச் செய்து, சொல்லுந் தன்மையைக் கடந்த பேரமுதமானது உரோமத்தி னடிதோறும் நிரம்பத் தங்கும்படி செய்தனன். நாய் போன்ற அடியேனது உடம்பினகத்தே சிறு வீட்டிருக்கை கொண்டருளி தீயேனுடைய புலால் மிகுந்த உடம்பின் குருதிக் குழாய் நரம்பு முதலிய செய்கரைகடோறும் இனிய தேனைப் பாய்ச்சி, அதிசயிக்கத் தக்க நிறைவான அமுத ஒழுங்குகளை எலும்புத் துவாரந்தோறும் பாய்வித்தனன். உருகுந் தன்மையுடைய உள்ளத்தினாலே வடிவ மமைத்தாற் போல (ஒவ்வொரு பகுதியிலும்) நெருங்கி (அமுதம்) ஊறிக் கசிகின்ற உடம்பைத் தந்தனன்.

குறிப்பு (௧௬௮-௧௭௭) :—பொருள்கொள்ளுமிடத்தே, இரண்டாவது அடியை முதலிற் கொள்க. உயிரினறிவிற் றோன்று மின்ப

ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கினன்; என்னிற்
௧௮௦ கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராஅமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

மாதலின் உள்ளகத்தே கடல் நடுநீர் என்றார். முழுமதி - பேரறிவைக் குறிக்கும். உயிரிற் கலந்த பேரறிவினடுவே இன்ப முதிப்பதென்றறிக. பேரறிவுக்கு அறிகுறி - பாற்கடல் குரம்பை யென்பது உடம்பையும் அதன் பகுதியாய வரம்புகளையுங் குறிக்கும் குரம்பு, வரம்பு, கள்ளூறு எனவும், அள்ளூறு எனவும் பிரிப்பர். கள் - தேன் உடம்பு நினைவு வந்தபோதும் உடம்பெங்கும் கலந்துள்ள முதல்வனது பேரின்ப நிறைவே புலனாதலாலும், அதற்குக் காரணமாய அன்பும் மேற்படுதலாலும், உடம்பிலே அமுதம் ஊறுவதென்றார்.

உரை (௧௭௮ - ௧௮௨) —ஒளிமிக்க கற்கண்டின இனிமையுடைய கனியைத் தேர்ந்துண்கின்ற (இறுமாப்புடைய) யானை போல, முடிவான முறையாகத் தகுதியற்ற அடியேனையும் இருக்குமாறு செய்தருளினன். அயனரி யறியாப் பெருந்தன்மையன், மேலாகிய திருவருள்தேனானது என்னிற் கலக்கும்படி செய்து, அவ்வருளோடு, மிகமேம்பட்ட பேரின்ப அமுதத்தையும் அமைத்து வைத்தருளினன்.

குறிப்பு (௧௭௮ - ௧௮௨) —இறுதியடியைக் 'கருணைவான்' என்பதற்கு முன் கொள்க. அருள் விளக்கமுஞ் சிவ விளக்கமுங் கூறியவாறு. ஒண்மை அருளையும், கனி - சிவானுபவத்தையுங் குறிக்கும். இனிமை நிலை பெற்றிருத்தலின், கன்னற்கனி யென்றார். கடைமுறை-கடையா முறையெனக் கொண்டு, அருள்பெற்ற அடியருட் கடை நின்ற முறையிலெனப் பொருள் கொள்வாருமுளர். பரா - மேலான.

தில்லையில் அருளிய

போற்றித் திருவகவல்

சகத்தின் உற்பத்தி

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்(று)
அடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏன மாகிமுன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்துபின் எய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்

(போற்றித் திருவகவல் - போற்றியென்ற ஈற்றுச் சீருடைய அடிகளின் மிகுதிகொண்ட திருவகவல்.)

(சகத்தின் உற்பத்தி - உயிர்களின் தோற்றம்) இஃது இவ்வகவலின் ஒரு பகுதியாக அமைந்துளது. அகவல் முற்றும் அதைப் பற்றியதன்று

உரை *(௧-௰) :—படைப்புக் கடவுள் முதலாகவுள்ள தேவர்களெல்லாம் வழிபட்டுச் செல்லவும், வாமனாவதாரத்திலே தனது இரண்டடிகளினாலே மூவுலகங்களையும் அளந்து, நான்கு திசையிலுமுள்ள முனிவர்களும் தமது ஐம்புலன்களும் மகிழ்ச்சியடையும்படியாக வணக்கஞ் செய்யப்பெற்ற ஒளிவீசுந் திருமுடியினையுடைய பெருமை மிக்க திருமால், (இறைவன் அனற்பிழம்பாய் நின்ற) அக்காலத்திலே ஈசன் திருமேனியின் அடியின் முடிவைக்காணும்*

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்(து)
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்

விருப்ப மிகுதியால், வலிமை மிகுந்த பன்றி வடிவெடுக்க, (அய னுக்கு) முற்பட்டுக் கீழேழுலகினும் புகுந்து, ஊடுருவத்தோண்டிப் பின்னர் (கீழ்ச்செல்ல இயலாது) இளைப்படைந்து (எம்பெரு மானை நோக்கி) உலக முடிவுக்கு முதல்வனாயுள்ளவனே! உனக்கே வெற்றி வெற்றியென்று துதித்து வணங்கியுங் காணப்பெறாத திருவடிகள் வழிபடுதற்கு எளிதாக வெளிப்படும் நெடுங்கடல் சூழ்ந்த இந்நிலவுலகிலே.

குறிப்பு (க-கo) —இதனுள் தேவருட் சிறந்த திருமால் யானென தென்னுஞ் செருக்கறுமையால், இறைவன் திருவடி களைக் காணப் பெறாமை கூறினார். அரி, ஒரு குள்ளப் பிராமண வடிவமெடுத்துச் சென்று, மூவடிமண் வேண்டி, ஈரடியாலே உல கனைத்தும் அளந்து மூன்றாவது அடி மண் கிடையாமையால், மாவலி தலையி லடி வைத்த கதை வெளிப்படை. நிலைப்புக் கடவு ளாதலின், ஐம்புலனும் தத்தம் நிறைவைப் பெறுமாறு இயற்ற வல்லவனாதலின் 'ஐம்புலன் மலர' என்றார். திருமாலுக்குக் கீழாக உள்ள கடவுள் அயனாதலின், அவன் முதலாக உள்ள பிற தேவ ரைக் கூறினார். திருமாலுக்கு மேற்பட்டவர்கள் உருத்திர வர்க்கத் தினர். அவர்கள் இறைஞானம் பெற்றவர்கள். அடிமுடி - அடி யின் முடிவு. உடல் வலிமையும் மனவலிமையு முடைமையால், 'கடுமுரண்' என ஈரடைகொடுத்தார். அன்பர்க்கருள இறைவன் புவனியிற்சேவடி தீண்டினனென்பார், 'வழுத்துதற் கெளிதாய்' என்றார். 'எளிதாய' என்பது 'எளிதாய்' எனக் குறைந்து நின் றது அல்லது 'எளிதாய்' என்பது எளிதாக எனக் கொண்டு எளிதாகவே (அவற்றை வழுத்துதற் பொருட்டு) எனப் பொருள் கோடலுண்டு.

உரை (கக-கச):—(பெரிய) யானை முதல் (சிறிய) எறும்பு

ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈர்இரு திங்களிற் பேர்இருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை

வடிவாக உள்ள (பிறவிகளிலே), குற்றம் இலாதாகப் பொருந்திய கருப்பைகளிலே, அவற்றுள் நிகழுஞ் செயல்களின் கெடுதிகருத் தப்பியும், மனிதப் பிறவியிலே தாய் வயிற்றிலே நிகழும் குறைவில்லாத புழுக்களின் போரிலே (சிதைவு படாது) தப்பியும்

உரை (கரு-உசு) :—தாயின் கருப்பையில் ஒரு மாதம் ஆனவுடன் தான்றிக்காய் அளவு அடைந்த கருவானது, கருப்பையிற் பொருந்தி ஒன்று படாது பிளவு படுதலாகிய இருமையினின்று தப்பியும், இரண்டாவது மாதத்திலே, பிற புழுக்களின் இடர்ப்பாட்டு மிகுதியாலே உருவெடாமையினின்று தப்பியும், மூன்று மாதத்திலே கரு வளர்தற் பொருட்டுக கருப்பையிற் பெருகுங் கொழுப்பான நீர் மிகுதியினின்று தப்பியும், கரு நீரினுலே கருப்பையிலே நான்கா திங்களிலே இருள் மிகுந்த காலை, அந்த இருளில் நின்று தப்பியும், ஐந்தாம் மாதத்திலே (கருப்பை நீர் மிகுதியாலும் இருள் மிகுதியாலும்) சாவதினின்று தப்பியும், ஆறுவது மாதத்திலே தினவு மிகுதியா லுண்டாகிய துன்பத்திற்குத் தப்பியும், ஏழாவது மாதத்திலே கருப்பை தாங்காமையாற் பூமியிற் காயாய் விழுவதினின்று தப்பியும், எட்டாவது மாதத்திலே, கருப்பையி

ஈண்டியும் இருத்தியும் எனப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

லுண்டாகிய வளர்ச்சி நெருக்கத்திற் றப்பியும், ஒன்பதாவது மாதத்திலே வெளிப்பட இயலாது வருந் துன்பத்தில் தப்பியும், பத்தாவது மாதத்திலே தாயும் தானும் வெளிப்படுதற்காகப் படும் துயரக் கடலினின்று தப்பியும், (நிலவுலகிற் பிறந்து) வளருங்காலை.

குறிப்பு (கக-உக):—யானையினும் பெரிய பிராணிகளும் எறும்பினுஞ் சிறிய பிராணிகளு மிருப்பினும், அவற்றையும் இனம் பற்றிக் கொள்ளுக. பெரு வழக்காய்க் கட்புலனாயுள்ளவற்றை விதந்தனர்.

உரை (உஎ-சக)—நெருக்கியும் அழுத்தியும் துன்புறுத்தல் முதலிய எத்தனையோ பல இடையூறுகளிற் றப்பியும், காலையில் மலங் கழித்தல், நடுப்பகலில் உண்டாகக் கூடிய கடும்பசி தவிர்த்தல், நள்ளிரவிற்செய்யுந் துயில் என்பவற்றின் சார்பாய துன்பங்களில் தப்பியும், ஊர்களுக்குப் போக்குவரவு என்பதனால் வரும் இடையூறுகளில் தப்பியும், கருநிறமுடைய கூந்தலினையும், சிவந்த வாயினையும், வெள்ளிய பல்லினையும், கார் காலத்து வளமுடைய மயில் கண்டு அடங்குதற் கேதுவாய மென்மையினையும், ஒன்றை யொன்று நெருக்கி, உள்ளே திரட்சி யெய்தி, கச்சு அற்று விழும்படி மேலெழுந்து, ஒளி வீசி, எவ்வங்கத்திலும் அதிகமாக முற்பட்டுப் பருத்துப் பாரந்தாங்காது இடையானது மெலிந்து வருந்தும்படி எழுச்சி பெற்றுப் பக்கத்தில் விரிந்து ஈர்க்கில் கூட இடையிற்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பல துறை பிழைத்தும்

போகக்கூடாதபடி விலக்கும் இளமை நயமிக்க நகிலையுடைய பெண்டிர்களுடைய (வேல்போலக்) கூரிய கண்களினாற் கவர்ந்து கொள்ளப்படுதலாகிய கொள்ளைக்குத் தப்பியும், (பொருள், இன்பங்களைத்தேட) மால்கொண்ட உலகத்தினருடைய பெரிய துறைகளையுடைய முயற்சிக் கடலைக் கலக்கும், மதயானைபோன்ற ஆசையினின்று தப்பியும், கல்வி யென்னப்படும் பலவாகிய கடல்களைத் தப்பியும், செல்வமென்கிற துன்பத்தினின்று தப்பியும், வறுமை யென்னும் பழைய நஞ்சினின்று தப்பியும், சிற்றெல்லைகளையுடைய பல்வகைப்பட்ட முயற்சிகளிற் றப்பியும்

குறிப்பு (௨௭-௬௧) —நெருக்குதல், அழுத்துதல் முதலியன, பலவகையான வசதியின்மைகளால் விளைவன. காலை மலங்கழித்தல் உடற் புனிதத்திற்கும் சுகத்திற்கும் இன்றியமையாதது. பசியின் கடுமை வெம்மைமிக்க நண்பகலிற்றான் தோன்றும். "சேமம் புகினும் யாமத் துறங்கு" என்றவாறு நிசிநித்திரை அவசியமானது. அகப்பற்று கடத்தற்கரியது ஆதலின், மாதர் மயலை விரித்துரைத்தார். கண்கவர் வனப்பு, நகிற்குணமை தெளிவு. ஒருங்குதல்- அடங்குதல். கார்காலம் - மயில் மகிழ்ச்சியுடன் வளமுறுங்காலம். சாயல், மென்மை, கண்ணும் நகிலும் நங்கையரின் சிறந்த அங்கங்களாதலின் அவற்றை விதந்தனர். செல்வமானது, பாதுகாப்புக் கவலை முதலிய பல இன்னல்களை விளைத்தலின் 'அல்லல்' லென்றார். "புல்வரம்பாய பலதுறை" யென்பன, பொழுது போக்காகவும், மிக்க பயனில்லாதனவாயுமுள்ள சிறு முயற்சித் துறைகள். கல்வி-பல வகைப்படும். வீடுசேர்க்குங் கல்வியே பயனுடைய கல்வி. பிற கல்விகளி லீடுபட்டால் அவை தவமுயற்சிக் கிடையூறாகும்.

தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும
ஆறு கோடி மாயா சத்திகள்
௪௫ வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்த மானோர் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும பேறினர்

உரை (௪௨-௪௭) —கடவுள் ஒருவனுளன் என்ற நினைவு ஏற்பட்டு வெறுப்பற்றதொரு பெரும் பொருளை நாடுதலும் ஆறுகோடியெனக் கணக்கிட்டுக் கூறப்படும் மயக்கஞ் செய்யவல்ல சடவுலக ஆற்றல்கள், தத்தம் பல்வேறு திறப்பட்ட சூழ்ச்சிகளைக் காட்டுவான் தொடங்கிவிட்டன. உண்மையான நண்பர்களும் பக்கத்திலுள்ள பிறரும கடவுளை நாடாமைக் கேதுவாகிய நாத்திகத்தினைப் பலகால் எடுத்துப் போதித்து, அதனால நாவில் தழும்பு ஏறப்பெற்றனர்

குறிப்பு (௪௨ - ௪௭) —ஆறுகோடி மாயாசத்திகள் இன்னவென்பது,

"மாமாயை மாயை வைந்தவம் வைகரி
ஓமாயை உள்ளொளி யோராறு கோடியிற்
றுமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
ஆமா யலவாந் திரிபுரை யாங்கே" —திருமந்திரம்

என்பதால் விளங்கும்.

மாமாயை-சுத்தமாயை. மாயை-அசுத்தமாயை. வைந்தவம்-சுத்தமாயையாலாகிய பொருள்கள். ஈண்டு மத்திமை யென்று கொள்ளலாம். வைகரி-செவிப்புலனும வாக்கின் மூலம். ஓமாயை-பைசந்தி. உள்ளொளி-சூக்குமை.

பேரின்ப நாட்டத்தையே முனிவிலாத பொருளென்றார். உலகப் பற்றுவிட்டு, மெய்ந்நாட்டத்திற் செல்லுங்கால் உளவாகிய இடையூறுகளைத் தொகுத்துரைத்தார். உலகியல் நெறியைத் தவிர்தல் கூடாதென்பதே, பக்குவம் வரப்பெறாத நண்பர்,

சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து
உலோகா யதமெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்

நொந்துமலர், உறவினர் முதலியோரின் கருத்தாதலின் அக்கருத்திற்கேற்ற முயற்சியை அவ்வவர் தத்த முறையிற் செய்வாராயினர். உயர் ஞான நாட்டமில்லாத கிரியாவான்களும், புறச்சமயத்தாருந் தத்தங் கொள்கை விரித்தல் இயல்பே

உரை (௪௮-௫௧) — உறவினரென்னும் பழமையான பற்றுக் காரணமாகப் பிறவிகளில் தொடர்ந்து வருகிற ஆவினங்கள் பிடித்துக் கூவிப் பதைபதைத்துக் கூட்டமிட்டு (கடவுளை நாடச் செல்லாது தடுக்கவும்), நோன்பிருத்தலே மேலான சாதனமென்பதை மெய்ப்பித்தற் பொருட்டுக் கிரியை நூலுணர்ந்த வேதியரும் நூற் பிரமாணங்களைக் காட்டினர். வெவ்வேறு சமய நூல் வல்லார் தத்தம் சமயங்களிலே முடிந்த உண்மையானது பொருந்தி யிருப்பதாக முழங்கி யெதிர்த்தனர்.

குறிப்பு (௪௮-௫௧) — சுற்றத்தார் - பாசத்தாற் கட்டப்பட்டவராதலின், பசுக்குழாங்களெனவும், பண்டைத் தொடர்புடையராய் வருதலின், 'தொல்' எனவுங் கூறினர். சரதம் - மெய்ம்மை

உரை (௫௪-௫௮) — திண்ணிய மாயாவாத மதமாகிய, வேகம் மிக்க சுழற்காற்றானது சுழன்று வீசி முழங்கவும், உலகாயதமென்

தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்(து)
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் இடையறா அன்பிற்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்

னும் மினுக்கங் காட்டும் வலிய பாம்பினுடைய கலை வேறுபாடுக ளுடைய கொடிய நஞ்சு வந்து சேர்ந்து, அதிலுள்ள பெருஞ் சூழ்ச்சிகள் எத்தனையோ பல சுற்றித் தொடரவும்.

குறிப்பு (௫௪-௫௮) —அடிகள் காலத்திலே பௌத்தமே மாயாவாத மெனப்பட்ட தென்ப. பிற்காலத்திலே ஏகான்ம வாதத்துள் ஒரு பகுதி மாயாவாத மெனப்பட்டது. மாயா - மயக்கம், மயல் விளக்கு மதமென்பது கருத்து. கடவுள், உயிர், தளை முதலியனவெல்லாம் உடன்பாடாகக் கூறி, முடிவில் அவை சூனிய மென்றலின் அது மருட்சி விளைப்பதாயிற்று. உலகாயத மதம், நிலம், நீர், தீ, வளி என்பவற்றையே உண்மைப் பொருளாகக் கொண்டு, கடவுள், உயிர் முதலியவை இல்லையென்ற கொள்கை யுடையது. ஏகான்ம வாதம், ஒரு ஆன்மா தவிர, பிறவெல்லாம் இல்பொருளெனக் கூறும். உலகாயதம் எல்லாஞ் சடப்பொருளே, சித்துப் பொருளில்லை யெனக்கூறும். அதுவும் பூதவாதம், பிராண வாதம், அந்தக்கரணவாதம் எனப் பலதிறப்படுதலின், கலாபேதத்த என்றார். விடம் அறிவைக் கவர்தல்போல, உலகாயதம் அறிவுப் பொருளின்மையை வற்புறுத்தலின் 'கடுவிடம்' என்றார். விடம், உடம்பிற்குக் கேடுவிளைப்பது. நாத்திகம், உயிர்க்குக் கேடு விளைப்ப தாகலின், 'கடுவிடம்' என்றார்.

உரை (௫௯-௭௨) :—அவற்றால் நெறி நின்று வழுவாது, தாங்கொண்ட கடவுட் கொள்கையை அலுத்து விட்டுவிடாது இறைவனை வழிபட்டு நெருப்பினிற்பட்ட மெழுகுபோல, உள்ளம்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதிர் இழந் து, அறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா அதிசய மாகக்

உருகிக் குறையுணர்ந்து அழுது உடல் நடுக்கமடைந்து, ஆனந்தக் கூத்தியற்றியும், ஓலமிட்டும், பாடல்களால் வாழ்த்தியும், (உடம்பால்) வணங்கியும், இடுக்கியும் மூடனும் தாம்பிடித்ததை நெகிழ விடாமை போலவே, உறுதிகொண்டு, பயன் கருதாத இடையறாத கடவுட்பத்தியில், பசிய மரத்திலே அறைந்த ஆணி திண்மையாய்ப் பற்றி நிற்பதுபோல, உறைத்து நின்று, உருக்கம் மிகுந்து, கடலலைபோல அலைவுற்று, மனம் வாடி, அதற்கேற்ப உடல் அசைவுற்று, உலகர் தம்மைப் பேயென்றிகழ்ந்து சிரிப்ப, வெட்கமென்பதைத் தவிர்ந்து, நாட்டிலுள்ளவர்களது குறைச்சொற்களை அணியாக ஏற்று, அவற்றால், மனங்கோணாது, (நம்மால் ஆகும் என்னும்) திறமை யுணர்ச்சியிழந்து சிவஞானம் பெறும் பேரவா மேலிடப்பெற்று, அடைதற்குரிய வீடு பேற்றினையே மேலான வியப்பாகக் கருதி.

குறிப்பு (ருகூ-எஉ) —முதற்கண் உயர்ந்த கொள்கையில் நிலைபேறான உறுதியை வற்புறுத்தினர். உறுதியுற்றபின் தான் அன்பு நிகழும். அன்பின் இன்றியமையாமையையும் இடைவிடா நிகழ்ச்சியையும் வற்புறுத்துவார், மும்முறை அதன் மெய்ப்பாடுகளை இயம்பியருளினார். உறுதியையும் அன்பினையும் பிணைந்து பிணைந்து கூறுவராயினர். சலியாப் பிடிப்பொடு, ஆடி அலறி அன்பு செலுத்தல் சரியையெனவும், பசுமரத்தாணி அறைந்தாற் போல உறுதிகொண்டு அகங்குழைவது கிரியை யெனவும், அறிமால்கொண்டு சார்தல் யோகமெனவுங் கூறுப. ‘நல்’ என்ற அடைமொழி பயன் கருதாமை குறிக்கும்.

கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வம் கனவிலும் நினையா(து)
அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை அறியா நிழலது போல
முன்பின் னாகி முனியாது அத்திசை

உரை (௭௩-௭௯) —கன்றினையுடைய பசுவானது, (கன்றினைக் காணாதபோது, அலறி) மனம் பதைத்தல்போல, அலறி நடுங்கி, (முழுமுதற் கடவுள் தவிரப்) பிறதெய்வங்களைச் சொப்பனத்திலும் நினையாது, எட்டுதற்கரிய மேலான வீட்டினையுடைய ஒரு பரம்பொருள், குருமூர்த்தியாகி நிலவுலகத்தே தோன்றி ஆட்கொண்டருளிய பெருந்தன்மையை எளிமையாக எண்ணி அசட்டை செய்யாது, குரு முதல்வனின் திருவடிகள் இரண்டையும் உருவை விட்டகலாத நிழல்போல, முன் வணங்கியும் பின் தொடர்ந்தும் பிரிவின்றி நின்று, (இடையூறுகள் வந்தகாலை) வெறுப்புற்றுச் சலியாது, குருபரன் அருளிய திசை நோக்கி வணங்கி

குறிப்பு (௭௩-௭௯) —கன்றைக் காணப்பெறாத விடத்துக் கதறியழைத்தலும், கன்றிற்கு ஏதோ தீது வந்ததோவென் றெண்ணி மனம் பதறுதலும் ஆவிற்கு நேரும். ஆவின் செய்கைகள் அதன் மனத்திற் கேற்றப்பட்டன. அன்பர் இறைவனைக் காணவெண்ணிக் கதறுதலும், காட்சி கிடைக்குமோ கிடையாதோவென மனம் பதறுதலு முடையராவர். வீட்டினையே நாடுவார், பிற பயன்களை நாடுதல் கூடாதாகலின், பிற பயனே யன்றி வீடளிக்க இயலாத பிற தெய்வங்களையும் நினைதல் கூடாதென்றார். இறைவன் பொருளைப் பெருமையாகப் பாராட்டாத விடத்து, மெய்யன்பு நிகழாது. இறைவனது அறிவு செயல்களின்வசம் தமது அறிவு செயல்களை ஒப்பித்து நிற்றலிற் சலித்தல் கூடாதென்பார், 'முன் பின்னாகி முனியாது' என்றார். முன்

என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதஎன்(று) அரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி

னிகழ்வது அறிவு; பின்னிகழ்வது செயலென வுணர்க. இறைவன் ஆட்கொண்ட செயலை மறத்தல் கூடாதென்பார், 'அத்திசை' யென்றார்.

உரை (அ0-அஎ) —எலும்பு மெலிவுற்று உருக, மிகக் கனிவுற்று இரங்கி, பத்தி யென்னும் நதியானது நிறைந்து இருகரையும் புரண்டோட, நல்ல ஐம்பொறி யறிவுகள் அடங்கி ஒருமை யுறப் பெற்றுத் தலைவனே யென்று கூவி யழைத்து, வாய் குழறி, மயிர்ப்புளகங்கொண்டு, கைம்மலர் குவித்து, அகத்தாமரை யாகிய நெஞ்சம் விரிய, கண்கள் மகிழ்ச்சி மிகுதியாலே, சிறிய நீர்த்துளிகளைத் தோற்றுவிக்க, நிலைதளராத பேரன்பினை ஒவ்வொரு நாளும் வளர்ப்பவர்களுடைய ஒப்பற்ற தாயாகி அவர்களைப் பாது காத்தனை, உனக்கு வணக்கம்.

குறிப்பு (அ0-அஎ) —'கரையது புரள' வென்றது, அன்பின் நிறைவைக் குறித்தற்கு. ஐம்பொறி யறிவும் இறைவனையே நாடுதல் குறித்தார். மொட்டித்து - மொட்டுப்போலக் குவிந்து, கைகூம்ப, நெஞ்சம் மலர என்று நயமுற உரைத்தமை காண்க. கண்ணீர் இன்ப அன்பைக் குறித்தலின், ஆனந்த வுணர்ச்சியின் விளைவா யிற்று. அன்பினை வளர்ப்பாரை, இறைவன் வளர்க்கின்றான். 'தாய்' என்ற சொல்லிற்கு முற்றிலும் தகுதிவாய்ந்தவன் இறை வனே யென்பார், 'தாயேயாகி' என்றார். அன்பர்க்கு வரும் எல்லா வற்றையும் இறைவனே என்று கொள்வதறிக

மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின ஆர் உருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி

உரை (௮௮-௯௯) : — மெய்யுணர்ச்சி நல்கும் அறிவனாக வடிவு கொண்டெழுந்தருளி வந்து, பண்டைவினையும் வருவினையுமொழிய உதவும் ஆற்றலுடையதெய்வமே, வணக்கம். மதுரையில் விளங்கும் பொன் வண்ண மன்னனே, வணக்கம். கூடலம்பதியில் விளங்கும் நன்னிற மாணிக்கமே, வணக்கம் அழகிய தில்லையம்பலத்தின்கண் திருநடமாடும் பெருமானே, வணக்கம் இற்றைநாளிலே எனக்குப் பெறுதற்கரிய அமுத மானவனே, வணக்கம். நான்மறைகளை வெளிப்படுத்திய மூப்பில்லாத தலைவனே, வணக்கம். நந்திவடிவம் பொருந்திய வெற்றிக் கொடியை யுடைய சிவனே, வணக்கம். மின்னலொளி பொருந்திய அழகிய உருவங்கள் பல்வேறுடையவனே, வணக்கம். கல்லிலே நார் உரித்தாற்போல, நெஞ்சினைப் பண்படுத்தி அதில் அன்பெழுப்பும், கனிபோல மதுரமானவனே, வணக்கம். பொன்மலை போன்றவனே, காப்பாற்றுவாயாக. நினக்கு வணக்கம். ஆ! ஐயனே எனக்கு (விரைவில் வீடு) அருள்வாயாக, நினக்கு வணக்கம்.

குறிப்பு (௮௮-௯௯).—மெய் - மெய்யுணர்ச்சி, சிவஞானம் முற்பிறவிகளிற் செய்த சஞ்சிதமெனப்படும் தொகைவினையும்

படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

வரும் பிறவிக்கேதுவாகிய ஆகாமிய மெனப்படும் எதிர்வினையும் இறைவன் ஆட்கொண்ட காலை அவன் அருள் நோக்கால் எரிந்தொழிவன. ஆடகம்-பொன். ஆடிடமெனப் பொருள்கொள்ளு வாருமுளர். குருமணி - வேதப்பொருளுரைக்கும் ஆசிரியமாணிக்க மெனக்கொள்க. போகமளிக்கும் ஆடகவரசாகவும், வீடளிக்கும் குருமணியாகவும் இறைவன் ஆலவாயமர்ந்தனன். தென்-அழகிய. 'மூவா' என்பதை முதல்வனுக் கடையாக்காது, 'நான்மறை'க்கு அடையாக்கி, என்றும் ஒரு தன்மையான நால்வகை வாக்கெனப் பொருள் கொள்வாருமுளர். உயிரை ஆட்கொள்ளுவதில் முதல்வனே வல்லானென்பதை நந்திகொடி அறிவுறுத்தும் இறைவன் திருவடிவங்கள் ஒளி வண்ணமாதலின் 'மின் ஆர்' என்றார். அவை பல வாதலின் 'விகிர்தா' என்றார். விகிர்தன்-வேறுபாடுடையவன். கனி-அன்பு, கல, நெஞ்சிற்கு அறிகுறி. கனகம் - பொன். என்றும் ஒரு படித்தாய் மாறிலாதவனாதலின், பொற்குன்ற மென்றார். மாற்றமுடைய தன்னைக் காத்தல் மாறிலாதவனுக்கே இயலு மென்பது கருத்து. தாம் சிவஞானம் பெற்றும், வீடு கூடவில்லை யாதலின், 'அருளாய்' என்றார். அடிகள் தமது உடலை நீத்து வீடடைதலில் விருப்பமிக்கவரென்பது தெளிக.

உரை (௧௦௦ - ௧௦௫) :—எல்லாம் உண்டாக்குபவனே, நிலைபெறுத்துபவனே, ஒடுக்குபவனே, வணக்கம், துன்பத்தை நீக்கும் எமது தந்தையே வணக்கம், ஆண்டவனே வணக்கம், எங்கும் நிறைந்தவனே வணக்கம், ஒளிகாலும் படிகப் பிழம்பே வணக்கம், மன்னனே வணக்கம், சாவா மருந்தே வணக்கம், மணம்பொருந்திய புகலிடமாந் திருவடிகளையுடைய நீதியாளனே, வணக்கம்.

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி

குறிப்பு (௧௦௦-௧௦௫) —'ஈச' என்பது ஆளுதல் என்று பொருள்படும் வினையடியாகப் பிறந்தமையால், ஆண்டவன் என்ற கருத்தை யுணர்த்தும். இறுத்தல் - தங்குதல். இறு என்னும் வினையடியாகப் பிறந்த இறைவன், வியாபகன் என்ற பொருள் குறிப்பது. தேசு - ஒளி. அம், சாரியை. சரணம் - சரணம் புகுதற்குரிய திருவடி. விகிர்தம் - நீதி முறை.

உரை (௧௦௬-௧௧௭) :—அறிவனே, வணக்கம். குற்றமற்றவனே, வணக்கம். முதல்வா, வணக்கம். ஞானமே, வணக்கம். வீட்டு நெறியே, வணக்கம். பழம்போன்ற இன்பனே, வணக்கம். கங்கை யணிந்த செவ்விய சடையுடைய நம்பெருமானே, வணக்கம். எம்மை உடைமைப் பொருளாக கொண்டவனே, வணக்கம். உணர்ச்சி யானவனே, வணக்கம். கீழ்ப்பட்ட என்னையும் நின்னடிய னாகினவனே, வணக்கம். ஐயனே, வணக்கம். நுண்ணியனே, வணக்கம். சைவனே, வணக்கம். தலைவனே, வணக்கம். (வணங்கும்) அடையாளமானவனே, வணக்கம். பண்பனே, வணக்கம். நல்வழி யானவனே, வணக்கம். எனது நினைவிற் கலந்துள்ளவனே, வணக்கம். (செருக்குடைய) விண்ணவர் அடைதற்கரிய அமுதனே,

மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றி யென் வைபபே போற்றி
முததா போற்றி முதல்வா போற்றி
அததா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறநத வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போறறி

வணககம. (செருககில்லாத) பிற அடியார்ககு எளிவநதருளும் அரசனே, வணக்கம்.

குறிப்பு (க0சு - ககஎ)·—வேதம - அறிவு. வேதி - அறிவுறுத்துவோன். கதி - வீட்டிற்குச செல்லும வழியையும் சென்றடையு மிடத்தையுங குறிககும் அறிவு விழைவுடன் கலநத காலை, உணர்சசி யெனப்படும் சைவன், சிவ சம்பநதமுடையான். சிவம்-மங்கலம. மஙகலத்தைச செய்வோன், சைவனுவன்.

உரை (ககஅ-கஙசு) .—இருபத்தொரு தலை முறையில் வருகின்ற சுற்றத்தார, அல்லது மூவழியில் வரும் எழு தலைமுறைச் சுற்றத்தார் மாறுபட்ட இயல்பினையுடைய நரகஙகளில் அழுநதி வருநதாமே, ஆட்கொள்ளும் வேந்தனே, வணககம். நண்பனே, வணககம. துணைபுரிபவனே, வணக்கம். இன்ப வாழககையானவனே, வணக்கம். (ஈட்டி வைத்த) நிதியம் ஆனவனே, வணக்கம். வீடாயவனே, வணக்கம். தம் வயமுடையவனே, வணக்கம். அப்பனே, வணக்கம். பாசத்தை அழிப்பவனே, வணக்கம். மொழியையும், மனவுணர்சசியையுங கடந்த ஒப்பற்றவனே, வணக்கம். விரிநத கடல் சூழ்ந்த உலக வாழ்வின் பயனே, வணக்கம். அரிய பொருளாயிருந்தும் (அன்பர்க்கு) எளிதின் வந்தருளும் அழகனே, வணக்கம். கார்மேகம் போல அருள்புரிகின்ற கண் போன்றவனே, வணக்கம் நிலை பெற்ற பெருங் கருணை மலையே, வணக்கம். (தகுதியற்ற) அடியேனையும் அன்பருள் ஒருவனுக்கிப் பெருமையுடைய

அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி

திருவடிகளை அடியேன் தலைமீது வைத்தருளிய பாதுகாப்பாளனே வணக்கம. கும்பிட்ட கையினரின் துயர் களைவோனே, வணக்கம. கேடிலலாத இன்பக்கடலே, வணக்கம். ஒடுக்கமும் தோற்றமு மில்லானே, வணக்கம. எல்லாவற்றையுங் கடந்து அப்பாற்பட்டவனே, வணக்கம. மான்போன்ற பார்வையுடைய உமையம்மை கணவனே, வணக்கம். மேலுலகங்களிலுள்ள அடக்கமுடைய விண்ணவரின் தாயானவனே, போற்றி.

குறிப்பு (ககஅ - கருசு) :—சிவ ஞானிகளின் நலவியல்பினை, இருபத்தொரு தலை முறைச் சுற்றத்தாருடையராய் நரகம் புகாரென்பது ஒரு கருத்து. தந்தை வழி, தாய் வழி, தன வழி யென்ற மூவழியிலுள்ள ஏழு தலைமுறையோர் என்பது முண்டு. மூவழிச் சுற்றத்தார்க்கும் அருளாக, அரசனை என்று வேண்டுவ தாகப் பொருள் கொள்ளுவாருமுளர். தோழன், ஒத்த வுணர்ச்சி யுடையவன். துணைவன், உடன் உதவி செய்பவன். வைப்பு - சேமித்து வைத்த நிதியம். 'எய்ப்பினில் வைப்பு' என்று வந்தது மோர்க. முத்தா - பாச நீக்க முடையவனே. எவற்றிற்கு முதல்வனாயினும் தனக்கு ஒரு முதல்வனில்லான், தம வயமுடையா னென்றிக. மனித வாழ்வின் பயன், இறை வழிபாடே. உலகு

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற் (கு) அருளினை போற்றி
இடைமரு (து) உறையு மெந்தாய் போற்றி

ஓங்கி வளர்தற்குக் காரணமானவனென்று பொருள் கோடலு முண்டு. உள்ளங்கவர் வடிவினனாதலின், 'அழகே' என்றார். கருமுகிலின் நீர் மன்னாது. இறைவன் திருவருள் மன்னுந் தன்மையது. அமரர் - அடக்கமுடையவர்.

உரை (கஙஎ-கசக) —நிலமாகிய பூதத்தின்கண் ஐந்து தன்மையனாய் விரிந்தவனே, வணக்கம். நீரின்கண் நான்கு தன்மையனாய் விளங்கினவனே, வணக்கம். நெருப்பின்கண் மூன்று தன்மையனாய்த் தெரிபவனே, வணக்கம். காற்றின்கண் இரண்டு குணமுடையனாய் விரும்பி நின்றவனே, வணக்கம். வானின்கண் ஒரு தன்மையனாய்த் தோன்றியவனே, வணக்கம்.

குறிப்பு (கஙஎ-கசக) :—போற்றி - போற்றுதல் என்ற பொருளில் வணக்கத்தைக் குறிக்கும். 'காக்க' என்ற பொருளுடைய வியங்கோளுமாம் ஆதலின், இருவகையாகவும் பொருள் கொள்ளப் பட்டது. நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்பன ஐம்பூதத்தின் முறையேயுள்ள தன்மைகள். நிலத்தில், பிறநாற்பூதமுங் கலந்திருத்தலின், ஐந்து தன்மைகள் அதனிடை காணப்படும். அவ்வாறே பிற பூதங்கட்கும் கொள்க

உரை (கசஉ-கசசு) :—உருகுபவர் உள்ளத்தே அமுதமா யுள்ளவனே, வணக்கம். (உருகாத்) தேவர்களுக்கு அவர்கள் சொப் பனத்திலுங் காண்பதற் கரியவனே, வணக்கம். (சாக்கிரமாகிய)

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி

நனவிலும் நாயேற்கு அருள்புரிந்தவனே, வணக்கம். திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் எமது அப்பனே, காத்தருள்க. தனது சடையின்கண் கங்கையை ஏற்று அமைத்துக்கொண்டவனே, காத்தருள்க. திருவாரூரில் தங்கியருளிய மன்னனே, காத்தருள்க. செம்மைபொருந்திய திருவையாறுடையானே, காக்க. திருவண்ணாமலையுறையும் எமது மேலோனே, காத்தருள்க. கண்ணில் நிறைந்த இன்பப் பெருங்காட்சிக் கடலனையவனே, காத்தருள்க. திருவேகாம்பரமாகிய காஞ்சிப்பதியில் வீற்றிருக்கும் எமது தந்தையே, காக்க. அவ்விடத்திலே, ஒரு பாகத்திற் பெண்வடிவங் கொண்டவனே, காத்தருள்க. திருப்பராய்த்துறையில் விருப்பமொடு வீற்றிருந்த மேலோனே, காத்தருளக. திருச்சிராப்பள்ளியிற் பொருந்திய சிவபிரானே, காக்க. உன்னைத்தவிர வேறு ஆதரவு யாதுமிலாதேன்; என்னைக் காத்தருள்க. திருக்குற்றாலத்திலே நடம் புரியும் எமது கூத்தப்பெருமானே, காத்தருள்க.

குறிப்பு (கஞஉ-கருசு):—தேவர் பதவி, போக நோக்குடையதாகலின், இறை நினைவு அரிதாம். அதனால், அவன் கனவிலுந் தோன்றான். நினைவிலுள்ளது, கனவில் தோன்றலாம். நினைவே இல்லாதபோது கனவிலுந் தோற்றமிராது. தனக்கு அருள்

கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளு மப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி

புரிந்தமை, வெளிப்படையாதலின், 'கனவிலும்' என்றார். அங்ஙனம் இறை அருள் செய்யப்பெறும் தகுதி தமக்கின்மை தெரிவித்தல் அடிகளியல்பு. திருவிடைமருது முதலியன திருவாசகத்தின் வைப்புத் தலங்களாம். பாண்டிநாட்டிலுள்ள திருக்குற்றாலத்திலே, கூத்தர் கோவிலென்பது சித்திரசபை அடிவாரத்திலுள்ளது. அதன்கண் சிவலிங்க வடிவமேயுள்ளது.

உரை (௧௩௭ - ௧௩௯) :—திருவாவடுதுறையில் (அன்பரை ஆட்கொள்ளப்) பொருந்திய அரசே, வணக்கம். ஈங்கோய் மலையிலெழுந்தருளிய எமது அப்பனே, வணக்கம். வனப்பு மிகுந்த திருப்பழனத்திலிருக்கும் அழகனே வணக்கம்.

குறிப்பு (௧௩௭ - ௧௩௯) :—கோகழி, பெருந்துறையையுங் குறிக்கலாம் ஈங்கோய்மலை, கீர்த்தித் திருவகவலிலுங் கூறப்பட்டது. பாங்கு - அழகு.

உரை (௧௪௦-௧௪௬) :—திருக்கடம்பூரில் விளங்கிய வீரனே, வணக்கம். தன்னை அன்பாற் சார்ந்தார்க்குப் பேரருள் புரியும் தந்தையே, வணக்கம். கல்லால மரத்தின் கீழ்(ப் பட்டமங்கையில்) இயக்கிகள் அறுவர்க்கும், (கடம்பவனத்திலே) வெள்ளானைக்கும் அருள் புரிந்த வேந்தே, வணக்கம். தென்றமிழ் நாட்டினை(த் தனது பழமையான பதியாக) உடைய சிவபெருமானே, வணக்கம். எந்த நாட்டினருக்கும் வழிபடு தெய்வமானவனே, வணக்கம்.

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளு மிறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி

பன்றிக்குட்டிக்குப் (பாலூட்டி) வளர்த்தருளினவனே, வணக்கம். பெருமை பொருந்திய கயிலைமலையை இடமாக் கொண்டவனே, வணக்கம். விரைவில் வீடு அருள்புரிந்திட வேண்டுகிறேன். அம்மானே, வணக்கம். (ஆணவ) இருள் வலிகெட்டொழியும்படி (ஞானம் நல்கி) யருளும் கடவுளே, வணக்கம். உனக்கு அடிமைப் பட்டேனாகிய தனியேன் தளர்ச்சியுற்றேன், காத்தருள்க நிலையான இடத்தைப் பெற எண்ணும்படி அருள்புரிவாய், நினக்கு வணக்கம். இவ்விடத்திலே அஞ்சாதேயென்று ஊக்கங் கொடுத் தருள்வாயாக. (பெருமானே) வணக்கம். விடத்தையே சாவா மருந்தாக விரும்பி யுட்கொண்டாய், காத்திடுக. அப்பனே, வணக்கம். தலைவனே, வணக்கம். என்றுமுள்ளானே, வணக்கம். குற்றமற்றவனே, வணக்கம் அன்பனே, வணக்கம். எவற்றிற்கும் பிறப்பிடமானவனே, வணக்கம்

குறிப்பு (கசு0-கஎசு):—விடங்கன்-வீரன். பிழை செய்தாலும் தன்னை வந்தடையில் பிழையை மன்னித்தருள் புரிபவன் என்பது கருத்து. 'வெள்ளையானை சாபந்தீர்த்த படலம்' திருவிளையாடல் புராணத்துட் காண்க. பன்றிக் குட்டிக்குப் பால் கொடுத்ததும் அப்புராணத்துட் காண்க. தென்னாட்டிலே சிவ வணக்கத் தோற்றங்

பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

குறித்தவாறு. எந்நாட்டில் எத்தெய்வம் வழிபடப்படினும், அத்தெய்வமாய் நிற்போர் சிவனென வறிக. 'பத்தா' என்பதற்குப் பதியே தலைவனே என்று பொருள் கோடலும் உண்டு.

உரை (௧௩௭-௧௪௨):—எப்பொருளினும் பெரிய (பிரமமே), வணக்கம். வள்ளலே, வணக்கம் அரியவனே, வணக்கம். பாசமிலானே, வணக்கம். அந்தணர் வடிவொடு வந்த நீதியே, வணக்கம். என்னை யாட்கொண்டது நீதியோ, யான் (அதன் சிறப்பைத்) தாங்கமாட்டேன், நீ காத்தருள்க. எனக்குச் சுற்றமானவனே, வணக்கம். என் உயிர்க்குயிரே, வணக்கம். சிறந்த பொருளே, வணக்கம். மங்கலப் பொருளே, வணக்கம்.

குறிப்பு (௧௩௭-௧௪௨):—நீதியாளனே, முறையாக அருள் பெறுந் தகுதிவரப் பெறாத என்னையும் ஆண்டது முறையோ, அருள்புரிந்த சிறப்பை ஆற்ற வல்லேனல்லேன் என்றார். சிறவு - சிறப்பு; வீடுமாம்.

உரை (௧௪௩-௧௪௫) —அழகனே, வணக்கம். மணவாளனே, வணக்கம். பஞ்சுபோல் மெல்லிய அழகிய சிற்றடியுடைய அம்மை பாகனே, வணக்கம். (உடல் ஒழித்து வீடு எப்போதருள்வாய்) என்றெண்ணி ஏக்கமுற்றேன், அடிமையாகிய நாயேன், என்னைக் காத்திடுக. விளக்கு மிக்க பெருஞ் சோதியாய எமது ஆண்டவனே

இலங்கு சுடர்எம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையார் அரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி

வணக்கம். கவைத்தலை யென்னுந் திருப்பதியில் விரும்பி யெழுந்தருளிய கண் போன்றவனே, வணக்கம். குவைப்பதி யென்னும் ஊரிலே மகிழ்ந்திருந்த மன்னனே, வணக்கம். மலை நாட்டினையுடைய வேந்தனே, வணக்கம். கல்வி மிகுந்த அரிகேசரி யென்னு மூரினையுடையாய், வணக்கம். திருக்கழுக்குன்றத்தில் மேவிய ஞானச் செல்வனே, வணக்கம். திருப்பூவணத்தில் குன்றிலே அமர்ந்த ஒடுக்கக் கடவுளே, வணக்கம். அருவமாய் நின்றும் உருவத் திருமேனி கொண்டவனே, வணக்கம். அருள் நிறைந்த மலையே, வணக்கம். நான்காம் நிலையுங் கடந்த பேரறிவே, வணக்கம். அறிதற்கரிதாய்(ச் சிவஞானத்தால்) தெளியப்பட்ட பொருளே, வணக்கம்.

குறிப்பு (கஅந-ககூக) :—பஞ்சு - என்பதற்குச் செம்பஞ்சுக் குழம்பூட்டிய வென்னலாம். குவைப்பதி யென்பதற்குக் குகைகளாகிய இடங்கள் எனப் பொருள் கொள்ளுவாருமுளர். துரியம், மூன்றவத்தைக்கும் அப்பாற்பட்ட நிலை. அதனையே உபநிடத முதலிய நூல்களில் முடிவான நிலையாகக் கூறுவர். அதற்கும் அப்பாற்பட்டவன் முதல்வனென்பது சித்தாந்தக் கருத்து.

தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

உரை (ககூ௭-உக௪):—தொளைக்கப்படாத தூயமுத்தாகிய ஒளியே, வணக்கம். ஆட்பட்டவர்கட்கு ஆதரவானவனே, வணக்கம். தெவிட்டாத அமுதமே, அளவிடப்படாத அருளே வணக்கம். ஆயிரம் பேருடைய அண்ணலே, வணக்கம் தாளிக் கொடியின் தழையும் அறுகம் புல்லும் கலந்து கட்டியமாலை யணிந்தவனே, வணக்கம். நெடிய சோதியாய கூத்தனே, வணக்கம். சந்தனத் தேய்வையணிந்த அழகனே, வணக்கம். எண்ணுதற் கெட்டாத தூயபொருளே, வணக்கம். மந்திர நூல் வெளிப்பட்ட மகேந்திர மலையில் வீற்றிருந்தவனே, வணக்கம். (அடியேங்களாகிய) எங்களை உய்யும்படி ஆட்கொள்பவனே, வணக்கம். புலியின் முலைப்பாலானது மானிற்குப் பயன்படும்படி அருளினவனே, வணக்கம். அலையுடைய கடலின் மேலிடத்தே நடந்தவனே, வணக்கம் கரிக் குருவிக்குப் பண்டைக் காலத்தே அருள்புரிந்தவனே, வணக்கம். வலிய ஐம்புல வேட்கைகள் அற்றொழியும்படி உள்ளத்திற்பொருந்தி யருளினாய், நினக்கு வணக்கம். நிலத்தின்கண் பொருந்தப் பழகிய பல்வகைத் தோற்றமுடையவனே, வணக்கம். முதலும் நடுவும் முடிவுமானவனே, வணக்கம். நரகம், விண்ணுலகம், நிலவுலகம் என்ற மூவிடத்தும் புகாதபடி, மேலான வீட்டுலகைப் பாண்டியனுக்கு நல்கியருளினாய், நினக்கு வணக்கம்.

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுஈ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி

குறிப்பு (௧௯௭ - ௨௧௪):—முத்தம் - முதன்மையான மணி என்று பொருள். 'தோளா' - குற்றமற்ற என்ற கருத்தைக்குறிக்கும். 'ஆரா' என்பதை அருளே என்பதோடுஞ் சேர்ப்பதுண்டு. 'ஆயிரம்' என்பதற்கு பல என்றுபொருள்கொள்வாருமுளர். அன்பர் சாத்திய பச்சிலை யெதுவும் இறைவர்க்கா மென்பது கருத்து. 'தாளியறுகு' என்பது, அறுகின் ஒருவகை யென்பாருமுளர். நீளொளியாய் நின்று அயனரிகளைக் கூத்தாட்டுவித்தவனாதல்பற்றி, 'நிருத்தா' என்றா ரென்பாருமுளர். மகேந்திரத்தை, 'மந்திரமாமலை' யென்று முன், கீர்த்தித் திருவகவலிற் கூறியதுங் காண்க. புலிநிறைந்த காடொன்றிலே, பெண்மானொன்று குட்டியை ஈன்று, ஒரு புதரடியில் விட்டு நீர்பருகச் சென்ற இடத்தே வேடன் அம்பால் இறந்தபோது குட்டியை நினைந்து வருந்திற்று. சிவபெருமான், பெண்புலி யொன்றையே அக்குட்டிக்குப் பால்கொடுக்குமாறு செய்வித்தனர். மான்குட்டி வளர்ந்து பிழைத்துக் கொண்டது. புல்வாய் - ஒருவகை மான். வலைவீசிக் களிற்றுமீன் கொண்டகாலை, இறைவன் அலைகடன்மிசை நடந்தனன். கரிக்குருவி ஆலவாயண்ணலைத் தொழுது உபதேசம் பெற்ற கதை, திருவிளையாடற் புராணத்துட் காண்க. 'சாந்து' என்பதற்குத் திருநீறு என்று பொருள் கொள்வாரு முண்டு.

ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்.

உரை (௨௧௫ - ௨௧௭).—நீக்கமில்லாமல் எங்கும் நிறைந்த ஒருவனே வணக்கம். செழுமை மிக்க மலர் நிறைந்த சிவபுரத்துத் தலைவனே வணக்கம். செங்கழுநீர் மாலையணிந்த கடவுளே, வணக்கம்.

குறிப்பு (௨௧௫-௨௧௭) :—சிவபுரம், பார்மேல் உத்தரகோச மங்கையென்றுந் திருப்பெருந்துறையென்றுங் கூறுப. சிவலோக மென்பாருமுளர். இறைவன் ஆசிரியனாய் வந்தபோது செங்கழு நீர் மாலை அணிந்தமை, கீர்த்தித் திருவகவலுட் கூறப்பட்டது.

உரை (௨௧௮-௨௨௫)·—வழிபடுவாரது மயக்கத்தை அறுப்பாய், நினக்கு வணக்கம். தவறு யாது, பொருத்தம் யாதென் றறியா நாயினேன், தொடுத்த மொழித் தொடரை ஏற்றுக்கொண் டருள்வாய், வணக்கம். ஊர்கள் பலவற்றை யழித்த பண்டையோனே, வணக்கம். மேலானவற்றிற்கு மேலான ஒளியுடைய மேலோனே, வணக்கம், வணக்கம், வணக்கம். பாம்பணிந்த பெரியோனே, பழமையின் காரணனே, வணக்கம், வணக்கம், வணக்கம், வணக்கம், வெற்றி, வெற்றி (மிக்கோனுக்கு) வணக்கம்.

குறிப்பு (உகஅ-உஉ௫) :—குழைத்தல் - கூட்டுதல். 'புரம்பல' என்பதற்கு முப்புரமெனவும் பொருள் கொள்வதுண்டு. திரிபுர தகனம், பல்லூழிகளிற் பலவா மென்பாருமுளர். 'புரம்பல' உடல் பல என்று கொண்டு, பல் பிறவியையும் 'அருட் பெருநதியால்' அழித்தவன் என்றுங் கொள்க. எக்காலத்தும் எவ்வுயிர்க்கும் பிறவி யறுப்பவன் சிவனாதலின், அவன் 'புராணன்' எனப்பட்டான். புயங்கம் - பாம்பு, உலகை நடத்தும் பல சடசத்திகட்கும் அது அறிகுறி. காரணேசுரராகிய ஐவர்க்குங் காரணனாய்த் தனக கொரு காரணமுமில்லாதோ னாதலின், 'புராண காரண' என்றார். இறைவன் அருள் வெற்றியே நிலைபெறுதலின், வெற்றி, வெற்றி, போற்றி யென்றருளினர்.

திருப்பெருந்துறையில் அருளிய

திருச்சதகம் *

பக்தி வைராக்கிய விசித்திரம் †

க. மெய்யுணர்தல்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து (உ)ன் விரையார் கழற்கென், கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம், பொய்தான் தவிர்ந்து (உ)ன்னைப்போற்றி சயசய போற்றியென்னும், கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.

உரை நடை :—உடையாய் என்பதை முதலிற் கொள்க. உள்ளம் வெதும்பி யென மாறுக.

உரை :—(என்னை அடிமையாக) உடையவனே! (நின்பெருங் கருணைத் திறத்தை நினைந்து) உடம்பு தானே மயிர்க் கூச்செறிந்து நடுநடுங்க, உனது வாசனை பொருந்திய திருவடிகளை (வணங்குவான்) எனது கைகள் தாமே தலைமேற் கூப்பப் பெற்றுக் கண்களினின்று (ஆனந்த) வெள்ளம் நிரம்ப, மனமானது, ஆர்வத்தால் வெப்பமுடைத்தாக, நிலையற்றவற்றின் பற்றுத தானேநீங்கியொழிய உனக்கு வணக்கம், வெற்றி வெற்றி வணக்கம் என்றியம்பும் ஒழுக்கத்தையே நழுவ விடாது மேற்கொண்டு நிற்பேன். அடியேனைக் கண் பார்த்து ஏற்றுக் கொள்ளுக.

---

* திருச்சதகம் - நூறு செய்யுள்களாலாகிய திருப்பாடற்றொகை.

† பக்தி வைராக்கிய விசித்திரம் - அன்பின் உறுதி யழகு.

குறிப்பு :—தமது பேரன்பினால் இயற்கையா யெழும் மெய்ப் பாட்டினை அடிகள் குறிப்பித்தனர். உடல் நீத்து இறண்டறக் கலத்தலை, உடனே அருள் புரியவேண்டு மென்பார், 'கண்டுகொள்ளே' என்றார் 'கொள்' என்பதைத் துணை வினையாகவும் 'ஏற்றுக்கொள்' என்ற பொருளில் 'முதல் வினையாகவும்' கொள்ளலாம். மெய்ப்பாடு இயற்கையாக நிகழ்தலின், 'தான்' என்பது சேர்க்கப்பட்டது. 'விதிர விதிர்த்து' முதலிய எச்சங்களைச் செயவெ னெச்சத் திரிபாகக் கொள்ளுக. பாசப்பகை கெடுதலின், இறையருளுக்கு வெற்றி வெற்றி யென்றாரென்க. 'உடையாய்' என்பதற்கு 'எல்லாவற்றையு முடையவனே' என்றும் பொருள் கொள்வர். மனம் வெதும்பலும் பொய் தவிர்தலுஞ் செய்ய, உடம்பு மெய்ப்பாடுணர்த்த, வாயானது போற்றி சயசய போற்றி யென்னவே, முக்கரணங்களாலும் வழிபாடாற்றினமை கூறியவாறும். (௧)

கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே.

உரை நடை :—உத்தமனே, இறைவா, என்பதை முதற் கொள்க.

உரை :—எங்கள (இருள் கடந்த) முதல்வனே, அரசனே, இந்திரன், பிரமன், திருமால் என்போர் பதவிகளை (ஒரு பொருளாகக்) கொள்ளமாட்டேன். எனது வாழ்க்கைக்கு ஈறு வந்தாலும், உன்னுடைய அடியாரோடன்றிப் பிறரோடு நட்புக்கொள்ள மாட்டேன். நரகம் புகுந்தாலும், அங்கே உனது திருவருளுணர்ச்சியோடு இருக்கப் பெற்றால், அதனை இகழமாட்டேன். உன்னை யொழிந்த வேறு கடவுளரை (மனத்தாலும்) நினைக்க மாட்டேன்

குறிப்பு .—புரந்தரன்-(பகைவர்) ஊர்களையழிப்பவன். அயன்-பிறப்பிலானென்ற பொருளிற் பிரமனுக்கு உபசார வழக்கு. நள்-

சிநேகங் கொள்ளல். திருவருளாலே - திருவருளோடு. ‘திருவருளாலே யிருக்கப்பெறின்’ என்பதை முதற்கண் கொண்டு, ‘கொள்ளேன்’ முதலியவற்றிற்கும் அதனைச்சாரப் பொருள் கோடலுமுண்டு. வானவர் வாழ்வு பந்தத்தையும், அடியாருறவு வீட்டையும் பயப்பதாகலின் அவ்வாறு கூறினர். குடி - உடம்பு வாழ்க்கை. உத்தமன் என்பது இருளைக்கடந்தவன், முதலானவன் என்று பொருள்படும் வடசொல. திருவருளுணர்ச்சியோடு நரகிடை யிருத்தல் அரிதாகலின், ‘பெறின்’ என்றார். திருவருளின் கட்டளையாலே அல்லது திருவருள் என்னை நரகிடை யிருக்குமாறு பணிப்பின், என்றும் பொருள் கொள்ளுப. (உ)

உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே.

உரை:—(தேவருள்) முதன்மையானவனும் எந்தையும் எமமை உடையானுமாகிய (பெருமானுடைய) திருவடிகளையே எண்ணிக் கசிந்து, மனக்களிப்பு மிக்க பித்தன் இவன் என்று தததம உள்ளக் கருததிலே பொருததமானவையாகத் தோன்றியவற்றையெல்லாம் ஊரார் கூறியிடும்படி, ஊர்தோறுந் திரிந்து, எத்தகையோரும் தங்கள் தஙகள் மனம் போனவாறு நம்மைக குறை கூறவும், (அவற்றாற் சிறிதும் நலிவுறாது) செருக்கற்றுச செயலற்றிருததல் எந்த நாளிலே நிகழ்வதாகும்?

குறிப்பு:—மத்தம் - உன்மத்தம், பெருங்களிப்பு. மால் - மயக்கம், பித்து; மாலுடையானுக்கு ஆகுபெயர் உலகர் பேசுவது பலதிறப்படுதலின் ‘ஒத்தன ஒத்தன’ என்றார். திருப்பதிகள் தோறுஞ் சென்று இறைவனை வணங்குதலையே “ஊரூர் திரிந்து” என்பதாற் கொள்ளுதலுமுண்டு. மனநினைவில் - தங்கள் தவறுகிய ‘உள்ளக் கருததில்’ என்பது குறிப்பு. எவருமு, பெரியருஞ் சிறியருமாகிய எத்திறத்தாரும். சாதல் - யான் என்ற முனைப்

பொழிதல், செயலற்றிருத்தல் ஒததனசொல்லுதல் என்பது தம்மூரவர் தன்மை கூறுதலேயும், 'மனத்தன பேசுதல்' அயலூரார் வைதல் முதலிய இகழுரை பகர்தலேயும் குறிக்குமென்ப. (ஈ)

சாவமுன் னாள் தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சம அஞ்சி
ஆவஎந் தாய்என்(று) அவிதா இடும்நம் மவர்அவ ரே [மேல்
மூவரென் றே எம் பிரானொடும் எண்ணி, விண் ணாண்டுமண
தேவ ரென்றே இ மாந் தென்னபாவம் திரிதவரே

உரை :—முன்னொரு காலத்திலே, தக்கன் இயற்றிய யாகத்திலே கொல்லப்பட்ட ஆட்டின் ஊனைத் தின்று, (பின்னர் வீரபத்திரர் தம்மைத் தண்டிக்க வந்தபோது) சாவதற்குப் பயந்தும், பாற்கடலுள் நஞ்சு எழுந்த காலத்தே சாவதற்கு அஞ்சியும், ஐயோ, எங்கள் அப்பனே (காப்பாற்று) என முறையிடுந் தன்மையுடைய, நம்மினத்தவராய (அயனும் அரியுந்) தாமோ எம்பெருமானோடு மூவராகச் சேர்த்தெண்ணப்பட்டு, விண்ணுலகை யாண்டு தேவரென மண்ணுலகிற் செருக்கடைந்து திரிகின்ற தவமுடையோர்? (இங்ஙனந் தாழமைப்பட்டும் இவர் இறுமாந்திருத்தற்குக் காரணம்) என்ன பாவம்?

குறிப்பு :—'தக்கன சாவ' என்று உரைநடை கோடலுமுண்டு. 'அஞ்சி' என்பதைத் தின்று என்பதனோடும் 'நஞ்சம்' என்பதனோடுந் தனித்தனி கூட்டுக. ஆவ - ஆவாவென்பதன் குறுக்கம். அது, இரக்கக் குறிப்பு. அவிதா - ஆபத்தினின்றி காப்பாற்ற முறையிடுங்காற் கூறுஞ்சொல். உருத்திரக் கடவுள் இறைவனோடு அத்துவிதக் கலப்புடைமையின், வேறு பிரித்தோதப்பட்டிலர். இறைவனே, யாண்டும் முழுக்கக்கடவுள் என்ற கொள்கையுமுண்டு. சகல வர்க்கத்தினராதலின் சிவஞானம் பெறாத அயனரி முதலியோர், நம்மைப்போலக் சகலநிலையிலுள்ள உயிரினத்தவ ராதலின், 'நம்மவரே' யென்றார். இதனில் ஏகாரம், வினப்பொருளில் வந்து இழிவு குறித்தது. இறுதியில், 'திரிதவரே என்ன பாவம்' என மாற்றுக. (சு)

தவமே புரிந்திலன் தண்மலர்இட்டு முட்டா(து)இறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு எய்திற்றி லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி யேற்கு எம் பரம்பரனே.

உரை நடை —'எம்பரம்பரனே' என்பதை முதலிற்கொள்க.

உரை.—எமது மேலோர்க்கு மேலோனே, (ஐம்பொறி யடக்கமும் பிறர்க்கின்னல் செய்யாமையுமாகிய) தவத்தையே அடியேன் இயற்றுவதில்லை. நின்னைக் குளிர்ந்த மலர்தூவிக் குறைவில்லாத முறையில் வழிபாடு செய்யேன். வீணுக்கே இவ்வுலகிற்றோன்றிய கடத்தற்கரிய தீவினையுடையேன். உனக்கு அன்பராயுள்ளார் நடுவிலிருத்தற்கு வேண்டும் தூய நேர்மையை அடைதற்குரிய நல்வினைப்பயன் பெற்றிலேன். ஆதலின், அடியேனுக்கு நின்னுடைய திருவடிக்கு அடிமையாகின்ற பிறவியையே நீ அருளவேண்டும்.

குறிப்பு —'சிவம்' என்ற சொல் தூய்மையையும், செம்மையையும் குறிக்கும்; உயர்வு நன்மை. திரு - நல்வினைப் பயன், நல்லூழ் என்றும் பொருள் கூறுப. பவம் - பிறவி. கண்டாய் - அசை. பரம்பரனே என்பதற்கு, மிகவும் மேலானவனே என்றும் பொருள் கூறுப.

(௫)

பரந்துபல் ஆய்மல ரிட்டுமுட் டாதடி யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாமென்னும் அன்பர்உள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேஉன்றன் வார்கழற்(கு) அன்பெனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே.

உரை நடை —'நின்னை முழுவதுமே ஏத்த' என்பதை, 'உன்றன்' என்பதற்கு முன் அமைக்க.

உரை:—(பல பதிக்குஞ்) சென்று, பலவகைப்பட்ட பழுதறத் தெரிந்தெடுத்த நன் மலரைத் தூவிக் குறைபாடில்லாது உன் திருவடியை வணங்கி (நின்பால்) வேண்டியன யாவையும் தங்களுக்கே

கிடைக்கும் என்ற உறுதியுடைய அன்பரது நெஞ்சிற்கு ஒளித்தல் இல்லாது, (பிறர்க்கு ஒளிக்கும்) மாயமுடையவனே, உன்னையே முற்றிலும் வாழ்த்தி வழிபடற்கு உன்னுடைய பெரிய திருவடிக்கட் செய்யுமன்பினை அடியேனுக்கு எப்போதும் நிலையாக நல்கியருள்க.

குறிப்பு:—'பரந்து' என்பதற்குப் 'பரவி' யெனப் பொருள் கொண்டு, அது துதித்தலைக் குறிக்குமென்பாருமுளர். மூட்டற இறைஞ்சுதலால், எல்லாம் பெறலாம் என்பது கருத்து. உறுதியான சார்புடையார்க்கு இறைவன் வெளிப்பட்டு நிற்பனென்றார். கள்வன்-தந்திரமுடையான். நிரந்தரம்-இடையீடின்மை குறிக்கும் வடசொல். (௯)

முழுவதுங் கண்ட வனைப்படைத் தான்முடி சாய்த்து முன்னாள், செழுமலர் கொண்டெங்குந் தேடஅப் பாலன் இப் பால்எம்பிரான், கழுதொடு காட்டிடை நாடகமாடிக் கதியிலியாய், உழுவையின் தோல்உடுத் துன்மத்த மேல் கொண்டு உழிதருமே.

உரை நடை:—'முன்னாள்' என்பதை முதலிற் கொள்க. 'இப்பால்' என்பதை 'கழுதொடு' என்பதோடு கூட்டுக.

உரை.—முற்காலத்திலே, எல்லாவற்றையும் படைத்தவனாகிய அயனைப் பெற்றோனாகிய அரி, தலை வணங்கி, வளமிக்க பூக்களைக் கையிற்கொண்டு திருவடி தொழுவதற்காக எங்கும் தேடவும், அவனுக்குப் (புலனாகாது) அப்பாற்பட்டவனாகிய எமது வள்ளல், இவ்விடத்தே, பேயோடு சுடுகாட்டின்கண் கூத்தியற்றி, வலிய னாய்ப் புலித் தோலுடுத்து, பித்துமேற்பட அலைந்து திரிவான். (இஃதென்ன வியப்பு.)

குறிப்பு:—கண்டவன்-படைத்தவன். அப்பாலன், அப்பாலான் என்பதன் குறுக்கம். கழுது-பேய். எல்லாம் ஒடுங்கிய இடத்தே, தம்பாற் பேரன்புடைய அன்பர்பால் நட்ப ஐந்தொழிலியற்று வதையே கழுதொடு காட்டிடை ஆடுதலாகக் குறித்தனர்போலும். கதியிலி-போக்கில்லாதவன். கதியிலி என்பது இறைவன் ஒன்றை

நாடிச் செல்லும் அவசியமில்லான் என்பதைக் குறித்தவாறு. பூரணப் பொருளாகிய அவனுக்குச் செல்கதி யாதுளது? தாருக வனத்து முனிவர் மீமாஞ்சக நெறி நின்று, வேள்வியியற்றி விடுத்த புலியைக்கொன்று அதன் தோலைப் போர்த்த கதை வெளிப்படை. கூத்துக் களிப்பினை, உன்மத்த மென்றுரெனப. அன்பாக்கன்ப ருதலின், இறைவன் பித்தனெனப்படுதல் தெளிவு (எ)

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு கால்அத்த உன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாய்அவை காத்தெம்மைக் காப்பவனே

உரை.—அசையுந் தன்மையுடைய காற்றும், நெருப்பும், நீரும், மண்ணும், வானுமாகிய பூதங்கள், தத்தம் நிலையினீங்கி யொடுங்குங் காலம் எந்தக் காலமாகும், அக்காலம் வந்த பின்னரும் கூத்தியற்றுகின்ற திருவடியுடைய அப்பனே, நினது அடிமை யாகிய யான் செய்த கொடிய வினைகளை யொழிக்கின்ற கால வெல்லையுமாய், நின்று (மேல் தாக்காமல்) அவ்வினைகளைத் தடுத்து, எங்களைக் காப்பாற்றியருள் பவனே

குறிப்பு:—ஐம்பூதங்களாலாகிய உலகம ஒடுங்கியபோதும், சூக்கும ஐந்தொழி லியற்றுதலின், 'உழிதருகால்' என்றார். உலக மொடுங்கிய காலை, ஞானிகளின் வினையொடுங்கவே, திருவடியிற் கலத்தல் நிகழும். உழிதர - திரி, அலை. காத்து - தடுத்து (அ)

பவன்எம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்
பெருமான், சிவன்எம் பிரான்என்னை யாண்டுகொண் டான்
என் சிறுமைகண்டும், அவன்எம் பிரான்என்ன நான்அடி
யேன்என்ன இப்பரிசே, புவன்எம் பிரான்தெரி யும்பரி சாவ-
தியம்புகவே.

உரை நடை:—"எம்பிரான் பவன், பனிமாமதிக் கண்ணி விண்ணோர் பெருமான், சிவன், எம்பிரான் என் சிறுமை கண்டும்

என்னை ஆண்டுகொண்டான். எம்பிரான் புவன் அவன் எம்பிரான் என்ன நான் அடியேன என்ன இப்பரிசே தெரியும பரிசாவது இயம்புகவே.”

உரை :—எமது பெருமான், எல்லாம தோன்றுதற்கிடமான வன். குளிர்ந்த சிறப்புடைய திங்களைத் (தலைமீது) குறுங்கண்ணி யாக அணிந்த தேவர் தலைவன், (ஆதலின, எலலாரையங் காபப வன்) (எல்லாவற்றையும ஒடுக்குவானுகிய) தூயோன், (அத்தகை யானுகிய எமபெருமான், எனது (சிற்றறிவுஞ் சிறுசெயலுமுடைய) சிறிய தன்மையை அறிந்தும், (கருணையினுலே) தடுத்தாட்கொண டனன். எனது வள்ளலாகிய அவன், தானே தோன்றிய சுயம்பு. அவன் எமது தலைவனுகவும் நான் அவன் அடியவனுகவுமிருக் கின்ற இம்முறையே எனக்குத் தெரியும் வகையாக, யான் சொல் லுவேனுக.

குறிப்பு :—பவன் - பிறத்தற்கிடமானவன். பிரான்-வள்ளல், உபகாரி. மலரினுலாகிய கண்ணியை முடியில் அணிதல்போலப் பிறையை இறைவன் சடையிலணிந்தமையால், மதிககண்ணி என்ருர். மா, அங்ஙனம் அணியப்பெற்ற சிறப்பைக் குறிக்கும. பெரியோரால் ஏற்றுக்கொள்ளத் தகாத நிலையை சிறுமை என்ருர். அடிகள் தமக்கு இறைவன் ஆண்டவன், தாம் அடிமை யென்பதே தெரியததக்கதாய்க் கூறததக்கதாயுள்ள கருத்தா மென்றனர். புவன் - சுயம்பானவன், ஒளியுடையவன். சிவன் - தூயோன், ஒடுக்க முதல்வன். (க)

புகவே தகேன்உனக் கன்பருள் யான்என் பொல்லா மணியே, தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப புன்மையரை, மிகவே யுயர்த்தி விண்ணோரைப் பணித்தி அண்ணு அமுதே, நகவே தகும்எம பிரான்என்னை நீசெய்த நாடகமே.

உரை நடை :—என்பொல்லா மணியே, உனக்கன்பருள் யான் புகவேதகேன், உனக்கு எனையாட்கொண்ட தன்மை தகவே.. . எம்பிரான் .நாடகமே நகவேதகும்.

உரை :—எனது தொளைபடாத மாணிக்கமே, உனக்கு அன்பராயினார் நடுவே யான் புகுதற்கே தகுதியில்லாதேன். என்னை உனக்கு ஆளாக்கிக்கொண்ட இயல்பு தகுதியுடைத்தாமோ. எத்தகைய கீழ்ப்பட்டோரையும் மேலாக உயர்வித்து மேலான வானவரை அவருக்குக் கீழ்ப்படுத்துகிற்கிய அப்பனே, அமுதனே, எம்பெருமானே, நீ என்பாற் செய்த கூத்து, சிரித்து நகையாடற்கே உரியதாகும்.

குறிப்பு :—பொல்லா - பொள்ளா ; பொள்ளுதல்-தொளைத் தல் குறைவில்லா முழு மாணிக்கம்போன்ற பூரண ஆனந்த அறிவே யென்பது கருத்து. தன்னை ஆட்கொண்டதின் வைத்து, கீழோரை உயர்த்துவது மேலோரைத் தாழ்த்துவதுங் கூறினார். அண்ணா - மேலோனே அமுது - சாவாமருந்து. ஆள் - அடிமை. அடிகளின் கழிபெருந்தாழ மனத்தை இச்செய்யுளுணர்த்தும். (க0)

உ அறிவுறுத்தல்

[இப் பதிகத்தின் இறுதி யிரண்டு செய்யுளில் நெஞ்சிற்கு அறிவுரை பகர்தலின், ‘அறிவுறுத்தல்’ என்ற தலைப்பு அமைத்தனர் போலும். இப் பதிகத்தின் பிறசெய்யுள்கள் பெரும்பாலும் அருள் வேண்டும் விண்ணப்பமாகவே அமைந்துள்ளன.]

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் முடையானே.

உரை நடை :—‘எம்முடையானே’ என்பதை முதலிற்கொள்க.

உரை:—(எம்மை அடிமையாக) உடையவனே, உனது அன்பர் போல (அன்பில்லாதிருந்தும், அன்புடையான்போல)வஞ்சனையாக நடந்து காட்டி, அன்பர் வீடுசெல்வதற்கிடையே, யானும் முத்தி யின்கண் போய்ச் சேர்தற்கு மிக அதிகமாகத் துரிதப்படுகின்றேன்.

பொன்னின் நலமுடைய மாணிகக மலைபோலும் ஐயனே, உன் பால் எப்போதும நிகழும அன்பினை என்னெஞ்சினூடே நிலைபெற வும், அதனால நெஞ்சமுருகவும் உதவி யருள்வாயாக

குறிப்பு :—நாடகத்தால் என்பதனை 'நாட்டகத்தால்' என்ப தன் திரிபாகக்கொண்டு, 'நாட்டகத்தில்,' அதாவது 'இவவுலகில்' எனப் பொருள் கொளளுதல, வலிந்து பொருள் கோடலாகும். 'நாடுகின்ற அகத்தால்,' வீடுநாடும் அவாவினால், என்று பொருள் கொள்ளுவது முண்டு. அன்பின்மையைப் பிறர் அறியவொண்ணாது நடப்பதே, நாடகத்தால் நடிப்பது. பிறா அறிய நடப்பது, நடிப்பது மாத்திரையாகும் என்ப. அன்பாதாம வீடு செல்லுதற்குரியர். அவர் நடுவே விரைதல் உரிமையின்மையைக குறிக்கும். அடிகள், உடல் நீத்து இறைவனோடு இரணடறக கலத்தலையே பெரிதும் விழைந்தவ ரென்பதற்கு இஃதே தெளிவான அகசசான்று. ஆடகம் மாறின்மையையும், மாணிக்கம் செம்மேனியையுங குறிக் கும். அரன் கழல் செல்லுதற்குரிய அயரா அன்பினையே அடி கள் வேண்டினர். நின்று - நிற்க (கக)

யான்ஏதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்(கு) என்கடவேன், வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன், தேன்ஏயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமான்எம, மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே

உரை :—அடியேன் பிறத்தற்கு ஒரு சிறிதும பயப்படமாட்டேன்; இறததலுககு யாதும் அஞசககடவேனல்லேன். விண்ணுலக (முழுதுங கொடுத்தாலும்) அதனை விரும்பேன். உலகாள்கின்ற அரசனைச சார்ந்து அவனைப்பேணி யொழுகவும் இருககின்றேனில்லை. தேன் பொருநதிய கொன்றை மலரணிந்த மங்கலப் பொருளாவானே, எமது தலைவனே, எமது பெரியோனே, உன்(னோடு இரண்டறக கலத்தற்கேதுவாய) திருவருளை எய்துங் காலம் எப்போது எப்போதென்று எண்ணி மனம் உளைகின்றேன்.

குறிப்பு —பிறப்புக்கும இறப்புக்கும் அஞ்சாமையே குறித்தார். இறபபிற்கு யாது செய்யக்கடவேன் என்று அஞ்சியதாகக் கூறுதல் தவறு. தேன்போன்ற இன்பம நல்கும் மஙகலமுடையானைச சாா்ந்தபோது, பிறப்பிறப்பின்மையும், இறைவனைத் தலைவனாகப் பெற்றபோது, தாம் விண்ணவர் தலைவனாதலை விரும்பாமையும், இறைவனைப் பெரியனாகக கொணடவிடத்தே, மனனனை மதித்து வாழாமையும ஏற்படுமென்பது குறிப்பு. எம்மவன், எம்மானென்றுய தென்பாருமுளர். மான என்பதற்கு மகான், என்று பொருள் கொளளுவர் (கஉ)

வருநதுவனநின் மலாப்பாதம அவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலாபுனையேன ஏத்தேன்நாத தழும்பேறப்
பொருநதியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவன்நத தமியேனமற் றென்னேநான் ஆமாறே.

உரை நடை —நாயடியேன் நின்மலர்ப்பாதம அவை காண்பான் வருநதுவன் . ஆமாறே

உரை —நாய்த் தன்மையுடைய அடியேன், நின்னுடைய பெருமைமிக்க திருவடிக கமலஙகளைக் காண்பதற்காக, மிகவும் கவலைப்படுகின்றேன் (உலகத்தே உடலுறுப்புக்களோடு) வாழ்ந்திருநதும, உனககு நல்ல பூமாலை தொடுத்துச சாத்தேன், நாவிலே தழும்புணடாகுமபடியாக உன்னை வாழ்த்தமாட்டேன், பொன் பொருந்திய மேருமலையை வளைத்தவனே, நினது அருளோடு கூடிய பேரின்ப அமுதத்தை எனக்கு நீ கொடுக்கமாட்டாயாயின், ஆதரவின்றித் தனிமையிற் கடைப்பட்ட யான் துன்புறுவேன்; துன்புறுது நான் உய்யுமாறு வேறு எது செயயவல்லேன். (ஒன்றுஞ் செயயுந் திறமையிலேன்)

குறிப்பு .—மலையை வளைத்த நீ, என் மனத்தை வளைத்தல் அரிதில்லையே, என்றவாறு. ந, மிகுதி குறிக்கும். தனிமை மிகுதி கூறினார். (கங)

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர் [ன்
கோமானின் திருக்கோயில் தூகேன்மெழுகேன கூத்தாடே
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

உரை நடை :—புத்தேளிர் கோமான், சதுராலே சார்வானே என்ற விளிகளை முதலிற் கொள்க.

உரை :—தேவர் பிரானே, திறமையான பணிகது ஆதரவளிப் பவனே, நான் (உன் திருவடிப் பேற்றிற்குத் தகுதியுடையேன் ஆகும் வண்ணம்) உன் திருவடியினை கண்ணேயே மனம் நெகிழப் பெறேன். அன்பினாலே உருகமாட்டேன். மலாமாலை தொடுத் துச் சாத்தி வழிபடமாட்டேன் உன் புகழுகளை யெடுததுப் பேச மாட்டேன். உனது திருக்கோயிலை அலகிட மாட்டேன். சாணம் பூசிச சுத்தப்படுததமாட்டேன். ஆனநதக் கூத்தாடேன. (நற்செய லற்று வீணே) உயிர் விடுதற்கே துரிதப்படுகின்றேன்

குறிப்பு :—சதுர் - திறமை பணியைக குறிக்கும், சதுா - அறிவு. அறிவிலே மன்னுபவனே, என்பதே 'சதுராலே சார் வானே' என்பதன் பொருளெனக் கொள்ளுதலுமுணடு குழை தல்-இளகுதல, நெகிழதல். முக்கரணஙகளாலும் வழிபடாமை கூறினர் 'சாதல்' பயன்பெறாது போதல் என்றுங் கூறுப. (கச)

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்(று) அவரவரைக் கூததாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

உரை :—விண்ணாகிய பூதம, மண்ணாகிய பூதம், காற்று, ஒளியையுடைய நெருப்பு, உடம்பு, உடம்பிலுள்ள உயிா முதலிய எல்லாவற்றோடுங் கலந்து அவையே யாகியும், (மெய்யர்க்கு) மெய்ப்பொருளாகியும் (பொய்யர்க்குப்) பொய்ப் பொருளாகியும், அல்லது தோன்றும் பொருளும் தோன்றாப் பொருளுமாகியும்,

(அப்பொருள்களின் வசப்படாது தம வயமுடைய)முதல்வனுகியும், பல்வகைப்பட்ட உயிர்களையும், யான் செய்தேன், என்னுடையது, என்று பல்லறிவால் மயஙகிக் கூத்தாடும்படி, அவவவற்றை இயக்கியும, நின்ற நின்னை யான் யாது சொல்லிப் புகழமுடியும்?

குறிப்பு —'முற்றுநீ புகழ்ந்து முன் உரைப்பதென்' என்ற தேவாரமுங காண்க. இன்மையாதல், தோன்ருமையே. 'அவரவா' என்று உயர்திணையாற் கூறினும, அஃறிணை யுயிர்களையு முடன் கொளக 'யான் எனது' என்னுமுணர்சசி, சிறப்பாக மக்களிடைக் காணப்படுதலின், உயர்திணையாற் கூறினுர். உயிர்கட்குக கூத்தாட்டாவது 'போக்கும உணர்வும் வரவுமே' பிற்காலத்தோருள குமரகுருபரர் 'கூத்தாட்டு' என்பதை அக்கருத்தில் வழங்கியுள்ளாா. (கூ)

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனமநின் பால், தாழ்த்துவதும் தாமுயாநது தம்மையெல்லாந்தொழ வேண்டிச, சூழ்த்துமது காமமுரலுந தாரோயை நாயடியேன், பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவு வனே.

உரை நடை :—சூழ்த்துமதுகரமுரலுந் தாரோயை என்பதை முதலிற் கொள்க.

உரை :—வணடுகள் சூழநது ரீஙகாரஞ்செய்யு மாலையணிநத நின்னை, வானவர்கள் (பல்லாண்டு கூறி) வாழ்த்துதலும், தாஙகள் (நீடூழிக் குறைவின்றி) வாழ்தற் பொருட்டே. உன்னிடததே உள ளத்தைப் பணிவிப்பதும், தாஙகள் மேன்மையடைந்து தஙகளைப் பிறா எல்லாரும் வழிபட விரும்பியே நாய்போன்ற அடியேனுடைய பயனற்ற பிறப்பினை யொழித்திடுவதற்காக, யானும் உன்னைத் துதிப்பேன்.

குறிப்பு :—வானவர்கள், ஆயுள், அதிகாரமுதலிய பயன் கருதி இறைவனை வழிபடுகிருர்க ளென்பதும், அடிகள்போன்ற ஞானிகள, பிறவி நீக்கததிற்காக இறைவனை வழுததுகின்ருர்களென்

பதும் அறியற்பாலன. வண்டுகள் மலரினுள்ள தேன்பொருட்டு ரீங்காரஞ் செய்து மாலையைச சூழதல்போல, இனிய பயனைக் கருதி இறைவனை விண்ணவர் முதலியவர்கள் அடுத்து வழிபடு கின்றாகள் என்பது கருதது. (கசு)

பரவுவார் இமையோாகள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள் ஒருபாகம
விரவுவாா மெய்யன்பின் அடியாாகள் மேனமேலுன
அரவுவாா கழலிணைகள் காண்பாரோ அரியானே

உரை.—தேவர்கள் உன்னை வாழததுகின்றாாகள. அறிவுக்கு முதலாகிய (நால்வகை வாக்காகிய) நான்மறையும, உன்புகழையே ஒலிக்கின்றன. நறுமணம பொருநதிய நீண்ட கூநதலையுடைய இளம பெண்ணாகிய உமையம்மை, உன்னுடைய ஒரு பகுதியாகிய இடப்பாகத்தைப் பெற்றிருக்கின்றாள். உண்மைப் பததியுடைய அடியாாகள் தொகுப்புத் தொகுப்பாக, உன்னை வழிபடக் கூடுகின்றார்கள. யாரும் அரிதற்கரியவனே, அராவிய பெரிய கழலக ளணிநத நினது இரு திருவடிகளையுங காண்பது யாரோ? (நின்னை வழிபடுகின்ற **இவர்கள்** அனைவருந) திருவடியைக் காணபார்களோ, என்ற வினாவாக இறுதியடிககுப் பொருள் கொள்ளுதலுமுண்டு.

குறிப்பு.—தேவர்களு மறையும் இறையடி காணுமை கூறப் பட்டன உமையம்மை, சிவத்தின் பகுதியாவளாதலின், அடியிணை காணுங கடப்பாடுடைய ளல்லள். மெய்யடியார் காண்பர், என்பது கருத்து என்ப. குரவு-குரவமலரையும, மணததையுங குறிக்கும். விரவுதல், கலத்தல், கூடுதல். அரவு என்பது, அராவு என்பதன் நடுககுறையாகக் கொள்ளப்படும். அழுததல் என்ற பொருளில், கழலகள் அழுநதிய திருவடியெனக் கூறுவர். விணணவர் முடிபட்டு அழுததமுற்ற திருவடிகளென்பது முண்டு. அரவு, ஒலியெனப் பொருள்படுமென்று கொண்டு, ஒலிக்கின்ற கழல்களணிநத திரு வடிகள் என்றுங் கொள்க. காண்பு-காண்டல், காண்பது. (கஎ)

அரியானே யாவர்க்கும அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேனநான் ஆமா(று)என் சாவேன்நான் சாவேனே.

உரை:—எத்தகையாருக்கும் அறிதற்கரியனே, அருள்வானினை உடையவனே, தில்லையம்பலத்திலே நடமாடும் எமது பெருமானே, சிறுமைமிக்க அடியேனை ஆளாகக் கொண்ட, செறித்த கழலினையுடைய திருவடிக் கண்ணே, மணம் நிறைந்த மலர்களை இட்டு வழிபடேன், புகழ்ந்து பாடித் துதியேன், உள்ளம் விரும்பி யுருக மாட்டேன். நான் இவ்வாறு (முக்கரணங்களாலும்) வழிபடா திருத்தலைப் பொறுக்கமாட்டேன். நான் உய்தற்குத் தகுதியாகும் வகை யாது? நான் இறப்பேனிறப்பேன். (இறந்துபடவே துணிந்தேன் என்றவாறு)

குறிப்பு:—மிகப்பெரியனாகிய கடவுள் மிகச்சிறியனாகிய என்னை ஆட்கொண்டும், அவனை வழிபடுகின்றேனில்லை. வழிபடாது உயிர் வாழவு முடியவில்லை. இறப்பதே நலமென்பது கருத்தாக அடிகள் கொண்டார். அடிகளின் தீவிர பக்குவத்தையே இத்திருப்பாடலுணர்த்தும் மலர் தூவல், அலறுதல், உருகுதல் - முறையே உடம்பு, மொழி, மனம் என்பவற்றின் செயலாதல் காண்க. (௧௮)

வேனில்வேள் மலர்க்கணைக்கும்வெண்ணகைச்செவ் வாய்க்கரி
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே [ய
ஊன்எலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வான்உளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே

உரை:—இளவேனிலாகிய வசந்த காலத்திலே மன்மதன் விடுகின்ற பூ வகைகளாகிய அம்பிற்கும், வெள்ளிய ஒளியுடைய பல்லினையும் சிவந்த வாயினையும் கருநிறமுடைய குவளைபோன்ற கண்களையுமுடைய மகளிர்க்கும் ஈடுபட்டுத் துடித்து நெகிழ்கின்ற பயனற்ற மனமே, நமது உடம்பெல்லாம் (கனிந்து அமுதூறி) உருகும்படியாக, எழுந்தருளி வந்து உள்ளகத்தே நிலைபெற்று

ஆட்கொண்டருளிய பெருமான், இப்போது சென்று ஞான ஆகா யத்தின்கண் இருககின்றான். அவனை நீ காண முயலமாட்டாய். நீ இறநதொழியாது, இன்னும என் நிலைத்திருக்கின்றாய் ?

குறிப்பு — மூன்றாம் அடியில், 'உருகப்புகுந்து நின்று' எனக கொண்டு கூட்டுக. வாசனாமலத்தால் உலகப்பற்றில் ஈடுபடக கூடாதெதன நெஞ்சிற் கறிவுறுத்துவார், இஙஙனம புகன்றனர் போலும். இளவேனிற்காலம், காமனுககுகநத பெருமபொழுது காம எணணததையே, மதன் அமபிற் கிடுபடுவதாகச செப்பினர். பானல் - நீலோற்பலம - குவளை ; கரியபானல் - கருஙகுவளை. புகுநது என்பது உடலுள்ளும உள்ளத்துளளும் உயிருள்ளும புகுநது எனவும், நிலவுலகிற் புகுநது எனவும் இருவகையாகப் பொருள்படும். மாளா - மாளாது. வான் - சிதாகாசம தில்லைக்குத தம்மை வரப் பணித்தமையால, சிதம்பரமாகிய சிதாகாசத்தைக் குறிததன ரென்பாருமுளர். (கக)

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைபபட்(டு)
ஆழ்கின்றாய், ஆழாமற் காபபானை ஏததாதே
சூழ்கின்றாய் கேடு(உ)னக்குச் சொல்கின்றேன் பலகாலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளததே

உரை —(பேரின்ப வாழககையைப் பெற்று) வாழககருதாத மனமே, நீ வீணுக உலகிலேயே நிலைத்திருக்கின்றாய. இதனால் கொடிய வினையிலகப்பட்டு (துயரததில்) அழுநதுகினறாய். அங ஙனம அழுநதாமற் காக்கின்ற கடவுளை வழிபடாமல், உனக்குக கெடுதியையே உணடாக்கிக்கொள்ள எண்ணுகின்றாய் பலமுறை யும் உனக்கு அறிவுரை இயம்புகின்றேன். நீ அதனைக் கேளாது துனபக கடலிலெழுநத பெருவெள்ளத்தே வீழநதொழிகின்றாய. என் செயவது ?

குறிப்பு —தமது அறிவு இறைவன்பாலீர்ப்ப, மனமானது உலகை அவாவி நிற்பதாகக கருதி அதனைத் தடுத்து அறிவுரை பகாதல இசசெய்யுளின் நோக்கம். (உO)

௩ சுட்டறுத்தல்

[இப்பதிகத்திலும், இறுதிச்செய்யுள் அகண்ட வழிபாட்டைக் குறிப்பதுபற்றி, இத்தலைப்பு ஏற்பட்டது போலும். சுட்டியறியு மறிவை ஒழித்தலென்பது பொருள்.]

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்(கு)
உள்ளந்தாள் நின்றுஉச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே.

உரை —(வான் நின்று இறங்கிய கங்கை) வெள்ளமானது விழுந்து தங்குதற்கேற்ற விரிந்த சடையினையுடையாய், காளையை ஊர்தியாக உடையாய், தேவர் தலைவனே, என்று அன்பர் சொல்லக் கேட்டவுடனே ஆர்வமிகுந்த மனத்தினராய், (மேட்டினின்று) பள்ளத்திலே விழுகின்ற மிகுந்த நீர்போல, மேல்கீழாக விழுந்து வணங்கி நெஞ்சம் துடிதுடித்து உருக்கங்கொள்ளும் சிறந்த அடியார் (உன் அருளை எதிர்பார்த்து நிற்க அவர்க்கதைக் கொடாது), தகுதியற்ற என்னைப் (பெருங்கருணையால்) ஆண்டுகொண்டவுனக்கு, என் உள்ளங்கால் முதல் உச்சிவரையுள்ள உடம்பின் பகுதிகளனைத்தும் மனத்தி னியல்புடையதாய (உருகவேண்டும்; அப்படி) உருகவில்லை. மேலோனே! உடம்பு முழுவதுங் கண்ணின் இயல்புடையதாய் நீர் பெருக்க, அதன் வெள்ளம் (பாயவேண்டும்: அப்படிப்) பாயவில்லை. ஆதலின், கொடிய வினையுடையேனுக்கு நெஞ்சானது கல்லினாலமைந்ததேயாம். இரு கண்களும் மரத்தினா லாயவையேயாம்.

குறிப்பு :—அடிகளது ஆர்வமிகுதியை இச்செய்யுள் குறிக்கும். இறைவன் பெருங்கருணையை நோக்கத் தமக்கு அன்பின்மையும்,

அதற்குக காரணம் தனது தீவினையுமென அடிகள் அறிவுறுத்திய வாறும். சடை, இறைவனது பேராற்றலைக் குறிக்கும். பகீரதன் கங்கை கொண்டுவநத கதை வெளிப்படை. பெருவெள்ளம், ஒரு நீர்த்துளியாகச சடையிற்றங்கிய தென்ப. விடை, நீதியை யுணர்த்தும. வேட்ட - ஆசைப்பட்ட. அண்ணு என்பதற்கு அண்ட முடியாத என்றும் பொருள் கொணடு, வெள்ளநதான் என்பதற்கு அதனை அடையாக்குவா ஒரு சாரார (௨௧)

வினையிலே கிடந்தேனைப புகுநது நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான என்று (உ)ன்னை அறிவித்தென்னை
ஆட்கொண்டெம பிரான் ஆனாய்க்(கு) இருமபின்பாவை
அனையநான் பாடேனநின் றுடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன முதலந்தம ஆயி னானே

உரை நடை —'முதலநதமாயினானே' என்பதை முதலிற் கொள்க.

உரை —தோறறததிற்கும் முடிவுக்குங காரணமானவனே! வினைப்பாசததிலே அகப்பட்டுக கிடநத என்னுள் புகுந்து வலிய எதிரப்பட்டு வநது நின்று, நீ வா, நான் வினையை யொழிக்க வல்லேன், நான் இததன்மையன் என்று உன்னியல்பை எனக்கு அறிவுறுத்தியருளி எனனை அடிமையாக்கி என் தலைவனான உன் பால், இரும்பினாற் செய்த பதுமை போன்ற யான், நின் புகழினைப் பாடமாட்டேன், நிலைபெற்று ஆனந்தக் கூத்தாட மாட்டேன், ஐயோ, கதறமாட்டேன், பதறி வற்றமாட்டேன், உயிர்தளர மாட்டேன், முதல்வனே, நான் இவவாறாய முறை நியாயமாமோ? எனக்கு என்ன கதிவருமோ அறிகிலேன்.

குறிப்பு —புகுநது என்பது உள்ளத்திற் புகுந்து, உலகில் வடிவொடு புகுநது, என இரு பொருள்படும். போது - வா, வினை

வழிநின்று வெளியேபோ, அதாவது, என்னிடை வா, என்று விரிபொருள் கொள்க. ஆசிரியனது பிரிவாற்றுமையால், 'அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்' என்றார். தனது கட்டுப்பாட்டுக் குறையால், உய்தி கூடாதுபோமோ என்ற ஐயப்பாட்டினுல், 'முடிகிறியேன்' என்றார். இறைவன் கருணைச சிறப்பை அறிவுறுத்தியவாறு. (உஉ)

ஆயநான் மறையவனு(ம்)நீயே ஆதல்
அறிந்துயான் யாவரினுங் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நான்உனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை அன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே

உரை நடை:—நாதனே என்பதை முதலிற் கொள்க. நான் மறைஆய அவனும் நீயே என மாற்றுக.

உரை:—தலைவனே! நான்குவேதப் பொருளானவனும நீயே அஙஙனம் நீ யிருத்தலையறிந்து, அடியேன் எல்லாரினும் கீழப்பட்ட நாயியல்புடையேன் என்பதையும் ஆராய்ந்து பார்த்து உனக்கு ஒரு வகையான அன்பன் என்று சொல்லிக்கொள்ளுவேன் ஆயினன். அக்காரணம்பற்றி நீ என்னை ஆட்கொண்டருளினுய் போலும். (பேயாய்ப் பிறவாவிடினும் மனித வடிவஙகொணட) வேறொரு பேயென்று சொல்லத் தக்கவனுகிய என்னையன்றி உனக்கு ஆட்கொள்ளத்தக்க அடியார்கள்தாம் வேறில்லையோ? (தகுதியில்லா என்னை ஆட்கொண்ட) இச்செய்கைதானே உனது பேராறறலை யுணர்த்தும் அல்லவா? எம்பெருமானே! நான் (உன் கருணைத் திறத்தை) யாது சொல்லிப் பாராட்டவல்லேன்?

குறிப்பு:—'ஆயநான் மறையவனும நீயேயாத லறிந்து'- என்னை ஆட்கொள்ள உருவெடுத்து வரலான நான்மறைவல்லான்

பரம்பொருளாகிய நீயே யென்பதறிந்து, என்று கோடலு முண்டு. ஓர பேயனே யன்றி மற்று அடியாரதாம் இல்லையே யென்று கொள்க. பேய் அன்னேன் பேய போனறேன் என்று, பேயனேன் என்பதைப் பிரிந்துப் பொருள கோடலு முணடு. சொலலிப் பேசுதல் - பாராட்டுதல். (உரு)

பேசில்தாம் ஈசனே எந்தாய எந்தை
பெருமானே என்(று)ஏன்றே பேசிப் பேசிப்
பூசில்தாம் திருநீறே நிறையப பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்றா
நேசத்தார் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே, அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னை நீ ஆட்கொண்ட வண்ணந் தானே.

உரை நடை —'மாசற்ற மணிக்குன்றே, எந்தாய்' என்பதை முதலிற்கொள்க.

உரை —குற்ற மற்ற மாணிக்க மலையே, எமது அப்பனே, தாம பேசுவதானல், ஆண்டவனே, அப்பனே, எமது அப்பனுக்குத் தலைவனே யென்றே எப்போதும் நின்னைத் துதித்துப் பேசுவார்களாய, ஏதாவது பூசுவதானல், தாம் திரு நீற்றினையே நிரம்ப (உடலெஙகும்) பூசி, எம்பெருமானே காத்தருள்க என்று எதற்கும் ஒழிந்து பின்னிடாத பேரன்பால், பிறவியையும் சாவையுங கடக்குந் தகுதி யடைந்தாரை ஆட்கொண்டவனே, உலக ஆசைவெள்ளத்தி லகப்பட்டு (உன்னடியார்போல் நடிக்கும்) வஞ்சனேனுகிய என்னை, ஐயோ, நீ ஆட்கொண்ட வகைதான் என்னே ?

குறிப்பு :—மெய்யடியார், பேசுவதானல், ஈசன் புகழே பேசுவா. பூசுவதானல், திருநீறே பூசுவர் என்பது குறிப்பிக்கப் பட்டது. பின்றா - பின்னிடாத. கடந்தார் - கடக்குந் தகுதி

யடைந்தார். இறைவன் ஆட்கொண்ட பின்னரே, மெய்யாகப் பிறப்பிறப்பைக் கடந்தவராவர் உறுதிபற்றிக் கடப்பாரைக் கடந் தாரென்றுரென்க. வாசனுமலந் தோன்றுதலபற்றிப் போலும், தம்மை அடிகள் 'அவாவெள்ளக்கள்வ' னென்றார் (உ௲)

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்(று)
அநேகன் ஏகன் அணு அணுவிலிறந்தாய என(று) அங்(கு)
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா(று) அறியாத எந்தா யுன்றன்
வண்ணந்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே.

உரை நடை —'இமையோர் கூட்டம்' என்பதை முதலிற் கொள்க.

உரை —வானவர் தொகுதி, உனது நிறந்தான் சிவப்பன்று, வெள்ளையன்று, நீ பலவாயிருப்பவன், ஒருவன், அணுவாயிருப்ப வன், அணுவினையுங் கடந்த அதிநுட்ப முடையோன், என்று பேசி அவ்வாறே தமது நினைவுதானுந் தடுமாறப்பெற்று, உன்னை யடையுமாறு அறியாது நிற்றற்கேதுவாய எந்தையே, உனது மெய்யியல்பாகிய நுட்பத்தைத்தானு மறிவுறுத்தி, நீ ஆட்கொள்ள வந்த திருமேனியுங் காட்டி, பூப்போன்ற திருவடிகளானவற்றையுங் காட்டி, கதியின்றி நின்ற என்னை உறுதியாகவே பிறவாதிருக்கும் படி தடுத்தாட் கொண்டருளினை, எந்தலைவனே, உன் கருணையை யாது கூறி மனத்தால் நினைக்க வல்லேன்?

குறிப்பு —விண்ணோர் இறைவனது வெளிப்படையான பல் வகைக் காட்சிகளை நினைந்து மெய்யியல்பறியாது மயங்கினமை கூறியவாறு. வண்ணந்தான் 'அது' என்பது மெய்யியல்பைச் சுட்டி நின்றது. 'மலர்க்கழல்கள் அவை' என்பதில், 'அவை' என்பது திரு வடிகளாகிய அருட்சத்திகளைக் குறிக்கும். காத்து-தடுத்து (உ௯)

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

உரை :—நாய்போன்ற எனது எண்ணத்தை உன்னையே நினைக்கும்படி செய்து, எனது இருகண்களையும் உன் திருவடி மலரிற் சாத்து மலராக ஆக்கி, அதாவது, உன் திருவடியிணையே பார்த்து இன்புறும்படி செய்து, எனது வணக்கமும், அத்திருவடிக் கமலங்கட்கே உரியதாகச்செய்து, எனது சொல்லினை உன் சிறந்த புகழ் பேசுதற்கே உரியதாகச் செய்து, என்னுடைய ஐம்பொறி யறிவும் உன்னையே துய்க்கும்படி எழுந்தருளி வந்து என்னை ஆளாகக்கொண்டு, எனதுள்ளத்தின் கண்ணே புகுந்த அருஞ் செயலையுடைய அன்புமயமாகிய ஞானப்பெருங்கடலே, சததாகிய மலையே, சிவந்த தாமரைக் காடுபோன்ற திருமேனியையுடைய ஒப்பற்ற ஒளியுருவனே, கேடும் ஆக்கமும், அல்லது இருவினையுங் கெட்ட தனிமையேனாகிய எனக்கு நின்னை நீ கொடுத்தருளினை, (உன் பெருமையிருந்தவாறென்னே)!

குறிப்பு :—மணி - அழகிய, சிறந்த; வார்த்தை - புகழ்; கண் மலர், திருவடிமலரிலே பொருந்து மியைவுடையது, மலர் மலரோடு இனம்பற்றிச் சேர்தலால், நீயே சிந்தனை மயமாகவும், திருவடிமலர், கண் மலராகவும், புகழ்ச்சொல்லே வாக்காகவும், அமைத்தனை யென்பது மொருபொருள். சிந்தனை, வந்தனை, வார்த்தை— மூக்கரண வழிபாடு. இனி ஐம்புலன்களுக்கும் இறைவன் மாட்டே உரியன கிடைக்கப்பெற்றன என்பது கருத்து. அவையாவன— திருமேனி காண்டல், திருவடிமலர்த்தேன் பருகல், புகழ் கேட்டல்

தெய்வ வாசனை முகரல், திருவடி சென்னிமிசை தீண்டப்பெறுதல். இரண்டுமிலி - இருவினையுமில்லாதவன், இகபரம பயனற்றவன. மூன்றும அடியில வநதெனை - வநது + என்னை, விசசை - வித்தை, வியததகுசெயல். மால் - அன்பு. இறைவன் செம்மேனியனுதலின் செநதாமரைக்காடனையமேனி. எல்லா ஒளிகட்கும தோற்றமாய்ச் சிறத்தலின் 'தனிசசுடா' என்ருர். 'இரண்டுமிலித் தனிய னேற்கே' என்பதை 'உனனை' என்பதன் முன வைகக. (உசு)

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்(து) எவ்வத்
  தடந்திரையால் எற்றுண்டு பற்(று)ஒன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
  கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட் டு
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
  அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
  கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

உரை நடை —'மூர்க்கனேற்கே' என்பதை 'கிடக்கின்றேனை' என்பதோடியைகக.

உரை :—(கேவலாவததையிலே) தனிமையாய்க் கிடந்த யான், பிறவியாகிய பெருஙகடலிலே விழுந்து, (இருவினையாகிய) துன்பப் பேரலைகளால் தாக்கப்பட்டு ஆதரவு யாதொன்றுமில்லாமல், சுவை யாற் பழத்தை யொககும் பவளவாய் மாதரென்று சொல்லப்படும் புயற்காற்ருல் (அலைக்கப்பட்டு) மனக் குழப்பமுற்று ஆசை யென் கிற பெரிய சுருமீன் வாயிலே அகப்பட்டு, இனி உய்வதற்கு வழி யாதோ என்று இடைவிடாது எணணிக் கவலைப்பட்டுத் திருவைந் தெழுததாகிய தெப்பததைப் பிடித்துக்கொண்டு (அதனை மேற் செலுததிக் கரைசேர வியலாது) கிடந்த, (வேறு நற்குணமில் லாத) முரண்குணமுடையேனுக்கு, முதல்வனே, தொடக்கமு மிறுதியுமில்லாத வளமபொருந்திய முத்திக்கரையைக் காண்பித்து ஆட்கொண்டருளினுய். (உன் கருணையிருந்தவாறென்னே !)

குறிப்பு :—'தனியனேன' என்பது உடம்பெடாத தனிநிலையைக குறிககும. பிறவிக கடலிற் பொருந்திய நிலை - சகல நிலையாகும எவவம் - துன்பம. எறறு - மோதது, தாககு பற்று - ஆதரவு. 'கனி'-கொவவைக் கனியைக குறிககுமெனப துவா - எனறு பவளமெனனும் பொருளில், சிவப்பைக குறிததலால, கனி' சுவைககு உவமையாக எடுததுககொள்ளப்பட்டது புணை - தெப்பம், மிதவைக்கட்டையெனறுங கொளளலாம. மூாககன் - கோபமுடையவன், கீழ்ப்பட்டவன், பிடிவாதமுடையோன். அஞ்செழுத்தின் சிறப்பையும், அதன்கண் தமக்குள்ள உறுதியையும அடிகள் குறிப்பித்தனா. வீட்டிற்கு முதலீறின்மை தெளிவு. மலலல் - வளம். ()

கேட்டாரும அறியாதான் கேடொன் றில்லான்
  கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
  நாயினுக்குத தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
  கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
  எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

உரை நடை :—'கேட்டாரும்' என்பதை 'யாருங்கேட்டு' என மாற்றுக.

உரை :—யாவராலும் கேள்வியால் அறியப்படாதவன், யாதொரு அழிவுமில்லாதவன். உறவினரில்லாதவன். கருவிகளினுதவியின்றே, கேட்பனவற்றை யெல்லாங் கேட்டவன். உலகததாா பார்த்திருப்பவும், உலகின் கண்ணே (புகுந்து) நாயேனுக்கு இருக்கை யளித்துச சிறியனாகிய எனக்குக்கூடக் காட்டக்கூடாதனவற்றையெல்லாங் காண்பித்து, மேலும் கேட்கக்கூடாதனவற்றை யெல்லாம் அறிவுறுத்தி என்னை மீண்டும் பிறவாதபடி தடுத்து ஆட்கொண்டருளினன் எமபெருமான், அவன் இயற்றிவிட்ட மாயவிததைதான் இது.

குறிப்பு :—இறைவனே குருவாக வந்து நேரில் அறிவு நல்கப் பெற்று அறியுந்தரத்தனேயன்றிப் பிறர்பாற்கேட்டு அறியப்படாதா னென்பார், 'கேட்டாரு மறியாதான்' எனறார். உபதேசம் பெற்றா ராலுங்கூட முற்றிலு மறியப்படாதான் என்றுங் கூறுப தந்தை தாய முதலிய உறவினரில்லாதான் தம் வயமும் பற்றின்மையு முடையனுதலினென்க. கேளாதே என்பதற்குப் பிறா வாயிலாகக் கேட்டறியாதே என்றும் பொருள் கொள்வர் உயிாகள் கூறும் எங்லாவற்றையுந தானே கேட்டருள்புரிபவன் - என்பதுமகொள்க. யாரும் அறியத் தெளிவாகவே, பக்குவம் வந்த காலை இறைவன் திருப்பெருநதுறையில் ஆண்டனன். அந்நட்பதகை உலகில் நாட் டினர்கள் விழித்திருநதும அறிந்திலரென்பது. தவிசு - ஆசனம, இருக்கை. இறையாசான், தன்பக்கம் அடிகளை இருககும்படிசெயது மெய்யறிவு நல்கினன். இருககுமிடம் கொடுததலையே 'தவிசிட்டு' என்றார். ஞானிகள் இறையறிவாற் காண்பன, கேட்பன, பிறரா லறியப்படாமையின், அவவாறு கூறினா விததை - வியததகு அற்புதச செயல். (உஅ)

விச்சைதான் இது ஒப்பது (உ)ண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீாத் தாட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்அலி ஆகாச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும மேனி யெங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே.

உரை நடை :—'கேட்கின்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—ஆய்ந்து வினவினால், மாயவித்தைகள் இதைப் போன்ற துண்டோ? தம்பால் மிகுந்த அன்புடைய அடியார்கட்கு என்னை அடியனாக்கி, பிறப்பிறப்புப் பயத்தை நீக்கி யென்னை ஆட்கொண் டருளினன். பேரின்ப அமுதம் ஊற்றெடுத்து நெஞ்சங் கரைந்து அன்பு மிகுதிப்படும் வண்ணம், என் உள்ளத்தே

புகுந்து ஆண்டருளினன். அவன் யாரெனில், (எல்லார்க்கும்) அப்பன்; ஆண், பெண், அலி என்பவையாய், எல்லாவற்றிற்கும் இடங் கொடுக்கும் வானாகிக் கடத்தற்கரிய சோதிவடிவான தூய மாயையாகி, முடிவாகி அப்பாற்பட்டு நின்ற, வெட்சியின் சிறந்த பூப்போலச் செம்மேனி படைத்த எங்கள் சிவபரம்பொருள், எமது தலைவன், அவனே விண்ணவர்க்கரசன் என்றவாறு.

குறிப்பு :—அடியார்க்கடியனாதல, அயராவன்பினை வளாத்தற்குக் கருவியாம். அசசன் - அப்பன். நுண்ணிய வடிவனென்று பொருள் கொள்வாருமுளர். ஆரழல - கடததற்கரிய நெருப்பு அல்லது ஒளி. ஆகாசமென்பதை மூலப்பகுதி யெனவும, ஆரழல் என்பதை ஒளிமயமான நாதகலையுடைய சுத்தமாயை யெனவுங் கூறுப இறைவன் அப்பாற்பட்டவனாயினும், அடியார்க்குச செம் மேனியனாய் வெளிப்பட்டருளுதலின், ‘செச்சைமேனி’ என்றார். செக்சை - வெட்சி. மா - சிறந்த (உக)

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம யாதும அஞ்சோம
மேவினோம் அவன்அடியார் அடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே

உரை :—விண்ணவர்க்கரசனாகிய இந்திரன் உணராத மகா தேவன் வளவிய உலகங்களைப் படைததுக் காதது ஒடுக்குகின்ற ஏனை மூவராகிய அயன், அரி, அரன் என்பார்க்குத் தலைவனாய் நின்ற ஈசன். எல்லாந தமது வடிவாகக் கொண்டவன் எல்லார்க் கும் பாட்டன். உமை வீற்றிருக்குமொரு பகுதியுடைய எமது அப்பன். யாவர்க்கும் அரசன். கடைப்பட்ட என்னையும் தானே வந்து ஆட்கொண் டருளினன். ஆதலால், அடியேங்களாகிய

யாங்கள், அவனொழிந்த பிறர் எவர்க்கும் அடிமையாக மாட்டோம்; எதற்கும் பயப்படமாட்டோம். அவனுடைய அடியார்க்கடியரா யிருப்பாரோடு பொருந்தியுள்ளோம். அவனது ஆனந்தக் கடலிலே மேலுமேலும் மூழ்கித் திளைத்துக் கூத்தாடுவோமே.

குறிப்பு :—இந்திரன், அயன், அரி, அரன் இவர்க்கு அப் பாற்பட்டவன். அவர்க்குமேல அப்பெயருடைய காரணேசுரர் உளரெனின்; அவர்க்கு மிறைவன் தந்தையாதலின், இவர்கட்கு அவன் பாட்டனாயினன் யார்க்கும் முற்பட்ட தகப்பன் என்று மூதாதை யென்பதற்குப் பொருள் கொள்வாருமுளர். சிவஞ் சத்தியாய் யாவற்றையு மேற்கொண்டு நிற்பானென்பார், 'மாதாளும் பாகத்தெந்தை' யென்றார். அப்பர் சுவாமிகள் நாமார்க்குங் குடி யல்லோமென்பதை இது நினைவுறுத்துகின்றது. 'அஞ்சுவ தி யாதொன்று மில்லை' என்றதுங் காண்க இறுமாந்திருப்போ மென்பதுபோல, 'குடைந்தாடி யாடுவோ' மென்றார் பேரின்ப நுகர்ச்சி எப்போதுந் தொடர்தலின், அதற்கு எல்லையின்மை குறித்தவாறு. (௩0)

---

௪. ஆத்தும சுத்தி

[நெஞ்சறிவுறுத்தலினாலே உயிரைத் தூயதாக்குதல்.]

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலைசெய்வதொன் றறியேனே.

உரை நடை :—'துணையிலி பிணநெஞ்சே' என்பதை முதலிற் கொள்க. 'ஆடுகின்றிலை' என்பதை 'அன்பிலை' என்பதற்குப்பின் கொள்க.

உரை.—யாதொரு துணையுமில்லாத சவம்போன்ற மனமே! நினது கூத்தாட்டினை இயற்றுவிக்கும் முதல்வனது திருவடிகட்கண் அன்பில்லாதிருக்கிறாய். அவன் பால் ஆனந்தக் கூத்தியற்ற

மாட்டாய். எலும்புருகப் பாடுவதுஞ் செய்கின்றாயில்லை. அஞ்சி நடுங்குவதுமில்லை. தாழ்ந்து வணங்குவதுமில்லை. அவனது திருவடிக் கமலங்களைச் சென்னிமேல் அணிந்து கொள்ளுகின்றாயில்லை. திருவடிகட்கு மலர்மாலை சாத்துவதுஞ் செய்யமாட்டாய். அவன் திருவடியிணைகளைத் தேடி நாடுவதுமில்லை. தெருவுதோறும் அலைந்து தேடிக்காணாத விடத்துக் கதறுவதுமில்லை நீ இவ்வாறு பிணம்போற் பயனற்றுக் கிடப்பின், உய்திகூடச் செய்யத்தக்க தொன்றும் யான் அறியமாட்டேன்

குறிப்பு:—நெஞ்சு, அறிவினைக் குறித்தது நின்றது அறிவின் துணைகொண்டே நற்செயல்கள் நிகழப் பெற்று, அவற்றிற்கு அது ஆண்டித் துணை செய்யாவிடத்துப் பயனில்லை யென்றவாறு. அறிவு, இறைவனையே நாடி நிற்றலை வற்புறுத்தினார். உலகியற் பற்றற்ற விடத்தே, அறிவு இறைவனைச் சென்று பற்றாது, பிணம்போற் கிடத்தல் தவறென்பது கருத்து (௩க)

அறிவி லாதஎனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமேல், நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானைப், பிறிவி லாதஇன் னருள்கள்பெற் றிருந்தும் மாறாடுதி பிணநெஞ்சே, கிறியெ லாமமிகக் கீழ்ப்படுத் தாய் கெடுத் தாயென்னைக் கெடுமாறே.

உரை:—(இறைவனை அறியும்) ஞானம் இல்லாத என்னை வலிய வந்தாட்கொண்டு தன்னை யறியும் ஞானத்தைக் கொடுத்தருளி அதனாற் பெறும் மேலாகிய வீட்டு வழி முழுவதும் அறிவித்த எமது அப்பனைப், பிறவித் தளையைத் தொலைப்பவனைப் பிரியாதிருத்தற் கேதுவான இனிய அருட் செயல்கள் (எம் பொருட்டுச் செய்யப்) பெற்றிருந்தும், அவனைப் பிரியாமைக்கு மாறாக இயங்குகின்றாயே, சவம்போற் பயனற்ற மனமே (உன் மாறாட்டத்தாலே) பொய்களெல்லாம மிகுதிப்பட, என்னைத் தாழ்த்தினாய், யான் கெட்டுப்போம் வழியாகக் கெடுதி செய்தனை.

குறிப்பு —மெய்ந்நெறி நில்லாது, பொய்வழி புகின், பாசத் தொடர்பு மீளும் அதனால் உய்தி கூடாமையாகிய கேடும்

இழிவுமுளவாமென்பது குறித்தவாறு. கிறி - பொய். மாறுபடுதி- தடுமாறுகிறாய் கெடுத்தாய - காரியக்கேடு விளைத்தாய். (௩௨)

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையைஎம மதியிலி மடநெஞ்சே, தேறுகின்றிலம இனியுனைச் சிக்கெனச் சிவனவன் திரள் தோள்மேல், நீறுநின்றது கண்டனை யாயினு(ம) நெக்கிலை இக்காயம், கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவும் கில்லேனே.

உரை நடை —'எம்மதியிலி மடநெஞ்சே' என்பதை முதலிற் கொளக.

உரை —எம் அறிவில்லாத மூடமனமே, என்னைப் பகைத்து நின்று யான் கெடுமபடியாகக கிடநதாலொத்தாய். இனிமேல் திட்டமாக உன்னை நம்பமாட்டோம். (உருவெடுத்து வநத) தூய முதல்வனது திரட்சிமிக்க தோள்களின் மேலே (உலக நிலையாமை யுந திருவருளொளியும விளக்கும்) திருநீறறுக்குறி நிலையாக இருந் ததை நீ பார்த்தபோதும் உணர்நது கனிவடைநது உருகவில்லை. (அவனைப் பிரிநதபோது) இவவுடம்பை வகிர்ந்தாயில்லை கெட்டொழிவதே உன் தன்மை இதனை நான் கேட்கவும் பொறுக்க மாட்டேன்.

குறிப்பு —யான் கூறும் அறிவுரையை எற்கமாட்டாய், ஆதலால் எம்மதியிலி; இயற்கையன்பும், அறிவுமில்லாதாய், ஆதலால் 'மடநெஞ்சே' என்றாரென்க. கெட-கெடுக்க. கிடந்தா லனையை, கிடநதனையை எனத தொக்கு நின்றது. தேறுகின்றிலம - தெளி கின்றிலம் - நம்புகின்றிலம். சிக்கென - உறுதியாக, திட்டமாக. கீறுதல் - கிழித்தல், வகிர்தல். பரிசு - தன்மை கில், ஆற்ற லுணர்த்துஞ் சொல் (௩௩)

கிற்ற வாமன மேகெடு வாய்உடை யான்அடி நாயேனை
விற்றெ லாமிக ஆள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றிலாஇளந் தளிர்பிரிந் திருந்துநீ உண்டன வெல்லாமுன்
அற்ற வாறுமநின் னறிவும்நின் பெருமையும் அளவறுக் கில்லேனே.

உரை நடை —உடையான் விரைமலர்த்திருப்பாத முற்றிலா இளந்தளிர் பிரிந்திருந்தும் அடிநாயேனை விற்றெலாமிக ஆள்வதற் குரியவன், இற்றவா மனமே, கெடுவாய் நீ உண்டன ..இல்லேனே.

உரை —என்னையுடையானது மணம் பொருந்திய திருவடிக் கமலங்களாகிய முதிராத இளந்தளிர்களை அடிமையாகிய நாய் போன்ற யான பிரிந்திருந்தாலும், (என் உடல், பொருள், ஆவி மூன்றுங் கொண்டமையால்) என்னை முழுவதும் விலைப்படுத்தியா வது சிறப்பாக ஆட்கொள்ளும் உரிமையுடையவன். ஆயினும (உலக பாசங்களிற் செல்வதில்) ஆற்றல கெடாத நெஞ்சமே, நாசமாய்ப் போவாய்; நீ முன் நுகர்ந்தவை யெல்லாம் கெட் டொழிந்த விதத்தையும உன் அற்ப அறிவையும் உன் போலிப் பெருமையையும் அளந்தறியு மாற்றலில்லாதேன் யான.

குறிப்பு —இறைவன், தன் பெருங் கருணையால், என்னை எவ்வாறுயினும் ஆட்கொள்வன். ஆனல், நீ அருள்பெற்ற போதே, உலகப் பற்றொழிந்தனை யென வெண்ணுதற் கிடமில்லாமையின், உன்பற்று அற்றதா, இல்லையா வென்பதையும, என் செருக்குச செயலையும அளந்தறியக் கூடவில்லை. ஏனெனில், நீ இன்னும் உலகப்பற்றிற் செல்லும ஆற்றல் கெடாதிருக்கின்றாய் என்ற வாறும். இல் - ஆற்றல். தவா - கெடா. 'கெடுவாய்' என்பது, அட பாவி, என்பது போல வியப்புக் குறிப்பு; பற்றியதை விடாது பற்றுமன வியல்பு குறித்தவாறும். (௩௪)

அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்கு(அ) டியவர்க் கெளியான்நம, களவு (அ) றுத்துநின் றுண்டமை கருத்தி னுட் கசிந்துணர்ந் திருந்தேயும், உளகறுத்துனை நினைந்துளம் பெருங்களன் செய்தது மிலைநெஞ்சே, பளகு(அ) றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே.

உரை நடை :—நாலாமடியின் முதலில், 'பரகதி புகுவானே' என்பதைக் கொள்க.

உரை:—விண்ணோர்க்கு அளந்து முடிவு செய்தற்கரிய பெருமையை யுடையவன், அடியவர்க்கு எளிதின் அருள்பவன். நம்முடைய வஞ்சப்பிறவியை ஒழித்து உள்ளத்தே நிலைபெற்று ஆட்கொண்ட தன்மையை எண்ணததிலே உருகி யுணர்ந்திருந்த போதும், உள்ளவற்றை யெல்லாம வெறுததும், மனமே, உன்னை நினைந்திருககின்றேம். ஆனல் நீயோ, எனனோடு பெருநட்புச் செய்ததுமில்லை மேலான வீட்டு நெறியடைதற் பொருட்டு, குற்ற மற்றத முதல்வனுடைய திருவடிகளை வணஙகினதுமில்லை. (நரு)

குறிப்பு —களவு-வஞ்சம், பிறவிக்கு ஆகுபெயர். உள-உள்ள பற்றுககள் கறுத்து - கோபித்து, வெறுத்து, களன் - நட்பு; பளகு - குற்றம பிறபற்றொழித்தும், தன்னறிவினைக் கருதினமை யால், நெஞ்சே, 'உனைநினைந்துளம' என்றார். ஏற்றேகாரம அசை.

புகுவ தாவதும் போதர வில்லதும பொன்னகர புகப் போதற்(கு), உகுவ தாவதும எநதைஎம் பிரான்என்னை யாண்டவன் கழற்கன்பு, நெகுவ தாவதும் நித்தலும் அமு தொடு தேனொடு பாலகட்டி, மிகுவ தாவதும இன்றெனின் மற்றிதற் கென்செய்கேன் வினையேனே

உரை:—சென்று அடைதற்குரியதும்,(அடைந்தார்) மீளுத லில்லாததும பொன்னகரமாகிய (வீடாகும்). அதனுட் செல்லுவ தற்குப் பற்றுக்கழல்வதும், எமது அப்பனுந தலைவனுமா யென்னை யாட்கொண்டவனுடைய திருவடிக்கு அன்பினுல் நெஞ்ச முருகு தலும், நாடொறும், அமுதம், தேன், பால், கற்கண்டு இவற்றினு மிகுந்ததாய்ப் பேரின்ப உணர்சசி சிறப்பதும் இல்லையாயின், தீவினை யுடையேன் இவ்விடையூற்றை நீக்க யாது செயவல்லேன்.

குறிப்பு:—பொன்னகர்-மாறுபாடில்லாத வீட்டிற்கு உருவகம். உகுதல் - கழலுதல். நெகுதல் - உருகுதல். கட்டியினுமிகுவது - பேரின்பம. ஆவதும் - உணர்சசி சிறப்பதும். நாள்தோறும் என்றது நாளுக்கு நாள் பக்குவ மிகவேண்டுமென்று குறித்தவாறும். (நசு)

வினையென் போல்உடை யார்பிறர் யாரஉடை யான்
அடி நாயேனைத், தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே, முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்
து(ம்)நான் முட்டிலேன் தலைகீறேன், இனையன் பாவனை
யிரும்புகல் மனம்செவி இன்னதென் றறியேனே

உரை —என்னைப்போலத் தீவினைப் பயனுகர்ச்சியுடையார் வேறு யாவர்? எனது முதல்வன் அடிமையாகிய நாய்போன்ற என்னைத் தினையளவு கூடப் பிரிதல், அவனது திருவுள்ளக் குறிப் பன்று. ஆதலால் (பிரிந்திருத்தல் என் தவறே), முன்னோனுடைய நற்றிருத் தாள்களைப் பிரிந்திருந்தும், நான் தலையை மோதமாட் டேன், பிளக்கவு மாட்டேன் இத்தகையேனது எண்ணம் இரும் பாலானது, மனம கல்லாலானது, செவி இன்னதனா லாயிற்றென் றறிய மாட்டேன

குறிப்பு —உயிர்விடாது, உடம்பொடு நிலைத்திருத்தல், பிரா ரத்த வினைப்பயன் என்று குறிப்பித்தனர் இறைவன் தகுதி யிருப்பின், உடனே வீடளிக்க விருப்பமுடையன் என்ற கருத்துப் பற்றிப் 'பிரிவது திருக்குறிப்பன்று' என்றார் பாவனை, புத்தியின பகுதி. மனம், அதனின்வேறு எண்ணம் முத்தியைநாடவேண்டும். மனம் உலகப்பற்றொழித்தல் வேண்டும் செவி இறைவன் அறி வுரையையே பற்றி நெஞ்சத்தை ஊக்கவேண்டும் அவற்றை அவை செய்யாமையின், பழிப்புக்குரியவாயின போலும் (கள)

ஏனை யாவருமெ எய்திட லுற்றுமற் றின்னதென் றறி
யாத, தேனை ஆன்நெயைக் கரும்பினின் தேறலைச் சிவனை
யென் சிவலோகக், கோனை மான்அன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம், ஊனை யானிருந் தோம்புகின்
றேன்கெடு வேன்உயி ரோயாதே

உரை —(அன்பரல்லாத) பிறர் யாவரும் அடைந்திட முயன் றும இத்தன்மையனென் றறியப்படாத தேன் போல்வானைப், பசு நெய் போலவானைக, கருப்பஞ்சாற்றின தெளிவு போல்வானைத்,

தூயோனை, எனது சிவலோகமன்னனை, மானின் பார்வையொத்த நோக்குடைய அம்மையை யொருபாகமுடையானை, நீண்ட காலமாக நான் அடைந்திலேன் யான் (இவ்வுலகில்) தங்கியிருந்து, தசையாலாகிய உடம்பினைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றேன். கெட்டொழிகின்றேன் பிராணன் ஒடுங்காதோ!

குறிப்பு.—சிவஞானம் பெறாது, முதல்வனை யறியக்கூடாமையின், 'இன்னதென்றறியாத' என்றார் விழைவிற்கு இன்பந் தருவதால் தேன், அறிவிற்கு இன்பந் தருவதால் ஆன் நெய், செயலுக்கு இன்பந் தருவதால் 'கரும்பின் தெளிவு' என்றார். உயிர் - பிராணன் அன - அன்னவென்பதன் குறுக்கம். (௩அ)

ஒய்வி லாதன உவமனி லிறந்தன ஒண்மலர்த் தாள் தந்து, நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும் என்னைநன் னெறி காட்டித், தாயிலாகிய இன்னருள் புரிந்தஎன் தலைவனை நனிகாணேன், தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள் கிலேன் செழுங்கடல் புகுவேனே

உரை —அழிவில்லாதவனாய, உவமிக்கப்படும் பொருள் யாவற்றையுங் கடந்தனவாய உள்ள ஒளிமிக்க திருவடிக் கமலங் களைக் காட்டியருளி நாயென்னும் படைப்புவகையினுங் கீழ்ப்பட்ட எனக்கு நல்ல முத்திநெறியைக் காண்பித்துத் தாயிடமுண்டாகிய இரக்கத்தை யொத்த இனிய பேரருள் புரிந்த எனது நாதனை நன்கு காணப்பெறேன் (அவன் பிரிவினையுணராமையால்) நெருப்பில் வீழ்ந்திறக்க மாட்டேன், திண்ணிய மலைநின்று உருண்டு உயிர் விடேன். வளமிக்க கடலிற் பாய்வேனோ (அதுவும் செய்யேன்)

குறிப்பு :—ஓய்வு - ஒழிவு; அழிவு. உவமன் - உவமை குலம் - படைப்பு விசேடம் விசுவாசத்தில் நாயினுங் கீழெனக் குறிப்பார், நாயினுங் கடைப்படுமென்றார். ஆட்கொண்டபோது கண்டு பின் காணாமையால், 'நனிகாணேன்' என்றார். (௩௯)

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும் அதுதனை நினையாதே, மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயி

ராகித், தேனி லாகிய திருவருள் புரிந்தஎன் சிவன்நகர் புகப்போகேன், ஊனில ஆவியை ஓம்புதற் பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே.

உரை நடை —மூன்றும் அடியை முதலிலும், இரண்டாமடியைப பின்னும், முதலடியை அதன் பின்னும், நாலாம் அடியை இறுதியிலும வைத்துப் பொருள் கொள்ளுக தயிராகி - தயிராக.

உரை —தேன் போன்ற இனிமை நிலைபெற்ற திருவருள் நல்கிய எனது இன்பனுடைய வீட்டு நகரத்தினை அடைவதற்குச் செல்லமாட்டேன. (உலகிலிருப்பின்) மான்போன்ற பார்வையுடைய மாதா வஞ்சனையிடை, மத்தினிலகப்பட்ட தயிர்போலக் கலங்குமாறு, இளவேனிற்குரிய காமனது அம்பு நெஞ்சைப் பிளந்திட திங்களானது உடம்பைச சுடும். அக்கெடுதியை நினையாதே, உடம்பில் உயிரைவைதது பாதுகாத்தலாகிய (சிறிய) செயலின் பொருட்டாகவே உணவுண்டு உடையுடுத்து வாழ்ந்திருந்தேனே! ஈதென்ன அறியாமை! (௯௦)

---

௫ கைம்மாறு கொடுத்தல்

[இப்பதிகம் பதில் உபகாரம் அளிக்க இயலாமை குறிக்கும் போலும்]

இருகை யானையை ஒத்திருந் தென்உளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட(து) எவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே.

உரை நடை —வானுளோர்க் கொருவனே என்பதை முதலிற் கொள்க ஈற்றடியில் உண்ணலேகிற்றிலேன், கிற்பன் என மாற்றுக.

உரை —விண்ணவர்க்கெல்லாந் தலைவனாகிய ஒருவனே! இரண்டு துதிக்கையுடைய யானையைப்போன்றிருந்து என்னுடைய உள்ளத்தின மூலத்தை அடியேன் காணாதிருந்தேன். யான்

கண்டனுபவித்ததெல்லாம் துன்பமே (அங்ஙனமாயினும்) நீ என்னை 'வா'வென்று கட்டளையிட்டருளின நீ தரும் இன்பத்தை நுகர வல்லேனல்லேன் (துன்பத்தையே) நுகர வல்லேன்

குறிப்பு.—இருகை என்பது அறிவு, செயல் என்ற இரண்டையுங் குறிக்கும். இருகை - இருங்கை - பெரிய துதிக்கை என்று பொருள்கொள்வாருமுளர். யானை, மதத்தால், தன்னையும் பிறரையு மறியாமை போலச் செருக்கினால், என்னை மாத்திரமன்றி உன்னையும் அறியாதிருந்தேன். 'உள்ளக்கரு' என்பதற்கு உயிர்க்குயிரெனவும் பொருள் கொள்ளலாம். உயிர்த்தோற்றத்திற்குக் காரணமாய முதல்வன் என்பது கருத்து. மனம் முதலிய கருவிகள் தோன்றுதற்குக் காரணமானவனும் அவனே கருவென்பதற்குக் காரணம் என்றும், நடு என்றும் பொருள் உண்டு. நடு என்பது அந்தரியாமித்துவங் குறிக்குமெனக் கொண்டு, 'உளக்கருவை' என்பதற்கு உள்ளத்திற்குள்ளீடாயக் கலந்திருப்பதை என்று பொருள் கொள்ளுவது முண்டு துதிக்கையால் தடவி யறிதல், யானையின் தொழில் போலும். இறைவன் தன்மை, அறிவிலுஞ் செயலிலும் புலனாவது. அதனைக்காணாமைக்குக்காரணம் செருக்கே யென்பது கருத்து. நீ தரும் இன்பத்தை உண்ணவே கிற்றிலேன், (எவ்வத்தை) உண்ணவே கிற்பேன், என்று பிரித்துக் கூட்டுக. அல்லது, வருக கிற்றிலேன், உலகத்துன்பத்தை உண்ணவே கிற்பேன் என்று உரைநடை கோடலு முண்டு (௬௧)

உண்டொ ரொண்பொருள் என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண் அலி என்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே.

உரை:—(உலகிற்கு முதல்வனாகிய) ஒரு அறிவொளிப் பெரும் பொருள் உண்டென்று அறிந்து உன்னை நாடுவார்களுக்கெல்லாம் நீ பெண்ணோ, ஆணோ, அலியோ, என்று உறுதியாக அறியக்கூடாம லிருக்கின்றனை. ஆனால் அடியேனுக்கு நீ உண்மையாக இருக்கின்ற

வாறே தானே வந்து காட்சி கொடுத்தாய் உன் திருவருட் காட்சி பெற்றும் உன்னை அனுபவிக்கப் பெற்றிலேன் இது என்ன கண் மயக்கமாக இருக்கின்றது?

குறிப்பு—இறைவன் தானே வந்து தன்னியல் புணர்த்தும் வரை, அவன் மெய்த்தன்மை உயிர்கள் தாமே அறியும் தரத்தன வல்ல வென்றனர் அருளாசிரியனாய வந்த இறைவனோடு உடன் செல்லாமை பற்றி 'கண்டிலேன்' என்றார். மாயம் - தந்திரம், வியப்பு, மயக்கம். உள்ளவா - உள்ளமுறை (௪௨)

மேலை வானவ ருமறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை என்றுகொல் காண்பதே.

உரை.—மேலாகிய பதவிகளிலுள்ள கடவுளரும் அறியக் கூடாத ஒப்பற்ற திருவுருவனே! அடியேனை ஆளாகக்கொண்ட வியத்தகு செயலுடையானே, நிலவுல கானவனே, வானான வனே, (மண்ணும் விண்ணுமாய) இவைகள் தோன்றி யொடுங்கு தலை வரையறுத்து நிற்கும் கால தத்துவமானவனே, உன்னை, எந்த நாள (இனி) நான் காணுதல் கூடும்.

குறிப்பு·—மேலை - மேலாகிய இடத்திலுள்ள. இறைவன் ஆசிரிய வடிவங்கொண்டு நல்கானாயின், வானவர் அவன் மெய்த் தன்மை யறியார். ஆதலிற் 'கோலமே' என்றார். தன்னை ஆட் கொண்டது ஒருவினோதமென்பார் 'கூத்தனே' என்றார். 'ஞாலமே விசும்பே' என்பதில் படைப்புப் பொருளனைத்து மடங்கும். கால முதலிய தத்துவங்கள் இறைவன் திருமேனியாதலின், அவையாய் அவன் இருப்பதாகக் குறிப்பித்தார். (௪௩)

காண லாம்பர மேகட்(கு) இறந்ததோர்
வாள்நி லாப்பொரு ளேஇங்கோர் பார்ப்பெனப்
பாழ்ந னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.

உரை நடை :—'புலன போற்றியே' என்பதைப் 'படிறுருக் கையை' என்பதன முன் அமைகக

உரை :—(அடியாரகுக்) காணுமபடியாகிய (திருவுருவங காட்டும) மேலான தன்மையனே, கண்ணைக கடநதவொரு சோதி நிலவும (பெரும்) பொருளே, இநநிலவுலகததே, (கூட்டை விட்டு வெளிப்பட அறியாத) ஒரு பறவைக குஞ்சுபோல வீணனுகிய யான், ஐமபுலன்களைத் தாககாது தடுதது, வஞ்சவுடமையை நீதது, (மேற்சென்று) உனனைப் பொருநதும் வழியைத தெரியாதே னுயினேன் !

குறிப்பு :—பரம - மேன்மை வாள - ஒளி, அறிவு பாாப்பு- குஞ்சு - குட்டியெனப் பொருள கொணடு, குரஙகுககுட்டி தன் தாயைப் பற்றுவதுபோல உன்னை விடாதுபற்ற அறியேனென்று ரென்பாருமுளர். 'புலன்போற்றியே' என்பதற்கு ஐம்புல அவா வினை மேற்கொண்டு, எனவுங கொள்ளலாம் பாணன்-பாழநன்; வாழநன, வாணனென்றுயினுற போல. (சச)

போற்றி யென்றும புரண்டும புகழ்ந்துமின் (று)
ஆற்றல் மிக்கவன் பால்அழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளஉறுங்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே.

உரை :—காததருள்கவென்று நினைததும், நிலத்தே புரண்டு வலம் வநதும், நின்புகழ பாடியுஞ் செய்யககடவனவாகிய திருத் தொண்டிலே நிலைபெற்று, திண்மை மிகுநத பேரன்பால், உன்னைக கூவுகின்றேனில்லை. மாறேற்று வநது உன்னுடைய திருவடியினை அடையும் யமன் தன்மைபோன்ற ஒரு (மாரண்) குணமே எனது கோட்பாடாகும்.

குறிப்பு :—எதிர்-மாறு, பகை. நீயேவநது யமனை உதைத்துத் திருத்திக் கொண்டதுபோலத் திருத்தப்பெறுவதே என்னியல் புகரு ஒத்ததாம். அயராவன்பு செலுத்தகில்லேன் என்றார். (சரு)

கொள்ளுங் கில்எனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும வண்டும அறுமலாக் கொன்றையான்
நள்ளுங கீழுளு மேலுளும யாவுளும
எள்ளும எண்ணெயும போலநின்ற எநதையே.

உரை நடை —முதலடியை ஈற்றிலமைகக. 'எனை அன்பரிற் கூய்ப்பணி கொள்ளுஙகில்' என மாற்றுக.

உரை :—தேனும் வண்டும் நீங்காத கொன்றைப் பூவினை யுடையான் எப்பொருளினுள்ளும் நடுவிலும் கீழும் மேலுமாய எப் பக்கத்துமு, எள்ளிலெண்ணெய்போல வியாபித்து நின்றவனாகிய எமது அப்பன், அவனது மெய்யன்பர்போல என்னையும் வலிய அழைத்துப் பணிகொள்ளு மாறறலுடையன்.

குறிப்பு :—பேரின்பமும் இன்பத்தை நாடும் உயிருமு தன்னை விட்டகலாத ஞானமுதல்வன், எஙகும் நிறைந்து எல்லாம வல்லவ னாதலாலே, தகுதியற்ற என்னையும பணிகொள்ள வல்லவன் என்றவாறு. கொள்ளுங்கில் - கொள்ள வல்லவன் (கூகூ)

எந்தை ஆய்எம்பி ரான்மற் றும் யாவர்க்குந
தந்தை தாய்தம்பி ரான்தனக் கஃதிலான்
முநதி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே.

உரை நடை :—'முநதியென்னுள் புகுநதனன்' என்பதை ஈற்றில் அமைக்க.

உரை —எனது அப்பனும் அன்னையாயுமிருக்கும் எமது தலைவன் பிற எல்லார்க்குமே தாயும் தந்தையுமாவன், தலைவனு மாவன், தனக்குத தாய்தந்தையு மேலோனு மில்லாதவன்,சொல்லா லன்றி மனததாலும் யாவரும் அறிதற்கரிய முத்திப் பெருஞ் செல்வனாகிய (கடவுள்) (எனக்குப் பக்குவ காலம் வரு) முன்னே என் உள்ளததே (பெருங் கருணையாற்) புகுநதருளினன

குறிப்பு :—ஆய் - தாய் பிரான - எஜமானன் - தலைவன். 'முந்தி' யென்றதுபோலத் திருக்கோவையாரிலும் 'என்னை முன்னாள் ஆள் உடையான' என்றது காண்க (சஎ)

செலவு(ம) நல்குர வின்றிவிண் ணோர்புழுப
புல்வ ரம்பின்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே.

உரை —செல்வம், வறுமையென்ற வேறுபாடில்லாமல், தேவர், புழு, புல் என்ற வரையறையில்லாமல் (செல்வர்க்கும் வறியர்க்கும் தேவராய்ப் பிறந்தார்க்கும புழு புல் முதலியவற்றிற்கும்) எல்லாக்கும் அறிதற்கரிய பரம்பொருளினுடைய அளவற்ற திருவடிகளைக் காணப் பெற்றும் அவற்றைப் பிரிந்திருப்பேனாயினேன். கல்லின் இனத்தினைச சார்ந்த மனததினை யுடையேன் நுகரக் கிடந்த துன்பம் (எததனமையது பாருஙகள்.)

குறிப்பு—எப்பிறவி யெடுப்பினும், எநநலமெய்திடினும், இறைவனை அடைவது மாத்திரம் தனியே வேறாக உள்ளது, எளிதிற் கிடைக்கத்தக்கதல்ல. இறைவனது அகண்ட அறிவுஞ் செயலுமே 'எல்லையில் கழல்' எனனப்பட்டன. மனத்தைப் புறத்தே தோன்றுங் கல்லின் வேறாய ஒருவகைக் கல்லினாலாய தென்பார் 'கல்வகை மனத்தேன்' என்றார். (சஅ)

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ(று)
இட்ட அன்பரோ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே.

உரை நடை :—நான்காம் அடியை மூன்றாம் அடியி னிறுதியிலுள்ள 'ஏற்றினை' யென்பதற்கு முன் அமைத்துக்கொள்ளுக.

உரை :—பாசங்களை ஒழித்து என்னை ஆட்கொண்டு கண்கள் பார்த்து மகிழும்படியாகத் திருநீறிட்ட பேரன்பரோடு எல்லாரும்

பார்க்கும்படியாகவே, நாயனைய என்னை (உனது திருவோலக்க) மண்டபத்தில் ஏற்றுவித்தாய், அகர உகரமாகிய சிவசக்தி யியல் பறியாதேனாகிய என்னை ஏற்றுவித்தாய் (இது நீதியோ)

குறிப்பு :—பட்டி-நாய. 'நாய சிவிகை யேற்றுவித்த' என்றதுங் காண்க. திருக்கோத்தும்பி (அ). பட்டி-களவன என்பாருமுளர். எட்டு-அ. இரண்டு-உ சிலர், அ+உ-ய அதாவது ஆனமா, ஆனம நிலை யறியாதேனை என்றுரெரன்ப. இரண்டாவது ஏற்றினை-ஏறாகந் தவனே, ஏற்றினையுடையவனே என்பாரு முண்டு. (சக)

அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறிவ னாககொண் டோஎனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட(து) ஆண்டநாள்
அறிவ னோஅல்ல னோஅருள் ஈசனே.

உரை :—எல்லாம் அறியும் முற்றறிவினனே, சாவாமருந்தே, அடிமையாகிய நாயனேயேன் (நினதுரையை) அறிய வல்லவனென்று கருதியோ, என்னை ஆட்கொண்டது? ஆண்டநாள் அறிவில்லாமையையல்லவா என்பால் நீ கண்டது. (இனி யுண்மைகள்) அறிவேனோ, அறியேனோ, ஆண்டவனே அருள் செய்யவேண்டும்.

குறிப்பு :—தனது அறிவின்மையைப் பொறுக்கவேண்டுமென் பார் இவவாறு கூறினர். (ருo)

சு, அநுபோக சுத்தி

[இப்பதிகம் சிவானுபவத்தின பொருட்டு ஆன்ம சுத்தி செயதலைக குறிக்கின்றது.]

ஈச னேயென் னெமமானே எந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம பலவனே செய்வ தொன்று மறியேனே.

உரை—அரசனே, எனது தலைவனே, எமது அப்பனுகிய பெரியோனே, எனது பிறப்பினை யொழிப்பவனே, யான் யாதானு மொரு சிறு பொருளுக்கு மீடாகாது தீய நாய்த்தன்மையுடைய இழிதகைமை யுடையேனை ஆட்கொண்டருளிய உன்னை, (நன்றி யுணர்ச்சியோடு) எண்ணித் துதிக்கமாட்டேன். அது நீ அறிந்தா யன்றே? ஒளிமேனியனே, மன்றிலாடுவானே, செய்யத்தக்க வொன்றைவும் அறிகிலேன்.

குறிப்பு—எம்மான் - தலைவன். ஒவ்வோருயிருந் தனிவே றியல்புடைமையிற் பிரிதொன்றுகாதென்ற உண்மைகருதற்பாலது. பொல்லா - திருத்தமடையமாட்டாத. அருள்பெற்ற நிலைகேற்ற வாறு நடவாது கீழ்ப்பட்டமை கருதி 'நீசனேன்' என்றார் நீயே அறிவொளி கொடுத்து வியத்தகு செயல் செய்து என்னை நல்வழி யியக்கி உய்யக்கொள்ள வேண்டுமென்பார, 'தேசனே யம்பல வனே என்றார் (௬க)

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர் காணுப், பொய்யர் பெறுமபே(று) அத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா, மெய்யர் வெறியாா மலர்ப்பாதம் மேவக் கண்டுங் கேட்டிருந்தும், பொய்ய னேன்நான் உண்டுடுத்(து) இங்கிருப்ப தானேன் போரேறே.

உரை நடை—'போரேறே' என்பதை முதலிற் கொள்க. 'செய்வதறியா... ..பெறுதற்குரியேன்' என்பதை ஈற்றிற்கொள்க.

உரை:—போரில் ஆண் சிஙகத்தை யொப்பவனே, நிலையாதன வற்றிற் பற்றில்லாத உண்மை யடியார் தேன் பொருந்திய பூப்போன்ற உனது திருவடிகளைப் பொருந்தினமையைப் பார்த் தும் கேட்டிருந்தும், பொய்த்தன்மையி லீடுபட்ட யான், இந்நில வுலகத்தே (வயிறுர) உணவுகொண்டு உடையுடுத்தி (வாளா) வாழ்ந்திருப்பேனுயினேன். (ஆதலிற்) செய்யத்தக்கன வொன்று மறியாத கீழ்ப்பட்ட நாயனையேன், நினது செவ்விய பொன்னடிக்

கமலங்களைக் காணப்பெறாத பொய் வழி நிற்பார் அடையக்கூடிய துன்பப்பேறு முழுவதையும் அடைதற்குரியேன்.

குறிப்பு :—அருளாசாரோடு வந்த அடியார் அவனடி சேர்ந் தமையைக் குறிப்பித்தார். பாசப்பகையைத் தொலைக்கும் போரில், ஒப்பற்ற கடவுளாதலின், 'போரேறே' என்றார் (கு௨)

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருள்நீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ கொடியேன் உயிர்தான் உலவாதே.

உரை நடை :—'இருள்நீக்கி' என்பதை 'அருள்' என்பதனோடு கூட்டுக.

உரை :—போரில் ஏறு போன்ற பெருமானே, நீ (வீடாகிய) உனது அழகிய ஊரினின்றும் புறப்பட்டருளிக் கசசை மிஞ்சிய இளமையும் மென்மையுமுடைய நகிலினளாகிய திருவருட் சத்தி யோடு ஒருங்கு எழுந்தருளி, அடியார் ஆணவவிருளை யொழித்தருள, உன் திருவருள் பெற்ற சிறப்பு மிகுந்த அனபர்கள் நின் திருவடியை யடைதலை நேரே பார்த்திருந்தும், பார்வையற்ற ஊர்ப்பன்றிபோல இவ்வுலகிலே திரிவேனோ, தீவினையேனது ஆயுள் முற்றி ஒழி யாதோ ? என்றவாறு.

குறிப்பு :—திருவருட் சத்தியின் துணைகொண்டே பாசநீக்கம் நிகழுதலின், அம்மையோடு எழுந்தருளினமை கூறினர் உலப்பி லாத கருணையமுதம் உயிர்களுக்கீவான் முற்படும் அருளன்னை யாதலின் 'வாரேறிள மென்முலையாள' என்றார். அகண்ட நிலை கின்று அன்பர்க்கருள் செய்ய உருக்கோடலின 'பொன்னகர்வாய் போந்தருளி' என்றார். 'உயிர்' என்பது உயிர் உடலில் நிற்கும் பொழுதைச சுட்டியது. ஈற்றடியில், ஏறு - பன்றி. (குரு)

உலவாக் காலந் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான், பலமா முனிவர் நனிவாடப் பாவியேனைப்

பணிகொண்டாய், மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட் டேன் மணியே யுனைக்காண்பான், அலவா நிற்கும் அன்பி லேன் என்கொண் டெழுகேன் எம்மானே

உரை நடை :—'எம்மானே' என்பதை முதலிற் கொள்க.

உரை :—எமது தலைவனே, அளவில்லாத காலம் நற்றவங் கிடந்து உடம்பை ஒரு பொருளாகப் போற்றுது, எடுத்த இப் பிறவியிலே உன்னைக் காணும்பொருட்டுப் பல பெரிய முனிவர்கள் மிகவும் கவலுற்றுத் தளர, (அவர்க்குப் போய் அருள் புரியாது) தீவினையேனை ஆட்கொண்டருளினை அழுக்கு மிகுந்த இவ்வுடலை அழித்தொழிக்கமாட்டேன் மாணிக்கமே, உன்னைக் காண்பதற்குக் கவலையுற்று ஆசைப்படும் அன்பிலலாதேன், இனி (அன்பொழிந்த) பிற எதனைக் கருவியாகக்கொண்டு மேற்செல்லவல்லேன்?

குறிப்பு :—குரம்பை - உடல், கூடு. அலவா நிற்றல் - கவலை யுற்று ஆசைப்படுதல், அங்கலாய்த்தல். எழுகேன் - உயாவேன். அயராவன்பே, அரன்கழல் சேர்ப்பிக்கும் என்பது குறிப்பிக்கப் பட்டது. (௫௪)

மானேர் நோக்கி உமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட தேனே அமுதே கரும்பின் தெளிவே சிவனே தென்றில்லைக் கோனே உன்றன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட ஊனா புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதானேன் உடையானே.

உரை நடை :—உடையானே என்பதைக் கோனே என்பதன் பின் சேர்க்க.

உரை :—மான்போன்ற விழியுடைய உமை நங்கையை (இடப்) பாகங் கொண்டவனே, (மேல் நின்று இழிந்து) இந்நிலவுலகிலே வந்து ஆட்கொண்டருளிய தேன்போன்ற கெடாத இன்பம் அளிப்பவனே, சாவாமருந்தே, கருப்பஞ்சாறுபோலத் தித்திப் பவனே, மங்கலப் பெருமானே, அழகிய தில்லையதிபதியே, முதல் வனே, (உன்னுடைய திருவுளப்பாங்கிற் கேற்றவாறு நடந்து)

வீடளிக்கும் உன் திருவுளக் குறிப்பிற் சார்ந்தவர்கள் உன் திருவடியைக் கூடவும், யான் தசை பொருந்திய புழு நிறைந்த கூடாகிய இவ்வுடம்பை இவ்வுலகத்தே வீணே காத்திருத்தலை யுடையனானேன். (௧௫)

உடையா னேநின் றனையுள்கி யுள்ளம் உருகும் பெருங் காதல், உடையா ருடையாய நின்பாதஞ் சேரக் கண்டிங்(கு) ஊர்நாயிற், கடையா னேனெஞ் சுருகாதேன் கல்லா மனத் தேன் கசியாதேன, முடையாா புழுக்கூ டிதுகாத் திங்கிருப்ப தாக முடித்தாயே.

உரை.—முதல்வனே, உன்னை முழுவதும் நினைந்து உயிர் கனியத்தக்க பேரன்புடைய அடியார்களைச் சிறப்பாக உடையவனே, அவர்கள் உன் திருவடிகூடப் பார்த்திருந்தும், ஊரில் (ஆதரவின்றி) அலைகின்ற நாயினும் கீழ்ப்பட்டேன், மனமுருக வல்லேனல்லேன், உன்னை யடையும் நெறியை யறியா மனத்தினேன். அல்லது கல்லின் தன்மை யடைகின்ற நெஞ்சினேன். (அதனால் வருந்தி) அழமாட்டேன் ஆதலால், நாற்றம் நிறைந்த புழுக்கூடாகிய இவ்வுடம்பை நான் காத்திருப்பதே பொருத்தமெனக்கருதி அவ்வாறு முடிவுசெய்து விட்டனையே

குறிப்பு.—ஊர்நாய், திரிந்து அற்பப் பயனுவது கொள்ளும். அதுவுமின்றி வறிதே திரிதலின், அதனினும் கடையன் என்றார். (௧௬)

முடித்த வாறும் என்றனக்கே தக்க தேமுன் னடியாரைப், பிடித்தவா றுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்தி வாய், துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறும் முகங் குறுவேர் பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

உரை நடை.—முதலிரண்டடியில், முன் அடியாரைச் சோராமற் பிடித்தவாறும் என்றனக்கே முடித்தவாறும் தக்கதே, என அமைக்க

உரை —உன்னை நாடிய மெய்யடியாரை நீ தளரவிடாமற் பற்றிக்கொண்டதும் (கள்வனேனாகிய) என்னை இங்கே (உடல் காத்திருக்க) முடிவு செய்ததும் தக்கனவே (உலகப்பற்றி வீடு பட்ட) வஞ்சனேன் இங்கே மாயா சத்தியாகிய பெண்ணின் இதழ்த் துடிப்பும், ஒரு சிறிது சேர்ந்த ஆடைக்களைவும், முகச்சிறு வியர்வின் தோற்றமும் நிகழ்ந்த முறையில் அவற்றி வீடுபட்டு உலகவுணர்ச்சி யெய்தி எனக்கே நீங்கு இழைக்கக் கருதிக்கொண்டேன்.

குறிப்பு :—முன் - நாடிய முன் அடியார் - வினைத்தொகை. இறை-மிகச் சிறிய அளவு பொடித்தல் - தோன்றுதல். துகில் - ஆடை வாய்த்துடியாற் சொல்லும், ஆடைக் களைவால் உடம்பும், உள்ளத்தின் நிலைகாட்டும் முக வியர்வையால் மனமும் உலக நிகழ்ச்சிகளி லழுந்தி ஈடுபட்டதெனக் குறித்தவாறும். இறை பற் றுடையார்க்கு வீடும், உலகப் பற்றுடையார்க்கு உடம்பில் நிலைப்பும் அருளியது பொருத்த மென்றார். உலக வாதனை, உயிரறிவைக் கவாதல் கூடுமாதலின், பெண்ணின் மயலவினை செய்கைகளின் வைத்து அதனை விளக்குவா ராயினார். இவ்வாறு கொள்ளாது, ஒரு பெண்ணினைக் கண்டு அடிகள் மோகமுற்றா ரெனபது, அத்துணை பொருந்தாமை யறிக. பெண்டிரைக் கூறு மிடத்துப் பன்மையாகக் கூறினமையும், இங்கே 'ஒருத்தி' என்ற தும் உற்று நோக்குக. அவள் செயல்களை உணர்ந்தமையே கேடென்றாரே யொழிய, உணர்ந்து, பின்வேறு செயலாகிய கேடு சூழ்ந்தன ரெனக் கருதற்க. கடவுள் ஒருபுறமும் உடம்புபற்றி நிகழும் பிராரத்த வாதனை யொருபுறமும் இழுப்பப், பின்னதை விட்டு முன்னதைப் பற்றாமையே அடிகள் தன்குற்றமென்றாரென உய்த்துணர்க. (௯எ)

தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை யொளியைத்
தெளிந்தார்தம்,ஊனை யுருக்கு முடையானை உம்பர் ஆனை வம்
பனேன், நானின் னடியேன் நீயென்னை யாண்டா யென்றால்
அடியேற்குத், தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மையாம்
என் றன்மையே

உரை:—தேன்போன்ற இனிமையும் பால்போன்ற தூய்மையும் கரும்பின்சாறுபோன்ற அருட்செயலும்உடைய சோதியைஅறிவின் கண் தெளிந்த அடியார்களுடைய உள்ளமேயன்றி உடம்பையும் உருகுவிக்கும் முதல்வனே, (வேண்டியதெல்லாம் எளிதின் ஈயும் விண்பசுவாகிய) காமதேனுவொப்பானை நோக்கி, வீணனேனாகிய நான் உன் அடியேனை, நீ என்னை ஆட்கொண்டாயென்றுசெப்பினால் அடியேனைப் பார்த்து, அப்படியா, நல்லது என்று அவன் இகழ்ந்து நகையாடி யருளுதற் குரிய இயல்பே என்னியல் பாயிற்று.

குறிப்பு —தன்னை மெய்யடியனாக இறைவன் ஏற்றுக்கொள் ளத் தகுதியில்லை எனினும், அவன் நகையாடுவதும தமக்கு ஒரு ஆறுதல் என்று குறிப்பித்தவாறு காண்க (௫அ)

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மையேனை ஆண்(டு) ஐயா புறமே போக விடுவாயோ
என்னை நோக்குவாரயாரே என்நான்செய்கேன்எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனியெந்தாய் எங்குப் புகுவேனே.

உரை —(அன்பரன்றி) மற்றையோரா லறியப்படாத இயல் புடைய தலைவனே, தீயநாய்போன்ற சிறியேனை ஆட்கொண்டு, ஐயனே, உன் அருளுக்குப் புறமபாகச் செல்ல விட்டுவிடுவையோ? அங்ஙனமாயின், அடியேனைக் கண்பாரப்பார் வேறு யாவர்? எமது பெரியோனே, நான் என்னசெய்ய மாட்டுவேன்? (மாறிலாத) பொன்போல் விளங்கும் அழகிய திருவுருவ முடையவனே, எந்தையே, நான் எங்கே அடைக்கலம் புகுவேன்?

குறிப்பு:—தலைவனே, உனக்கே மீளாவடிமை. தூய அரு ளொளி யுடையானே பிழைபொறுப்பதுன் கடன். பெரியோனே, நீயே கண்பார்க்க வேண்டும். உனக்கே அடைக்கலம் என்று அடிகள் செப்பியவை, உருக்கத்தின் தலைநின்றவை. (௫௯)

புகுவேன் எனதே நின்பாதம் போற்றும் அடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோள்நோக்கி நாண மில்லா நாயினேன்

நெருமன் பில்லை நினைக்காண நீயாண் டருள அடியேனுந்
தகுவ னேயென் தன்மை மயே எநதாய் அந்தோ தரியேனே

உரை நடை —பண்டு, போற்றும் அடியாருள் நின்று நாண மிலலா நாயினேன் நகுவேன். நினைக்காண நெகுமன்பில்லை. நீ ஆணடருள அடியேனுந தகுவனே எநதாய், என்றன்மையே அநதோ! தரியேன். நினபாதம எனதே புகுவேன்

உரை —நீ காட்சி கொடுதத முனனாளிலே, உன்னை வணங்குமம அன்பர் நடுவே நினறு வெட்கமிலலாத நாய்போன்ற யான், நினது திருததோளகளை நோக்கி நகையாட லொன்றுமே யுடையனா யிருந்தேனை உன திருவருட் காட்சி பெறுதற்குரிய உளளம் உருககும் அன்பு என்னிடமிருநததிலலை அஙஙனமாயின், நீ ஆட்கொண்டருளுந தகுதியுடையேன ஆயினேனா? எநதையே, என் னியல்பு இருநதவாறென்னே! ஐயா, அன்பற்ற என்னியல்பை நான் பொறுககமாட்டேன். நீ ஆண்டமையால், நின்பாதம, எனக்கு உரியதே நான் அதனகண் அடைக்கலம புகுவேன்

ஆற்றுமை ஆற்றுவ தொன்றனைப்பற்றும என்பதற்கீடாக இத திருப்பாட்டு அமைநதிருத்தல் காண்க. (சுO)

எ. காருணியத்திரங்கல்

[இப்பதிகம் கருணையாலே இரஙகும்படி இறைவனை வேண்டுவதைக் குறிப்பது.]

தரிக்கிலேன் காய வாழ்க்கை சஙகரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி யொப்பில்
ஒருததனே போற்றி உம்பர் தமபிரான் போற்றி தில்லை
நிருததனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி.

உரை நடை —காயவாழககை தரிக்கிலேன், எனமாற்றுக.

உரை :—இவவுடம்போடு வாழ்ந்திருததலைப் பொறுக்க முடியவில்லை. சுகத்தைக் கொடுப்பவனே, காத்தருள்க. சிதாகாயத்தில்

உறையும் பழையோனே, காததருள்க. அடியேஙகளுடைய அண ணலே, காத்தருள்க. ஒப்பற்ற ஒருவனே, காத்தருளக வானவர் தலைவனே, காத்தருள்க. தில்லைமன்றில் நடமாடுவானே, காக்க. எஙகள் தூயோனே, காக்க. காக்க.

குறிப்பு —போற்றி யென்பதற்கு வணக்கமெனவும், காக்க வெனவும் பொருள் கொள்ளலாம். விடலை - ஆணமகன். (௬௧)

போற்றியோ(ம்)நமச் சிவாய புயங்கனே மயஙகு கின்றேன்
போற்றி யோ(ம்)நமச் சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றி யோ(ம)நமச் சிவாய புறமெனப் போக்கல்கண்டாய்
போற்றி யோ(ம)நமச் சிவாய சயசய போற்றி போற்றி

உரை —ஓம் நமசிவாய. (அதாவது ஓம், சிவனுக்கு வணக கம்) பாம்பணிநதவனே, அடியேன் திகைப்புறுகின்றேன். காத் தருள்க. ஓம் நமசிவாய, அடியேனுக்கு நின்னையொழியத் தஞ்ச மான இடம வேறியாதுமில்லை காத்தருள்க ஓம நமசிவாய, அடியேனைப் புறம்பே போகவிடாதே காத்திடுக, ஓம நமசிவாய, காத்தருளக. நின் வெற்றி ஓஙகுக. வணக்கம், வணககம

குறிப்பு —'நமசிவாய' என்பதற்கு நமசிவாயனே எனப் பொருள் கொள்வாருமுளர். அஙஙனமாயின், ஓ, நமசிவாயனே என்று கூறுவதாகக கருதவேண்டும். கண்டாய, அசை, போக் காதே என்பதை வற்புறுத்துவது. இருவினையை வெல்வதால், இருமுறை வெற்றி யென்றனா. வெற்றி யிருமுறையாகவே, வணக்கமும் இருமுறையாயிற்று (௬௨)

போற்றியென்போலும் பொய்யர் தம்மை ஆட்கொள்ளும் வள்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி [ளல்
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனம்நீர் தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவு ளானே

உரை —என்னைப்போலும் நிலையாதவற்றிற பற்றுடையவர் களையும ஆட்கொணடருளும் ஈகை மிகக பெருந்தகையே உனக்கு

வணக்கம். உனது திருவடிக்கு வணக்கம தலைவனே வணக்கம், வணக்கம நிலம், நீர், நெருப்பு, காற்று, வான், உயிர், ஞாயிறு, திங்கள் என்ற இரு சுடராகிய எட்டினையும வடிவாகக்கொண்டு, அவையாகிய கடவுட்டன்மை யுடையவனே உனது அருள் வெள்ளமாகிய புதிய தேனின் பொருட்டு உனக்கு வணக்கம். (உனது அருள் வெள்ளமாகிய - புதிய தேன் எம்மைக் காக்க) என்றவாறு.

குறிப்பு —இயமானன் - உயிர். புவனம - பிருதுவி. வள்ளல் - வரையாது கொடுப்போன். கூறிய எட்டையும், அட்ட மூர்த்தமெனப பொய்யர்க்கும் மெய்யர்க்கும அருள் வழங்குதலால் 'வள்ளல்' என்றார். 'நின்கருணை வெள்ளப் புதுமது போற்றி' என்பதை இறுதியிற் கொள்க. (சுரு)

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளுபோற்றி
விடவுளே உருக்கி யென்னை ஆண்டிட வேண்டும போற்றி
உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி

உரை —மனமமொழி மெய்களைக் கடந்த பெருமானே வணக்கம அடியேனைக் கண்பார்த்து இரங்குக, வணக்கம. (உலகப் பற்றை) விடுதற்கு, என் உள்ளத்தை அன்பால் உருகுவித்து என்னை அடிமைகொண்டிட வேண்டுகிறேன், வணக்கம இந்த உடலினை நீக்கி விரைவாக வீட்டினைக் கொடுத்தருள்க. வணக்கம. (உலகாக்கிரங்கிக் கங்கையானது உலகை அழிக்கவொட்டாமல்) சடையின் கண்ணே கங்கையை ஏற்றமைத்துக் கொண்ட இன்ப வள்ளலே வணக்கம், வணக்கம.

குறிப்பு —'கடவுளே' என்பதற்கு, காணப்பட்ட எல்லாவற்றையுங் கடந்த பொருளே யென்றுங் கூறலாம் புறக்கணியாது போற்ற வேண்டுமென்பார், 'கண்டு கொண்டருளு' என்றார். ஒல்லை - விரைவாக. உம்பர்—மேலிடம - முத்தி கங்கையைத் தடுத்தமைபோல, துன்ப வெள்ளத்தைத் தடை செய்தருளுக, என்றவாறு (சுசு)

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற்செவ்வாய் வெண்ணகைக் கரியவாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவ்வாழ்வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட்டேனே.

உரை:—சுகங்கொடுப்பவனே வணக்கம். (நின்னைத் தவிர) வேறு புகல் இல்லாதேன், வணக்கம். சீற்றங்கொண்ட பாம்பின் அழகிய படத்தை யொத்த நிதம்பத்தையும், சிவந்த இதழையும், வெள்ளிய பல்லினையும், ஒளியுடைய கருங்கண்ணையும் உடைய மங்கைப் பருவத்தினளாய உமையைப் பாகமாக உடையவனே, வணக்கம். அரியைக் காளை வாகனமாக உடையவனே, வணக்கம். இவ்வுலகிலே இவ்வாழ்க்கையை நான் பொறுக்க இயலாதேன், எம்பெருமானே, (இதனை) அருவருத்து விட்டேன்.

குறிப்பு—சரண் - புகலிடம். சீற்றங்கொண்ட காலையே பாம்பு படமெடுத்தலின், 'பொங்கரா' என்றார் படத்தையே அல்குலுக்கு உவமையாகக் கொண்டார். அல்குலென்பது, மறைவிடத்துக்கு மேற்பட்ட உடற்பகுதி. 'வாட்கண்' என்பதற்கு வாள் போன்ற கண் என்பாருமுளர். (சுரு)

இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை யாளுடைய பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கையெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பி ரானே

உரை:—யானே என்னை (மிகவும்) வெறுத்துவிட்டேன், அல்லது கீழ்ப்படுத்திவிட்டேன், எமது வள்ளலே, வணக்கம், வணக்கம். உன்னை யான் குறை கூறேன். அடியேனை அடிமையாகவுடைய திருவடிக்கு வணக்கம். இயற்றிய தவறுகளையெல்லாம் மன்னித்தல், பெரியவர்கள் கடப்பாடாகும். (ஆதலால், பெரிய நீ சிறிய என் பிழையெல்லாம் பொறுத்தருள்க.) காத்தருள்க வீட்டுலகின் எமது தலைவனே, இந்த வாழ்க்கையை (விரைவில) தொலைத்தருள்க. வணக்கம்.

குறிப்பு—உம்பர் - வானுலகமென்பாருமுளர். (சுசு)

எம்பிரானை போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பா ரொளி மருங்குல் மங்கை கூறவெண் ணீறபோற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி

உரை:—எமது வள்ளலே, வணக்கம். வானுலகிலுள்ள பல தேவர்களுள் அவ்வவர்க்குத் தக்கவாறு அருளுஞ் சிங்கமே, வணக்கம். கொடிபோன்ற இடையுடைய மாதினை ஒருபாகமுடையவனே, திருவெண்ணீறுடையாய், வணக்கம், செம்மேனியுடைய பெருமானே, வணக்கம். அழகிய தில்லைஞானப் பொதுவினையுடையாய், வணக்கம். வீடுடையானே வணக்கம். என்னை அடிமையாகவுடைய ஒப்பற்றவனே, வணக்கம். (கஎ)

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே

உரை: (கடவுளாகிய) ஒருத்தனே வணக்கம். தனக்கு யாரும் நிகரில்லாத தந்தையே வணக்கம். தேவருடைய பரமாசாரியனே, வணக்கம். அடியேங்களுடைய இளமைச் செவ்வி நிறைந்த சோதியே வணக்கம். 'இங்கே வா' என்று அடியேனை உன்னிடம் நீ அழைத்து ஏற்றுக்கொள்ளவேண்டும். (ஐயா) வணக்கம். (ஆதரவு யாதுமின்றித்) தனிப்பட்ட எனது துணையின்மையை யொழித்து உன்னுடைய திருவடி(த் துணை)யைக் கொடுத்தருள்க. வணக்கம்.

குறிப்பு:—தேவர் குருவாதல், 'திருமால் இந்திரன் பிரமன் உபமனியன் தபனன் நந்தி செவ்வேளாதித் தருமமுது குரவருக்குந் தனதருளாலாசிரியத் தலைமை நல்கி' என்றமையாலறிக. என்றும் மாறாத எழிலுடைமைபற்றி 'கோமளக் கொழுந்தே' என்றார். கொழுந்து - சோதி. 'தமியனேன் தனிமை தீர்த்தே நின்பாதம் தருகபோற்றி' என மாற்றுக. (கஅ)

தீர்ந்த அன்பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மையாட் கொண் டருளிடும்பெருமைபோற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி

உரை —முடிந்த அன்புருவமாய அடியாரிடத்தே அவரைப் பார்க்கிலும் மிகுந்த அன்புடையவனே, வணக்கம். எனது பொய்ம்மையை நீக்கியும் என்னை அடிமையாகக் கொண்டருள் செய்யும் பெருந்தன்மையனே, வணக்கம் (பாற்கடலில்) பெருகிய விடத்தை உண்டு, விண்ணவர்க்கு அமுதத்தைக் கொடுத்த பேருதவியாளனே, வணக்கம். எங்கும் நிறைந்த நினது திருவடிகளை நாயனைய எனக்கு ஈந்திட வேண்டுகிறேன், (ஐய) வணக்கம்.

குறிப்பு —தீர்ந்த, என்றது மிக மேலாகிய, சத்திநிபாதத் துத்தமர்களுடைய உயர்ந்த, பயன் கருதாத, பேரன்பை. அன்பர்க்கு அன்பே முடிந்த கருவியும் பயனுமாம் இரண்டாம் அடியில், என் பொய்ம்மையைப் பேர்ந்தும், என உரை நடை கொள்க. பெயர்த்தும் - பெயர்ந்தும். வார்ந்த - நீண்ட, பெருகிய. அயின்று - உண்டு. ஈவள்ளல் - ஈந்தவள்ளல் - வினைத்தொகை. ஆர்ந்த - நிறைந்த. (௬௧)

போற்றியிப் புவனம் நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்றம் இல்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாயீ றின்மையானாய்
போற்றிஐம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

உரை.—இந்த நிலம், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐம்பூதத்தினுங் கலந்து அவையானவனே, வணக்கம். எல்லா உயிர்களும் பிறத்தற்குக் காரணமாகி, நீ பிறப்பில்லாதாய், உனக்கு வணக்கம். எல்லா உயிர்களும் ஒடுங்கு முடிவிடமாய, நீ முடிவில்லாதாய், உனக்கு வணக்கம். ஐம்புல ஆசை உன்னை (இயல்பாகவே) அடையாத மாயமுடையவனே, உனக்கு வணக்கம்.

குறிப்பு :—வான், பிற பூதங்களினும் நுட்பமாய், அவற்றிற்கு இடங்கொடுத்தலின், அதனை 'ஓடு' என்பது கொடுத்து வேறு பிரித்தனர். பிறப்புகளுக் காரணமாய உடல், அககருவிகள், உலகம், நுகர்பொருள் என்பன தோற்றுதற்கிடமாய மாயையோடு அத்துவிதமாய்ச் சிவ சத்தி கலந்து எல்லாவற்றையுந் தோற்றுவித்தலின் 'தோற்றம் ஆகி' என்றார். ஒடுக்கஞ் செய்வானை 'ஈறு' என்றார் சிவஞானபோத முதற்சூத்திரத்துள் சங்காரக் கடவுளை 'அந்தம்' என்றதுபோல. புணர்க்கை-மாயம், சேர்க்கை. 'புணர்க்கையானே' என்பதற்குக் கலப்பு என்ற பொருளில், 'தொடக்குற்று எல்லாவற்றிலுங் கலந்திருப்பவனே' என்றும் பொருள் கொள்ளலாம் (எ0)

ஆனந்தத் தழுந்தல்

புணர்ப்ப தொக்க எந்தை யென்னை யாண்டுபூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்றபோது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்க ழற்கணே [தாம
புணர்ப்ப தாக அங்கணாள புங்கமான போகமே.

உரை நடை .—அங்கணாள, புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டு பூண நோக்கினாய் நின்னொடு என்னொடு இது புணர்ப்பதன்று என்றபோது இது என்னாம்? இது அன்றாக, அன்பு நின்கழற்கணே புணர்ப்பதாக, புங்கமான போகமே (நின்னொடு) புணர்ப்பதாக.

உரை :—அழகிய கண்ணாளனே, நீ ஞானாசாரியனாயெழுந்தருளி வந்து அருள் புரிதற்குரிய பக்குவம் ஒத்துவர, என் அப்பனே, என்னை ஆட்கொண்டு, (நான் உன்னை) அடையும்படி திருவருட் பார்வை நல்கினாய். நின்னோடு என்னை இவ்வுடம்பானது இணைக்குவதன்று என்றறிந்தபோது, இதனால் என்ன பயன்? இது ஒழிவதாக. நின் திருவடிக் கண்ணே, அன்பானது என்னைச் சேர்ப்பதாக. உயர்ந்த சிவானந்த போகமானது, என்னை நின்னொடு பொருத்துவதாக.

குறிப்பு :—கண்ணாளன் - கணவன், தோழன். பூண - அடைய. புங்கம் - உயர்வு. என்னோடு - என்னை - உருபுமயக்கம். (எக)

போகம வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலிணை யலாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை ஆற தாக ஐயனே

உரை நடை :—'புரந்தராதி யின்பமும் வேண்டிலேன்' என மாற்றுக. 'ஐயனே' என்பதை 'ஆகம் விண்டு' என்பதன் முன் கொள்க. 'என் கை' என்பதைக் 'குஞ்சி' என்பதன் முன் கொள்க.

உரை :—சிவபோகத்தை விரும்பி இந்திரன் முதலிய இறையவர் பதவிக்குரிய இன்பங்களை விரும்பிற்றிலேன். ஒருவனே, எனது தலைவனே, உன் திருவடி யிரண்டுமன்றி வேறு யாதுந் துணையில்லேன். அப்பனே, உடம்பு (புளியம்பழத்து ஓடுபோல) என்னின் வேறாகப்பெற்று, நடுநடுங்க, எனது கைகள் சிரமீது கும்பிடுந் தொழிற்கண்ணே பொருந்துக. கண்களின் நின்று விழும் நீரொழுகு ஆறாகப் பெருகுவதாக.

குறிப்பு .—'போகம் வேண்டி' என்பதற்கு உலக போகங்களை விரும்பி என்றும் பொருள் கொள்வர். ஏக என்பதற்கு செல்வதற்கு எனவும் பொருள் கொண்டு, நின்கழலிணையன்றிச் செல்வதற்கு வேறிடமில்லேன் என்று முரைப்பர். விண்டு - வேறுபட்டு. கம்பம் - நடுக்கம். வந்து - வர. குஞ்சி - ஆண் தலைமயிர். தாரை - ஒழுங்கு. (எஉ)

ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்மை யேனென் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே

உரை நடை :—'அன்பரன்பு பொய்மையேன் எனக்கும் வந்து ஆகவேண்டுமே' என உரை நடை கொள்க.

உரை —ஐயனே, உன்னுடைய ஆதரவன்றி, வேறொரு ஆதரவு இல்லை. அப்படியிருந்தும் கள்வனேன் பொய்யினைச் சேர்ந்திருப்பதன்றிப் பிறிதில்லை. என் தலைவனே, மைதீட்டிய கண்ணையுடைய அம்மைபாகனே, நின் திருவடிக்கண்ணே மெய்மையைச சார்ந்த அன்பர்களுடைய அன்பு பொய்ம்மையுடையேனாகிய எனக்கும் வந்து அமைதலை வேண்டுகின்றேன் (எங)

வேண்டுமநின்க ழற்கண் அன்புபொய்ம்மை தீர்த்துமெய்ம
ஆண்டுகொண்டு நாயி னேனை ஆவ என்ற ருளுநீ [மையே
பூண்டு கொண்டடிய னேனும் போற்றி போற்றி யென்று மென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே

உரை நடை :—'மன்ன' என்பதை முதலிலும், 'அன்பு நின் கழற்கண் வேண்டும்' என்பதை யிறுதியிலுங் கொள்க.

உரை :—அரசனே, பொய்யினை நீக்கி உண்மையாகவே ஆட்கொண்டருளி நாயினையேனுக்கு ஐயோ என்றிரங்கியருளுக. உன் திருவடிகளைச் சென்னி மேற்கொண்டு, கடையேனாகிய யானும் வணக்கம் வணக்கம என்று எப்போதுஞ்சொல்லிப் (பிறவிவரினும்) இறந்திறந்து மீட்டும் மீட்டும உன்னையே வணங்குதற்கு உன் திருவடிக்கண் (அயரா) அன்பினை வேண்டுகின்றேன்.

குறிப்பு :—ஆவ, இரக்கக் குறிப்பு. ஐயோ என்றிரங்கியருளுகின்ற என்றும் கொள்ளலாம். (எச)

வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேதம்நான்கும் ஓலமிட்
டுணங்கு நின்னை எய்த லுற்று மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க என்கொலோ நினைப்பதே.

உரை நடை :—'மங்கைபங்க', 'மற்றொருண்மையின்மையின்' என்பவற்றை முதலிற்கொள்க. நின்னை எய்தலுற்று உணங்கும் என மாற்றுக.

உரை :—நெருங்கிய நகில்களையுடைய மாதினை யொருபாக முடையவனே, உன்னையன்றி வேறொரு மெய்ப்பொருள் இல்லாமையால், மண்ணுலகமும் விண்ணுலகமும் உன்னை அடையவிரும்பி வழிபடுகின்றன. மறைகள் நான்கும் (உன்னைக்காண) ஓலமிட்டுக் காணப்பெறாமையால் வாடுகின்றன. அடியேங்களாகிய நாங்களும் "உன்னை வணங்கி விடமாட்டோம்" என்று கூறவும், நீ (வெளிப் போந்தருள் செய்தற்குத் தடையாக) யாதினை நினைக்கின்றாய். (அவ்வாறு நினையாது) இணங்குவாயாக.

குறிப்பு :—'இணங்கு' என்பதைக் கொங்கை என்பதோடு கூட்டுதல் ஒரு முறை. 'அருளுதற்கு' என்பதோடு கூட்டிப் பொருளுரைப்பதுண்டு. 'மற்றொருண்மை யின்மையின் என்கொலோ நினைப்பதே' என இயைத்து, வேறு மெய்ப்பொருளின்மையின், நின்னைத் தவிர எதனை நாங்கள் நினைப்பது, என்றுங் கூறுப. (௭௫)

நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினால்
தினைத்தனையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத்துலகு மாய நின்னை ஐம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெனைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே

உரை :—நின்னை மனம் நினைத்தறிவதற்காக மேற்பட்டுச் செல்லும். அது செல்லும் அளவைப் பொருந்துவதற்கு, சொல்லினால் ஒரு சிறிதும் கூடவில்லை. சொல்லக்கூடியவை யெல்லாம், காதினாற் கேட்கப்பட்டனவே. எல்லா வுலகமுமான உன்னை மெய்யின் கணுள்ள ஐம்பொறியறிவுகள் அறியமாட்டா. எமது தந்தையாகிய நின்னுடைய திருவடியை அடைய அது எவ்வெவ்வளவினதோ, எவ்விடத்துள்ளதோ தெரிகிலேன்.

குறிப்பு :—தினை - சிற்றளவிற்கு அறிகுறி. உலகினில் இறைவன் கலந்திருந்தாலும், அவன் தன்னைக் காட்டினாலொழிய அறியக்கூடாமையின், 'ஐம்புலன்கள் காண்கிலா' என்றார். அசுத்தமாயையும் சுத்தமாயையுங் கடந்து நின்றமையால், 'எனைத் தெனைத்து' என்றார் போலும். (௭௬)

எய்த லாவ தென்று நின்னை எமபி ரானில் வஞ்சனேற்(கு)
உய்த லாவ துன்கண் அன்றி மற்றொ ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்(கு)
ஈத லாது நின்கண் ஒன்றும் வண்ண மில்லை ஈசனே.

உரை நடை :—'ஈசனே' என்பதை மூன்றாம் அடியின் தொடக்கத்திற் கொண்டு பொருள் கூறுக.

உரை :—எம்பெருமானே, உன்னை அடைதலாதல் எப்போது? இக்கள்வன் ஆகிய எனக்கு உன்னிடமன்றி உய்யும் வழிக்கு வேறொரு மெய்மமை இல்லாமையால், ஆண்டவனே சிறுவனென்று கருதிப் பாவியேனைக் காப்பாற்றி எனக்கு இரங்கியருள்க. (நீ இரங்கியருள்கின்ற) இச்செயலன்றி, உன்பால் வந்து ஒன்றாகும் வழி வேறில்லை.

குறிப்பு :—பைதல் - குழந்தை, சிறுவன். ஒன்றும் வண்ணம் - ஒன்று சேரும் விதம். (எஎ)

ஈச னேநீ அல்ல தில்லை இங்கும் அங்கும் என்பதும்
பேசி னேனோர் பேத மின்மை பேதை யேன்என் எம்பிரான்
நீச னேனை ஆண்டு கொண்ட நின்ம லாவோர் நின்னலால்
தேச னேயோர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே.

உரை நடை :—'எம்பிரான்' என்பதை முதலிற் கொள்க. 'பேதமின்மை, பேதையேன்' என்பதை இரண்டாம் அடியின் முதற்கண் கொள்க.

உரை :—எமது தலைவனே, ஆண்டவனே, இகத்திலும் பரத்திலும் உன்னையன்றி யாதும் இல்லையென்பதும், நீ வேறுபாடின்றி யாண்டுங் கலந்துள்ளாய் என்பதும், அறிவில்லாத யான் எடுத்துரைத்தேன். (உரைத்தலாற்) பயன் என்ன? புலையனேனை ஆட்கொண்ட மாசற்றவனே, ஒளியானவனே, ஒப்பற்ற உன்னையல்லாமல், பிறிதொரு கடவுள் உண்டென்பதை எனது மனம் நினைக்க மாட்டாது. (எஅ)

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரில் ஐம்பு லன்களான்
மூந்தை யான காலம நின்னை எய்தி டாத மூர்க்கனேன் [ன்
வெந்(து)ஐயா விழுந்திலேன் என் உள்ளம் வெள்கி விண்டிலே
எநதை யாய நின்னை யின்னம் எய்தலுற் றிருப்பனே

உரை நடை :—'மூநதையான காலம' என்பதை முதலிற் கொள்க.

உரை :—(நீ என்னை ஆட்கொண்ட) முன்னாகிய காலத்திலே, மனம். வாக்கு, செயல், உலகக் கேள்வி, நயமில்லாத ஐம்புலன்கள் முதலிய தடைகளினாலே உன்னை அடைந்திடாத மூடனேன் அக்காலத்திலேயே உடல் தீயிற் பொருந்தப்பெற்று இறந்து வீழ்ந்தேனில்லை. மனம் நாணி, (நாணமிகுதியால்) இறந்தேனில்லை. எமது அப்பனாகிய உன்னை இன்னுங்கூட வந்தடையாது, அடையக் கருதி இருக்கிறுப்பேனாயினேன். (இது எவ்வளவு பரிதாபம்?)

குறிப்பு :—சிந்தை முதலியன. மாயாகாரியங்களாய்த் தடை விளைத்தன என்பதே கருத்து. அவை கருவியாகாமை தெளிக. அடிகளின் தீவிர பக்குவங் குறிப்பது இச்செய்யுள் (எக)

இரும்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு கொண்ட நின்னதாட்
கரும்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டு யானு முண்டி ருந்த துண்டதாயினும்
விருப்பு முண்டு நின்கண் என்கண் என்ப தென் அறிச்சையே.

உரை :—இரும்புபோலக் கடுமையான மனமுடைய கள்வனேனை ஆட்கொண்டருளிய நின்னுடைய திருவடியிலெழுங் கரும்புத்தேன் என்னை விழுங்கி உடன் கலந்துசெல்லவும (உடனே உடல் விடுதற்கு) நெருப்பிருந்தது, அடியேனும் உணவு கொண்டு உலகிலிருந்ததுண்டு எனினும, (நெருப்பில் உடலை நீத்து உன்னை அடையாத நான்) என்னிடத்தில் உன்பால் அன்பு முண்டென்று கூறுதல் என் அறிமாமையே.

குறிப்பு :—உடம்பு நிலைத்தற்குக் காரணமாய உலகப்பற் றிருப்பதாகக் கருதித் தம்மை 'வஞ்சனேன்' என்றார். கருப்பு மட்டு - கருப்பஞ்சாறு அது வாயமடுத்தமை திருவண்டப் பகுதி யிற் காண்க (அ0)

கூ ஆனந்த பரவசம்

விச்சுக் கேடுபொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் தாள் சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா என்நான் செய்கேன் பேசாயே

உரை நடை :—'பொய்க்கு விச்சுக்கேடு ஆகா' என மாற்றுக 'ஆரூர் எமபிச்சைத் தேவா' என்பதை மூன்றும் அடியின் முதலிற் கொள்க.

உரை :—பொய்யானது (உலகத்திலே நிலை பெறுவதற் கில்லாது) அதன் வித்துக் கெட்டொழிதல் கூடாதென்பதற்காகப் (பொய்யனேனாகிய) என்னை இவ்வுலகத்தே இருத்தினாய். உன் விருப்பத்திற்கு ஒத்தவாக ளெல்லாரும்போய் உன் திருவடியை அடைந்தார்கள் திருவாரூரில் வீற்றிருக்கும் எமது ஐயங்கொள் பிரானே, நான் பயத்தாலே அழுந்துகின்றேன். நான் (உய் வதற்கு) யாது செய்வேன், கூறியருள்வாயாக.

குறிப்பு :—ஆரூராகிய இதயத்திலுறையும் பிச்சைத் தேவா, எனக்கு அருட்பிச்சைபோடு என்று குறிப்பித்தவாறு காண்க. விச்சு - வித்து. பொய்க்கு - பொய்யின் - உருபு மயக்கம். (அக)

பேசப் பட்டேன் நின்னடி யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல ரால்உன் அடியானென்(று)
ஏசப் பட்டேன் இனிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன் அடியேனே.

உரை :—உனது அடியாருள் ஒருவனாகப் பெரியோரால் எடுத் துரைக்கப்பட்டேன். (அருட்பேற்றிற்கு அறிகுறியாகிய) திருநீறே

பூசுதலைப் பொருந்தினேன். உலகரால், (என் அமைசசு நிலைமாறி) உனது அடியானாயினேனென்று இகழப்பட்டேன். இனி இவ் வுலகிற் பொருந்தி யிருத்தல், பொருநதாது. (வீட்டைய) ஆசைப் பட்டேன். உனககடிமையானேன். இனி (உன்னடியானா யிருப்ப தன்றிப் பிறர்க்குரியனாகேன்) ஆதலால், எப்படியும உன்னடி யேனை, (நீ காத்திடவேண்டும்) என்றவாறு.

குறிப்பு:—பெரியோர் பேச, உலகர் ஏசினமை கூறினர். படுகின்றது - உலகிற் பொருந்துகின்றது. அமையாது - பொருந தாது. ஆல் - அசை. (அஉ)

அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை ஆட்கொண்டிலை
அடியாரானா ரெல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார் [கொல்லோ
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே.

உரை:—நான் உன்னுடைய அடியான் அல்லனோ? நீதானே என்னைவநது ஆட்கொள்ள வில்லையோ? அப்படியானால் அடியா ராகிய பிறரெல்லோரும போய உன் திருவடியைச சேர்ந்துவிட் டார்களே. எஙகளது சிவலோக முதல்வனே, தீவினை பொருந்தும் உடம்பாகிய இதனை ஒழிக்கமாட்டேனாகிய, கடினமான நெஞ்சுடை யேன் உன்னை நேரே கண்குளிரப் பார்க்கும் வழியை அறியேனே.

குறிப்பு:—பிற அடியாரடைந்த வீட்டினைத் தலைப்படாமை யால் அடிகள், தம்மை அவன் ஆண்டமையும், தாம் அடிமையா னது மில்லையோவென் றையுறுவார் போன்றனர். செடி - பாவம், குணமின்மை, தீவினை. கடியேன் - கடுமையுடையேன். காணும் ஆறு - காணும்வழி. (அங)

காணுமாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணே பேசி என்தன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே அத்தாசெத்தே போயினேன்
என்னாணில் லாநாயினேன் என்கொண் டெழுகேன் எம்மானே.

உரை நடை :—'எம்மானே' என்பதை முதலிற் கொள்க.

உரை :—எமது பெரியோனே, அறியும் வழியாக உன்னை அறிய மாட்டேன், உன்னை நீ ஆட்கொண்ட அந்நாளிலே காணப் பெற்றும், பாழானவற்றைப் பேச என்னைக் கீழ்ப்படுத்தியது யாதோ, மேலான ஒளிப்பிழம்பே, ஆணுயவனே, பெண்ணுயவனே, தெவிட்டாத அமுதமே, அப்பனே, நான் பயனற்றொழிந்தேன், வலியுமானமு மில்லா நாயனையேன், எதனைத் துணையாகக்கொண்டு மேற்செல்வேன் ?

குறிப்பு :—பாண் - பாழ். பேசி - பேச, பேசி யொழிய. எண் - வலி. (௮௪)

மானேர்நோக்கியுமையாள்பங்கா மறையீறறியாமறையோனே
தேனேஅமுதேசிந்தைக்கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே

உரை —மான் போன்ற விழியுடைய எம்மை உடையாளாகிய அருட்சத்தி பாகனே! வேதமுடிவும் அறிய வொண்ணு இரகசியப் பொருளாவானே, தேன்போ லினியவனே, அமுதுபோற் சாவா மருந்தே, மனத்தாற் கிட்டுதற் கரியவனே, சிறுமையுடையேனது குற்றத்தைப் (பெருமையாற்) பொருத்தருளும் அரசனே, அடியேன் ஒரு சிறிது கொடியவற்றைக் கூறினேன். அடியார் சிவ பெரும்புவனமடையச் சென்றனர். அடியேனும் பொய்யும் அவர்க்குப் புறம்பாக உலகிற் போயினேம்.

குறிப்பு :—அடிகள் 'சிறிதுகொடுமை பறைந்த' தியாதெனத் தெரியவில்லை. அடியார் பலரும் சிவபுரம் புகுதலை விரும்ப, தாம் உலகிற் பின்னுளிருக்க இசைந்தமையை அவ்வாறு கூறி யிருத்தல் கூடும். 'ஏலத்தன்னை ஈஙகொழித் தருளித்' தில்லைக்கு வரும்படி இறைவன் பணித்ததை யொப்புக்கொண்டது, உடனே சிவபுரஞ் சேர இயலாமைக் கேதுவாயிற்று. நேர்மைக்கு மாறு, கொடுமை;

குறிப்பு :—ஊர்ப் பசுவோடு சென்ற குருட்டுப்பசு மேய்ந்தது. உன் மெய்யடியாரோ, வீடுசென்றனர். அன்புக் கண் இலனாகிய நான் அவரோடு சேர்ந்து போதற்கிடமில்லை. இனி யார்பக்கமாக, எப்படி நான் சென்று பயனடைதல் கூடும் என்றார். மிலைத்தல் - மேற்கொள்ளுதல், ஈண்டுப் புலவினை மேற்கொண்டு தின்றலாம். 'போரா' என்ற பாடமுமுண்டு அதனைப் போதா என்பதன் மரூஉவாகக் கொள்வர். (அஎ)

அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே.

உரை:—உன்னிடத்தே அன்பு மயமான உள்ளத்தோடு அழுது தொழமாட்டேன். தீயிடைப்பட்ட மெழுகுபோன்ற உள்ளத்தாராய அடியார், மின்னொளி பொருந்திய அழகிய நினது திருவடிகளைக் கண்டு வணங்கி உன்னைப் பின்தொடர்ந்திட்டனர். அவரோடு தொடர்ந்து செல்லாது, வீணே பிறவியெடுத்தேனாகிய யான் எத் துணைகொண்டு உன்னை வணங்குவேன்? (அஅ)

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவும் அரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே.

உரை:-பொய்ப்பற்றை ஒழிக்கின்ற மெய்ப்பொருளானவனே, வழிபடுவாரது நோயை அகற்றியருளிப் பழமைமிக்க அடியார்கட்கு உனது அழகு நிறைந்த திருவடிகளை, அளித்தருள்வாய். எனக்கு அது செய்தல் அரியதாயின், வன்மைமிக்க மூங்கிலைப்போல உருக்க மற்ற என்னுடைய வினையை நாசமாக்கிய பின்னுவது, நினது தண்ணருட் பாதங்களை விரைவாக நீயே வலியவந்து தரவேண்டும்.

குறிப்பு —பன்னாட் பயின்று அன்பு செலுத்துதலிற் றோந்தவரென்பார், 'பழைய அடியார்' என்றார். திணி - திணமையுடையது.

தணி - தண்மையுடையது. உருக்க மின்மையின், 'திணி' என்றார். பிறவி வெப்பத்திற்கு நிழலாதலின், 'தணி' என்றார். ஒல்லை - விரைவு. 'பொய்தீர்' என்பதற்கு இயற்கையாகவே, பொய்யிற் றீர்ந்த என்றும் பொருள் கொள்ளலாம். மனக்கோட்டமும் உருக்க மின்மையுங் குறிப்பார், 'மூங்கில்' என்றார். பொடி - சாம்பல். மூங்கில், உருகாது சாம்பரேயாகும். (அக)

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்புமபொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே

உரை :—அடியார்களுள், யான் ஒருவனே பொய் மயமானவன் என் மனமும் வஞ்சமுடையதே, என் அன்பும் களங்கமற்றதன்று. ஆனால் தீவினையுடையேன், (பிழையுணர்ந்து வருந்தி) அழுவே னயின் உன்னை அடையலாமே. தேனே, அமுதே, கருப்பஞ்சாறே, இவைபோல இனிமை பயக்கும் பெரியோனே, அடியேன் உன்னை வந்து கலக்குமாறு அருள புரிவாயாக.

குறிப்பு :—மான் - மகான் - பெரியோன் தேன், அமுது, கருப்பஞ்சாறு, இசசை அறிவு செயலுக்கு இன்பந் தருவதென்ற குறிப்பு. (கூ0)

௪0. ஆனந்தாதீதம் - பேரின்ப மேலீடு

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாபபதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார
ஈறி லாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுடமாக நோக்கியும
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே

உரை :—என்றும் மாற்றமில்லாத பேரருட்கடலே, எனக்கு முன்பாகவே நின்பாற்சென்று பூவின் தன்மையைக் கொண்ட நினது திருவடி யிரண்டையும்விட்டு நீங்காத நிலையாகிய சிறப்பைப் பெற்ற நினது உண்மை யன்பர்கள் உனது மெய்த்தன்மையை அடைந்தார்கள். முடிவில்லாத (பெருந்தகையாய) நீ எளிவந்தருளி அருளொளிகாலும் மனித வடிவத்தொடு திருக்கண் பார்வை நல்கியும், பிளவுபட்டுருகாத (திண்ணிய) மனமுடையேனானேன். கீழ்ப்பட்டவனாகிய நான் பட்ட இழிவை என்னென்பது

குறிப்பு —பிறகடல்கள் ஊழிமுடிவில் வற்றினாலும், இறை யருள், மாற்றமிலாதது. 'மாறு' என்பதற்குக் கைம்மாறெனப் பொருள் கொண்டு 'பயன் கருதாத' என்று பொருளுரைப்பினு மமையும். மலர்-மலர்த்தன்மை அல்லது பூக்கள். பரிசு - சிறப்பு, மெய்மமை - நிலையான தன்மை, பேராவியற்கை இறைவன் குரு வாய் வந்ததையே 'மானுடமாக' என்றார் (கக)

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்மமை அன்பாஉன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவதோ சொலாய் பொருத்த மாவதே

உரை :—தீட்டிய மை விளங்குகின்ற அழகிய கண்ணையுடை யாள் பாகனே! நீ குருவாய் எழுந்தருளிவந்து என்னைத் தொண்ட னாகிய பின், மெல்லிய கையிலே விளங்கும் பொன்னாலாகிய வள்ளம் அல்லது வட்டில்போல உன்னை எளியாய் என்று கருதிய தல்லாமல், எய்துதற் கருமை யுடையாயென் றெண்ணவில்லை. திருமேனியில் விளங்குகின்ற வெள்ளிய திருநீற்றின் ஒளியுடை யாய், உனது மெய்யன்பாகள உண்மை நிலையை அடைந்தனர்.

பொய் விளங்கு மியல்புடைய என்னை இந்நிலவுலகிலே கைவிட்டுப் போதல் பொருத்தமாவென்று சொல்லி யருள்க

குறிப்பு—உன்னைத் தொடர்ந்து பற்றாது மெத்தனமாய் இருந்தேனென்பார் 'எளியை என்றெண்ணினே' னென்றார். இறைவன் பொன்மேனி யுடையனாய் அருளமுதககாட்சி நல்கின மையின், இனிய பால் உணவுவைத்த பொன் வண்ணத்திற்கு அவனை உவமித்தார. இறுகப்பிடிக்க இயலாமையின் 'மழுக்கை' என்றார. ஆட்கொண்டபின் பொய்யைத் தீர்த்துச சோதனுக் கொள்ளுதல் பொருததமா மன்றித தள்ளிவிடுதல் தககதன்றெனக் குறிப்பித்தனர் (கூஉ)

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போதஎன்(று) எனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டிலேன் மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோஎன் எம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

உரை—உன் திருவருளைப் பெறுதற்குத் தகுதியில்லாதேன். நிலையாதவற்றின் பற்றுடையேன். அத்தகைய என்னை வருகவென் றழைத்து விருப்பத்துடன் திருவருட்பார்வை நல்கவும், உன்னொடு செல்லுதற்குரிய கவலையில்லாதேன். (உலகிலிருக்கும்) கள்ள எண்ணமுடையேன். உன்னை யடையும்பொருட்டு இறந்தேனில்லை. தாமரை மலர்போன்ற திருவடியாய், சிவந்த திருவடிவமுடையாய், அருள் செய்யப்பெற்ற (அல்லது அருளவழி நிற்கும்) உனது அடியாரும நீயும் அவ்வுலகிற் கெழுந்தருளி, இவ்வுலகத்தில் என்னை அமர்த்திவிட்டாய். இது நியாயமோ? எனது தலைவனே, வீண் தன்மையுடைய எனது ஊழ்வினை நுகர்ச்சிக்கு முடிவு காணேனே.

குறிப்பு :—போத - வருக. புரிந்து - விரும்பி. அரத்தம் - இரத்தம், சிவப்பு, செவ்வரத்தமலர். அருள்செய் என்பதற்கு அருள்வழி யொழுகும், எனலாம். வினைப்போகம் முற்றினால் உடல் நழுவுமாதலின், அங்ஙனம் கூறினார். (கூ)

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே.

உரை நடை :—'மறுவில்வானனே, ஏலம் ஏலும் நற்குழலி பங்கனே' என்பதை முதலிற் கொண்டு பொருள் கூறுக. 'வல்லையே' என்பதை 'மீட்கவும்' என்பதன் பின் வைக்க.

உரை :—குற்றமற்ற சிதாகாசத்திலுள்ளவனே, மயிர்ச் சாந்து தணிந்த அழகிய கூந்தலாள் கூறனே, உன்னுடைய திருவடிக்குச் சிறப்பாய அன்பு என்னிடம் இல்லை. கல்லை மெல்லிய பழமாக்கும் வித்தையைக் கைக்கொண்டு, (எனது கல்நெஞ்சத்தை நெகிழ்வித்து) உன்னுடைய திருவடிக்கு என்னை அன்பனாகச் செய்தனை. எமது பெருமானே, நினது திருவருளுக்கு ஓர் அளவு இல்லை. நான் எதனைக் கருவியாக்கொண்டு எத்தீய செயலைச் செய்தாலும், மீட்டும், உன்னுடைய திருவடிகளை எனக்குக் காட்டி மீள ஆட்கொள்ளவும் ஆற்றலுடையாயல்லவா?

குறிப்பு :—குற்றமற்ற வானம், சிதாகாசம். வானம் என்பதற்கு வானன் போலி. அன்பது - சிறப்பாய அன்பு. ஏலம் - மயிர்ச்சாந்து. ஏலும் - பொருந்தும். விச்சை - வித்தை. ஏது கொண்டு - இவ்வுடல் கொண்டு, ஏது செய்யினும் - உலகப் பற்றில் விழுபட்டு யாது செய்தாலும். (கச)

வான நாடரும் அறியொ ணாதநீ
　　மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
　　என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
　　உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
　　நைய வையகத் துடைய இச்சையே.

உரை நடை :—'வையகத்துடைய இசசையே நைய' என்பதை 'ஞானம்' என்பதற்கு முன்வைக்க.

உரை :—விண்ணுலகிலுள்ளாரும் அறியக்கூடாதவன் நீயே, மந்திரஙகளில் முடிவான முதுமொழியும், முன்னே தொடர்நது பற்றமுடியாத(வன்) நீயே. விண்ணொழிந்த பிறபுவனங்களிலுள்ளாறும் அறியமுடியாத(வன்) நீயே. அடியேனை எளிதாக வந்து ஆட்கொண்டவாறும், உடம்பைப் புளகங்கொண்டு கூத்தாடச் செய்த வகையும், நான் உள்ளம் உருகி உன்னை நுகரும்படி ஏற்படுத்தியவாறும், உலகப்பற்று சிதைந்தொழிய ஞானக் கூத்தியற்றுவித்தவாறும் நீயே (அறிவாய்.)

குறிப்பு :—'மறையிலீறு' என்பதற்கு வேதாந்தம் என்றும் கூறுப. ஆடுவித்தவா - ஆடுவித்தவாறு என்று அதிசயக் குறிப்பாகக் கூறுதல். இச்சை - ஆசை, பற்று. (கூ௫)

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
　　விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கபெரும்
　　புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக் கு)
　　உரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
　　நானும் அங்ஙனே உடைய நாதனே.

உரை நடை —'விச்ச செய்குவாய்' என்பதை 'யாவையும்' என்பதற்குப் பின் அமைக்க.

உரை—வானுலகத்தையும் நிலவுலகத்தையும் பிற எல்லா வற்றையும் வித்தில்லாமலே தோற்றுவிப்பாய், அவற்றைக்காத்து ஒடுக்குவாய், களங்கமுடைய மிருதியுங் கீழ்ப்பட்ட தன்மையுடை யேனை உனது திருக்கோயிலின் வாசலிலே இருக்கும் பித்துடைய னாக்கினை; பேரன்பர்க் கடியனாக்கினை. மக்கள் தாம் நட்டு வளர்த்த மரம் நஞ்சுத் தன்மையுடைய ஒரு (எட்டி) மரமானாலும், அதனை வெட்டமாட்டார்கள். அவ்வாறே யானும் ஆவேன். என்னை அடிமைகொண்ட தலைவனே. (ஆதலால் என்னை அகற்றிவிடாதே. என்றவாறு)

குறிப்பு—மாயையினின்று உலகந் தோன்றினும், உலகின் வடி விற் கேதுவாய அடிப்படையெல்லாம் இறைவனே கோலி, நிலத்தி னின்று வித்தில்லாமற் பயிர் உண்டாக்கினாற்போல உலகங்களையும் பொருள்களையுந் தோற்றுவித்தலின், 'விச்சகன்றியே' என்றார். வைத்தல், காத்தல். வாங்குதல், ஒடுக்குதல். பிச்சன் - பித்தன். 'உடைய நாதனே நானும் அங்ஙனே' என மாற்றுக. (கூகூ)

உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி என்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே.

உரை—என்னை அடிமையாக வுடைய தலைவனே, வணக்கம். உன்னையல்லாமல் இனி வேறு ஆதரவு எனக்காகக் கூடிய தொன்றை உடையேனோ, உத்தரவாகுக. வானவர்களுடைய மேலோர்க்கு மேலோனே வணக்கம் எல்லாரினுங் கீழ்ப்பட்டவ

ஞயினேனை, காத்திடுக எனது பேரருளாளனே, காத்திடுக. முதலும முடிவுமானவனே, அப்பனே, என்னை நினது அடியா ருகைகிறேய, காத்திடுக.

குறிப்பு —உம்பா - மேலிடம். உம்பரார் - வானவர். பரா பரன் - மேலானவன். பணி - சொல்லு 'என்னை நின் அடிய ருக்கிறுய் போற்றி' என்பதை ஏற்றிற் கொள்க (கஎ)

அப்பனே யெனக் கமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்பனே உனககுரிய அன்பரில்
உரிய ஞயுனைப் பருக நின்றதோர்
துப்பனே சுடர்முடிய னேதுணை
யாளனே தொழும்பாள ரெய்ப்பினில்
வைப்பனே யெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே.

உரை :—தநதையே, எனக்குச சாவா மருநதானவனே, இன்பனே, உள்ளம் உருகும்படியாக நெருங்கிச சுரககின்ற தேன் போல்பவனே, உனக்கு உரிமையுடைய அடியாருள் யானும் உரிமை யுடையேனுய் உன்னை அகரும்படியாக அருள்செய்து நின்றதொரு வல்லாளனே, சோதி மகுடத்தனே, உதவியாளனே, தொண்டர்களுக்கு இளைப்பிடத்துப் பயன்படும் வைப்புநிதி போன்றவனே, எஙகள் வேந்தனே, உலகத்திலே துன்பப்படும்படி என்னை வைப்பது நீதியோ சொல்லியருள்க.

குறிப்பு :—'அள்' நெருக்கத்தைக் குறிப்பது. 'வள்' என்று பிரித்து, 'மிகுதியாக' என்றும் பொருள் கொள்ளுவர் துப்பு - வலிமை. 'வையகத்து நைய வைப்பதோ சொலாய்' என மாற்றுக.

மன்ன எம்பிரான் வருக என்எனை
மாலும் நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எமபிரான் வருக என்எனை
முழுதும யாவையும் இறுதி யுற்றநாள்

பின்ன எம்பிரான் வருக என்னெனப்
　　பெய்க ழறகண் அன்பாயென் நாவினாற்
பன்ன எம்பிரான் வருக என்னெனப
　　பாவ நாசநின் சீர்கள் பாடவே.

உரை:—அரசனாகிய எமது தலைவனே, என்னை வருகவென் றழைப்பாயாக அரியும் அயனும் ஆகிய தேவா முதலிய எல்லாரினும் முற்பட்டவனே, என்னை வருகவென்றழைத்தருள்க. எல்லாம் அறவே ஒடுங்கிய காலத்தில் ஒடுங்காது பிற்பட்டவனே, என்னை வருகவென் றழைத்திடுக உன்னுடைய செறித்த கழலுடைய திருவடியின் கண் அன்பாய் எனது நாவினால் துதிக்கப் படுபவனே, பாவத்தை நாசஞ் செய்பவனே, நின்புகழ்களை நான் பாடும்பொருட்டு, என்னை வருகவென் றழைத்திடுக.

குறிப்பு.—'வருக என் எனை'- என்னை வருகவென்று சொல் முன்ன - முற்பட்டவனே பின்ன - பிற்பட்டவனே. பன்ன - பன்னுதலையுடையவனே. (கக)

பாட வேண்டும் நான் போற்றி நின்னையே
　　பாடி நைநதுநைந் துருகி நெக்குநெக்(கு)
ஆட வேண்டும நான் போற்றி அமபலத்
　　தாடும நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றி யிபபுழுக்
　　கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடுதந
　　தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

உரை நடை:—'மெய்யர் மெய்யனே' என்பதை முதலிற் கொள்க.

உரை:—உன்னுடைய மெய்யன்பர்க்கு மெய்யானவனே, நின்னையே நான் வணங்கிப் பாடவேண்டும். பாடி மனம் வருந்திக் கசிந்து கனிந்து கனிந்து ஆனந்தக் கூத்தாடவேண்டும். நான்

வணங்கி நீ சிற்றம்பலத்தே ஆடியருளும்போது, உன்னுடைய திருவடிக்கமலங்களை நான் அடையவேண்டும் இந்தப் புழுக்கூடாகிய உடம்பினை நீ எனக்குத் தொலைத்திட வேண்டும் உனக்கு வணக்கம் நான் பொய் யெல்லாவற்றையும் கைவிட்டொழியும்படி செய்யவேண்டும் உனக்கு வணக்கம் வீட்டினபத்தைக் கொடுத்தருளிட வேண்டும் வணக்கம்.

குறிப்பு —போற்றி - வணக்கம் எனவும், வணங்கி எனவும் பொருள் கொள்ளுக. வீட - தொலைக்க. விட என்பது முதல் நீண்டதென்றுங் கூறலாம். எனை - எனக்கு (க00)

திருச்சிற்றம்பலம்.

உத்தரகோசமங்கையில் அருளிய

நீத்தல் விண்ணப்பம் *

பிரபஞ்ச வைராக்கியம்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதி கண்டாய்விறல் வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே [ளே.
சடையவ னேதளர்ந் தேன் எம்பிரான்என்னைத் தாங்கிக்கொள்

உரை:—(பக்குவத்திற்) கீழ்ப்பட்டேனாகிய என்னை, உனது இரக்கத்தால் வந்தடைந்து அடிமைப்படுத்திக்கொண்ட காளையூர்தியானே, என்னைப் பாசத்தினின்று நீக்கி யருள்க. வலியுடைய புலியினைக் கொன்று அதன் தோலை ஆடையாக உடையவனே, (புகழால்) நிலைபெற்ற உத்தரகோசமங்கைப்பதி மன்னனே, சடையுடையாய், தளர்வடைந்தேன், எமது தலைவனே, என்னைக் காப்பாற்றிக் கொள்ளுவாயாக.

குறிப்பு:—கருணையாற் கலந்தாண்டதுபோலக், கருணையாலே தாங்கிக் கொள்ளவும் வேண்டும், என் தகுதியின்மையைக் கருதுதல் கூடாதென்றவாறு. விட்டிடுதி யென்பதற்குக் கைவிட்டிடுவையோ என்று வினாப்பொருளுரைப்பதுண்டு கண்டாய் - அசை. புலியின் உடம்பை நீக்கினவனுக்கு எனது உடலை நீக்கி வீடளிப்

* உலகப்பற்று விடுதற்கு இறைவனை வேண்டல். 'என்னை நீக்கிடாதே' என்று இறைவனை வேண்டும் பகுதியாகவும் இதனைக் கருதலாம். விடுதி யென்பதற்கு நீக்குதி யெனவும், கைவிடாதே யெனவும் பொருள்கொள்ளப்பட்டது. பொருள்கொள்ளுமிடத்து, விளித்தொடர்கள் முதலிற் கொள்ளப்படும்.

பது கடினமல்ல வென்றவாறு. சடையவன், என்பது இறைவ னது வரம்பிலாற்றலைக் குறிக்கும். (க)

கொள்ஏர்(பு) இள(வு)அக லாத்தடங் கொங்கையர்
கொவ்வைச் செவ்வாய், விள்ளேன் எனினும் விடுதிகண்
டாய்நின் விழுத்தொழும்பின், உள்ளேன் புறமல்லேன் உத்
தர கோசமங் கைக்கரசே, கள்ளேன் ஒழியவுங் கண்டு
கொண் டாண்டதெக் காரணமே

உரை நடை —விள்ளேன் எனினும் உள்ளேன், புறமல்லேன் விடுதிகண்டாய் என அமைக்க.

உரை —உத்தரகோசமங்கைப் பதிமன்னனே! எழுச்சி கொண்ட இளஞ் செவ்வி நீங்காத பெரு நகிலுடைய பெண்டிரது கொவ்வைப் பழம்போன்ற சிவந்த வாயினை நீங்கேனெனினும், உனது உயர்ந்த தொண்டினுக்குள்ளானவனுமியினேன்; புறம்பாக நிற்பேனல்லேன், என்னைப் பாசத்தினீக்குவாயாக. வஞ்சனேன் உன்னை நீங்கி நிற்பவும், வலியவந்து கண்பார்த்து ஆட்கொண்ட தற்குக் காரணம் என்னை?

குறிப்பு :—விடுதி என்பதற்கு உடலை நீக்குக என்று பொருள் கோடலுண்டு. ஏர்புகொள், என மாற்றுக. ஏர்பு-எழுச்சி. இளவு-இளந்தன்மை. சிலா, ஏர் கொள்பிளவு எனப் பிரித்து, அழகிய, காணததின் கூறளவுகூட அகலாது நெருங்கியுள்ள என்று பொருள் கொள்ளுவா. விள்ளல்-விடுதல். கடவுளைத் தாம் நாடாது, கட வுள் தம்மைநாடி வந்தருளினதை இறுதியடியிற் குறித்தார். (உ)

காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேருறுவேனை விடுதிகண் டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை வளர்ப்பவனே.

உரை நடை .—'விளங்கும்' என்பது முதல் இறுதி வரை யுள்ள பகுதியை முதலிற் கொண்டு பொருள் கொள்ளுக.

உரை:—புகழால் திகழும் திருவாரூரில் வீற்றிருப்பவனே, நிலைபெற்ற உத்தரகோச மங்கைக்கரசே, கச்சினைப் பொருந்திய அணிகளணிந்த நகிலுடைய மாதின் ஒரு பாகனே, என்னை வளர்ப்பவனே, அழகுமிகுந்த கண்ணையுடைய மாதராது ஐம்புல வின்பங்களாகிய ஆற்றின் கரையிலே வளர்கின்ற மரமாய் வேரூன்றுவேனை அவற்றின் நீக்குக.

குறிப்பு.—கார் - கருமை அழகு; கருங்கண்ணியர் என்றும் பொருள் கொள்ளலாம். ஐம்புலன் - ஐம்புல வின்பம் 'கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள' என்றது காண்க. விடுதி - நீக்குதி. வார் - கச்சு. குற்றமுடையே னாயினும், என்னை வளர்ப்பவனாதலின், விட்டுவிடுதல் கூடாதென்று குறித்தார். தாயொடுங் கூடியே வளர்த்தல் கூடுமென்று குறிப்பித் தமை காண்க. நான் ஐம்புல வின்ப நீரால் வளர்ந்து, வெள்ளம் வந்தபோது பிடுங்கி யெறியப்பெற்றுத் துன்பக கடலில் வீழ்வேன். நீ என்னை அருளில் வளர்ப்பவன் ஆதலால், என்னை அங்கே வேரூன்ற விடாதே. (கூ)

வளர்கின்ற நின்கருணைக் கையில் வாங்கவும் நீங்கிப் பால், மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய் வெண்மதிக் கொழுந்தொன்(று), ஒளிர்கின்ற நீள்முடி உத்தர கோசமங் கைக்கரசே, தெளிகின்ற பொன்னுமின் னும்அன்ன தோற் றச் செழுஞ்சுடரே

உரை.—வெள்ளிய இளம்பிறை யொன்று விளங்குகின்ற நீண்ட சடைமுடி தரித்த உத்தரகோசமங்கைப்பதி மன்னனே, (தெளிவான) தூயபொன்னினொளியும்-மின்னலொளியும் போன்ற காட்சியை யளிக்குஞ் சோதிப்பிழம்பே, அருளில் நான் வளர்தற் கேதுவாய உனது அருட்கரத்தால் என்னை நீ வளைத்துப் பிடிக்கவும், அப்பிடியில் நீங்கி இவ்வுலகப் பற்றிலே விருத்தி யடைகின்ற என்னை அப்பற்றினின்று நீக்கியருள்க.

குறிப்பு:—வளர்க்கின்ற என்பது 'வளர்கின்ற' என்றாயது என்னலாம். வாங்குதல் - வளைத்தல், ஏற்றல். மிளிர்தல் - ஒளிர் தல், பருத்தல். பொன் திருமேனிக்கும், மின்சடைக்கும் உவமை யாவன. (க0)

செழுகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண் டாயவெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.

உரை.—தேன்தேரும் வாயினையுடைய வண்டானது கிண்டுகின்ற மலரினைத்தரித்த முடியையுடைய உத்தரகோசமங்கை மன்னனே, என் வழி வந்து உனது திருவருளாகிய கிடைத்தற்கரிய அமுதத்தை உண்பிக்கவும், அதை வேண்டாமென்று மறுத்தேனே, (அதனை மறுத்து) வளர்கின்ற தீயில் விழுந்திறக்கின்ற விட்டிற் பறவைபோல நிரம்பாத மழலைச் சொல்லுடைய மங்கையர்பால் பலநாளும் விருப்பம் வைக்கின்ற என்னை, (அவ்வபாயத்தினின்று) நீக்கியருள்க.

குறிப்பு.—சின்மொழி-சில்மொழி; ஆரவாரமொழி என்பாருமுளர். வெறி-தேன். வண்டு ஆறுகாலுடையது. 'விழுகின்ற' என்பதற்கு நேர்பொருள் கொள்ளுவது முண்டு விருப்பத்தையே அவ்வாறு கூறினாரெனக் கருதுக. (௩)

மறுத்தனன் யானுன் அருளறி யாமையில் என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கள் தம்பொய்யினையே.

உரை:—என் மாணிக்கமே, உத்தரகோசமங்கைக்கரசே, சிறிய நாய்போல்வாரது பொய்ச்செயல்களைப் பெருந்தகையோர் மன்னிப்பரல்லவா? அடியேன் உன் திருவருளின் பெருமை யறியாமையால் அதனை வேண்டாமென்று நீக்கினேன். அதற்காக நீ என்னை வெறுத்துக் கைவிட்டிடுவையோ? என் வினை யனைத்தையும் கடிந்தொதுக்கி என்னை யாண்டு கொண்டருள்க.

குறிப்பு.—'அறியாமையி லழுந்திக்கிடந்த யான் உன் திருவருளை மறுத்தன' னென்னலாம். ஒறுத்தல்-கடிதல், குறைத்தல்.

பொய்யவனேனைப் பொருளென ஆண்டொன்று பொத்திக்கொண்
மெய்யவனே விட்டிடுதி கண்டாய்விடம்உண் மிடற்று [ட
மையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந் தீர்ப்பவனே.

உரை :—நஞ்சுண்ட கண்டத்திலே (அதன் அடையாளமான) கருமையுடையவனே, நிலைபெற்ற உத்தரகோசமங்கை மன்னனே, செம்மேனியனே, மங்கலப் பொருளானவனே, சிறுமையேனுடைய பாவத்தை யொழிப்பவனே, பொய்யினேனாகிய என்னையும் ஒரு பொருளாக மதித்து அடிமையாக்கிக்கொண்டு, முத்தியாகிய ஒன்றினை மறைத்துக்கொண்ட உண்மைப்பொருளே, என்னைப் பாசத்தினின்று நீக்குக

குறிப்பு .—பொய்யனுக்கு வீடு உடனே கொடுக்காமையின், 'மெய்யவனே' என்றார். ஒன்று - வீடு. பொத்தல் - மறைத்தல். கீழே வருகின்ற செய்யுள்களில் உத்தரகோச மங்கைக்கரசே யென்பது முதல் இறுதிவரையுள்ள பகுதிக்கு முதலிற் பொருள் கொள்ளப்படும் (எ)

தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரருள் என்கொலென்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண் டாயவிர் வார்வெருவ
ஆர்க்கின்ற தாரவிடை உத்தர கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற அஞ்சொடச் சம்வினை யேனை இருதலையே

உரை :—பகைவர் பயப்படும்படி, கிண்கிணி மாலையணிந்த காளையை உடைய உத்தரகோச மங்கைக்கரசே, ஐம்புல ஆசை ஒரு பக்கமும், அதற்கு மாறாகிய பயம் ஒருபக்கமுமாகத் தீவினையேனை இருபுற மிழுக்கின்றன. உனது சிறப்பாகிய திருவருள் என் பிழையை எப்பொழுது தீர்த்தாட்கொள்ளுமோவென்று கவலையுற்று உள்ளம் புழுங்குகின்ற என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு :—வேர்த்தல் - மனம் புழுங்குதல். தார் - கிண்கிணி மாலை. அஞ்சு - ஐம்புலவாசை. தலை - பக்கம், இடம். விடுதியோ என்பதில் விட்டிடாதே என்று கருத்து போந்தமை காண்க. (அ)

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே.

உரை —(மேல், கீழ், நடு என்னும் மூவிடத்து முள்ள) பெரிய மூன்று வகை உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவனே, நிலைபெற்ற உத்தரகோச மங்கைக்கரசே, போரிடும் நுனியையுடைய மூன்று இலை வடிவான வேலாகிய சூலத்தை வலப்பக்கம் ஏந்தி விளங்கு பவனே, இருபுறமும் எரிகின்ற கொள்ளிக் கட்டையின் உள்ளிடத்தே அகப்பட்டுக்கொண்ட எறும்பு போலத் துயருற்று, உன்னைப் பிரிந்த விரிந்த தலையாகிய அலங்கோல முடையேனைக் கைவிடாதே.

குறிப்பு :—இருபுறமுந் தீப்பற்றி எரிகிற ஒரு கட்டையின் உள்ளிடத்தே அகப்பட்டுக்கொண்ட எறும்பானது, ஒரு பக்கமும், வெளிவர முடியாமைபோல, உலக பாசத்திற்கும், நின்னை அடைய முடியாமைக்குமாகிய இரு துன்பத்திற்கும் நடுவே இடா உறுவேன் என்றார் விரிதலை - இழவு முதலியவற்றாலாய துக்கத்திற்கு அறிகுறி (க)

பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண் டாய்அளி தேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புரம் மாறுபட்டே

உரை நடை :—இறுதி யடியில், 'புரமாறுபட்டே' என்பதை முதலாக வைத்துப் பொருள் கொள்ளப்பட்டது.

உரை —வண்டுகள் பழகித் தேர்ந்து பாடுகின்ற விளரியிசை யின் ஓசையானது நிலைபெற்ற அழகிய சோலையுடைய உத்தரகோச மங்கைக்கரசே, முப்புரத்தைப் பகைத்து வலிமை பொருந்திய திண்மையுடைய வில்லாகிய மேருவினை வளைத்து எரித்தொழித் தாய். விளங்குகின்ற நினது திருவடிகளிற் சரண்புகப்பெற்றும்

உன்னை யடையாமல் வாழ்நாளை வீணாகக் கழிக்கப்பெற்று வருந்தி யிளைக்கின்ற என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு —ஆக்கை - உடல், உடல் கொண்டு வாழும் வாழ் நாளிற்கு ஆகுபெயர். போக்க - (வீணே) கழிய. அளி - வண்டு. விளரி - எழுவகை இசையில் ஒன்று மாறுபட்டு - பகைத்து. புரமெரித்தது போல, எனதுடலையு மொடுக்கி வீடருள்க என்பது கருத்து. (௧௦)

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறும்மட் டேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே.

உரை :—தீவினையேன் உள்ளத்தே ஊறுகின்ற தேனே, நிலை பெற்ற உத்தரகோச மங்கைக்கரசே, திருநீற்றினைப் பொருந்தி விளங்குகின்ற ஒளியினைக் காட்டும் அழகிய திரு மேனியுடைய பெருந்தன்மையனே, ஐம்புலனும் என்னைப் பகைத்து வஞ்சனை செய்ய, அடியேன் உன் அழகிய திருவடித் தாமரையில் நீங்கினேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு :—வேறுபட்டேனை - நீங்கினேனை. மட்டு - தேன். நீறு பட்டு எய் ஒளி - நீறு பொருந்தி அதனாலுளதாயவொளி. (௧௧)

நெடுந்தகை நீயென்னை ஆட்கொள்ள யான்ஐம் புலன் கள்கொண்டு, விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார் வெருவ, அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங் கைக் கரசே, கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே.

உரை :—பகைவர் அஞ்சும்படி கொல்லுந் தன்மையுடைய வேற்போரில் திறமையுடைய உத்தரகோசமங்கைக்கரசே, மிகுந்த விடாயுடையேனாகிய நான் பருகுதற்குரிய தெள்ளிய தூய புனல் போன்ற அமுதப் பெருங்கடலே, பெருந்தன்மையனே, நீ அடி யேனை ஆண்டுகொண்டருளவும், அடியேன் ஐம்புல அவாவைப்

குறிப்பு :—விள்ளக்கில என்பதில், கில ஆற்ற லுணர்த்துவது. விள்ளக்கில் இலேனை - என்பது விள்ளக்கிலேனை யென்று குறுகியது. (கச)

களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங் கைக்கரசே
எளிவந்த எந்தைபிரான் என்னை ஆளுடை என்னப்பனே.

உரை :—உண்மையான சோதிப் பொருள்களுக்கெல்லாம் ஒளி வருவதற் கேதுவாய அழகிய திருவடியுடைய உத்தரகோச மங்கைப்பதி மன்னனே, எனக்கு எளிதில் வந்தருள்செய்த தந்தை யாயினோர் தலைவனே, என்னை அடிமையாகவுடைய எனது அப்பனே மகிழ்ச்சி மிகுந்த மனத்தோடு உன் திருவடிகளைக் காணப்பெற்றும், நீ என்னோடு கலந்து அருள்செய்யுமாறு, பற்றொழித்து, அருள் வெளியிற் புகாதேனைக் கைவிட்டிடாதே

குறிப்பு :—ஒளிவந்த, என்பது ஒளியைத்தந்த என்ற கருத்தினை யுடையது. மெய்ச்சுடர் என்பது தன்னிற்றானே யொளிருங் கதிரவன் போன்ற ஒளியுலகங்கள். எந்தைபிரான்-எமது தந்தையின் தலைவன். படைப்போன் - தந்தையாயின், அவன் தலைவன் இறைவனென்க. வெளிவந்திலேனை என்பதில், வெளி-அருள் வெளி. (கரு)

என்னை அப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின் றெய்த்
தலைந்தேன், மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்
கின் மெய்யே, உன்னையொப் பாய்மன் னுமுத்தர கோசமங்
கைக்கரசே, அன்னையொப் பாய்எனக் கத்தனொப் பாய்என்
அரும்பொருளே

உரை :—ஒத்துப் பார்ப்பின், உண்மையாக உன்னை நீயே ஒத்தவனாயிருக்கிறாய். மின்போன்ற ஒளியுடையவனே, நிலைபெற்ற உத்தரகோசமங்கைக்கரசே, எனக்குத் தாய்போல்வாய், தகப்பன் ஒப்பாய், கிடைத்தற்கரிய பொருளே, என்னை நோக்கி, ஐயா

பயப்படாதே என்று சொல்லுவாரில்லாமல், நின்று வருந்தி இளைத்து அலைந்தேன். என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு :—அருள் பெறுதற்கு முன்னுள்ள சத்திநிபாதநிலையை முதலடி குறிக்குமென்ப. (கக)

பொருளே தமியேன் புகலிட மேநின் புகழிகழ்வார் [ம்
வெருளே யெனைவிட் டிடுதிகண்டாய் மெய்ம்மையார் விழுங்கு
அருளே அணிபொழில் உத்தர கோசமங் கைக்கரசே
இருளே வெளியே இகபர மாகி யிருந்தவனே.

உரை நடை :—'மெய்ம்மையார்' முதல் இறுதி முடிய முதலிற் பொருள் கொள்ளப்பட்டது.

உரை —உண்மை அன்பாமுற்றிலும் அனுபவிக்கும் அருளமுதே, அழகிய சோலை சூழ்ந்த உத்தரகோசமங்கைப் பதிக்கு மன்னனே, மறையாயும் வெளியாயும் இம்மையாயும் மறுமையாயும் இருந்தவனே, (என்றும் மாற்றமில்லாத) மெய்ப்பொருளே, தனியேனாகிய யான் சரண்புகுமிடமே, உனது பெருமையை நிந்திப்பார்க்கு அச்சமானவனே, அடியேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு —என்றும் நிலைத்த பொருளையே பொருள் என்றார். 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும்' என்ற குறள் அடியுங் காண்க. வெருள்-அச்சம். அச்சத்திற்கு ஏதுவானவனை அச்சமென்ப. 'புறச்சமயத்தவர்க்கு இருளாய' என்றபடி இறைவன் தன்னை யடையாதார்க்கு மறை பொருளாயிருத்தலின் அவனை 'இருள்' என்றார். அடைந்தார்க்கு அவன் வெளிப்படையாகத் தோன்றுதலின். 'வெளி' என்றார். இம்மை மறுமைக்குக் காரணமாதலின் 'இகபரமாகி' யென்றார் அடிகள் புறச்சமயத்தில் நின்ற காலை இருளாயும், அகச்சமயத்துற்ற காலை வெளியாயும், வீடுபேற்றிற்குரிய திருவருள் பெறுமுன் இம்மை மறுமைக்குக் காரணமாகியும் இருந்த பெருமான் அருள்பெற்றபின் நன்கு விளங்கும் மெய்ப்பொருளாகியும் போய் அடைதற்குரிய வீடாகியும், வீடடைதற்கு முன் உடலோடு இருந்தகாலை அச்சத்திற்கு ஏதுவாகியும் இருந்

தமை குறிக்கப்பட்டது. விழுங்கும் அருள் என்றமையால் அருளமுதம் என்று உரையில் குறிக்கப்பட்டிருக்கிறது. அருள் - கனியென்பாரும் உளர் (கஎ)

இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னினல்லால், விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க
நஞ்சமுதா, அருந்தின னேமன்னும் உத்தர கோசமங் கைக்
கரசே, மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே.

உரை:—(பாற்கடலிலெழுந்த) கொடிய பெருவிடத்தை அமுதமாக உண்டவனே, நிலைபெற்ற உத்தரகோசமங்கைக்கு மன்னனே, பிறவி நோய்ப்பட்டு முடக்க முற்றவர்களுக்கு நல்ல மருந்தானவனே, அடியேன் முன் எழுந்தருளியிருந்து ஆட்கொள்ள வேண்டும். (வேண்டுமாயின்) விற்றுக்கொள்ளுக அல்லது ஒற்றிவைப்பாய் என்று கூறுவதல்லாமல் வேறொன்று மறியாத (உன் திருவருட்குப்) புதிதாய் உரியனான என்னை நீக்கிவிடாதே.

குறிப்பு:—மடங்குதல - தாழுதல், முடங்குதல் அருளாசானோடு வந்த அடியார்கள் தனக்கு முன்னே அருள் பெற்றுவிட்டபடியால் தன்னை 'விருந்தினன்' என்றார் பிற விடங்களில் அவர்களைப் பழவடியார் என்பதும் காண்க. இருந்து என்பதற்கு உள்ளத்தே இருந்து என்றும் பொருள் கொள்வர். உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனிடத் தொப்புவித்தமையால் அவனுக்கு விற்பனை முதலிய செய்தற்குரிய எல்லாச் சுதந்திரங்களும் உண்டென்று குறிப்பித்தார். சுதந்திரமுடைய அவன் யாது செய்யினும் அதனைப்பற்றி வினவத் தனக்கு உரிமை இல்லை என்றும் குறித்தார். விற்றுக் கொள்ளுதலாவது உலக பாசத்திற்குத் தன்னை ஒப்புவித்து முடிவாகத் தன்பாற் கொள்ளுதல். ஒற்றிவைத்தல் - சிலகாலங் கழித்து மீட்பித்தலைக் குறிக்கும். (கஅ)

மடங்களென் வல்வினைக் காட்டைநின் மன்அருள் தீக்கொளுவும்
விடங்களென் தன்னை விடுதிகண் டாய்என் பிறவியைவே

றொடுங்களைந் தாண்டுகொள் உத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய் வஞ்சிக்கொடி யினையே.

உரை :—எனது பிறவி மாமரத்தை வேரோடும் வெட்டி யெறிந்து என்னை ஆட்கொண்டருளும உத்தரகோசமங்கைக் கரசே, மலைபோன்ற கொடுமை மிக்க யானை வடிவுடைய கயாசுர னைக் கொன்று தோலுரித்துப் போர்த்து வஞ்சிக்கொடி போன்ற உமையம்மையினை அஞ்சுவித்தனை. எனது கொடிய வினைகளின் தொகுதியாய காட்டினை முற்றிலும அழிக்க உனது நிலைபெற்ற அருட் பெருந் தீயினை மூட்டிக் கொளுத்தும் வீரனே, அடியேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு :—மடங்க - அடங்கி யொழிய முனிவர்க்குத் தீங் கிழைத்த கயாசுரனைக் கொன்று அவனது தோலைப் போர்த்தகாலை இறைவனது தோற்றம் யானையின் தோற்றம போன்றமையின் அது மென்மை மிக்க அருளன்னைக்கு அச்சத்திற் கேதுவாயிற்று. இறைவன் தனது வீரச செயலாலே தமது உடலை ஒழித்துவிட வேண்டுமென்பதே அடிகள் கருத்து. தமது தீவிரம்பற்றி அவ் வாறு கூறினர். (௧௫)

கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேஅனல் காலொடப் பானவனே.

உரை :—வானவரும் அடையக்கூடாத மேலிடத் திருப்ப வனே, நிலைபெற்ற உத்தரகோசமங்கை மன்னனே, வான் காற்று நெருப்பு நீர் நிலம் என்னும் ஐம்பூதங்களையும் வடிவமாகக் கொண்டு அவை யானவனே, (என்றும் மாறாத) இளமைச செவ்வியுடை யோனே, படர்தற்குக் கொழுகொம்பிலாத கொடிபோலத் திரிந்து சுழன்றேன்; வீட்டடைதற்குத் தவிக்கின்ற என்னை விட்டுவிடாதே.

குறிப்பு :—'கொடிபோல் அலமந்தனன்' என்றது அருள்பெறு தற்கு முன்னிருந்த சத்திநிபாத நிலையைக் குறிக்கும் என்ப.

கோமள மென்பது இளமையையும் அழகையும் குறிக்கும். வெம்புதல் - தவித்தல் உம்பர் என்றது சிதாகாயத்தை அம்பரம் - வான். அப்பு - நீர். கால் - காற்று. (உ0)

ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னாலலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை யும்அமு தத்தையுமொத்
தூனையும் என்பினை யும்உருக் காநின்ற ஒண்மையனே

உரை :—(உடலோடு இருக்கும்) தீவினையேனது உள்ளத்தின் கண்ணே தேனும் பாலும் கருப்பஞ்சாறும் இனிய அமுதமும் போன்று (தித்தித்து) எனது தசையினையும் எலும்பினையும் உருகுவிக்கின்ற ஒளிவண்ணனே, கடுமையான ஆனைச் சண்டையிலகப்பட்ட சிறு செடிபோல ஐம்புல ஆசைப்போரில் அகப்பட்டுத் திரிவுற்றுத் துயருறும் என்னை, எனது அப்பனே, கைவிட்டிடாதே.

குறிப்பு :—ஆனைகள் செய்யும் சண்டையில் அவற்றின் காலில் அகப்பட்ட சிறு செடியானது மிதிபட்டு அங்குமிங்கும் அலைபட்டுக் களையப்படாது கிடக்கும். அதுபோல ஐம்புலனுசையி லகப்பட்டுத் துயருற்றும் உடல் நீங்காமை குறிப்பித்தவாறு. வினைப்போகத்தால் உடல் நீங்காமையின் அடிகள் தம்மை ‘வினையேன்’ என்றார். கன்னல் - கரும்பு. இங்கு அதன் சாற்றினைக் குறிக்கும்; சாக்கரை என்பாரும் உளர். அமுதம் - மருந்தையும் தேவருணவையும் குறிக்கும்; சர்க்கரைப் பொங்கல் முதலிய இனிய உணவுகளையும் அமுதம் என்பாரும் உளர். அமுது என்ற சொல், சோற்றினைக் குறித்தல் காண்க. தூறு - சிறு செடி; குறு என்ற சொல் மிகச் சிறுமையைக் குறிக்கும். ஒண்மை - ஒளி, அழகு. (உக)

ஒண்மைய னேதிரு நீற்றைஉத் தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய் பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மையனேதொன்மை ஆண்மையனே அலிப்பெற்றியனே.

உரை :-உண்மை அன்பர்களுக்கு அணித்தாயுள்ளவனே, ஏனையோர்க்கு எப்பொழுதும் தூரமாயிருப்பவனே, இன்ன வடிவம்தான் என்று அறிய வொண்ணாதபடி பெண் வடிவனும் பழைய ஆண் வடிவனும் அலிவடிவனுமிருக்கும் தன்மையனே, அழகனே, திருநீற்றை உடம்பு முழுவதும் பூசி அதன் ஒளி விளங்குவதனாலாகிய வெண்ணிற முடையவனே, என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு :—ஒண்மை - அழகு; ஒளித்தன்மை என்றும் கூறலாம். உதத்தூளித்து - நீர் கலவாத பொடியைப் பூசி. தொன்மை என்பதைப் பெண்மை, அலி என்டவற்றிற்கும் கூட்டலாம். உயிர்கள் நினைந்த வடிவின்படி அவர்களுக்குத் தோன்றுதலின் மூவகையுங் கூறினார். அது அநாதியே நிகழ்தலின் தொன்மை என்றார். பெற்றி - தன்மை. மூன்றாம் அடியில், 'பிறர்க்கு என்றுஞ் சேயாய்' என மாற்றுக. (உஉ)

பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்தன்னைத் தாங்குநர் இல்லையென் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேன்எனக் குள்ளவனே

உரை நடை :—'என் வாழ்முதலே...உள்ளவனே, பெற்றது ......கண்டாய், விடிலோ மற்றடியேன் .. ..இல்லை, கெடுவேன்' என அமைக்க.

உரை :—எனது வாழ்க்கைக்குக் காரணமான முதற்பொருளே, உன்னையடைந்து அடியேன் அதிகமாகத் தெளிவெய்தி நின்றேன். எனது உள்ளத்தினு ளிருப்பவனே, அடியேனுக்குக் கிடைத்த இவ்வுடம்பைக்கொண்டு தவறுகளையே வளர்த்துச் சுருங்கிய அன்புடைய பயனற்ற அடியேனைக் கைவிட்டிடாதே. நீ கைவிடின் அடியேனை வேறு தாங்குகின்றவர்களில்லை அதனாற் கெட்டொழிவேன்.

குறிப்பு —பெற்றது-பெற்றவுடம்பு. உற்று-திருவடியடைந்து. தேறி - தெளிந்து, நம்பி. உள்ளவன் - உள்ளத்தவன், உள்

னீடானவன ஆதாரமாயிருப்பவன், உயிர்கருயிராயிருப்பவன் என்றலுமொன்று (உ௬)

உள்ளன வேநிற்க இல்லன செய்யு மையல்துழனி,
வெள்ளன அலேனை விடுதிகண் டாய்வியன் மாததடக்கைப்,
பொள்ளனல் வேழத் துரியாய் புலன்நின்கட் போத
லொட்டா, மெள்ளனவே மொய்க்கும் நெய்க்குடந் தன்னை
எறும் பெனவே

உரை —அகன்ற பெரிய நீண்ட துதிக்கையின்கண் பொந் தினையுடைய அழகிய யானையின தோலையுடையவனே, ஐம்புலன் களும் என்னை நெய்க்குடத்தை எறும்பு மொய்ப்பதுபோல பையப் பைய உன்பாற் செல்ல வொட்டாமல் தடுப்பதற்காக நெருங்கிச் சூழுகின்றன அதனால் உண்மையானவை செய்வன விடுத்து பொய்யானவற்றையே செய்யும மயக்க ஆரவாரப் பெருக்கினேன்; நீயருகிய எனனைக கைவிட்டிடாதே

துறிப்பு —இல்லன-என்பது நிலையாதனவற்றைக் குறிக்கும். துழனி - ஆரவாரம வெள்ளன் - வெள்ளத்தை யுடையவன். பெருககினன் அலேனை - அல்லாதவனை. அல் ஏனை எனப் பிரித்து இருள உடையேனை என்பாரும் உளர் அல் - இருள். வியன் - அகன்ற, மா - பெரிய. தடக்கை - நீண்ட கை. புலன்- ஐம்புல அவா. ஆசைகள் ஒவவொன்றாக ஏற்பட்டு மிகப் பெருந் துன்பம் விளைததலின், 'மெள்ளனவே மொய்க்கு' மென்றார். பற்றி விடமுடியாத உணவாகினற காரணத்தால் 'நெய்க்குட' மென்றார். சிறிதாயிருப்பினும் கடுப்புமிக விளைத்தலால் 'எறும்' பென்றார். (உ௭)

எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவர் உம்பருமபர்
பெறும்பத மேயடி யாரெய ராத பெருமையனே.

உரை —கொடுமையாகிய யமன் அடங்கும்படியாக அவன் மேற் பொருந்தும் மணமலர் போன்ற திருவடிகளையே அழுந்தி

அறிந்தவர்கள் வானவர் பதவிக்கும் மேலானதாகப் பெறும் பதவியானவனே, அடியார்கள் தன்னைவிட்டு நீங்காத பெருமையுடையவனே, எறும்புகள் பலவற்றினிடையே அகப்பட்ட நாகப்பூச்சி போல, ஐம்புலனால் அரித்துத் தின்னப்பட்டுத் துன்புற்ற பயனில்லாத தனியேனைக் கைவிட்டு விடாதே.

குறிப்பு — நாங்கூழ் - நாகப்பூச்சி, பூநாகம் என்றுங் கூறுப. அலந்த - வருந்தின. கடிப்போது என்பதற்கு, கடிதலையுடைய திருவடிமலர் என்றும் பொருள் கொள்வர். கடி என்பது மணத்தை உணர்த்தும். உம்பர் உம்பர் - மேலிடத்திற்கு மேலான பதம் - நிலை, பதவி (௨௫)

பெருநீ ரறச்சிறு மீன்துவண் டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழுமணியே

உரை:—பெரிய கங்கை வெள்ளமானது பொங்கி வந்த மரும் குளத்துள் எதிர்த்து நிற்கும் சிறு தோணியின் தோற்றத்தையுடைய வெள்ளைநிறத் தண்திங்கள் தவழும் சடையினை யணிந்த பரமாகாசத்தில் இயங்கும் வளம் பொருந்திய மாணிக்கமே, மிகுதியான நீர் வற்றி வடிய, குறைந்த நீரில் சிறுமீனானது வாடிக் கிடந்தாற்போல, உன்னைப் பிரிந்த விடத்தே அச்சுற்று வாடிநிற்கும் தன்மையேனைக் கைவிட்டு விடாதே.

குறிப்பு:—துவண்டாங்கு - துவளுதல் போல. துவளுதல் - அசைதல், வாடுதல். வெருநீர்மை - வெருவும் நீர்மை. வெருவுதல் - அஞ்சுதல். மிகப் பெரிதாகப் பொங்கிவந்த கங்கையானது இறைவனது சடாபாரத்துள் அசைவின்றி அடங்கினமையின் சடையிலுள்ள கங்கையை நீர்மடுவுக்கு உவமித்தார். மலை - மலைதல், எதிர்த்தல். வெள்ளம் வரும்பொழுது அங்கு மிகும் அலைதலையே மலைதல் என்றார். குரு - நிறம். நீர் - தண்மை. (௨௬)

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச்
சென்றுகுன்றி, விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம்
முழுதுங்கம்பிக், தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்
கொண்டருளி யென்னைக, கழுமணி யேஇன்னுங் காட்டு
கண்டாய்நின் புலன்கழலே

உரை :—உடல் முழுவதும் புளகங் கொண்டு நடுநடுங்கி அழுது தொழும் அடியார் நடுவே என்னைப் பொருத்திவைத்து ஆட்கொண்டருளி இன்னுமொருமுறை என்னைத் தூய்மைப்படுத்துகின்ற மாணிக்கமே! இன்னுமொரு முறை உன்னுடைய அறிவு மயமாகிய திருவடியைக்காட்டி யருள்க. முத்தின் அழகையுடைய பல்லினராகிய மாதரது நகிலெனனும் மலைமிசை அறிவு குறைந்து போய் விழுகின்ற அடியேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு :—கொழுமணி - முத்து. நகைக்கு உவமித்தமையால் மணி என்ற பொதுச் சொல் முத்தைக் குறித்தது. கொழு-செழிப்பான. ஏர் - அழகு. குன்றி-குறைந்து, அறிவு வியாபகங் குறைவுற்று. கம்பித்து - நடுங்கி. ஆர்த்து-பொருத்தி. கழு - கழுவு. புலன் - அறிவு. (உஎ)

புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கொர் பொய்ந்
நெறிக்கே, விலங்குகின் றேனைவிடு திகண்டாய் விண்ணும
மண்ணுமெல்லாங். கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு
ணாகரனே, துலங்குகின் றேன்அடி யேனஉடை யாயென்
தொழுகுலமே

உரை :—விண்ணுலகமும மண்ணுலகமும் முழுவதும அஞ்சிக் கலக்கமுற்றபோது கடலிலெழுந்த விடத்தை அமுதாக உண்டவனே, அருட்கடலே, (பாசத்திற்கு அஞ்சி) நடுங்குவேனாகிய அடியேனை அடிமையாக உடையவனே, யான் வணங்கும் இனத்தவனாய் வந்தவனே, ஐம்புலன்கள் என்னைத் திகிலடையும்படி செய்ய யானும் திகிலடைந்து இவ்விடத்து ஒரு நிலையற்ற வழியின் கண்ணே விலகிச் செல்வேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு :—முந்நீர் - கடல். ஆற்றுநீர், மழைநீர், ஊற்றுநீர் என்ற மூன்றும் உடைமையான் முந்நீர் என்ப. அது படைத்தல்

காத்தல் அழித்தல் இம்மூன்றினையும் செய்யவல்லதென்ப. துலங்கு கின்றேன் - துளங்குகின்றேன். துலங்குதல் - அசைதல் தொழு குலம் - வணங்கத் தக்க இனம். இறைவன் வேதியனாக ஆட் கொள்ள வந்தமையால் வேதியனே என்றும் அச்சொற்றொடர்க் குப் பொருள் கொள்ப. இறைவனை வழிபடப்படும் இனத்தவனாயும் உயிர்கள் வழிபடும் இனத்தவராயும் இருப்பதைக் காண்க. குலம்- கோயில் என்பாருமுளர். தேவர் கலக்கத்தை நஞ்சுண்டு நீக்கிய தைப்போலத் தம்முடைய கலக்கத்தையும், பாசத்தினைப் போக்கி, நீக்கி அருளல் வேண்டும் என்று இதனுட் குறிப்பித்தார். (உ௮)

குலங்களைந் தாய்களைந் தாய்என்னைக் குற்றங்கொற் றச்சிலையாம், விலங்கலெந் தாய்விட் டிடுதிகண்டாய் பொன்னின் மின்னுகொன்றை, அலங்கலந் தாமரை மேனியப் பாவொப்பிலாதவனே, மலங்களைந் தாற்சுழல் வன்தயி ரிற்பொரு மத்துறவே

உரை:—பொன்போல மின்னுகின்ற கொன்றைமாலையணிந்த அழகிய செந்தாமரை மேனியையுடைய அப்பனே, யாரும் தனக்கு நிகரில்லாதவனே, கடைகின்ற மத்தைப் பொருந்தினவுடன் சுழல் கின்ற தயிர் போல, என்னைப் பற்றிய ஐந்து பாசங்களாலும் அலை வுற்று வருந்துவேனாகிய எனனுடைய குற்றக் கூட்டங்களை யொழித்தவனே, எனது பசுபோதத்தையும் நீக்கினாய். வெற்றி வில்லாக மேருவையுடைய எந்தையே கைவிட்டிடாதே.

குறிப்பு:—'சுழல்வன்' என்பதை 'குற்றம்' என்பதனோடு முடிக்க. குலம் - கூட்டம். 'குற்றம்' என்பதைக் குலம் என்பத னோடு சேர்க்க. சாதியென்று பொருள்கொண்டு சாதிப்பற்று முத லியவற்றைக் களைந்தாய் என்றும் பொருள் கொள்ளலாம். குற்றம் களைந்தாய், என்று வேறு பிரித்துப் பொருள் கொள்ளுப. ஐந்து மலங்களாவன:-ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதாயி. சிலர், வைந்தவத்திற்குப் பதிலாக மாயேயமென்பர். 'வைந்தவம்' சுத்த மாயா காரியங்கள். திரோதாயி, மறைப்புச்சத்தி, 'மாயேயம்' என்பது மாயையாலாகிய எல்லாக் காரியங்களையும் குறிக்கும். (உ௯)

மத்துறு தண்டயி ரிற்புலன் தீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னாரச்செஞ் சாந்தணி சச்சையனே.

உரை :—வெள்ளிய தலையை யணிந்து திரட்சியுடைய கொன்றைப்போதினைச் சூடி குடராகிய நீண்ட தோள் மாலையைக் கழுத்தினைச் சுற்றி அணிந்து, அசைந்து விளங்குகின்ற திருநீற்றுடன் சந்தனத்தின் சிவந்த குழம்பினை யணிந்த இளமையுடைய தலைவனே, மத்துப்பொருந்திய குளிர்ந்த கட்டித்தயிர் உடைதல்போல, ஐம்புலனாகிய தீப்பற்ற அதனாற்கலங்கி (அக்கலக்கத்தில் வேரூன்றுகின்ற) வித்தின் தன்மை அடைவேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு —வித்து - விதை விதையின் தன்மை. கொத்து - திரட்சி. குடர் - ஒடுங்கிய தேவர்களது குடர். அல்லது குடர் போன்ற நெடிய மாலை. மிலைச்சி - சூடி. தத்து - தத்துதல்; அசைதல் ஆரம் - சந்தனம். சச்சையன் - சச்சு + ஐயன். சச்சு - நுட்பம், இளமை. சச்சு என்பது சத்து என்பதன் போலியாக் கொண்டு, மெய்ப்பொருளாகிய ஐயனே என்பதுமுண்டு. சங்காரக் கடவுளாதலின், 'குடர்நெடுமாலை சுற்றி' என்றார். வெண்டலை, தாருகவன முனிவரால் விடுக்கப்பட்டது. (௯0)

சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால் நிலம்நெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண் பட அரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள அடற்கரியே.

உரை நடை :—இறுதியடியில் தடந்தாள அடற்கரியே கடந்தாய் என மாற்றுக.

உரை :—வெண்ணிறமுடையாய், கருநிறமுடையாய், பச்சை நிறமுடையாய், சிவந்த திருமேனியாய், ஒளி விளங்கும் படத்தையுடைய பாம்பினை அரைக்கச்சாக அணிந்தவனே, அகன்ற அடியையுடைய வலிமிக்க யானை வடிவுடைய கயாசுரனை வென்றவனே,

மிக நுட்பமான மெய்ப்பொருளாய தலைவனே, வெளிப்படையான நீர், வான், காற்று, நிலம், நெருப்பு என்பவற்றோடு கலந்து அவை யாய வியப்புச் செயலுடையவனே, கைவிட்டிடாதே.

குறிப்பு:—மிகக - வெளிப்படையாய அறிவு நுண்பொருள் அதது விதமாய்ப் பூதப்பொருளிற் கலநது அவையாய்த தோன்றல் வியத்தகு செயல் என்பார், 'விசசையனே' என்றார். புகை நிறம், 'கரியாய்' என்பதனு ளடஙகுதலின், நிறஙகளை நதுங கூறியவாறும். 'நிறஙகளோரைந துடையாய்' எனறதுங காணக. கயாசுரன் கதை முற்கூறப்பட்டது. (நக)

அடற்கரி போல்ஐம் புலன்களுக் கஞ்சி அழிநதஎன்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாயவிழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு தீச*ழலக் [ல்
கடற்கரி தாயெழு நஞ்சமு தாககுங கறைககண்டனே.

உரை:—மேன்மையான அடியாாகளுக்கலலது ஏனையோர்க குப் பற்றுதற்கரியவனே, ஒளிகாலும் பெரிய மாணிககமே, கடல் சுடுந்தீயாகிய வடவையும் நிலை கலஙக, திருப்பாற்கடலிலே எதிர் பாராதபடி அருமையா யெழுநத விடததை அமுதமாக்கிய நீல கணடப் பெருமானே, தவிர்தற்குக கூடாதவனே, வலிய யானை போன்ற ஐம்பொறிப் பற்றுகளுப் பயநது உள்ளமொடுஙகிய என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு:—அழிநத - மனமதளாநத. விடற்கரியாய் - பற்றி விடக்கூடாத அருமையுடையவனே. சுடுதீ - வடவை வடவைத்தீ, கடலில் நீர் மிகாது வற்றுதலை நிகழ்த்தலின் 'சுடுதீ' என்றார். கடற்கு - கடலிலே. கறைக்கண்டனே என்பதற்குப் பின் 'விடற் கரியாய்' என்பதற்குப் பொருள் கொள்ளுக (நஉ)

கண்டது செய்து கருணைமட் டுபபருகிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப்பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டென்எந் தாய்களை யாய்களை யாய குதுகுதுப்பே

உரை நடை :—'எந்தாய' என்பதை முதலிற் கொள்க. முத லடியில் 'கருணைக்களித்து, கண்டது செய்து' என மாற்றுக

உரை :—எனது தந்தையே!, நினது அருளாகிய மதுவைக் குடித்து (நிகழ்வினை யறியாது) செருக்கி (மனதிற்குத்) தோன்றிய தைச் செய்து மதமிஞ்சிப் போகின்ற என்னைக் கைவிட்டிடாதே உனது மணம்நிறைந்த திருவடிக்கமலங்களை முன் கொடுத்தருளியது போல(க்கொடுத்து) என்னைத் தாழ்மையனாக்கி உன் திருத்தொண் டினை இயற்றுமாறு அழைப்பித்து என்னை ஏற்றுக்கொண்டு வீடு பேற்றிற்கு இடுக்கணுயுள்ள மகிழ்ச்சியை வேரறக் களைந்தருள்க

குறிப்பு :—மட்டு-தேன், மது 'ஒருவரை மதியா துறுமைகள் பேசி' என வன்தொண்டர் கூறிய கருத்தை ஒத்து நோக்குக. மிண்டுதல் - மதத்தாற் பொருதல். பணித்து - பணிவித்து. கூவு வித்து என்பது, 'கூவித்து' என மருவிற்று. களை - இடுக்கண். பிராரத்தமாகிய நிகழ்வினைக் கஞ்சி, இறைபணி நில்லாமையா லுளதாந் தற்போதத்தைக் களைந்தருள்க என்றார் (கக)

குறும்புறும்ப பின்றிநின்(ற) என்குறிப் பேசெய்துநின் குறிப்பி விதுவிதும்ப லேனை விடுதிகண் டாய்விரை யார்நறிய [ல
மதுமதும்ப போன்றெனை வாழைப்பழத்தின் மனங்கனிவித் தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப் பரம்பரனே

உரை நடை :—விபயில் கயிலை.. பரனே, குறுகுறு கண் டாய வாழை ..கனிவித்த. விரை ..போன்று எப்போது எதிர் வது என அமைக்க.

உரை :—மலர்பொருந்திய கயிலையில் வீற்றிருக்கும் மேலோர்க்கு மேலோனே, எனது எண்ணத்தையே நிறைவேற்றி, அதனால் மகிழ்ச்சியின்றி நின்று, உனது திருவுளக் குறிப்பை நாடி அதனை அறிய விரைகின்றேனை நீ கைவிட்டிடாதே. நீ வாழைக் கனியைப் பழுக்கவைத்தாற் போல என்னை உருக்க முடையனாய்ச் செய்து (நல்ல) மணம்பொருந்திய இனிய தேனொழுக்குப்போல எப்போது நீ எனக்கு எதிர்ப்படுதல் நிகழற்பாலது?

குறிப்பு :—குதுகுதுப்பு - மகிழ்ச்சி. 'குறிப்பில்' என்பதற்குக் 'குறிப்பினை இல்லாத' என்றும் பொருள் கொள்ளலாம். விதுவிதுப்பு - விரைதல், ஆசைப்படுதல். மது - மது, என்பது தேனொழுக்கினைக் குறித்தது. வாசனையுடையதேன், அஃதில்லாத தேனிற் கலந்தாற்போல, இயக்கும் கடவுள் இயங்குமுயிரிடைக் கலத்தல் கூறப்பட்ட தென்றலுமொன்று. இரண்டுஞ் சித்துப் பொருளாதல் பற்றித் தேனென்றாரென்ப. வாழைக்கனியானது, தானாக மெதுவாகக் கனிதலும், புகையூட்டத்திற் கனிதலும் உண்டு. மனம் அங்ஙனம் பக்குவப்படுதலைக் குறித்தனர் பயில்வி- பயில்வீ, வீபயில் - மலர் பொருந்து. (௩௪)

பாம்பர னேயுன் பழஅடி யாரொடும் என்படிறு
விரும்(பு)அர னேவிட் டிடுதிகண் டாய்மென் முயற்கறையின்
அரும்(பு)அர நேர்வைத் தணிந்தாய் பிறவி ஐவாயரவம்
பொரும்பெருமான்வினை யேன்மனம் அஞ்சிப் பொதும் புறவே

உரை நடை —'பிறவி' என்பதற்குமுன் 'வினையேன் . .. புறவே' என்பதை அமைக்க. பாம்பரனே ..கண்டாய்.

உரை :—மெல்லிய, முயல்போன்ற களங்கத்தையுடைய இளம் பிறையையும் பாம்பையும் சமமாகச் சடையிலமர்த்தி அவற்றைத் தலைக்கணியாகக் கொண்டவனே, தீவினையுடையேன் உள்ளம் நடுங்கி ஒரு மறைவிடத்தை அடையும்படியாகப் பிறவிக்கேதுவாகிய ஐம்புலனாகிய ஐந்து வாயையுடைய பாம்பானது மலைகின்றது. பெருந்தகையானே, மேலோர்க்கும் மேலோனே, உனது பழ வடியாரோடு வஞ்சனையுடைய என்னையும் ஆட்கொள்ள விரும்பிய பாசநீக்க முதல்வனே, என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு —என்படிறு, 'படிறுஎன்' என மாற்றி, 'படிறுடைய என்னை' என்று பொருள் கொள்ளுக. என் - என்னை என்பதன் கடைக்குறை. 'என்படிறு' என்பதற்கு எனது வஞ்சனை, என்று பொருள் கோடலுமுண்டு அரன் - பாசத்தை யழிப்பவன். கறை- களங்கம், சந்திரனிலுள்ள கருப்பு முயல்போலுதலின், அது

'முயற்கறை' என்னப்பட்டது. அரும்பு - தோற்ற நிலை, இங்கே அது பிறையை யுணர்த்திற்று. அர - அரவு - பாம்பு. நேர் - சமமாக. பொரும்-சண்டையிடும். பொதும்பு-மரசசெறிவு, பொதும்பு 'புகலிடம்' என்றும் பொருள் கொள்ளலாம். (நரு)

பொதும்புறு தீபபோற் புகைந்தெரி யப்புலன் றீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை யார்நறவ
ததும்புமந் தாரத்தில் தாரம் பயின்றுமந் தம்முரல்வண் (டு)
அதும்புங் கொழுந்தேன் அவிர்சடை வானத்தடலரைசே.

உரை :—வாசனை பொருந்திய தேன் நிறைந்த மந்தார மலரிலே (ஏழிசையில்) தாரமாகிய வல்லிசையைப் பழகிப் பின் மெல்லோசையை ஒலிக்கின்ற வண்டானது ஒதுங்கித்திளைக்கும், வளம் மிக்க தேன் பொழிகின்ற மின்னுஞ் சடையினையுடைய, சிதாகாய நாட்டின் வலிமிக்க வேந்தனே! மரசசெறிவிற் பொருந்திய நெருப்புப்போலப் புகைவீசி எரியும் ஐம்புலனாகிய தீ என்னைப் பற்றவே, அதனால் (உள்ளத்துயராகிய) வெப்பமுறுகின்ற என்னை விட்டிடாதே.

குறிப்பு :—மந்தார மலரைத் திறப்பதற்கு வல்லோசை வேண்டும். பொழிகின்ற தேனைப் பருகுவதற்கு மெலலோசை போதும். முதலில் சடையிலுள்ள மந்தார முகையைத் திறந்து தேன் பொழிவித்து, அத்தேனைத் தேருங்கால், மந்தவோசையை ஒலிக்குமென்று கருதுக. முரலுதல்-ஒலித்தல். அதும்புதல்-ஒதுங்குதல், அழுந்துதல். உடலிலுளள ஐம்புலன்கள், மரச்செறிவிலுள்ள தீப்போலும். தீ முதலிற் புகைந்து, பின் மிளிர்வது, மெள்ள மெள்ள ஐம்புலன்கள் மனதையு முயிரையும் பற்றுதற்குவமையாம். வானம்-பரமாகாசம். அதறகு முதல்வன் கடவுளே யாதலின், அம் முதன்மையுடையானை 'அடலரசே' என்றார். (நசு)

அரைசே அறியாச்சிறியேன் பிழைக்கஞ்ச லென்னின்
அல்லால், விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண்

நகைக்கருங்கண், திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற்
பதப்புயங்கா, வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந்
தடர்வனவே.

உரை:—வெள்ளிய பல்லினையும் கரிய கண்ணினையும் உடைய கடல்கெழு செல்வியாகிய திருமகள் வணங்கிப் பொருந்திய அழகிய திருப்பாதங்களையுடைய பாம்பணிந்த பெருமானே மலைகள் ஒன்று சேர்ந்து தாக்கினாற்போல கொடிய வினைப்பயன்கள் வந்து தாக்குகின்றன. அரசனே, அறிவில்லாத சிறியேன் குற்றத்தைப் பொறுத்து 'அஞ்சாதே' யென்று நீ அருள் செய்தாலன்றி, (உய்யேன்.) மணங்கலந்த சடைமுடியாய், என்னைக் கைவிட்டிடாதே

குறிப்பு:—திரை - கடல். கண்ணாகிய கடலெனக்கொண்டு 'உமாதேவி மணந்த அழகிய பொன்மேனியுடைய' என்று பொருள் கொள்ளுவதும் உண்டு முத்தித்திரு-பாதத்தில் வீற்றிருப்பதை இங்குக் குறித்ததாகவுங் கருதலாம். 'உய்யேன்' தொக்குநின்றது. அம்மை திருவடியில் வழிபட்டதாகவுங் கூறலாம். (௰௭)

அடாபுல னால்கிற் பிரிந்தஞ்சி அஞ்சொல்நல் லார்அவர்தம்
விடாவிட லேனை விடுதிகண் டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்தனி நீக்குந் தனித்துணையே.

உரை:-பெருக்கமாய் விளங்குகின்ற சோதிப்பிழம்பைப் போன்றவனே! சுடுகாடாகிய சங்கார முடிவின் முதலே, அடியார்க்க முதமானவனே, உயிர் தனது வலியாற் றொடர்ந்து பற்றுதற் கருமையானவனே, அடியேனுடைய தனிமையை நீக்கும் ஒப்பற்ற துணைவனே, என்னைத் தாக்குகின்ற ஐம்புல வேட்கையால், உன்னைப் பிரிந்து பயந்து, அழகிய மொழியுடைய பெண்டிர் குழுவாகிய காட்டினைக் கடந்து வருவதற்கியலாத என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு:—விடர், காடு, மலைப்பிளவு. எங்கும் அறிவு மயமாய்ச் செறிதலின் 'விரிந்தே யெரியுஞ் சுடர்' என்றார். சுடுகாடென்பது எல்லாம் ஒடுங்கிய இடம். தனி - தனிமை. (௰௮)

தனித்துணை நீநிற்க யான்தருக் கித்தலை யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை யேனுடைய
மனத்துணை யேஎன்தன் வாழ்முத லேஎனக் கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும்பொ றேன்துய ராக்கையின் திண்வலையே

உரை —தீவினையேனுடைய உள்ளத்திற்குறுதி கொடுக்குந் துணையானவனே, எனது வாழ்விற்கு அடிப்படையான முதற் பொருளே, எனக்கு இளைத்த காலத்திற் பயன்படும் சேம நிதி போல்வானே, ஒப்பற்ற துணைவனாக நீ நிலைப்பாயிருக்குங் காலத்தே தற்போத உணர்ச்சியுற்று முறை மாறாக வொழுகின இரு வினையேனைக் கைவிட்டிடாதே. துயரத்தைத் தரும உடம்பென்னுந் திண்ணிய வலையிற்கிடப்பதைத் தினையளவு நேரங்கூடப் பொறுக்க மாட்டேன்

குறிப்பு —தருக்கி - செருக்குற்று காலால் நடப்பதற்குத் தலையால் நடப்பது முறை மாறிய செயகையாம் வினைத்துணை- வினையிரண்டு 'தினைத்துணை' என்பதில, துணை-அளவு. யாக்கை எளிதிற் கழியாமையின், 'திண்' என்றார். தாம் முயன்று அதனைக் கடக்க இயலாமையின் 'வலை' என்றார் இறுதியடிக்கு இறுதியிற பொருள் கொள்ளுக. (௩௧)

வலைத்தலை மான்அன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியின் ஒற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாள்மண வாளஎன் வாழ்முதலே.

உரை —வெள்ளிய திங்களின் ஒரு கலையுடைய பிறையைத் தலையிலுடையாய், கருணைக்கிருப்பிடமானவனே, கயிலாயமென்னு மலையுச்சியாய், இமயமலையுடைய உமையம்மை கணவ, எனது வாழ்க்கைக் காரணனே, வலையிடை யகப்பட்ட மான்போன்ற மருட்சிப் பார்வையுடைய பெண்டிர் கண்வலையிற் சிக்கி (அவர் வழியை) மேற்கொண்டு திரிந்தேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு —மிலைத்து - அணிந்து, சூடி, மேற்கொண்டு. தலை- இடம். (௪௦)

முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைசசெய்கா யம்பொறேன்சிவ னேமுறையோ முறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் காஎன் சிவகதியே.

உரை நடை —திதலை... .கதியே, சிவனே, முறையோ முறையோ, சிதலை .. .. பொறேன், வேட்கை வெந்நீரில் முதலை... .கடிப்ப மூழ்கி கண்டாய்.

உரை - தேமல் விளங்கும நகையணிநத நகிலுடைய அம்மை பாகனே, எனது இன்ப நெறியே, சிவபெருமானே, ஐயோ, ஐயோ! புலால் நாற்றமுடைய தசை நிறைநத நோய்க் கிடனுய உடம்பைத் தாங்கமாட்டேன். ஆசையாகிய வெப்பமுடைய நீர் நிலையில், சிவநத வாயினையுடைய மாதராகிய முதலைகள் கடிக்கும் படியாக முழுகித துன்பப்படுவேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு —வெந்நீர் - வெப்பமுடைய நீர்; விருமபத்தகக நீர்; விதலை - துன்பம். விடககு - புலால் நாற்றம். சிதலை - நோய். திதலை - தேமல். (௪௧)

கதியடி யேற்குன் சழல்தந் தருளவும் ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண் தலைமுழையிற்
பதியுடை வாளரப் பாரத்திறை பைத்துச் சுருஙகஅஞ்சி
மதிகெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை மன்னவனே.

உரை :—வெண்டலையாகிய குகையினை யிருப்பிடமாக வுடைய ஒளி பொருநதிய பாம்பு, சந்திரனைப் பாாததுச சற்றுப் பட மெடுத்து அதனைச சுருக்கிக கொள்ளவும், பிறை அதனைப் பார்த் துப் பயந்து கஙகையாகிய நீர் நிலையில் மூழுகி மறைநது கொள் ளுஞ் சடையுடையவனே, அடியேனுக்கு உயர்ஞான நெறியை உன் திருவடிகள் கொடுத்தருளவும, உடல் நீங்கப்பெறு ஊழ் வினையுடைய என்னைக் கைவிட்டிடாதே.

குறிப்பு — கதி - வீடு என்றுங் கூறுப. விதி - பிராரத்தவினை அல்லது நிகழ்வினை. முழை - குகை. இற்பதி - வீட்டிடம், தங்கு மிடம் இறை - சிறிது. நெடுநீா - கங்கை. பைதது - படமெடுத்து. இறை பார்த்துச சுருங்க, எனக்கொண்டு இறைவனைப் பார்த்துப் பயந்து சுருக்கிக்கொள்ளு மென்பாருமுளர். (சஉ)

மன்னவ னேயொன்று மா(று)அறி யாச்சிறியேன மகிழ்சசி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க வேதமெய்நூல
சொனனவ னேசொற் கழிந்தவ னேகழி யாதொழும்பர்
முன்னவ னேபின் னுமம ஆனவ னேயிம முழுதையுமே

உரை - மேலாகிய வேதமாகிய உணமை நூலினைப் பக்கு வர்க்கு உணாததியவனே, சொல்லினுககப்பாற் பட்டவனே, நீங காத தொண்டாகளு முனனிற்பவனே, அவர்கட்குப் பின்னின்று ஆதாரமானவனே, இப்படைப்பு முழுதும ஆனவனே, அரசனே, உன்னை வந்து கலக்கும்விதத்தை அறியாத சிறியேனுக்குக களிப்பு விளைககுஞ் சோதியனே, என்னைக் கைவிட்டிடாதே

குறிப்பு.—'நீலாஙக மேனி நேரிழை யாளொடு மொழிந்த சீலாஙக வேதம்' என்று திருமூலர் செப்பியவாறே, இப்போது வழங்கும வேததநின் மேலான தொன்றையே அடிகள் இஙகே குறிப்பிததோர்க 'மாறு' என்பதற்குக் கைம்மாறு எனப் பொருள் கொண்டு,'ஒரு கைம்மாறும் அறியாத'என்றும் பொருளுரைக்கலாம். பொது வேதமும் மிகக (சிறப்பாகிய) மெயந் நூலாகிய ஆகமமு மெனப் பொருள்கொள்ளுவாருமுளர். 'ஆனவனே' என்பதைப் 'பின்னும்' 'முழுதையும்' என்பவற்றோடு தனித்தனி யியைக்க. ()

முழுதயில வேற்கண் ணியரென்னும் மூரித் தழல்முழுகும
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுது செலவான்நற் றொழும்பரிற் கூட்டிடு சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை யாய்உன்னைப் பாடுவனே

உரை —கூரியவேல்போன்ற கண்ணையுடையாரென்னப்படும் வலிமையுடைய தீயிலே முற்றிலும விழுந்து உருகி யொழியும வெண்ணெய் போன்ற என்னைக் கைவிட்டிடாதே உனது தேன் ததும்பு திருவடியை அடைதற்கு வணங்கிச் செல்லுஞ் சிதாகாயத் தொண்டரோடு என்னைச் சேர்த்துவிடு. இழிந்தேன், தலைவனே, உனக்கு வணக்கம் குற்றஞ்செய்யு மென்னைக் கைவிடாதே. முதல்வனே, உன்னை நான் பாடுவேன்.

குறிப்பு :—'முழுது' என்பதை, முழுகும் என்பதனோடு சேர்க்க. அயில் - கூர்மை. 'எமபிரான் சோத்து' என மாற்றுக. சோத்து - சோத்தம். இழிந்தோர் உயர்ந்தோர்க்குச் செய்யும் அஞ்சலி. மூரி - வலிமை (௪௪)

பாடிற்றிலேன் பணியேன் மணிநீ யொளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாயவியந் தாங்கலறித்
தேடிற்றிலேன்சிவனெவ்விடத் தானெவர் கண்டனரென்(று)
ஓடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேன்நின் றுழைத்தனனே.

உரை —மாணிக்கமே, நின்புகழைப் பாடமாட்டேன், நின்னை வணங்கேன், எனக்கு ஒளித்துக் கொண்ட உன்பொருட்டு பசிய ஊனுடம்பைத் தொலைத்திடாத என்னைக் கைவிட்டிடாதே. அதிசயமுற்றுக் கதறித் துதித்து, ஒளித்த சிவபிரான் எவ்விடத்திலுள்ளான், யார் அவனைக் கண்டார்களென்று தேடமாட்டேன், நாடி ஓடமாட்டேன். வாடிச் செயலற்று உள்ளங் கசிந்து அன்பு செய்யேன். வீணே நின்று மனம் வருந்தினேன்.

குறிப்பு :—மணி - மாணிக்கம். பசூன் - பசிய ஊனென்றது நெருப்பிலே வேகாமல் விடப்படும் உடம்பை. வீடுதல் - அழித்தல், நீக்கல். உழைத்தல்-வருந்தல். (௪௫)

உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்(து) ஈயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென் றறைவன் பழிப்பினையே.

உரை :—மானைப்போன்ற பார்வையுடைய பெண்டிரது நகிலின் கணை, பலாப்பழத்திலே மொய்க்கும் ஈயைப்போல ஆசைப்படுவேனைக் கைவிட்டிடாதே நீ கைவிடிலோ, விடத்தை உண்கின்ற மேகம் போன்ற கரிய கழுத்தையுடையன், குணமில்லாதவன், மனிதன், குறைந்த அறிவுடையன், பண்டைப் பெரிய ஆண்டி என்று அடிக்கடி உன் இகழ்ச்சியை எடுத்துரைப்பேன்

குறிப்பு :—உழை - மான். முக்குணங்களையுங் கடந்தவன் இறைவன் ஆதலின், 'குணமிலி' என்றார். மானை இடக்கையில் தரித்தவனாதலின்—'மானிடன்' என்றார். கலை குறைந்த பிறை மதியைத் தலையிலுடைமையால் 'தேய்மதி'யன். பழமையான பெரிய மேலோன - 'பழைதரு' மாபரன. பரன் - 'அந்நியன்' என்றும் பொருள் கொள்ளலாம (ஙசா)

பழிப்பில்நின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண் மணிப்பணிலங்
கொழித்துமந் தாரமந் தாகினி நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு தாரவனே

உரை :—வெள்ளிய மணியாகிய முத்தினையுஞ் சங்கினையுங் கொழித்துக்கொண்டு, மந்தார மலரைத் தள்ளிக்கொண்டு அழகும் பெருமையுந் தழுவிவரும், (சடையை) இடமாகக்கொண்ட வான் கங்கை நீரில் மதியாகிய பிறைத்தோணி சேர்கின்ற, வெற்றி யுடையவனே, இகழ்ச்சிக்கிடமில்லாத நினது திருவடிப் பழமைத் தொண்டினை யடைந்து, அது நழுவ, உன்னை இகழ்ந்து (யாதுஞ் செய்யத் தெரியாது) விழித்துக்கொண்டிருந்த என்னைக் கைவிட் டிடாதே.

குறிப்பு :—விழ - நழுவ. வெண்மணி - முத்து. பணிலம் - சங்கு. மந்தாகினி - ஆகாயகங்கை. நுந்தும் - தள்ளும். பந்தம் - அழகு. தழி - தழீஇ - தழுவி. சிறை - இடம். கலம் - மரக்கலம. தார் - வெற்றிக் கறிகுறி; மாலை. (ஙஎ)

தாரகை போலும் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்
வீரஎன் றன்னை விடுதிகண் டாய்விடின் என்னைமிக்கார்
ஆரடி யான்என்னின் உத்தரகோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே.

உரை:—விண் மீனாகிய நட்சத்திரம் போலும் வெண்டலை மாலையையும், தீயையும் பாம்பையும் தலையிற் பூண்ட வீரனே, என்னைக் கைவிட்டிடாதே. என்னைக் கைவிட்டால், பெரியோர், நீ யாருடைய அடிமையென்று என்னைக் கேட்பின் உத்தரகோச மங்கை மன்னனின் சிறந்த அடியார்க் கடிமையேனென்று விடை கூறி உன்னை அவர்கள் சிரிக்கும்படி செய்வேன்.

குறிப்பு:—தீயினை இறைவன் அணிந்திருப்பதாகக் கூறாது, தீப்போன்ற கொடுமையைச் செய்யும் விடத்தையுடைய பாம்பென்று கூறுதலுமுண்டு. மிருத்தியுஞ் சயதேவ தியானத்தில் நெருப்பினை இறைவன் சென்னியிற் றரித்திருப்பது கூறியுள்ளது. அப்படியே கபாலி வடிவத்தில் வெண்டலை மாலை அணிந்தமை கூறப்பட்டது. இச்செய்யுளுள் தகுதியற்றவன் அடியானா யிருப்பினும், கைவிடும் படியான அடிமையை யுடைமை இறைவனுக்கு நகையாட்டத்தக்க இழுக்கென்றார். (சஅ)

சிரிப்பிப்பன் சீறும்பிழைப்பைத் தொழும்பையும் ஈசற்
கென்று, விரிப்பிப்பன் என்னை விடுதிகண் டாய்விடின் வெங்
கரியின், உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ் சூண்பிச்சன
ஊர்ச்சுடுகாட், டெரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்பிச்சன
என் றேசுவனே.

உரை:—சினந்து தள்ளத் தக்க எனது வாழ்க்கையைப் பெரியர் நகையாடும்படி செய்வேன், எனது தொண்டும் இறைவனுக்கே என்று யார்க்கும் கூறி அதனை யாருமறியும்படி பரவச் செய்வேன். என்னைக் கைவிட்டிடாதே. விட்டால், கொடிய யானையின்றோலைப் பூண்ட பித்தன், புலித்தோலாடை யணிந்த பித்தன், விடத்தை யுண்கின்ற பித்தன், ஊர்க்குப் பொதுவாய

மயானத்தில் உறையும் பித்தன், தழலில் நிற்கும் பித்தன், தகாத என்னையும் அடிமைகொண்ட பித்தன் என்று உன்னை வைவேன்.

குறிப்பு:—பித்தர் செயல், தோலைப் பூணல் தகாதன உண்ணல், மயானத்திற் புரளுதல் முதலியன ஆகலின், இவ்வாறு கூறினார். இகழ்வார் போற் புகழுதலாகிய அணி நிந்தாஸ்துதி என்பர் வடநூலார். (௪௯)

ஏசினும் யான்உன்னை ஏத்தினும் என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாய்என்னை ஆளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்அமு துண்ணக் கடையவனே

உரை:—செந்நிறமுடைய பவளமலை போன்ற ஒளியுடைய திருமேனியனே, என்னை அடிமையாக உடையவனே, சிறிய அறிவுந் தொழிலுமுடைய (வானவர் முதலிய) உயிர்களுக்கு இரங்கி, பாற்கடல் கடைந்தவனாகிய திருமால் அமுதத்தை உண்ண, கொல்லும் வேகத்தோடெழுந்த ஆலகால விடத்தை உண்டவனே, யான் உன்னை வைதாலும் வாழ்த்தினாலும் எனது தவறுக்கே மனம் வாடித் துக்கப்படுவேனைக் கைவிட்டிடாதே.

குறிப்பு:—குழைதல் - இளகுதல் என்னும் பொருள்படும். வேசாறுதல், வேசறுதல் என்றாயிற்று. கடையவனே என்று தொடங்கியபடி அவ்வாறே முடித்தமை காண்க. கடையவன் - கடைந்த அவன் - திருமால்; வினைத்தொகை. கடையவன் அமுதுண்ண என மாற்றுக. (௫௦)

திருச்சிற்றம்பலம்

திருவண்ணாமலையில் அருளிய

* திருவெம்பாவை

சத்தியை வியந்தது

வெண்டளையால்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
  சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
  மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
  போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு) இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
  ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

உரை நடை :—'வாள்தடங்கண் மாதே' என்பதை முதலிற் கொள்க.

உரை:—ஒளிபொருந்திய நீண்ட கண்ணையுடைய பெண்ணே, முதலும் முடிவுமில்லாத, காண்டற்கரிய பெருமையுடைய ஒளியானவனை நாங்கள் பாடுதலைக் கேட்டும், நீ (இன்னும்) துயில்கின்றனையோ? உன் செவிதான், சொல்லுவதைக் கேளாத வலிய செவியோ? பெரிய கடவுளது நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் வாழ்த்திய வாழ்த்தின் ஓசையானது தெருவின்கட் கேட்ட அளவிலேயே, ஒருத்தி பொருமியழுது, உடம்பு மறந்து, மலர் நிறைந்த படுக்கைமேலிருந்து கீழே விழுந்து புரண்டு இந்நிலத்தே

* 'எம்பாவாய்' என்று முடியும் திருப்பாட்டுக்களாலாய பகுதி என்பது கருத்து. பொருள் கொள்ளுமிடத்து, விளித்தொடர்களை முதலிற் கொள்வது காண்க.

ஒன்றிற்கு மாகாதவள போல் (மூர்சசித்துக்) கிடக்கலாயினள். இது என்ன நிலை பார். அவள் செயல் அவ்வாறிருகக, எங்கள் தோழியாகிய உன் தன்மை (விழித்தெழாதிருக்கும்) இநநிலேயோ? அது என்ன! எமது கண்பாவை போன்றவளே! சொல்லுவதை யேற்பாயாக, ஆய்வாயாக.

குறிப்பு —தம்முள் நட்புடைய பல பெண்டிர், தஙகள் தோழி யாகிய ஒருத்தியைத் துயிலுணர்த்தற் பொருட்டுக் கூறிய பாட்டாக இது தோன்றுகின்றது. திருவண்ணாமலேயில் மார்கழி மாதத் திலே, விடியற்காலே குளத்தில் முழுகச் செல்லும் பெண்டிர், தம் மவரை யழைப்பதாகவும், தம்முட் பேசிக்கொள்ளுவதாகவும் இப் பதிக மியற்றப்பட்டதாகக் கூறுப. தத்துவ வுணர்சசி சான்ற ஒரு சாரார், மனோன்மணி, சர்வ பூததமனி, பலப்பிரமதனி, பல விகரணி, கலவிகரணி, காளி, ரௌத்ரி, சேட்டை, வாமை என்னும் ஒன்பது சத்திகளுள், முன்னின்றவர் பின்னின்றவரைத் துயிலெழுப்புவதாகவும், எல்லாருங கூடி இறைவனே வழுத்தும் பொருட்டுத் தம்முட் பாடுவதாகவும், இயம்பிய பாடல்களின் தொகுதி திருவெம்பாவை யாகுமென்ப. சத்திகளின் இயக்கத் தால், அனந்தர் வாயிலாக அசுத்தமாயைக்குக் கீழ்ப்பட்டவற்றின் படைப்பு நிகழுமென்ப. வளருதியோ - கண்வளருதியோ - தூங்கு கின்றாயோ. ஏல் ஓர் என்பதை அசையாகவுங் கொள்வர். இப் பாட்டு மனோன்மணி, சர்வ பூததமனியைத் துயிலெழுப்பி இயககு வதை யுணர்த்து மென்ப. 2 (க)

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ(து)இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

உரை நடை —'நேரிழையாய்' என்றதை முதலிற் கொள்க.

உரை :—செவ்விய அணிகளை யணிந்தவளே! மேலாகிய ஒளியான பெருமான்பாற் பிணிப்பாகிய அன்பு வைத்து, நாம் எனும்படி வடிவமாம்படி இரவும் பகலும் அவனது சீரைப் பேசுதற்குரியகாலம் எக்காலமோ? இந்த மலர் நிறைந்த படுக்கையின் கண்ணேயே நீ விருப்பம் வைத்தனை போலும்! (என்று எழுப்பும் பெண்டிர் கூற, துயில் நீங்காத மாது கூறுவாள் :) நங்கையர்களே! சீ, சீ, (நீங்கள் பேசும் நகைமொழிகளுள்) இம்மொழிகளுஞ் சிலவாகும் போலும்; நீங்கள் விளையாடி வைவதற்கு இதுவோ சமயம்? என்றாள்) (பிற மாதர்கள் கூறுவார்கள் :) எமது கண்பாவை போன்ற தோழீ! (இப்படி அக்கத்திற் குழறாதே.) விண்ணோர்கள் வழிபட, அவர்களுக்குத் தோன்றாத திருவடிகளை நமக்குத் தந்தருள வந்தருளுங் குருவாகிய சிவலோகநாதன், தில்லைஞான சபையாண்டவன் ஆகிய பெருமானுக்கு நம் அன்பு எவ்வாறிருக்க வேண்டும்? நாம் யார்? அடிமைகளல்லவோ! சிந்தி; சொல்வதைக் கேள்.

குறிப்பு :—பெண்டிருள் உரையாடலாக இப்பாட்டு இயற்றப்பட்டமை காண்க. சர்வ பூததமனி, பலப்பிரமதனியை எழுப்பு முறையென்ப. பாசம் - அன்பு. 'ஆய்' என்பதைப் பாசம் என்பதனோடுங் கூட்டுக. உணவு முதலியன கொள்ளாது அன்பு செய்தலே கைக்கொள்ள வேண்டுமென்பார், 'என்பாய்' என்றார். கூசுதல் - தோன்றாது மறைதல். 'அன்புயார்' என்பதில் 'யார்' - எது - எத்தன்மையது? திணைவழுவமைதி. ஓர் - சிந்தி. எல் - சொல்லை ஏற்றுக்கொள். (உ)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ

உரை நடை :—'நேரிழையாய்' என்றதை முதலிற் கொள்க

உரை :—செவ்விய அணிகளை யணிந்தவளே! மேலாகிய ஒளியான பெருமான்பாற் பிணிப்பாகிய அன்பு வைத்து, நாம் எலும்பு வடிவமாம்படி இரவும் பகலும் அவனது சீரைப் பேசுதற்குரியகாலம் எக்காலம்? இந்த மலர் நிறைந்த படுக்கையின் கண்ணேயே நீ விருப்பம் வைத்தனை போலும்! (என்று எழுப்பும் பெண்டிர் கூற, துயில் நீங்காத மாது கூறுவாள் :) நங்கையர்களே! சீ, சீ, (நீங்கள் பேசும் நகைமொழிகளுள்) இம்மொழிகளுஞ் சிலவாகும் போலும்; நீங்கள் விளையாடி வைவதற்கு இதுவோ சமயம்? என்றாள்). (பிற மாதர்கள் கூறுவார்கள் :) எமது கண்பாவை போன்ற தோழி! (இப்படி ஆக்கத்திற் குழறாதே.) விண்ணோர்கள் வழிபட, அவர்களுக்குத் தோன்றாத திருவடிகளை நமக்குத் தந்தருள வந்தருளுங் குருவாகிய சிவலோகநாதன், தில்லைஞான சபையாண்டவன் ஆகிய பெருமானுக்கு நம் அன்பு எவ்வாறிருக்க வேண்டும்? நாம் யார்? அடிமைகளல்லவோ! சிந்தி; சொல்வதைக் கேள்.

குறிப்பு :—பெண்டிருள் உரையாடலாக இப்பாட்டு இயற்றப்பட்டமை காண்க. சர்வ பூததமனி, பலப்பிரமதனியை எழுப்பு முறையென்ப. பாசம் - அன்பு. 'ஆய்' என்பதைப் பாசம் என்பதனோடுங் கூட்டுக. உணவு முதலியன கொள்ளாது அன்பு செய்தலே கைக்கொள்ள வேண்டுமென்பார், 'என்பாய்' என்றார் கூசுதல் - தோன்றாது மறைதல். 'அன்புயார்' என்பதில் 'யார்' - எது - எத்தன்மையது? திணைவழுவமைதி. ஓர் - சிந்தி. எல் - சொல்லை ஏற்றுக்கொள் (௨)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ

சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

உரை —முத்துப் போன்ற வெள்ளிய பற்களை யுடையவளே! முன்னே யெல்லாம், எங்களுக்கெதிராக எழுந்துவந்து, என்று தந்தையே, இன்பனே, அமுதம் போன்றவனே யென்று இறைவனை வாழ்த்தி, மிகவும் அதிகமாக வாயூறி இனிமைபயக்கும்படியாக அவன் புகழைப் பேசுகின்ற தன்மையுடையாய், (இன்று நாங்கள் அழைத்தும்) நீ எழுந்து வந்து உன் வாயிற்கதவைத் திறவாதிருக்கின்றாய். (என்று பல மாதர் தங்கள் தோழி யொருத்தியைத் துயிலுணர்த்த) தோழி கூறுவாள்—இறைவன்பால் மிகுந்த பற்றுள்ளவர்கள் நீங்கள். ஆண்டவனுடைய பழைய தொண்டர்கள்; மிகுந்த உரிமை யுடையவர்கள் புதிதாக வந்த அடியேங்களது சிறுமையை ஒழித்து நீங்கள் எங்களை ஆட்கொண்டால், அது கெடுதியா? என்ற அளவில், (எழுப்பிய மாதர்கள் கூறுவார்கள்:) நீ அன்புடையா யென்பது ஏமாற்றமா? உன் தன்மையெல்லாம் நாங்கள் தெரியாதவர்களா? மனந்தூயதாகப் பெற்றவர், நமது பெருமானைப் பாடமாட்டார்களா? எங்களுக்கு வேண்டியது (நீ பாட வேண்டும் என்னும்) இவ்வளவுதானே? எமது பாவை போல்வாய்! நீ இதைச் சிந்தி; சொல்வதைக் கேள்.

குறிப்பு —இது பலப்பிரமதனியும், அவளைச் சார்ந்தாரும் பலவிகரணி யென்னுஞ் சத்தியைத் துயிலுணர்த்திய தென்ப. பத்து—பற்று என்பதன் மரூஉ. இனி, அடியாரிலக்கணம் பத்து முடையீர் என்றும் பொருள் கொள்ளலாம். பாங்கு - உரிமை, ஒழுக்கம். எத்து - ஏமாற்று. அழகியார் - தூயார். இத்தனை - இவ்வளவு; தனை - அளவு. உம், தான் என்ற பொருளில் வந்தது. பொல்லாததோ, என்பது 'பொல்லாதோ' எனக் குறைந்தது. (ரு)

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
  கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம நீயேவந
  தெண்ணிக் குறையில் துயிலேலோர் எமபாவாய்

உரை :—ஒளியுடைய முத்துப்போன்ற பல்லினை யுடையாய்! இன்னும் உனககுப் பொழுது விடியவில்லையோ? (என்று பல மாதர் ஒருத்தியை எழுப்புவான் வினவ, அவள்) அழகிய கிளி போன்ற சொல்லினர் எல்லாரும் வநதுவிட்டார்களா? (என்று கேட்கப் பிறர் கூறுவார்கள்.) வநதவர்களைக் கணக்கிட்டுககொண்டு, உள்ளபடி சொல்லுகிறோம். அதுவரையும், கண்ணினைத துயிலச் செய்து, வீணாக நேரத்தைக் கழிததுவிடாதே. விண்ணினவர் யாவருக்கும் ஒப்பற்ற அமுதமாய் உள்ளவனை, ஞானநூல கூறும் மேலான பொருளானவனை, நமது கணகளுககு இனிய காட்சி தருவானை நாம் பாடி அழுது மனம் முழுதும கனியும்படி உருகு வோமாக. நாங்கள் வநதிருககிறவாகளை எண்ணமுடியாது. நீயே எழுந்துவநது அவர்களை எண்ணிப்பார்த்து, எண்ணிகைகை குறைவு மானல் (மீண்டும் போய்த) தூஙகுக

குறிப்பு :—நித்திலம் - முத்து வண்ணம் - அழகு, நிறம். கொடு - கொண்டு. உள்ளவா - உள்ளவாறு. துயின்று - துயில்வித்து. கசிநது - அழுது. நெகரு - கனிநது. வேதம் - ஞானநூல். இது பலவிகரணி, கலவிகரணியைத துயிலுணர்ததுவதாகக் கூறுப. (ச)

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம
  போலறிவோம என்றுள்ள பொக்கஙக ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
  ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
  சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம இடினும் உணராய் உணராய்காண்
  ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

உரை நடை :—'ஏலக் குழலி' என்பதை முதலிற் கொள்க.

உரை :—மயிர்ச் சாந்தணிந்த கூந்தலுடையாய்! அரி அடியை அறிய முடியாத, அயன் முடியைக் காணக்கூடாத மலைபோன்ற நெடு மேனியனை நாம் அறியக்கூடும் என்று நினைக்கும்படியாக, (வேடிக்கையாகப்) பொய்களையே பேசுகின்ற, பாலுந் தேனும் ஊறினாற்போன்ற இதழையுடைய தந்திரக்காரியே, வாயிற்கதவைத் திறவாதிருக்கின்றாய். இவ்வுலகினரும் வானுலகினரும் பிற உலகினரும் அறிவதற்கு அரியவனுடைய திருவடிவத்தையும் சிறியோமை அடிமையாகக்கொண்டு குற்றம் பொறுத்துச் சீர்செய்யும் பெருங் குணத்தையும் வியந்துபாடி சிவ பெருமானே, சிவபெருமானே, எனச் சரணடையும் குரல் எழுப்பியும் அதைக் கேட்டுணராது துயில் நீங்காதிருக்கின்றாய், எம்பாவாய இதுவோ உன் தன்மை, நாங்கள் சொல்லுவதை ஏற்றுச் சிந்திப்பாயாக.

குறிப்பு .—'மலையினை' என்பதற்கு, மலைவு விளைக்கும் ஒன்றை என்று பொருள் கொள்ளுவாரு முளர். உள்ள - நினைக்க. படிறு - கபடம். இறைவனை அறியமுடியாமை தான் உணர்ந்தும் பிறமாறாக எண்ணும்படி விளையாட்டாகப் பேசுவது, கபடமாயிற்று. கோதாட்டுதல் - சீராட்டுதல். கோது - குற்றம், அதனைப் பாராட்டாமை. முதல் 'உணராய' - அறியாய் என்னும் பொருட்டு; இரண்டாவது 'உணராய்' - (துயிலை) நீங்காய். ஞாலமே, விண்ணே, பிறவே என்பதில் 'ஏ' எண்ணிடைச்சொல். போல் - அசை. இது, கலவிகரணி, காளியைத் துயிலுணர்த்தியதாகக் கூறியதென்ப. (௫)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்

ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்

உரை —(மான்போன்ற விழியுடைய) பெண்ணே! நீ நேற்று 'உங்களை நாளையன்று நானே வந்து துயிலுணர்த்துவேன்' என்று கூறியும், இன்று (நாங்கள் உன்னை எழுப்பவந்த பின்னும் நீ தூங்கிக்கொண்டிருக்கிறாய்; நீ சொன்னசொல்) போயின திக்கினைச் சொல்லமாட்டாயா? இன்னும் (பொழுது) விடியவில்லையோ? வானுலகும் மண்ணுலகும் ஏனையவும் அறியக்கூடாத பெருமான், தானாகவே வலிய எழுந்தருளிவந்து நமக்கு முதற்கருணை காட்டி ஆண்டருளும் பெருமை மிக்க நெடிய கழலணிந்த திருவடிகளைப் பாடிவந்தவர்களாகிய (எங்களுக்கு) நீ உன் வாய்திறந்து ஒன்றும் பேசாது தூங்குகிறாய். பாடி உடலு முருகப் பெறாய் உனக்கே இது பொருந்தும். நமக்கும் பிறர்க்கும் தலைவனாகியவனை நீ பாடுவாயாக.

குறிப்பு —மான் - பெண் என்ற பொருளில் வழங்கியது. தூங்கி ஒன்றும் பேசாமையால், நீ போன இடங் கூறினை யில்லை யென்று பொருள் கொள்ளுவாருமுளர். இது, காளி, ரௌத்திரியைத் துயிலெழுப்புவதாகக் கூறிய தென்ப. (௬)

அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

உரை:—தாயே, (உனது விளையாடல்களுள்) இவைகளுஞ் சிலபோலும்! தேவர்கள் பலரும் எண்ணி யடைதற் கரியவனாகிய ஒப்பற்றவன், பெரும்புகழுடையானாகிய பெருமானது சங்கு

முதலியவற்றின ஒலிகள் கேட்கவும், 'சிவா' என்று வாயைத் திறப்பாய. 'தென்னவனே' என்று சொல்லு முன்னம் தழலிடைப்பட்ட மெழுகு போல உருகுவாய. (ஆனால் இப்போது) எனது இனிய தலைவன், எனது வேந்தன், இன்னமு தானவன் என்று நாங்க ளெல்லோரும தனித்தனியே இயம்பினோம், இன்னமும் தூங்கு கின்றாயோ? அனபில்லாத திண்ணிய மனமுடைய அறிவிலார் போலச் சும்மா படுத்திருக்கின்றாயே! துயிலின் சிறப்புத்தான் என்னென்ன றுரைப்பது!

குறிப்பு.—சின்னங்கள் - அடையாளமாகிய சங்கு முதலிய இசைக்கருவிகள. தென்னா-தென்னவனே, அழகா. ஆனு+ஐ-ஆன+ஐ-ஆனே ஆனு - இனிமை, நன்மை. ஐ - தலைவன். இது ரௌத்திரி, சேட்டையைத் துயிலெழுப்பின தென்ப ௮ (எ)

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

உரை.—கோழி கூவவும், பிற பறவைகள எங்கும் ஓசையெழுப்புகின்றன. திருப்பள்ளியெழுச்சியை உணர்த்த, வெண் சங்கமானது எவ்விடத்தும் முழங்குகின்றது. ஒப்பற்ற மேலான ஒளியானவனும, ஒப்பற்ற மேலான அருளுடையவனுமாகிய பெருமானுடைய நிகரில்லாத உயர்ந்த புகழ்களை நாங்கள் பாடினோம். அவற்றை நீ கேட்கவில்லையா? நீ நன்றாக வாழ்வாய். இது எத்தகையான தூக்கமோ, தெரியவில்லை! வாய்திறக்கமாட்டேன் என்கிறாயே! நமது அரசன்பால் அன்புடைமையாகும் திறமும் இம்முறையாமோ! கற்பகாலங்களுக் கெல்லையாய தலைவனாய் விளங்கிய ஒருத்தனாகிய, உமை பாகனையே பாடுக.

குறிப்பு.—'குருகு' என்பது பறவைகட்குப் பொதுவான பெயர் நாரை, அன்னம் முதலியவற்றிற்கும் பெயராம் எங்கு மென்றதால், பறவைப் பொதுவெனக் கோடலே பொருத்தம். எழில் - எழில் என்பதன் ஈட்சி எழுதல, எழுச்சி. இறைவனது திருக்கோயில்களில் திருப்பள்ளி எழுச்சிக் காலத்தே, வெண்சங்கம் ஊதுதல் மரபு 'விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்' என்ற தேவாரமுங் காண்க பல கோயில்களிலும் சங்கொலிப்பதால், 'எங்கும்' என்றார். மக்கள் எழவேண்டு மென்பதையும், சங்கொலி குறிப்பானுணர்த்தியவாறு கேழ்-உவமை. வாழி-புகழ்ச்சிபோலி கழ்ச்சி. ஆழியான்-வஞ்சகன், கள்வன். ஆழி-சக்கரம், அரசன் 'ஆழி' என்பதற்கு 'அம்பு' என்று பொருள் கொள்ளில், திரிபுரம் எரிக்க அம்பு விட்டான் என்று பொருள்படும் இப்பாட்டு, சேட்டை வாமையை எழுப்பக் கூறியதென்ப. ஏழை - பெண். இங்கே அம்மையைக் குறித்தது. (அ)

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்

உரை :—முற்பட்டனவாகிய பண்டைப் பொருள்கள் யாவற் றிற்கும் பழமையான மெய்ப்பொருளே, பிற்பட்ட புதுமையின்பத் திற்கும் பழமையானவாறே மீண்டும் புதுமை நலந்தரும் தன்மை யனே, உன்னை ஆண்டவனாகப்பெற்ற சிறப்புடைய உன்னடிமைக ளாகிய யாங்கள் உன் தொண்டர்களது திருவடிகளை வணங்கு வோம். அவ்வாறே அவர்களுக்கே (உறவினர்போல்) உரிமையராய் ஒழுகுவோம் அவர்களே எங்கள் கணவராவார்கள். அவர்கள்

விரும்பிக கட்டளையிட்ட முறையே அவர்கட்கு அடிமையராயக குற்றேவல் செய்வோம். இநத முறையே எஙகளுககுக கிடைக்கு மாறு எம்பெருமானே அருள புரிவையாயின், எவவகையான குறைபாடும் (தேவையும்) இல்லாதவாகளா யிருப்போம

குறிப்பு :—கன்னிப்பெண்டிர் கூறிய பாட்டு இது என்று தோன்றுகிறது போர்தரும்-மீட்டும் பழமையா யிருநததுபோலவே புதுமையாயும் என்பது கருதது அப்பெற்றி - அநதத தன்மை, அதாவது, புதுமை. பாஙகு - உறவு. உரிமை, நட்பு, துணை நவ சக்திகள் ஒருஙகு இறைவனை வழுத்திய பாட்டாகவுங கூறுப. (௧)

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலா
  போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால திருமேனி ஒன்றல்லன
  வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
  கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாபிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றா ஆரயலார்
  ஏதவனைப் பாடும பரிசேலோ ரெம்பாவாய்

உரை.—கீழுலகம் ஏழினுக்குங கீழாய்ச சொல்லி னளவைக் கடநததாய் உளளது திருவடிக் கமலங்கள். மலா நிறைநது அழகு செய்யுந திருமுடியும் எல்லாப் பொருள்களின் முடிவாயுள்ளது. அவன் திருமேனியில் ஒரு பகுதியில் அம்மை இருப்பள் ஒரு திருவடிவமுடையனலலன். ஞான நூல்கள் முதலாக, வானுலகி னரும் மணணுலகினரும் ஆகிய எல்லாரும் புகழநதாலும், புகழ்ச்சி முற்றுப்பெறுத ஒப்பற்ற உயிர்த்துணைவன், அடியார உள்ளததி னன்; குற்றமற்ற சங்காரப்பெருமானது கோயிலின்கண் உள்ள குற்றமற்ற உயர்ந்த இனத்தினராகிய பெண் குழந்தைகளே! அவன் ஊர் யாது? அவன் பேர் யாது? அவனுககு யார் உறவி னர்? யார பக்கத்திலுள்ளவாகள்? அவனைப் பாடும் வகை யாது? சொல்லுவீராக.

குறிப்பு :—'வேத முதல்' என்பதைத் தனி முடிபாக்கொண்டு அவன் அறிவு நூல் தோற்றுவித்த மூலகாரணன் என்ப. 'பேதையை ஒரு பாலிலுடைய திருமேனிகள் பல' என்பாருமுளர். ஓதல் - பேசுதல். உலவா - வற்றாத, முடியாத. உளன்-உளத்திருப்பவன். உளத்தை (க் கோயிலாக) உடையவன், என்றலுமொன்று. 'குலம்' என்பதை 'அரன்' என்பதோடு சேர்த்து உருத்திரருட் சிறந்த 'மகா ருத்திரன்' என்றலுமொன்று. குலம் என்பதை, 'பிணாப்பிள்ளை' என்பதனோடு கூட்டுக. பிணா-பெண். 'ஏலோ ரெம்பாவாய்' என்றது அசையளவில் நின்றது. (௧0)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
  கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
  செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
  ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
  எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

உரை நடை: 'செய்யா, ஐயா' என்ற விளிகளை முதலிற் கொள்க.

உரை:—நிறைந்த நெருப்புப்போல முழுதுஞ் செம்மை நிறமுடைய திருமேனியனே, வெள்ளிய திருநீற்றுப் பொடியில் மூழ்கினவனே, ஒப்பற்ற வீட்டுச் செல்வனே, நுண்ணிய இடையும் மைபொருந்திய நெடிய கண்ணுமுடைய உமையம்மை கணவனே, தலைவனே, வண்டுகள் நிரம்பிய அகன்ற தடாகத்திற் புகுந்து 'முகேர்' என்ற ஒலியெழும்படியாக நீரினைக் கையாலிறைத்து முழுகி உன் திருவடிகளைப்பாடி, உனது பரம்பரையடிமைகளாக நாங்கள் வாழ்ந்தோம். (நீ பக்குவத்திற்கேற்பப் படிப்படியாக) அழகாக ஆட்கொண்டருளும் திருவிளையாட்டினாலே, உய்தி கூடுகின்றவர்கள் பிழைத்துக் கதிசேரும் வகைகளிலெல்லாம்

யாங்களும் படிப்படியாக உய்தி கூடி முடித்தோம். இனி, நாங்கள் இளைத்துப்போகாமல் எங்களை நீ காப்பாற்றுவாயாக.

குறிப்பு —மொய் - வண்டு. 'முகேர' - தண்ணீர் எறிவதா லுளதாமொலி. குடைதல் - நீராடுதல், துளைத்தல். வழி - பரம்பரை. ஐ - அழகு. ஐயா - ஐயாக - அழகாக. உய்யும்வகை - படிப்படியாய் கதிக்கண் மேற் செல்லுமுறை (௧௧)

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனநற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்

உரை:—(நம்மைப்) பிணித்த பிறவித் துன்பம் ஒழியும்படி, நாம் மகிழ்ந்து முழுகும் புனித நீருடையான், அழகிய தில்லைஞான சபையின்கண், அனல் ஏந்தி நடம் புரிகின்ற கூத்துவல்லான் இந்த ஞாலத்தையும் வானுலகத்தையும் நாம் எல்லாரையும் தோற்றுவித்தும் நிலைபெறுத்தியும் ஒடுக்கியும் விளையாடுபவன், (ஆகிய பெருமானுடைய) புகழ்ச் சொற்களையுமுரைத்து, (சங்கினாலாகிய) வளையல்கள் ஒலிக்கவும் நீண்ட (மேகலைகளாகிய) ஆடைகள் அசைந்து ஓசையெழுப்பவும் அழகிய கூந்தலின்மீது வண்டுகள் ரீங்காரஞ் செய்யவும், மலர்கள் விளங்குகின்ற பொய்கையில் ஆடி, நம்மை உடைய பெருமானது பொலங்கழல்களை வணங்கித் துதித்துப் பெரிய (மலைச) சுனைநீரிலே ஆடுவோமாக.

குறிப்பு —ஆர் - கட்டு 'தீர்த்தன்' என்பதற்குத் தூயகுண முடையான், ஆசான என்ற பொருள்களுமுள. நல் - அழகிய. 'தீயாடும்' என்பதற்குச் 'சோதியாக நின்றாடும்' என்பாருமுளர்.

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

உரை நடை —‘கொங்குண் கருங்குழலி’ என்பதை முதலிற் கொள்க

உரை:—வாசனையை (இயற்கையாகக்) கொண்ட கரியகூந்தலையுடையாளே, சிவந்த கண்ணையுடைய திருமாலிடத்தும், நான்முகனிடத்தும், பிற விண்ணவர்களிடத்தும் வேறெவ்விடத்து மில்லாத ஒப்பற்ற பேரின்பம் நம்மைச்சாரும்படியாகச் சிறியோங்களாகிய நம்மைப் பாராட்டி, இவ்வுலகிலே நமது வீடுகள் தோறும் எழுந்தருளி வந்து தனது செந்தாமரை மலர்போன்ற அழகிய திருவடிகளைக் காட்டியருளும் அண்ணலை, அழகிய கருணைநோக்குடையமன்னனை, அடிமைகளாகிய நமக்குக் கிடைத்தற்கரிய அமுதத்தை, நமது தலைவனை நாம் பாடி, அழகு மிகுந்து விளங்கும்படியாகத் தாமரைத் தடாகத்தின் புதுப்புனலில் வீழ்ந்து முழுகுவோமாக.

குறிப்பு :—பெண்டிருள் ஒரு பெண்ணை விளித்து மற்றொரு பெண் கூறுவதாக இயற்றப்பட்டது. கொங்கு - மணம். உத்தமப் பெண்டிர் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டென்ப. சேவகன் - வீரன், அண்ணல். நலம் - அழகு. (௧௭)

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

உரை நடை :—‘பெண்ணே’ என்பதை முதலிற் கொள்க.

உரை :—மாதே! அண்ணாமலை யுறையும அண்ணலின் திருவடித் தாமரைகளின்பாற்போய் வணங்கும் வானவர் மகுடங்களிலுள்ள இரத்தினங்களின் தொகுதி, (இறைவன் பேரொளிமுன்) சிறப்பு விளக்கமிழந்தாற்போல, (வான்) இடம நிறையுங் கதிரவனது கதிர்கள் தோன்ற, இருளானது மறைய, நட்சத்திரங்கள் குளிர்ச்சி பொருந்திய தமது ஒளிமங்கி யொழிய, அப்போழ்திலே, ஆணாகிப் பெண்ணாகி அலியாய விளக்க மிக்க ஒளி பொருந்திய வானுலகமாகி மண்ணுலகமாகி, இவ்வளவிற்கும வேறாய பொருளாகி, அன்பர்க்குப் பெருமை மிக்க அமுதமுமாய் நின்ற பெருமானது திருவடிகளைப்பாடி இப் புதுப்புனலில் வீழ்ந்து மூழ்குவோமாக.

குறிப்பு :—முன்பாட்டுப்போல, இதுவும் ஒருத்தி மற்றொருத்திக்குக் கூறியது. அண்ணாமலையில் இப்பதிகஞ் செய்யப்பட்டதற்கு, 'அண்ணாமலையான்' என்றது ஒரு குறிப்பு. தில்லையும் சில செய்யுட்களில் பேசப்படுதல் காண்க. வீறு - தனிச் சிறப்பு. கண்ணார் இரவி என்பதிற் கண் - இடம். 'கண்ணாரமுது' என்பதிற் கண் - பெருமை. ஒளி யுருவினராய விண்ணவர் வாழும் விண் 'பிறங்கொளிசேர்' என விசேடிக்கப்பட்டது. கழல் - திருவடிக்கு இலக்கணைப் பெயர். (௧௮)

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்(கு)அப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்(கு)இப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்

உரை :—எங்கள் தலைவனே, 'உன் கையிலுள்ள பிள்ளை உனக்கே சரண்' என்னும் பழமொழியைப் புதுப்பிக்கின்றோ

மென்று நீ சொல்லக்கூடியதை அஞ்சி, உனக்கு ஒரு விண்ணப்பஞ் செய்கின்றோம். நீ கேட்டருள்வாயாக. எமது நகில்கள், நினது அன்பரல்லாதார் புயங்களைத் தழுவாதொழுக. எங்கள் கைகள் உனக்கன்றி (வேறு தேவர்க்கு) எவ்வகையான தொண்டுஞ்செய்யா தொழிக. இரவும் பகலும் எங்கள் கண்கள் நின்னைத் தவிர வேறொன்றையுங் காணாதொழிக. இந் நிலவுலகில் இம்முறையே எங்களுக்கு ஐயனே நீ அருள் புரிவையாயின், பகலவன், எத்திசை யில் உதித்தால் எங்களுக்கு என்ன? (எது எப்படியானாலும் கவலை யாதுமில்லை).

குறிப்பு:—பெண்கள் பலரும் இறைவனை வேண்டிய பாடல். தாயே தன் பிள்ளையைக் காத்துக்கொள்ளுவளாதலின், அவள் பிள்ளை அவளுக்கு அடைக்கலமென்று பிறர் சொல்லுதல் மிகை யாகும். அதுபோல, இறைவனிடம் வேண்டுகோள் செய்தல் மிகையென்ற அச்சம் இருப்பினும், ஆசைபற்றி வேண்டுகோள் செய்வமென்பார், இப் பழமொழியை எடுத்தியம்பினர். 'அப் பழஞ்சொல்' என்பதில், அகரம், பண்டறிசுட்டு. அங்கு - அசை. அதுவும் பழமை குறிப்பதே. அன்பரிற் காணப்படுபவனும் இறை யாதலின் அவரைக் காண்பதை வேறாக வேண்டிற்றிலர் அன்பர் பணி அரன்பணியாதலுங் கொள்க. மாதர் பலராதலின், அவர் கள் கணவரும் பன்மையிற் கூறப்பட்டனர், ஒவ்வொருவர்க்கே ஒவ்வொரு கணவன், என்ற கருத்திற்கு ஈண்டு மாறு யாது மில்லை. (கக)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
 போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
 போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
 போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
 போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்

உரை :—எங்களைக் காப்பாற்றும் பெருமானே! எப்பொருட்கும் முதலாயுள்ள உனது திருவடிக் கமலங்களை எங்களுக்குக் கொடுத்தருள்க எவற்றிற்கு முடிவாயுள்ள செவ்விய இளங் குழை போன்ற மெல்லிய திருவடிகளை எங்களுக்குக் கொடுத்தருள்க. எல்லா உயிர்களும் தோன்றுதற் கேதுவாகிய திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் நிலைபெறுதற்குரிய பாதுகாப்பாகிய அழகிய கழலணிந்த திருவடிகளுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் முடிவெய்துதற் கேதுவாகிய திருவடிக ளிரண்டிற்கும் வணக்கம். திருமாலும் பிரமனும் (செருக்கினால்) காணவொண்ணாத தாமரை மலர்களுக்கு வணக்கம். நாங்கள், உய்தி கூடும்படி, அடிமையாக்கி ஆண்டருளும் பொற்பூம் பாதங்களுக்கு வணக்கம். (அவ்வாறு) வணங்கி நாம், நீர் நிறைந்த துறையின்கண் முழுகுவோமாக. (அல்லது நாம் ஆடும்) மார்கழி நீருக்கு வணக்கம்.

குறிப்பு :—முதலடியிற் போற்றி என்பதற்கு ஆடி என்பதற்குப்போலப் பொருள்கொண்டு, 'காப்பாற்றுபவனே' என்று பொருள் கொள்ளப்பட்டது. 'போற்றி' என்பதற்குக் காக்க வெனவும் பொருள் கொள்ளலாம். போகம் - பாதுகாப்பு. சடவுலகிற்கும் சித்துலகிற்கும் ஆதியும் அந்தமுமாய் இறைவன் நிற்பதை அடிகள் கூறியருளினர். உயிர்கள் முத்தொழிற் படுவதைப் பின் மூன்றடிகளிற் கூறினர். யான் எனதென்னுஞ் செருக்கில் உயிர் ஆழ்ந்து மறைப்புத் தொழிற் படுவதை அரிஅயனில் வைத்துரைத்தார். அருளலை, ஈற்றயலடியிற் குறித்தார். எனவே இறைவனது ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளலென்னும் ஐந்தொழிலும் இங்குக் கூறப்பட்டமை காண்க. பேரின்பக் கடலுக்கு அறிகுறியாக, ஆர்கழி நீரைக் கூறினர். 'மார்கழி' யெனவும், 'ஆர்கழி' யெனவும் பிரிக்கலாம். (உ0)

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலையில் அருளிய

திருஅம்மானை

ஆனந்தக்களிப்பு

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

உரை நடை :—'அம்மானாய' என்பதை முதலிற் கொள்க. 'அறைகூவி வீடருளும' என்பதை 'ஆட்கொண்டு' என்பதன் பின் அமைகக.

உரை :—அம்மனை யாடும் அம்மையே! சிவந்த கண்ணையுடைய நெடிய திருமாலும், (வராகமாய் மண்ணைத்) தோண்டிப் போயுங் காணமுடியாத ஒளிவிளங்குந தாமரைபோலுந் திருவடிகளோடு நிலவுலகத்தே புகுந்தருளி, நம்முடைய பிறப்பைத தொலைத்து, எம்போலியரையும் அடிமையாக் கொண்டு, வலிய அழைத்து, வீட்டினை நல்கும், தென்னை மரங்கள் செறிநத பொழிலையுடைய அழகிய நல்ல திருப்பெருந்துறை யுடையானாகியும் அழகிய திருநோக்கினனாகியும் சிறந்த பேரருளாளனாகியு மிருப்பவனது அருளழகு ததும்பும் நெடிய கழலணிநத திருவடிகளையே நாம் பாடுவோமாக.

குறிப்பு :—நெடுமா லென்றது, தேவருட் சிறந்தமையோடு, திருப்பாற்கடலில், நெடிய உருவொடு பள்ளிகொண்டமை கருதி

யென்ப செவ்வரி படர்ந்திருத்தலாற் கண்கள் சிவந்தன அது உத்தம விலக்கணமென்ப. உம்மை உயர் வுணாத்திற்று. இடந்து சென்றும் எனமாற்றுக எந்தரம் - எமதுதரம்-எமது பக்குவநிலை. உம்மை இழிவுணாத்திற்று. பாதம - பாதத்தோடு. பாதங்களை யுடைய பெருமானெனவும கொள்ளுவர். தென்னன் - தென் + நன் - அழகிய நல்ல. 'பாணடியன்' எனவும் பொருள்கொளளுப. அறை கூவுதல் - போர்கரு வலிய அழைததல். மகளிர்க்கு இறை வன் அருட்பேரழகு சிறப்பாகத தோன்றுதலின், அஙகணன், அந்தணன், அஙகருணையென அது விசேடிககப்பட்டதுபோலும. 'அமமனை விளையாடும் ஆய' எனப் பொருள்கொள்ளாது, அம் மானை என்பது அமமானுய எனத திரிந்து நின்றது என்பாருமுளர் அசையளவாகவே பெரிதும் அசசொல் அமைந்துள்ளது (க)

பாரார விசும்புள்ளார் பாதாளத் தாாபுறத்தார்
ஆராலுங காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளமபுகுநத
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அமமானுய்.

உரை —நில வுலகிலுளளாரும் வானுலகிலுள்ளாரும் கீழுலகி லுள்ளாரும், இவற்றிற்குப் புறமாய் வேறுலகிலுள்ளாரும், ஆகிய யாவராலும (தமது முயற்சியாலே) காணவொண்ணுத பெருமான், நமக்கு எளிவநதருளிய பெருமையுடையவன், பாண்டிப்பெருமான், பெருந்துறையில் வீற்றிருப்பவனுய், வநது எனக்கு மால் மிகும்படி செயது (பிறவிக்கு) மீளாத நெறிதநது, என்னுடைய உள்ளத்தே கோயில்கொண்ட, தெவிட்டாத அருமருந்தாய், (முன்னொரு காலததிலே பரதவா தலைவன்பொருட்டு) கொநதளிக்குங கடலிலே மீனைப்பிடிக்க வலைவீசிய, (அன்பர்கருப்) பெருவிருப்பாய கடல் போல்வானை, நாம பாடுவோமாக.

குறிப்பு :—அடிகள் அம்மானையாடும் மகளிரைப்பாடக் கூவுவ தாகவே இப்பகுதிப் பாடல்கள அமைந்துள்ளன. 'பேராளன்' என்

பதிற் 'பேர்' - பெருமை. பிசசு - பிதது. விசிறும்-(வலை) வீசும. வாா - கடல். 'வந்து' என்பதைப் 'பிசசேற்றி' என்பதற்குமுன் அமைக்க. (உ)

இநதிரனும மாலயனும் ஏனோரும் வானோரும
அநதரமே நிற்கச் சிவனவனி வநதருளி
எநதரமும் ஆட்கொண்டு தோட்கொணட நீற்றனயச்
சிநதனையை வநதுருககுஞ சீரார் பெருநதுறையான
பநதம பரியப பரிமேற்கொண் டான்தந்த
அநதமிலா ஆனநதம பாடுதுங்காண் அமமானாய்.

உரை:—இநதிரனும் பிரமனும திருமாலும், (அதிகார வகையினராகிய) பிற தேவரும், (பொதுவான) விண்ணவரும, வானுலகிலே (இறையருளை நாடி) நிற்கவும், (அவாகளைக்) கடநது சிவபெருமான் இநநிலவுலகிலே எழுந்தருளி, திருத்தோளி லணியப் பட்ட திருநீறுடையானாய் (பக்குவம் போதாத) எம்போலியரையும் ஆண்டுகொண்டருளி, எமதுளளததுட் புகுந்து அதனை (அன்பால்) உருகுவிக்குஞ் சிறபபுப் பொருந்திய திருப்பெருந்துறைப் பெருமான், (பாண்டியன் முதலோர்) பாசத்தனை அறுபட்டொழியக் குதிரைமே லெழுந்தருளினன். அவன் எமககுக் கொடுத்தருளிய எல்லையற்ற பேரின்பததை வியந்து பாடுவோமாக.

குறிப்பு:—'ஏனோர்' என்பதற்கு வானவரொழிநத முனிவர் முதலிய பிறர் என்பாருமுளர். 'அநதரம்' என்றமையால், 'ஏனோரும்' என்றது மேலுலகிலுள்ள விண்ணவர் வகையினரையே. வானிற் செல்லும் முனிவர், வானவருள் அடஙகுதல் கூடும். 'அநதரம' என்பதற்கு 'நடு' வென்று பொருள். 'இறைவன் சிவலோகம் நின்றுவரும்வழியில் இடையிலே' என்றுபொருள்கொள்ளுவாருமுளர். 'தோட்கொண்ட நீற்றனாய் எந்தரமும் ஆட்கொண்டு' என மாற்றுக. உள்ளத்தை உருகுவிப்பவனும் அவனே யாதலின், 'வநதுருககும்' என்றார். பரிய-அற, ஒழிய; 'பறிய'வென்று பாடங் கொண்டு, 'நழுவ' என்று பொருள்கொள்ளுவது முண்டு. (ந)

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காணரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்
டூன்வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

உரை:—வானுலகஞ் சேர்ந்துள்ள விண்ணவரும், திருமால், பிரமன், இந்திரன் என்பாரும், (தவம் புரிவான்) காட்டிலே நின்று (யாதும் உட்கொள்ளாது) உடம்புலரப் பெற்றும், உடலமீது புற்று வளரப்பெற்றும், காணப்பெறாத கடவுள் தானே (ஆசானாக) எழுந்தருளி வந்து தாய்போலும் எனக்குத் தாயைப்போல முதற் றரமான கருணை தந்தருளி, புறத்தே, உடம்பு மயிர் சிலிர்த்து உள்ளே மூச்செழுந்து மகிழ்ச்சியடைதற் கேதுவாகிய, தேன் தன்மையுடையதாய், அமுதத் தெளிவுபோல்வதாய், ஒளி பொருந் தியதாய் இருதயாகாசத்திற் றோன்றிய பெருமைமிக்க திருவடியை நாம் பாடுவோமாக.

குறிப்பு:—முதலடியில் 'வான்' - பூத ஆகாயம். இறுதியடி யில - இருதய ஆகாசம். கான் - கானம் என்பதன் கடைக்குறை. தான் - இறைவன். ஊன்(கண்) உரோம(புளகம்) வந்து, என மாற்றுக. உயிர்ப்பு - மூச்சு, உயிர் தளிர்த்தலாய மகிழ்ச்சி. (௪)

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

உரை:—தனது தன்மையைக் கற்றறியாத உள்ளத்தையுடைய கீழ்ப்பட்ட நாய்போன்ற என்னை அருட் பித்தேற்றுவித்து, வல் லமையுடையானும் அழகிய நல்ல பெருந்துறை வீற்றிருப்பவனும்

(எனது நெஞ்சமாகிய) கல்லினைக் குழைத்துப் பழத்தின் தன்மைய தாகச் செய்து, தனது பேரருள் வெள்ளத்திலே ஆழ்வித்து, எனது இருவினைகளைத் தொலைத்த அந்தணனை, தில்லைப்பதி புகுந்து ஞான அம்பலத்திலே நிலைபெற்று விளங்கும் விரைவுடைய காளையூர்தி யுடையானை நாம் பாடுவோமாக.

குறிப்பு :—இதுவும் ஒரு பெண்ணை நோக்கிக் கூறியதே போலும். 'பிச்சேற்றி' என்பதை 'நாயேனை' என்பதற்குப் பின் அமைக்க. (௫)

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆள்தான் கொண்டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்

உரை :—பாங்கியே! ஒருத்தன் என்பொருட்டுச் செய்த உய்தி நெறியைக் கேட்டனையா? தீட்டிய சுதை பொருந்திய மதில்கள் பக்கத்திலே சூழப்பெற்ற அழகிய நல்ல திருப்பெருந் துறைப் பெருமான் எனக்குக் காட்டத்தகாத அரிய உண்மைக ளெல்லாங் காட்டித் தனது திருவடித் தாமரைகளைக் காண்பித்துத் தன் அருளாகிய தேனைக் காண்பித்து, சிவபரம் பொருளைக் காண் பித்து, உலகினர் நம்மை இகழ்ந்து சிரிக்கவும், நாம் மேலாகிய வீட்டின்பத்தை அடையவும் என்னைத் தான் அடிமைகொண்ட விதத்தை நாம் பாடுவோமாக.

குறிப்பு :—கிறி - வழி, நெறி. தீட்டு - தீட்டிய சுதை. 'காட் டாதனவெல்லாங் காட்டித் தாள்தாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி, சிவங்காட்டி' என உரைநடை கொள்க. (௬)

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை

நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்

உரை:—இடையறாது நினைவார் நெஞ்சில் வீற்றிருக்கும் உள்ளீடானவனை, (அங்ஙனம் நினையாதார்க்குத்) தூரத்தே யுள்ளவனை, வீரனை, அழகிய நல்ல திருப்பெருந் துறையிலே வீற்றிருந்தவனை, அந்தணனை, மங்கையை ஒரு பாதியிற் கொண்டவனை, நாய்த்தன்மை யுடையேமாகிய நம்மை அடிமையாக ஆண்டு கொண்ட தலைவனை, (நமக்குத்) தாயாகிய மெய்யனை, தானாகவே (ஏழுவிடத்துள்ள) ஏழுலகத்திலுங் கலந்து அவையாய் நிற்பானை, அரசனை நாம் பாடுவோமாக.

குறிப்பு:—'உள்ளான்' என்பதற்கு வடமொழியில், 'அந்தரியாமி' என்று பொருள் கூறுவர். ஆள்வான்-அரசன் தத்துவம்-மெய். இறைவன் ஒருவனே எல்லாவற்றிலுங் கலந்து அவையாய் நிற்கவல்லானென்பார் 'தானே' என்றார். நாய் அதன் முதலாளியைப் பின்பற்றுதல் போல, இறைவனைப் பின்பற்றுங் கட்டுப்பாடுடைய உயிர்களை 'நாயான' என்றார். (எ)

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

உரை:—பண்களைக் கொண்ட பாடலைப் பாடும் பணியினை உண்டாக்கியருளிய, மாது தங்கிய பாகமுடையான், விரும்பத் தக்கான், திருப்பெருந் துறை யுடையான், விண்ணுலகில் நிலை நிறுத்திய புகழுடையான், அகன்ற பூமியின்கண் ஆண்டவனாய் விளங்குபவன், கண் அமைந்த நெற்றியினையுடைய எல்லாம் கடந்த முதல்வன், முழக்க மிக்க மதுரைமாநகரிலே (பிட்டுவாணிச்சிக்

காக) மண்சுமந்து, (உதிர்ந்த பிட்டாகிய) கூலி வாங்கி, மதுரை மன்னனால் அடிபட்டு, அதனாலேற்பட்ட புண்ணையுடைய அவனது அழகிய திருமேனியை நாம் பாடுவோமாக.

குறிப்பு :—'பரிசு' என்பதற்குப் 'பரிசில்' என்று பொருள் கொள்ளுவாருமுளர் பண் சுமந்த பாடலுக்குப் பரிசு தந்தருளும் எனவுரைப்ப. 'பெம்மான்' பெருமானின் மரூஉ என்றுங் கொள்ளலாம் 'கீர்த்தி' கீர்த்தியுடையானுக்கு ஆகுபெயர் மண்டலம் - மண் தலம கலி-ஒலி, முழக்கம, ஆரவாரம். 'அ' வென்ற சுட்டு, மதுரையைக் குறித்தது. மண் சுமந்தகதை வெளிப்படை. (அ)

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டம் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றன்
அண்டமுத லாயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய்.

உரை :—மதியின் ஒரு கலையாகிய பிறையணிந்தவன், மறைகளையுடையான், பெருந்துறைப் பெருமான், முப்புரிகொண்ட நூல் அணிந்தவன், அழகிய காளைவாகனத்தன், நீலகண்ட முடையான், சிவந்த திருமேனியான், வெள்ளிய திருநீறணிந்தவன், உலகத் தொகுதிகட்கு முதல்வன் ஆனவன் ஆயபெருமான், எல்லையற்ற பேரின்பத்தை, (அநாதியேயுள்ள) பழைய முறையிலேயே, பழைய அடியார்களுக்கு, உலகினர் அதிசயிக்குமாறு நல்கியருளும் விதத்தை நாம பாடுவோமாக.

குறிப்பு :—துண்டம்-துண்டு, இங்கே கலையை யுணர்த்திற்று. பழஅடியார் - நெடுநாள் தவம் ஆற்றி ஞானம்பெற்று அனுபூதியிற் றேர்ந்த அன்பர். 'ஆ' - ஆறு என்பதன் கடைக்குறை. அதனை, ஈற்றடியில், 'அண்டம் வியப்புறும்' என்பதனோடும், 'ஈந்தருளும்' என்பதனோடுங் கூட்டுக. (கூ)

விண்ணாளுந் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

உரை :— விண்ணுலகங்களை அரசாளும் இறையவர்கட்கு மேலான அறிவுநூலாசானை, மண்ணுலகில்ஆட்சிபுரியும் வேந்தர்க்கு மேன்மைதரும் பொருளாகி நின்றவனை, குளிர்ச்சி பொருந்திய தமிழ்மொழியினைப்பாதுகாக்குங்கருணைமிகுந்தபாண்டியனாடனை, உமை நங்கை தங்கிய பகுதியானை, (யாம்) விரும்புகின்ற திருப் பெருந்துறையிலே பெருமை மிக்க திருவடிகளைக் காண்பித்தருளி நாயனைய என்னை அடிமையாகக் கொண்ட திருவண்ணாமலை யண் ணலை நாம் பாடுவோமாக.

குறிப்பு :— வேதியன் - வேதமோதுபவன், ஓதுவிப்பவன். வேதம் - அறிவு நூல். மாண்பு - மேன்மை. மூன்றாவது அடியில் இரண்டாவது ‘தண’ நாட்டானை என்பதனோடு முடிவது. கருணை யைக் குறிப்பது. திருவண்ணாமலையில் இப்பகுதி பாடப்பட்ட மைக்கு இது ஒரு குறிப்புப்போலும். (௧0)

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்(பு)ஆர் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக வொப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்

உரை :— சிமிழுக்கிணையான நகிலையுடைய அம்மைபாகன், அழகிய நல்ல திருப்பெருந்துறையுடையான், (தன்) திருவடியை அடைந்தவர்கள் உள்ளத்தைத் தவறாதே உருக்குவிக்கும் இயல்பி னன், அந்தப் பாண்டியன் நாட்டைச் சிவலோகமாகச்செய்த கங்கை

'பொருந்திய சடையுடைய எந்தை, (தனது) இன்பம் மிக்க மாணடி கட்கே ஈடாகக் கொடுக்கப்பட்ட உள்ளத்தை யுடையவர்களது அகத்தே குடிகொண்டிருக்கும்எல்லாவற்றிற்குமஅப்பாலாகிய சுத்த புவனங்கட்கும் அப்பாலாக உள்ள தலைவனை நாம் பாடுவோமாக.

குறிப்பு :—செப்பு - சிமிழ. ஆர் - இணை. 'அப்பாண்டி' என்பதிற் சுட்டானது பழமையையும் பெருமையையு முணர்த்தும். நாலாவது அடியில், அப்பு - நீர் - கங்கை. ஒப்பு - ஈடு. அதாவது, உள்ளத்தை அடகுவைத்து அவன் கழலைப் பெறுதல். கழல் - அடி. உள், என்பது உயிரறிவின் கண் என்று பொருள்படுதல் கூடும முதல் 'அப்பாலை' - அப்பாலுள்ள இடம. 'ஐ' சாரியை, இரணடாவது, 'அப்பாலை' - அப்பாலுள்ள தலைவன். 'ஐ' - தலைவன். 'பிரகிருதிக்கு அப்பாலுள்ளவன்' என்று பொருள் கொள்ளுவாரு முளர். (கக)

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நஞ்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய்.

உரை :— மை விளங்குகின்ற கண்ணையுடைய பெண்ணே! (நான் சொல்வதைக்) கேட்பாயாக. திருமாலும் பிரமனும் இந்திரனும், எல்லாப் பிறவிகளிலும் தன்னைத் தேடவும், (அவர் கட்குத் தோன்றாது,) தகுதியற்ற எனக்குத் தோன்றி, என்னைத் தனது இனிய அருளினாலே, இந்தப் பிறவியிலே குருவாய் வந்து ஆண்டுகொணடு, மேற் பிறவி எடாத வண்ணம் காப்பாற்றி, மெயயான பொருளின்கண் விளங்குபவனாய், மெயயே நிலையான இடமாக வுடையவனாய், எல்லாப் பொருள்களுக்குஞ் சாரபாய், எல்லாம முடியுமிடமாயுள்ள, அததகைய பரமபொருளாகிய நமது சிவபெருமானை நாம் பாடுவோமாக.

குறிப்பு:—'எப்பிறவியுநதேட' என்பது பல பிறவிகளிலுந் தவஞ்செய்து நாடுதலைக குறித்தது. மெயயான பொருளின்கண் இறைவனது விளககம கூறப்பட்டது மெயயான நிலையிலுள்ள உயிரின்கண்ணும, சடசததாகிய தூய மாயையின் கண்ணும் இறைவனது விளககம் குறிக்கப்பட்டது. சததுத தனமையே இறைவனியல்பாதலின், அதுவே அவனுககு நிலைதத இட மென்றார். அததன்மையிலுள்ள சடததிலும் சித்திலும அவன் விளஙகுதலை அவன தோற்றமென்றார். ஆனல் நிலைப்பொருள், நிலையாப் பொருளாய எல்லாம் அவனையே ஆதாரமாகக்கொண்டு நிற்றலின், 'எப்பொருட்குந் தானேயாய்' என்றா 'தானேயாய்' என்பதைத் 'தான் + ஏய் + ஆய்' எனப்பிரித்துத் 'தான் ஏயும் பொருளாய்' என்று பொருள் கொள்ளுவாருமுளர். ஏய்தல் - சார்பாதல். தோன்றாது சார்பாயிருத்தலின், ஒடுக்கநிலை குறித்தவாறும் இறைவன் தோன்றுதலும் நிலைபெறுதலும் ஒடுஙகிநிற்றலும் ஒருவாறு ஈண்டுக் கூறப்பட்ட தென்பாருமுளா. வீடு-முடிவாய இடம். விடு, வீடென நீண்டது. விடுதல் - தஙகுதல். உயிருள் பொருளுக்கும் உயிரில் பொருளுக்கும் முடிவாய இடம் ஒருவகையால் இறைவனே யாவன். உயிர் பக்குவப்பட்டு இறைவனோ டிரண்டறக் கலக்கும். உயிரல்லன, மாயையி லொடுங்க, மாயை சிவசத்தியைச் சார்ந்து நிற்கும். 'நஞ்சிவன்' என்றது உரிமைபற்றி. அப்பொருள் - அந்த ஒரு பொருள். (கஉ)

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழைபுரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்நதறியாக்
கையானை எஙகுஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுஙகாண் அம்மானாய்

உரை:—நமது கைகளிலேயுள்ள வளையல்கள் ஒலிப்ப, காதிற் பொருந்திய தோடுகள் ஆட, சாந்தணிந்த கூந்தல் அவிழ்ந் தசைய

(அதன் கண் உள்ள மலர் விரிதலால்) தேன் ஒழுக, (அதனை யுண்ண) வண்டுகள் ரீங்காரஞ் செய்ய, சிவந்த மேனியானை, அல்லது நேர்மை யுடையானை, வெள்ளிய திருநீறு தரித்தவனை, உயிர் தாமாகப் போய் அறியமுடியாத இடத்தை யுடையவனை, எவ்விடத்தும் நிறைந்தவனை, அன்பர்க்கு உண்மையாய் விளங்குவானை, அன்பிலார்க்கு விளங்காத அறிவனை, திருவையாற்றில் வீற்றிருந்த பெருமானை நாம் பாடுவோமாக.

குறிப்பு :—குழை - குண்டலமுமாம். 'மையார்' என்பதற்கு மேகம்போலக் கரிய, அல்லது 'அஞ்சனம்போலக் கருநிறமுடைய' என்பாருமுளர். 'கையானை' என்பதற்கு, 'ஒழுக்கத்தானை' என்று பொருள் கொள்ளுவாருமுளர். கை - இடம், ஒழுக்கம். 'அறிந்து சேரா' என்று மாறிப் பொருள் கொள்ளுவது முண்டு (கந)

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய [குருவுடை
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்ட
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

உரை :—ஆனையாயும் புழுவாயும் மனிதராயும் வானவராயும் பிற பிறவிகளை யுடையனவாயும் பிறந்தும் இறந்தும் இளைப்புற்றேனை (ஆட்கொண்டு உள்ளத்தை மாத்திரமல்லாமல்) எனது உடம்பையும், உளம்நின்று உருகுவித்து, எனது இருவினையை ஓட்டுதலை விரும்பி, தேனும் பாலும் சர்க்கரையும்போலத் தித்திப்பானுயுள்ள தலைவனைப்போல ஆசானு யெழுந்தருளி என்னைத் தனது தொண்டிலே ஏற்றுக்கொண்டருளிய சிதாகாயத்தனது அழகிய திருவடிகளையே நாம் பாடுவோமாக.

குறிப்பு :—பிறவாய் - பிறவியாய் என்பதன் குறுக்கம் 'ஏனை' என்றமையால் பிற உயிர்களாய் என்று பொருள் கொள்ளுதல் மிகை. அறி விச்சை செயல் மூன்றுக்கும் இன்பமளித்தலின்,

மூன்றுவமை கூறினார் போலும். கோன் - (காதலனாகிய) தலைவன் தொழும்பு - தொழும்பன் என்று பொருள் கொள்ளுவாரு முளர். 'வானவன்' என்பதற்குத் 'தேவன்' என்று பொருள் கோடலு முண்டு. (கச)

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்

உரை :—தக்கன் செய்த யாகத்திலே, சந்திரனை மெலிவித்து, இந்திரனது புயங்களை நெரியும்படி தாக்கி, யாகத்தலைவனின் தலையைக் கொய்தொழித்து, வானிலே செல்லும் விளக்கமுடைய பகலவனது பற்களை உடைத்து, விண்ணவர்களைத் திக்குத் தோறுஞ் சிதறியோடும்படி செய்தலை விரும்பிய, சிவந்த மாலையணிந்த, சோலை பக்கமெங்குஞ் சூழ்ந்துள்ள, அழகிய நல்ல திருப்பெருந்துறையுடையானது மந்தாரப் பூமாலையை வியந்து நாம் பாடுவோமாக.

குறிப்பு :—தக்கன் வேள்விக்கதை வெளிப்படை. எச்சன் - யாகத் தலைவன். செந்தார் - செங்கழுநீர் மாலையாயிருத்தல்கூடும். மந்தாரம் - விண்ணுலகிலுள்ள ஐவகை மரப்பூக்களி லொன்று. அது, செம்பரத்தை யென்பாரு முளர். (கரு)

ஊனாய் உயிராய் உணர்வாய்என் னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்.

உரை —உடம்பாகவும், அறிவாகவும், உயிராகவும், என் கண்ணே கலந்து நின்றருளித் தேனும் அமுதமும் இனிய வெல்லமும் ஆக இனிமை தந்து, விண்ணவர் அறிதற்கரிய வீட்டு நெறியை எங்களுக்குக் காட்டியருளும், வண்டுகள் பொருந்திய கொன்றைமலரணிந்த அண்ணலாய், நிரம்பிய சிறந்த விளக்க முடைய நீங்காத பேரறிவுருவினனாய், எல்லை கடந்த பலகோடி உயிர்களுக்குந் தலைவனாய் நின்ற முறைமையை நாம் பாடுவோமாக.

குறிப்பு —'உயிராய்' என்பதற்கு முன் 'உணர்வாய்' என்பதை வைத்துப் பொருள் கொள்க. அவ்வாறன்றி, நின்ற முறையே வைத்து 'உயிராய்' என்பதற்குப் 'பிராணனாய்' என்று பொருள் கொள்ளுவாருமுளர். உடம்பு, உள்ளம், உயிரென்பன, ஒன்றினொன்று நுட்பமாயுள்ளன. 'அமுதம்' என்பதற்குப் 'பால்' என்று பொருள் கொள்ளுவாருமுளர். உயிரறிவு போலாது, எப்போதும் விளங்கும் அறிவு இறைவனது ஆதலின் 'சீரொளிசேர' என்றார். சீர் இயற்கையைக் குறித்தல் கூடும். அறிவுருவாய் எக்காலத்தும் உயிருலகிற் செறிதலின், 'ஆனா' என்றார். உயிர்கள் எண்ணிலவாதலின், 'அளவிறந்த' என்றார். கோனொருவனே யாதலின், உம்மை கொடுத்தார். முற்றும்மையுமாம். (கசு)

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்(று)
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்.

உரை.—அழகிய கொன்றை மாலையைத் (தலையில்) அணிவேன். அணிந்து சிவபிரானது எழுச்சிமிக்க தோள்களைச் சேர்வேன். சேர்ந்து, அவனைப் புணர்ந்து, அதினுள்ள களிப்பால் அறிவு மயங்கிப் புலவி யெய்துவேன். பின்னர், புலவி நீங்கி, அவனது சிவந்த இதழைப் பெற உருகி நிற்பேன். நெஞ்சம்

உருகி அவனைத் தேடுவேன். தேடி அவனது திருவடியையே நினைந்திருப்பேன். அவனருளைப் பெறாது மெலிவேன். அதனைப் பெற்று மீண்டும் மகிழுவேன். தழலைக் கையிலேந்தி ஆடுகின்ற கூத்தனுடைய செய்ய (கமல) பாதங்களையே நாம் பாடுவோமாக.

குறிப்பு :—இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் அடிகள் இதனுட் குறித்தார். தலைவன் தாரை யணிதல், மாலை யிட்டமை குறிக்கும். ஞான யோகத்தாற் சார்தல், கூடுதலாகும் ஞானத்தாற் கலத்தல் முயங்குதலாகும். பின்னர், உடலோடுள்ள காரணத்தாற் பிரிவு ஏற்பட, ஊடுதல நிகழும். மீண்டும் தலைவனைப் பிரிவாற்றாமை காரணமாக நாடுதலின், தேடுதலும் சிந்தித்தலும் மெலிதலும் நிகழ்வன. உறுதியாக வீடடைதல், மீண்டு மகிழ்தற்குக் காரணம். எல்லாம் இறைவன் கூத்து ஆதலின் அவன் சேவடியைப் பாடுவோமென்றார். (கஎ)

கிளிவந்த மென்மொழியாள் கேழ் கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்.

உரை :—கிளியின் குரல்போல மெல்லிய சொல்லினையுடைய அம்மையின் ஒளி விளங்கும் பாகத்தானை, (இறைவனடிமுடி காண்பான்) வெளிப்போந்து முயன்ற திருமாலும் பிரமனும் காண்டற் கரிய அறிவனை, தெளிவு தரும் ஞானத்தேனை, சிறப்புப் பொருந்திய திருப்பெருந் துறையிலே எளியனாய் எழுந்தருளி நினைத்தற்கரிய (எதிர்பாராத) இனிய கருணையாலே, ஒளியுருவனாய்த் தோன்றி நெஞ்சினுள்ளே உயிரறிவின் கண்ணே அருட்பேரொளி விளங்குமாறு அருள்புரிந்த அழகிய பேரருளானை நாம் பாடுவோமாக.

குறிப்பு :—'வந்த' என்பது முதல் வினையாயுந் துணை வினையாயும் வந்தது. கிளி—அதன் குரலுக்காக நின்றது. கேழ்-ஒளி. தேறல் - தேன். உள்ளத்தினுள்ளே, என்பதற்கு நெஞ்சிற்கப்பால் உயிரின் கண்ணே யென்று பொருள் கொள்ளுக. அளிவந்த - அருள் வந்த. வருதல் துணை வினையாயின், அளிவந்த-அளித்த, கருணை செய்த. தெளிவந்த - தெளிந்த. எளிவந்து - எளிதின் வந்து, அல்லது எளிதாய். ஒளிவந்து - ஒளியாய். (கஅ)

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

உரை :—மும்மூர்த்திகளுக்கு முற்பட்டவனை, எல்லாப் பொருளுமாய், அவற்றிற்கு முற்பட்டவனாயும் பிற்பட்டவனாயு முள்ளானை, சடை, பிறை முதலிய தலைக்கோல முடையானை, விரும்பத்தக்க திருப்பெருந் துறையிலே மன்னியவனை, சிதாகாயத்தனை, மங்கை பொருந்திய பங்கனை, அழகிய திருவானைக்காவி லுறைவானை, தெற்கிலுள்ள பாண்டிநா டுடையானை, எனக்கு இனியவனை, என் அப்பனே யென்று அன்பாலழைப்பவர்கட்கு இனிய அமுதத்தை ஒப்பானை, எந்தையை நாம் பாடுவோமாக.

குறிப்பு :—மூவர் - அயன், அரி, அரன். 'முற்றுக்கும்' என்பதை 'முன்னானை' என்பதனோடும் 'பின்னானை' என்பதனோடுங் கூட்டுக. பிஞ்ஞகம் - பின்னலையுடைய சடை யென்பாருமுளர். 'மன்னானை'-என்பதற்கு 'மணவனை' என்று பொருள் கோடலுமுண்டு. வானவனை - தேவனை யென்றும் பொருள்படும். தென் + ஆனைக்கா-தென்னானைக்கா. 'என்னானை' யென்பதில் ஆனுவென்பது இனிமை யென்னும் பொருட்டாய ஒரு

சொல். அது 'ஆன்' என நின்று ஐபுருபேற்றது. அன்னானை - ஒப்பானை. அம்மான் - தந்தை (௧௯)

பெற்றி பிறர்க்கரிய பெருமான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்

உரை —(அன்பரல்லாத) ஏனையோர்க்கு இன்ன தன்மைய னென்று அறியக்கூடாத பெருமான், திருப்பெருந்துறை யுடையான், வெற்றிதருங் குதிரைமேல் எழுந்தருளி வந்து தன்னடியாராகிய (அடிகள், பாண்டியன் எனபாரது) மும்மலங்களையொழித்து அன்புப்பண்பினை யேற்றுச் சீராட்டி, (பல பிறவிகளிலே) உயிரைச் சூழ்ந்து கிடந்த குடும்பப் பாசத்தைத் தொலைப்பானுடைய பண்டைப் புகழினைப் பொருளாகக்கொண்டு, இந்த வினைக்கட்டு அறவே யொழிதலை நாம் அடையும் பொருட்டு, நம்மை விடாது பிடித்த பேரின்பத்தை நாம் பாடுவோமாக.

குறிப்பு —பெற்றி - தன்மை. தொல்புகழைப்பற்றி - தொல்புகழைப் பாடற்பொருளாகக் கொண்டு. பற்றறவு, என்பது 'பற்றற' என நின்றது. கடையடியில், 'பற்றிய' என்பதற்கு 'நாம்' அல்லது 'நம்மை' என்பதைச் சேர்த்துப் பொருள் கொள்ளுக. (௨௦)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

* திருப்பொற் சுண்ணம்

ஆனந்த மனோலயம் †

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
 முளைக்குடந் தூபம்நல்தீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
 நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
 கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
 ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உரை:—நல்ல முத்துக்களினாலாகிய மாலையையும் மலர்மாலையையும் தொங்கவிட்டு, பயிர்முளைகளிட்ட குடம், நறும புகைக் கலசம், நல்ல விளக்கு என்பவற்றை (அவ்வவற்றினிடத்தில்) வைப்பீர்களாக. உருத்திர சத்தியும் (ரௌத்திரியும்), திருமகளும், நிலமகளும், கலைமகளும் பல்லூழிவாழ வெனப்பாடும் பல்லாண்டு பாடுவீராக. கணபதிசத்தியும் காளியும் உமையும் கங்கைமாதும் எழுந்துவந்து இறைவனுக்கு வீசுதற்குக (கவரி மயிரினாலாகிய) சாமரத்தைக் கைப்பிடிப்பீராக. ஆசிரியனும் திருவையாறமர்ந்தானும் அப்பனுமாகியவனைப் பாடி அவனுக்குத் திருமுழுக்காட்ட அழகிய வாசனைப்பொடியை நாம் இடிப்போமாக.

---

* அழகிய வாசனைப்பொடி; இடிக்குங்கால் பாடுந் திருப்பாட்டுப் பகுதி.

† இன்பத்தால் மனம் ஒருமைப்படுதல்.

குறிப்பு —தாமம் - மாலை. நவதானியங்களின் விதைகளை இட்டு நீர்விட்டு பயிர வளர்க்கப்பட்ட குடம், முளைக்குடம். அது மங்கலப் பொருள்களில் ஒன்று. சோமி என்பது சௌமி என்பதன் திரிபு. இலக்குமியையும் நாமகளையுங் கூறவே, 'சத்தி,' உருத்திர சத்தியெனப் பொருள்கொள்ளப்பட்டது சித்தி என்பது கணபதி சத்திகளிலொன்று. உன்மனை முதலிய கலைகளி லொன்ருகவுங் கூறுவர். கௌரி என்பது, காளிக்கும் பெயர். மற்ருெரு பொருள் கன்னியாய நங்கை. அண்டந்தோறும் உள்ள மும்மூர்த்திகளின் சத்திகள், முதலிற் கூறப்பட்டனர். பிரகிருதி முடிவிலுள்ள ஸ்ரீகண்டபுவன சத்திகள் பிற் கூறப்பட்டன. (௧)

பூவியல் வார்சடை எம்பிராற்குப
பொற்றிருச் சுண்ணம இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானுமவந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

உரை:—(கொன்றை) மலர் பொருந்திய நீண்ட சடையையுடைய எம்பெருமானுக்கு அழகிய திருசசுண்ணம் சித்தப்படுத்த வேண்டும். மாங்காய் வடுவின் பிளவுபோன்ற கண்ணுடைய நங்கையீரே, வாருங்கள், வந்து விரைவிற் பாடுங்கள். அடியாராயினேர் வெளியே நில்லாதபடி அவர்களை அழையுங்கள், ஆடுங்கள், வணக்கஞ் செய்யுங்கள். எமது தலைவனும் நாடகமாடியுமான கடவுள் தனது சத்தியும் தானுமாக வநது எம்மை ஆண்டருளும் படி, செவ்விய பொன்போலொளி செய்யும் வாசனைப் பொடியை நாம் இடிப்போமாக.

குறிப்பு:—'பூ' என்பதற்கு அழகு என்றும் பொருள்கொள்ளலாம். குனிமின், என்பதற்கு 'வளைமின்' என்று பொருள் கோடலுமுண்டு. பொற்பொடி கலந்த சுண்ணமென்பாருமுளர். (உ)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்(கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடிக்கநாமே

உரை :—(சாந்து, திலக முதலியவற்றோடு) அழகிய திருநீறு தரித்து, சுண்ணம் இடிக்கும் இடத்தைச் சாணத்தால் மெழுகி, தனிப்பொன் பொடியைத் தூவி, நவமணிகளாகிய நிதிகளைப் பல விடங்களில் வைத்து, இந்திரனுக்குரிய கற்பகத் தோகை நட்டு, எவ்விடங்களிலும் அழகிய தீபங்கள் வைத்துக் கொடிகளை எடுப்பித்துக் கட்டுங்கள். விண்ணவர் தலைவனாய், அயனுக்கு முதல்வனாய், சக்கராயுத முடையானாகிய திருமாலுக்கு நாயகனாய், சிறந்த முருகனார் தந்தையாய் இருக்கும், எம்போலியரையும் ஆட்கொள்ளும், உமை கணவனுக்குத்தக்க அழகிய வாசனைப்பொடியை நாம் இடிப்போமாக.

குறிப்பு :—அணியும் எல்லாவற்றினும் அழகு மிக்கது - திருநீறு, ஆதலின் 'சுந்தரநீறு' என்றார். நிதி - நவமணி அவை யாவன :—முத்து, வைரம், பவளம், மாணிக்கம், மரகதம், கோமேதகம், வைடூரியம், நீலம், புட்பராகம். ஆழி - சக்கரம். திருமாலை இறைவன் மனைவியாகக்கொண்டு சாத்தரைப் பயந்தமை காண்க. தரம் - நிலை, வகை. (ஙு)

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்

தேசமெல் லாம்புகழ்ந் தாடுகச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே

உரை:—உலக்கைகளுக்கெல்லாம், பொன் அல்லது மணி வடங் கட்டுங்கள். நிறமுடைய உரல்களுக்குப் பட்டுச் சீலையைச் சுற்றுங்கள். இறைவன்பாற் காதலுடைய அடியார்கள் எப்போதும் நிலைத்து வாழ்கவென்று வாழ்த்துப் பாடவியமபி நாடெல்லாம் வியந்து கொண்டாடுகின்ற காஞ்சிமா நகரிலுள்ள திருவேகாம்பர நாதரது செம்பொன்னினாலாகிய திருக்கோயிலைப்பாடி இருவினையாய அல்லது நிகழ்வினையாகிய கட்டினை நீக்கி நின்றுபாடி அழகிய சுண்ணம் இடிப்போமாக

குறிப்பு:—காசு - பொன், மணி. காம்பு - பட்டுத்துணி. கறை - நிறம். 'கறை' என்பதற்கே உரல் என்ற பொருளுமுண்டு. கறையுரல் என்பாருமுளர். பாசவினை - வினைப்பாசமென மாற்றுக. 'பறித்து' என்பதற்குப் பறிக்கவென்றும் பொருள் கொள்ளலாம். (௪)

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உரை:—அழகிய புன்சிரிப்புடைய சிவந்த இதழுடைய தோழியரே, திருமாலும், நான்முகனும் குடவிளக்கேந்துவர். அவர்களைத் தவிர, ஏனையோராகிய இந்திரன் முதலிய வானுலகத் தலைவர்கள், (தம்முட் பொருது) முறுமுறுக்கின்ற வானவர்

கூட்டங்கள் ஆகிய எல்லாரும், நமக்குப் பின் அல்லாமல், முன்னாக இறைவன் விருதுகளை யெடுக்க இடங்கொடுக்கமாட்டோம். ஒருங்கு செல்லுதலையுடைய முப்புரத்தை எய்தெரித்த வில்லுடையனாகிய திருவேகம்பனது செம்பொன்னினாலியன்ற திருக்கோயிற் சிறப்பைப் பாடி, முக்கணனுடைய தந்தை திருமுழுக்காடுதற்கு, அழகிய வாசனைப்பொடி இடிப்போமாக

குறிப்பு :—அறுகு - மங்கல விளக்கு. சிங்கம் முதலிய எழுதிய கொடி யென்றுங் கூறுப. அறுகம்புல் லென்னின், அதுவும் ஒரு மங்கலப் பொருளாக எடுக்கப்படுதல் வேண்டும். நறுமுறு - முறுமுறு. முப்புரமுஞ் சேர்ந்தே சென்றனவென்று கேட்கப்படுதலின் 'செறிவுடை' என்றார். முறுவல் - நகை, பல் ஆட - முழுக. (ரு)

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
　　உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
　　காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
　　நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
　　மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே.

உரை :—உலகம் எல்லாம் உரலாக, இருக்கின்ற உலக்கைகள் பல போதா, இன்னும் வேண்டுமென்று பெரியோர் தூண்டுகின்றார்கள். காண்பதற்கு உலகங்கள் போதமாட்டாவென்று சொல்லும்படியாக, உலக்கை யோச்சுவாரோடு கலந்து கொள்வதற்கு அடியார்கள் வந்து நிற்கின்றார்கள். நன்மையுண்டாகும் பொருட்டு நம்மையாட் கொண்டருளி தனது அன்றலர்ந்த புதுமலர் போன்ற திருவடிகளை நமது சென்னிமேற் சூடும் பொருட்டுக் கொடுத்த பனி மலையரசன் மருமகனாகிய பெருமானை இடைவிடாது பாடி மகிழ்ந்து அழகிய வாசனைப் பொடியை இடிப்போமாக.

குறிப்பு :— ஓசுதல் - தூண்டுதல். நலக்க - நன்மையுண்டாக. இமயமலை யரசன் புதல்வியை இறைவன் மணந்தமையால், 'மலைக்கு மருகன்' என்றார். 'மலை' மலையரசனுக்கு ஆகுபெயர். (௬)

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக்(கு)
ஆடப் பொற்சுண்ணம் இடிக்தாமே.

உரை:—கைவளையுந் தோள்வளையும் அசைந்தசைந்தொலிப்ப, அடியார் கூட்டம் புறப்பட்டு (அரகரவென்று) விடாது முழங்க, உலகினர் (அருள்பெற்ற) நம்மை இகழ்ந்து உரை செய்ய, நாமும் அவர்கள் (இயல்பினை) யெண்ணி நகையாட, தமது மென்மை யாகிய திருவடியிலணிந்த பாடகமானது ஒலித்தலையுடைய அம்மை பாகனாகிய நமது மேலாகிய மேலோனுக்கு, பொன்மலையாய மேருவைப்போன்ற மன்னனுக்குத் திருமுழுக்குக்காக, அழகிய சுண்ணத்தை இடிப்போமாக.

குறிப்பு :—சூடகம் - கைவளை. தோள்வளை - புயவளை. ஆர்த்தல் - ஒலித்தல், ஆரவாரஞ் செய்தல், பேசி நகையாடல். பாடகம் - காலணி வகையிலொன்று. பராபரன் - மேலான கடவுள். பரம், அபரம் என்னு மிரண்டிற்கு முதல்வனென்றது மொன்று பொன் மேனியனாதலின், 'ஆடகமாமலையன்ன' என்றார். (௭)

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடபொற் சுண்ணம இடித்துநாமே

உரை :—ஒளிபொருந்திய நீண்ட கணகளையுடைய அழகிய இளமாதர்களே, வரிகளையுடைய உங்கள் கைவளையல்கள் ஒலிப்ப, வளவிய நகில்கள் மேலெழுந்து விளங்க, புயமும் நெற்றியும் (நீற்றினால்) ஒருங்குசேர்ந்து மிளிர, எமது பெருமானே, வணக்கம், வணக்கம, எனறு இடைவிடாதியம்பி, புதிதாய்ப் பூத்த மலர்கள் நாணும்படியான திருவடிகளை, நாயினுங் கீழ்ப்பட்ட நமக்குக் காட்டி இப்பிறவியிலே நம்மை ஆண்டுகொண் டருளிய சிறப்புக் களை ஓயாது பாடி, அவன் முழுகத் திருப்பொற் சுணணம் இடிப்போமாக.

குறிப்பு :—வாள் - ஒளி, வாள்போலும் என்று பொருள் கோடலு முண்டு. முண்டம் - நெற்றி. சோத்து - சோத்தம்; இழிந்தோா செய்யும் அஞ்சலி. நாள் - புதுமை. 'மலர் நாண் பாதம்' என மாறுக. அல்லது, புதிதாய் உண்டான கொடியில் 'அன்றலர்ந்த மலர்' என்றும் பொருள் கொள்ளலாம். வண்ணங் கள் - வகைகள், சிறப்புக்கள். (அ)

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞசள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உரை :—நிலவுலகம் முழுவதும் உரலாகவும் (மலையுட்) பெரிய மேருவாகிய உலக்கையை உரல் நடுவில் நாட்டி உண்மையென்னும்

மஞ்சளை உரல் நிரமபப்போட்டு, மேன்மை மிக்க அழகனாகிய திருப்பெருந்துறையானது செவ்விய திருப்பாதங்களை இடைவிடாது பாடி, சோமையான பொன்னினாலாகிய உலக்கையை வலது கையிற்கொண்டு, தலைவனாகிய அழகிய தில்லை நாதனுக்குத் திருமுழுக்கிட, பொற்சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு :—அட்டி - போட்டு, இட்டு. அட்டுதல் - வார்த்தல், இடுதல். மேருவாகிய உலக்கையை நடுவிலும், செமபொன்னுலக்கையைப் பக்கத்திலும் நாட்டி இடித்தல் கூறப்பட்டது. மங்கலமான பொருள் மெய்யே யென்பதும், அஃதே இறைவனுக்குகந்த திருமஞ்சனப் பொருளென்பதும குறிப்பிக்கப்பட்டது (௯)

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

உரை :—முத்துமாலை அணியப்பட்ட நகில்கள் அசைந்தாடவும், வண்டுக் கூட்டங்கள் நெருங்கிச சூழுங கூந்தலானது அசைந்தாடவும், மனமானது சிவபெருமான்பால் இடைவிடாது பயிலவும், (மன உருககத்தினால்) செவ்விய கயல் மீன்களின் கண்போன்ற கண்களில் (ஆனந்தக) கண்ணீரானது அசைந்திலங்க, நமது காதலாகிய மாலானது எமது தலைவன்பால் இடைவிடாது பற்ற, பிறவிகள் (நமககன்றி) ஏனையோர்பால் நிலவியொழிய, எந்தை திருவருளின் வழி நாம் என்றும் பழகப்பழக, இறைவன் முழுக்கியற்ற, பொற்சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு :—‘ ஆட, ஆட ’ என்பது, தொடர்ந்த செயலைக் குறிக்கப் பல பொருளில் வநதது. (௰)

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உரை:—(நங்கையரே,) உங்கள் வாயைத் திறந்து பல்லின் நிலவொளியானது பக்கத்திலே கதிர்வீச, அழகிய பவளம்போன்ற உதடுகள் துடிப்ப, நம்மை இறைவன் ஆண்ட விதத்தைப் பாடுங்கள். நம்மைத் தொண்டராகக் கொண்டருளிய விதத்தையும் இடைவிடாது பாடி, எமது பிரானைத் தேடுமின்கள். அங்ஙனம் தேடிக் காணுவிடின் திகிலடைந்து, பின் தெளிந்து, மனமகிழ ஆடுங்கள். ஆடி, (தில்லை) யம்பலத்திலே நடமாடிய பெருமான் திருமுழுக்கிடப் பொற்சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு:—மாடு - மருங்கு, பக்கம். பவளம் - இதழுக்கு ஆகு பெயர். 'தேடித் திகைத்துந் தேறிச் சித்தங் களிப்ப ஆடுமின்' என உரைநடை கொள்க. ஈண்டுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், ஒருவாறு சுட்டப்பட்டன. (கக)

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உரை:—செந்தாமரைப் பூப்போன்ற, செவ்வரி படர்ந்த இரு கண்களையும், பொன்னாலாகிய கங்கணமணிந்த தோள்களையும், பாம்பின்படம் போன்ற அரை முன்பக்கமு முடைய அழகிய மாதர்களே, (நஞ்சின்) கருநிறம் பொருந்திய திருக்கழுத்துடையானை, வானுலகினர்க்கு அமுதமானானை, மாணிக்கம் போலுஞ் செம்மேனியொடு நடிக்குந் திருக்கூத்துடையானை, தலைவனை, தலைவர்க்கு வள்ளலை, நம்மைத் தன்வயப்படுத்தி ஆண்டு கொண்டருளி, தனது அரிய தன்மையைக் காண்பிக்கும் பொய்யர்க்குப் பொய்யனாய், உண்மையாளர்து மெய்ப்பொருளா யுள்ளவனைப் பாடித் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு:—மை - கறுப்பு, இருள். மாணிக்கக்கூத்தனை - மாணிக்கம்போலுங் கூத்தனை. அகம்-தன்னுள். அரி-செவ்விய ரேகை. அது உத்தமப் பெண்டிரிலக்கணம். இணை - இரண்டு; ஒன்றிற்கொன்று ஒப்பான, என்றும் பொருள்கொள்ளலாம். தொடி - கங்கணம். 'பையரவு' அரவுப்பை என மாற்றுக. பை- படம். (கஉ)

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்அமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

உரை:—மின்னல் போலொளிரும் இடையினையும் செவ்விய பவளவாயினையும் கரிய கண்ணினையும், வெள்ளிய பல்லினையும் இசை தங்கிய மெல்லிய சொல்லினையும் உடைய மங்கையரே, என்னை உடையவனாகிய, கிடைத்தற்கரிய அமுதம்போன்ற நமது தந்தையாகிய எமது பிரான், பனிமலை யரசன் மகளாகிய உமை

யமமைக்கு, தன்னை உடைய கணவனுமாவன், மகனுமாவன், தகப்பனுமாவன், தமையனுமாவன். (அத்தகைய) எமது தலைவனது திருவடிகளைப் பாடி, பொன்னினாலாகிய அணியணிந்த நகிலுடைய பெண்டிரே, நாம திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு —ஆணும் பெண்ணுமாக உயிர்களைப் படைத்தற் பொருட்டு, இறைவன் சிவமும் சத்தியு மாயகாலை, சத்திக்குச் சிவன், கணவனாவன். சத்தியினறே சதாசிவதத்துவம் தோன்றிய காரணம்பற்றி,--சதாசிவமூர்த்தி, சத்தியின் மகனாவன். சிவத்தி னின்று சத்தி பிறந்ததனால், சிவன் சத்திக்குத் தகப்பனாவன். சிவதத்துவமும், சத்தி தத்துவமும், சுத்த மாயையினின்று, முறையே இறைவனது ஞான சத்தி அதிட்டித்தலாலும், கிரியா சத்தி அதிட்டித்தலாலும், முன் பின்னாக உளதாகிய காலை, சத்திக் குச் சிவன் தமையனென்று கூற இடமுண்டாதல் காண்க. (௧௩)

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
 தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
 சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கைஇரைப்ப அராஇரைக்கும்
 கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
 பொற்றிருச் சுண்ணம இடித்துநாமே.

உரை :—செவ்விய நகையணிந்த பெண்களே, சங்கினாலாகிய கை வளையல் ஒலிப்ப, காற்சதங்கை ஓசையிடப் (பின்னே நீண்டு தாழ்கின்ற) கூந்தலிற் சுற்றிய மாலை சுழல, செவ்விய (கொவ வைக) கனிபோன்ற வாயும் உதடுந் துடிப்ப, சிவலோகச் சிறப்பைப் பாடிக், கங்கை இரைச்சலிடுவதைக் கேட்டுப் பாம்பு இரைச்சலிடும், தொகுதியாய சடைமுடியுடையான் திருவடிக்கே, மிகுந்த அன்பி னாலே, நகில்கள் பால் சுரக்க, திருப்பொற்சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு :—சங்கம், வளைக்கு ஆகுபெயர். கங்கை யொலியை, இடிமுழக்கமென றஞ்சிப் பாம்பு இரைகின்றதென்பது கருத்து. கற்றை - தொகுதி. காதல் மிகுந்த காலை கொங்கையிற் பால் சுரத்தல் 'சுரந்த திருமுலைக்கே' என்ற பாட்டால் விளங்கும். (௧௪)

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே

உரை :—அகன்ற குவளை போன்ற கண்ணுடைய அழகிய மாதரீர், சிவஞானமாகிய கரும்பின் சாரத்தை, சர்க்கரைப்பாகை, எய்துதற் கெட்டாத நன்மையை, என்றுங் கெடாத தேனை, முக்கனியின் சுவையானவனை, உள்ளத்திற் புகுந்து இனிமை தரவல்ல தலைவனை, (நமது) பிறவியைத் தொலைத்தாட்கொண்டருளிய திருநடப் பெருமானை, நாவிலே தழும்பேறும்படியாக இடைவிடாது வாழ்த்தித் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு :—சிவஞானம் - இறைவனது அறிவு. அவனறிவைப் பெறுதலின் பயன் அவனே யாதலின், அவனை, ஞானமாகிய கரும்பின் பயனாகிய தெளிவு என்றார். ஞானத்தின் ஞானமே தெளிவென்ப. அத்தெளிவானுகரப்படும் இன்பமும் அவனே யாதலின், 'பாகை' என்றார். சடப்பொருளாய தேன் நாளடைவிற் கெடுதல் அடையும். ஒரு நாளுங்கெடாத மெய்ப்பொருளாகிய இறைவனை 'நந்தாத் தேன்' என்றார். (௧௫)

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்

தேவர் கனாவிலுங் கண்டறியாச
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

உரை :—நாமும் அன்பர்களோடு போய் உய்திக்குரியராகும் வகையாக நம்மை ஆண்டுகொண்ட வகைகளைப் பாடி வானுலகத்துள்ள இமையவர்கள் சொப்பனத்திலுங் காணமுடியாத செவ்விய திருவடிக்கமலங்களை நமக்குக் காட்டும், சிறப்புடைய காளையுருவைத் தன்பாலே கொண்ட வெற்றிக் கொடியுடையானாகிய சிவபெருமானாகிய திரிபுரமெரித்த வெற்றி வீரனது திருப்பெயர்களை, இடைவிடாது பாடிச் செம்பொன்போல ஒளி செய்யும் திருப்பொற் சுண்ணத்தை இடிப்போமாக.

குறிப்பு :—சே - காளை - செல்வம். இறைவன் ஊர்தியாகிய சிறப்பு. சே அகம் ஏந்திய வெல்கொடி யெனப் பிரிக்க (கசு)

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

உரை :—தன்னுள்ளே தேனையடக்கிய, பெருமைபொருந்திய கொன்றை மாலையைப்பாடி, சிவனது திருநகரைப் பாடி, அழகிய சடைமேல் வைக்கப்பட்ட வான்கண் விளங்குகின்ற சிறந்த இளம் பிறையைப்பாடி, திருமாலாகிய காளை யூர்தியைப் பாடி, இறைவன்

வலக்கரத்திற் கொண்டுள்ள பகைவா தசைகொண்ட மழுவையும் மூதத‌லை வேலையும் பாடி, மேலுலகினரும் இவவுலகினரும் பிழைக்கும்படியாக அந்தக காலததிலே தனதுணவாக நஞ்சினை இறைவன உண்டதைப் பாடித திருப்பொற்சுணணம் இடிப்போமாக

குறிப்பு —'மால்விடை' என்பதற்குப் பெரிய காளையென்று பொருள் கூறுவாருமுளா போனகம் - உணவு அன்று - பழமை குறிக்குஞ் சொல் (கஎ)

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக கொனறுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப பாடிநின் றுடியாடி
நாதற்குச சுண்ணம் இடித்துநாமே.

உரை :—பிரமனுடைய தலையைக் கிள்ளிப் பந்தாடியதைப் பாடி, தக்கன் வேள்வியில் பகலவன் பல்லைப் பிடுங்கினமையைப் பாடி, கயாசுரனைக் கொன்று அவன் தோலைப் போர்த்துக்கொண்டமை பாடி, யமனைத் திருவடியால் உதைத்தமையைப் பாடி, ஒருங்கு சேர்ந்துலவிய திரிபுரத்தை அம்பாலெய் தொழித்தமை பாடி, சிற்றறிவுடைய அடியேங்களை ஆட்கொண்டருளிய நன்மையைப் பாடி, பாடலுக்கேற்பத் தொடர்ந்து ஆடி, நம்முடைய தலைவர்க்குத் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு :—செண்டு - பந்து; கையில்வைத் தெறியும் பந்து போலப் பிரமகபாலத்தைக் கையிற்கொண்டு ஐயம் புகுந்தமையின் அதைச 'செண்டாடல்' என்றார். கயம்-கயாசுரனுக்கு ஆகுபெயர்.()

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்

சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே

உரை:—வட்டமா(கிய இண்டையா)யமைந்துள்ள கொன்றைப்பூ மாலையைப் பாடி, (இறைவன் சூடும்) ஊமத்தை மலரைப் பாடி, பிறையைப் பாடி, தெய்வத்தொண்டர்கள் வதியும் அழகிய தில்லைநகரைப் பாடி, அங்குள்ள ஞானசபையில் நடமாடும் நமது (பெருஞ்) செல்வமாகிய பெருமானைப் பாடி, அவன் அரையிற் கட்டிய பெரும்பாம்பாகிய அரைநாண் கச்சையைப் பாடி, கையிற் கட்டிய (பாம்பாகிய) காப்பினைப் பாடி, மூடிய கையின்மேல் விட்டு ஆட்டிய பாம்பினைப் பாடி, ஆண்டவனுக்குத் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு:—'வட்டம்' என்பதை மலரோடு சேர்த்து, கொன்றையின் வட்ட மலர்மாலை யென்பாருமுளர். மத்தம் - ஊமத்தம்பூ. சிட்டர் - நல்லோர். மாசுணம் - பெரும்பாம்பு. கவித்த - மூடிய. திருப்புறம்பயத்தில், விடந்தீண்டியவொருவனை, அவன் மனைவியின் பொருட்டு, உயிர்ப்பித்தற்காக, இறைவன் பாம்பாட்டியாகச்சென்று விடம் நீக்கிய கதை கேட்கப்படுகின்றது. பாம்பாட்டிகள் மூடிய கையின்மேல் அரவமாட்டுதல் மரபுபோலும். நச்சரவாட்டிய நம்பன் போற்றி யென்பதுங் காண்க. (கக)

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்(கு)

ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உரை —வேதநூலும் அதனுட் கூறப்படும் வேள்விகளும் தோன்றி நிகழ்தற்குக் காரணமானவர்க்கு, (மெய்யர்க்கு) மெய்யாயும் (பொய்யர்க்குப்) பொய்யாயும் இருப்பவர்க்கு, ஒளியும் இருளும் ஆனவர்க்குத், துன்பமும் இன்பமு மானவர்க்கு, பாதியாய பெண்ணுருவல்லது ஆணுருவாகியும் இருமையுங் கலந்த முழுவடிவாயும் ஆனவர்க்கு; உயிர்களது கட்டிற்கும் வீட்டிற்குங் காரணமானவர்க்கு, உலகிற்கு முதலுமுடிவும் ஆனவர்க்குத் திருமுழுக்கிடத் திருப்பொற் சுண்ணம் இடிப்போமாக.

குறிப்பு.—வேதமும் வேள்வியும் என்பதற்கு அறிவு நூலும், அவற்றுட் கூறப்படும் கொடை முதலிய அறமும் என்றும் பொருள் கொள்ளலாம். ஞான நூலும், வேள்வி கூறுங் கிரியைநூலும் எனப் பொருள் கொளவதுமுண்டு 'வேள்வி' என்பது ஊன்பயில் வேள்வி, அல்லது ஐவகை வேள்வியாக இருக்கலாம். எல்லாம் நிகழ இறைவனே காரணன். வேதநூலவழி பிரமயாகம், தேவயாகம், பிதிர்யாகம், மானுடயாகம், பூதயாகம் என வேள்வி ஐவகைப்படும். ஆகமத்தின்படி, செபயாகம், கன்மயாகம், தவயாகம், தியானயாகம், ஞானயாகம என வேள்வி ஐவகை. நெருப்பில் இறைவனை வழிபடுதலே 'வேள்வி' யெனவும், வேதத்தின் முக்கிய கிரியை அக்கினி காரியமா மெனவுங் கொண்டு, வேதநூற் சாரமும் வேள்வி வழிபாடும் ஆனவனென்பதுமுண்டு. அன்பர்க்கு ஒளியாயும் அல்லார்க்கு இருளாயும் இறைவனிருப்பன் நாம் அடையும் துன்பத்திற்கும் இன்பத்திற்கும் இறைவனே காரணனென்றது, அவனே இருவினைப்பயன் ஊட்டும் முதல்வனாகலின். பாதியாதல்-உமையாதல் அல்லது ஆண் மூர்த்தமாய்த் தோன்றல். 'பொய்யர் தம்பொய்யை மெய்யர் மெய்யை' என்றது காண்க. பொய்யர்க்குப் பொய்யாகத் தோன்றி, முடிவில் அவர் திருத்தமுற்ற காலை மெய்யாய் விளங்குவரென்பது கருத்து. (உ0)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருக்கோத்தும்பி *

சிவனோடு ஐக்கியம்

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை —அரசவண்டே! தாமரை மலர்மேல் எறித்தங்கும் நான்முகக் கடவுளும், இந்திரனும், அழகு பொருந்திய நாவிற் றங்கும் கலைமகளும், திருமாலும், மறைவாயுள்ள நான்கு வாக்குக் களும், காளைமேலேறிவரும் ஒளியுருவனாகிய உருத்திரனும், தேவர்களும் ஆகிய யாவரும் அறியாத விடைப்பாகனது செவ்விய திருவடி மலரையே அடைந்து, நீ (உனது வாயார) ரீங்காரஞ் செய்வாயாக.

குறிப்பு :—சுத்த மாயையி லுள்ளனவாய்ச் சுட்டறிவுக்குக் காரணமாய நான்கு வாக்குகளும் நான்மறை யெனப்படும். 'மாவேறு சோதி' என்பதற்குப் பெருமைபொருந்திய சோதிக ளாகிய ஞாயிறு, திங்கள், நெருப்பு என்று பொருள் கொள்வாரு முளர். இறைவன் திருவுருவும் ஊர்தியும் உருத்திரர்க் குரிமை யால், 'மாவேறு,' 'சேவேறு' என இருவர்க்கும் ஊர்தி யொப் புமை கூறப்பட்டது. (க)

* கோத்தும்பி யெனமுடியுந் திருப்பாட்டுப் பகுதி. கோத் தும்பி - அரசவண்டு. அதனை விளித்து இறைவன் திருவடிக் கமலங்களில் ஊதும்படி ஏவுகின்றதாக ஒவ்வொரு திருப்பாடலும் இப்பகுதியுள் இயற்றப்பட்டுள்ளது.

நாஞர்என் உள்ளமார் ஞானங்க ளார்என்னை யாரறிவார்
வாஞேர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊஞர் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேஞர் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ

உரை :—அரச வண்டே! தேவர் பெருமானுகிய கடவுள் என்னை ஆட்கொள்ளாவிடின, நான் எத்தன்மையஞ யிருப்பேஞே? எனது மனம் எத்தகையதா யிருக்குமோ? என் அறிவு என்ஞமோ? என்னை உலகில் யார் (ஞானியென) அறிவார்கள? அறிவு மயங்கிஞற்போல நடித்துத் தசைகலந்த உடைந்த கபாலத்தில் உண்ணும் உணவை (ஆய்ந்து) கொள்ளும் சபாநாயகனின் இன்பததேன் பொருந்திய திருவடிக கமலங்களையே அடைந்து ஊதுவாயாக

குறிப்பு :—முதலடியில் 'ஆர்' என்பது வழுவமைதி 'மதி மயஙகி' இகழ்சசிபோற் புகழ்ச்சி. 'மயஙகி' என்பதை மயஙக வெனககொண்டு, அறிவு மயஙகினமையால், உடைபெற்ற தலை, என்று பொருள் கொள்ளுவாரு முளர் பிரமன், இறைவனைப் போலத் தனககும் ஐநது தலை யிருப்பதாகக் கருதி நடுத்தலையால் இறைவனைப் பார்த்துச சிரித்தகாலை, அவன் செருக்கொடுஙகும் வண்ணம், அந் நடுததலையைக் கிள்ளிஞர் வைரவமூாத்தி யென்பது கதை. பலி - உணவு, பிசசை. தேர் - ஆய்ந்து கொள்ளல். பிசசை புகினும, தக்காரிடம் ஆய்நது ஐயமேற்றல் குறிப்பிக்கப் பட்டது. (உ)

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை :—அரச வண்டே! தினையளவு இருக்கின்ற ஒரு மலரினுள்ள தேனைப் பருகாமல், எண்ணுந்தோறும், காணுந்தோறும், பேசுநதோறும், பிற எல்லாப் பொழுதினும், எல்லா எலும்புகளும் உள்ளே இளகும்படி, பேரின்பத்தேனைப் பொழியுந் திருநடமுடையான் திருவடிமலரினையே அடைந்து ஊதுவாயாக.

குறிப்பு —தனை - அளவு. நெக - நெகிழ குனிப்பு-கூத்து. சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கு முள்ள வேறுபாடு இதனுட் கூறப்பட்டது. (௩)

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ

உரை:—யாதும் உவமையாகக் கூறப்படாத எந்தை, கண்ணப்ப நாயனாரது பேரன்பிற் கீடான அன்பு பிறர்பால் இல்லாமையைக் கண்டபின், (அன்பிலாத) என்னையும் அடிமையாகக் கொண்டருளி நற்பண்புடையனும் வண்ணம் என்னைச் செய்து (தில்லைக்கு) வாவென்றருளிச் செய்த பெருங் கருணையும் அழகிய திருநீறாகிய பொடியுமுடைய பெருமான் திருவடி மலர்க்கே போய் ஊதுவாயாக.

குறிப்பு —கண்ணப்பன், அன்புருவனாதலின், 'கண்ணப்பன்' என்ற அளவே கூறினார். 'என் ஒப்பில் என்னப்பன்' என மாற்றுக. வண்ணம் - குணம். வண்ண - குணமுடையனாக. பணித்து-கட்டளையிட்டு, செய்து. 'கோலமார்தரு பொதுவினில் வருக' என முற்கூறியது காண்க. சுண்ணம் - (இடித்த) பொடி. பொன் - அழகிய. (௪)

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை:—(பல சமயிகள்) அந்த வானவர் முழுமுதற் கடவுள், அவர்களும் பெரிய வானவராயிருப்பவர் (இவர்) என்று இவ்வாறு உண்மையாகக் கடவுள் இல்லாத தெய்வங்களைக் கடவுள் என்று கூறி (வீணாக)ப் பிதற்றுகின்ற இந்நிலவுலகத்தே, பிற ஆதரவு

யாதுமில்லாமல், எனது உலகப் பற்று நீங்கும்படி, நான் (சார்ந்து) கைப்பற்றி நின்ற உண்மையான தேவ தேவனுடைய(திருவடிக்கே) போய் நீ ரீங்காரஞ் செய்க.

குறிப்பு —பத்து - பற்றுக்கோடு, ஆதரவு. பத்து - பற்று, அன்பு என்று கொள்வாரும் உளர். 'மெய்' என்பதை நாலாவதடியில் இரண்டாவது 'தேவா' என்பதோடு முடிக்க. (௫)

வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலங்கல்வி என்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை —மால் நிறைந்த உலகிலே தேடி வைத்த செல்வம், மனைவி, மக்கள், குலம், கல்வி, பிறப்பு, இறப்பு என்னுமிவை காரணமாக அல்லது இவற்றிற்குக் காரணமாக உளதாம், மனத் திரிபு, மனக்குழப்பம் முதலியவற்றைத் தொலைத்து, (அறிவின்) தெளிவைத் தந்த அறிவாசானாகிய கடவுளுடைய திருவடிக் கமலங்களையே அடைந்து நீ ரீங்காரஞ் செய்க.

குறிப்பு —'என்னும்' என்பது நிமித்தத்தை புணர்த்துஞ் சொல்லாய் நின்றது. விகாரம் திரிபையும், கலக்கம் ஐயத்தால் வருஞ் சஞ்சலத்தையுங் குறிக்கும். வித்தகம் - ஞானம். (௬)

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை :—சங்கரனை உள்ளத்தே சற்றே நினைப்பின், அமுதம் ஊறும். அவனது கெடுதலில்லாத திருப்பாதங்களைத் தீயேன் மறந்து விடுவேனோ? (மறவேன்). அவன் திருவடியைப் பொருந்தாத பாவஞ் செய்த அடிமைகளது வடிவத்தை நாம் பார்க்க

இல்லேம். நுண்ணியனாகிய நல்லோன் திருவடிக்கே நீ போய் ரீங்காரஞ் செய்வாயாக.

குறிப்பு:—'சட்டோ' என்பது சற்றே என்பதின் திரிபு. ஆயிற்று என்பது 'ஆயிட்டு' என்றாற்போல. ஏ, ஓ வாயிற்று. 'சட்டோ' என்பதற்குக் கெடுதியோ, என்று பொருள்கொண்டு; சங்கரனை நினைத்தல் கெடுதியோ எனப் பொருளுரைப்பாருமுளர். 'மறந்தாற் கெட்டொழிவேன்' என்பதை விரைவுபற்றி இறந்த காலத்தாற் கூறினாரென்றலுமொன்று. 'திருவடியை' என்பது 'மறப்பேனோ' என்பதற்கும் 'ஒட்டாத' என்பதற்கும் நடுவே நின்றது. சிட்டாய - சிற்றாய - நுட்பமாய. (௭)

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை:—ஒரு பொருளாய்த் தோன்றி, விரிந்து எத்தனையோ கிளைகள் போக்கி, என்னைக் கருவி கரணங்களோடு செவ்வையாக நிலவும்படி ஏற்படுத்தி, நாய்போலும் என்னைச் சிவிகை ஏற்றினாற் போல உன்னடியாரோடு உயர்ந்த இருக்கையில் இருத்தி வைத்த, எனது தந்தைக்கும் அவன் தந்தைக்கும் எமது தாய்க்கும் முதல்வனாகிய குறைவில்லாத செல்வமுடையானிடமே போய் நீ ரீங்காரஞ் செய்க.

குறிப்பு.—சிவதத்துவ முதலிற் றோன்றிப் பின் கலைகளும் தத்துவங்களும் புவனங்களும் பிறவும் விரிந்து, உயிர் சகலாவத்தை யுறுதற்குரிய கருவி கரணங்களெல்லாம் தோன்றுதலின், 'எத்தனையோ கவடுவிட்டு' என்றார். சிவிகை - உயர்ந்த இடத்திற்கு அறிகுறி என்தாதை என்பது படைத்த அயனையும், அவன் தாதை யென்பது அரியையும், 'எம்மனை' என்பது உமையையுங் குறிக்கு மென்பாருமுளர். எம் + அன்னை - எம்மன்னை; எம்மனை. ()

கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை :—எனது அகககருவி, புறககருவிகள் ஆகிய எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நீலகண்டனது திருவடிகளைப் போய்ச சேர்தலுமே, எனககு இறப்புப் பிறப்பெனனு மிரண்டால் வரக் கூடிய மயககத்தைத தொலைத்த அருட்கடல போல்வான் திருவடிகளையே சென்றடைநது ரீஙகாரஞ் செயக.

குறிப்பு :—கரணம-கருவி. கறை - களஙகம். மிடறு - கழுத்து. சரணம்-புகலிடமாகிய திருவடி. 'இரண்டின் மயக்கு' என்பதற்கு, இரண்டின் கலப்பு என்று பொருள் கொள்வாருமுளர். (கூ)

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றா யிங்கிருநது
நாயுற்ற செல்வம் நயந்தறியா வணணமெல்லாந
தாயுற்று வநதென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய கோத்தும்பீ

உரை :—அரச வண்டே! பிணிவாய்ப்பட்டு, முதிாவடைநது (தாயினால்) தளளப்பட்ட கன்றுபோல, நாயபோன்ற யான்பெற்ற பெருஞ்செல்வ மெல்லாவற்றையும் விரும்பி நுகர்நதறியா வகை இவவுலகி லிருப்ப, தாய்த்தன்மை மேற்கொண் டெழுநதருளி என்னை ஆட்கொண்ட குளிர்ந்த பேரருளொளி பொருநதிய பெருமானுக்கே நீ போய் ரீங்காரஞ் செய்க.

குறிப்பு :—இதனுள் இறைவன் ஆசானாய வநதபோது தன்னை உடன் அழைத்துககொண்டு போகாமை குறிததனர் நுநது-தள்ளு. இருநது-இருப்ப. தாய்-தாயியல்பு. தேய்-தேசு, ஒளி. (க0)

வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கல்நெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட

அன்னம் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

உரை:—அரசவண்டே! (என்னை) உருகாத திண்ணிய மனமுடைய வஞ்சகன், குரங்குபோன்ற மனத்தன் என்றெண்ணி அகற்றிவிடாமல், எனது கற்போற் கடிய நெஞ்சினை உருகுவித்து அருள் மிகுதியினால் ஆட்கொண்ட, அன்னப் பறவைகள் மிகுந்த, அழகிய தில்லைநகரிலுள்ள சபைக்கு நாயகனது பொற்கழலணிந்த அழகிய திருவடிக்கே போய் ஊதுவாயாக.

குறிப்பு:—இறைவன்பால் அன்பின்மையைக் குறிப்பார், 'வல்நெஞ்ச'மென்றார். உலகப் பொருள்களிற் பற்றுண்மை குறிப்பார், 'மனவலியன்' என்றார். 'மன' என்பதை 'மன்ன' என்பதன் திரிபாகக்கொண்டு, திருந்தாமல் நிலைபெற்ற என்று பொருள் கூறுவாருமுளர். வலி - குரங்கு. 'வலியன்' என்பதற்குக் கொடியனென்று பொருள் கூறுவதுமுண்டு. 'அணி' என்பதை 'மணி'யென வைத்துப் பொருளுரைத்தலும் உண்டு. மணி-மாணிக்கம். மணியம்பலவன் எனக் கொள்க. திளைத்தல்-நிறைதல், பெருகுதல், நெருங்குதல். (௧௧)

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ

உரை:—நாய்போன்ற என்னைத் தன்னுடைய திருவடிகளைப் பாடும்படி செய்த தலைவனை, பேய்த்தன்மை யுடையேனது மனக் குற்றங்களை மன்னித்தருளும் பெருந்தன்மையுடையானை, இகழ்ச்சி சிறிதுமில்லாமல் யான் செய்யுந்தொண்டுகளை ஏற்றுக்கொண்டருளுகின்றஎனக்குத் தாயான ஆண்டவனிடமேபோய் ரீங்காரஞ் செய்க.

குறிப்பு:—அலையும் பேய்போல, மனம் சஞ்சலப்படுதலிற் 'பேயேன்' என்றார். சீ-இகழ்ச்சிக் குறிப்பு. பாடுதல், எண்ணுதல், பணிசெய்தல் ஆகிய முக்கரண வழிபாடுகள் குறிக்கப்பட்டது. (௧௨)

நான்தனக் கன்பின்மை நானுந்தா னும்அறிவோம்
தானென்னை ஆட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்
ஆனகருணையும் அங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ

உரை:—இறைவன்பால் யான் அன்பில்லாதிருத்தலை, அவனும் நானும் தெரிவோம். (பிறர் அறியார்) அவன் என்னை அடிமையாகக் கொண்டதை (உலகினர்) எல்லாருமே தெரிவார்கள். எனக்கு உண்டான திருவருளும் அவன்பால் ஏற்பட்டதே. (அன்பில்லாத போது, திருவருளை அவனிடத்திருந்தே எனக்குக் கிடைத்ததுபோல இப்போதும்) தலைவனாகிய அவனே, தானாக என்னை வந்து கூடும்படி, மெல்லிய முறையாக ரீங்காரஞ் செய்க.

குறிப்பு:—உற்றே - உற்றதே என்பதன் குறுக்கம். தலைவன் அவனாதலின், தலைவிபாற் சேறலும் அவன் கடனே யாதலால், அவனே வலிய வந்து என்னைக் கூடவேண்டும். அன்பில்லாமையால் யான் போய்க் கூடும் ஆற்றலிலேன் என்றவாறு. (௧௩)

கருவாய் உலகினுக் கப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ

உரை:—உலகிற்கு மூலமாய வித்தாய், உலகிற் கப்பாற்பட்டவனாய், இப்பாலுலகிலே இயற்கை வாசனை பொருந்திய பூப் போன்ற குழலினையுடைய உமையம்மையோடு போந்தருளியும், இரகசியப் பொருளைப் பயிற்றுவிக்கும் அருட்பேராசிரியனாக உருவெடுத்துப் புறத்தே தோன்றியும், உள்ளத்தினுள்ளே அருவாய் நிலவியும், ஆட்கொண்டருளிய, வீட்டிற்குக் காரணமான கடவுளிடமே போய் ரீங்காரஞ் செய்க

குறிப்பு:—'உலகினுக்கு' என்பது 'கருவாய்' 'அப்புறமாய்' என்ற இரண்டினோடுஞ் சென்றியையும். அருவுஞ் சிவமுமாதல்:

முற்கூறினர். மக்கள் வடிவொடு ஆசானாய் வருதல் வெளியேயும், தோன்றாது உயிரறிவின்கண் மன்னுதல் உள்ளும் நிகழ்வன. திரு - வீட்டுச் செல்வம் 'திருவான' என்பதற்கு (வீடாகிய) பெருஞ் செல்வமான என்றுங் கூறலாம். (௧௪)

நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானுந் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ

உரை —நீண்ட சடைமுடியுடைய பெருமான் சிவமுஞ் சத்தியுமாக வந்து என்னை ஆட்கொள்ளவில்லையாயின், நானும் எனதுள்ளமும், தலைவனாகிய அவனுக்கு எத்துணை தூரமாய இடத்தி லுள்ளோமோ? வானுலகமும் பத்துத் திசைகளும் பெருங்கடல்களும் ஆகிய பெருமானது தேன் துளிக்குஞ் செய்ய திருப்பாத மலர்களிடமே போய் ரீங்காரஞ் செய்க

குறிப்பு —தன்னை இறைவனும் சிந்தையைத் திருவருளும் உய்வித்தமை கூறியவாறென்க. ஆட்கொள்ளாவிடத்து, அவனருளுக்குச் சேய்மையிலிருத்தல் குறிப்பிக்கப்பட்டது. திசைகள் கூறவே, நிலவுலகமும் பிறவுலகமுங் கூறியவாறாம். உந்துதல் - எறிதல், வீசுதல், துளித்தல். (௧௫)

உள்ளப் படாத திருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்எம் பிரான்என்னை வேறேஆட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை :—மனத்தினால் நினைக்க ஒண்ணாத இறைவனது தூய இயல்பைச் சிவஞானத்தாற் காணுதலும், ஒளிப்பின்றித் தெளிவாக மகிழ்ச்சி தரவந்த பேரருள் வெள்ளத் தலைவனாகிய எம்பெருமான் எனக்குத் தனியாக வீடருளும்படி, அவனிடமே போய் ரீங்காரஞ் செய்க

குறிப்பு —'கரணங்களெல்லாங் கடந்த முதல்வன்' ஆதலின், கரணங்களால் நினைக்கப்படாதவன் என்பார், 'உள்ளப்படாத' என்றார். 'திருவரு' என்றது இறைவனது சொரூப இலக்கணத்தை. கள்ளப்படாத - மறைதலில்லாத. களி - பெருமகிழ்ச்சி. அம் மகிழ்ச்சி, இறைவனருளாற் கிடைத்தலின், 'களிவந்தவான் கருணை' யென்றார். அடியார்களைத் தொகுப்பாக, முன்னமே திருப்பெருந்துறையில் ஆட்கொண்டமையால், தில்லையில் தன்னைத் தனியே ஏற்று அதற்குத் தகுதி கொடுத்தல் விரும்புவார் - 'வேறே ஆட்கொள்ள' என்றார். (கசு)

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாகக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யா மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ

உரை :—நிலையில்லாத பொருள்களை அடைந்து அதன்கண் தினந்தோறும் அநுபவத்தால் ஆழ்ந்து, அவற்றையே நிலையென எண்ணிப் பயனற்றுக்கிடந்த என்னை ஆண்டுகொண்டருளிய தலைவனே, எனது அருமையாய உயிருக்குயிரே. திருச்சிற்றம்பலத்தாடுவானே, என்பன போன்றவற்றை இயம்பி, அவனது செம்மை பொருந்திய தாமரை யடிகளிடமே போய் ரீங்காரஞ் செய்க.

குறிப்பு —இதனுள் அடிகள் அருள்பெறுதற்கு முன்னுள்ள தந்நிலை குறிப்பித்தார். ஆருயிர் - உயிர்க்குயி ரென்பதைக் குறிக்கும். செய் - செம்மை, செந்நிறம். (கஎ)

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ

உரை :—புலித்தோலும் (மெல்லிய) ஆடையும், குண்டலமும் வட்டவடிவான தோடும், பால்போன்ற வெள்ளிய திருநீறும்

புதிய சாந்தனமும், பசுங்கிளியும் முத்தலைவேலுங், தொகுதியான வளையலும உடைய பழமையான மாதொருபாக வடிவத்தையே கண்டு, மெல்லென ரீங்காரஞ் செய்க.

குறிப்பு:—இறைவனது பாகத்திலே புலித்தோலும், குழையும், நீறும், சூலமும் இருப்பன. அம்மை பாகத்தில், துகிலுந் தோடும் சாந்தும கிளியும் வளையும உள்ளன. வளைபல வாதலின், 'தொக்க' என்று அடைகொடுத்தார். சிவமுஞ் சத்தியுமாய் நின்ற இறையுருவம் ஆண் பெண் தோற்றத்திற்குக் காரணமாய மூலவடிவைக் குறிப்பதாகலின் 'தொன்மைக் கோலம்' என்றார். (க௦)

கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாந்
தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ

உரை:—இவன் வஞ்சகன், (இரக்கமில்லாத) கொடுமையன், கீழ்க்குண முடையோன் என்று என்னை ஒதுக்காமல், அருட்கொடையாளனாகிய கடவுள், பையப்பைய எனது நெஞ்சின் கண்ணே பூரணமாகத்தோன்றி யருளினன். மனத்தின்கணுள்ள இடர்ப்பாடுக ளெல்லாவற்றையும், ஒன்றையாவது தப்பவிடாமல், தெளிவு தந்தொழித்த, திருவடியிடமே போய் ரீங்காரஞ் செயக.

குறிப்பு:—கலதி - கயமைக் குணமுடையோன் ஒழிந்தான் என்பது, முடிவுற்றான் என்ற பொருட்டாய்ப் பூரண நிறைவைக் குறிக்கும். தெள்ளுதல் - தெள்ளி யெறிதல், துயர் நீக்கித் தெளிவு படுத்தல், மனத்திற்றெளிவினை யுண்டாக்கித் துயரங்களைத் தூர வீசுதல். (கக)

பூமேல் அயனோடு மாலும புகலரிதென்(று)
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உரை — தாமரைப் பூவிலே வீற்றிருக்கும் நான்முகனுந் திருமாலும் வீடு புகுதல் இயலாதென்று தடுமாறி நிற்கவும், அடியேனை நிமிர்ந்து மகிழ்வெய்தி யிருக்கும் வண்ணம், நாய்க்கு மேலான ஆசனமிட்டதுபோல, எனக்கு மேலான ஞான நிலையருளி, நான் பெருநலமடைதற் பொருட்டு என்னை மதித்தருள் செய்த நெருப்புப் போன்ற செம்மேனியுடையான் பொருட்டே போய் ரீங்காரஞ் செய்க.

குறிப்பு :—புகல் - (வீடு) புகுதல். ஏமாறுதல் - தடுமாறுதல். இறுமாக்க - நிமிர, மகிழ்வெய்த. நாய் என்பதில் நான்காம் வேற்றுமையுருபு தொக்கு நின்றது. நன்று - நன்றாக. பொருட்படுத்த - மதித்த. மெய்யிற் பொருந்தச் செய்த, என்றும் பொருள் கொள்ளலாம். பொருள் - மெய். படுத்த - பொருத்திய. தவிசு - இருக்கை. (௨0)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருத்தெள்ளேணம்

சிவனோடு அடைவு

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற்(கு) ஆயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :—(தேவரிற் சிறந்த) அரியுங்கூடப் பன்றி வடிவெடுத்து நிலத்தைப் பிளந்துபோய் அறியமுடியாத திருப்பாதங்களின் மெய் வடிவத்தை நாம் அறியும்படியாக ஒரு வேதியனாய் வந்து ஆட்கொண்டருளினனாகிய ஒரு பெயரும் ஒரு வடிவமும் (அத்தகைய) யாதும் இல்லாதவனுக்கு ஆயிரம் திருப்பெயர் ஓதிப்பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :—உரு என்பது சொரூப இலக்கணத்தைக் குறிக்கும். இறைவன் சுட்டியறியப்படாதவனாதலின் நாமம், உருவம் முதலியன அவருக்கு இல்லை என்றார். சுட்டியுணர்தற்குக் கருவியாகிய குலம், குணம், ஊர் முதலிய யாதும் இல்லை என்பார 'ஒன்றுமில்லாற்கு' என்றார். அசத்தொடு தொடர்பில்லான் என்பது கருத்து. உயிர்களின் பொருட்டே இறைவனுக்கு நாமம் முதலியன கூறப்படும். தெள்ளேணம் என்பது மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. அது எத்தன்மையது என்று விளங்கவில்லை. மணல் முதலியவற்றைத் தெள்ளிக் கொட்டுதல் போன்ற ஒரு விளையாட்டாக இருக்கலாம். (க)

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை

அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவுந்
திருவாரூர் பாடிநாம தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :—மேன்மை பொருந்திய திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பெருமான் எனது பிறப்பின் மூலத்தை வேரோடு தொலைத்தபின் பிற ஒருவரையும் பொருளாக நான் பார்த்ததில்லை. உள்ளத்துள் அருவாயும் புறத்தே உருவாயும் நின்று அருள்செய்த பெருமான் பொருந்தியுறையுந திருவாரூச் சிறப்பினைப்பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :—பிறவிக்குக் கருவானது பற்று. அதனை வேரறுத்தலாவது முற்றத்தொலைத்தல். இறைவனைத் தவிரப் பிறரிடத்தில் ஒன்றையும் வேண்டாமையின் "யாவரையுங் கண்டதில்லை" என்றார். "அருவாய் மறையயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட" என்று கோத்தும்பியில் கூறியவாறு ஈண்டும் "அருவாய் உருவமுமாய" என்றார். திருவாரூர் என்பது இதய கமலத்தையுங் குறிக்கும். அது ஞானத்திற்கு இடமாதல் "தேனமர் சோலைத் திருவாரூரின், ஞானந்தன்னை நல்கிய வியல்பும்" என்றமையால் விளங்கும். (உ)

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநமமை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :—திருமாலுக்கும் அயனுக்கும் ஒழிந்த பிற தேவர்களுக்கும் உணர்த்தப்படுந் தரத்ததாகாமல் (அவர்கட்கெல்லாம் அரிய பொருளாய் மேற்பட்டு) நின்ற முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் எழுந்தருளிவந்து எம்மை உள்ளம் உருகுவித்துத் தொண்டு செய்யும்படி எம்மை ஆட்கொண்டருள்வான் என்கின்ற செய்தியை உலகத்தினரெல்லாரும் கேள்விப்பட்டு (வியப்பால்) நகையாடும் வகையை நாம் விளையாட்டாகப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு —அல்லாத தேவர்களென்பதில் இந்திரன் முதலியோர் அடங்குவர் திருமாலுக்கு மேற்பட்ட உருத்திரவர்க்கத்தினர் அடங்கார். படித்து - தரத்தது, நிலையினது தெரிவிக்கும் என்பது தெரிக்கும் எனத் தொக்கு நின்றது. சிவம் என்ற சொல் முழுமுதற் கடவுளைக் குறித்து நின்றது. உருக்கும் என்பதை முற்றெச்சமாகவுங் கொள்ளலாம். சிரிக்குந் திறம்பாடி என்பது "நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப, நாமும் அவர்தம்மை யார்ப்ப வார்ப்ப" என்ற அடிகளை நினைவுறுத்தும். சிரித்தல் வியப்பாலும், இகழ்ச்சியாலும் நிகழலாம். இறைவர் பெருமையும் தமது சிறுமையும் நோக்கிச் 'சிரிக்கும்' என்றார். (கூ)

அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை:—பயனற்ற விண்ணவருடைய இடம்விட்டுப் பெயர்ந்து செல்லும் நெறிகளில் அழுந்தாவண்ணம் பிறவியாகிய சூட்சியினின்று என்னைக் காப்பாற்றி யாட்கொண்டருளிய மேலான ஒளியுருவுடையவன் புதுமையாகிய செவ்விய நல்ல அறிவை நமக்குக் கொடுத்தவுடனே நமது தற்போதம் நீங்கிச் சிவமாந் தன்மை எய்திய விதத்தைப்பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு:—அவம் - பயனின்மை. அவகதி - இடம் பெயர்ந்து செல்லு நெறி. சிவத்தை யொழித்த பிறதேவர்கள் வீடு கொடுக்கும் ஆற்றலிலர் ஆதலின் அவமாய தேவரென்றார். அவர்கள் பதவிகள் நிலையாதன ஆதலின் அவகதி என்றார். பவமாயம் என்பதை மாயப்பவம் என மாற்றி வஞ்சப் பிறவி என்றும் பொருள் கொள்ளலாம். செஞ்சுடர் என்பது சிவஞானத்தைக் குறிக்கும். பாசம் நீக்கப்பெற்றபின் அதனை இறைவன் நல்குதலால் அதனை 'நவமாய' என்றார். பாச நீக்கம் வரை அது இன்னதென்று விளங்காமை காண்க. நாம் என்பது யான், எனது என்னுஞ்

செருக்கினைக் குறிக்கும். சிவமானவா - என்றது சிவத்தின் தன்மையை அடைந்தமையையே குறிக்கும். உயிர் பொருள் தன்மையால் சிவமாதலில்லை (௫)

அருமந்த தேவர் அயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை:—கிடைத்தற்கரிய அமுதம் போன்ற விண்ணோராகிய நான்முகனுக்கும் திருமாலுக்கும் அறிவதற்கரிய சிவபெருமான் (ஞானாசாரியனாகத்) திருவுருக்கொண்டு வந்து நிலவுலகினர் உயர்வடையும்படியாக என்னை ஆட்கொண்டருளி எனது பிறவியானது ஞானத்தீயால் எரிந்தொழியும்படித் திருக்கடைக் கண்ணாற் பார்த்தருளி என்னுடைய நெஞ்சிற் புகுந்தமையால் பேரின்பச் செல்வம் வந்தவாற்றை நாம் பாடித் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு:—அருமருந்தன்ன என்பது அருமந்த என்றாயிற்று. தேவரினத்தில் மாலும் பிரமனுமே சிறந்தவர்கள். அவர்க்கு மேற்பட்டவர் உருத்திர வர்க்கத்தினர். உருவந்து - உருவொடு வந்து. உகப்பு - உயர்வு, மகிழ்ச்சி. புகுந்தமையால் வந்த திருவை 'புகுந்த திரு' வென்றார். (௬)

அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை:—ஆடுகின்ற பாம்பினை அரையின் கண்ணே கட்டிய பெருமான், மலையில் விளையாடிய மாதாகிய உமையாள் பாகனாய், நிலவுலகிலே எழுந்தருளி எல்லாம் ஆட்கொண்டருளிய திறத்தினை, நமது உரைதடுமாற நெஞ்சின்கண் அறிவு விளங்க, ஒளியுடைய பூப்போன்ற பெருங்கண்களிலே ததும்புகின்ற நீர் அலைபோலசையுமாறு, நாம் பாடித் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :—ஆடுநாகமென்பது, கிரியாசத்தியையாதல், குண்டலி சத்தியை யாதல் குறிக்கும். அசைந்த - கட்டிய. 'வரையாடு' என்பதில், ஆடு - விளையாடுதல். 'ஆடும்' என்பதற்கு 'ஆளும்' என்று பொருள் கொள்வாருமுளர். 'திறம்' என்பதைப் 'பாடி' என்பதோடு சேர்க்க. ஆடுமா-ஆடுமாறு, ஆடும் வண்ணம். (௬)

ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாவென் றென்னையும் பூதலத்தே வலித் தாண்டுகொண்டான்
பூவார் அடிச்சுவ டென்தலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :—திருமால், பிரமன், இந்திரன், ஏனைத் தேவாகளாகிய விண்ணவர் யார்க்கும் அடைதற்கரிய முழுமுதற் சிவபெருமான், ஐயோவென்றிரங்கி, நிலவுலகத்தே வலிய வந்து, ஒன்றுக்கும் பற்றாத, என்னை, இங்கே வா, வா, என்றழைத்து ஆட்கொண்டருளித் தனது மலர்போன்ற திருவடியடையாளங்களை எனது தலைமேற் பதிவித்த அளவிலே யான் தெய்வத்தன்மையடைந்த திறத்தைப் பாடி நாம தெள்ளேணம் கொட்டுவோமாக.

குறிப்பு.—'ஆவா' அதிசயம், அல்லது இரக்கத்தைக் குறிக்குஞ் சொல். வலித்து, வலிந்து என்பதன் விகாரம். சுவடு - குறிப்பு, அடையாளம். தெய்வத்தன்மை, ஈண்டு, சிவத்தன்மை குறிக்கும். கொண்டான் - முற்றெச்சம். (௭)

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவ மென்றிரண்டச் சந்தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்
மறந்தேயும் தன்கழல்நான் மறவாவண்ணம நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :—(காற்றிற்) சுழலுகின்ற ஓலைக்காற்றாடி போன்று உடம்பின் சார்பான பிறப்பிறப்புக்குக் காரணமாகிய நல்வினை, தீவினை யென்னும் இரண்டின் பயத்தை நீக்கி, என்னை ஆட்கொண்டருளிய பெருமான் தன்னை நான் மறந்தாலும், தன் திருவடியை நான் மறவாதபடி (அதனைச் சிரமேற் பொறித்து) அருள் புரிந்த

அந்தச் சிறப்பினைப் பாடல்களாற்பாடி நாம் தெள்ளேணங் கொட்டு வோமாக.

குறிப்பு :—கறங்கோலை - குறுககாக ஒன்றின்மேல் ஒன்றாக வைத்து முள்ளினாற் பிணைக்கப்பட்ட ஓலைக் காற்றாடி. காயத்தை எடுத்தலும் விடுத்தலும் பிறப்பிறப்பா மென்றவாறு. 'என்னும்' என்ற சொல் காரணங் குறிப்பது. 'பிறப்பென்னும் பேதைமை' யென்றாற்போல. இரண்டச்சம்-இரண்டு பயம், இரண்டின் பயம், என இரு வகையாகக் கொள்ளலாம். (அ)

கல்நா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னா கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்நகையீர்
தென்னா தென்னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ

உரை.—மின்னலைப்போன்ற வளைந்த இடையையும் சிவந்த பவளவாயையும், வெள்ளிய பல்லினையுமுடைய தோழிமாரே, கல்லிலே நார் உரித்தாற்போல, பக்குவமற்ற எனக்குத் தனது அருளினால், தனது பொன்மயமான திருவடிகளைக் காட்டி ஆட்கொண்டருளிய பெருமானது பெருமையைத் தென்னா தென்னாவென்று இசையொலியுடன் பாடித் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :—கல்லைப்போன்ற கடினமான பொருளிலே நாருரித்தல், மிகவும் அரியதோர் செய்கை. அதுபோலத், தமது கடின நெஞ்சில் அன்புண்டாக்குதல் அரிய செய்கை யென்றார். 'பொன்னா கழல்' என்பதற்குப் பொன்கழலுடைய திருவடி யென்றும் பொருள் கொள்ளலாம். மின்னலைப்போல ஒளியும் வளைவுமுடையது இடை. தென்னா தென்னா - என்பது இசைக்குரிய மரபொலிகளுள் ஒன்று. (௯)

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை — கனவிலுங்கூட வானவர்கள் அறிய வொண்ணாத ஒலிகளுஞ் சிலம்புடைத் திருப்பாத முடையோன், காட்டு மூங்கில் போன்ற, வளையலணிந்த தோளினையுடைய உமையாளொடும், இலவுலகத்தே போந்தருளி, நனவிலேயே என்னைக் கைப்பற்றி ஆண்டுகொண்டருளிய வித்தத்தை, அன்பு கூர்ந்து, வேல்போன்ற பருத்த கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகும்படி, நாம் தெள ளேணங் கொட்டுவோமாக

குறிப்பு — வளை-வளையல்அல்லது வளைவு என்று பொருள்படும். மூங்கில்போலத் தோள் எழிலும் ஒளியும் செய்ப்புமுடையதென்பது குறிக்கப்பட்டது. 'பிடித்து' என்றது, வலிய ஆட்கொண்டமை குறிக்கும். நயந்து-விரும்பி, அன்புசெய்து. சினம-பருமை. (க0)

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமும மாண்(டு) அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்(டு) என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ

உரை:—கயல்மீன் றன்மை மிக்க கண்ணையுடைய அம்மை பாகன் அத்துவிதமாய் என்னறிவிற் பொருந்தி என்னை ஆண் டருளியவுடனே நிலவுலகிலே பக்கத்தாராபாற் பற்றொழிந்து, கடத் தற்கரிய வினையால் வருஞ்சுற்றத்தார் உறவுமொழிந்து, (நெஞ்சின் கண் உள்ள) மயக்க மொழிந்து, எஞ்சியுள்ள சொல்லின் செய லொழிந்து, (காயத்தின்) செய்கையுந் தீர்ந்துபோன விதத்தைப் பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு:—'அவனியில் மேல்' என்பதை இரண்டாமடியின் முதலிற் கொள்க. கயல் - கயலின் தன்மை குறித்தது. குஞ்சுகளைப் பார்வையாற் பொறிவித்தல். அம்மையின் கருணைப் பார்வைக்குக் கயலின் பார்வையை உவமித்தல் மரபு. அருள்பெற்றவுடன் திரி கரணக் குற்றங்கள் ஒழிந்தமை கூறினர். (கக

முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டு கொண்டு

பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :— அன்புக் கடலுள் பதியும்படிச் செய்த மேலான ஒளியுருவனான பெருமான், தவத்தினர் கூட்டம் வீடடைதற் பொருட்டுத் திரிந்து மிகவும் வாடவும், (அவர்க்கு விரைவிலருள் புரியாது) யானைக்கு அருள் செய்து, அடியேனையும் ஆட்கொண்டருளி, இன்பங் கொடுக்கும் வகையைப்பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக

குறிப்பு :— யானை காளத்தியில் இறைவனை வணங்கி முத்தி பெற்றது. திருவிளையாடற் புராணத்தில் வெள்ளை யானை சாபந் தீர்த்தமை கூறப்பட்டது. (கஉ)

பார்பாடும் பாதாளர் பாடும்விண் ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :— நிலவுலகத்தார்பாலும் கீழுலகத்தாரிடமும், வானவர் மாட்டும், வேறு எவ்வுலகினர் மாட்டும் போய்ச் சேராத வகையாக என்னை ஆட்கொண்டருளிய இறைவனது நேர்மையைப் புகழும் பாடலைப் பாடி, எண்ணத்திற் கெட்டாத ஒப்பற்ற பெருந்தகையாளன் புகழ்பாடலைப் பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :— பாடு-பக்கம், இடம். பிறவி யற்றமையால் தமக்கு மூவுலகிலுந் திரிதலில்லையென் றறிவுறுத்தினார். நேர் - நேர்மை, உண்மை (கங)

மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :— அரியும் அயனும் ஏனைத் தேவர்களும், (மறை முதலிய) அற நூல்களும், புகுந்தறிய முடியாதவன், அவர்கட்

கெட்டாத நட்பமுடையவனாய் எழுந்தருளி என்னிடம் போந்து இரங்கி என்னுள்ளத்தை உருகுவிக்கு மியல்பால், (அவனியல் பினைப்பாடி) சேல்மீன்போ லழகிய நமது கண்களில் நீர் பெருகும் படி, நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு:—'மாலே, பிரமனே' என்பதில், ஏகாரம், எண் குறித்தது. பாவகம் - இயல்பு, கருத்து. (கச)

உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை:—உள்ளமுருகி உடல் பூரித்து நெஞ்சங் குளிரும்படியாக, குடிப்பதற்கு (மிக்க) இனிமை பயக்கும் மேலான அருட்பெருங் கடலை யடைந்து அதன்நீரை மொண்டருந்தி, அழகனாகிய பெருமானது விளங்குகின்ற நீண்ட கழல்களை எண்ணி அடியேங்களாகிய எங்களுடைய செல்வத்தைத் துதித்து நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு:—பெருகி-பூரித்து. 'திகழ்' என்பதை 'வார்கழலே' என்பதோடு கூட்டுக. (கரு)

புத்தன் புரந்தரா தியயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ.

உரை:—புதுமை யுடையோன், இந்திரன், பிரமன், திருமால் முதலிய தேவர்கள் வணக்கஞ்செய்யும், அடியார்க்கன்பன், திருப் பெருந்துறையில வீற்றிருந்த பெருமான், பிறவியைத் தொலைத்த அப்பன், அழகிய தில்லைத் திருச்சபையான், அவனது திருவருட் பாதங்கள் எமதுள்ளத்திற் புகுந்த விதத்தைப் பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :—புத்தன் - புதியவன்; புத்திபுடையா னென்று பொருள் கோடலுமுண்டு. 'புதன்' புத்தனென விரிந்த தென்பார். புத்தனாகிய சமயமுதல்வன் இங்கே குறிக்கப்படவில்லை. போற்றி - வணக்கம். சித்தம் - நினைவு, உள்ளம். (கசு)

உலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாஞ்
சலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :—பொய்ச்சமயங்களும் பொருத்த மில்லாத நூல்களும் ஆகிய கடலில் வீழ்ந்து மெலிவுற்றுத தடுமாறுதற் கேதுவாகிய கவலையைத் தொலைத்து, தனது இரண்டு திருவடிகளையுந் தந்தருளுகின்ற இறைவன் திருவருட்செயலை வாழ்த்தி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :—உவலை - பொய் சவலை-மெலிவு. கவல்-கவலை யென்பதன் கடைக்குறை. (கஎ)

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை :—ஆகாயம் அழிந்து காற்று இல்லாமற்போய், நெருப்பும் நீரும், மண்ணும் ஒழிந்து போயினும், தான் ஒடுங்குதலின்றி, அசைவில்லாத இயல்புடைய பெருமான் பொருட்டு, எனது உடம்பொழிந்து, ஆவியற்று, சுட்டறிவொழிந்து, அகக்கரணங்கள் தொலைந்து, தற்போதமுங்கெட்ட விதத்தைப் பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

குறிப்பு :—சலிப்பு - அசைவு. அண்டத்தில் ஐம்பூதங்களின் கேட்டினை புணர்த்தியதுபோலப், பிண்டத்திலும் 'ஊன், உயிர், அறிவு, உள்ளம், நான்' என்ற ஐந்தின் ஒடுக்கங் கூறினமைகாண்க.

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்

கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ.

உரை:—வானவர்க்கு முழுமுதற் றன்மையான கடவுள், கீழுலகத்தார்க்கு அடிப்படையான மூலமாய், மண்ணுலகினர்க்கு அமுதமாய், நான்முகனுக்கும் திருமாலுக்குந் தேடிவைத்த நிதி போல்வன் அடிமைகளாகிய நாம் கண்ணாரக் காணுமாறு ஆசானாய் எழுந்தருளி வந்து நின்றவனது அருட்பாதங்களைத் தென்னா தென்னா வென்று பாடித் தெள்ளேணங் கொட்டுவோமாக. (க௯)

குலம்பாடிக் கொக்கிறகும் பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாடோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

உரை:—ஒவ்வொருநாளும், இறைவன் எடுத்த திருவடிவங்கட்குரிய வேடர்குல முதலிய குலத்தையும் (அவன் சூடிய) கொக்கிறகினையும், புகழ்ந்து பாடி, சங்கினாலாகிய வளையலணிந்த உமையம்மையின் நன்மைகளைப் பாடி, இறைவன் (தேவரை உய்விக்க) விடமுண்ட விதத்தைப்பாடி, நீர்நிறைந் தசைகின்ற குளங்களையுடைய தில்லைச் சபையிலே கூத்தியற்றுகின்ற இறைவனது கழல் அசைதலைப் பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோமாக.

கொக்குருவங்கொண்ட அசுரன் ஒருவனைக் கொன்று அவனிறகைப் பிடுங்கி சிவபெருமான் தரித்துக்கொண்ட கதை உபதேச காண்டத்திற் கூறப்பட்டது.

குறிப்பு:—'குலம்' என்பதற்கு மேன்மை என்றும் பொருள் கொள்ளுவர். 'கொக்கிறகு' என்பதற்கு வேட்டுவ வடிவங் கொண்டகாலை, இறைவன் சூடிய கொக்கின் இறகு என்று பொருள் கொள்ளுதலு முண்டு. அலம்பு - அசைதல். புனல் - நீர்நிலை. நலம் - கருணையுமாம். (௨௦)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருச்சாழல்

சிவனுடைய காருணியம்

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன்அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

உரை :— ஆண்டவன் திருமேனிமேற் பூசுவதும் வெள்ளிய திருநீற்றுப் பொடியே. அணிவது சீறுகின்ற பாம்பே. திருவாயினாலே பேசுவது தெளிவில்லாத இரகசியமே போலும் தோழியே! இவற்றைப் பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுஞ் செய்து என்ன பயன்? எனில் அவற்றால் இறைவன் எல்லாவுயிர்களுக்கும் அவ்வவற்றிற்குத் தக்க பயன் அளிப்பவனானான்.

குறிப்பு :—'பூசுவதும்' முதலியவற்றில் உம்மை இழிவைக் குறித்தது. ஏடி என்பது தோழியைக் குறிக்கும் வழக்குச் சொல். இயல்பு - தகுதி, பலன் சாழல் - மகளிர் விளையாட்டில் ஒன்று. மறையோதுவதனால் அறிவினைத் தந்தும் அரவம் அணிவதால் உலகினை யியக்கும் தனது சக்தியை உணர்த்தியும் வெண்ணீறணிவதால் நிலையாமை யுணர்த்தி அருளொளி நல்கியும் எல்லா உயிர்கட்கும் நற்பயன் அளித்தலின் இயல்பானான் என்றார். (க)

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

உரை :—எந்தையாயும் எமது தலைவனாயும் எல்லார்க்கும் முதல்வனாயும் உள்ள பெருமான் கிழிந்த துணிகள் சேர்த்துத் தைத்த ஆடையைத் தான் கௌபீனமாகக் கொண்டது எதனால் எனின் நான்கு மறைகளையே பெரிய அரைநாணாகவும் நிலைபெற்ற மெய்ந் நூலில் நிறைந்துள்ள பொருள் தன்னையே கௌபீனமாகவுந் தரித்தனனென்றறிக.

குறிப்பு —துன்னம் - தைத்த துணி. மன்னு கலை-மெய்ந் நூல். தன்னையே என்பதைத் துன்னு பொருள் என்பதோடு சேர்க்க. மறைநான்கென்றது நால்வகை வாக்குகளைக் குறிக்கும். சரடு - அரைக்கயிறு. (உ)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ

உரை :—இறைவனுக்கு ஆலயம் சுடுகாடாகவும் அழகிய ஆடை கொல்லுமியல்புடைய புலியின் தோலாகவும் இருக்கின்றது. தாயுமில்லை தந்தையுமில்லை. தான் தனியனாக இருப்பவன் எனில், அவனுக்குத் தாயுமில்லை தந்தையுமில்லை. தான் தனியனாக இருந்தாலும், அவன் கோபிப்பானாயின் உலகமெல்லாம் கல்லின் பொடி போல் தூளாகிவிடுமென்றறிக

குறிப்பு :—எல்லாம் ஒடுங்கிய இடமே சுடுகாடாகும். புலித்தோலுடைமை உயிர்களின் செருக்கை யடக்கவல்லான் என்பதைக் குறிக்கும். தானே எல்லாம் தோன்றுதற்குக் காரணனாய்த் தான் தோற்றமில்லாதவனாய் ஒப்பற்ற ஒருவனாக யிருத்தலின் "தாயுமிலி தந்தையிலி தான்றனியன்" என்றார். எல்லாவற்றையும் ஒடுக்கும் முதல்வன் என்பது இறுதியடியாற் குறிக்கப்பட்டது. (௩)

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ

நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ.

உரை:—வருத்தியடக்கினமை பிரமனையும் மனமதனையும் யமனையும சநதிரனையும். அடையாளஙகள் அழியாத வடுக்கள் உடையராக இறைவன செய்தானே வெனின், முககண்ணுடைய பெருமானே அவ்வாறு அவாகளைத தண்டிததால அது தேவா களுககு மெய்யின் வெற்றியாகுமன்றோ!

குறிப்பு:—அனங்கன் - உடம்பில்லாதவன். வயனம்-வகை, அடையாளம். வடு - புண்ணின் தழும்பு சிவபெருமானை யிகழ்ந் தமையால் அத்தேவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். சிவ வடிவ முடைய வீரபத்திரரால் அவர்கள் தண்டனை யடைநதமை இறை வனால் தண்டனை யடைந்ததை யொக்கும அது சிவபெருமானே முழுமுதற் கடவுளென்பதை வானவர்க கறிவுறுத்துதலின் அது உண்மையின் வெற்றி என்ற கருததுப்பற்றி 'சயமன்றோ' என்றார். (௬)

தக்கனையும் எச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ

உரை:—(சிவபெருமானை மதியாது வேள்வியியற்றிய அயன் புதல்வனாகிய) தக்கனையும், யாகத்தலைவனையும் கொன்றொழித்து தேவாகூட்டஙகளுள் தொகுதியாகவந்தவர்களை அழிததமை என்ன செய்கை எனில், தொகுதியாக வந்தவர்களை வருத்தி யடககினாலும் அவர்களுக்கு இரங்கியருளினதோடு யாக மியற்றியவனாகிய தகக னுக்கு இழிந்த ஆட்டுத்தலையைக் கொடுத்தருளினன் என்றறிக.

குறிப்பு:—முதலடியில் எச்சன் என்பது வேள்வியியற்றுங் குருவைக் குறித்தது. நாலாவது அடியில் வேள்வி யியற்றுவானாகிய தக்கனைக் குறித்தது. தக்கனுக்கு ஆட்டுத்தலை கொடுத்தமை,

"ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீபற"

எனறமையால உணாக. பிழை என்பது குற்றம. இழிவு என்ற பொருளில் வந்தது தன்றலைக்கு வேறான தலையை அதிகமான தலை என்பாரு முளர். (௫)

அலரவனும மாலவனும அறியாமே அழலுருவாய
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆஙகாரம தவிரார்காண் சாழலோ.

உரை:—பூவிலுறைகின்ற நான்முகனும் திருமாலும் அடிமுடி தேடி யறியாவண்ணம் அனற் பிழம்பு வடிவமாய்ப் பாதாள முதல் அண்ட முடியைப் பொருந்த நின்றது எக்காரணத்தா லெனின், நிலத்திற்குக் கீழ்ப்பட்ட நிலமுதல் மேற்பட்ட அணடத்திற்கு மேலாகவுஞ் செல்லுமாறு நில்லாமற்போனால் அயன் அரி இருவரும் தமக்குள் நேரிட்ட தணியாப்பகையால் செருக்கினை யொழிக்க மாட்டார்கள்.

குறிப்பு:—நிலமுதற்கீழ் என்பது எல்லாவுலகிற்குங கீழ்ப் பட்ட முதல் தததுவத்திற்குங கீழாக எனப்பொருள்படும் அண்ட முற என்றது எல்லாவுலகிற்கு மேற்பட்ட எல்லைக்கு மபபாலாக என்று பொருள்படும். சலம்-பகை, கோபம். ஆங்காரம், செருக்கு. அலரவன்-என்பதில் அலர் தாமரை மலரைக் குறிக்கும். (௬)

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ [லாம்
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலனேல் தரணியெல்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.

உரை:—இமயமலை யரசன் புதல்வியாகிய உமை யம்மையைத் தனது திருமேனியின் ஒரு பாதியில் வைத்ததும் இறைவனது மற்றொரு சக்தி நீர்வாயிலாக அவனது சடையின்கண் சென்று

பொருந்தியது எக்காரணத்தா லெனின், நீர்வாயிலாக இறைவன் சடையில் ஓடிவிழுந்திடாவிடின் நிலவுலகெல்லாம அவள்வேகத்திற் பட்டுப பாதாளததிலே அழுந்தி வீழ்ந்துவிடப் பெரிய கெடுதி ஏறபட்டுவிடும்.

குறிப்பு :—சலமுகததால் என்பதற்குக் கோபங் காரணமாக என்றுரைப்பாரு முளர். உமையிடத்து வைத்த பொறுமையால் தலையிற்போய ஒருத்தி பாய்ந்தனள் என்பது நகைச்சுவை பயக்கும். பிலம் - பாதாளம். (௭)

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

உரை :—கொந்தளிக்கின்ற பாற்கடலின் கண்ணே பேரொலி யோடு கிளம்பிய ஆலகால விடத்தை உணவாகக் கொண்ட பெரு மானுடைய திறமைதா னிருந்தவாறென்னே எனில், ஆலகால விடத்தை இறைவன் அருந்தாவிடில் பண்டைக்காலத்தில் திருமால் பிரமன் முதலாகிய மேலான விண்ணவ ரதிபதிகளெல்லாம் இறந் தொழிவரென்றறிக.

குறிப்பு :—கோலாலம் - பேரொலி. சதுர் - திறமை, சாமாத் தியம். வீடுவா - இறப்பர். (அ)

தென்பால் உகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ

உரை :—தென்றிசைக்கண் கருணையோடு கூத்தியற்றும் தில்லைப்பதியின்கணுள்ள ஞானசபை முதல்வன் பெண் பகுதியை விரும்பினன், பெரிய பித்துக் கொண்டவ னுவானெனில், அறிவிலியே, பெண் பகுதியை அவன் விரும்பாவிடில் பெரிய

18

நிலவுலகிலுள்ளோர் விண்ணிடத் தடைதற் பொருட்டு யோகநிலை யடைந்து சாவார்கள்.

குறிப்பு :—தென்றிசையைப் பார்த்து இறைவன் ஆடுதலினால் தென்பாலுகந்து. உகந்து - விரும்பி, கருணைகொண்டு. யோகு - யோகம், துறவு நிலை. இறைவன் சிவமுஞ் சக்தியுமாய் நின்று உயிர்களை இயக்காவிடில் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய் இன்பந் துய்க்கமாட்டா என்பது கருத்து. 'அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை எல்லாம்' என்ற சிவஞானசித்தியுங் காண்க. (கூ)

தான்அந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.

உரை :—முடிவில்லாத பெருமான் தன்னை வந்து சேர்ந்த நாய்போன்ற என்னைப் பேரின்ப வெள்ளத்திலே திளைக்கும்படி செய்தான் என்னில், பேரின்ப வெள்ளத்தில் என்னைப் பதிப்பித்த திருப்பாதங்கள் வானுலகிலுயர்ந்த தேவர்கட்குக் கிடைத்தற்கரிய ஒப்பற்ற பெரும் பொருளாகு மென்றறிக.

குறிப்பு :—தான் என்றது இறைவனது தனிச் சிறப்பை விளக்கும். அவனொருவனே முடிவற்றவனென்பது கருத்து. வானுந்து என்பதில் வான் - வானுலகம். வான்பொருள் என்பதில் வான் - பெரிய. உந்துதேவர் - உயர்ந்த தேவர். பிற விண்ணவரைச் செலுத்துகின்ற அதிபதிகளாகிய தேவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். (க0)

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்புஅணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.

உரை :—பெண்ணே இதென்ன தவவேடம்! நரம்பினையும் ஓட்டினையும் எலும்பினையும் தரித்தது மல்லாமல் முழு எலும்புக்

கூட்டினைத் தோளின் மேலே விரும்பி யணிந்தான். அஃதென்னெனில் முழுஎலும்புக்கூடு வந்த விதத்தைக் கேட்பாயாக. பேரூழி முடிவிலே அரி அயன் என்பவர்களுடைய வாழ்நாளை முடிவுசெய்து அவர்கள் எலும்பைத் தரித்தனன் என்றறிக.

குறிப்பு :—நரம்போடெலும் பென்பதற்கு நரம்போடு கூடிய எலும்பு என்று பொருள் கூறுவாரு முளர். இறைவன் ஆமை யோட்டைத் தரித்தமையால் ஓடு தரித்தார் என்றுங் கூறலாம். விண்டுவின் கூர்மாவதாரத்தில் கூர்மத்தின் செருக்கை யடக்கி அதன் ஓட்டைப் பறித்தணிந்தார் என்று புராணங் கூறும். எலும்பு முதலியன அணிதல் இறைவனை ஒடுக்கும் முதல்வன் என்பதை யுணர்த்தும். கங்காளம்-முழு எலும்புக்கூடு. மூன்றாவதடியில் கங்காளம் ஆம் ஆ எனப் பதம் பிரிக்க. ஆம் ஆ - ஆம் ஆறு-ஆகும் விதம். நாலாவதடியில் காலம்-முடிவுகாலம். செய்ய-செய்து.

"பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடல் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்"

என்ற தேவாரமுங் காண்க. கங்காளம் அயன்மால் ஒடுக்கத்தையும் எலும்பு பிறருடைய ஒடுக்கத்தையும் குறிக்கும். (கக)

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ
ஆனாலுங் கேளாய் அயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.

உரை :—காட்டிலிருக்கும் புலித்தோல் அவனுக்கு உடை. கபாலம் உணவுப் பாத்திரம். சுடுகாடு இருப்பிடம். இங்ஙனமானால் அத்தகைய கடவுளுக்கு யார் தொண்டராவரென்னில், அவனத்தகைய னானாலும் திருமாலும் பிரமனும் வானுலகினர் தலைவனாகிய இந்திரனும் அவனுக்குப் பரம்பரை அடியார்கள் என்பதை நீ கேட்டறிக.

குறிப்பு :—கான் - கான மென்பதின் கடைக்குறை. ஆர்புலி - வினைத்தொகை. ஆர்-தங்கு. தலை-கபாலம். ஊண் - உண்ணும் பாத்திரம். காடு - சுடுகாடு. பதி - இடம். வழி - பரம்பரை. கேளாய் - கேள், கேட்டறி. தாருகாவனத்து முனிவர் பிற தேவர்களை வணங்கி வேள்வி செய்து அனுப்பிய புலியைக் கொன்று அதன் தோலை யுடுத்தமையால் தேவர் தலைவனாகிய இந்திரனும், பிரமன் தலையைக் கிள்ளிய காலை கையிற்கொண்ட கபாலமே உண்கல மாதலால் பிரமனும், திருமாலுள்ளிட்ட எல்லாரையும் ஒடுக்கிய இடமே சுடுகாடாதலால் திருமாலும், இறைவனால் ஒடுக்கப்படுதலின் அவர்கள் பரம்பரை யடியார்கள் ஆவர் என்றறிக. (௧௨)

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ.

உரை :—பனிமலை யரசன் மகளாகிய பொன்னின் பதுமை போன்ற ஒளி பொருந்திய நெற்றியையுடைய திருமகளாகிய உமையம்மையை உலகினர் அறியும்படி இறைவன் மணந்தான் என்பது என்னெனில், அங்ஙனம் உலகறிய அவன் அவளைத் திருமணஞ் செய்யாவிடின், எல்லா வுலகமும் நூல்கள் கூறிய எல்லாக் கருத்துக்களும் நிலைமாறும் என்றறிக.

குறிப்பு :—'வாணுதலாள்' என்பதில் வாள் - ஒளி. தீவேட்டல் - மணத்தல். தீ முன்பாக விரும்பிய பெண்ணைக் கொள்ளுதலால் தீ வேட்டல் எனப்பட்டது. கலை-நூல். உமையம்மை இறைவனை மணப்பது கருதித் தவங்கிடந்தமையால் அத்தவத்தின் பயனாக இறைவன் திருமணம் நிகழ்த்தினன். ஆதலின் தவஞ் செய்தலின் பயனாக இறைவன் திருவருள் பெறலாமென்பது உலகெல்லாம் அறியக்கிடந்தது. நூற்கருத்துமதுவே. பிழை செய்தாலும் அதற்காக வருந்தித் தவம் ஆற்றின் இறைவனருள்

கைகூடும் என்பது விளங்கும். உலகினர் வேண்டுவதும் நூல்கள் கூறும் பயனும் திருவருட்பேறேயாதலின் அத்திருவருட்பேறில்லா விடத்து எல்லாம் கலங்கிடும் என்றார். (கடு)

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயிலாநின் றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ

உரை:—தேன் பெருகிய குளிர்ந்த வயல்சூழ்ந்த தில்லைப்பதியின் கண்ணுள்ள ஞானசபை முதல்வன் தானே (ஆலங்காட்டில்) போய் (ஊர்த்துவ) நடனம் இயற்றினமை எதனாலெனின், அவன் அங்ஙனம் போய் அந்தத் திருநடத்தினை யியற்றாவிடின் உலகமெல்லாம் புலாலில் படிந்த வேலாயுதத்தையுடைய காளிக்கு ஊட்டப்படும் உணவாகிவிடும் என்றறிக.

குறிப்பு:—நடம் என்பது நட்டம் என விரிந்தது. காளி தேவதை அசுரரைக் கொன்று இரத்தங் குடித்தமையாலுண்டான வெறியால் உலகத்தை நாசஞ் செய்யக் கருதிய காலை இறைவன் ஊர்த்துவ தாண்டவமியற்றி அவள் செருக்கை யடக்கினமை இங்கே கூறப்பட்டது. (கசு)

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ.

உரை:—மதம் பொழிய வல்ல யானையையும் குதிரையையும் தேரினையும் விரும்பி ஏறாமல் காளையை விரும்பி யதன்மேல் ஏறிச் சென்ற விதத்தை எனக்கு விளம்பக் கூறுகவென்னில், பெரிய சுவர்களையுடைய கோட்டைகள் மூன்றையும் (தன் சிரிப்பிலுண்டாகிய) நெருப்பினாலெரித்த அந்தக் காலத்திலே காளையாய் இறைவனைத் திருமால் தாங்கினா னென்றறிக.

குறிப்பு :—கடம் - மதசலம். கரி - யானை; கரமாகிய துதிக் கையை யுடைமையால் கரியெனப்பட்டது. பரிமா-குதிரையாகிய விலங்கு. திரிபுர மெரித்தற் பொருட்டு விண்ணவர் சமைத்த தேரின் அச்சு முறிந்த காலத்தில் திருமால் காளை வடிவாய் இறைவனுக்கு ஊர்தியாயினனென்பது புராணக் கருத்து. காளை அறத்திற் கறிகுறியாகக் கருதப்படுதலின் திருமால் காளைவடிவங் கொண்டனன் போலும். 'மதில்களவை' என்பதில 'அவை' என்பது கோட்டைகளைக் குறித்து நின்றது. (கரு)

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ.

உரை :—பண்டைக் காலத்திலே ஒரு கல்லாலமரத்தின் கீழிருந்து இறைவன் செவ்வையாக நான்கு முனிவர்களுக்கு நால் வேதத்திற்கு மூலமாகிய கருத்தினை அறவுரையாக இயம்பினன். அங்ஙனம் அவன் அறவுரை கூறினும் (மறச்செய்கையால்) முப் புரத்தை முற்றிலும் எரித்தழித்தனன் எனஅறிக.

குறிப்பு :—'அன்று' பழமை குறிக்குஞ்சொல் 'நான் மறையினுட்பொருள்' என்றது அறம்பொருளின்பம் வீட்டினை அறவுரை என்பதை வடநூலார் தருமோபதேசம் என்பர 'அறம' என்பது நாற்பொருளையும் குறிக்கும். "அறநான் கருள்செய்தாய்", "அறம் பொருளின்பம் வீடு மொழிந்த வாயான்", "எல்லாவறவுரையும் இன்னருளாற் சொல்லினான்" என்ற தேவார அடிகளை யுற்று நோக்குக. பக்குவர்களுக்கு அறவுரை கூறி அருள்புரிந்தது போலத் தீயவர்களுக்குத் தண்டனை புரிதலும் இறைவன் செயல் என்பார், 'கொன்றான் புரமூன்றும்' என்றார். கூட்டோடே - கூடிய பொருள்களோடு. முதற் பொருள் துணைப்பொருள் என்பன எல்லாம் அழிக்கப்பட்டன என்பது கருத்து. (கசு)

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ.

உரை :—வெளியிடத்திலே (கூத்தியற்றுவார் போல) கூத்தாடி உண்பதற்குப் பிச்சையேற்றுத் திரிகின்ற சிவபிரானைக் கடவுளென்று விரும்புவது எவ்வாறெனில், அவர் கடவுளாயிருக்கும் விதத்தைக் கேட்பாயாக. அத்தகைய நம்பனையே நான்கு வாக்குகளும் தாங்க ளறியவொண்ணாத 'எங்கள் தலைவனே', 'ஆண்டவனே' என்று வழிபட்டன என்றறிக.

குறிப்பு :—'அம்பலம்' என்பது பொது இடத்தைக் குறிப்பதால் தனக்கென ஓர் இடம் இல்லான் என்றும், பிச்சையேற்றுண்பதால் தனக்கென உணவு முதலிய பொருள்களிலலாதவனென்றும் இறைவனை இகழ்ந்தமையை ஈண்டு மறுத்தார். இரண்டாமடியில், 'நம்பன்' என்பதற்கு நம்மைப்போல்வான் என்று பொருள் கொளவாருமுளர். உயிர்கள் சுட்டறிவுகளுக் காரணமாகிய நால்வகை வாக்குகளும் இறைவனை யறியாவெனில், அவன் உயிர் அறிவுக்கு அப்பாற்பட்டவன் என்பதும், அவன செய்கைகளின் காரணம் உயிரறிவுக்கு விளங்கா வென்பதுங் குறித்தவாறும். பலி - பிச்சை. பலிதிரியும் - பலியின் பொருட்டுத் திரியும். அமுது செய - உணவு கொள்ள. தேவன் என்ற சொல் கடவுளை உணர்த்தி நின்றது. (கள)

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ.

உரை :—(போரில்) தணியாத வீரசெருக்குடைய சலந்தராசுரனுடைய உடம்பைவெட்டிய வலிமைமிக்க சக்கரத்தைக் காத்த

லாகிய நன்மையைச்செய்யுந் தன்மையையுடைய நாராயணனுக்குப் பண்டைக்காலத்திற் கொடுத்தருளிய காரணம் என்னை எனின், அத்தகைய திருமால் தன்னுடைய கண்ணைத் தோண்டிச் சிவபிரானது திருவடிக் கீழ் (அருச்சனை) மலராகத் தூவினமையால் சக்கரத்தைக் கொடுத்தருளினன் என்றறிக.

குறிப்பு:—சலம் - போரில் உறுதி. தணியாக் கோபம் தடிதல் - குறைதல், வெட்டுதல். அலா - பூ. சலந்தராசுரன் என்பான் திருமால் பிரமன் முதலிய தேவர்களையெல்லாம் வென்று செருக்குக்கொண்டு சிவபெருமானிடம் போர்செய்வதற்காகக் கயிலை மலையை யணுகினான். அப்போது இறைவன் பார்ப்பன வடிவத்தோடு எதிர்ப்பட்டு நிலத்தில வட்டவடிவமான கோடொன்றினைக் கீறி, அக்கோட்டினுள் அடங்கிய நிலத்தைப் பேர்த்தெடுக்குமாறு அவனை ஏவினார். அவனதை எடுக்க முயன்ற காலை, அஃதே சக்கரமாய் மாறி அவனைக் கொன்றது. திருமால் இறைவனை ஆயிரந் தாமரைப் பூவினால் அர்ச்சிக்கக்கருதி அர்ச்சித்தபோது ஒரு பூக்குறையக் கண்டு அதற்குப் பதிலாகத் தன்னுடைய கண்ணைப் பிடுங்கிச் சாத்தினன் என்பது,

"பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவா"

என்னுந் திருத்தோணோக்கச் செய்யுட் பகுதியா லறிக (௧௮)

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங் கேதமுது செய்திடினுந்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ.

உரை:—புள்ளிகளுள்ள புலித்தோல் எம்பெருமானுக்கு ஆடையாகும். ஆலகாலவிடம் அவனுக்கு உண்ணும் உணவாகும். அவன் அதனை உட்கொண்ட சாமர்த்தியத்தை எனக்குத் தெளிவாகக்

கூறுக வென்னில், எமது தலைவனாகிய அவன் எதனை உடுத்தி எதனை யுண்டாலுந் தன்னுடைய பேராற்றலைத் தான் தெரியாத இயல்புடைய னென்றறிக

குறிப்பு —அம்பரம் - ஆடை. ஆரமுதம - உண்ணும் உணவு. சதுர் - திறமை இறைவன் கருணையினாலே எல்லாம செயவ தன்றித தனது பெருமையை வெளிப்படுத்தவன்று. 'அவன தன் பெருமையையே யறியாதவன்' எனறு இறைவனது பேரருளியல் பினை விளக்கினார். (கக)

அருந்தவருக காலின்கீழ் அறமமுதலா நான்கனையும
இருநதவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடி
அருநதவருக் கறமமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக குலகியற்கை தெரியாகாண் சாழலோ

உரை :—செய்தற்கரிய பெருநதவ மியற்றிய நால்வர்க்கும் கல்லாலமரத்தின் கீழ வீற்றிருநதருளி அறமுதலாகக் கூறப்படும் நாற்பொருளையும் உரைத்தருளிய காரணத்தை எனக்குத் தெளிவா கக கூறுகவெனில், அருந்தவர்களுக்கு அறம் முதலிய நான்கினை யும் அககாலத்தில் சொல்லி யருளாவிடில் திருத்தமான முறையில் அவர்களுக்கு உலகினியல்பு விளஙகியிராதென் றறிக.

குறிப்பு :—'அறமுதலா நான்கென்றது'-அறம் பொருள் இன் பம் வீட்டினை. 'திருந்த அவருக்கு' என்ற சொற்கள் திருந்தவருக்கு என்றாயிற்று; திருந்த-திருத்தமாக. உலகியற்கை அவர்கள் வாயி லாகவே அவர்க்குப் பின்வநதோர் அறிந்தனரென்று கருத இடம் உண்டு. உலகியற்கை நாற்பொருளின் சார்பாகவுள்ள தென்பதும் இதனாலே தெளிவாகும். (உ0)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருப்பூவல்லி

மாயாவிசயம் நீக்குதல்

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

உரை :—ஒன்றோடொன்றொத்த திருப்பாதங்களை இறைவன் எனது தலைமீது வைத்தருளியவுடன், யான் துணையாகக் கருதிய உறவுகளெல்லாவற்றையும் விட்டு நீங்கினேன். தடுக்குங்கரை பொருந்திய நீர்நிலைகள் சூழ்ந்த தில்லைப்பதியிலே ஞானசபையிலே திருநடம்புரிகின்ற (பிறவிக் கடலில்) தெப்பமானவனுடைய புகழைப் பாடி மலர்களைக் கொடிகளினின்று பறிப்போமாக.

குறிப்பு :—இணை-இரண்டு, ஒப்பு. இறைவன் திருவடிகட்கு அவைகளே யொப்பாவன அன்றிப் பிற ஒப்பாகா என்பது கருத்து. புணை-தெப்பம். பூவல்லி-பூக்கொடி. 'அல்லிப்பூ' என்பாருமுளர். பூவல்லி யென்பதும், மகளிர் விளையாட்டில் ஒன்றே அது எத்தகைய தென்று விளங்கவில்லை. (க)

எந்தையெந்தாய் சுற்றமற்று மெல்லாம என்னுடைய
பந்தமறுத் தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

உரை :—எமது அப்பனாகியும் தாயாகியும் உறவினராயும், எனை எல்லாமாகியும் நின்று என்னுடைய பாசக் கட்டினைத் தொலைத்து

என்னை ஆட்கொண்டருளிய பாண்டிப பிரானுகிய பேரின்பத் தேனுனவன், அழகிய திருவிடைமருதூரிலே வீற்றிருந்த புடையாய கோயிலைத் தொழுது நாம் கொடிநின்று மலர்களைக் கொய்வோமாக.

குறிப்பு :—'என்னுடைய பந்தமறு . பாண்டிப்பிரான், எந்தையெந்தாய் சுற்றமற்றும் எல்லாம்' என்றும் வைத்துப் பொருள் கொள்ளலாம். முதலடிக்கும் இரண்டாமடியிற் பாதிக்கும். 'என்னப்பன், தாய், உறவினர் முதலிய எல்லாரோடும் எனக்குள்ள தொடர்பாய கட்டினைத் தொலைத்து' என்று பொருள் கொள்வாருமுளர். தேன், மரப்பொந்துக்களி லிருப்பதால், இறைவனைத் தேனென்ற இடத்து, அவனிருக்கும் இடத்தைப் 'பொந்து' என்றார். அந்த - அழகிய. பந்தம் - கட்டு. பாண்டி நாட்டிலே தன்னை ஆண்டமையாலும், பாண்டியனை ஆண்டமையாலும், பாண்டிய மன்னனுய் ஒரு காலத்து விளங்கினமையாலும் 'பாண்டிப் பிரான்' என்றார். (உ)

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ

உரை :—நாயினுங் கீழ்ப்பட்ட நம்மையும் மதிக்கத்தக்க ஒரு பொருளாக வைத்துத் தாயினும் மிகுதியான கருணையுடைய தம்பெருமான் நமது வஞ்சப் பிறப்பினைத் தொலைத்து ஆட்கொண்டருளினுன். எனது கொடிய வினையின் வாயிலே மண்பொடியை யிட்டுவிட்டு நாம் கொடிப்பூவைப் பறிப்போமாக.

குறிப்பு :—பொருட்படுத்து - மதிக்கத் தக்க பொருளாக்கி. தயா - கருணை. மாயம் - கள்ளம், வஞ்சகம். 'என் வல்வினையின் வாயிற் பொடியட்டி' என்பதை 'ஆண்டான்' என்பதோடுஞ் சேர்க்கலாம் வாயில் பொடியட்டி என்பது வாயில் மண்போட்டு என்ற வழக்கச்சொல்லை நினைவுறுத்தும். அட்டுதல் - போடுதல்.

பொடி - புழுதி தமக்கு வேறொரு தலைவனில்லாதலின இறைவனைத் தம் பெருமான் என்றார். (௩)

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன்எச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்டவா பாடிப் பூவல்லி கொய்யாமோ

உரை —செம்மை பொருந்திய தில்லையென்னும் திருப்பதிக்கு வேந்தனாகிய சிவபெருமானை வணங்காமல் மதிப்பிழந்த தக்கன், யாகத் தலைவன், கதிரவன், சந்திரன், அக்கினி முதலிய தேவர்கள் வானிற் பொருந்திய பூதங்களின் சேனையையுடைய வீரபத்திரனாலே ஊறெய்திய விதத்தைப்பாடிக் கொடிப்பூவைக் கொய்வோமாக.

குறிப்பு —'பண' என்பதற்கு இசை என்று பொருள் கொள்வாருமுளர். எண் - மதிப்பு. இரண்டாவதடியில், பட்ட - கெட்டொழிந்த 'விண்பட்ட' என்பதற்கு மேன்மை பொருந்திய என்று பொருள் உரைப்பாருமுளர். வான்வரை வளர்ந்த வடிவத்தை யுடைய என்று கூறுவாருமுளர். அருக்கன் - சூரியன். எச்சன் - யாகத்தலைவன். இந்து - சந்திரன். தக்கன் முதலியோரைத் தண்டித்தற்கு வீரபத்திரரை இறைவன் அனுப்பினமை புராணத்தால் விளங்கும். (௪)

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந் துள்புகுந்தான் உலகர்முன்னே
நானாடி ஆடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ.

உரை :— வண்டுகள் நாடியடைகின்ற கொன்றைப் பூவினைச் சடையிற் சூடிய சிவபெருமான் மனித வுடம்பெடுத்து என்னை யாட்கொள்ள விரும்பி வந்து உலகினர்க்கு முன்பாக என்னை யாட்கொண்டு என்னுள்ளத்திற் புகுந்தருளினன். நான் அவனைத்

தேடிக் கூறுதற்கும் காணப்பெறாது நின்று அடைக்கலமென்று கூவும்படியாகத் திருநடனமியற்றுகின்ற வானுலகினார் தலைவனுக்காகவே நாம கொடிப்பூவினைப் பறிப்போமாக.

குறிப்பு :—'தேனாடு' என்பதை தேன் + நாடு எனவும், தேன்-ஆடு எனவும் பிரிக்கலாம். தேன - வண்டு. ஊன் - உடம்பு. இறைவன் மானுடச சட்டை சாத்தி வந்தமை குறிக்கப்பட்டது. தான் இறைவனை நாடாமல் இறைவனே தன்னை நாடி வந்து அருள்புரிந்த கருணைத் திறத்தைக் குறிப்பார், 'நாடிவந்து' என்றார் இறைவன் தன்னை யுடனழைத்துச் செல்லாமையால் 'ஓலமிட' என்றார (௫)

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறுத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதாம ஒருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ

உரை நடை '—மூன்றாம அடியை முதலிற் கொள்க

உரை '—(போக வடிவம் யோக வடிவம் அகோர வடிவம் என்னும்) மூன்று வடிவங்கொண்டு போக மூத்தி தண்டங்களை விதித்தும் உயிர்களால் தாமே யறியககூடாத ஒரு முதல்வன், தக்கன் வேள்வியில் அக்கினி, பிரமன், விண்டு என்னும் மூன்று தேவரையும் தண்டித்தும் அல்லது அவர்கள்மேல் இரக்கங் கொண்டு கொல்லாது விடுத்தருளி, தக்கன் எச்சன் இந்திரன் என்பவர்கள தலையறறு விழும்படி கோபங்கொண்டு புருவம் நெரித்தருளி,(வீரபத்திரரால்)அவர்களைக கொன்றும்,திரிபுரமூன்றையும தாமே எரித்த விதத்தைப் பாடிக் கொடிப்பூக்களைக கொய்வோமாக

குறிப்பு '—'எரி மூன்று தேவர' என்பதற்கு முத்தீவேட்கும் முனிவர் எனப் பொருள் கொண்டு தக்கன் வேள்வியில் சிவபரஞ் சாதித்தவர்பொருட்டு இரங்கியருளி என முதலடிக்குப் பொருள் கொள்வாருமுளர். 'உரு மூன்றுமாகி' என்பதற்கு அருவம், அருவுருவம், உருவம் என்று பொருள் கொள்வாருமுளர். 'எரிமூன்று'

என எடுத்தால் முத்தீ என்பது வீட்டுத்தீ காட்டுத்தீ ஞானத்தீ என்பனவாகும். அவற்றை வடநூலார் காருக பத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினியம் என்பர். (௬)

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்(து)
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

உரை.—தன்னை வணங்குவதற்குத் தலையாகிய உறுப்பினைக் கொடுத்து, நீண்ட சிலம்பணிந்த தனது திருவடியை வாழ்த்துதற்கு வாயினை யமைத்து, சேர்ந்து பழகுவதற்குத் தனது சிறந்த அன்பர்களது திருக்கூட்டமும் ஏற்படுத்தி, (தமது ஐந்தொழிலுக் கறிகுறியாக) உமையம்மை காண அழகிய தில்லைப்பொதுவிலே கூத்தியற்றுகின்ற அருட்பண்பினை மிகுதியாகப் பாடி நாம் கொடிப் பூக் கொய்வோமாக.

குறிப்பு:—"வாழ்த்தவாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்க்கச் சென்னியும்" என்ற தேவாரமுங் காண்க. 'சீரடியார்' என்பதில் சீர் என்பது பயன் கருதாது அன்பு செலுத்துஞ் சிறப்பினைக் குறிக்கும். அணங்கு - தெய்வப்பெண். அது இங்கே அம்மையைக் குறித்து நின்றது. அணங்கொடு என்பதற்கு அழகொடு என்று பொருள் கொள்வாருமுளர். கூர - மிகுதியாக. (௭)

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

உரை:—எனக்குத் தக்க வழிகாட்டி யருளித் தனது சிறந்த அடியார் திருவடிகளுக்கே (தொண்டுசெய்ய) என்னை இலக்காக்கி ஆட்கொண்டருளிய பெருமானின் அருட் பண்பினை வாழ்த்தி, நம்மை அடிமையாக்கி, முற்றிலும் வருத்தும் பண்டை வினையை

அவன் பொய்யாகிய விதத்தைப்பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு :—முறி - அடிமை உடறறும் - வருததும் (அ)

பன்னாட் பரவிப் பணிசெயயப பாதமலா
என் ஆகம் துன்னவைதத பெரியோன எழிற்சுடராய்க
கல்நா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள
பொன்னான வாபாடிப பூவல்லி கொயயாமோ

உரை —பல நாட்களாக வணஙகித தொண்டு செய்தமையால், திருவடித தாமரையை எனது சென்னிமிற பொருந்தவைதத பெருந்தகையாளனாய், உள்ளததெழுகின்ற சோதியாய், கல்லிலே நார உரித்ததாற்போல, என் நெஞ்சக கலலை அன்புடையதாக்கி, என்னை ஆட்கொண்டருளியவனது இருசேவடிகளும, நமககுப் பொன்போல, மாறாத பயன் தநத வகையைப் பாடி நாம கொடிப் பூக கொய்வோமாக.

குறிப்பு :—நெடுஙகால மியற்றிய தவததின் பயனாக ஞானங் கிட்டுமென்பது, தமது அனுபவத்தின் வைதது அடிகள் அறிவுறுததி யருளினர். ஆகம - உடம்பு; இங்கே தலையைக குறிக்கும். ‘எழிற்சுடராய்’ என்பதை ‘உள்ளத் தெழுகின்ற ஞாயிறே போல’ என்பதோடு ஒத்துப் பார்க்க. ‘பொன்’ - அரிய பலனளித்தற் கறிகுறி. (க)

பேராசை யாம்இந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

உரை :—(எல்லையில்லாமையாற்) பெரிதாய அவாவினாலுள தாம் இந்த உடம்பெடுத்தலாகிய பிறவி நீங்கும்படி, திருப்பெருந் துறை அண்ணல் தனது செவவிய திருப்பாதங்களை எனது தலைமேல் வைத்தவள்ளல், அசசம் பொருந்திய கடலின்கண் எழுந்த

விடத்தை விரும்பி அருந்திய கபாலத்தைக் கையிற்கொண்ட பெருமான், அவன் போர் தொடர்ந்த முப்புர வியப்பு பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு :—பேராசை - பேராசையால். பிண்டம் - உடம்பு; பிறவிக்கு ஆகுபெயர். சீர் - செம்மை. கார் - அச்சம். உண்டுகந்த - உகந்துண்ட. காபாலி - கபாலத்தை யுடையவன். பிரமன் சிரத்தைக் கொய்தகாலை, அவன் தலையையே பலிப்பாத்திரமாக வைரவர் பிச்சையேற்றமை புராணத்தா லறியற்பாலது. (கo)

பாலும் அமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ

உரை :—பாலும் தேனும் அமுதமும் ஒருங்கு சேர்ந்தாலன்ன மிக மேலான பொருளாய், உள்ளங் குளிர்விக்குந் திருவடியோடு தோன்றி எனது மனத்தைக் கவர்ந்து கொண்ட பெருமானது ஒலிக்குஞ் சிலம்பு பொருந்திய திருவடிகளை உலகத்திலே வழி படுவாரது உயர் நெறியே நல்ல வழியாம். அவ்வழி போன்ற அவனது புகழினைப் பாடிக் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு :—பராபரம் - மேலானவற்றிற்கு மேலானது. பரர் - மேல், பரம் - மேல். 'கோலத்தாற் குளிர்ந்து' என்னவே, குளிர்ந்த கோலமெனபது கருத்தாம். குளிர்தல், உள்ளத்திற்குக் குளிர்ந் திருத்தல் ஆதலால், உள்ளங் குளிர்விக்கும் என்று பொருளுரைக் கப்பட்டது 'அந்நெறியே' என்பதைப் 'பரவுவார்' என்பதனோடும் 'போலும்' என்பதனோடு மியைக்க. அகரம், உயர்வு குறிப்பது. (கக)

வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவனாய் நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ.

உரை — (வானவர் தலைவனாகிய) இந்திரன், திருமால், பிரமன் என்னும் தேவர்கள் ஆகிய யாவர்க்கும் தலைவனாயினும், தன்னை வில் இடப்பகையாகவே முக்குணமும் நாமம் முதலிய அடையாளமும் கூடப் பெறாதவன். பெரிய (பாற்) கடலில் உண்டான ஆலகால விடமானது, அவனுக்கு உண்ணுதற்குரிய உணவாக ஆயின வகையைப் பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக

குறிப்பு :—'வானவன்' என்ற ஒருமையால், அது இந்திரனைக் குறிப்பதாயிற்று. குணம், குறி, கூடலில்லாதவனென்று மாற்றுக. அவ்வாறே 'நெடுங்கடல் ஆனஆலாலம்' என மாற்றுக. ஒருவரும் அடையக்கூடாத குணமும் குறியுமுடையோனெனப் பொருள் கொள்ளுவாருமுளர். போனகம் - உணவு. அமுது செய்ய - உண்ண. (கஉ)

அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்தாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

உரை :—பண்டை நாளிலே, கல்லாலமர நிழலின் கீழ், அருமையான நூல்களாகிய நான்மறைகளை வெளிப்படுத்தியருளி, ஒவ்வொரு நாளும், தேவர்களும் பெரிய முனிவர்களும், செவ்வையாக அமைதியாய், மனப்பூர்த்தியாய், வழிபடுகின்ற, திருவடிக்கண் நிரம்பிய சிலம்புகளையுடையோனது திருமுடியை அழகு செய்யுங் கொன்றைப்பூவின் பொன்னிறமான மகரந்தத்தைப் பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு :—ஆர - முழுமையும். புனை - அழகு செய்யும். அருமறைகள் அருளினமையால், மறைவிதிப்படி வானவரும் முனிவரும் வழிபடுவாராயினர் என்ற கருத்துத் தொனித்தல் காண்க. (கங)

படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்பம் மேயபிரான்

தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ

உரை:—எனது உள்ளச் சுவரின் கண்ணே (எழுதிய) சித்திரம்போல நிலைபெறும்படி, தனது இரண்டு திருவடி மலர்களைத் தந்தருளி, அகத்தே (எனது உடலையே) இடமாக ஏற்றுக்கொண்டு, (புறத்தே) திருவேகம்பத்திலும் வீற்றிருந்த பெருமான், நீர்நிலைகள் சூழ்ந்த திருமதில்களையுடைய தில்லைக் கோயிலே திருநடனஞ் செய்தற்குரிய சிறந்த இடமாகக் கொண்டு கூத்தியற்றும் வகையைப் பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு.—படம் - சித்திரம். அவை - அடிகளைக் குறித்தன. இங்கு, என்பது உடலையாவது உள்ளத்தையாவது குறிக்கலாம். தடம்-குளம், நீர்நிலை. 'நடமாடு' என்பதை 'இடமா' என்பதனோடும் 'ஆ' என்பதனோடும் கூட்டுக. தான்-சிறப்புணர்த்தும். (கச)

அங்கி அருக்கன் இராவணன் அந்தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

உரை:—நெருப்புக் கடவுள், பகலவன், இராவணன், அந்தகாசுரன், யமன், சிவந்த கண்ணையுடைய திருமால், பிரமன், இந்திரன், சந்திரன், (வேள்விக்குமுன்) குறைவில்லாத தக்கன், அவன் யாகத்தின் அதிதேவதையாகிய எச்சன் என்னுமிவர்களுடைய மதிப்புக் கெடும்படியாக, விரைவில் உண்டான சினங்கொண்டியற்றிய இறைவன் புகழ்ச் செயல்களைப் பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு:—தக்கன் யாகத்தில் அக்கினியின் நாவையுங் கையையும் வீரபத்திரர் கொய்தனர். அரியை மார்பிலே புடைத்தார். அயனைச் சிரசிற் குட்டினார். இந்திரனை வெட்டினார். சந்திரனைப் பாதத்தினாற் றேய்த்தார். தக்கனும் எச்சனும் கொலையுண்ட

னா. யமனை மார்க்கண்டருக்காக இறைவன் உதைத்தார். இராவணன் கயிலையை எடுக்க முயன்றகாலை அவனை விரலால் அழுத்தி நெரித்தனர். அந்தகாசுரன், திருமால் பிரமன் முதலியோரை வருத்திப் பெண் வேடங்கொள்ளச் செய்தமையால், வைரவர் சூலத்தாற் றண்டனையடைந்தான். அவன் இறைவனை வழுத்தவே, அவனுக்குக் கணபதி பதவி கொடுக்கப்பட்டதெனக் கந்தபுராணங் கூறும். தக்கன் வேள்வியியற்றுமுன், உமையம்மையை மகளாகப் பெற்றுச் சீரொடு திகழ்ந்தமையால், 'பங்கம் இல்' என்றார். (கஎ)

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

உரை:—வலிய போரியற்றவல்ல காளையை (ஊர்தியாக) உடையவன், சிவலோகத்தாராகிய (அடியார்களுக்காகவும்) பாசத்தைப் பொருது களையவல்ல சிங்கமானவன். மண்ணுலகிலே, அவன் மதுரைப்பதியிலே, (வையைக்கு மண் சுமப்பதற்குப் பிட்டு வாணிச்சியிடம்பெற்ற கூலியாகிய) பிட்டினை உண்டருளி, பாண்டிய மன்னன் தன்னைப் பிரம்பினால் அடித்து வேலை கொண்டமையாற் புண்பட்ட விதத்தைப் பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு:—'போரேறே நின்பொன்னகர்வாய்' என்று மேலே வருதல் காண்க. தண்டு - தடி, பிரம்பு. பாடல்-படல் என்பதன் விரிவு. (கஅ)

முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னாகம் உள்புகுந் தாண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

உரை:—பொன்னொளி பொருந்திய இறைவனது திருப்பாதங்களை, (தேவர்க்குள்) முன்னிற்பாராகிய திருமாலும், பிரமனும்

தேவர்களும் அசுரர்களும் தாமாக அறியமாட்டார்கள். அத்திருவடிகளை நாம் எளிதாகத் தெரிந்து வணங்குதல் கூடுமா? எனக்குப் பக்குவம் வருமுன்னே, எனதுடலிற் புகுந்து என்னை ஆட்கொண்டருளியவனுடைய விளங்கும் நகையாகிய பல பாம்புகளின் சீரினைப் பாடி நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு :—'பொன்னுர்' - பொன்போல மாற்றமில்லாத என்றும் பொருளுரைப்பர். போற்றுவதே என்பதில் ஏகாரம் வினு. ஆகம் என்பதை அகமென்பதன் விரிவாகக் கொண்டு உள்ளமென்று பொருளுரைத்தலுமுண்டு பாம்பு-குண்டலி சக்தியைக் குறிப்பதால் இறைவனது வியத்தகு செயல்களுக்கவை அறிகுறியாம். (கள)

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

உரை.—தேர்கள் நிறைந்த தெருக்களையுடைய திருப்பெருந்துறைப் பெருமான், தனது சிறப்புமிக்க திருப்பாதங்களி லணிந்த வலிய சிலம்புகள் கலீரென ஒலிக்கும் சிலம்போசையைக் கேட்டே, நிரம்பாத பேரார்வமுடையேனுய் அடியேன் மனமகிழும்படியாகத் திருக்கூத்தியற்றுவதாலுளதாம் பேரின்பத்தைப் பாடி நாம் பூக்கொய்வோமாக.

குறிப்பு —பகைவர் மனதில் அச்சம் விளைக்குஞ் சிலம்பு என்பார 'திண்சிலம்பு' என்ருர. ஆர்வம் மேலும் மேலும் எப்போதும் விளையு மென்பார் 'ஆராத' என்ருர். ஆனந்தக் கூத்தாதலிற் 'பேரானந்த' மென்ருர். (கஅ)

அத்தி யுரித்ததது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதல்உத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ.

உரை .—(கயாசுரனாகிய) யானை யுருவினனைக் கொன்று உரித்த தோலினைக கொண்டு தனது திருமேனியை மூடியருளுந் திருப் பெருந்துறை நாதன் அன்பர்பாற் பித்தன் போன்ற திருவுருக் கொண்டு அல்லது இன்னதென்றறிய முடியாத வஞ்சக வுருவங் கொண்டு அடியார்க்கு மகவாகவும் உருக்கொள்ளுவன். வீட்டிற்குத் தானே முழுமுதன்மையுடைய தலைவனாகிய திருவுத்தர கோசமங் கையில் வீற்றிருக்கும் அருட்கொடையாளன் எனது அறிவின்கட் பதிந்த விதத்தைப் பாடி நாம் கொடிப்பூக கொய்வோமாக.

குறிப்பு :—கயாசுரன் கதை முன்னே கூறப்பட்டது. விருத்த குமாரபாலரான படலத்தில், இறைவன் குழந்தையானமை காண்க. 'பாரிரும் பாலகனாகிய பரிசும்' எனறனா கீர்த்தித் திரு அகவலுள். புத்தி-அறிவு. புத்தி யென்பதற்கு உள்ளம் என்பாருமுளர். 'முத்தி முழுமுதல்'என்றமையால் இறைவன் ஒருவனே வீடளிக்கவல்லான் என்பது முடிந்தது. 'பித்தன்' என்பதற்குக் கள்வன் என்று பொருளுரைத்தலுமுண்டு (கக)

மாவார வேறி மதுரை நகர் புகுந்தருளித்
தேவாார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ.

உரை —குதிரை மீதேறி யமர்ந்து, மதுரையூரிற் புகுந்தருளி ஒளி பொருந்திய திருவடிவம் விளங்கத் தோன்றிய அப்பெருந் துறைப் பெருமான் தலைவனாக வந்து அடியேங்களாகிய எம்மைப் பணி கொண்டருளுதற்கேதுவாய மலர்போன்ற அவனது திருவடி களைத் துதித்து நாம் கொடிப்பூக் கொய்வோமாக.

குறிப்பு :—ஏறியார, என மாற்றுக. ஆர - ஆர்ந்து, அமர்ந்து. திகழ - திகழ் + அ... ..வினைத்தொகை. தேவு - தெய்வத்தன்மை; ஒளி. (உ0)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருவுந்தியார்

ஞானவெற்றி

கலித்தாழிசை

திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற.

உரை :—மேருவாகிய வில்லானது வளைந்ததும், சண்டை ஏற்பட்டதும், மூன்று நகர்களும் நொந்தன. திடமொன, அவை முழுவதும் வெந்தன. அவ்வழிதா னென்னே யென்று உநதி பறத்தலைச் செய்க.

குறிப்பு :—'வில்லு' என்றில், உகரம், சாரியை பூசல் - போர், சண்டை. உநதி பறத்தலென்பது, கழங்குபோலக் கையில் நின்று மேலொன்றை எறிந்து விளையாடும் விளையாட்டாக இருத்தல் கூடும். (க)

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற.

உரை :—ஏகம்பநாதராகிய இறைவனது திருக்கரத்தில் இரண்டு அம்புகளை நாம் பார்க்கவில்லை. ஓர் அம்புதானே திரிபுர மெரித்தலுக்காக வழங்கியது. (புன்சிரிப்பால் இறைவன் திரிபுரம் எரித்தமையால்) அந்த ஓர் அம்புதானும் மிகவும் அநாவசியமென்பதாயிற்று. உந்தீபற.

குறிப்பு :—'முப்புரம்' என்பதன்பின் 'அழிக்க' என்பது தொக்கது. மிகை - மிகுதி. வேண்டியதற் கதிகம். சிறப்பினை நோக்க, அம்பு, பெரியதோர் கருவியாய் மால், எரி, வாயு முதலிய தேவர் ஆற்றல்கொண்டதாயிருந்தமையின் 'பெருமிகை' என்றார். (௨)

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும
அச்சு முறிந்ததென் றுந்திபற
அழிந்தன முப்புரம் உந்திபற.

உரை :—(தேவாகள் வருந்தித்) தேரினைச சமைத்து விட்டதும், அத்தேரிலே இறைவன் திருவடியை வைத்ததும், தேரின் அச்சு இற்றொடிநதது. ஆயினும், திரிபுரம் அவன் நகையால் எரியுற்றழிநதன.

குறிப்பு :—நிலம தேராகவும, அயன் தேரோட்டியாகவும், ஏனைத தேவரெல்லாம் தேர்க்கு உறுப்புக்களாகவும், மேரு வில்லாகவும், திருமால் அம்பாகவும் அமைந்தமையால், 'தசசு விடுத்தலும்' என்றார். இதன் விரிவைப் பாரதம், இலிஙக புராணம் முதலியவற்றிற் காண்க. தேவர் செருக்கொழிய தேரின் அசசு இறையருளால் இற்றது. இறைவன் தன் கடடனைச செவ்வியின் ஆற்றினமையின், முப்புரம் அழிந்தன.

இதற்கு ஞானப்பொருள் :—இருவினை யொப்பு, மலபரிபாகம் முதலியன பொருந்தியவிட்டதும், இறைவன் ஆசானாக வந்து திருவடி தீக்கை செய்யவும், பிறவி யொழிந்தது. மும்மலங்களும் தொலைநதன என்பதாம். (௩)

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்திபற
இளமுலை பங்கனென் றுந்திபற.

உரை :—திரிபுரத் தசுரர்களில் சிவபத்தியிற் குன்றாமையால், உய்திகூடத தகுதியுடையார் மூவரையும் ஊனம் வாராமற் காத்து பிறரை அம்பால் எய்தொழித்த வல்லமை யுடையான் பொருட்டு,

உந்தி விளையாடுக. அவன், இளமை மாறாத நகிலினையுடைய அருளன்னை பாகனென்று கூறி உந்தி விளையாடுக.

குறிப்பு :—திரிபுரத்தசுரர்க்குத் திருமால் நாத்திகம் போதித்த காலை, தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்னும் மூவரும் சிவபூஜையைக் கைவிடாது நின்று, திரிபுர மெரியுற்றகாலை, இறைவன் வாயில் காப்பாளராயினர் என்பது புராணம் 'எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக் - கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்' என்ற திருத்தோணோக்கச் செய்யுட் பகுதியை நோக்குக. (௪)

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற.

உரை :—(வீரபத்திரர் பூதப்படையுடன்) தாக்கிய யாகமானது நிலைகுலையவே, ஆண்டிருந்த தேவர்கள் தப்பிப்பிழைக்க, ஓடிய விதத்தைப் பாடி விளையாடுக. உருத்திரர்கள் தலைவனாகிய சிவபிரான் பொருட்டு விளையாடுக.

குறிப்பு :—காயத்திரி, சரசுவதி, சந்திரன், பகன் முதலிய தேவர்கள் ஓடினமை, தக்கயாக வரலாற்றிற் காண்க. கந்தபுராணம் பார்க்க. தேவர்கட்கு மேலாய் ஞானம்பெற்ற இனத்தினர், உருத்திரர். ஒவ்வொரு அண்டத்திலும், நூற்றெட்டு உருத்திரர் உளர். பிரகிருதி புவனங்களனைத்துக்கு மேலாக ஸ்ரீ கண்டருத்திரர் உளர். யாவர்க்குந் தலைவர் சிவபெருமான். இவற்றின் விரிவை, சித்தாந்தப் பிரகாசிகை, சிவஞானபாடிய முதலியவற்றிற் காண்க. (௫)

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற.

உரை :—ஐயோ, தக்கன் வேள்வியில், அரி, வேள்வியுணவில் தனக்குரிய பாகத்தைக் கொண்டகாலை, (வீரபத்திரரால் நெஞ்சில்

அடியுண்டு மூர்ச்சித்து) உயிர்மாத்திரம் போகாதிருக்கப் பெற்றான். அவன் நான்முகனுக்கு அப்பன் என்று பாடி விளையாடுக.

குறிப்பு —ஆவா, இரக்கக் குறிப்பு. (௬)

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற

உரை —(அவியில்) விருப்பமுடையவனாய், அக்கினி தேவன் (அவியை) உட்கொள்ள ஒன்றுசேர்த்த கையை வீரபத்திரர் தடிந் தார். யாகமே நடவாமல் நிலைபிறழ்ந்தது.

குறிப்பு —வெய்யவன் - விருப்பமுடையவன் வெப்பமுடை யவனென்று பொருள் கொள்ளுதல் மிகையாகும். (௭)

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற

உரை :—உமையம்மையைத் தனது மகள் தானே யெனவும், அரன் தேவி யெனவும் இகழ்ந்த மாறுபாட்டுச் சொற்களை உரைத்த தக்கனை நாம் பார்த்தல் கூடாது என்று பாடி விளையாடுக. பருத்த தனிலுடைய அம்மை கூறன்பொருட்டுப் பாடி விளையாடுக.

குறிப்பு —'பார்ப்பதென்னே' என்பதற்கு உயிரோடு வைத் துப் பார்ப்பதாற் பயனென்னே யெனப் பொருள் கொள்வாரு முளர். பணை - பருமை. (௮)

புரந்தர னார்ஒரு பூங்குயி லாகி
மரந்தனில் ஏறினார் உந்தீபற
வானவர் கோன்என்றே உந்தீபற

உரை :—இந்திரன், (தக்கன் வேள்வியில் தப்பியோடுவதற் காக) ஓர் அழகிய குயில்வடிவங் கொண்டு, ஒரு மரத்தினிலேறிப் பதுங்கினான். தேவர்கட் கரசனாகிய அவன் (இவ்வாறு செய்தான்) என்று பாடி உந்தீபற.

குறிப்பு:—அவ்வாறு செய்தும் அவன் தப்பாது வெட்டுண்டு வீழ்ந்தானென்று கந்தபுராணங் கூறும். (கூ)

வெஞ்சின வேள்வி வியாத்திர ஞர்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற.

உரை:—கொடிய கோபத்திற் கேதுவாய தக்கன் வேள்வி யின் அதிதேவதையான எச்சன் என்பான் தலைவெட்டுண் டிறந்த விதத்தைப்பாடி உந்தி விளையாடுக. நம்மைப் பற்றிவரும் பிறப்புத் தொலைய (இறைவனைப்பாடி) விளையாடுக.

குறிப்பு:—வியாத்திரனர் - உறுதியாக உள்ளவர் துஞ்சு தல் - இரத்தல். (க0)

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற.

உரை:—சிறு விதியாகிய தக்கனுக்கு அவன் இழந்த தலைக் குப் பதிலாக அவன் கழுத்திலே ஆட்டினுடைய தலையைப் பொருத்திய விதத்தைப் பாடி விளையாடுக. நகில்கள் அசைய நகையாடி விளையாடுக.

குறிப்பு:—விதி - சிறுவிதி என்பதன் முதற் குறை. விதி என்பது அயன் பெயர். அவன் மகனாகிய தக்கனுக்குச் சிறு விதி யெனப் பெயர் கூறப்படும். (கக)

உண்ணப் புகுந்த பகன்ஒளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற.

உரை:—(தக்கன் வேள்விச்சாலையில் தனக்குரிய அவிர்ப் பாகத்தை) உட்கொள்ளப்போன பகன் என்பவன் வீரபத்திரரைக் கண்டவுடன் பயந்து ஓடி ஒளிக்கத் தொடங்க அவன் அங்ஙனம்

மறைந்து ஓடாதவண்ணம் அவர் அவன் இருகண்களையும் பிடுங்கிய விதத்தைப் பாடி விளையாடுக. நமது பிறவி யொழியும்பொருட்டு அங்ஙனம் பாடி விளையாடுக.

குறிப்பு.—பகனென்பவன் பன்னிரண்டு சூரியர்களுள் ஒருவன். அவன் கண்ணிழந்தமையை சதபதப் பிராமணம், கந்த புராண முதலியவற்றிற் கூறப்பட்டது. (௧௨)

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகம்நெரித் துந்திபற
தொல்லை வினைகெட உந்திபற.

உரை—கலைமகள் மூக்கறுபடவும், பிரமன் தலையில் குட்டுப் படவும் நேர்ந்தமையும் சந்திரன் முகத்தை நெரித்ததுவும் பாடி விளையாடுக. நமது பண்டை வினை ஒழியும்படி பாடி விளையாடுக.

குறிப்பு—பட என்பதை நாசி என்பதுடனும், சிரம என்பதுடனுஞ் சேர்க்க. வீரபத்திரர் பிரமனைக் குட்டியதாகவும், நாமகளை மூக்கரிந்ததாகவும், சந்திரனைப் பாதங்களால் தேய்த்ததாகவும் கந்தபுராணம் கூறுகின்றது. நெரித்ததும் என்பது 'நெரித்தும்' எனவாயிற்று. (௧௩)

நான்மறை யோனும் மகத்(து)இயமான்படப்
போம்வழி தேடுமா றுந்திபற
புரந்தரன் வேள்வியி லுந்திபற.

உரை:—பிரமனும் யாகத்திலே அதிபதியா யிருப்பவனும் தண்டனைப்படவே இந்திரன் தப்பியோடும் வழியைத் தேடிய விதத்தைப் பாடி விளையாடுக.

குறிப்பு:—நான்மறையோன் - பிரமன். மகம் - வேள்வி. இயமான் - எஜமான், யாகாதிபதி. இயமான் என்பதற்குப் பின் உம் தொக்கது. புரந்தரன் என்பதைப் போம் வழி என்பதனோடு சேர்க்க. (௧௪)

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற

உரை:—பகலவனது கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயி லுள்ள பற்களைத் தகர்த்து உதிர்த்த விதத்தைப் பாடி விளையாடுக. யாகமானது கலங்கியதென்று பாடி விளையாடுக.

குறிப்பு:—பன்னிரண்டு ஆதித்தர்களுள் பூஷன் என்பவன் பற்களை வீரபத்திரர் தகர்த்தாரென யசுர்வேத தைத்திரிய சங்கிதை யிற் கூறப்பட்டது. கந்தபுராணத்திலே சூரியனைக் கபாலத்திலடிக்க அவன் பற்கள் உதிர்ந்தனவென்று சொல்லப்பட்டது. வாரி - வார, தொகுதியாய் உதிர. நெரித்தல் - உடைத்தல் தொண்டை - கொவ்வைக்கனி. (கரு)

தக்கனா ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற

உரை:—தக்கன் வேள்வியியற்றிய அப்பொழுதே தனது தலை யிழந்து இறந்தான். அவனைக் காக்கமுடியாத அவனது பிள்ளை களைச் சூழ்ந்து நின்று (சிவபரத்துவம் ஓதி) உந்தி விளையாடுக. யாகம் அழிந்ததென்று பாடி விளையாடுக.

குறிப்பு:—தக்கனார் என்பதில் ஆர் இழிவினைக் குறிக்கும். துணையாவர் என்று கருதிய மக்கள் துணையாகாமையானும் தக்க னைப்போல் மக்களும் சிவப்பெருமை உணராமையானும் 'மக்களைச் சூழநின்' றென்றார். (கசு)

பாலகனார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற.

உரை:—உபமன்யு முனிவராகிய குழந்தையின் பொருட்டுப் பண்டைநாளில் திருப்பாற் கடலினையே வருவித்துக் கொடுத்த

அழகிய சடையையுடைய பெருமானின் பொருட்டே விளையாடுக : முருகப் பெருமானின் தந்தையின் பொருட்டே விளையாடுக.

குறிப்பு —பாலகனார் எனபதில ஆர் என்பது உயர்வு குறிக்கும். உபமன்யு முனிவா குழந்தையா யிருந்தபோது தனது மாமனாராகிய வசிஷ்டர் ஆசிரமத்தில் காமதேனுவின் பாலை யுண்டார். தனது பிதாவாகிய வியாக்கிரபாதர ஆசிரமத்தில் பால் கிடையாமையால் அழுதபோது அவர் தாயார் நீ சிவபெருமானைப் பூசிக்கவேண்டுமென்று கூற, அவரும சிவபெருமானைப் பூசித்து வேண்டப் பாற்கடலையே சிவபெருமான் வருவித்தன ரென்பது கோயிற்புராணத்தா லறிக. (௧எ)

நல்ல மலரின்மேல் நான்முக னார் தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற.

உரை :—அழகிய தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும அய னுடைய (ஐந்துதலைகளுள்) ஒருதலை விரைவாகக் கிள்ளப்பட்ட தென்று பாடி விளையாடுக அது சிவபெருமானது நகத்தாற் கிள்ளப்பட்டது என்று பாடுக

குறிப்பு :—சிவபெருமானைப் போல தனக்கும் ஐந்துதலை இருப்பதாகச செருக்குக் கொண்டு சிவபெருமானை வணங்காது இகழ்ந்ததற்காக பிரமன் நடுததலையை வைரவா நுனிநகத்தாற் கிள்ளினா என்று புராணங் கூறும். ஒல்லை - விரைவாக உகிர - நகம். மலரில் மிகக அழகுடையது தாமரை மலராதலால் ' நலல மலர் ' என்றார். (௧அ)

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம
ஈரைந்தும இற்றவா றுந்தீபற
இருபதும இற்றதென் றுந்தீபற

உரை :—(இராவணன் திக்குவிசயததிற்காகத் தனது தேரைச செலுத்தியபோது அது கயிலைமலைப்பக்கம்தடுக்கப்பட்டுநின்றகாலை).

தேரை நிறுத்திவிட்டு அம்மலையைத் தூக்க முயன்றவனான இராவணனுடைய தலைகள் பத்தும் நெரிந்த வகையைப் பாடி விளையாடுக. அவன் தோள்கள் இருபதும் முறிந்து ஒடிந்தன என்று பாடி விளையாடுக.

குறிப்பு :—இராவணன் செருக்கினால் கயிலைமலையை எடுக்க முயன்றவளவில் இறைவன் பெருவிரலால அழுத்த, அவன் மலையினுள் அகப்பட்டு நசுக்குண்டு வருந்தினமை திருமுறைகளுள் யாண்டும ஓதப்படும். இருபது என்பதன்முன் 'தோள்கள்' என்பது தொக்கது.

கடுகிய தேர்செலாது கயிலாயமீது
கருதேலுன் வீரமொழிநீ
முடுகுவ தன்றுதன்ம மெனநின்றுபாகன்
மொழிவானை நன்று முனியா
விடுவிடு வென்றுசென்று விரைவுற்றரக்கன்
வரையுற் றெடுக்க முடிதோள்
நெடுநெடு விற்றுவீழ விரலுற்ற பாத
நினைவுற்ற தென்றன் மனனே.

என்ற தசபுராணத்தா லறிக. (௧௧)

ஏகாச மிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற்கப்பா லுங்காவலென் றுந்தீபற

உரை :—வானிலே போர்வையிட்டுச் செல்லும முனிவாகள் கதிரவன் வெப்பத்தால் ஒழிந்து போகாமல், அவர்களை வானிற் காப்பது முதல்வனென்று கூறி விளையாடுக. வானிற்கப்பாலுள்ள உலகத்தார்க்கும் அவனே காப்பாளனென் றியம்பி விளையாடுக.

குறிப்பு :—ஏகாசம்-உத்தரீயம். 'விண் செலவின் மரபினையர்க் கேந்திய தொருகை' என்ற திருமுருகாற்றுப் படையுங் காண்க. ()

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருத்தோணோக்கம்

பிரபஞ்ச சுத்தி

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம் ஆகாமே
தீர்த்தாய திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன்சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம்.

உரை :—விளங்குகின்ற தில்லைப்பொதுவில் திருநடனமியற்றுங் கூத்தப்பெருமானே, கானலை, மலர்பூத்து நீர் நிறைந்த தடாகத்தின் தண்ணீர் இஃதாமெனத் தவறாக எண்ணி, அதனை மொண்டுகொள்ள விரும்பும் அறியாமை எனது இயற்கைப் பண்பாகாமல், அதனை ஒழித்தாய். உன்னுடைய திருவடியைக் கூடும் வண்ணம் நாங்கள் திருத்தோள் நோக்கம (விளையாடுவோமாக).

குறிப்பு :—ஆரும் - நிறைந்துள்ள முகக்க, உறும் என்பன முகக்குறும் எனப் புணர்ந்துநின்றது. பேய்த்தேர்-கானல். பேதை-பேதைமை என்பதன் கடைக்குறை. திருத்தோள் நோக்கம் என்பது ஒருவர்தோளை மற்றொருவர் கடைக்கண்ணாற் பார்க்க முயன்றாடும் ஆட்டம் போன்றதோர் மகளிர் விளையாட்டு. (௧)

என்றும் பிறந்திறந் தாழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்கம் ஆடாமோ.

உரை :—எக்காலத்தும் பிறந்தும் இறந்தும், (துன்பத்தில்) அழுந்தாமல் ஆட்கொண் டருளியவனைக், கன்றுக்குட்டியால்

விளாங்கனியை எறிந்தவனை திருமாலும் அயனும் அறிதற்கரியவ னாய்க், குறைவற்ற புகழ்படைத்த தில்லைப்பொதுவில் நடமாடுபவ னுடைய அருட்பணியினைப் போற்றி, நெருங்கிய நிரம்பிய கூந்தலை யுடைய பெண்களே! நாம் தோள்நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு :—துன்று-நெருங்கு, ஆர் - நிறை. துன்றுகுழல், ஆர் குழல் எனப்பிரிக்க. நெருங்கி நீண்ட கூந்தலென்பது கருத்து. (உ)

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருள்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ

உரை :—பூசனைக்குரிய பொருள்களைக்கொண்டு செய்கின்ற வழிபாடுபோலத் தோன்றும்படியாக, செருப்புப் பொருந்திய தமது செவ்விய பாதம், வாயாகிய கலயம், புலாலுணவு என்னுமிவற்றை வேடராகிய கண்ணப்பர் அன்போடு இறைவற்கு நல்லவென்று அறிந்து, (அவற்றை இறைவற்களிப்ப) இறைவன் அவற்றான் திரு மேனி குளிர்ந்தவனாக, அவ்விடத்தேயே அவர் திருவருள் பெற்று நின்ற வகையைப் பாடி தோள்நோக்க மாடுவோமாக.

குறிப்பு :—கண்ணப்பர் பூசை, ஆகமங்கடந்த அன்பு வழி பாடு. பிறர்பூசை, உரிய பொருள்களைக்கொண்டு ஆகமநெறியிற் செல்லும் பூசை. குற்றங்கருதாத அன்பரடியாதலின், 'சீரடி' யென்றார். சேடு - அழகு, நன்மை. (௩)

கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தான்இங்ஙன்
சொற்பால தானவா தோணோக்கம் ஆடாமோ.

உரை :—கல்லைப்போலுங் கடுமையான எனது மனம் நைந் துருகும்படி, இரக்கத்தினாலே என்முன்னே நிற்பவன்போலத் தோன்றி எனது உள்ளத்திலும் புகுந்தருளி, என்னை நன்னெறிப்

பகுதியிற பொருந்திய இம்முறையை நாட்டினர் தெரியும்படியாக (எல்லாரும் பேசும்) பேசநின்பாலாகிய விதத்தைப்பாடி நாம் தோள் நோக்க மாடுவோமாக

குறிப்பு :—‘ நிற்பானை ’ என்பது புறத்தே நிறபதைக குறித்தது இஙஙன் - இஙஙனம என்பதன் கடைக்குறை. இங்ஙனம் - இவவிதம், இம்முறை (௪)

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத் தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ

உரை :—நிலம, நீர், தீ, காற்று, விரிந்தவான், மதி, ஞாயிறு, அறிவுடையானாகிய ஆன்மா என்னும் எட்டினோடும் எட்டுவகையாய்க் கலநது நின்ற ஒரு கடவுளே, ஏழுலகும் திசைபத்தும எஞ்சிய பல பொருளுமாகி நின்ற விதத்தைப்பாடி நாம் தோள் நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு :—உயிர் - காற்று. புலன் - அறிவு. மைநதன் - புருடன் - ஆன்மா. ஒரு கடவுளே யாண்டும் வியாபித்து நிற்கும் ஆற்றல் உடைமையின், ‘ தான் ஒருவனுமே ’ என்றார். (௫)

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதஙகளில் தட்டுளுப்புப் பட்டு நிற்கச்
சித்தஞ் சிவமாககிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ

உரை:—புத்த சமயி முதலிய சிற்றறிவுடைய பல சமயத்தினர், தஙகள் தஙகள் சமயஙகளிலே (முடிவு காணாது) தடுமாற்ற மெய்தி நிற்ப, இறைவன் எனக்குத் தோன்றியருளி, எனது உள்ளத்தைச சிவமயமாக்கி, அதனால் யான் செய்தவைகளே தவசெயல்களாம்படி பணித்த அப்பன் கருணை காரணமாக நாம் தோள் நோக்க மாடுவோமாக.

குறிப்பு :—சமயம் - சமயத்தார். தட்டுளுப்பு - தடுமாற்றம். சித்தம், சிவத்தின் வயமாகவே, நினைந்து செய்யுஞ் செயல்களை சிவச் செயலாயினமையின், அவை தவச்செயல் எனப்பட்டன. (௬)

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

உரை :—குற்றம் யாதும் நெஞ்சிலில்லாத மாட்சிமையுடைய சண்டேச நாயனார் தாஞ்செய்த சிவபூசனையை ஊறுபடுத்தியவன், குலத்தால் பார்ப்பனன் என்பதையும், முறையால் தந்தை (என்பதையும் பாராது) அவனது கால்களை இரண்டையும் வெட்டவே, இறைவன் திருவருளினாலே, தேவர்கள் வணங்கும்படியாக (நாயனார் இயற்றிய) பாவச்செயலே வன்மையுற்றுப் புண்ணியமாய்ப் பயனளித்த விதத்தைப் பாடி நாம் தோள் நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு :—'தீதில்லை'- தீதில்லாத தலைவன் (ஆகிய). மாணி- மாண்புடையவன். சோறு - சாரமான திணைப்பகுதி ; வீடு என்று பொருள் கொள்ளுவாருமுளர். (எ)

மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானம் தொழும் தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகின்ற வாடாமோ தோணோக்கம்.

உரை :—நல்ல மாதர்களே ! தற்பெருமை தொலையப்பெற்றோம்; தற்போதங் கழலப் பெற்றோம். இறையடியாராகிய நாம் வானவர்கள் வழிபடுகின்ற அழகனது நீண்ட சிலம்பணிந்த திருவடிகளை உன்னி, ஆனந்த நடனஞ் செய்பவனது அருளைப் பெறுவோமாயின், அவ்வாறே நாமும் பேரின்பமுற்றுத் தோள் நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு —மானம் - செருக்கு. மதி - உயிரின் தன்னுணர்ச்சி. 'தென்னன்' என்பதற்குப் பாண்டியனுடைய கடவுளென்றும் பொருள் கொள்ளலாம். வானம் - வானவர்க்கு ஆகுபெயர். இறைவன் ஆனந்தம்தர ஆடுவதுபோல, அவன் வயமாய் நின்று நாமும் ஆனந்தக் கூத்தாடுவோ மென்றார். (அ)

எண்ணுடைமூவா இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம

உரை —(தவத்தால்) மதிப்புடைய திரிபுரத் தசுரர் மூவரும், திரிபுரம எரியுற்றகாலை, அதில் அகப்பட்டழியாமல், தப்பிப்போய் நெற்றிக் கண்ணுடைய நமது அப்பன் வாயிலின்கண காவலாளராய் நின்ற பின்னா, கணக்கற்ற இந்திரர்களும், எவ்வளவோ பிரமர் களும், பூமியை உண்டு வயிற்றடக்கிய அரிகள் பலரும (இறை யருள் கூடாது) இறந்தனர். இதனைப் பாடி நாம் தோள்நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு.—இராக்கதர் - நீரிற் றோன்றினரெனவும், அசுரர் தேவர் தாயாதிகளெனவுங் கூறுப. செய்யுளில், அசுரர்க்கும் அரக் கர்க்கும் வேறுபாடு காட்டாது இரண்டையும் பரியாயப் பெயராய் வழங்கு மரபு, இங்கே காணக்கிடக்கின்றது. திரிபுரத்தினரை அசுரரெனவே கூறுப. தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுந்மாலி என்னு மூவரும் சிவபூசனையிற் றலைநின்று, பிற அசுரரைப்போல், விண்டு போதித்த நாத்திக வாதத்தை உடம்படாராயினர். ஆத லால், எரியிற் பிழைத்தனர். மூவருள் இருவர் வாயிற் காவலராயும் ஒருவர் முழாவொலிப்பாராயும் வரம் பெற்றாரெனச் சுந்தரர் தேவாரங் கூறினும், எல்லாரும் இறைவாயிலில் முதற்கண் நின்ற வரே யாவர். அண்டங்கள் பலவாதலின், இந்திரன், பிரமன், அரி யென்பாரும் பலராயினர். மண்மிசை-மண்ணுலகை உட்கொண்ட. மிசைதல்-உண்டல். மிசைமால்-வினைத்தொகை. மால், அப்பு

தத்துவத்திற் கதிதேவதை யாதலின், அதற்குக் கீழ்ப்பட்ட மண் தத்துவத்தைத் தான் உட்கொடல் பொருத்தமே. (௯)

பங்கயம் ஆயிரம் பூவினில்ஓர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவா(று)
எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ

உரை :—திருமால், (இறைவனைச் சக்கரம் வேண்டி அர்ச்சித்த போது) ஆயிரம் தாமரைப் பூவினில் ஒரு மலர் குறைவுபடக் கண்டலுமே, தனது கண் (ணாகிய மலரைத்) தோண்டி, சிவனது செய்ய பாதங்களிலே சாத்திய வளவிலே, (அன்பர்க்குச்) சுகங் கொடுப்பானாகிய எமது பெருமான் அரிக்குச் சக்கரங் கொடுத்தருளிய வரலாற்றை எவ்விடத்தும் நாம் துதித்துத் தோள் நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு :—பங்கயம் - சேற்றில் முளைப்பது, தாமரை. சங்கரன்-சுகமளிப்பவன். அன்பின் மேலீட்டால், தன்னை மறந்தமை குறித்தவாறும். (௧௦)

காமன் உடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ.

உரை நடை :—காலன் உயிர், கதிரோன் பல், பிரமன் சிரம், எரியைக் கரம், தக்கனையும் எச்சனையும் தலையென மாற்றுக.

உரை :—மன்மதனது உடம்பையும், யமனது உயிரையும், வெய்ய பகலவனது பற்களையும், கலைமகள் மூக்கையும், அயனது தலை யொன்றையும், நெருப்புக் கடவுளின் கையையும், மதியின் கலைகளையும், தக்கன், எச்சன் என்பார் தலைகளையும், குற்றஞ் செய்தமைக்காக நீக்கி அவர்களைப் பரிசுத்தப்படுத்திய விதத்தைப் பாடி நாம் தோள் நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு —இறைவன் யோகிருந்த காலை மன்மதன் மலரம்பு தொடுத்ததற்காக, எரியுண்ட கதை தெளிவு. மார்க்கண்டர்க்காக யமன் உதைபட்டு உயிரிழந்தான். தக்கன் வேள்வியில், கதிரவன், அக்கினி, நாமகள், தக்கன், எச்சன் முதலியோர் வீரபத்திரரால் தண்டனை அடைந்தனர். பிரமன், வைரவரால் ஒருதலை கிள்ளப் பெற்றான். மதி, தக்கன் வேள்வியில் மாத்திரமல்லாமல், சாப முற்றுக் கலையிழந்தான். குற்றவாளிகளைத் தண்டித்தல், அவர்கள் மனத்தைச் சுத்தமாக்கவே என்ற உண்மையறிக. (௧௧)

பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ

உரை.—அயன்மால் என்னுமிரு தேவரும் தமது அறியாமையால், நாமே (எல்லாவற்றிற்கு) மேலான முதற் கடவுளெனத் தம்முள் வாதாடிய நெஞ்சத் துடிப்பு அடங்கும் வண்ணம், சிவபெருமான் அனற் பிழம்பு வடிவாய், (அவர்கள் பூசலிட்ட) இடத்தே, எல்லை கடந்து (அவர்கட் கெட்டாத) மேலான பொருளாய் நின்ற விதத்தைப் பாடி நாம் தோள்நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு:—பரமம் - மேலானபொருள். பரம்பொருள், அயனும் அரியும் அல்லர் என்பது தெரிவித்தவாறும். (௧௨)

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ.

உரை.—அறிவில்லா அடியேன் எவ்வளவோ அதிகமான காலமுழுவதையும் மிக மேலான கடவுளைத் தொழாமல் வீணான செய்திகட்குச் செலவழித்தேன். கற்பங்களுக்கதிபனாய் என்றும்

அழியாத நல்ல மாணிக்கம்போல்வான் (ஆசானாக எழுந்தருளி) வந்து எனது பிறவியின் அடிப்படையைப் பிடுங்கி யொழித்த விதத்தைப்பாடி நாம் தோள்நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு :—ஏழை - அறிவிலி காலத்தை நீர்போல வீணாக இறைத்தேன் என்றார். ஊழி - படைப்புமுதல் ஒடுக்கல்வரை யுள்ள காலம். அக் காலத்திற்கு தலைவன் இறைவனே. அவனே காலத்தைக் கடந்தவன். ஆதலின 'ஊழிமுதற் சிந்தாத' என்றார். தாழ் - அடிப்படை. (௧௩)

உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ.

உரை :—சொல்லினளவைக் கடந்த, உயிர்க்குள்ளீடாயுள்ள அறிவொளி முதல்வன் எழுந்தருளி வந்து எனது நெஞ்சத்தே புகுந்தவுடன், கரையற்ற உலகப் பற்றாய பெரிய கடலைத் தாண்டி அப்பாற் செல்லவே, (என்பால்) தமக்குரிய உணவொழிந்து போகக்கண்ட ஐம்பொறிகளாகிய பறவைகள் வலிகெட்டு ஓட்டமெடுக்கும் வண்ணம், அவற்றின் கதியொழிந்த விதத்தைப்பாடி நாம் தோள்நோக்கம் ஆடுவோமாக.

குறிப்பு :—சுட்டியறிதற்குத் துணையான வாக்கைக் கடந்தது இறைவனது பேரறிவு ஆதலின் 'உரைமாண்ட' என்றார் காமம் - ஆசை. துரை - துறை, வழி, கதி (௧௪)

திருச்சிற்றம்பலம்.

உத்தரகோசமங்கையில் அருளிய

திருப்பொன்னூசல்

அருட்சுத்தி

ஒருமை பற்றி வந்த
ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன்அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்(கு)
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ.

உரை நடை :—'போரார்வேற் கண்மடவீர்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—போர்செய்தலமைந்த வேல்போன்ற கண்களையுடைய பெண்களே! சிறப்பு மிகுந்த பவளத் துண்டங்களைத் தூண்களாகவும் முத்துவடங்களைக் கயிறாகவும் உடைய அழகு பொருந்திய பொன்னினாலாகிய ஊஞ்சற் பலகையிலே ஏறி அங்கிருந்து திருமாலறியவொண்ணாத அன்றுமலர்ந்த தாமரையை ஒத்த திருவடி நிழலை நாய்போன்ற அடியேனுக்கு இருப்பிடமாகக் கொடுத்தருளும் உத்தரகோசமங்கையில் உறையும் தெவிட்டாத அமுதத்தின் அருளுருவாகிய இரு பொற்பாதங்களையும் புகழ்ந்து பாடிப் பொன்னூஞ்சலாடுவோமாக.

குறிப்பு :—ஊர் என்றது எப்போது மிருக்கின்ற இடமெனப் பொருள்படும். கணவனுள்ளத்தைக் கவாதலின், 'போர்த் தொழி

லமைந்த கண்' என்றார். வேலின் வடிவம்போலக் கண்ணமைந் திருப்பதனால் வேற்கண். மடவார் - இளம் பெண்டிர். (௪)

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்றெளிந்தங்(கு)
ஊன்றங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ

உரை நடை —'குலமஞ்ஞை போன்ற அன்ன நடையீர்' என்பதை முதலிற் கொள்க.

உரை:—அழகால் உயர்ந்த மயில்களைப் போலும் அன்னத்தை யொத்த நடையுடைய மங்கையரே! மூன்றாக விளங்கும் கண்களை யுடையானும், வானுலகில் தங்கிய மூப்பற்ற விண்ணவர் தலைவர்களாகிய அதிகாரிகளுங் காணமுடியாத பூப்போன்ற தனது திருப் பாதங்கள், தேன்கலந்து இனித்து அமுதத்தினை ஊறச்செய்து, தெளிவுபயந்து உடலிற்பொருந்தி உருகுவிக்கும் இயல்பினவாக வுடைய உத்தரகோசமங்கை மன்னனுமாகிய பெருமான் வீற் றிருக்குந் திருவிடைமருதூரின் சிறப்பைப்பாடி நாம் பொன் னூஞ்சல் ஆடுவோமாக.

குறிப்பு:—அங்கு அசை. தேன் - இனிமையைக் குறிக்கும். அமுது - பாலின் சுவையினைக் குறிக்கும். 'மூவாத் தேவர்கள்' என்பது மூப்படைந்து இறுதியுறுதல் இல்லாத மும்மூர்த்திகள், காரணேசுரர், சுத்த வித்தியாதத்துவ வாசிகள் முதலியோரைக் குறிக்கும். பரமுத்தி யடையும்வரை இறை திருவடியை அவர்கள் முற்று முணர்ந்திலர் போலும். அச்சொற்றொடர் அமுதமுண்டு நெடுநாள் வாழுந் தேவரையுங் குறிக்கும். இன்பமும் மெய்யறிவும் பயத்தலால் 'தேன்தங்கி அமுதூறி' என்றார். உடலும் இறைவன் திருமேனி யாதலின் 'ஊன்தங்கி' என்றார். (௨)

முன்னீறும ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பல்நூறு கோடி இமையோர்கள் தாமநிற்பத்
தன்நீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

உரை நடை —'பொன்னேறு பூணமுலையீர்' என்பதை முத லிற் கொள்க.

உரை:—பொன் மிகுதி கலந்த நகைகளையணிந்த நகிலுடைய பெண்டிர்களே, (தோன்றும்பொரு ளெவற்றிற்கு மியல்பாகக்) கருதப்படும், முடிவும், தோற்றமு மில்லாத பெருமான், பல நூறு கோடி விண்ணவரும் தவத்தினர் கூட்டமும் தனது பேரருளை எதிர்நோக்கி நிற்பவும, (அவர்க் கருளபுரியாது), தனது திருநீற் றினை எனக்கு அளித்தருளித் தனது அருள் வெள்ளத்திலே நிலை யாக ஊன்றும்படி (எனது இதயத்தே) நிலைபெற்றிருக்கும் அழகிய உத்தரகோசமங்கையின்கண் உள்ள மின்னொளிபாயும் மாடங்களை யுடைய பெரிய மாளிகைகளைப் புகழ்ந்து பாடி, நாம் பொன் ஊஞ் சல் ஆடுவோமாக.

குறிப்பு :—முன் - நினைக்கும். நீறு - திருவருட் பேற்றிற் கறிகுறி. மன் - மன்ன, நிலையாக 'ஊற', - ஊன்ற' என்பதன் இடைக்குறை. மாடம் - மேலிடங்களைக் குறிக்கும். மாளிகை - பெரிய வீடுகளைக் குறிக்கும். மாளிகையைப் பாடுதல், இறைவன் வீற்றிருக்கும் பதியினைப் பாடுதலாகும். (௩)

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ.

உரை நடை :—'புஞ்சம் ஆர் வெள்வளையீர்' என்பதை முத லிற் கொள்க.

உரை :—திரட்சி பொருந்திய வெள்ளிய (சங்கினாலாகிய) வளையலணிந்த பெண்டிர்களே ! நஞ்சுதங்கிய திருக்கழுத்தினை யுடையவனாகியும், விண்ணோர் தலைவனாகியும், மேகங்கள் படிகின்ற மாடங்களையுடைய அழகிய உத்தரகோசமங்கைப் பதியிலே அழகிய இன்சொல்லுடைய உமையொடும் எழுந்தருளி அடியார்களுடைய உள்ளத்தே நிலைபெற்று, அங்கே ஞான அமுதம் ஊறும்படித் திருவருள் புரிந்து, பிறப்பு இறப்புக்களைத் தொலைப்பானாகியு மிருக்கும் பெருமானது குற்றமற்ற கீர்த்தியைப்பாடி நாம் பொன்னினாலாகிய ஊஞ்சலில் ஆடுவோமாக.

குறிப்பு :—'அண்டத்தவர்' என்பதற்கு அண்டத்திலுள்ள எல்லா வுயிர்கள் எனவும் பொருள் கொள்ளுவர். நான்காமடியில் ஊறி - ஊற. துஞ்சல் - சாதல். புஞ்சம் - தொகுதி, திரட்சி, குவியல். வெள்ளிய வளை, சங்கினாலாகியவை. (௪)

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோனார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ

உரை நடை :—'பூண் ஆர் வனமுலையீர்—' என்பதை முதலிற் கொள்க.

உரை :—நகைகள் நிறைந்த அழகிய நகிலுடைய நங்கையீர் ! தம நடுவே தோன்றிய அனற்பிழம் புருவாய பெருமான், ஆண் வடிவினனோ, பெண் வடிவினனோ, இரண்டு மல்லாத வடிவினனோ என்று அயன்மாலாகிய இருவரும் அறிய முடியாத யாவற்றையுங் கடந்த பரம்பொருள் தனது பேரருளினாலே

விண்ணவர் கூட்டம் (பாற்கடலிலெழுந்த நஞ்சின் வேகத்தால்) அடங்கி யழியாதபடி அவர்களைப் பிழைப்பித் தாட்கொண்டருளு வான் அந்நஞ்சைத் தனது உணவாக உட்கொண்டருளிய, உத்தர கோச மங்கையுறையும், வளைவுபொருந்திய மதிமுடியுடைய திரு நடன முதல்வனின் தன்மைகளைப் பாடி நாம் பொன் னூஞ்சல் ஆடுவோமாக.

குறிப்பு:—நாணுமே - அடங்காமே கோண் - வளைவு. எல் லாரையும் இயக்குவானாதலின், 'கூத்தன்' என்றார். வனம் - வனப்பு, அழகு. ஆட்கொண்டருளி - ஆட்கொண்டருள. (௫)

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

உரை நடை—'போதாடுபூண் முலையீர்' என்பதை முதலிற் கொள்க.

உரை:—(அணிந்த) பூமாலை அசைகின்ற நகை செறிந்த நகிலுடைய நங்கையரே! உமையம்மை பொருந்திய பாகமுடை யான், உத்தரகோசமங்கை யுறையும் மகரந்தம் திளைத்த கொன் றைப்பூவணிந்த சடையுடையான், தனது அடியவர்களுள் நாயனைய என்னையும் பாராட்டி ஆட்கொண்டருளி எனது பழமையான பிற வித் தீமையானது மேற் செல்லப் பெறாது யான் விளங்குமாறு, பிறவியை யொழித்தவன், அவனுடைய திருக்காதிலணிந்த குண் டலங்களின் பெருமையைப் பாடி அன்போடுருகி, நாம் பொன் னூஞ்சல் ஆடுவோமாக.

குறிப்பு:—ஆடு - புணர்தல், பொருந்தல். கோதாட்டுதல் - பாராட்டுதல். ஓடுதல் - மேற்சென்று மிகுதல். குண்டலங்கள்,

பிரணவ வடிவுடையன வாகலின், அவற்றின் பெருமை பகர்தல் இறைவனது மூலமந்திரச் சிறப்புரைத்தலாம். (௬)

உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல
என்னத்தன் என்னையும்ஆட் கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

•

உரை நடை :—'பொன்னொத்த பூண் முலையீர்' என்பதை முதலிற் கொள்க. 'உன்னற்கரிய' என்பதை 'மாமறையோன்' என்பதோடு சேர்க்க. 'அன்னத்தின் மேலேறி யாடும் அணிமயில் போற் பொன்னூச லாடாமோ' என முடிக்க.

உரை :—நகையணிந்து பொன்போல் விளங்குகிற நகிலுடைய நங்கைமீர்! திருவுத்தர கோச மங்கைப்பதியில் நிலைபெற்று விளங்கியவனும், (மனத்தால்) நினைத்தற்கரிய பெரிய இரகசியப் பொருளாவானும், தனது புகழினைச் சொல்லித் தாழ்ந்து வணங்கின், (அங்ஙனஞ் செய்வாரது) தீவினைத் தொடர்புகளையொழிப்பானும், எனது அப்பனும், அடியேனையும் அடிமை கொண்டருளினவனுமிருப்பவனது அழகினைப் பாடி, அன்னம் போன்ற ஊஞ்சலின் மேலேறி ஆடுகின்ற அழகிய மயில்கள் போல நாம் பொன் ஊஞ்சல் ஆடுவோமாக.

குறிப்பு :—அன்னம் - ஊஞ்சலுக்கு உவமை. மயில்-மாதர்க்குவமை. அன்னத்தை விடைக்கும், மணிமயிலெனக் கொண்டு, மணியை இறைவனுக்கும், மயிலை அம்மைக்கும் உவமையாகக் கொண்டு, விடைமேல் அம்மையப்பனுமய்வந் தாட்கொண்டானெனப் பொருள் கொள்வாரு முளர். 'பொன்னொத்த' என்பது 'முலையீர்' என்பதோடு முடிவது. (எ)

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ

உரை:—அழகிய மலையுச்சியினின்று இறங்கி, நிலத்தின்கண்ணுள்ள உணவை நன்றாக உண்டு, ஆழ்ந்த கடலினலைபோல மேலெழுந்து உலகில் மிகுந்து பரவிய அத்துணைப்பெருமைவாய்ந்த குதிரைகளை மேற்கொண்டு நடாத்தி, நம்மை ஆட்கொண்டவனாய், நன்னெறி விளங்கும் திருவுத்தர கோசமங்கைப்பதியின்கண் வீற்றிருப்பவனாய்த திருமாலும் அறியவொண்ணாதவனை நாம வாயாரப் புகழ்ந்து பாடி உடல் பூரிக்கப் பெற்று உள்ள முருகிப் பொன்னூஞ்சல் ஆடுவோமாக.

குறிப்பு:—'வரை' என்பது கயிலையினையாவது உதயகிரியையாவது குறிக்கும். 'தாழ் கடல்' என்பதில் 'தாழ' என்ற சொல் ஆழத்தைக் குறிக்கும். கடல்-அலைக்கு ஆகுபெயர். தாவிச் செல்லுங் குதிரையின் கதி அலையின் போக்கினை ஒத்து நிற்கும். 'மிகப் பரி' என்பதை மிகு+அப்பரி என்று பிரித்துப் பொருள் கொள்க. 'சீலம்' என்பது, ஆகுபெயராய் நன்னெறியாளரைக் குறித்தல் கூடும். 'பூலித்து' என்பது, 'பூரித்து' என்பதன் போலி. (அ)

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

உரை நடை :—'பொங்குலவு பூண்முலையீர்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—விளக்கம் பொருந்திய நகையினை யணிந்த நகிலுடையீர்! தென்னை மரங்கள் மிகுந்த சோலை சூழ்ந்த திருவுத்தர கோச மங்கையின்கண் நிலைபெற்று விளங்கும் ஒப்பற்ற ஒளிவடிவோடு எழுந்தருளி வந்து எங்கள் பிறவியைத் தொலைத்து, (தகுதியற்ற) எம்போலியரையும் அடிமைகொளளும் பொருட்டுத் தனது பாகத்திலுறைகின்ற மங்கையுந் தானுமாகத் தோன்றி ஏவல கொண்டருளிய தேன் முழங்கும் கொன்றை மாலை யணிந்த சடை தரித்தவனது தன்மைகளை இயம்பிய பொன்னூஞ்சல் ஆடுவோமாக.

குறிப்பு :—'தங்குலவு சோதி' என்பதைத் தங்கு சோதி உலவு சோதி எனப் பிரித்துப் பொருள் கூறுக. முழுமுதற் கடவுளின் வடிவமாதலின் தனி யுருவமென்றார். தாம - வகை. பங்கு - இறைவனது இடப்பாகத்தைக் குறித்து நின்றது. கோதை - மாலை; பெண்ணுக்கு ஆகுபெயர். கொங்கு - தேன். பொங்கு - விளக்கம். (௯)

திருச்சிற்றம்பலம்

திருத்தில்லையில் அருளிய

அன்னைப் பத்து

ஆத்தும பூரணம்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும்.

கருத்து:—அன்னைப்பத்து என்பது தாயை நோக்கி மகள் கூறுவதாக இயற்றப்பட்ட செய்யுட் பதிகம்.

உரை:—தாயே! தலைவர் ஞானம் உபதேசிக்குஞ் சொல்லுடையர், திருவெண்ணீ றணிந்தவர், சிவந்த திருமேனியுடையவர், நாத தத்துவமாகிய பறையினை யுடையவர் என்பாள். நாதமாகிய ஓங் கார, ஒலி முழக்கினவராகிய இந்த நாயகர் அயனுக்கும் அரிக்கும் தலைவர், தாயே, என்பாள்.

குறிப்பு:—வேதமென்பது ஞானநூலையுணர்த்தும். நால்வகை வாக்கைக் குறிக்குமென்பாரு முளர். சிவபெருமானைத் தனது தலைவராகக்கருதிய ஒரு சிறுபெண், தாயை நோக்கி அவர் தன்மை களைக் கூறுஞ் செய்யுளிது. பிறவுமன்ன. உலகமியங்குவதற்குக் காரணமா யெப்பொழுது மொலிக்கும் ஓங்கார ஒலி நாத தத்து வத்தின்கண் விளங்குவதால் 'நாதப்பறை' என்றார். 'இந்நாதனார்' என்பதை 'இன் நாதனு' ரெனப் பாடங்கொண்டு, 'எனது இனிய தலைவன்' என்று பொருள் கொள்வதுமுண்டு. (க)

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின் றுருக்குவர் அன்னே என்னும்
உள்நின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்.

உரை :—கண்ணில் தீட்டிய மையினையுடையார். அருளாகிய கடலினையுடையார். உள்ளத்திலே நிலைபெற்று அதனை யுருகுவிப்பவர், தாயே, என்பாள். உள்ளத்தில் நின்று அதனை யுருகச்செய்து வற்றாத ஆனந்தத்தாலுளதாகும் கண்ணீரைப் பெய்விப்பர், தாயே, என்பாள்.

குறிப்பு :—முதலடியில் 'கண்' என்பதைக் 'கருணைக்கடல்' என்பதோடு முடித்து, 'நஞ்சனத்தர்' எனப் பிரித்து நஞ்சாகிய உணவுடையார் என்று பொருள் கொள்ளுதலுமுண்டு (உ)

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும்.

உரை :—என்றும் மணவாளராயிருப்பவர், நிறைந்த வனப்புடையவர், நினைவிலே எப்பொழுதும் இருப்பவர், தாயே, என்பாள். அங்ஙனம் நினைவிலே இருப்பவர், அழகிய நல்ல திருப்பெருந்துறைக்குத் தலைவர், பேரின்ப வாணர், தாயே, என்பாள்.

குறிப்பு :—நித்தம் - நாள்தோறும். சித்தம் - மனத்தி னொரு பகுதியாய் நினைவாற்றலைக் குறிக்கும். தென்னன் - என்பதற்குப் பாண்டியனுடைய என்று பொருள் கொள்ளுதலுமுண்டு. மணவாளனாய் இன்பந்தருதல் என்றும் நினைவிலிருப்பதற்குக் காரணமாயிற்று. (௩)

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா (று) அன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுவென்னே அன்னே என்னும்.

உரை —ஆடும்பாம்பாகிய ஆபரணமும் (புலித்) தோலுடையும் உடையதாய (திருநீறாகிய வெண்) துகள் அணிந்ததாய ஒப்பற்ற தொரு வேடம் அவருடைய வேடமா யிருந்தவிதம் ஆகும், தாயே, என்பாள். அவ் வேடம் இருந்த வகையைப் பார்த்துப் பார்த்து எனது மனம் வாடுகின்றது. இது எதனால், தாயே, என்பாள்.

குறிப்பு :—'அரா' என்பது 'அர' எனக் குறுகிற்று. பொடி-துகள், புழுதி. இது திருநீற்றைக் குறிக்கும். இருந்தவா - இருந்த வாறு. 'ஆடர' என்பது, குண்டலி சக்தியைக் குறிக்கும். ஆடரா-உலகினை இயக்கும் ஆற்றலையும், தோலுடை-காக்கும் ஆற்றலையும், பொடி - ஒடுக்கும் ஆற்றலையும் குறிக்கும். முழுமுதன்மை யுடைய பெருமானின் பெருந்தன்மைகளை நினைத்து அவரை அடைதல் கூடுமோ என்றெண்ணி உள்ளம் வாடியது போலும். (௪)

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும்

உரை :—நெடிய கையினை யுடையார், திரட்சியுடைய தலைமயி ருடையார், நன்மை பொருந்திய பாண்டிய நாட்டினர், தாயே, என் பாள். நன்மைபொருந்திய பாண்டிய நாட்டினை யுடையவர், அலைந்து திரியும் உள்ளத்தை அடக்கி ஆட்கொண்டருள் புரிவர், தாயே, என்பாள்.

குறிப்பு :—நீண்ட கை உத்தம இலக்கணத்தைக் குறிக்கும். நெறி என்பதற்கு, ஒழுங்கு என்றும் பொருள் கொண்டு வரிசை வரிசையாக ஒழுங்காயமைந்த சடையினையுடையார் என்பர். குஞ்சி ஆடவரின் தலைமயிரைக் குறிக்கும். பாண்டி நாட்டில் இறைவன் தமக்கு அருள் புரிந்தமையானும், அதுவே சிவநெறிக்குப் பழம்பதி யாதலானும் 'பாண்டி நன்னாடர்' என்றார். மனம் குவிந்து ஒருமைப் படாது எங்கும் பரந்து திரிவது கேடு பயக்கும். அதனைக் குவியச் செய்தலே அதனை யடக்கி ஆளுதலாகும். இறைவன் தலைவனாக நின்று செய்யும் அருளே இங்கு அன்பெனப்பட்டது. (௫)

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்னெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும்.

உரை — நினைத்து அளவிட முடியாத பெரும் புகழையுடைய திருவுத்தரகோசமங்கைப் பெருமான் நிலைபெற்றிருப்பது எனது உள்ளத்தில் ஆகும், தாயே, என்பாள். (சிறியேனாகிய) என்னுடைய உள்ளத்தில் அவர் நிலைபெற்றிருப்பவும் (பெரிய தேவராகிய) திருமாலும் பிரமனும் அவரைக்காணு மாற்றலில்லாதார் என்பது எவ்வளவு வியப்பாக விருக்கின்றது, தாயே, என்பாள்.

குறிப்பு — சீர் - புகழ். 'உத்தரகோசமங்கை' என்பது 'உத்தரமங்கை' எனக் குறுகிற்று. (௬)

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும்

உரை — வெள்ளை நிறமுடைய ஆடை தரித்தவர், (திருநீற்றினால்) வெண்மையாகிய திருநெற்றியை யுடையவர். அறச்சாலைக்குரிய மேற்போர்வை யுடையவர், தாயே, என்பாள். அப்போர்வை யுடையார் தாவிச் செல்கின்ற குதிரைமே லெழுந்தருளி வந்து என் மனத்தைக் கவர்ந்து கொள்வர், தாயே, என்பாள்.

குறிப்பு — கலிங்கம் - கலிங்க நாட்டில் நெய்த ஆடையைக் குறிப்பதாய் ஆடைக்குப் பொதுப் பெயராயிற்று. முண்டம்-நெற்றியையும் தலையையும் குறிக்கும். வெண்டலை எனப் பொருள் கொள்வாரு முளர். பள்ளி-துறவோர் அறச்சாலையையும் கல்விச் சாலையையும் குறிக்கும். அறச்சாலைக்குரிய குப்பாயம் கல்லாடையாக இருத்தலும் கூடும். 'கல்லாடை புனைந்தருளும் காபாலி' என்று கூறுந் தேவாரங் காண்க. குப்பாயம் - சட்டை, மேற்

போரவை. மூன்றாவதடியில் பள்ளி என்பதற்குக குதிரை யேற்றம் பயில்கின்ற கழகம் எனப் பொருள் கொண்டு அதற்குரிய ஆடை என்பாருமுளா. நான்காவதடியில் 'ஆல்' அசை. (எ)

தாளி அறுகினர் சநதனச் சாந்தினர்
ஆளுடைமை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தஙகையில்
தாளம்இருநதவா(று)அன்னே என்னும.

உரை :—கொடிபோல் நீண்ட அறுகம் புல்லினாலாகிய மாலை யணிநதவா, சந்தனக் கலவை யணிந்தவா, நம்மை அடிமையாகக் கொண்டாண்டருள்வர், தாயே, என்பாள். நம்மை யாட்கொண் டருளும் முதல்வருடைய திருக்கரத்தில் தாளம் இருநதவகை யாதோ, தாயே, என்பாள்

குறிப்பு —தாளி-என்பது கொடி. தாளி யறுகு என்பதற்குத் தாளிக் கொடியும், அறுகும் எனப் பொருள் கொள்வாருமுளர். சாநது-திலக மிடுவதற்கும் பூசுவதற்கும் உரிய வாசனைக் கலவை. ஆள் - அடியார், தொண்டர் என்பாரைக் குறிக்கும். தாளம் - வட்ட வடிவாய் அமைந்த ஒலிக்கருவி அது பிரணவம் ஒலித்தற்குரிய தாம். (அ)

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும்இது என்னே அன்னே என்னும்.

உரை :—மாதொரு பாகத்தர். (எனினும்) தவவடிவ முடைய வர். அவர் பிச்சை எடுப்பவர்,தாயே, என்பாள். அவர் பிசசை ஏற்று மேற் செல்லுதலும் என் மனமானது (பிரிவுபற்றி) வருந்தும். இது என்ன காரணம், தாயே, என்பாள்.

குறிப்பு :—இறைவன் அன்பர் பொருட்டு, போக வடிவமும் யோக வடிவமுங் கொள்ளுதல் இங்கே குறிக்கப்பட்டது. இறை

வன் பிச்சை ஏற்பான் புகுந்து தாருகா வனத்து முனிவர் பெண்டிரை மயக்கியது போல அன்பர்பால் எழுந்தருளி வந்து உடல் பொருளாவி மூன்றையுங் கொண்டு அவர் மனத்தை அன்பினாற் பிணித்தல் குறிக்கப்பட்டது. (க)

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியா அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
இன்றெனக் கானவா(று) அன்னே என்னும்

உரை:—கொன்றை மலரும் பிறையும் வில்வத்தளமும் ஊமத்தம் பூவும் நெருங்கியமைந்த தலையினையுடையார் அவர், தாயே, என்பாள். அவை நெருங்கிய தலையின கண்ணுள்ள ஊமத்த மலர் இப்பொழுது எனக்கு உன்மத்தத்தை உளதாக்கியவாறு என்னே, தாயே, என்பாள்.

குறிப்பு:—ஊமத்தம் பித்து விளைக்கு மியல்பிற்று ஆதலின் இறைவன்பால் மால் விளைப்பதாக அதனை வியந்தோதினார். அம் மலரே தனக்குப் பித்து மயமாக ஆயிற்றெனக்கொண்டு, அம்மலர் பெறுதலைத் தான் விரும்பியதாக மகள் கூறினாள் என்றலுமுண்டு. இன்று-இறைவன் எழுந்தருளி ஆட்கொண்ட இக்காலத்து எனப் பொருள்படும். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

தில்லையில் அருளிய

குயிற் பத்து

ஆத்தும இரக்கம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
ஆதிகுணம ஒன்று மில்லான் அந்தமிலான் வரக்கூவாய்

உரை நடை:—இனிய கீதக்குயிலே, எங்கள் பெருமான் பாதம் இரண்டும் வினவில், பாதாளம் ஏழினுக்கப்பால், சோதி . நின்றது- கேட்டியேல், தொன்மை யாதிகுணம் ஒன்றுமிலான் அந்தமிலான் வரக்கூவாய்

உரை:—இனிமையான குரலுடைய குயிலே! நம்முடைய சிவபெருமானுடைய திருவடிகளிரண்டும் எங்குள்ளன எனக் கேட்டால், (அவை) கீழுலகம் ஏழுக்கும் அப்பாலாவன. ஒளிபொருந்திய அழகிய திருமுடி எங்கு முடிவதென்று சொல்லப்புகின், அது சொல்லின் அளவைக் கடந்து நின்றது. (யாது செய்யவெனக்) கேட்பையாயின், பழமை, தோற்றம் என்பனவும், முக்குணங்களும் இல்லாதவனாய் ஈறில்லாதவனா யிருக்குமவனை இங்கே வரும்படி நீ கூவி அழைப்பாயாக

குறிப்பு —குயிலினைப்பார்த்து அடிகள் கூறுவதாக அமைந்திருப்பது இப்பதிகம். கீதம்-இசை; இங்கே குயிலின் குரலைக் குறிக்கும். கீழுலக மேழினுக்குமப்பால் என்றஅளவே கூறினமையால்,அதற்கு முடிவு கூறப்படவில்லை. 'பாதாளம் ஏழு' என்றது கீழ்ப்பட்ட உலகத்தனையும் அடக்கிநின்றது. மணி-அழகிய. 'தொன்மையாதி' என்பதற்கு, பழமை முதலிய என்று பொருள் கொள்ளுவதுமுண்டு. (க)

ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்.

உரை நடை:—'ஏர்தரு' என்பதை 'எவவுருவம்' என்பதோடு கூட்டுக.

உரை:—உலகம் ஏழும் துதிக்குமபடியாக, அழகுடைய எத் தகையவடிவுமுடைய பொருளும் தன் திருவடிவமாகவுடையவனாய், முழக்க மிக்க கடல் சூழந்த அழகிய இலங்கையின் கண்ணே, கவின் பொருந்திய வண்டோதரி யென்னு மாதிற்குப் பெருங் கருணையோடு கூடிய பேரின்பத்தையளித்தவனாய்த், திருப்பெருந் துறையில் விரும்பி யுறைநத பெருமானைத் தென்றிசைக்கண் உள்ள பாண்டிநாட்டினை உடைய பிரானைக், குயிலே, உனது சிறந்த வாயினாற் கூவி யழைப்பாயாக.

குறிப்பு:—'ஏர்தரும்' என்பதற்கு எழுநது விளஙகும் எனப் பொருள்கொண்டு, 'ஏழுலகு' என்பதனோடாதல் 'எவ்வுருவம்' என்பதனோடாதல் சேர்ததல் உண்டு ஆர்கலி-நிறைந்த முழக்கம். அதனையுடைய கடலைக் குறிப்பது. இராவணன் தேவியாகிய வண் டோதரி சிவனடிப்பேரன்பிற சிறந்தவள். (௨)

நீலவுருவிற் குயிலே நீள்மணி மாடம் நிலாவுங்
கோல அழகில் திகழுங் கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய திருவுத் தரகோச மஙகை
ஞாலம விளஙக இருந்த நாயக னைவரக் கூவாய்.

உரை:—நீலநிறம் பொருநதிய வடிவமுடைய குயிலே, இரத் தினங்கள் பதித்த பெரிய மேலிடஙகள் பொருந்திய, வடிவமைப் பின் அழகினோடு விளஙகுவதாய பூஙகொடி போன்ற சாயலுடைய உமையம்மை தங்கியிருந்தருளும் திருக்கோயிலை உடையதாயும் ஒழுக்கம் மிகுதியாக நன்கு விளங்குவதாயுமுள்ள, திருவுத்தரகோச மங்கைப் பதியின்கண் உலகம் (அறிவொளியோடு) திகழும்படி எழுநதருளியிருந்த தலைவனை வரும்படி யழைப்பாயாக.

குறிப்பு :—'நீண்மணி மாட' மென்பதை மணிநீள் மாடமென அமைத்துப் பொருள் கூறுக. சோலமென்பதற்கு அழகு எனப் பொருள் கொண்டு, கோலவழகு என்பதற்கு, மிகுந்த அழகு என்பர். கொடிமங்கை என்பதற்கு திருமகள் என்று பொருள் கொள்வாரு முளர். நிலாவும என்பதைக் கோயில் எனபதோடு சேர்க்க. உத்தரகோசமங்கையில் இறைவன் ஆகமங்களை அறிவுறுத்தினமையால் ஞாலம (கலைஞானத்தால்) விளங்க இருந்த நாயகன் என்றார். (௩)

தேனபழச் சோலை பயிலுஞ் சிறு குயிலே யிது கேள்நீ
வான்பழித்திம் மண்புகுந்து மனிதரை ஆட்கொண்டவள்ளல்
ஊன்பழித்துள்ளம் புகுந்தென் உணர்வதுவாயவொருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக் கூவாய்.

உரை :—தேன் நிறைந்த பழங்களையுடைய சோலையில் பழகுகின்ற இளங்குயிலே! நீ இதைக் கேட்பாயாக. வானிலுள்ளாரை ஆட்கொள்ளக் கருதா திகழ்ந்து இந்த மண்ணுலகத்திலே வந்து (பருவம் வாய்ந்த) மக்களை ஆட்கொண்டருளிய அருட் கொடையாளனும் உடம்பினை இகழ்ந்தொழித்து நெஞ்சத்துட் புகுந்து எனதறிவினில் அத்துவிதமாயக் கலந்த ஒப்பற்றவனும், நம்மை யாட்கொண்டவனுமுள்ள மானையிகழ்ந்த மெல்லிய நோக்க முடைய உமையம்மை கணவனை வரும்படி நீ அழைப்பாயாக.

குறிப்பு :—'தேன்பழ' மென்பதற்குத் தேனைப் பொழிகின்ற பழமென்பாருமுளர். 'வான்பழித்த' என்றதற்குச சிதாகாயத்தினின்று இறங்கி என்பது முண்டு. வானைவிட்டு இறங்கினமை அதனைப் பழித்தவன்போ லாகுமென்ப. பிறப்பை ஒழிப்பதால், 'ஊன் பழித்து' என்றார். உயிரறிவு இறையறிவோடு இரண்டறக் கலந்து நின்றே இறைவனை யறிதல் கூடும். அங்ஙனம் கலப்பதே உணர்வதுவாதல். மென்நோக்கிற்கு மான்பார்வை கீழ்ப்பட்டமையால் 'மான்பழித்து' என்றார். (௪)

சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை அறுப்பான்

முந்தும் நடுவும் முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவ கனைவரக் கூவாய்.

உரை —(இசையால்) இன்பந் தருகின்ற அழகிய குயிலே, ஒளிக்கதிர்கள் சூழ்ந்த கதிரவன் போன்ற திருவுருவத்தோடு, சிதாகாசத்தி லிருந்து இறங்கி இந்நிலவுலகத்தே தொண்டர்களது பற்றைத் தொலைப்பவனும், உலகத்திற்கு முதல், இடை, கடை என்ற மூன்றிற்குங் காரணராகிய மும்மூர்த்திகளு மறிய முடியாத சிவந்த திருவடியுடையானை, நம்மை யாட்கொள்ளும் வீரனை வரும்படி அழைப்பாயாக.

குறிப்பு:—கடவுள் ஞானசூரியன் என்பார் 'ஞாயிறுபோல' என்றார். சுடர் என்பதை இறைவனோடு வந்த அடியவராகவும் ஞாயிற்றினை இறைவனுக்கு மொப்பிடலாம். அந்தரம் - ஆகாயம். எல்லாத் தத்துவங்களையும் கடந்த ஆகாயம் சிதாகாயம். மும்மூர்த்திகளுள் உருத்திரர் ஞானம்பெறினும், அதிகாரமலம் நீங்கப் பெறாமையின் அவரையு முட்படுத்தி 'மூவரறியா' என்றனர் 'சிந்துர' மென்பதற்கு வெட்சி என்பாரு முளர். வெட்சி போன்ற சிவந்த அடியென்பது கருத்து. பிறப்பறுப்பதில் இணையற்ற வீரனென்பார் 'சேவகனை' என்றனர். அறுப்பானாகியும், சேவடி யுடையானாகியும், சேவகனாயு மிருப்பவனை 'வரக்கூவாய்' என்றனர். 'முந்து நடுவு முடிவுமாகிய' என்பதைச் சேவடியானை என்பதோடு முடித்துக் கூறுதலுமுண்டு. (௫)

இன்பந் தருவன் குயிலே ஏழுல கும்முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.

உரை நடை —'இன்பந் தருவன்' என்பதை இரண்டாமடியின் ஈற்றில் வைத்துப் பொருள் கொள்க.

உரை —குயிலே, ஏழுலகங்களையும் முழுதும் ஆள்பவனும், உயிர்களிடத்து அன்புடையவனும், (அன்பர்களுக்கு ஞான) அமு

தத்தைக் கொடுத்து, அவர்கள் உள்ளத்தே ஊறுகின்ற ஆனந்த வடிவனும், சிதாகாயத்தினின்று எழுந்தருளி வந்த ஒளியுருவனுமா யிருப்பவன் (சிலதத) பேரின்பத்தை (நீ கூவினால் உனக்குத்) தருவன். மரக்கிளையிலிருந்து இசைபயிலுங் குயிலே, தூய பொன்னும் இரத்தினமுஞ் சேர்த்து அமைத்த கட்டமைந்த உருவம் போன்ற நல்ல குதிரைமேலெழுந்தருளி வருபவனை, திருவாவடுதுறை முதல்வனை நீ அழைப்பாயாக.

குறிப்பு —எழுலகும முழுதாளியாய், அன்பனாய், ஆனந்தனாய், தேவனாய வருவானை, நாதனை, மிழற்றுங் குயிலே கூவாய். குயிலே யின்பந்தருவான், என நான்கடிக்கும் முடிபமைத்துப் பொருள் கூறுதலுமுண்டு. அளித்தூறு, மென்பது 'அளிக்க ஊறு' மெனகவொள்ளுதலு முணடு சுவடு-கட்டு பொன்னினாலும மணியினாலும் அமைத்த உருவத்தையே 'கட்டு' என்றார். பொன் - மேனிக்கும், மணி - அங்கங்களுக்கும் உவமையாதல் காண்க. மணி ஒத்த சுவடெனக கொண்டு மணிபோன்ற தழும்பு அல்லது புள்ளியையுடைய நற்பரி என்பாரு முளர். எழுலகம் என்பது தோன்றிய எல்லா உலகத்தையுங் குறிக்கும். (௬)

உன்னை உகப்பன் குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப் புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீரபுயங் கன்வரக்கூவாய்.

உரை :—குயிலே, உன்னை விரும்புவேன்; உனக்குத் துணையாய் ஒத்த தோழியுமாவேன்; அழகினாற் பொன்னை வென்ற தூய திருமேனியையுடைய மெய்ப்புகழால் விளங்கும் அழகனாகியும, (நமது) அரசனாகியும், குதிரைமேல் வந்த அருட் கொடையாளனாகியும், திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பாண்டியன், சேரன், சோழனாகிய மூவேந்தனாகியும், சிறப்புப் பொருந்திய புயங்கக கூத்துடையவனாகியுமுள்ள பெருமானை நீ அழைப்பாயாக.

குறிப்பு :—உகப்பன், ஆவனென்பதை, இறைவனுக்கு ஏற்றிக் கூறுவதிலும், அடிகளுக்கு ஏற்றிக கூறுவதே பொருத்தம்.

"சிவன் திரள் தோள்" கூடுவதாகக் கூறிய அடிகளே தோழியாகவும் பொருத்த முடையவர். அழித்த - ஒளி மழுங்கச் செய்த. மூவேந்தரைக் கூறின இத்துப் பல்லவரைக் கூறாமை காண்க. இதிலிருந்து அடிகள் பல்லவா காலத்திற்கு முற்பட்டவரென்பதை யறிக. மன்னனென்பதை, 'மேய' என்பதோடு இணைத்தலுமுண்டு. புயங்க மென்பது பாம்பைக் குறித்தலின, பாம்பின் ஆட்டம்போன்றதொரு கூத்தாக அது இருத்தல் கூடும் புயங்க மென்பதற்குப் பாம் பென்றே பொருள்கொண்டு, பாம்பினை அணியாக அணிந்தவன் என்று பொருள் கொள்வோருமுண்டு. (எ)

வாஇங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி
ஓவிய வருன்னி நிற்ப ஒண்தழல் விண்பிளந் தோங்கி
மேவிஅன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன் தாழ்சடை யோன்வரக் கூவாய்

உரை:—குயிற் பிள்ளையே! நீ இங்கே வருக. பண்டைக் காலத்துத் திருமாலோடு பிரமனும் (முதலில்) அடிமுடி தேடிப் (பின்) தேடுதலொழிந்து, இது யாதோ என்று வியப்போடு எண்ணி நிற்கும்படியாக ஒளிமிக்க அனற் பிழம்பாக, வானைப் பிளந்து மேற்சென்று அண்டங்களைக் கடந்து எங்கும் விரிகின்ற ஒளியாய், பரந்துமேற்பட்டு நின்ற உண்மையனாய்ப், பாய்ந்து வருங் குதிரைமேலேறி வருபவனாய், உள்ள நெடிய சடையுடையானை வரும்படி நீ அழைப்பாயாக.

குறிப்பு —'பிள்ளாய்' என்பது குஞ்சினைக் குறிக்கும் மால் அடியையும், நான்முகன் முடியையுந் தேடினமையால் 'ஒடு' என்ற உருபு கொடுத்துப் பிரித்தார். மூன்றும் அடியில் 'அன்று' என்பது பண்டைக்காலத்தைக் குறிக்கும். அதை 'மாலொடு' என்பதற்கு முன் அமைக்க. ஓவி-ஒழிந்து, நீங்கி. 'மேவி' யென்பதைச் சுடராய் என்பதற்குப் பின் அமைக்க. மேவி - மேற்பட்டுப் பரந்து. (அ)

காருடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில் வாழுங்குயிலே
சீருடைச் செங்கம லத்தில் திகழுரு வாகிய செல்வன்

பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை நீவரக் கூவாய்.

உரை —கரிய நிறமுடைய அழகு விளங்குகின்ற உடம்பொடு மணம் பொருந்திய சோலையில் வாழுகின்ற குயிலே, சிறப்புடைய செந்தாமரைபோல விளங்குஞ் செம்மேனியுடைய முதல்வனும் இந்நில வுலகத்திலே திருவடிகளை எனக்குக் காட்டிக் கட்டுகளை ஒழித்து ஆட்கொண்டருளிய, ஆத்திமலரணிந்த அழகிய பொன் திருமேனி உடையவனுகிய சாவா மருந்து போல்வானை நீ வரும்படி அழைப்பாயாக.

குறிப்பு —கார்-கருமை. பொன்-அழகு, ஒளியைக் குறிக்கும். கடி-மணம். பாசம்-கட்டு, மலம். ஆர-ஆத்தி. 'பொனின்' என்பதில் 'இன்' சாரியை. காருடைப் பொன் என்பதற்குக் கரும்பொன் என்ற பொருள் கொள்வோரு முளர். கரும்பொன்-இரும்பு. (௯)

கொந்தணை வும்பொழிற் சோலைக் கூங்குயிலேயிது கேள்நீ
அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
எந்தமராம இவனென்றிங் கென்னையும் ஆட்கொண் டருளுஞ்
செந்தழல் போலதிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்.

உரை :—பூங் கொத்துகள் நெருங்கிய பெருஞ்சோலையில் தங்கிக் கூவுந் தொழிலை உடைய குயிலே, நீ இதைக் கேட்பாயாக. இவ்வுலகத்தே வேதியனாக எழுந்தருளி வந்து அழகிய தனது செய்ய பொற்பாதங்களைக் காட்டி, எமது (அடியாராகிய) உறவினருள் இவனொருவன் என்று கருதி, இவ்விடத்தே தகுதியற்ற என்னையும் ஆண்டு வீடருளவல்ல சிவந்த அனல்போலுந் திருமேனி உடைய விண்ணவர் தலைவனை வரும்படி நீ அழைப்பாயாக.

குறிப்பு :—'கொத்து' என்பது 'கொந்' தென மெலிந்தது. 'கூவு' மென்பது 'கூம்' எனக் குறுகிற்று. தமர் - தமருள். தில்லையில் வீடருளுங் குறிப்பு இதன்கட் காண்க. (௧௦)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருத்தசாங்கம்*

அடிமை கொண்ட முறைமை

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று

உரை நடை:—ஏரார் இளங்கிளியே, ஆரூரன், ...செம் பெருமான், எம்பெருமான், தேவர் பிரான் என்று வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல் எங்கள் பெருந்துறைக் கோன்-சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்

உரை:—அழகு பொருந்திய இளங்கிளியே, ஆரூரன் செம்மைப் பெருமான், எம்பெருமான், விண்ணவர் தலைவன் என்று வெண்டாமரையி லுறைகின்ற அயனும், திருப்பாற்கடலிற் பள்ளி கொள்ளுந் திருமாலும் கூறுகின்ற முறைபோல, நமது திருப் பெருந்துறை மன்னனது சிறப்பு நிறைந்த திருப்பெயர்களைப் பயனறிந்து சொல்லுவாயாக.

குறிப்பு:—தேர்ந்து-தெளிந்து, அறிந்து. ஆரூரன் - திருவாரூரில் உறைவோன். திருவாரூர், இதயத்திற்கு அறிகுறியாதலின், உள்ளத்துறைபவனென்ற பொருளுங் கொள்ளப்படும். செம்பெருமான்-சிவபெருமான். செம்மையென்றசொல், நேர்மை, நன்மை, மங்கலம் என்ற பொருள்களை யுணர்த்தும். அயனுக்கும் அரிக்கும் இறைவன முதல்வனாதலின், 'எங்கள் தலைவனே! விண்ணவர்

---

* அரசனது பத்துறுப்புங் கூறுந் திருப்பதிகம்.

தலைவனே!' என்று அவர்கள் விளிப்பர்போலும் 'செப்புவ' என்பது செப்புவது எனபதன் கடைக் குறையாகவும் கொள்ளலாம். (க)

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும
நாதனநமை ஆளுடையான் நாடுரையாய்—காதலாக்(கு)
அன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும
தென்பாண்டி நாடே தெளி

உரை:—குற்றம் இல்லாத இனிய மொழி பேசும் மரகதம போன்ற பசசைக கிளியே! ஏழுலகிற்கு தலைவனும நமமை அடிமை கொண்ட பெருமானது நாட்டினைச சொலலுவாயாக. அன்பாகள்பால் அவர் அன்பினை யேற்றுப் பிறவிககு மீணடு வாராதபடி திருவருள் செய்வானது திருநாடு, எககாலததும் தெற்கின்கணுள்ள பாண்டிய நாடென்றே அறிவாயாக.

குறிப்பு:—மரகதம்-பசசைமணி. பொழில் - உலகம். 'அனபு ஆண்டு' என்பதற்கு 'அன்பினால் ஆட்கொண்டு' என்று கூறுதலு முண்டு. 'மீளா அருள்' என்பதறகு மீளாமைக் கேதுவாகிய அருட் பேறு என்றும் பொருள் கொள்ளலாம. தெளி - அறி. உலகு முள்ள காலமெல்லாம, சிவநெறி விளஙகுதற்குரிய நாடெனறு கருத்துப் பற்றி, 'என்றும்' என அருளினா போலும 'என்றும்' என்பதை 'அருள் புரிவான்' என்பதோடுஞ் சோககலாம். (உ)

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரமபோற் கொண்டாடும
உத்தர கோசமங்கை யூர்.

உரை:—மகரந்தம் நிலவுகின்ற அழகிய பொழிலின்கணுள்ள கிளியே! நம்மை யாட்கொண்டருளும், மஙகைசேர் பங்கினன் உறைகின்ற திருப்பதி யாது என்னில், அது, அன்பர்களெல்லா ரும், நிலவுலகச சிவலோகமெனப் பாராட்டிச் சிறப்பாகப் போற றுந் திருவுத்தரகோசமங்கைப் பதியாகும்.

குறிப்பு —கோதாட்டுதல்-பாராட்டுதல். அன்பர்க்கு ஞானம் உதவினமை, அப்பதிச சிறப்பாகும். (௩)

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் — தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு

உரை:—சிவந்த வாயினையும் பசிய சிறகினையுமுடைய அழகி! நமது உள்ளத்தே அமர்ந்த அப்பனாகிய திருப்பெருந்துறை யுடையானது ஆற்றினைப் புகழ்ந்துரைப்பாயாக. பெண்ணே! பாசத்தை நீக்க ஞான அமுதம் வந்தடையும் உள்ளத்தே, மேலிட்டுச் செல்வதாய பேரின்பமே, நம்மை உடைய பெருமானது ஆறாகும்

குறிப்பு —'வாய்' என்பது மூக்கினையு முளப்படுத்தும் 'செல்வீ' என்பது அருமைச் சொல் 'ஐயன்' என்பதற்குத் தலைவனென்றும் பொருள் கொள்ளலாம். 'மலங்கழுவ வான் வந்த சிந்தை' என மாற்றுக. 'வான்வந்த' என்பதற்கு, 'பெருமை பொருந்திய' என்பது முண்டு. 'இழியும்' என்பதற்கு, 'மேல் நின்று இறங்கும்' என்னலு முண்டு. சிவத்தினின்று உயிரின் இறங்குவது என்பது கருத்து. (௪)

கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய்—நெஞ்சத்(து)
இருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து

உரை:—முருக்கம் பூப்போலச் சிவந்த மூக்குடைய அழகிய கிளியே! கெடுதியற்ற, திருப்பெருந்துறைப் பெருமானாகிய அழகன் பொருந்தும் மலையினைப் புகழ்வாயாக. (நமது) உள்ளத்தின் (அறியாமையாகிய) இருள் நீங்கும்படி, ஞான ஒளிபரப்பி இன்பம் நிலைத்த வீட்டினை அருளுதற்கிடமாய மலை, கயிலை அல்லது மகேந்திரமாகிய அவனது திருமலையென ஆராய்ந்தறிக.

குறிப்பு :—சுகம் - கிளி. மஞ்சன் - அழகன். 'என்பது ஆய்ந்து பகராய்' என முடிபு கோடலுமுண்டு. 'அருளிய பெருமை அருண் மலை' என்று கீர்த்தித் திருவகவலிற் கூறியவாறு, 'அருளு' என்பதில், உகரத்தைச் சாரியையாக நீக்கி, முதநிக் கேதுவாய அருளே மலை என்பது எனப் பொருள்கோடலு முண்டு. (௫)

இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே—எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரும் மகிழ்ந்து

உரை நடை:—என் கிளியே, கூடுபுகல், இப்பாடே .. ஊர்வது என்னே இயம்புக என அமைத்துக்கொள்க.

உரை :—எனது கிளியே, கூட்டிலே புகாதே, இவ்விடத்தே வந்து, ஒப்பற்ற சிறப்புடையான் (ஏறி வருகின்ற) வாகனம் யாதென்று கூறுக. நீங்காத அறிவொளியுடைய நங்கையர் தேன் போலினிதாய உள்ளத்தினராய் வாழ்த்துப் பாடிவர, அவன் ஆகாயக் குதிரையை மகிழ்ந்து ஏறிவருவான்.

குறிப்பு :—புகல் - புகாதே. ஒப்புஆடா - ஒப்பு இசையாத. தெய்வம் - ஒளித்தன்மை. புரையும் - போலும் ஏத்து - வாழ்த்து. வான் என்பது சுத்தமாயை என்றுஞ் சிதாகாயம் என்றும் இருதிறமாகக் கூறுவர். (௬)

கோல்தேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய்—ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை.

உரை:—கொம்புத்தேன்போலினிய சொல்லுரைக்குங்கிளியே! குற்றமற்ற திருப்பெருந்துறை மன்னன், தனது பகைவரைத் தோல்வியடைவிக்கும் ஆயுதத்தைக் கூறுவாயாக.(அது யாதெனில்) தன்பாற் குறையிரந்த அன்பரை மலம் பற்றி வாதியாதபடி,

அவர்கள் உள்ளம் உருகும்படி, மும்மலங்களைப் பாய்ந்தொழிக்குஞ் சூலமே அவன் திருக்கரத்திற் கொள்ளுகின்ற ஆயுதமாகும்.

குறிப்பு:—கோல - கொம்பு. மாற்றார் - பகைவர். ஏற்றார் - இரந்து அருள் பெற்றார். (எ)

இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய்—அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.

உரை:—இனிய பால்போன்ற சொல்லுடைய கிளியே! நமது திருப்பெருந்துறைப் பெருமான் திருமுன்பக்கமாக ஒலிக்கும் முரசினைப்புகழ்ந்துரைப்பாயாக. (அதுயாதெனில்,) இறையருளால், பிறவியாகிய பகைப்பொருள் கலங்கியொழியும்படி பேரின்பமயமான சுத்த தத்துவத்தே ஒலிக்கும் விரிவு மிகுந்த மூலநாதமாகிய பறையே.

குறிப்பு:—'இன்பால்' என்பதில், 'இன்' என்பது பாலின் இயற்கை யினிமை யுணர்த்துவது. முன்பால் - முன்பக்கம். 'அன்பால்' என்பது இறைவனது அன்பை யுணர்த்தும். அது அருளே யாகும். சுத்த தத்துவங்கள் அபர முத்தித்தானமாய் இன்பம் பயத்தலின், 'பேரின்பத்தோங்கும்' என்றார். பரு - பருமை, விரிவு, வியாபகம் இந்நாதத்தைச் சூக்கும வாக்கென்ப. பறை முழக்கத்தாற் பகைவர் மனங் கலங்குவராதலின், 'பிறவிப் பகை கலங்க' என்றார். (அ)

ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென்—தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த தார்.

உரை:—ஆராய்தலையுடைய சொற்பேசுங் கிளியே! மிக (என்பும்) உருகும் அன்பரிடத்தே விரும்பி யமர்ந்த திருப்பெருந் துறைப் பெருமானது திருமேனியிலசை யணிந்த மாலை யாது

(எனில்), கொடிய வினைப்பயனானது என்னை யடையாதபடி, நாயனைய என்னை நாடோறும் ஆட்கொண் டருளுபவன் விரும்பிய மாலை, கொடியறுத மாலையேயாம்.

குறிப்பு :—'ஆய' என்பதில், ஆய், முதனிலைத் தொழிற் பெயர். தாளி - கொடி. அள்ளூறல் - மிகுதியாக அமுதம் ஊறு தல். அது மிகுந்த உருக்கத்தா லாவதாகலின், என்புருகுதலெனப் பொருள் கொள்ளுவர். (௯)

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாங் கொடி.

உரை :—பொழில்களி லுறையும் பசியநிறக் கிளியே! பரி சுத்தமான நீர்சூழ்ந்த திருப்பெருந்துறையி லுறையும் பெருமானது அழகு விளங்கும் கொடியைப் புகழ்வாயாக. அது யாதெனில், பகைவர் மிகுதியும் திடுக்கிட் டஞ்சும்படி, உயர்வாகத் தோன்றி அழகு காட்டுகின்ற குற்றமற்ற காளை (வடிவம் எழுதப்பட்டு) உளதாகிய கொடியே.

குறிப்பு :—சோலையில் வளர்முற வாழ்தல், கிளிகளுக்குப் பெருமை. கூட்டில்வாழ் கிளி, சோலைக் கிளியாகாது. 'தூநீர்' என்பதற்குத் 'தூயதன்மை' யெனப் பொருள்கொண்டு, 'கோன்' என்பதோடு இணைக்குதலுமாம். ஏதிலார் - பகைவர். ஏறும் - ஏறு ஆம். ஏறு - காளைவடிவு. ஏறு, அறத்திற் கறிகுறியாம். (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருப்பள்ளியெழுச்சி

திரோதான சுத்தி *

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
 புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
 எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
 திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
 எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே

உரை —எனது வாழ்விற்கு மூலப்பொருளாகிய பெருமானே! வணக்கம். (பொழுது) விடிந்தது. உனது அழகிய இரு திருவடிகளுக்கு ஒத்த இருமலர்களை அவற்றின்மேல் தூவி உன் சந்நிதியில் நின்று உனது திருமுகத்தில் எழுகின்ற அருள் விளங்கும் அழகிய புன்சிரிப்பினைப் பெற்று நினது திருவடிகளை வணங்குவோம். சிறந்த இதழையுடைய தாமரைகள்விரியப்பெற்ற சேற்றினையுடைய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே, உயர்ந்த நந்திக்கொடியினை யுடையாய், என்னை உடையவனே, எமது தலைவனே, (துயில் நீங்கித்) திருப்பள்ளியினின்று எழுந்தருள்வாயாக.

குறிப்பு:—ஏற்றுதல் - மலர் தூவுதல். 'சேற்று' என்பதை 'வயல்' என்பதோடு முடிக்க. 'பங்கஜம்' என்ற வடசொல் சேற்

* மறைப்பு நீக்கம்.

றில் முளைப்பதெனப் பொருள்படும். ஏறு - காளை. புறவிருள் நீங்கக் கதிரவன் விரிதல் போல, அகவிருள் நீங்கத் திருமுகத்தே அருண மலர்தல் கூறப்பட்டது. எழில்நகை, கதிரவன் கதிர்கள் போல்வது. பள்ளி - படுக்கை, துயில். (க)

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

உரை நடை :—'உதயம் அகன்றது' என மாற்றுக. 'அண்ணல்' என்பதைச் சிவபெருமானே என்பதோடு சேர்க்க.

உரை.—செங்கதிரவன் இந்திரன் (அதிபதியா யிருக்கும்) திக்காகிய கீழ்த்திசையை நெருங்கிவிட்டான். இரவினிருளானது நீங்க, உதயவொளி பரவிற்று. தாமரைபோன்ற நினது திருமுகத்தின் அருளைப்போலக் கதிரவன் எழுந்து மேற்செல்லச் செல்ல, கண்கள் போன்றனவாய், வாசனை யுடையனவா யுள்ள, தாமரை மலர்கள் விரியும்படி, அழகிய அதன் பாங்கரில் திரளும் வரிசை வரிசையாய் வண்டுக் கூட்டங்கள் (ஒலித்து) ரீங்காரஞ் செய்கின்றன. இவற்றைக் கருதுக. பெருந்தகையே, திருப்பெருந் துறையின்கண் எழுந்தருளிய சிவபெருமானே, அருட்செல்வத்தைத் தரவருகின்ற இன்பமலையே, (எல்லாப் பொருளும்) அலைபோற்றோன்றி யடங்குதற்குரிய பெருங் கடலே, துயில் நீங்கி எழுந்தருள்க.

குறிப்பு :—'அருணன்' என்பதைச் சூரியனது சாரதிக்கும் பெயராகக் கூறுவர். உதயகாலத்திலே திருமுகத்திலே அருட் கதிரவன் விளங்கித் தோன்றத் தோன்ற, அன்பர்களது கண்க

ளாகிய காவன் மலர்கள் மலரும்படியாக, என, 'உதயத்தின் மலர்த் திருமுகத்தின் கருணையின் சூரியன் எழ எழ நயனக் கடிமலர் மலர' என்பதற்குப் பொருள் கூறி, இத்தொடரைப், 'பள்ளி எழுந்தருளாயே' என்பதோடு முடிப்பாரு முளர். உதயம் - உதய வொளி. அகன்றது - பரவியது. தாமரைக்கு நயனத்தை ஒப் பிடுதல் உண்டு. கடி - வாசனை ஓ - அறிக அறுபதம் - வண்டு, ஆறுகாலுடையது. நிரை - வரிசை. இறைவன் அலைகடல் போனு தலைப் பட்டினத்தடிகள் திருவாக்கினு லறிக (௨)

கூவின பூங்குயில் கூவின கோழி
  குருகுகள் இயம்பின இயம் பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
  தொருப்படு கின்றது விருப் பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
  திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
  எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

உரை நடை—பூங்குயில் கூவின, கோழி கூவின, சங்கம் இயம்பின, தாரகையொளி ஓவின, உதயத்தொளி ஒருப்படுகின்றது. தேவ, நமக்கு விருப்பொடு, கழற்செறி நற்றாளிணை காட்டாய், என அமைத்துக் கொள்ளுக.

உரை:—(பொழுது புலாவதை புணர்த்த) அழகிய குயில்கள் கூவிவிட்டன. கோழிகளும் கூவின. பிறபறவை யினங்களும் ஒலித்துவிட்டன. சங்குகள் சத்தித்தன நட்சத்திர வெளிச்சங் கள் மறைந்தன. உதயத்திலொளி தோன்றுகின்றது. கடவுளே, எங்கள்பால் விருப்பத்தொடு, வீரக்கழல் செறிந்த உனது (பிறவி) அறுக்கும் நல்ல திருவடி யிரண்டையுங் காட்டியருள்க. திருப் பெருந்துறையில் வீற்றிருக்குஞ் சிவபெருமானே, யாரும் அறிய வொண்ணாதவனே, கருணையால் அடியாராய எங்களுக்கு எளிவந் தருளபவனே, எமது தலைவனே, துயில் நீங்கி யருள்க.

குறிப்பு:—குருகு - பறவைப்பொது. தாரகை - விண்மீன். நற்றாள் - பிறவியறுத்து வீடளிக்கும் நன்மையுடைய தாள். ஒருப்படுகின்றது - தோற்றுகின்றது 'விருப்பொடு நமக்கு' என்பதற்கு நமக்கு விருப்ப முண்டாகுமாறு எனப் பொருள் கொண்டு 'ஒருப்படுகின்றது' என்பதனோடு முடிப்பது முண்டு. (௩)

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

உரை:—(விடியற்காலத்தே, இறைவனை வழிபடுவான் புகுந்தாருள்) இனிய ஓசை யிசைக்கும் வீணையை உடையவர் ஒருபக்கம் (நின்றனர்.) யாழ்வாசிப்போர் பிறிதொரு பக்கம். மந்திரங்களோடு துதிப்பாடல்களையும் ஓதுவார்கள் ஒருபக்கம். நெருங்கிக் கட்டப்பட்ட மலர்மாலை ஏந்திய கையினர் ஒருபக்கம். தொழுபவர், அழுபவர், வாடி யசைபவர் ஒருபக்கம். தலையிற் கைகுவித்தவர் ஒருபக்கம் (இவர் யாவர்க்கும் அருள் புரிவான்) திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! (தகுதியற்ற) அடியேனையும் ஆட்கொண்டு இனிய பேரருள் செய்யும் எமது தலைவனே, திருப்படுக்கை விட்டெழுந்தருள்க.

குறிப்பு:—வீணையும் யாழும் தம்முள் சிறிது வேறுபாடுடையன. இருக்கு - மந்திரம். பிணை - சேர்ந்த, தொடுத்த. துவள்கை - அசைதல். 'தொழுகை' என்பதற்குத் தொழுங்கை யெனப் பொருளுரைத்தலுமுண்டு. அஞ்சலி - வணக்கம். (௪)

பூதங்கள் தோறுநின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்

கீதங்கள் பாடுதல் ஆடுதல அல்லால்
கேட்டறி யோமஉனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டருள புரியும
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

உரை:—அறிஞர் நீ, ஐம்பூதங்களிலும் அல்லது எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்றாயென் றுரைப்பின் அல்லது, போக்குவரவு இல்லாதவன் என்று உன்னைக் கூறி, உன்பொருட்டு இசைப்பாடல்களைப் பாடுதலும், அதற்கேற்ப ஆனந்தக் கூத்தாடுவதுஞ்செய்வதை அல்லாமல், உன்னை தாமாக நேரே பார்த்தறிந்தவர்களை நாங்கள் கேட்டறியவில்லை. குளிர்ச்சி பொருந்திய வயல் சூழ்ந்த திருப்பெருந்துறை யரசே, மனத்திற்கும் ஊகித்தறிதற்கெட்டாதவனே, அடியேங்கள் எதிரே தோன்றியருளி, எங்கள் குற்றங்களைத் தொலைத்துப் பேரருள் அளிக்கும் எமது தலைவனே, திருப்பள்ளிவிட் டெழுந்தருள்க.

குறிப்பு:—கடவுள் காட்டாமல், தாமாகக் கண்டறிய இயலாமை குறித்தனர். பூதம்-ஐம்பூதத்தையும், உள்பொருள் யாவற்றையுங் குறிக்கும். பிறப்பிறப் பிலனாதலின், இறைவனைப் 'போக்கிலன் வரவிலன்' என்றார். ஏதங்கள் - குற்றங்கள். இச்சொல், பாசங்கள், மலங்கள், காமவெகுளி மயக்கமாய முக்குற்றங்கள் என்பதை யுணர்த்தும். (௫)

பப்பற வீட்டிருந் துணருநின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

உரை :—உமை மணவாளா! மனவிரி வொழியப் பற்றற்ற நிலைநின்று மெய்யுணரும் உனது அன்பர்கள், உன்பாலெய்திப் பாச நீக்கமடைந்தார்கள். அவர்கள் எல்லாரும் மனித இயற்கையில் அன்பு நீர் பெருக்குந் தலைவியாபோல் நின்னைத் தொழுகிறார்கள். சிவப்பு நிறம் பொருந்திய தாமரைகள் விரியும் வயல் புடைசூழ்ந்த திருப்பெருந்துறையிற் றங்கிய சிவபெருமானே! இந்தப் பிறவியை நீக்கி எங்களை ஆட்கொள்ளவல்ல எமது தலைவனே! திருப்பள்ளி யெழுக.

குறிப்பு :—பப்பு-பரப்பு என்பதன் இடைக்குறை. வீடு-பற்று விட்ட நிலை. பந்தனை-கட்டு, பாசம், மலம். பலரும்-எல்லாரும். மைப்பு-நீருடைமை. மை-நீர். மைப்பு என்பதற்கு மைத்தன்மை யெனப் பொருள் கொள்ளுதலுண்டு 'மானுடத் தியல்பின், மைப்புறு கணணியா' (ஆய) என மாற்றுக. 'அவர் பலரும் மைப்புறு கண்ணியரும்' எனக்கொண்டு மானுடத் தியலபாவது, கீழ்வீழ்ந்து வணஙகுதல் என்பாரு முளர். மனிதவாழ்க்கையிற் றலைவியர் தலைவாபாற் காதலால் வழிபடுவ தொப்ப என்றபொருள் சிறப் புடைத்து. செப்பு-சொல, புகழ என்பது முண்டு. இப்பிறப்பு-எடுத்த பிறப்பு. உடம்பொழித்து இரண்டறக் கலத்தலாகிய வீடு வேண்டுமென்பாா இவவாறு கூறினர். (௬)

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
    கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
    எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
    மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறுஅது கேட்போம
    எமபெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

உரை :—பிரமமானது, கனியின் சுவைபோலும், அமுதம் போலும் எனவும், அது அறிவதற்கு முடியாதெனவும் அறிதற்கு

எளிதாமெனவும வாதித்துத் தேவர்களும் அதனை அறியா நிலையி லிருப்பா. வீடருளும் பரம்பொருளினது திருவடிவம இதுவாகும். திருவுருக கொண்டுவநத இவனே அப்பெருமான என்று நாஙகள் சொல்லுமபடியாக, எஙகளை யாட்கொள்ள இவவுலகத்தே திருவுருக் கொண்டெழுநதருளிய, தேன் மிகுநத சோலை சூழநத திருவுததர கோசமஙகையி லுறைவோனே, திருப்பெருநதுறைக் கோவே! எங்களை ஏவல்கொளளுமமுறை எதுவோ, அதனை நாஙகள கேட்டு நடப்போம. எமது தலைவனே! திருப்பள்ளி யெழுக

குறிப்பு —அது, என்பது பரம் பொருளாகிய பிரமத்தைக் குறிக்கும். பழததிற் சுவைபோல, உலகிற கலநதுள்ளதென்ற கொள்கைபற்றி அவவாறு கூறினர். பிறவியறுத்தலின் அமுத மாயிற்று. அன்பாகவெளி தெனவும் பிறாக்கரிதெனவும பேசியும், முயறசிப் பயன் கைவநதில ரென்பது கருத்து. (எ)

முநதிய முதல்நடு இறுதியு மாளுய்
மூவரும அறிகிலா யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும நீயும்நின் அடியார்
பழஙகுடில தொறும்எழுந தருளிய பரனே
செநதழல் புரைதிரு மேனியுங காட்டித்
திருப்பெருந துறையுறை கோயிலுங காட்டி
அநதண ளுவதுங காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே

உரை:—கிடைத்தற்கரிய நிறைநத அமுதமே! முறபட்ட முதலும் நிலையும் முடிவும் ஆனவனே! மும்மூர்ததிகளும் உன்னை அறிய வல்லார் அல்லர். (எனின்) வேறு யார், உன்னை அறிதல் கூடும்? பநதின் தன்மை சார்நத திருக்கை விரலுடைய திருவருட் சததியும் நீயும் அன்பர்களுடைய பழைய குடிசைகள் தோறும் அவாககருள் புரிவான் வேண்டி எழுநதருளிப் போநத மேலான வனே! சிவநத அனல்போலுஞ் செம்மேனி வடிவங்காட்டியருளி, நீ திருப்பெருநதுறையிற் றங்குகின்ற திருக்கோயிலையுங் காட்டி, நீ

ஆட்கொள்ளும் அருளாளனும் வருதலையுங் காட்டி, எங்கள்பால் வந்து ஆட்கொண்டவனே! நீ, திருப்பள்ளிவிட் டெழுந்தருள்க.

குறிப்பு —'மூந்திய' என்றது எல்லாவற்றிற்கு முற்பட்ட, முதற் பெரும்படைப்பு, காப்பு, அழிப்பைக் குறிப்பது. இடை முததொழில்கள் பல. பந்து - உருட்சி, திரட்சிக்குவமை. 'பந்து சேர் விரலாள்' என்ற தேவாரமுங் காண்க. எழுந்தருளி யாட்கொள்ளுந் தொன்மை முறை குறிப்பார் 'பழங்குடில்' என்றார். அது, போயப் பழகிய குடில்போலும். திருப்பெருந்துறையை 'உறை கோயிலாகக்' காட்டி என்பாருமுளர். 'அந்தணன்' வேதிய வடிவங் குறித்தல் கூடும். (அ)

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
  விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
  வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
  கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
  எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

உரை.—வானுலகத்தேயுள்ள விண்ணவர்களும் அடையவொண்ணாத மேலான பரம்பொருளே, உன்னுடைய தொண்டாற்றும் அடிமையேமாகிய நாங்கள் இம்மண்ணுலகத்தே (பேரின்பத்தோடு) வாழும்படியாக, இங்கே எழுந்தருளிவந்து எங்களைச் செய்வித்தவனே, வளம்பொருந்திய திருப்பெருந்துறை யுடையவனே, பரம்பரைத் தொண்டராகிய எங்களுடைய கண்ணில் நின்று, அல்லது அகத்தே நின்று மகிழ்ச்சி தருகின்ற தேன்போலினியவனே, விண்ணவர்க்குத் திருப்பாற்கட லமுதம் போல்பவனே, (அல்லது) எல்லாங்கடந்த அருமருந்தே, கரும்பு போல்பவனே, உன்னை அன்பால் விரும்புகின்ற அடியவர்கள் நினைவிலுள்ளானே, எல்லா உயிர்களுக்கும் உயிரானவனே, எமது தலைவனே, திருப்பள்ளியெழுக.

குறிப்பு :—விழு - மேலான. தொழுப்பு - தொழும்பு என்பதன் வலித்தல் விகாரம், தொண்டு. தேன், அமுது, கருப்பஞ்சாறு மூன்றையு முவமையாகக் கூறுதல் அடிகள் மரபு. (௯)

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன் விருப் பெய்தவும் மலரவன் ஆசைப
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

உரை நடை —'ஆரமுதே, இந்தப் பூமி .....நோக்கி' என்பதை முதலிலும 'திருப்பெருந்துறை யுறைவாய' என்பதை ஈற்றடியிலுங் கொள்ளுக.

உரை :—கிடைத்தற்கரிய அமுதமே, இந்தப் பூவுலகம் சிவபெருமான் உயிர்களை வீடருளி ஆட்கொள்கின்ற வகையுடையதென்று பார்த்து, நாம் பூமியிற்புகுந்து பிறக்காததனால் (அவ்வண்ணம் ஆட்கொள்ளப் பெறாமல்) வாழ்நாளை வீணுகப் போக்குகின்றோமே யென்று திருமாலாகிய பெரியோன் விருப்பமடையவும், மலரி லுறைகின்ற நான்முகன் ஆசைப்படும்படியாகவும், நீயும், விளங்கிய பொய்யாத நினது திருவருட்சத்தியும், ஞாலத்தே போந்தருளி எங்களை உய்யக் கொண்டருள வல்லவனே, திருப்பெருந்துறை யுறைவானே, திருப்பள்ளி விட்டு எழுந்தருள்க.

குறிப்பு :—புவனி, அவனி, பூமி என்பன நிலவுலகை யுணர்த்தின அவமே - வீணே, அலரவன் - வெண்டாமரை யுறைவோன். 'அலர்ந்த மெய்க்கருணை' யென்றது, வீடுய்ப்பிக்கும் தாயாகிய அருட் சத்தியைத் திரோதான சத்தியின் வேறாய அருட்சத்தி யெனக் குறிப்பித்தார். ஐந்தெழுத்திலே, வகரத்தாற் சுட்டப்படும் அருளென்றறிக. (௧௦)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

கோயில் மூத்த திருப்பதிகம்

அநாதியாகிய சற்காரியம் *

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன், அடியார் நடுவுளிருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம, முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

உரை நடை —'பொன்னம்பலத் தெமமுடியா முதலே' என்பதை முதலிலும், 'என் கருத்து முடியும் வண்ணமமுன் நின்றே' என்பதை 'அடியேன்' என்பதற்கு முன்னும் அமைக்க.

உரை:—பொற் சபையிலாடும எமது ஈறிலாத முதல்வனே, (நம்மை) உடையவளாகிய சிவசத்தி உன்னிடத்தே உள்ளீடாக இருக்கின்றாள். நீயும அவளிடையே கலந்திருக்கின்றாய் எனக்கு உளளீடாய் நீவிர இருவீரும் இருப்பது உண்மையானால், நீ எனக்கு முற்பட்டு நின்று என் விருப்பம் நிறைவேறும் வண்ணம் அடியேன் உன் அடியார நடுவிலே இருத்தற்குரிய திருவருள் செய்ய வேண்டும.

குறிப்பு.—சிவத்தினின்று பராசத்தி தோன்றுதலின், 'உடையாள் உன் நடுவிலிருக்கும்' என்றார். சிவத்தின் ஒரு கூற்றிலே தோன்றுஞ் சத்தியே உலகத்தே ஐந்தொழில் செய்யப் போது மாதலின, 'நடு' என்று ரெனபாரு முளர். 'நடு' என்ற சொல் அந்தரியாமித்துவ\முணர்த்துதலின்,அது அத்துவிதக் கலப்பையே

* என்றைக்கு முள்ள தன் செயற்பாடு.

குறிப்பதாம். தோன்று முலகில் எப்புறமும் ஆதாரமாய்ச் சிவசத்தி நிற்றல்போல, உலகின் பொருட்டுத் தோன்றுஞ் சிவ சத்திக்கு எல்லாப்புறமும் சிவமே வியாபகமா யிருத்தலின், சிவத் தின் நடுவே சிவசத்தி தோன்றுமென்றார். உலகத் தோற்றத்தின் கண், ஏகனாகு சிவமானது உள்ளீடாய்ச் சத்தியோடு கலந்திருத்த லின், 'நீ அவள் நடுவில் இருத்தி' என்றார். சிவ தத்துவ சம்பந்த மாய்ச் சத்திதோன்ற, சத்தி சம்பந்தமாய்ச் சதாசிவந் தோன்றுத லின், இங்ஙனங் கூறினரென்பாரு முளர். 'அறிவினில் அருளான் மன்னி அம்மையோடப்பனாகி' என்றபடி, சத்தியுஞ் சிவமுமாகவே இறைவன் உயிரிற்கலந்துள்ளானாதலின், 'இருப்பதானால்' என்றார். அடியார் நடுவுளிருப்பதால், இறையன்பு நிலைத்து உலகப்பற் றொழிந்து விரைவில் வீடெய்துதல் கூடுமாதலின், 'என கருத்து முடியும் வண்ணம்' என்றார். (௧)

முன்னின் றாண்டாய் எனைமுன்னம் யானும் அதுவே
முயல்வுற்றுப், பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட்
டொழிந்தேன் பெம்மானே, என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னா விடில்அடியார், உன்னின் றிவனார் என்
னாரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே.

உரை.—பொன்னம்பலத்திலே திருநடஞ் செய்வதை விரும்பி னவனே, தக்க பக்குவம் (வருதற்கு) முன்னேயே எதிர்ப்பட்டு என்முன் நின்று என்னை யாட்கொண்டாய். அடியேனும் தகுதி யடைதற்கே முயற்சி செய்து பின்பற்றிப் பணி செய்கின்றேன். அங்ஙனம் செய்வதில் பெருமானே நான் பின்னிடைந்து விட் டேன். என்னிடத்தில் நின்று திருவருள் மேற்படும்படியாக நிலைபெற்று வீடு புகுந்திடுக என்று கட்டளை செய்யாவிடின், அடியாரானோர் உன்பால் நின்று இவன் யாரென என்னைக் கேட்க மாட்டார்களோ?

குறிப்பு.—'முன்னின்று' என்றது அருட்குருவாய் எதிர்ப் பட்டு வந்ததைக் குறிக்கும். 'அதுவே முயல்வுற்று' என்பதற்கு நீ எதிர்ப்படுதலையே கருதி எனவும் பொருள்கொள்வர். பெம்மானே

யென்பதற்கு விருமபததக்கவனே எனவும் பொருள் கொள்ப. போந்திடு-அடியார நடுவுட் புகுந்திடு அருள் இவர்தல் - திருவருள் மேற்பட்டத தான் அதனுள் அடங்குதல. (உ)

உகந்தானே அன்புடைஅடிமைக் குருகாவுள்ளத் துணர் விலியேன், சகந்தான் அறிய முறையிட்டால் தக்கவாறன் றென்னாரோ, மகந்தான் செய்து வழிவந்தார் வாழவாழ்ந் தாய் அடியேற்கு, முகந்தான்தாரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுதலே.

உரை:—பொற்சபையில் ஆடுகின்ற எங்கள் முழுமுதற் பொருளே, அன்போடு கூடிய அடிமைத் தொண்டை விரும்பி யேற்றுக் கொண்டவனே, அன்பினால் உருகாத நெஞ்சுடைய அறிவிலியாகிய நான், உலகமறியும்படி கூவிக் குறையிரந்தால் அது தக்க நெறியல்லவென்று சொல்லமாட்டார்களா? வேள்வி இயற்றி நல்வழி நிற்பவா வாழும்படியாக எழுந்தருளி வீற்றிருப்பவனே, அடியேனுக்கு உன்னுடைய திருமுகத்தைத் தானும் காட்டாவிடில் இறந்து ஒழிவேன்.

குறிப்பு:—'சகந்தான்' என்பதில் 'தான்' என்பது தனியே முறையிடாது பலரும் அறிய முறையிடுதல். தமது அன்பின்மை யைப் புலப்படுத்து மெனபதைக் குறிக்கும் தன் அன்பின்மை யறியாது இறைவனருளாமையைத் தககவாறன்று என்பர் என்ற கருத்துங் கொள்ளப்படுவது. வேள்வி யியற்றினாலும் பயனகருதாது செந்நெறி நிற்பவருக்கு இறைவனருள் புரிவனென்பது கூறப்பட் டது. வீடருளாவிடினும் அருட்டிருமேனியையாவது காட்ட வேண்டுமென்பார் 'முகந்தான்' என்றார். (௩)

முழுமுத லேஐம் புலனுக்கும் மூவர்க்கும் என்தனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான்குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க இரங்குங் கொல்லோ என்(று)
அழுமது வேயன்றி மற்றென்செய்கேன் பொன்னம்பலத் தரைசே,-

உரை :—பொற்சபையிலாடுகின்ற மன்னனே, எல்லாவற்றிற்கும் ஆதியான பொருளே, ஐம்பொறி அறிவிறகும் மனம், புத்தி, அகங்காரமென்ற மூன்று அந்தக்கரணங்களுக்கும், புருடனாகிய எனக்கும் தோன்றி யியங்குவதற்குக காரணமான நிமித்தப் பொருளே, பழைமையான உன்னுடைய அடியார்கள திரண்ட பெருங் கூட்டத்திற்குப் பெரிது மருளபுரிவான எழுந்தருளு முதலவனே, யான் வீட்டகத்தே இருக்கத திருவருள கொடுப்பான் இரங்குவையோ என்றெண்ணி அழுதலே யன்றி வேறு யான் என்செய்ய முடியும்?

குறிப்பு —'மூவர்க்கும்' என்றது மும்மூர்த்தி யெனப் பொருள் கொள்வோரு முளர் 'வழிமுதல்' எனபது நிமித்த காரணத்தை உணர்த்துவது. 'அருள் தந்திருக்க' என்பதற்கு அருள கொடுக்கவெனப் பொருள் கொள்வாருமுளர். செய லற்று வருந்துவதே தன்னாலேயாகு மென்பார் 'அழுமதுவே' யென்றார். (௪)

அரைசே பொன்னம் பலத்தாடும் அமுதே என்றுன்
அருள்நோக்கி, இரைதேர் கொக்கொத் திரவுபகல் ஏசற்றிருந்
தே வேசற்றேன், கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி
கொடுத்துன் அடியேன்பால், பிரைசேர் பாலில்நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ.

உரை :—மன்னனே, பொற் சபையிற் கூத்தியற்றுகின்ற அருமருந்தே என்று வாழ்த்தி உன்னருளை எதிர்பார்த்து (காத்திருந்து அமைதியாகவுங் குறிப்பாகவும்) இரைதேர்ந்தெடுக்கின்ற கொக்கினைப்போல இரவும் பகலும் கவலையோடிருந்து இளைப்புற்றேன். முத்திக்கரையை யடைதற்குரிய அடியார்களுக்கு மகிழ்ச்சி மிகும்படியாக நீ காட்சி கொடுத்தருளி உனதடியேனாகிய என்னிடத்தில் பிரை ஊற்றிய பாலில் அடங்கியிருக்கும் நெய்போல வெளிப்படாது நீ என்னோடு உரையாடாதிருந்தால் என்னை உலகத்தார் வையமாட்டார்களா?

குறிப்பு :—இரை தேர் கொக்கானது தன் விருப்பத்திற்கேற்ற உணவாகிய மீன் வருமளவும் அசையாது காத்திருத்தல்போல, உடம்பு நீங்கி வீடு பெறுதலை விரும்பி அடிகள் இறையருளை எதிர் பார்த்திருந்தனர் என்பது விளங்கிறது. ஏசறுதல் - துக்கித்தல், கவலைப்படுதல். வேசறுதல் - வாடுதல், இளைத்தல். காட்சி - பேரறிவு. பாலில் நெய்யானது நன்கு விளங்காது நிற்கும். தயிரில் நெய்யானது நன்கு விளங்கும். பிரை சேர் பாலில் நெய்யானது விளங்கியும் விளங்காமலும் நிற்கும். பிரை - உறை. "கண்டும் கண்டிலேன்" என்றபடி ஞானம் பெற்றும் உடனே வீடு பெறாமை யின் 'பிரைசேர்பாலி னெய்போல' என்றார். (௫)

ஏசா நிற்பர் என்னை உனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும் பேணா நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோலக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும் எந்தாய் இனித்தான் இரங்காயே.

உரை நடை :—தேசா, ஈசா, பொன்னம்பலத்தாடு மெந்தாய் என்பவற்றை முதலிற் கொள்க.

உரை :—ஒளியுருவினனே, ஆண்டவனே, பொற்சபையிற் கூத்தியற்றுமெங்கள் அப்பனே! என்னை (மெய்யுணர்ந்தோர் அன் பிலனென்று) வைவர். மற்றவரெல்லாம் உனக்கடிய னென்று என்னைப் பேசுவார்கள். நானோ உனது திருவடிகளையே நாடி நிற்கின்றேன். மெய்யன்பர்கள் புடைசூழ, நீ வீற்றிருக்கும் உனது திவ்விய சமூகத்தை வழிபடுதற்கு இனியாயினும் இரங்கி யருள் செய்வாயாக.

குறிப்பு :—முற்பாட்டில் 'ஏசாறே' என்பதற்குப் பதிலாக இப்பாட்டின் தொடக்கத்தில் 'ஏசா நிற்பர்' என்றார். 'தேசா' என்பதில், தேசு - ஒளி. ஓலக்கம் - சபை, காட்சி. (௬)

இரங்கும் நமக்கம் பலக்கூத்தன் என்றென் றேமாந் திருப்பேனை, அருங்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வார்

இலியா டாவேனே, நெருங்கும் அடியார் களும்நீயு மநின்று
நிலாவி விளையாடும், மருங்கே சார்ந்து வரஎங்கள் வாழ்வே
வாவென் றருளாயே

உரை நடை :—'எங்கள் வாழ்வே' என்பதை முதலிற் கூறுக.

உரை :—எங்கள் வாழ்க்கை முதலே, நமது சிற்சபையில்
திருநடம்புரிவோன் இரங்கி வீடருள்வனென்று நினைந்து நினைந்து
அவாவுற்றிருப்பேனை இல்லாத புதிய ஏற்பாடு செய்து ஆட்கொண
டாய். இப்போது நான் உடையவனில்லாத மாட்டுக் கொப்பா
வேனோ? நீயும் நின்னை நெருங்கி வருமடியார்களும் நிலைத்து
விளங்கி மகிழ்கின்ற பக்கத்தின் சார்பாக நானும்வரும்படி இங்கே
வாவென்று கட்டளையிட் டருள்வாயாக.

குறிப்பு :—'ஏமாந்திருப்பே' னென்பதில், ஏமாந்து-ஆசைப்
படுதல், களிப்புறுதல். 'அருங்கற்பனை' யென்பதில் 'அரும்'
என்பது இன்மை குறித்தது. கற்பனை-ஏற்பாடு. ஆட்கொள்ளுந்
தகுதி யேற்படுமுன்னே ஆட்கொள்ளுதலே அருங்கற்பனையெனப்
பட்டது. ஆளவார்-பாதுகாப்பார், உடையவர். நிலாவி-விளங்கி.
மருங்கு - பக்கம். (எ)

அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார்
ஆர்இங்குப், பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே
பொன்னம பலக்கூத்தா, மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்துவேனை வாவென்றுன், தெருளார் கூட்டங் காட்டா
யேல் செத்தே போனாற் சிரியாரோ.

உரை நடை :—பொன்னம்பலக் கூத்தா, இங்குப் பொருளாய்
என்னைப் புகுந்தாண்ட பொன்னே.

உரை :—கனகசபையில் நடம்புரிபவனே, இவ்வுலகத்தே என்
னையுமொரு பொருளாக மதித்து என்னுள்ளத்திற் புகுந்து ஆட்
கொண்டருளிய பொன் போன்றவனே, நீ வீடருள் செய்யாது
போவாயானால் அடியேனைநோக்கிப் பயப்படாதே என்று சொல்
வார் யார்? மயக்கம்பொருந்திய மனத்தோடுன்னை விட்டுப் பிரிந்து

(பிரிவாற்றுமையால) துன்பப்படுகின்ற என்னை வாவென் றழைத் தூத தெளிவுடையராகிய உன்னடியார் கூட்டததிற்குக் காட்டா விடில, யானிறநதுபோனுல உலகினா நகையாட மாட்டாரா?

குறிப்பு:—பொருளா - பொருளாக. பொன்-மாறிலாத ஒளிக்கு உவமை ஆசிரியனுய் கடவுள் ஆட்கொண்டருளி மறைநதவுடன் அடிகள் நெஞ்சந திகிலடைநதமையால் 'மருளார் மனததோடு' என்ருர். தெருள் - தெளிவு, ஞானம். வீடருளப்பெருதிருநதால், பிறவி வருமென்ற அச்சம்பற்றி, 'செததேபோனுல் சிரியாரோ' வென்ருர். பிரிவாற்றுமையால் சாதல் கூடுமென்ற குறிப்புங காண்க. (அ)

சிரிப்பார களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை, விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே(று) இருநதுன் திருநாமம், தரிப்பார் பொன்னம பலத்தாடுந தலைவா என்பார் அவர் முன்னே, நரிப்பாய் நாயேன இருப பேனே நம்பி இனித்தான் நல்காயே.

உரை நடை —நம்பி என்பதை முதலில் கொள்க.

உரை:—அண்ணலே! நினது மெய்யன்பர்கள் உன் ஆனந் ததததை அநுபவிததுப் புறத்தே சிரிப்பாரகள், அகததே மகிழுவார் கள, கிட்டை கூடுவார்கள், கூடிக்கூடி உன் திருப்புகழை விரித துப் பேசுவார்கள், அதனை விரும்பிக் கேட்பாரகள், வியநது கொண்டாடுவாரகள், தனித்தனியே யிருந்து நின்றன் திருப் பெயரை நினைப்பார்கள், 'பொற்சபைக் கூத்தியற்றுகின்ற தலை வனே' யென்று அழைப்பார்கள். அத்தகையார் முன்பாக (உன் பேரானநதத்தை முற்றிலு மனுபவிக்கப் பெருது) நாய்போன்ற நான் இகழ்ச்சிக் குரியவனுய்ச சும்மா யிருப்பேனே? இனியாவது உன்னுனந்தத்தை முற்றிலுங் கொடுத்தருள்வாயாக.

குறிப்பு :—'தேனிப்பார்' என்பது, தியானிப்பா ரென்பதன் மருவு. 'வெவ்வேறிருந்து' என்பதைத் 'தேனிப்பார்' என்பத

ளோடுங் கூட்டலாம் 'தரிப்பார' என்பதில் தரிப்பு - நினைவு - ஞாபகம். அணிவார என்ற பொருள் சிறப்புடையதலல. நரிப்பு - இகழ்சசி. (௯)

நல்கா தொழியான் நமக்கென்றுன் நாமம் பிதற்றி நயன நீர், மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனததால நினைந்துருகிப, பலகா லுன்னைப பாவித்துப பரவிப பொன்னம் பலமென்றே, ஒல்கா நிற்கும உயிர்க்கிரங்கி அருளாய் என்னை உடையானே.

உரை நடை:—'என்னை உடையானே' என்பதை முதலிற் கொள்க.

உரை:—என்னை அடிமையாக உடைய முதல்வனே! நமக்குப் பேரருளளியாது போகானென்று நினைந்து உன்னுடைய திருப் பெயரைப் பலகாலுரைத்துக் கண்ணீர் பெருக வாய்குளறித் துதி செய்து வணங்கி, நெஞ்சத்தில் நினைந்து கசிந்து பலகாலு முன்னை அத்துவித பாவனை செய்து, பொற்சபை யென்றே துதித்து (அருள் கருதி)த் தளர்ந்து நிற்கும் உயிராகிய எனக்கு இரங்கித் திருவருள் புரிவாயாக.

குறிப்பு.—பிதற்றல் - பலகால் பேசுதல். "மல்கா" மல்க என்பதன் விரி. மல்கி என்றுங் கூறுப. மல்குதல் - பெருகுதல். குழறா - குழறி. வாய்தடுமாறுதல், அன்பின் மெய்ப்பாட்டிற்கு அறிகுறி. பாவித்து - கடவுள உயிரோடு இரண்டறக்கலந்துள்ள நிலையை எண்ணி. ஒல்கா - ஒல்கி, தளர்ந்து. (௧0)

திருச்சிற்றம்பலம்.

தில்லையில் அருளிய

கோயில் திருப்பதிகம்

அனுபோக இலக்கணம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

உரை நடை :—'தேறலின்றெளிவே' முதல் 'என்னுடையன்பே' முடிய முதலிற் கொள்க.

உரை —தேனின் தெளிவு போன்ற தூய இனிமையானவனே, சிவபெருமானே, திருப்பெருந்துறையில் வீற்றிருந்த மங்கலப் பொருளானவனே, முடிவற்ற பதவிகள் எல்லாவற்றையுங் கடந்த ஆனந்தமானவனே, என்னுடைய அன்புமயமானவனே, என்னைப் பகைத்து நிலைபெற்று அறிவு மயங்கச்செய்யும் கள்ள ஐம்புலன்களின் வாயில்களை அடைத்து ஞான அமுதமே சுரந்து நிற்கும்படியாக என்னுள்ளத்தின்கண்ணே தோன்றுகின்ற மேலான ஒளியே, நீ உண்மையாக விருக்கும் விதத்தை நான் காணும்படி வந்து அருள் செய்வாயாக.

குறிப்பு :—புலன் - பொறியறிவு; பொறி நுகருமியைபுடைய பொருளென்றுங் கூறுக. ஊறி நின்று - ஊறி நிற்க. உள்ளவா -

உள்ளவாறு. அது கடவுளின் சொரூப நிலையைக் குறிக்கும். காண - அறிந்தனுபவிக்க. பதவிகள் யாவும் தத்துவங்களுள் அமை தலின், தத்துவங்கடந்த தனி முதல்வனை 'பதங்கள் யாவையுங் கடந்த' என்றார் 'ஈறிலா' என்பதை 'இன்பமே' என்பதோடு முடித்து, எல்லையில்லாத இன்பமென்பது முண்டு. அதுவே வீட் டின்பமாம். அன்பே சிவமா மென்றபடி சிவஞானிகளுடைய அன்போடு அத்துவிதமாய்க் கலந்திருத்தலின் 'அன்பே' என்றார்.

அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே

உரை நடை —"முன்புமாய்" முதல் "அரைசே" முடிய முத லிற் கொள்க.

உரை.—எல்லாவற்றிற்கும் முன்னுமாய்ப் பின்னுமாய் அவை முழுவதுமாய வியாபித்துள்ள (இயல்பாகவே) பாச நீக்கமுடைய வனே, எல்லையில்லாத முதற்பொருளே, தெற்கே யுள்ள திருப் பெருந்துறையில் வீற்றிருப்பவனே, சிவபெருமானே, சிறப்புடைய சிவலோக மன்னனே, அன்பின் மிகுதியால், அடியேனுடைய உயி ரோடு உடம்பும், இன்ப மயமாயக் கசிந்துருகும்படியாக எனக்குக் கிடைத்தற்குத் தகுதியில்லாத இனிய திருவருளை நீ கொடுத்தாய்; யானிதற்காக உனக்குக் கொடுக்கக்கூடிய ஒரு பதிலுதவி யாது மில்லை.

குறிப்பு :—பரம் - தகுதி, பக்கம். "ஓர் கைம்மாறு இலன்" என மாற்றுக. சிவபுர மென்பது வீட்டுலகமென்ப. (உ)

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே.

உரை :—அன்பர்களுக்கு மன்னனே, அடியேனுடைய தந்தையே, உயிரோடு உடம்பும், மயிர்க்கால்தோறும நெகிழ்ந்துருகும்படி என்னுள்ளத்தே யெழுந்தருளி நிலைபெற்று அதனை உருகுவித்துப் பொய்ம்மையாகிய அறியாமையைத்தொலைத்தமெய்யொளியே, அலைமோதாது நிலைபெற்ற அமுதமயமாகிய தெள்ளிய (ஆனந்தக்) கடலே, திருப்பெருந்துறையில்வீற்றிருந்தருளுஞ் சிவபெருமானே, சொல்லையும, சுட்டறிவையுங் கடந்து சிவஞானத்தா லறியக்கூடிய பேரறிவே, யான் உன்னைப் புகழ்ந்துரைக்கும் விதத்தை நீ அறிவுறுத்துவாயாக.

குறிப்பு.—அன்பர்க்கரசனே என மாறுக. ஆவி கனிதல்—தற்போதங் கழலுதலாகும். ஆக்கை உருகுதல் மெய்ப்பாட்டினால். புரை - துவாரம். இஃது மயிர்க்காலினைக் குறிக்கும். பொய்யிருள் என்றெடுத்தது பொய் நிலையாமையையும், இருள் அறியாமையையுங் குறிக்கலாம். கடவுள் போக்குவரவற்ற பூரணனாதலின் ‘திரைபொரா’ என்றார். உரை யுணர்வு என்றவிடத்து, வாக்கின் சம்பந்தமான அறிவு, அதாவது சுட்டறிவு, என்று பொருள் கொள்ளுதலுமுண்டு. பாச ஞானத்தாலும பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே என்றபடி, இறைவனைப் பதிஞானத்தாலேதான், உணர்தல் கூடுமென்பார், ‘உரையுணர் விறந்து நின்றுணர்வதோர்’ என்றார். இறைவன் ஞான வடிவினனாதலின் ‘உணர்வே’ என்றார். உணர்வதை யுணர்த்தலரிது என்ற கருத்துப் பற்றி, ‘உரைக்கும்’ ஆறுணர்த்தே’ என்றார். (௩)

உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

உரை :—கலைஞானமுடைய பெரிய முனிவர்களும், வானோர்களும் பிற பெரியோர்களுமாகிய எல்லாருடைய அறிவினாலும் அறிதற்கரிய பரம்பொருளே, ஒப்பில்லாதவனே, உயிர்களெல்லாவற்றிற்கும் உயிரானவனே, என்னுடைய பிறவியைத் தொலைக்கும எங்கள் அமுதமே, உயிரை நெருங்கிப் பிணித்த ஆணவ இருளில் நீங்கித் தெளிவடைதற் கேதுவாகிய பரிசுத்தமான அருள் வானமே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, முக்குணங்களின் தொடர்பில்லாத பேரானந்தமே, உன்னையடைந்த எனக்கு இனிமேல் என்ன குறையிருக்கிறது? (ஒன்றுமில்லை என்றவாறு.)

குறிப்பு :—உணர்ந்த என்பதற்குப் பரஞானத்தால் உணர்ந்த என்று பொருள் கொண்டு, பரஞானத்தாலு முற்றிலும் அறிய முடியாத முதல்வனாகலின் 'உணர்ந்தமா முனிவர்' என்றார். இணங்கு - இணங்குதல், ஒப்பாதல். ஒழிந்தார் - பிறர். எனைப் பிறப்பறுக்கும் என்பதில் எனை என்பதற்கு எத்தனையோ என்று பொருள் கொள்ளுதலுமுண்டு. 'இருளில் தெளிந்த' என்பதற்கு இருளில் நீங்கி யறிந்த என்றும், இருளிடத்தே யறிந்த வென்றும் பொருள் கொள்ளுதலுண்டு. இருளென்று அறியப்படாத இருளாக விருத்தலின், ஆணவத்தை 'ஓரிருள்' என்றார். குணங்களோடுகூடிய இன்பம், தத்துவச சார்புடையதாய் அழியுந்தன்மையுடையதாகலின், இறையின்பத்தைக் 'குணங்கள் தாமில்லா இன்ப' மென்றார். பேரின்பமாதலின், 'என்ன குறை' யென்றார். (௬)

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே

உரை :—யாவராலும் ஒன்றையும் வேண்டாத பூரணப் பொருளே, குற்றமற்ற அருமருந்தே, முடிவில்லாத பிழம்பான சோதி மலையே, என் மனத்தின்கண்ணே மந்திரமாகவும், மந்திரத்தின் பொருளாகவும்விளங்கி நிலைபெற்ற அரசே, கரைகடந்த வெள்ளம்போல் உள்ளத்தே சென்று நிறைகின்ற இன்பமயமான திருப்பெருந்துறைப் பெருமானே, தலைவனே, நீ என்னுடைய உடலையே இடமாகக் கொண்டாய். இனி யானுன்னை யாது வேண்டி யாசிக்கக்கூடும்.

குறிப்பு :—கொழுஞ்சுடர்க்குன்று என்பது, அயனுமாலும் அடிமுடி யறியாது நின்ற அனற் பிழம்பு என்பாருமுளர். சிறை - கரை. மறை - கலைஞானமாகிய வேதமென்ப. உடலிடத்தே உயிரோடு அத்துவிதமாகக் கலந்தபின் பூரண வின்பம் கிடைத்தலின், 'என்னிரக்கேனே' என்றார். (ரு)

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே

உரை:—உன்னுடைய திருவருளை வேண்டி வேண்டி என துள்ளம் உருகுங் காலத்தே அங்கே தோன்றுகின்ற ஒளியே, விண்ணவர்களுடைய சென்னிமீது விளங்குகின்ற சிவந்த தாமரை போன்ற திருவடியை உடையவனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, வரிசையாயுள்ள ஐம்பூதங்களாகிய வெளி, வளி, ஒளி, நீர், நிலம் என்பவற்றோடு கலந்து அவையாய், அவையல்லாதனவாய, அவ்விடத்தே மறைந்த அருளுருவுடையானே, இப்பொழுது உன்னைக் கண்ணாரக்கண்டு உள்ளத்திற் கொண்டு மகிழ்ந்தேன்.

குறிப்பு:—சோதி யென்றது பேரறிவை. நிரந்த - வரிசையான. ஐம்பூதத்திற்கும் ஆதாரமாகிய கலைகளை உருவாகக் கொண்டவனாதலாலும், அவ்வுருவம் எளிதில் புலனாகாமையாலும், 'ஆங்கே கரந்ததோருருவே' என்றார். அருட்சார்புபற்றிய திருவுருவாதலின் ஓருருவே என்றார். 'கண்டுகொண்டு' என்பதில, 'கொண்டு' என்பதைத் துணைவினையாகக் கொள்ளுதலுமுண்டு. (௬)

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

உரை:—இக்காலத்தே எனக்குத் திருவருள் தந்து அறியாமையை நீக்கி மனத்தின் கண்ணே உதிக்கின்ற கதிரவனைப் போலத் தோன்றி நின்ற உனது மெய்யியல்பைச் சுட்டியறியாது அறிந்தேன். உன்னையன்றி வேறொன்றும் இல்லையாகும்படி எல்லாவற்றிலுங் கலந்து கலந்து நுட்பமாய் நுணுகி நுணுகி எங்கும் ஒரு தன்மையாய் வியாபகமான ஒரு பொருளாகிய திருப்பெருந்துறைப்

பெருமானே, காணப்படுகின்ற ஒரு பொருளும் நீயன்று. உன்னை யல்லாமல் ஒரு பொருளுந் தொழிற்படுவதில்லை. உன்னை யாரறிய வல்லவர்? ஒருவருமில்லை யென்றவாறு.

குறிப்பு :—உயிரினது அறிவின் கண்ணே விளங்குகின்ற இறைவனது ஞான சக்தியை 'ஞாயிறு' என்றார். நினைப்பு மறப்பு மற்ற அதீத நிலையில் அடிகள் நின்றமையால் 'நினைப்பற நினைந் தேன்' என்றார். ஒவ்வொரு பொருளிலும இறைவன் நுட்பமாய் வியாபித்திருத்தலின் 'சென்று சென்று அணுவாய்' என்றார். 'அணு' என்றது ஒவ்வொரு பொருளுக்கும் அடிப்படையாய் நிற்கும் நிலையே. எல்லாப் பொருளையும உள்ளடக்கிய இறைவனது வியா பகம், நுட்பத்தினும நுட்பமாதலின், 'தேய்ந்து தேய்ந்தொன்றாம்' என்றார். இறைவன் இயக்கினாலன்றி ஒரு பொருளும் தோற்றம், நிலை, இறுதி யென்கின்ற தொழிற்படாமையின் 'அன்றி யொன் றில்லை' என்றார். தொழிற்படு முயிர்களுக்கு அப்பாற் பட்டவனாத லின் 'யாருன்னை யறிய கிற்பார்' என்றார். (எ)

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வாருறு பூண்முலைச் சியைபங்கா
வருகஎன் றருள்புரி யாயே.

பாரா பதம் அண்டம அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதி.

உரை :—பூ மண்டலமும், அதற்கு மேலுள்ள பதவியாகிய புவ னங்களுமாகிய உலகத் தொகுதிகள் முழுவதிலுமுள்ள எல்லாப் பொருள்களுமாய்த் தோன்றி எங்கும் வியாபித்த ஒப்பற்ற பேரறி வின் விரிவே, நீரிலடங்கியுள்ள நெருப்புப் போன்றவனே, மனத் தால் எண்ண முயன்றால் எண்ணுதற்கரிய குற்றமற்றவனே, உன் னுடைய திருவருட்பெருக்கின் செம்மைபொருந்திய (அன்ப

ருடைய) உள்ளத்தின்கண்ணே தோன்றுகின்ற தேன்போன்ற இனிமையனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் பெருமானே, எனக்குப் பேரின்பதத்தை விளக்கின்ற வொளியே, எனக்கு யாருறவு? யாரயலார்? (உறவினருமில்லை, அயலாருமில்லை என்றவாறு)

குறிப்பு :—பதம் - பதவி. பாரினையும், பதவியையும் உள்ளடக்கிய அண்ட மென்பாருமுளர். எல்லாம் முளைப்பதற்குக் காரணமாயிருத்தலின் 'முளைத்து' என்றார். நீரில் சூடு பரவியிருப்பதுபோல இறைவனது வியாபகமிருத்தலின 'நீருறு தீயே' என்றார். நீருந் தீயும்போலச சத்தியுஞ் சிவமுமாய் இறைவனிற்பதால் அங்ஙனம் கூறினு ரென்றலுமுண்டு. (அ)

சோதியாய்த் தோன்றும உருவமே அருவாம
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம
அறுக்கும ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோா வகையெனக் கருளாய
வந்துநின் இணையடி தந்தே.

உரை :—ஒளியாய் விளங்குகின்ற திருமேனி உடையவனே, தோன்றாத ஒரு பொருளானவனே, சொல்லினாற் கூறவொண்ணாத பெருமையுடைய எப்பொருட்கும் முதலிடை முடிவானவனே, பாசக் கட்டினை யொழிக்கும் பேரின்பப்பெருங்கடலே, குற்றமற்ற நலம் பொருந்திய திருவருட் குன்றே, திருப்பெருந்துறைப் பெருமானே, நீ குருவாய்வந்து உன் திருவடியிரண்டையும் எனக்கருளிய பின்னா நீ என்னைக் கைவிட்டுப் போவதற்குரிய முறை யாதென்று சொல்லி யருளவாயாக.

குறிப்பு :—சுத்த மாயையிற் கொள்ளுந் திருவருட் சத்தி வடிவம் ஒளி மயமாதலின் "சோதியாய்த தோன்றும்" என்றார். எல்லா மொழிகளும் இலயத தத்துவததிற் கதிபதி கடவுளே

யாதலின் 'அருவாம் ஒருவனே' என்றார். 'சொல்லுதற்கரிய' என்பதை 'ஒருவனே' என்பதோடும், 'ஆதியே' என்பதோடும் சேர்க்கலாம். கைம்மாறு கருதாத என்பார 'தீதிலாத' என்றார். 'எனக்கருளாய்' என்பதை 'இணையடிதந்தே'என்பதோடு மாத்திரம் இணைத்து, உன் திருவடியைக்கொடுதது எனக்கருள் செய்ய வேண்டுமெனப் பொருள் கொள்ளுதலுமுண்டு. (௯)

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச
சங்கரா ஆர்கொலோ சதுரா
அந்தமொன் றில்லா ஆனநதம பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங கொண்டாய்
யான்இதற் கிலனஓர் கைம மாறே

உரை:—எனதுள்ளததையே திருககோயிலாகக்கொண்டு வீற் றிருநதருளிய எமது தலைவனே, திருப்பெருந துறைப் பெருமானே, உன்னை எனக்குக் கொடுத்தாய், அதற்குப் பதிலாக என்னை நீ யேற்றுக்கொண்டாய், சங்கரனே! நம்மிருவரில் யார் திறமை யுடையவர்! முடிவில்லாத பேரின்பத்தை நான் பெற்றேன்; நீ என்னிடததில் பெற்றுக்கொண்டது யாது? (ஒன்றுமில்லை.) அப்பனே, ஆண்டவனே, எனதுடலைக கோயிலாகக் கொண்ட வனே, இந்த அருட்செய்கைக்கு உனக்கு அளிததற்குரிய பதிலுப காரம் எதுவுமில்லாதேன்.

குறிப்பு —சஙகரன் - சுகஙகொடுப்பவன். உடலின்பாலறிவு சென்றபோதும பேரின்பமே தோன்றுதலின் 'உடலிடங் கொண்டா' யென்றார். கடவுளைப் பார்ககிலுந தன்னைச சமர்த்த னைக் கூறியது இகழ்சசிபோற் புகழ்சசி. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

செத்திலாப் பத்து

சிவானந்தம் அளவறுக் கொணுமை

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொய்யனேன் அகம்நெகப் புகுந்(து) அமுதூறும்
புதுமலர்க்கழ லிணையடி பிரிந்தும்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்தனே அயன்மாற் கறியொண்ணுச்
செய்யமே னியனே செயவகை அறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.

உரை நடை —ஐயனே, அரசே.....செய்ய மேனியனே, திருப்பெருந்துறை மேவிய சிவனே, பொய்யனேன்......கருத்தினை யிழந்தேன், செயவகை யறியேன்.

உரை:—தலைவனே, மன்னனே, பெருங்கருணைக் கடலே, அப்பனே, பிரமனுந் திருமாலுந் தேடிக் காணமுடியாத சிவந்த திருமேனியை உடையவனே, திருப்பெருந்துறையில் விரும்பி யெழுந்தருளிய சிவபெருமானே, பொய்யனாகிய என்னுடைய உள்ளம் நெகிழும்படியாக அகத்துட்புகுந்த, ஞானவமுதம் சுரத்தற் கேதுவாகிய அன்றலர்ந்த தாமரையை ஒத்தனவாய் வீரககழல்க ளணிந்துள்ள இரண்டு திருவடிகளையும் யான் பிரிய நேர்ந்தும், வஞ்சகமுடைய யான் இதுவரை சாகாமலிருந்தேன். ஐயோ! கண் திறந்திருந்தும் மனத்தில் விரும்பிய எண்ணத்தை நிறைவேற்றுது

கை விட்டேன். இனி அதனை அடைவதற்குச செயயவேண்டிய முறையையும் அறியமாட்டேன்.

குறிப்பு —பொய்யனேன்-நிலையாத வற்றிற் பற்றுடையேன். 'புகுந்து அமுதூறு' மென்பது 'புகுந்தமுதூறு' மென்றாயிற்று. புகுந்து அமுதூறுவிக்கு மெக் றுங்கொள்ளலாம. பிரிவாற்றாமை யால் இறவாமையின் 'கையனேன்' என்றார். கையனேன் - வஞ்சக முடையேன், சிறுமையேன். இன்னும் - பிரிந்து நாளாகியும. விழித்திருந்தும்-கணணாலே இறைவனைக காணப் பெற்றிருந்தும் உள்ளக் கருதது - உடனே வீடடையும் எண்ணம். (௧)

புற்றுமாய் மரமாயப் புனல்காலே
உண்டியாய் அண்ட வாணருமபிறரும
வற்றி யாரும்நின் மலரடி காணு
மனன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றிணய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றிலேன் இன்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே

உரை நடை.—'திருப்பெருந்துறை மேவிய சிவனே' என் பதை முதலிற் கொள்க. அண்டவாணரும், பிறரும், யாரும் புற்று மாய ...காணு.

உரை —திருப்பெருந்துறையில் வீற்றிருநதருளிய சிவபெரு மானே, விண்ணுலகில் வாழ்வாரும், ஏனையோருமாகிய (தவத்தி னர்) எல்லாரும் தவமியற்றும் நிலையில் தம்மேல் புற்றுவளரப் பெற்று, புற்றாகியும, மரம் வளரப்பெற்று மரவடிவாகியும், நீரை யும், காற்றையுமே உணவாகப் பெற்றும், உடல் உலர்ந்து போயும், உனது திருவடியைக் காணப்பெறாது நிற்குநதன்மைத் தான அரசனே! அடியேனை ஒரு சொல்லிலகப்படுத்தி யாட்கொண் டாய். அப்படிப்பட்ட உன் பொருட்டு நெஞ்சந துடிக்கமாட்டேன்.

உள்ளம் மிகுதியாக உருகமாட்டேன். பிரிவாற்றாமையா லிறக்க மாட்டேன். தானே இறந்து விழாத உடம்பை வெட்டி யொழிக்க மாட்டேன். இன்னமும் முலகில் அலைந்து திரிகின்றேன் இது எவ்வளவு இழிவு !

குறிப்பு :—'மரமாய்' என்பதற்கு மரமபோல் அசைவற்று நின்று என்று பொருள் கொள்வாருமுளர். விண்ணுலகினர், மண்ணுலகில் வந்து இறைவனைக் காணத் தவம் செய்தமை புரா ணங்களிற் காண்க. 'ஓர் வார்த்தை' என்றது பிரணவம. பரிகி லேன் - அன்பு செய்யேன் என்றலுமுண்டு. (உ)

புலையனேனையும் பொருளென நினைந்துன்
அருள் புரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னால்நடந் தேன்விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேஅலை நீர்விட முண்ட
நித்த னேஅடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

உரை நடை :—விடைப் பாகா, சங்கரா .....சிலையனே, திருப் பெருந்துறை மேவிய சிவனே, புலையனேன்... ..நடந்தேன், எனைச் செத்திடப்பணியாய்.

உரை :—காளை வாகனமுடையானே, சங்கரனே, அளவற்ற விண்ணவர்களுக் கெல்லா மாதாரமானவனே, கடலிலெழுந்த நஞ்சினை அமுது செய்த அழியாத்தன்மையனே, தம்மையடையாத அசுரர்களது திரிபுரத்தை யெரித்த மலைவில்லானே, புலையனாகிய என்னையும் ஒரு பொருளாக மதித்து உன்னுடைய திருவருளை விரும்பி அளித்தலும், செருக்குக்கொண்டு மகிழ்ந்து தலையாலே நடந்தேன். என்னை விரைவில் இறக்கும்படி செய்யவேண்டும்.

குறிப்பு :—தலையினால் நடந்தேன் - முறைக்கு மாறாக ஒழுகி னேன். நிலை - ஆதாரம். சிலை - வில். 'செத்திட' என்பதில் இட

என்னுந் துணைவினை விரைவைக் குறித்து நின்றது. பணித்தல் - செய்வித்தல், கட்டளையிடுதல் (௩)

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனு மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே

உரை நடை —கடையிரண்டடியும் முதலிற் கொள்க.

உரை :—அழகிய திருப்பராய்த்துறைத் திருப்பதியுடையவனே, சிவலோகனே, திருப்பெருந்துறைப் பெருமானே, பிரமனுந் திருமாலும் உன்பாற் பேரன்புடையவர்களாகி உன்னருளைப் பெறுதற்குச் செயற்கரிய தவத்தைச் செய்கின்றார்கள். இன்னும் நெருப்பிலிட்ட மெழுகுபோல உருகும் உள்ளத்தவராய்த் (தவத்தினால் தசை நீங்கப்பெற்று) எலும்பு வடிவராய் உன்னைத் தியானிக்கின்றவர்கள் எத்தனையோ பலர் உன்னருளிற் குரியவராய் நிற்கவும், இவ்வுலகின்கண் என்னை நீ எதற்காக ஆட்கொண்டாய்? என்னுடைய மனமானது, வலிய பராய்மரத்தினுடைய விறகினைப் போல்வது. என்னுடைய கண் மரத்தினாலானது. என்னுடைய செவி இரும்பைப் பார்க்கினும் வலியது.

குறிப்பு :— எனை - எத்துணையோ. பராய் - கடினமான ஒரு மரம். முருடு - கட்டை, விறகு. கடினமாய்க் காய்ந்த கட்டையில் நீர் வறண்டு போயிருக்குமாதலின், உருக்கமில்லாத நெஞ்சிற்கு அது உவமையாயிற்று. கண்ணிற்கு மரமுவமையானதும் அக்கருத்துப்பற்றியே. இரும்பு துளைக்கப்படுதல் அருமை போலச் செவியும் நல்லுபதேசத்தால் தோட்கப்படாததென்பார், "செவி இரும்பினும்

வலிது" என்றார். இறைவனது உபதேச மொழி செவியில் தக்க வாறு புகுந்திருந்தால், தான் அவனைப் பிரிந்திருக்க இடமில்லை யென்பது கருத்து. தென் - அழகிய. தெற்கினகண் உள்ள. (௬)

ஆட்டுத் தேவர்தம் விதியொழிந் தன்பால்
ஐயனே என்றுன் அருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேஉனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காயமா யத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப் பெருந்துறை மேவிய சிவனே.

உரை நடை :—சேட்டைத் தேவர் தந்தேவர் பிரானே, திருப் பெருந்துறை மேவிய சிவனே, ஐயனே, என்பதை முதலிற் கொள்க.

உரை :—எல்லாவற்றையுந் தொழிற்படுத்துங் காரணேசுரர் களுக்குத் தலைவரான பெருமானே, திருப்பெருந்துறையில் வீற் றிருந்தருளிய பெருமானே, தலைவனே, வினைக்கேற்ப என்னை ஆட்டுவிக்கின்ற தேவர்களது கட்டளையின் நீங்கி மெய்யன்போடு, உனது திருவருள் வழியின்கண்ணே எப்போது இருக்கப்பெறு வேன். உலகிலுள்ள தேவர்போன்ற பெருமையுடையாரும் தேடி அறிதற்கரிய பரம்பொருளே, முதல்வனே, ஒளியானே, உன்னைப் பிரியாமைக் கேதுவாகிய திருவருளை எனக்குக் காண்பித்து, கழ லணிந்த உனது திருவடிகளிரண்டையும் காண்பித்தருளி, இந்த உடம்பாகிய சூழ்ச்சி வலையை ஒழித்தருள்க.

குறிப்பு :—'ஆட்டுத்தேவர்' என்பதற்கு விளையாட்டுத் தேவர், பொய்த் தேவர் என்ற பொருளுமுண்டு. நாட்டுத் தேவரென்பார், நிலத்தேவர், அதாவது வேதியர்கள் என்பதுமுண்டு. 'நாடு' என்ப தற்கு உலகமெனப் பொருள் கொண்டு, 'நாட்டுத் தேவர்' என்ப

தற்குப புவனுதிபதிகளும என்றும பொருள கொள்ளுதலுண்டு. காயமாயம - காயமாகிய மாயம மாயம் - தந்திரம், சூழ்ச்சி, சிலை யாத தோற்றம 'சேட்டை' என்பதை, சேடு+ஐ எனப் பிரித்துப் பெருமையும் தலைமையுமுடைய எனப் பொருள கோடலுமுண்டு.

அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடங் காணேன
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

உரை நடை :—'சிறைக்கணே...சிவனே' என்பதை முதலிற் கொள்க.

உரை :—வரம்புவரை நீர் நிறைந்துலவும் வயல்களாற் சூழப் பெற்ற திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருளிய பெருமானே, எனது உடம்பானது துண்டு துண்டாய்ப் போம்படி, அதனை வெட்ட மாட்டேன். (எரிகின்ற) தீயிற் புகுந்து (இறக்குமாறு) அதன்கண் தங்கமாட்டேன். உனது திருவருட் செயல் முறையையும் அறியமாட்டேன். உடம்பையும் தாங்கமாட்டாது வருந்துகிறேன். புகலிடம் ஒன்றும அறியேன். காக்க, காக்க என்னு மடியார்க்கு உரிமையாக உள்ள காளையூர்தியானே! சாகமாட்டாத யான், உன்னைப் பிரிந்தும் நன்றாக இருப்பதற்கு என்ன செயயக் கூடும்? இன்னதைச செய்க வென்று நீ கட்டளையிட்டருள்வாயாக.

குறிப்பு :—துணி - துண்டு. ஆர்கிலேன் - தங்கும் ஆற்றல் இல்லாதேன் 'போற்றி' என்பதற்கு வணக்கமெனப் பொருள் கொள்ளுதலுமுண்டு. உன்னைப்பிரிந்து இனிதிருக்கமுடியாதென்ற கருத்துப்பற்றி, 'என் செய்கேன்' என்றார். அப்படி இருத்தல் கூடுமாயின், அதுவும் நீதான் உணர்த்த வேண்டுமென்றார். (சு)

மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய ளுகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

உரை நடை :—மாயனே...அமுதே ...பிறைகுலாஞ்... னேயோ, திருப்பெரு.....சிவனே, சேயனுகி நின்றலறுவதழகோ, நாயினேன்...காட்டாய், எனக் கொள்க.

உரை :— சூழ்ச்சியனே, அலைகள் மடங்கி வீழ்கின்ற கடலின் எழுந்த நஞ்சை அருந்தின தேவனே, நீல மணி போன்ற நஞ்சமைந்த திருக்கழுத்துடையானே, எங்கள் அருமருந்தே, இளஞ்சந்திரன் வாழுகின்ற சடையொடு தலைக்கோல மணிந்தவனே, ஓலம், திருப்பெருந்துறை வீற்றிருந்த சிவபெருமானே, உனக்குத் தூரத்தேனுகி நின்று உன்னடியானுகிய நான் கதறுவது பொருத்தமாகுமோ? நாயபோன்ற யான் உன்னைத் தக்கமுறையில் எண்ணவு மாட்டேனுய் சிவனே உனக்கு வணக்கமென்று உன் திருவடியிற் பணிதல் செய்யமாட்டாத பேய்த்தன்மையேனுகிலும், எனக்கு உனது மாண்பமைந்த ஞானநெறியைக் காட்டியருள்வாய்.

குறிப்பு —அருள் புரிந்தபின், உடன் அழைத்துச்செல்லாது, உலகிலே தம்மைவிட்டுச் சென்ற தந்திரத்தை நினைந்து, அடிகள் 'மாயனே' என்றார். அடைக்கலம் புகுந்தாரை அபாயநிலையிற் காப்பாற்றுவானென்பார், 'மணிகண்டத் தெம்மமுதே', 'பிறைகுலாஞ் சடைப் பிஞ்ஞகனேயோ' என்றனர். திருவைந்தெழுத்து, வாசனுமல மொழிக்குங் கருவி யென்பது, சிவஞான போத ஒன்பதாஞ் சூத்திரத்தாலினிது விளங்கும். உலகப்பற்றுடைமையாற் றம்மை அடிகள் 'பேயன்' என்றார். (எ)

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடியனேன் இடர்ப் படுவதும் இனிதோ
சீத வாரபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

உரை நடை :—'சீத...சிவனே' என்பதை முதலிற் கொள்க. அடுத்தபடி, 'யாது செய்வது...இனிதோ' எனபதற்குப் பொருள் கூறுக. பின், பிற அடிகட்குப் பொருள் கூறுக.

உரை :—குளிர்ச்சியுள்ள, நிறை நீர் பொருந்திய வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையிற் றங்கியருளிய சிவபெருமானே, அமுதமே, உன்னைப் பிரிந்து, என்ன செய்வது என்றெண்ணி வருந்தி யிருந்தேன். உன்னடியானாகிய யான் துயரப்படுவது நல்லதாகுமா? மலரிலுறைகின்ற பிரமனும், அலைகள் மோதுகின்ற திருப்பாற் கடலிற் பள்ளிகொண்ட பெருமானும், இந்திரன் முதலிய தேவர்களும், உன் அருள்நாடி நிற்பினும், (என்னை யாட்கொள்ளவந்த நீ) எனது குற்றங்களை யொழித்து, வீரக்கழல் ஒலிக்கின்ற உனது திருவடிகளைக் காட்டியருளி, காட்டிய குறிப்பில் நிற்கவென்று பணித்து, உனது அன்பரோடு என்னைச் சேர்ப்பாயாக.

குறிப்பு :—கோது-குற்றம். மாட்டி-மாள்வித்து, தொலைத்து. 'குறிக்கொள்க' என்பதற்கு, வீட்டையும் நோக்கத்தைக் கைக்கொள்ளுக வெனப் பொருளுரைத்தலு முண்டு. மருந்து-அமுதம். ஆர் புனல்-நிறைந்த நீர். "வார்புனல்" எனக்கொண்டு, பெரும் புனலென்றலு முண்டு. (அ)

ஞாலம் இந்திரன் நான்முகன் வானோர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்

காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

உரை நடை:—சேலும் நீலமும். சிவனே, காலன் ஆருயிர் ... ...கையாய், என்னுமடிகளை முதலிற் கொள்க.

உரை.—சேல்மீன்களும், நீலநிறமுடைய குவளைப் பூக்களும் பொருந்திய வயல்கள் சூழ்ந்துள்ள திருப்பெருந்துறையிற் றங்கி யருளிய சிவபெருமானே, யமனது அரிய உயிரை வவ்விய அழகிய திருவடி யுடையானே, கங்கையைத் தலையிற் றரித்தவனே, நெருப்புஅமர்ந்த திருக்கரத்தானே! உலகத்துயர்ந்தோர், இந்திரன், பிரமன், விண்ணவர் என்னு மிவரெல்லாம் உனதருளைப் பெறாது நிற்கவும், விரும்பி என்னை யாட்கொண்டாய் திருமால் காணப் பெறாது ஓலமிட்டுச் சரண்புகும் அப்பெற்றித்தாய திருவடிகளாகிய மலங் கட்கே மரத்தாற் செய்தாற்போன்ற கண்ணையுடைய அடியேனையும் வந்து சேரும்படி அருள் புரிவாயாக. (க)

அளித்து வந்தெனக் காவஎன் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வானவாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே.

உரை நடை :—திருப்பெரு . . சிவனே, வளைக்கை . . . . . பாகா, கயிலை கடலே, அளித்து . . . . உருகேன், களிப்பெலா மிகக் கலங்கிடுகின்றேன்

உரை :—திருப்பெருந்துறையிற் றங்கியருளிய பெருமானே (பாஞ்சசன்னிய மென்னுஞ்) சங்கணிந்த கைகையுடைய திருமாலொடு, பூமேலுறையும் அயனும் அறியமுடியாத தேவனே, மலைமகளை யொருபாகத் துடையவனே, கயிலைமலைக்கண் வீற்றிருந்த கருணைக்கடலே, நீ இரக்கங்கொண்டு குருவா யெழுந்தருளிவந்து, எனக்குக் கருணைக் குறிப்புக்காட்டிப் பாசப்பயமொழித்து நல்கிய உனது பெரிய திருவருட் கடலிலே மூழ்கி, உள்ளம் நிரம்பப் பெற்று, அதனை உண்டும் இன்னும் அன்பால் உருகமாட்டேன். செருக்கே மிகுதிப்படுதலால், நான் (வீடு கிடையாதோ என்ற அச்சத்தால்) கலக்கமுறுகின்றேன்

குறிப்பு :—அளித்து - இரங்கி ஆவ - இரக்கக்குறிப்பு. தேக்குதல் - நிறைதல். களிப்பு - செருக்கு. களிப்பெலாம் இக, எனப் பிரித்து மகிழ்ச்சி யெல்லாம் ஒழிந்துபோக என்று பொருள் கோடலு முண்டு. மலையிற் கடல்மேவும் நயம் இறுதியடியிற் காண்க. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

அடைக்கலப் பத்து

பக்குவ நிண்ணயம்

கலவைப் பாட்டு

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய் உன் அடைக்கலமே.

உரை நடை :—'உடையாய்' என்பதை முதலிற் கொள்க.

உரை :—என்னுடைய முதல்வனே, செழுமையாகிய தாமரை மலரின் செறிவுபோன்ற உன்னுடைய செவ்விய திருவடிகள் சேரப் பெற்றுத் தகுதியாயமைந்த, கனிந்த உள்ளத்தை உடைய அடியார்கள் உன்னோடு உடனே வீட்டிற்குச் சென்றனர். பாவியேனாகிய யான், புழுக்கள் தமக்கு இடமாகக்கொண்ட இழிவான உடம்பை யுடைய தீமை மிக்க கலைஞானமில்லாத அழுக்கு மனத்தேனாகிய அடியேன், உனக்கு அடைக்கலம்.

குறிப்பு :—அமைந்த - அமைதி பெற்ற. பழுத்த - அன்பினாற் கனிந்த. கண் - இடம். 'புழுக்கண்உடை' என்பதைப் புழுக்கள் நுடையெனப் பிரித்துப் புழுக்கள் நெளிந்த என்று பொருள் கொள்ளுதலுமுண்டு. குரம்பை - கூடு, உடல். அழுக்கு - வாசனா மலம். (க)

வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினால்
பொறுப்பவனே அராப்பூண் பவனேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவனேநின் திருவரு ளால்என் பிறவியைவேர்
அறுப்பவனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை :—வெறுக்கத் தக்கனவே செய்யும் என்னுடைய இழி வினை, உன்னுடைய பெருந்தன்மையினாலே பொறுத்துக் கொள்ப வனே, பாம்பினை ஆபரணமாக அணிந்தவனே, மிகுந்துவரும் கங்கைவெள்ளத்தைச் சடையின்கண் அடக்குபவனே, உன்னு டைய திருவருளினாலே எனது பிறப்பின் மூலத்தைக் களைபவனே, முதல்வனே, அடியேன் உனக்கு அடைக்கலம்.

குறிப்பு :—'பொங்குகங்கை' என்றதனால் கங்கை வெள்ளம் எனப்பட்டது. 'செறிப்பவனே' என்றது 'செறுப்பவனே' என் றாயிற்று. (உ)

பெரும்பெருமான் என்பிறவியை வேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான சதுரப்பெரு மான்என் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோன்நெடு மாலறி யாமல்நின்ற
அரும்பெருமான் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை :—எல்லாத் தேவர்களினும் பெரியவனான தலைவனே, என் பிறப்பினை அடியோடு தொலைத்து, மிகுந்த பித்தினைத்தருந் தலைவனே, திறமையுடைய பெருமானே, என்னுள்ளத்தின் உள்ளீடாகத் தோன்றுகின்ற பெருமானே, பிரமனும் மாலும் தேடியுந் தெரியாதபடி நின்ற கிடைத்தற்கரிய பரம்பொருளான வனே, முதல்வனே, அடியேன் உனக்கு அடைக்கலம்.

குறிப்பு :—பிச்சு-பித்து, மயக்கம், பேரன்பு. சதுர்-திறமை; அதற்கு நான்கெனப் பொருள்கொண்டு, சரியை, கிரியை, யோகம் ஞானம் நான்கினையும் வகுத்த பெருமான் எனக் கொள்ளுதலு முண்டு. (௩)

பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்தில்நின் கழற்
புணைகொண், டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான்
இடர்க்கடல்வாய்ச், சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவெறிய, அழிகின்றனன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே.

உரை:—முதல்வனே! துன்பமாகிய மேகம் பொழிகின்ற வெள்ளத்திலே உன்னுடைய திருவடியாகிய தெப்பத்தைத் துணையாகக்கொண்டு உன்னோடு இறங்கிவந்த அன்பர்கள் மேலுலகத்திற்கு ஏறிவிட்டார்கள். யானோவெனில், துன்பக்கடற் சுழியிலகப்பட்டு, பெண்டிராகிய அலைகளமோத, ஆசையாகிய சுறாமீன் தாக்க நசித்துப் போகின்றேன். அடியேன் உனக்கடைக்கலம.

குறிப்பு —இழிகின்ற - இறங்குகின்ற இச் செய்யுளில் அது இறந்த காலப்பொருளில் வந்தது. வான் - சிதாகாசம 'இடா' என்பதை 'சுழி' என்பதனோடு சேர்த்துப் பொருள் கொள்ளுதலுமுண்டு. இடராயிருப்பது உடம்பு (௫)

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந் திங்(கு),
இருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்,
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெரு
மான், அருள்புரி யாய உடையாய் அடியேன்உன் அடைக்
கலமே

உரை நடை —'மைத்தடங்கண் . . பெருமான், உடையாய' என்பதை முதலிற் கொள்க.

உரை —மைதீட்டிய விசாலமாகிய கண்ணின்கண் மருட்கையுடைய மானின் பார்வைபோன்ற நோக்கினையுடைய உமையம்மையை ஒரு பாகமுடையவனே, வானோர்கள் தலைவனே, எனது முதல்வனே, சுருளுதலைச் செய்யுங் குழலினையுடைய பெண்களது சூழ்ச்சியிலகப்பட்டு உன் சிறப்பினை மறந்து இவ்வுலகிலே அறியாமையை வளர்க்கின்ற உடம்பிலே கிடந்து இளைத்தனன். திருவருள் புரிவாயாக. அடியேனுனக்கே அடைக்கலம்.

குறிப்பு —'சுருள்' என்பது ஐவகை மயிர்முடியினொன்று. அவைகளாவன: முடி, கொண்டை, பணிச்சை, சொருக்கு, சுருள். கூழை - தலைமயிர். சூழல் - சூழ்ச்சி, தந்திரம், இருள் - நிலை இல்லாதனவற்றை நிலையென்றுணரும் புல்லறிவு. மாயாகாரியமாகிய உடம்பானது அப்படிப்பட்ட திரிபுணர்ச்சியை விளைக்கும்.

'மைத்தடங்கண்' என்பதைக் 'கூழையர்' என்பதனோடுங் கூட்டலாம். வெருள் - மருட்கை, அச்சம். புரி - செய் (௬)

மாழைமைப் பாவிய கண்ணியா வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வலவினையேன்
ஆழியப் பாவுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

உரை நடை :—'ஆழியப்பாவுடையாய' என்பதை முதலில் கொள்க.

உரை :—கருணைக்கடலாகிய அப்பனே, முதல்வனே, மாம்பிஞ்சின் பிளவைப் போன்ற மை பரவிய கண்களை உடைய பெண்கள்பால், வலிய மத்தை இட்டபோது, உடைவுற்றுப் பானையின் பக்கமெங்கும் பரவுகின்ற தயிரினைப் போலத் தளர்ச்சியுற்றேன். உன்னுடைய பெருமை பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகள் வாழ்வனவாக. அவற்றைக் கொடிய வினையையுடைய யான் எப்பொழுது வந்தடைந்து எந்தக் காலத்திலே வணங்கப் போகிறேன்.

குறிப்பு :—மாழை - மாவடு, அழகு. தாழி - மிடா. ஆழி - கடல். தடமலர்த்தாள் துணையாகலின், வாழியென்றார். கண்ணியரால் தளர்ந்தேன் என்று வேற்றுமையுருபு விரித்துக்கொள்க. (௭)

மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளி வலையில்
அகப்பட்டுப், புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்
தருளி, என்கணிலே அமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்
கும், அங்கணனே உடையாய் அடியேனுன் அடைக்
கலமே.

உரை :—மின்போன்ற விழியை யுடையவர்களும், அசைகின்ற இடையை யுடையவர்களுமாகிய மங்கையரது கோபவலையிற் சிக்குண்டு துன்பமுடையவனாய் உழல்கின்ற என்னை அங்ஙனம் உழலாத வண்ணம் என்னுள்ளத்தே புகுந்து, என்னிடத்திலே ஞான அமுதமானது சுரந்து இன்பந்தரும்படியாகச் செய்து,

எனது குற்றத்திற்கு இரங்கி, அவற்றைப் பொறுத்தருளும் அழகிய கருணைக் கண்ணை யுடையவனே, முதல்வனே, உனக்கு அடைக்கலம்.

குறிப்பு:—மின்கண் - மின்னுகின்ற கண் என்றலுமுண்டு. நுடங்குதல் - துவளுதல், அசைதல். ஆசையினால் மாதா கோபப்பட்டும் அவர்களைவிட்டு நீங்க மனமிராது மயக்கமுறுதலால் வெகுளிவலை யென்றார். என்கணிலே - என்னிடத்திலே. தித்தித்து - தித்திக்க. (௭)

மாவடு வகிரன்ன கண்ணி பங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற்கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடுவேன் உடையாய் அடியேன்உன் உடைக்கலமே

உரை:—மாங்காய் வடுவின் பிளவுபோன்ற கண்ணை உடையவளாகிய உமைபாகனே, நீ உன் திருவடித்தாமரைகக்கே என்னை அழைத்துக்கொள்வாயோ! அல்லது கும்பிபாகமென்னும நரகத்தி விடுவாயோ! உன்னுடைய திருவுள்ளக்கருத்தை நான் அறிய மாட்டேன், (கைக்கோளர்) நூலிழைப் பரப்பிலே அங்குமிங்கும் ஓடித் திரிகின்ற அவர்களது குழல்போல என்னுடைய உள்ளமானது உலகப்பற்றில் மறைந்து திரிவதாயிற்று. (உன்னிடம மனங்குவியாமையால்) அந்தோ! கெட்டொழிவேன். முதல்வனே, அடியேன் உனக்கே அடைக்கலம்.

குறிப்பு:—வகிர் - பிளவு. அது வடிவத்தாற் கண்ணுக்கு உவமை. (௮)

பிறிவறியா அன்பர்நின் அருட்பெய் கழல் தாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம்வந்து பெற்றார்உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையே அறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

உரை:—முதல்வனே! நின் திருவருளை விட்டுப் பிரியவறியாத மெய்யடியார்கள் கழல்கள் நிறைந்த உனது இருதிருவடியின் கீழே

மீட்டும் பிறவியில் திரும்புதலை யறியாத பேரின்பச் செல்வத்தைப் போயடைந்தனர். நான் உன்னை வழிபடுகின்ற ஒப்பற்ற வழியினை யறியமாட்டேன். பிறபொருளைக் கருதாது உன்னையே முழுவதும் அறியமாட்டேன். உன்னையே முழுவதுமறிதற் கேதுவாகிய சிவ ஞானத்தையும் தெரிந்திலேன். அடியேன் உனக்கு அடைக்கலம்.

குறிப்பு :—பிரிவு என்பது பிறிவென வலித்தது. நின்னருள் பிரிவறியா என மாறிக்கொள்க. மறிவு என்பது பிறவிக்கு மீளுதல். அதனை மரித்தலின் விகாரமாகக் கொண்டு நசித்தலெனப் பொருள் கொள்ளுதலு முண்டு. (௯)

வழங்குகின் றாய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக் கொண்டு, விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்என் விதியின்மையால், தழங்கருந் தேனன்ன தண்ணீர்பருகத் தந்துய்யக் கொள்ளாய், அழுங்குகின்றேன் உடையாய் அடி யேன்உன் அடைக்கலமே.

உரை :—முதல்வனே,வீட்டினை யன்பர்க்கு வழங்குகின்றஉன் திருவருளாகிய கிடைத்தற்கரிய அமுதத்தை அள்ளி உட்கொண்டு விழுங்குங்காலைத் தீவினையேனாகிய எனக்கு நல்ல ஊழின்மையால் தொண்டையில் தடைபடுதலாயினேன்; அருமையாகிய தேன் போன்றதான சலசலவென்று ஒலிக்கின்ற தண்ணீரைக் குடிப்பதற்குக் கொடுத்து, என்னைப் பிழைக்கும்படி செய்யவேண்டும். நான் அலைந்து வருந்துகின்றேன். உனக்கே யடியேன் அடைக்கலம்

குறிப்பு :—விக்குதல் - தொண்டையில் தடைபடுதல் விதி - நல்ல ஊழ். தழங்கு என்பதைத் தண்ணீரென்பதனோடு சேர்க்க. தண்ணீர் குளிர்ந்த தன்மை யென்பாருமுளர். ஓடுகின்ற நீரினாலே விக்கல் நிற்றலால் தண்ணீர் 'பருகத்தந்து' என்றார். அழுங்கு - அலைதல், வருந்துதல். (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

ஆசைப்பத்து

ஆத்தும இலக்கணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கருடக்கொடியோன் காணமாட்டாக் கழற்சேவடியென்னும்
பொருளைத் தந்திங்கென்னை யாண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கே வாவென் றங்கே கூவும்
அருளைப்பெறுவான் ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை:—கருடனெழுதிய கொடியையுடைய திருமால் அறிய வொண்ணாத கழல்களணிந்த செவ்விய திருவடிகளாகிய அரியசெல்வத்தை இவ்வுலகத்தே எனக்குக் கொடுத்து என்னையாட்கொண்ட தொளைக்கப்படாத மாணிக்கமே! எனதறியாமையை ஓட்டி இங்கே வாவென்று நீ என்னை வீட்டுலகத்திற்கு அழைக்கும் திருவருட் சிறப்பைப் பெறுதற்கு அம்மானே நான் ஆசைப்பட்டேன்.

குறிப்பு:—பொருள் - அருட் செல்வம். துரந்து - செலுத்தி' ஓட்டி. அங்கே என்றது வீட்டுலகத்தே. பொல்லா - உளி முதலியவற்றாற் செதுக்கப்படாத. கண்டாய் - அசை. (க)

மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல்போர்த்த
குப்பாயம்புக்கிருக்ககில்லேன் கூவிக்கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம் என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை:—எலும்பு, மூளை என்பவற்றை நெருங்கிய பால் போன்ற வெள்ளிய நரம்புகளைக் கயிறாகக் கொண்டுகட்டி, தோலைக்

கொண்டு மூடிய சட்டைக்குள் புகுந்து அதில் தங்கியிருக்க இயலாதவன் யான். அரசனே! என்னை விரைவாக அழைத்துக்கொள்வாயாக. எவ்வளவு உயர்ந்த பதவியிலிருப்பவர்களுக்கும் அப்பாற்பட்ட கிடைத்தற்கரிய அருமருந்தே, அப்பனே, அழகிய பெரியோனே,உன்னைக் காண்பதற்கு விருப்பமுடையவனாயிருக்கிறேன்.

குறிப்பு :—மொய்ய - நெருங்கி. பால் நரம்பு-வெள்ளை நரம்பு. குப்பாயம் - சட்டை. (உ)

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடுதிரியுஞ் சிறு குடில் இதுசிதையக்
கூவாய்கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி
ஆவா என்ன ஆசைப்பட்டேன் கண்டாய அம்மானே

உரை நடை —கோவே, கூத்தா, குரு மணியே, அம்மானே, என்பதை முதலிற் கொள்க.

உரை :—அரசனே, திருநடமியற்றுவானே, (அடியேனைத்) தடுத்தாட் கொள்ளும் ஆசிரிய மாணிக்கமே, சீழ் வடிந்து, ஈக்களால் மொய்க்கப்பட்டு, அழுக்கு நிறைந்து அலைகின்ற சிறிய வீடாகிய இவ்வுடம்பு சிதைந்தொழியும்படி, என்னை அழைத்துக் கொள்ள மாட்டாயா? வானவனே, வானவர்க்கரியவனே, மங்கலப் பொருளானவனே, அழகிய பெரியோனே, சற்று நீ என்முகத்தைப் பார்த்து இரக்கக் குறிப்புக் காட்டுவதை விரும்பினேன்.

குறிப்பு :—'வார்ந்து' என்பது வார்த்து என்பதன் விகாரம். வார்த்து - வடித்து, ஊற்றி, ஒழுக்கி. வார்ந்து என்பதைத் தன் வினையாகக் கொள்ளலாம். அழுக்கு - மலம். இது என்றது தமது உடம்பைக் குறித்து நின்றது. ஆவா - ஐயோ, நீவா, என்றிரக்கச் சொற்கூறுவது. குடியிருக்கும் வீடு, குடிலாயிற்றுப்போலும். காத்து - தடுத்து (௩)

மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல் வீறிலி நடைக் கூடம்,தொடர்ந்தெனை நலியத் துயருறுகின்றேன் சோத்தம்

எம்பெருமானே, உடைந்து நைந்துருகி உன்னொளி நோக்கி உன்திரு மலர்ப்பாதம், அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட் டேன் கண்டாய் அம்மானே

உரை நடை.—'எம்பெருமானே' என்பதை முதலிற் கொள்க.

உரை:—எமது தலைவனே, எலும்பு நெருங்கி ஊத்தை மிகுந்து அழுக்கு ஊறி நிற்பதாய்ச் சிறப்பற்ற நடைவீடாகிய இவ்வுடம்பு என்னைப் பற்றித் துன்புறுத்துவதால் நான் மனம் வருந்துகின்றேன். உனக்கு வணக்கம். அழகிய பெரியோனே, அன்பினால் உள்ள முடைந்து, (-செருக்கொழிந்து,) மனங்கனிந் துருகி, உனது அருளொளியைப் பார்த்துச் சென்று, உனது திருவடிக் கமலங்களை விரைவில் எய்தி நிலை பெறுவதற்கு அவா மிக்குடையேன்.

குறிப்பு:—எலும்பு மிடைந்து என மாற்றுக. வீறு - சிறப்பு. கூடம் - வீடு. சோத்தம் - அஞ்சலி (௪)

அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி அடியே னுடை யாக்கை, புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும் விடை யாய் பொடியாடீ, எளிவந் தென்னை ஆண்டுகொண்ட என் னாரமுதேயோ, அளியேன் என்ன ஆசைப்பட்டேன் கண் டாய் அம்மானே

உரை நடை:—விடையாய், பொடியாடீ, ஆரமுதே, அம் மானே, என்னும் விளித்தொடர்களை முதலிற் கொள்க. முதலடி யில், அகத்து அளிபுண் என மாற்றுக.

உரை:—காளையூர்தியனே, திருநீறணிந்தவனே, எளிதாகத் தோன்றியருளி என்னை யாட்கொண்ட அருமருந்தே, அழகிய பெரியோனே, ஓலம். உட்பக்கம் நெருங்கிய புண்ணுடையதாய்ப் புறத்தே தோலால் மூடப்பெற்ற, அடியேனுடைய உடம்பின் கண் புளியம்பழம் போலப் பற்றற்று இருந்தாலும், (அதன் தொடர்பு

அறவே விடப்பெறாமையால்) இரங்கத் தக்கவன் என்று என்னை நீ கருதி யருள ஆசைப்பட்டேன்.

குறிப்பு —அளி - நெருங்குதல். மூடிய அடியேன், என்பது மூடியடியேன் என அகரந் தொக நின்றது. பொடி - பூதி, நீறு. புளியம்பழமானது, அதன் ஓட்டினுள், ஓட்டிற்கு வேறாக இருத்தல் யாருமறிந்ததே. அதுபோல, ஞானிகள் பற்றற்றிருப்பர். அடிகள் அனையரென்பதற்கு இச் செய்யுள் அகச் சான்றாதல் காண்க. அளியேன் - இரங்கத்தக்கேன். (௫)

எய்த்தேன் நாயேன் இனியிங்கிருக்க கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை —'வானோர்...சேவடியானே' என்பதை முதலிற் கொள்க.

உரை :—விண்ணவரும் அறியாத திருவடித் தாமரையுடையானே, நாயனைய யான், (உடம்பைச் சுமந்து) இளைத்துப் போனேன். இனிமேல் இந்நிலவுலகத்திலே தரிக்கமாட்டேன் இவ்வுலக வாழ்க்கையை எனக்கு நியமித்தாய், நீ இதனை நீக்கி விடுவாயாக. இயல்பாகப் பாசங்களின் நீங்கியவனே, உன்னுடைய திருமுகத்தின் அருளொளியைக்கண்டு, உனது புன் சிரிப்பினைப் பார்ப்பதற்கு, அப்பனே, அழகிய பெரியோனே, மிகவும் அவாவுற்றேன்.

குறிப்பு .—வாங்காய் - ஒடுக்குவாய், எடுப்பாய். முத்தா என்பதற்கு முத்தி தருவோனே யென்றுங் கூறுவதுண்டு. (௬)

பாரோர் விண்ணோர் பரவி யேத்தும் பரனே பரஞ்சோதி
வாராய் வாரா வுலகந் தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமான் எனவேத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை —மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் வாழ்த்தி வணங்கும் மேலோனே, மேலான ஒளியானவனே, மீண்டுவருதலில்லாத வீட்டுலகைக் கொடுத்து என்னை ஆண்டருள்பவனே, வந்தருளவாயாக (உன் திருமேனியைக் கண்டு) உனது ஆயிரந் திருப்பெயருஞ் சொல்லி அலைந்து எமது தலைவனே என்று வாழ்த்துவதற்கு, தெவிட்டாத அருமருந்தே, அழகிய பெரியோனே, நான் அவாவுற்றேன்.

குறிப்பு :—திரிந்து என்பதற்கு ஆனந்தக் கூத்தாடி என்றும் பொருள் கொள்ளலாம். ஆரா - நிறையாத, தெவிட்டாத (எ)

கையால் தொழுதுன் கழற்சேவடிகள் கழுமத்தழுவிக்
கொண்(டு), எய்யா தென்றன் தலைமேல்வைத் தெம்பெரு
மான்பெரு மானென்(று), ஐயா என்றன் வாயால் அரற்றி
அழல்சேர் மெழுகொப்ப, ஐயாற் றரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே

உரை நடை :—ஐயாற்றரசே...அம்மானே, என்பவற்றை முதலிற் கொள்க.

உரை.—திருவையாறமர்ந்த கோவே, அழகிய பெரியோனே, உனது வீரக்கழலணிந்த செவ்விய திருவடிகளைக் கையினாலே வணங்கி, முழுவதும் பற்றி, இடைவிடாது எனது சிரமேற் கொண்டு, எமது தலைவனே, எமது தலைவனே, ஐயனே, ஐயனே, என்று வாயாரக் கூவி வாழ்த்தி அனலிடைப்பட்ட மெழுகுபோல உருகுவதற்கு ஆசைப்பட்டேன்.

குறிப்பு :—கழும - பூரணமாக. கழுமல்-நிறைதல். எய்யாது - சலியாது, இடைவிடாது. (அ)

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டேன் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேஉன் பழஅடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே.

உரை நடை :—படிதானில்லாப் பரம்பரனே, அம்மானே, என்பவற்றை முதலிற்கொள்க.

உரை :—குணம் யாதுமில்லாத (ஒப்பற்ற) மிக்க மேலோனே, குற்றம் நிறைந்த இவ்வுடம்பின் வகையினைத் தொலைத்து, சிவமா நகரத்துட் புகுந்து, காவல்பொருந்திய அருளொளிக் காட்சியடைந்து, எனது இருகண்ணும் மகிழ்ச்சி மீதூரும்படி உனது பழைய அன்பர் திருக்கூட்டத்தை அடியேன் காண்பதற்கு ஆசைப்பட்டேன்.

குறிப்பு :—படி - குணம், ஒப்பு 'குணங்கள் தாமில்லா இன்பமே' என்றதுங் காண்க. கடி - காவல், மணம். செடி - குற்றம். பரம்பரனே - மேலானவற்றிற்கு மேலோனே. இறைவன் ஒருவனே ஒப்பற்றவனாதலின், 'படிதான் இல்லா' என்றார். (௯)

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே

உரை நடை :- பஞ்சேரடியாள் பாகத்தொருவா, அம்மானே, ஞானச்சுடரே, என்பவற்றை முதலிற் கொள்க.

உரை:—செம்பஞ்சூட்டிய, (அல்லது பஞ்சுபோல் மெல்லிய) அழகிய திருவடிகளுடைய உமையம்மை பங்கனாகிய ஒப்பற்றவனே, அழகிய மேலோனே, அறிவுப் பிழம்பே, விருப்பத்தைத் தருகின்ற (அழகிய) சேல்மீன்போன்ற கண்களையுடைய மாதரது கோபவலையிற் சிக்குண்டு சிதைவுற்றேனாகிய நாயினைய நான், (நின்னைத் தவிர வேறு) யாதொரு துணையுமில்லாதேன், உனது பவளம் போன்ற அழகிய திருவாயால், அஞ்சாதே என்று சொல்வதை விரும்பினேன்.

குறிப்பு :—வெம் - விரும்பத்தக்க. அதனைச் சேலோடுங் கண்ணோடுங் கூட்டலாம். பஞ்சேர் - பஞ்சு + ஏர். பஞ்சுபோன்ற அழகிய. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருந்துறையில் அருளிய

அதிசயப்பத்து

முத்தி இலக்கணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வைப்புமா டென்றும் மாணிக்கத் தொளியென்றும் மனத்திடை உருகாதே, செப்பு நேர்முலை மடவர லியர்தங் கள் திறத்திடை நைவேனை, ஒப்பிலாதன உவமனி லிறந்தன ஒண்மலர்த் திருப்பாதத்(து), அப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே

உரை —இறைவனே தேடிவைத்த செல்வமென்றும், மாணிக் கத்தின் ஒளியென்றும் உள்ளத்திலே உருக்கங் கொள்ளாமல், செப்புப் போன்ற நகிலையுடைய இளம்பெண்டிர்கள் வகையிற் கனிபவனாகிய என்னை, யாதொரு பொருளுக்கும் நிகரில்லாதன வாய், உவமை கூறக்கூடிய பொருள்கள் யாவற்றையுங் கடந்தன வாய உள்ள ஒள்ளிய திருவடித் தாமரையுடைய தந்தை ஆட் கொண்டு தனது மெய்யடியாருடன் சேர்ப்பித்த வியப்பான செய கையை நாம் அறிந்தோம்.

குறிப்பு :—வைப்பு - எய்த்த காலத்துப் பயன் படுவதற்காகச் சேமித்து வைத்திருப்பது, மாடு - செல்வம். வைப்பு எனபதற்கு இடமெனப் பொருள் கொள்வாருமுளர் இடருற்ற காலை பயன படுதலால், ‘வைப்புமா’ டென்றார். நிலைத்த இன்பந் தருதலால ‘மாணிக்கத்து ஒளி’ என்றார் செப்பு - குங்குமம் முதலியன வைத்தற்குரிய சிமிழ். பெருமையால் ஒப்பில்லாதன என்றார். தன் மையால் உவமனில் இறந்தன வென்றார். உவமன் - உவமம் உவமையில்லாது கடந்த என்றுங் கொள்க. (க)

நீதி யாவன யாவையும நினைக்கிலேன் நினைப்பவ ரொடுங் கூடேன், ஏதமேபிறந் திறந்துழல் வேன்றனை என் னடி யானென்று, பாதி மாதொடுங் கூடிய பரம்பரன் நிரந்

தரமாய்நின்ற, ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை :—நியாயமாயுள்ள எவற்றையும் எண்ண மாட்டேன். அவற்றை எண்ணி நடப்பவரோடும் நான் சேரமாட்டேன். குற்ற வடிவாகவே, பிறந்தும்இறந்தும் துன்புறுகிற என்னை, தன்னுடைய அடியவனென்று கருதித் திருமேனியில் பாதி பெண்ணொடுங்கூடிய மிக மேலோனாய் அழிவின்றி நின்ற ஆதி முதலவன் ஆட்கொண்டு தன்னடியாரகளுட் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு :—ஏதம - குற்றம் ஏதமே - ஏதமேயாய் - குற்றத்தின் வடிவமேயாய்: வீணே என்றும பொருள் கொள்ப. உழல்வேன் - அலைந்து துன்புறுவேன் கிரந்தரமாய் - நித்தியமாய் (உ)

முன்னை என்னுடை வல்வினை போயிட முக்கணதுடை யெந்தை, தன்னை யாவரும அறிவதற் கரியவன் எளியவன் அடியார்க்குப், பொன்னை வென்றதோர் புரிசடை முடி தனில் இளமதி யதுவைத்த, அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே

உரை நடை :—முன்னை யென்னுடை வல்வினை போயிட என்பதை ஆண்டு என்பதனோடு முடிக்க.

உரை :—மூன்று கண்ணையுடைய எமது அப்பன், தனக்குத் தானே தலைமையானவன், யாருமறிய வொண்ணாதவன், அன்பர்க்கு எளியனாய் விளங்குபவன், பொன்னினொளியினும் மேம்பட்ட ஒப்பற்றதா யமைந்த சடையினாலாகிய முடிமீது பிறையினை வைத்தருளிய தாய்போன்ற அவன், பக்குவம் வருமுன்னே என்னுடைய கொடிய வினைகள் அகன்றொழியும்படி என்னை ஆட்கொண்டருளித் தனதடியாருட் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு :—முன்னை - முன்னாக. இதனை வல்வினை என்பதனோடு சேர்த்துப் பழமையாகிய வினையென்பாரு முளர். போயிட - விரைவிலொழிய. வினைக்கு ஆட்பட்டிருந்ததனால் 'உடைவல்வினை' என்றார். தன் + ஐ - தன் தலைவன். இதனை 'அறிவதற்கு' என்பதனோடு சேர்த்துத் தன்னை யறிவதற் கரியவன் என்று

முறைப்பர் புரிசடை - கட்டிய சடை சடையின் பிரிவுகளைப் 'புரி' என்றலுமுண்டு. (௫)

பித்த னென்(று)எனை உலகவர் பகர்வதோர் காரணம் இதுகேளீர், ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும் உபாயம தறியாமே, செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை, அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை :—உலகத்தவர்கள் என்னைப் பித்தம் பிடித்தவனென்று சொல்லுவதற்குக் காரணமிது கேட்பீர்களாக. இறைவனது திருவருளோடு மனமொத்து நடந்து அதனை விரைவில் எய்துகின்ற தந்திரத்தைத் தெரியாமல், இறந்து தாண்டுதற்கரிய நரகத்தினிடை வீழ்வதற்கு இசைகின்ற என்னை அப்பன் ஆட்கொண்டு தன்னடியார் கூட்டத்திற் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோம். (அறிந்து திகைத்தாற்போல் நின்றோம்.)

குறிப்பு :—திகில் பிடித்தாற்போல் நிற்பவனை உலகினர் பித்தனென்று இகழ்கின்ற மரபுபற்றி இசெய்யு ளியற்றினர். இரண்டாம் அடியில் தன் என்பது அத்தனைக் குறிக்கும். அருநரகு - பொறுத்தற்கரிய துன்புடைய நரகு என்பாருமுளர். ஒருப்படுகின்றேனை-ஒருப்படு மியல்புடைய என்னை. (௬)

பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன் பன்மலர் பறித்தேத்தேன், குரவு வார்குழ லார்திறத் தேநின்று குடிகெடு கின்றேனை, இரவு நின்றெரி யாடிய எம்மிறை எரிசடை மிளிர்கின்ற, அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை :—இறைவனைத் துதிப்பவர்களிடத்தே சென்று சேர மாட்டேன். பலவகையான பூக்களைப் பறித்து இறைவன் மீது தூவி வணங்கேன். குரவமலரணிந்த நீண்ட கூந்தலையுடைய மாதர் சார்பிலே நின்று பிழைப்புக்குக் கேடு தேடுகின்ற என்னை, எல்லாம் ஒடுங்குகின்ற சங்கார காலமாகிய இரவிலே தான் ஒருவனேயாய் நின்று சோதி மயமாய்க் கூத்தியற்றுகின்ற எமது தலைவன்,

சோதிப் போன்ற சடையின்கண் மின்னுகின்ற பாம்பினை யுடையவனாகிய பெருமான் ஆட்கொண்டு தனதடியாருடன் சேர்ப்பித்த வியப்பினை அறிந்தோமே

குறிப்பு :—பாடு-இடம், குணம, பெருமை. பன்மலர் - நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ எனபன. குரவு - ஒருவகை வாசனையுள்ள மரம வார்-நீண்ட எரியாடிய - ஊழித்தீயிலாடிய என்பதுமுண்டு. எரிசடை - ஒளிர்கின்ற சடை என்றலுமுண்டு. (௫)

எண்ணிலேன் திரு நாமமஞ் செழுத்துமென் ஏழைமை யதனாலே, நண்ணிலேனகலை ஞானிகள் தம்மொடு நல்வினை நயவாதே, மண்ணிலேபிறந் திறந்துமண் ணாவதற் கொருப்படு கின்றேனை, அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே

உரை :—என்னுடைய அறியாமையினாலே இறைவனுடைய திருப்பேராகிய திருவைந்தெழுத்தினை நினைந்திலேன். அருட்கலை வல்ல அறிஞரோடு சேர்ந்திலேன நற்செயல்களை விரும்பாது இம் மண்ணுலகிற் பிறந்து, இறந்து மண்ணாய்ப் போதற்கு இயைபுடைய என்னைச சிறப்பு மிகுந்த பெருமான் ஆட்கொண்டருளித் தன்னடியார்களோடு சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு :—வாசனாமலம் நீங்குவதற்குத் திருவைந் தெழுத்தை நினைதல் சிவஞானபோதம் ௯-ம் சூத்திரத்திற் கூறியதைக் காண்க. பிரணவத்தை ஐந்தெழுத் தெனலுமுண்டு. ஏழைமை-அறியாமை நல்வினை - நற்செயல். இது இருவினைகளுட் சேர்ந்த நல்வினையன்று. அது பயன்கருதிச செய்யப்படுவது. பயன் கருதாத நற்றவமே ஈண்டு குறிக்கப்பெற்றது. இறந்தவுடன் உடம்பானது மண் முதலிய ஐம்பூதத்திற் கலத்தலால் ' மண்ணாவதற்கு ' என்றார். (௬)

பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை, இத்தை மெய்யெனக் கருதிநின்

றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை, முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தின் முழுச்சோதி, அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே

உரை:—துளைகளுள்ள தசையைச் சுவராகவுடையதாய்ப் புழுக்களினாலே வேயப்பெற்று, வலியற்று நிணநீர் வடிகின்ற நிலையற்ற கூரையை உடையது (இவ்வுடம்பு). இதனை நிலைத்த பொருளாக எண்ணித் துன்பக்கடலின் சுழியில் அகப்படுவேனை, மணிகளுட் சிறந்த பெருமணியாகிய முத்து, மாணிக்கம், வயிரம், பவளம் இவற்றின் முழு வொளியுங் கலந்தாற்போன்ற திருமேனி உடைய அப்பன், ஆட்கொண்டு தன்னடியாரோடு சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு:—உடம்பகத்தே உள்ள தசையைச் சுவராகவும், தோல் முதலியவற்றைக் கூரையாகவுங் கூறினர். முத்து வைரம் என்பவற்றின் நிறம் திருவெண்ணீற்றினொளிக்குமம், மாணிக்கம் பவளம் என்பவற்றின் ஒளி திருமேனியின் ஒளிக்கு முவமைகளாயின. மாமணி முத்து என மாற்றுக. இதை என்பது இத்தை என விரிந்தது. பொத்தை யென்பதற்குப் பருத்தது எனவுங் கூறுப. (எ)

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி, ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை நடை:—எழுதரு சுடர்சசோதி என்பதை முதலிற் கொள்க.

உரை:—எழுந்து விளங்கித் தோன்றும் பிழம்புபோன்ற ஒளி யுருவனாகிய பெருமான், முன்னுளிலே தன்னுட னில்லாதபடி என்னை விலக்கிச் சிறுகுடிலாகிய உடம்பினுட் புகுத்தி, இப்பிறவியிலே தக்க பருவத்திலே திருவருட்கண்ணால் பார்த்து நுட்பத்தை உணர்த்துவதாகிய நொடிப்பொழுதில் சொல்லப்படுஞ் சொற்

போன்ற உபதேசமொழி யுரைத்து, நுகத்தடியாகிய தொடர்பில்லாமல், (திருவடியிலே) என்னைப்பூட்டிப் பிறவிக்கடலி லிருந்து மேலே தூக்கி உபதேசம் பெறுதற்கு முன்செய்த பயனில் செயல்கள் ஒழியும்படி பாசமாகிய குற்றத்தைத் தொலைத்து வீட்டிற் குரியவனாக்கி என்னை யாட்கொண்டருளித் தன்னடியாருடன் சேர்த்த வியப்பினை யறிந்தோமே

குறிப்பு :—இறைவன் தன்னொடு நின்றது என்றது, முற்பிறவியில் கயிலையிலிருந்தமையைக் குறிக்குமென்றும், கேவல நிலையிலிருந்தமையைக் குறிக்குமென்றுங் கூறுப. நொடியன என்பதில் நொடி - கைநொடிப் பொழுதில் கூறப்படுஞ் சொல். அன-அன்ன, போன்ற. அத்தகைய சொல்லினை "ஓம்" என்ப. சொல்லின் பொருளை உள்ளத்திற் பதியவைத்தமையாற் 'சொற் செய்து' என்றார் நுகம் - வண்டியிற் காளைகளைப் பூட்டும் மரத்தடி. 'நுகமின்றி' என்றது கட்டறிவின் றொடர்பின்றி. விளாக்கைத்து-சேர்த்து, பூட்டி, கலக்கச்செய்து. விளாக்கை - விளாவுதல், கலத்தல். விளாக்கை என்பது வினையாக வழங்கப்பட்டது, பொய் - பயனில் செயல். தூகள் - குற்றம். (அ)

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல், பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள் பாராதே, பெற்றவா பெற்ற பயனது நுகர்ந் திடும் பித்தர்சொல் தெளியாமே, அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

உரை :—(வினைக்கு ஈடாக) வந்தடைந்த வுடம்பின் மேலான பலன், வாசனையுடைய பூவின்கண் கண்ணால் பார்க்கப் படாது எழுகின்ற வாசனைபோல, ஐம்புலனால் பற்றப்படுவதோர் தன்மையிலாத மேலாகிய மெய்ப்பொருளைக் காணுதல். அம்மெய்ப் பொருளைக் காண முயலாது, வினைக்கேற்றபடி கிடைத்த வினைப்பயனைக் கிடைத்த முறையே அனுபவித் தொழியும் அறிவீனர் பேச்சுகளை நம்பாதிருக்குமாறு, அப்பன் என்னை யாட்கொண்டு தன்னடியாருடன் சேர்ப்பித்த வியப்பினை யறிந்தோமே.

குறிப்பு :—உறுபொருள் - மிகுந்த பயன் மலர் எழுதரு நாற்றம் பற்றப்படுவதுபோல் பற்றமுடியாத தன்மையுடைய பரம் பொருள் என்று கூறுவாருமுளர். பெற்றவா வென்பதை நுகர்ந்திடும் என்பதனோடு முடிக்காமல், பெற்ற என்பதனோடு முடித்து அடைதற்குரிய முறையிலே யடைந்த எனப் பொருள் கொளவதுமுண்டு. பித்தர் - அறிவீனா. (கூ)

இருள் திணிந்தெழுந் திட்டதோா வல்வினைச சிறுகுடில் இது இத்தைப், பொருளெனக்களித் தருநாகத்திடை விழப் புகுகின்றேனைத், தெருளும் முமமதில் நொடிவரையிடிதரச் சினப்பதத் தொடுசெந்தீ, அருளும் மெயந்நெறி பொய்ந் நெறி நீக்கிய அதிசயங கண்டாமே.

உரை :—அறியாமையாகிய ஆணவமலச செறிவால் ஏறபட்டதாகிய கொடிய வினைகளா லமைந்த சிறிய குடிசை இவவுடமபு. இதனை நிலைப் பொருளாக எணணி மகிழ்ந்து கடத்தற் கரிய நாகததினிடை விழப்போகு மென்னை, தெளிவாக விளஙகுஞ் சுவாகளையுடைய முப்புரமானது நொடிப்பொழுதி லிடிந்து விழும் படியாகக் கோபக குறிப்பொடு செநநிறமான தீயாகிய அம்பை விடுததருளிய உண்மைவழியே வடிவமாக வுடையவன், எனது பொய் வழியைத் தொலைத்த வியப்பினை யறிநதோமே.

குறிப்பு :—இருள் - அறியாமைக் கேதுவாகிய ஆணவத்தை யுணர்த்தும். திரிபுணர்சசியை யுண்டாக்கும் மாயையினை இருளென்பாருமுளர். திணிந்து - மிகுந்து வினைப்போகமே தேகமாதலின் வல்வினைச சிறுகுடி லென்றார். இரும்பு, வெள்ளி, பொன் இவற்றாலாகிய சுவர்களை முப்புரஙகள் உடையனவாயிருந்தன. அவை ஆகாயத்தில் விளஙகினபடியால் தெருளும் மதி லென்றார். மதில் - கோட்டைக்கு ஆகுபெயர். பதம் - அடையாளம. நெறி யென்பது ஆகுபெயர். (கo)

திருசசிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

புணர்ச்சிப் பத்து

அத்துவித இலக்கணம்

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்பு கந்து
கடைபட் டேனை ஆண்டுகொண்ட
கருணா லயனைக் கருமால்பிரமன்
தடைபட் டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்த என்னாரமுதைப்
புடைபட் டிருப்ப தென்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை.—ஒளிர்கின்ற பொன்மலையைப் போல்வானை, தொளைக்கப்படாத முத்தினை யொப்பானை, மிகவுங் கீழ்மைப்பட்டேனாகிய என்னை யாட்கொண்டு பயனில்லாத என் தொண்டை ஏற்றுக்கொண்ட அருட்கோயிலானவனை, கரிய நிறமுடைய திருமாலும் நான்முகனும் செருக்கினால் தடைபட்டு இன்னுஞ் சென்றடைய முடியாத, தன்னை எனக்குக் கொடுத்த, என்னுடைய கிடைத்தற்கரிய அருமருந்தை, பொள்ளலில்லாத என் மாணிக்கத்தைச் சேர்ந்து பக்கத்திற் பொருந்தியிருப்பது எந்நாளோ?

குறிப்பு.—மாற்றம் யாதுமில்லாத பயனைத் தருவதால் ‘பொன் குன்ற’ மென்றார். குறைவு யாதுமில்லாதது என்பார் ‘தோளா முத்து’ என்றார். வாளா-பயனின்றி. உரிச் சொல்லாகக் கொண்டு பயனற்ற என்றும் சொல்லலாம். கருணை+ஆலயன் - கருணாலயன். புடை - பக்கம். பட்டு - பொருந்தி. ‘பொள்ளா’

என்றது 'பொல்லா' என்றாயிற்று. பொள்ளாத - உளி முதலிய வற்றால் செதுக்கப்படாத. இறைவன் தனக்கு உரியவனானது பற்றி 'என் பொல்லாமணி' யென்றார். (௧)

ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்(து)ஐம் புலனாய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
சிவன்எம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணற்போல நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை :—மன்னனே! அடியேனிவ்வுலக வாழ்க்கையைப் பொறுக்கமாட்டேன். பூதலத்திலே ஐம்பொறிகளுக்கும் விடயமாகிய சேற்றின் கண்ணே ஆழ்ந்துவிடாதபடி சிவனடியைச் சிந்தித்து எமது தலைவனே என்று வாழ்த்தி, மணலின்கண் சுரக்கின்ற ஊற்று நீர்போல, நெகிழ்ந்து நெகிழ்ந்து உள்ளத்தை உருக்கக்கொண்டு கூவியழைத்துப் பொள்ளலில்லா என் மாணிக்கம் போல்வானாகிய உன்னைச் சேர்ந்து வணங்கி நிற்பது எந்தநாளோ?

குறிப்பு :—'அவனிதலத்து ஐம்புலன் ஆற்றகில்லேன்' என்றலு முண்டு. புலன் - பொறி நுகரும் பொருள். அதன்கண் அகப்பட்டால் எழுந்து விலகுவது கடினமாதலின் 'சேற்றி' லென்றார். ஊற்று மணலென்பதை மணல் ஊற்று என மாற்றுக. நெக்கு - நெகிழ்ந்து. ஓலம் - அடைக்கல ஒலி. (௨)

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என்ஆ ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்

வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர் தூவிப்
பூண்டுகிடப்ப தென்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை :—(வாமனாவதாரத்தில்) உலகை யளத்தற்பொருட்டு நெடிய திருவுருக்கொண்ட திருமாலும், பிரமனும் அஞ்சும்படியாக உயர்ந்த அனற்பிழம்பானவனை, தன பால் விருப்பமில்லாத என்னை யாட்கொண்டருளிய கிடைத்தற்கரிய என தருமருந்தை, பொள்ளலில்லாத என் மாணிக்கம போல்வானை யடைந்து, மிகுதியும் இன்பமூ ஊறுகின்ற அன்பா முன்னே வேண்டியன வெல்லாம் வாய்விட்டரற்றி வாசனைபொருந்திய பூக்களைத் தூவி வணங்கித் திருவடியைச சிரமேற் பூண்டுகொண்டு செயலற்றிருப்ப தென்நாளோ ?

குறிப்பு —அள்ளூறும் - மிகுதியாக ஊறும் எலும்பும் உருக என்றுரைத்தலுமுண்டு. சீவ உபாதி ஒழியும்வரை துதிப்பதையே 'வேண்டுந்தனையும் வாய்விட்டலறி' என்றார். 'பூண்டு' என்ப தற்கு அடிமைத்திறம் பூண்டு, திருவடியைப் பொருந்தி என்று முரைப்ப. (௩)

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொலலும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே

உரை :—அழகிய உள்ளிதழ்களை யுடைய தாமரையில் வீற் றிருக்கும் பிரமனும், திருமாலும், விண்ணவர்க்கரசனாகிய இந்திர னும் பிறரும் புகழ்ந்து துதிக்கின்ற திருப்பேருடையானை, சொல்

லுலகத்தையும் பொருளுலகத்தையுங் கடந்த ஒளியானவனை நெல்லிப் பழத்தையும் தேனையும் பாலையும் பூரண நயம் அமைந்த அமுதத்தையும், அமுதத்தின் சுவையையும்போலத் தித்திப்பவனை, பொள்ளலில்லாத மாணிக்கம்போல்வானை இறுகப்பற்றி அத்துவிதமாய்க் கலந்து நிறப தென்னாளோ ?

குறிப்பு :—அல்லி அகவிதழ். சொல்லும் பொருளும் மாயா காரியமாதலால், அவற்றைக் 'கடந்த' என்றார். சரியை, கிரியை, யோகம், ஞானயோகம், ஞானத்தின் ஞானம் என்னும் நிலையில் நிற்பவர்க்கு இறைவன் இன்பந் தருமுறையை நெல்லிக் கனி முதலிய உவமைகளாற் குறிப்பித்தார் என்னலாம். (௪)

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலம் முழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்(டு)
ஆ! ஆ! என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை.—செல்லச் செல்ல மிகுந்து விளங்கும் அடியையும் முடியையுங் காணும்பொருட்டு மேலே பிரமனுங் கீழே திருமாலும் உயரப் பறந்தும், மிக அகழ்ந்துங் காணமுடியாத அப்பெரியோன் இப்பெரிய நில வுலக முழுவதுஞ் செய்தி தெரியுமாறு என்னை ஏவல்கொண்டு, ஆண்டருளி, ஐயோ என்றிரங்கிய தன்மையினைத் தும் பொள்ளலில்லாத மாணிக்கம்போல்வானை யடைந்து புகழ்ந்து பேசக்கிடைப்பது என்னாளோ ?

குறிப்பு :—திகழத் திகழும் - மிகுதியாக விளங்கும். 'கீழ் மேலயனும் மாலும்' என்றது எதிர்நிரல் நிரை. கீழ்மாலும் மேலயனும் எனக்கொள்க. அகழ்ந்து என்பது, அகழ என நின்றது. அம்மான் - அப் பெரியோன். நிகழ - செய்தி பரவ. (௫)

பரிந்து வந்து பரமா னந்தம்
    பண்டே அடியேற் கருளசெய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
    அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
    உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்று கொல்லோ என்
    பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை:—இறைவன் இரங்கிக் குருவாய் வந்து பேரானந்தத்தை முன்னமே அடியேனுக் கருள்செய்யவும், அவனைப் பிரிந்து பெரிய நிலவுலகத்தில் தங்கிக கடத்தற்கரிய மயக்கமுற்றேனே யென்றெண்ணி யெண்ணிச் சிந்திய கண்ணீரோடு உள்ளம உருகி நீர் பொழிய மயிர்க்கூச்செரிய, மகிழ்ந்து அன்போடு பொள்ளலில்லாத மாணிக்கம் போல்வானைச் சேர்ந்து காதலித்து நிற்பதென்நாளோ?

குறிப்பு:—பெருமாநிலத்து என்பதில் மா என்பது அசை. 'சொரிய உள்நீர்' என்பதற்கு உயிரின் தன்மைகள் நீங்க என்றும் பொருள் கொள்க. புரிந்து - விரும்பி. (௬)

நினையப் பிறருக் கரிய நெருப்பை
    நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
    நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவிபாயக்
    கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்று கொல்லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை:—அன்பரல்லாத ஏனையோருக்கு நினைவதற்கரிய வான் காற்று, நெருப்பு, நீர், நிலம் என்னும் ஐந்துமானவனை, தனக்கு நிகரானவர் யாருமில்லாத ஒரு பொருளைப் பார்த்து உடல்

பூரித்தது தழுதழுத்த தொண்டை ஒலி செய்ய, கண்ணீர் அருவி யாகப் பாய, கையினால் அஞ்சலிசெய்து, பொள்ளலில்லாத மாணிக் கம் போல்வானை யடைந்து அவனை நறும்பூவினால் அணிசெய்யக் கிடப்ப தெந்நாளோ?

குறிப்பு :—செய்யுள்பற்றி ஐமபூதஙகளை முறையாக வைக்க வில்லை. அன்பின் மெய்ப்பாட்டினால் தொண்டை தழுதழுத்து நாததடுமாறிக் கனைப்பதுபோல ஒலியெழுவதால் 'தழுத்தகண்டம் கனைய' என்றார். (எ)

நெகக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும
நககும அழுதும தொழுதும வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப புணர்ந்தே

உரை :—உள்ளங் குழைந்து குழைந்து இடைவிடாது உருகி, நின்றாலும் இருந்தாலுங் கிடந்தாலு மெழுந்தாலும் சிரித்தாலும் அழுதாலும், இடைவிடாது வணங்கி அவனை வாழத்திப் பற்பல வகையான ஆனந்தக் கூத்துகளுமியற்றிச, செவவானம் போன்ற அவன் திருமேனியை விளஙகப் பார்த்து, உடல் புளகங்கொண்டு, பொள்ளலில்லாத மாணிக்கம் போல்வானை யடைந்து அவனிடைப் புகுந்து அத்துவிதமாய்க் கலந்து நிற்பது எநத நாளோ?

குறிப்பு.—எசசெயல் செய்தாலும் இறைவனை வாழ்த்த வேண்டுமென்பார், 'நின்றுமிருநதும்... .....வாழத்தி' என்றார். நவிற்றி யென்பது கற்று என்றும் சொல்லி என்றும் பொருள் படினும் ஈண்டுக் கூத்தியற்றுதலைக் குறிதது நின்றது. மயிர் சிலிர்ததல் வியப்பினாலாடுவது. புக்கு நிற்பதென்றது, இறை வியா பகத்துள் அடங்கி நிற்றலை. (அ)

தாதாய் மூவே ழுலகுக்குந
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும
ஏதா மணியே என்றென் றேத்தி
இரவும பகலும் எழிலார் பாதப
போதாயந் தணைவ தென்று கொலலோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை நடை :—பெருந்தேன் பில்க என்பதை அணைவது என் பதனோடு முடிக்க.

உரை :—பழமையாகிய ஏழுலகங்களுக்கும் தந்தையானவனே, தாயானவனே, நாயனைய என்னை யாட்கொண்ட அறிவுக் குறை யுடையவனே, பிறவி நோய்க்கு ஒப்பற்ற மருந்தே, எக்கா லத்திலும் எவ்விதப் பயனுமாகின்ற மாணிக்கமே, என்று இரவும் பகலும் இடைவிடாது வாழ்த்திப் பொள்ளலில்லாத மணிபோல் வானை யடைந்து அழகு நிறைந்த அவனுடைய திருப்பாத மல ரைச் சிவானந்தம் பெருகும்படி அறிவினாலாராய்ந்து சார்வது எந்த நாளோ ?

குறிப்பு :—மூ - மூத்த ; பழமையான. மூன்றிடத்துமுள்ள ஏழுலகங்கள் என்று பொருள் கொண்டால், ஈரிடத்தே ஏழுலகங் கூறு மரபிற்கு மாறாகும். 'ஏழு' என்பதை 'எழு' என்பதன் நீட்சியாகக் கொண்டு மேல் கீழ் நடுவென்னு மூவிடத்தும் எழும் மூவகையான உலகங்கள் யாவற்றிற்கும் என்றும் பொருள்கொள்ள லாம் 'பேதாய்' என்றது பக்குவமடைவதற்குமுன்னே தன்னை யாண்டமையால் அது இகழ்ச்சிபோற் புகழ்ச்சி. 'பெருந்தேன்' என்பது சிவானந்தத்துக்கு அறிகுறி பில்க - சிந்த. ஏதாமணியே என்பதை மேதாமணியே எனக்கொண்டு அறிவு வடிவாகிய ரத்தி னமே என்றுமுரைப்பர். மேதா - அறிவு (௯)

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்துபாதப்
பூப்போ தணைவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

உரை :—எல்லாவற்றையும் படைப்பவனும், காப்பவனும், ஒடுக்குபவனுமானவனே, இடம் நிறைந்த வானின்கணுள்ள தேவர்களுக்கெல்லாம் முற்பட்டமையால், மூத்தவனாயிருப்பவனே, ஆனால் முதிர்ச்சியெய்தாத ஆதியாய் நின்ற தத்துவனே, முன்னாளிலே யென்னையாட்கொண்ட அந்தணனே, பொள்ளலில்லாத மாணிக்கமாகிய உன்னையடைந்து எமது மேலோனே யென்று இடைவிடாது பாடிப் பொலிவுடைய உமது பாதமலரைச் சார்வது எந்த நாளோ?

குறிப்பு —முழுதும் படைப்பாய், காப்பாய், கரப்பாயென வரிசைப்படுத்துக. கண் - இடம், பெருமை. அந்தணவடிவொடு ஆண்டமையாற் 'பார்ப்பானே' என்றார். பூப்போது - பொலிவுடைய மலர், அழகிய மலர். (௧0)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

வாழாப்பத்து

முத்தி உபாயம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநா னற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

உரை :—மண்ணுமாய் விண்ணுமாய் எங்கும் வியாபித்த எமது மேலோனே! நான் வேறு ஆதரவில்லாதவன், சிவலோக மன்னனே, (அங்கு) சிறப்பாய் விளங்குபவனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்குஞ் சிவபெருமானே, என்னை யாட்கொண்ட நீ வீட்டின்பத்தை நல்கி யருள வில்லையானால் உன்னைத் தவிர நான் யாரோடு நொந்து கொள்வேன்? வேறு யாரிடம் இக்குறையை எடுத்துப் பேசுவேன்? நெடிய கடல் சூழ்ந்த இவ்வுலகில் வாழ்ந்திருக்க இயலாத என்னை உன்பால் வருகவென்று அருள் செய்வாயாக.

குறிப்பு :—மண்ணும் விண்ணுங் கூறவே எங்கும் வியாபகமானமை கூறியவாறாயிற்று. பற்று - ஆதரவு. 'சிவபுரத்தரசே சீரொடு பொலிவா' வென மாற்றுக. 'ஆண்ட நீ யருளிலையானால்'

என்பதை 'ஆரொடு நோகேன்' என்பதன் முன் வைக்க 'கண்டாய்' அசை. (க)

வம்பனேனைத் தன்னை ஆண்ட மாமணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே.

உரை:—வீணனாகிய என்னையாட்கொண்ட பெருமை பொருந்திய இரத்தினம்போல்வானே, நான் வேறு ஆதரவில்லாதவன். தேவர்களும் அறியமுடியாத ஒப்பற்றவனே, அயன் மால் என்னு மிருவருடைய அறிவினைக் கடந்து, உலகங்களை ஊடுருவிச் சென்ற சிவந்த திருமேனி உடைய பெருமானே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையில் தங்கும் சிவபெருமானே, எமது தலைவனே, என்னை யாட்கொண்டவனே, என்னை நீ விரைவில் உன்பால் அழைத்துக்கொள்க.

குறிப்பு:—வம்பு - பயனின்மை. இருவர்க்கு-இருவருடைய. உம்பர் - வானவர் (உ)

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பது முன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

உரை :—திருமால் பாடித் துதிக்கும் உன்னுடைய திருவடிகளே யல்லாமல் வேறு ஆதரவு உடையேன் அல்லேன், சிவலோக மன்னனே! நீயாகவே என்னைத்தேடி வந்தாட்கொண்டாய். திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே, பிணங்குவதும உன்னோடுதான். மகிழுவதும உன்னைக் கண்டே, எனககு உறுதியறிவிப்பது உனக்குரியதே. வாட்டமடைந்தேனாகிய நான் இந்த உலகிலே வாழமாட்டேன். உனபால் வருக வென்று அருள் செயவாயாக.

குறிப்பு :—'பாடி மால்' என்பதை 'மால் பாடி' என மாற்றுக. எனக்குறுதி புணர்ததுவது உனக்கு எனக கொள்க. (௫)

வல்லைவா ளரக்கா புரமெரித தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூததா சிவபுரத தரசே
திருப்பெருந துறையுறை சிவனே
எல்லாழ வுலகும் உருவியன் றிருவர்
காணுமநாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

உரை :—விரைவிலே வாளினையுடைய அசுராகளது திரிபுரத்தை எரித்தவனே, நான் வேறு ஆதரவில்லாதவன். தில்லைப் பதியில் வாழ்கின்ற கூத்தப்பெருமானே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையிற்றங்கி யருளிய சிவபெருமானே, பண்டைக் காலத்து அயனுமாலுமாகிய இருவர் உன்னைக் காண முயன்ற நாளிலே மேல் கீழ் நடுவென்ற எல்லையுடைய உலகங்களை ஊடுருவி முதலும் முடிவுந் தோன்றாமை செய்யும் வலிமை யுடையனாய் வளர்நதவனே, நானிவ்வுலகில் வாழமாட்டேன். உன்பால் வருக வென்றருள் செய்வாயாக.

குறிப்பு :—வல்லை - விரைவில். அரக்கரும் அசுரரும் வேறாயினும் இருசொல்லும் பரியாய நாமங்களாய் வருதல் காண்க.

அன்று - பண்டைக்காலம். 'அன்று இருவர் காணும் நாள் எல்லை மூவுலகுமுருவி ஆதியீறின்மை வல்லையாய்' என முடிக்க. வல்லையாய்-வலிமையுடையவனாய் (௪)

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

உரை :—பண்ணை யொத்த சொல்லையுடைய உமை யம்மை பாகனே! நான், உன்னை யல்லாது வேறு ஆதரவில்லாதவன். உறுதியாக என்னை யாட்கொண்டவனே, சிவலோகப்பெருமானே, திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே, அறிவுக் கருவியாகிய மனத்தையும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளையும் நின்னிடத்தே வைத்து விட்டுப் பின் இம் மண்ணுலகில் அடியேன் வாழமாட்டேன். என்னை உன்பால் வருக வென்றருள் செய்க.

குறிப்பு —பண்ணின் நேர் எனவும, பண்ணின் ஏர் எனவும் பிரிக்கலாம். பின்னதற்கு, பண்ணைப்போல அழகிய என்று பொருள். தமது மனமும், ஐம்பொறிகளும் இறைவனை நாளடிமை இதன்கட் குறித்தார். (௫)

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே

அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேனை இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

உரை :—பஞ்சைப்போன்ற மென்மையான அடியை உடைய உமையம்மை பாகனே! நீயல்லால் எனக்கு வேறு ஆதரவு இல்லை. மிகச் செவ்வையாகவே ஆட்கொண்டருளியவனே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, நீ நல்கின திருவருளினை மயக்கத்தால் மறந்த நாயேன் பயப்படலாயினேன். வஞ்சனையுடையேனாயினும் யானிவ்வுலகில் வாழ மாட்டேன். வருகவென்றருள் செய்வாயாக

குறிப்பு :—'பஞ்சின்' எனபதற்கு 'ஊட்டின செம்பஞ்சை யுடைய' எனவும் கூறுப. செஞ்செவே - செம் + செவ்வே - மிகச் செவ்வையாக. நீ யளித்த அருளினை மருளினால் மறந்த நாயேன் அஞ்சினேன் வஞ்சனேனை என முடிக்க. (௬)

பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

உரை :—சூரிய மண்டலத்திலுள்ள ஒளியையுடையவனே, உன் திருவடியே யல்லாமல் வேறு ஆதரவிலாதேன். சிறப்பு மிகுந்த அழகிய சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே, உலகப் பொருள் எதனையும்

நோக்காது உன் திருவருளையே கருதி உள்ளங் கனிந்துருகி உன்னோடு கலப்புற்று வாழும விதத்தை யறியாத மயக்கமுடையேன் (ஆயினும்) இவ்வுலகிலே நான் வாழமாட்டேன். உன்பால் வருகவென்று அருள் செய்வாயாக.

குறிப்பு :—இறைவன் செம்மேனியனாதலின் சூரியமண்டலத்தி னொளிக்கு அவன் மேனி யொளியை உவமித்தார். திரு - வீடளிக்குஞ் சிறப்பு. (எ)

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும்பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்து(ய்)ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

உரை :—பந்தின் உருட்சித தன்மை வாய்ந்த விரலையுடைய உமையம்மை பாகனே, நீ யல்லாமல் வேறு ஆதரவு இல்லாதேன். செவ்விய அனல்போன்ற திருமேனியுடையவனே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையிற்றங்கிய சிவபெருமானே, முடிவில்லாத நிதியனே, பெறுதற்கரிய பெரிய பொருளே, கிடைத்தற்கரிய சாவா மருந்தே, அடியேன் உய்தி கூடும்படி குருவாய் வந்து ஆட்கொண்டவனே, இவ்வுலகில் வாழமாட்டேன். வருகவென்றருள் செய்க.

குறிப்பு :—'பந்தணை' என்பதற்குப் பந்து சேர்ந்த என உரைப்பாருமுளர். 'அந்தமிலமுதே' என்பதில் அமுதென்பது மரணத்தைக் கடந்தவன் என்ற பொருளுடைத்து. 'உய்வந்து அடியேனை ஆண்டாய்' என முடிக்க. (அ)

பாவநா சாவுன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

உரை :—தீவினையை அழிப்பவனே, உனது திருவடி யன்றி வேறு ஆதரவு இலலாதேன். விண்ணவர்க்குத் தலைவனே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்குஞ் சிவபெருமானே, மூவுலகங்களையும் ஊடுருவும்படி அயன்மால் இருவரும் மேலுங் கீழுஞ் சென்று தேடுமாறு ஒலிக்கின்ற அனற்பிழம்பாய் உயர்ந்து நின்றவனே, யானைத்தோல் போர்த்தவனே, இவ்வுலகில் வாழமாட்டேன். வருகவென்றருள் செய்வாயாக,

குறிப்பு :—மூவுல குருவ என்பதை இருவர் என்பதனோடும், கீழ்மேலாய் என்பதை நிமிர்ந்தானே என்பதோடும், முழங்கு என்பதை அழலாய் என்பதோடும் முடித்தலுமுண்டு. மாவுரி யென்பது புலித்தோலையும் குறிக்கும். (௧)

பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

உரை:—குற்றமற்ற பழமையான புகழையுடைய உமை யம்மை பாகனே, உன்னையன்றி வேறு ஆதரவில்லாதேன். செழுமையுற்ற பிறையினை யணிந்தவனே, சிவலோக மன்னனே, திருப்பெருந்துறையி லெழுநதருளி யிருக்குஞ் சிவபெருமானே, உன்னைத் தவிர, பிறதேவர்களை வணங்குவேனோ, வாழததுவேனோ, எனககுதவியாகக கருதுவேனோ? கூறியருள்க. இளங்காளையை வாகனமாக உடையவனே, இவவுலகில் வாழமாட்டேன். வருக வென்றருள் செய்வாயாக.

குறிப்பு:—சிவததோடு சத்தியும் யாண்டு முண்மையால் அவள் கீர்த்தியைத தொல்புகழ் என்றார. சநதிரன் கடவுளை யடைநது செழுமையுற்றமையால் செழுமதி என்றார. தொழுவேனோ, துதிப் பனோ, நினைவனோ என்றமையால் மனம, வாக்கு, காயம் என்ற மூன்றினுலும் பிறரை வழிபடேன் என்று குறிப்பித்தார். வருக வென றருள்புரிதல் அறம் என்பார், அறத்திற்கு அறிகுறியாகிய விடையைக் கூறினர். (௩0)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

அருட்பத்து

மகாமாயா சுத்தி

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

உரை :— ஒளிவடிவானவனே! (ஞாயிறு, திங்கள் என்ற இரு) சுடரானவனே! (அவற்றை) சூழ்ந்த (நட்சத்திரங்களாகிய) தன்னொளியுடைய விளக்குகளானவனே! சுழல்களையுடைய கூந்தலையும் பருத்த தகிலையுமுடைய உமைமங்கையைத் திருமேனியிற் பாதியாகக் கொண்டவனே! மேலோனே! பாலின் நிறத்தைக் கொண்ட திருவெண்ணீற்றை யணிந்தவனே! தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும் திருமாலுமறியாத நியாயவானே! வளம் பொருந்திய திருப்பெருந்துறையில் மலர் நிறைந்த குருந்த மரத்தடியின்கீழ் வீற்றிருந்த சிறப்பையுடைய முதல்வனே! அடியேன் விரும்பி உன்னை அழைத்தால் நீ அஞ்சாதே என்றுறுதி யுரைத் தருள்க.

குறிப்பு :—ஞாயிற்றைச் சோதியென்றும், திங்களைச் சுடரென்றும், நெருப்பினை விளக்கென்றுங் கூறுவாருமுளர். மடந்தை -

மடமையுடைய பெண். மடமை - இளமை, அடக்கம், கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. பாதியென்றதனால் உமையம்மை உடம்பினில் தான் பாதியாயிருப்பவனென்று பொருள் கொள்வாருளர். பால் என்பது பாலின் நிறத்திற்கு ஆகுபெயராய் நின்றது. சீர் - அடியார்க்கு ஞானமருளுஞ் சிறப்பு. அதெந்துவே என்ற திசைச்சொல்லை மலையாளச் சொல்லாகக் கொண்டு அதென்னவென்று கேட்டருள்க எனப் பொருளுரைப்பதுமுண்டு. கன்னடத்தில் அஞ்சாதே என்ற பொருளுடைய தென்ப (க)

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
　　கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
　　உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
　　செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
　　அதெந்துவே என்றரு ளாயே

உரை:—கூத்தப் பெருமானே! குற்றமற்றவனே! திருநீறணிந்தவனே! நெற்றிக் கண்ணையுடையவனே! வானோர் தலைவனே! ஒப்பற்றவனே! உன்னைக் காண்பதற்காகக் கூவியழைத்து உலக முழுவதுந் தேடியுங் காணக்கூடவில்லை. திருந்திய முறையாலமைந்த தடாகத்தையுடைய திருப்பெருந்துறையின்கண் வளம்மிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய மெய்ப்பொருளானவனே! அடியேன் விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

குறிப்பு:—உயிர் தானே முயன்று கடவுளைக் காண முடியாதென்பதும், தேடி முயன்ற காலை பக்குவம் பார்த்து இறைவன் தானே வந்து அருள் புரிவானென்பதும் இதனுட் கூறப்பட்டன. திருத்தமாம் என்பதைத் திருப்பெருந்துறை என்பதோடு சேர்த்து

யான் திருத்தமடைவதற்கு ஏதுவாகிய என்றும் பொருள்கொள்ப.
அருத்தம் - பொருள் ... ..அருத்தன் - பொருளானவன். (௨)

எங்கள்நா யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள்நா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண்நா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

உரை.—எங்கள் தலைவனே! எனதுயிர் நாதனே! மயிர்ச் சாந்தணிந்த நீண்ட கூந்தலையுடைய உமை, கங்கை என விருவர் கணவனே! சிறந்த அழகுடைய மன்மதனுடைய உடலானது தீப்பற்றுமாறு நோக்கிய சிவந்த நெற்றிக் கண்ணையுடைய பெருமானே! திருப்பெருந்துறையின்கண் வளமிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய அருட் கண்ணை யுடையவனே! அடியேன் விரும்பியழைத்தால் அஞ்சாதே என்றருள் செய்வாயாக

குறிப்பு:— உயிர்களுக்கெல்லாம் தலைவனாதலின், எங்கள் நாயகனென்றார். குழலிமாரிருவர் என்பதற்குக் கிரியா சக்தி, ஞான சக்தி என்பாருமுளர். நெற்றிக்கண் நெருப்புக் கண்ணாதலின் செங்கணாயகன் என்றார். அழகிற் சிறந்தவனாதலால் தக்க நற்காமன் என்றார். (௩)

கமலநான் முகனுங் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படாய என்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்

திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

உரை:—தாமரையில் வீற்றிருக்கும் அயனும், கரிய மேகத்தின் நிறத்தினையுடைய திருமாலும் யாண்டும் காணமுடியாத பாசமில்லாதவனே! எங்களுக்கு வெளிப்பட வேண்டுமென்று இரந்து வேண்ட, பெரிய அனற்பிழம்பிலிருந்து வெளி வந்தருளிய என் தந்தையே! ஒலி முழக்கமுடைய நான்கு வேதங்களும் பயில்கின்ற திருப்பெருந்துறையில் வளமிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய மாசிலாதவனே! அடியேன் விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்றருள செய்வாயாக.

குறிப்பு:—திமிலம் - பேரொலி. விமலன் - இயல்பாகவே பாசங்களில் நீங்கினவன். அமலன் - குற்றமற்றவன். நான்மறை - பல்வகை மந்திரங்கள என்று பொருள் கொள்வாரு முளர். (௪)

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

உரை:—உடுக்கையின் வடிவத்தை உடைய நுண்ணிய இடையை உடையவளாகிய சுழன்ற கூந்தலை உடைய மங்கையாகிய உமை யம்மையின் இரு தகிலின் நுனிகள் அழுந்திய தழும்புகள் சாம்பல சூழ்ந்த பெரிய அனலின் நடுவில் இரண்டு புள்ளிகள் போல விளங்கும் ஒளி தங்கிய மார்பினனே! புதர்களைக்

கொண்ட பெரிய சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் வளமிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்புடைய கடவுளே! அடியேன் விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

குறிப்பு :—காஞ்சீபுரத்தில் உமை இறைவனைப் பூசித்த காலை வெள்ளம் வந்துவிட, தனது முலைக்கணைகள் இறைவனது மார்பினிலே பதியும்படி தழுவிய கதை ஈண்டுக் குறிக்கப் பெற்றது. சுவடு-தழும்பு; இறைவனது திருமேனி வான்றழலிற்கும், அவர் மேலணிந்த சாம்பல் வெண்ணீற்றுக்கும், புள்ளி சுவட்டிற்கும் உவமையாயின செடி-புதர். அடிகள்-கடவுள், சுவாமிகள் (௩)

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்(து)
ஒப்பனே உன்னை உள்குவா மனத்தின்
உறுசுவை யளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

உரை — பவளம் போல்பவனே! பரிசுத்தமானவனே! சுத்தமான திருவெண்ணீறு படிந்து மின்னுமொளியானது வயிரத்தின் மின்னுமொளி போன்ற விளக்கமுடையவனே! உன்னை நினைக்கின்றவர்களுள்ளத்தில் மிகுந்த சுவை தருகின்ற கிடைத்தற்கரிய அமுதமானவனே! செவ்விய பெரிய மந்திரங்கள் நிறைந்த திருப்பெருந்துறையின் கண்ணே வளமிக்க மலர்களை யுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருக்கும் தந்தையே! அடியேன் உன்னை விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக

குறிப்பு :—பவள மேனியின் இடையிடையே படிந்து தோற்றும் திருவெண்ணீற்றடையாளங்கள் அசைகின்ற ஒளி போன்ற

மையால் துளங்கொளி என்றா துதைந்து - நெருங்கி, படிந்து. செப்பம் - செம்மை. (சு)

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
 மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
 கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
 செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
 அதெந்துவே என்றரு ளாயே.

உரை:—நிலைத்த பொருளானவனே! அன்பர் பொருட்டு வெவ்வேறு வடிவங் கொள்பவனே! மேரு மலையை வில்லாகக் கொண்டு பகைவர்கள் ஊர்கள் மூன்றையும் எரித்தழித்த திருக் கையையுடையவனே! திருப்பாதத்தினால் எமனைக் கோபித் துதைத்த கடுமையாகிய அனல் துண்போன்ற திருமேனியுடைய செம்மையனே! வளம் பொருந்திய திருப்பெருந்துறையிலே வள மிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருக் கும் சிறப்புடைய தலைவனே! அடியேன் உன்னை விரும்பிக் கூப்பிட்டால் அஞ்சாதே என்று அருள் செய்வாயாக.

குறிப்பு:—விகிர்தா என்றதற்குப் பொய்யனே எனப்பொருள் கொள்வாரு முளர். மெய்யர்க்கு மெய்யனாகவும், பொய்யர்க்குப் பொய்யனாகவு மிருத்தலால் அவ்வாறு கூறுவர். வில்லா வென்ப தைக் கையனே என்பதனோடு முடிக்க. வில்லையுடைய கையனே என்பது கருத்து. செய்யனே-செம்மையனே - நேர்மையனே. பிழம்பு-திரட்சி. (எ)

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
 மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்

பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

உரை :—இயல்பாகவே பாசங்களில் நீங்கினவனே! ஆதியான வனே! முக்கண்ணுடையவனே! தவவேடங் கொண்டவனே! அரும்பு நிலைமாறாத பூவினைப் பறித்துத் திருவடிகளிலே தூவி வணங்கி அன்பாகத் தியானித்துத் துதிக்கின்றவர்களுக்கு மேலான நெறியினை நல்கியருளும் ஞானவடிவனே! வளம்பொருந் திய திருப்பெருந்துறையில் வளமிக்க மலர்களை உடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருக்குஞ் சிறப்புடைய அப்பனே! அடியேன் உன்னை விரும்பி அழைத்தால் அஞ்சாதே என்றருள் செய்வாயாக.

குறிப்பு :—ஞாயிறு, திங்கள், அக்கினி மூன்றையும் இறைவ னுக்கு முக்கண்ணாகக் கூறுவர். முனிவர் என்பதற்குத் துறவு வேடம் உடையவனே என்று உரைப்பர். இறைஞ்சுதல், நினைதல், பரவுதல் மூன்றுங் கூறினமையால் திரிகரணங்களாலும் வழிபடு வது குறிக்கப்பட்டது. சித்தன் என்பதற்குச் சித்தா வடிவ முடை யவனென்று உரைப்பர். சித்து - அறிவு, நுட்பமான அற்புதத் திருவிளையாட்டு. (அ)

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்

அருளனே அடியேனை ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.

உரை :—மருட்சியுடைய எனது உள்ளத்தை மயக்கந் தீரும்படி யாகத் திருவருட் கண்ணாற் பார்த்து, இம்மை மறுமை என்னு மிரண்டின் சாரமான பிறவியொழித்த மெய்ப்பொருளானவனே! (குற்றமற்ற) தூயதன்மையை உடையவனே! சீறுகின்ற ஒளி யுடைய பாம்புங் கங்கையுந் தங்கிய சிவந்த சடையையுடையவனே! உயிர்கள் தெளிவடைவதற் கேதுவாகிய நான்மறைகளும் பொருந் திய திருப்பெருந்துறையின்கண் வளமிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருந்தருளிய சிறப்புடைய கருணையாளனே! அடியேன் உன்னை விரும்பிக் கூப்பிட்டால் அஞ்சாதே என்றருள் செய்வாயாக.

குறிப்பு :—மருள் - திரிபுணர்ச்சி. மயக்கு-அறியாமை. பிறவி யறுத்தமையால் மறுமையும் இம்மையும் ஒழிந்தன. பொருள் - மெய். பொங்கு - சீறுகின்ற. வாள் - ஒளி. (௯)

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்
டென்னுடை எம்பிரான் என்றென்(று)
அருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றருளாயே.

உரை :—திருத்தமாகிய பெரிய சோலை சூழ்ந்த திருப்பெருந் துறையிலே வளமிக்க மலர்களையுடைய குருந்த மரத்தடியில் விரும்பி வீற்றிருந்த சிறப்பு இருந்த முறையை நினைந்து, அது காணப்பெறாமையால் துக்கித்து, என்னை அடிமையாகவுடைய

எமது தலைவனை என்று கருதி அவ்வாறழைத்து, அரிய தவவுருவ முடையவனே என எண்ணி விரும்பி யழைத்ததால், பிறவியாகிய அலை மிகுந்த கடலின்கண் நின்று என்னை யடைவதற்கு நீ வா, கயிலைக்குச் செல்லும் வழி இதுதான் பார், அவ்வழியே போவாய் என்று அருள் செய்யவேண்டும்.

குறிப்பு —திருந்து - தாம் திருந்துதற் கேதுவாகிய என்றும் பொருளுரைப்பர். ஏசறு - ஏசற்று - துக்கித்து. இனைந்திட்டு எனவும் பாடமுண்டு. இனைந்திட்டு - வருந்தி. எம்பிரான், அருந் தவா, என்றென்று நினைந்தே என முடிக்க. அலைகடல் என்பது துன்பமுள்ள பிறவிக்கு உருவகமாக நின்றது. ஆனந்தக்கடலுக்கு அதனை உருவகமாகக் கூறுவாரு முளர். ஆனந்தக்கடல் அலைகடல் ஆகுமா என்பது ஐயம். கயிலை - வீட்டிற் கறிகுறி. போதராய் - போவாய் அல்லது வருவாய். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றத்தில் அருளிய

திருக்கழுக்குன்றப் பதிகம்

குரு தரிசனம்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பிணக்கி லாதபெருந்துறைப்பெரு மானுன் நாமங்கள் பேசுவார்க்(கு), இணக்கி லாததோர் இன்பமேவருந் துன்பமே துடைத் தெம்பிரான், உணக்கி லாததோர் வித்து மேல் விளையாமல் என்வினை ஒத்தபின், கணக்கி லாததிருக் கோலம் நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

உரை :— யாவரிடத்திலும் மாறுபாடில்லாத திருப்பெருந் துறையில் வீற்றிருந்த பெருமானே! உன்னுடைய திருப்பெயர் களை எடுத்தியம்புவார்களுக்கு நிகரற்ற சிறந்த பேரின்பமே உண் டாகும். எமது தலைவனாகிய நீ, துயரங்களை யொழித்து, காய்ந்து போதல் இல்லாத தனித்தன்மையுடைய பிறவி வித்தையானது மேலே விளையாதபடி, இருவினையொப்பு எனக்கு வந்தபிறகு, அளவிலடங்காத உனது திருவடிவத்தைத் திருக்கழுக்குன்றத்தே எழுந்தருளி வந்து காண்பித்தனை.

குறிப்பு :—பிணக்கு - சண்டை; மாறுபாடு. இணக்கு - இணங்கு என்பதன் விகாரம்; ஒப்பு. உணக்குதல் - காய்தல், வற்றுதல். ஓர் - தனியியல்புடைய. இருவினையொப்பு என்பது - இருவினைப் பயன்களிலும் ஒரு தன்மையான வெறுப்பு. கணக்கிலா - அகண்ட மான. (க)

பிட்டு நேர்பட மண்சு மந்த பெருந்துறைப்பெரும் பித்தனே, சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன் உனைச் சார்ந்திலேன், சிட்டனேசிவ லோகனே சிறுநாயினுங் கடை

யாயவெங், கட்டனேனையும் ஆட்கொள் வான்வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே

உரை :—(மதுரைப் பிட்டு வாணிச்சியின்) பிட்டினை ஏற்றுக் கொள்ள, மண்சுமந்த திருவிளையாட லியற்றிய திருப்பெருந்துறை யிறங்கிய (அன்பர்பால்) பேரருட் பித்துடையவனே! உனது கட்டளைத் திட்டத்திற்கு ஒத்துவராத குற்றமுடைய யான உன்னை யானே அடையமாட்டேன். சிறந்த ஒழுக்கநெறி யானவனே! சிவ லோக நாதனே! இழிந்த நாயினும் கீழ்ப்பட்ட கொடிய, துன்ப முடைய என்னையும் அடிமைகொண் டருளும்பொருட்டு, திருக் கழுக்குன்றத்தில் எழுந்தருளி உன் திருக்கோலம் காண்பித் தருளினை.

குறிப்பு —நேர்பட - இசைந்து கொள்ள, ஒத்துமைப்பட. சழக்கு - குற்றம். சிட்டன் - ஆசார முடையவன். கட்டம் - கஷ்டம். சட்ட என்பதற்கு முற்றிலும் எனப் பொருள் கொள்ளு வது முண்டு (௨)

மலங்கி னேன்கண்ணில் நீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை, விலங்கி னேன்வினைக் கேடனே னினி மேல் விளைவ தறிந்திலேன், இலங்கு கின்றநின் சேவடிகள் இரண் டும் வைப்பிட மின்றியே, கலங்கி னேனைக் கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

உரை :—(பிறவித் துயரால்) கலங்கின என்னுடைய கண்ணீ ரைத் துடைத்துப் பாசமறுத்த பெருந்துறைப் பெருமானை விட்டு நீங்கினேன். நான் தீவினையாகிய கெடுதியை யுடையேன். இனி மேல் நிகழக்கூடிய பயனை அறியாதேன். (என் மனம் பரிசுத்த மின்மையால்) அறிவில் விளங்குகின்ற உன் செய்ய பொற்பாதங்க ளிரண்டினையும் வைத்து வழிபடும் இடமில்லாமல் மருண்டேன். அங்ஙனம் நான் மயங்காவண்ணம், திருக்கழுக்குன்றத்திலே நின் திருவருட் கோலத்தைக் காட்டியருளினை.

குறிப்பு :—மலங்குதல் - அசைதல், கலங்கல். பெருந்துறை - ஆகுபெயர். பெருந்துறை யென்பதற்கு, மலங்கெடுத்த இடமாகிய

பெருந்துறையை யெனவும், மலங் கெடுத்தற் கேதுவாய பெரிய நெறியை யெனவுங் கூறுப. விலகினேன் என்பது தொகுத்தல் விகாரம், விலங்கினேன் என்பது. (உ)

பூணொணாததோ ரன்பு பூண்டு பொருந்திநாள
தொறும் போற்றவும், நாணொணாததோர் நாணமெய்தி
நடுக்கடலுள் அழுந்திநான், பேணொணாதபெ ருந்துறைப்
பெருந் தோணிபற்றி யுகைத்தலும், காணொணாத்திருக்
கோலம் நீவந்து காட்டினாய்கழுக் குன்றிலே

உரை :—(உனதன்பர்) பிறரால் மேற்கொள்ளப்படாத உயர்ந்த பேரன்பு பூண்டு உன்னை யடைந்து தினமும் வழிபடவும், அது செய்ய இயலாமையால், அன்பர் வெட்கப்படக் கூடாததொரு வெட்க மடைந்து, பிறவியாகிய கடல் நடுவுள் ஆழ்ந்துபோக இருந்த யான், அடியேன் பற்றிப் போற்றுதற்கரிய, திருப்பெருந் துறையிற் பரமாசாரியனது திருவடிகளாகிய பெரிய தெப்பத்தை எய்தி அதனைச் செலுத்துதலும், எளியேன் காணுதற்கரிய அகண்டமாய நின் திருவடிவத்தைத் திருக்கழுக்குன்றத்திலே எனக்கு உணர்த்தி யருளினை.

குறிப்பு.—முதலிரண்டடியும், திருப்பெருந்துறையில் அருள் பெறுதற்கு முன்னுள்ள அடிகள் நிலையைக் குறிப்பன. பெருநெறி யாகிய பெருந்தோணி யென்பாருமுளர். தோணி - திருவடிக்கே உவமையாதல் மரபு. (௩)

கோல மேனிவ ராக மேகுண மாம்பெ ருந்துறைக் கொண்டல்
சீல மேதும் அறிந்தி லாதஎன் சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நானுனை நச்சி நச்சிட வந்திடுங்
கால மேஉனை ஓதநீ வந்து காட்டினாய்கழுக் குன்றிலே.

உரை :—(பன்றிக் குட்டிக்கு முலைகொடுப்பான் வேண்டிய) அழகிய திருமேனியுடைய பன்றி யுருவனே! திருப்பெருந் துறைக்கண் வீற்றிருந்த, நற்பண்பாகிய அருண் மேகமே! நல்லொழுக்கம் யாதும் அறியாத எனது உள்ளத்தில் வைக்கப்பட்ட தலைமணி

போல்வானே! நான் உன்னை மிகவும் விரும்பிய அளவில், உலகமே சான்றாகும்படி, அருள்செய்ய விரைவில் எழுந்தருளி வந்திட்டவனாகிய காலத்தை வடிவாக வுடையவனே! உன்னை நான் துதிக்கும்படி திருக்கழுக்குன்றத்திலே உன் திருக்கோலத்தைக் காட்டியருளினை.

குறிப்பு — கோலம் - அழகு. பன்றிக்குட்டிகட்கு முலை கொடுத்த செய்தி, திருவிளையாடற் புராணத்திற் காண்க. கொண்டல் - மேகம். கரி - சாட்சி. திருப்பெருந்துறையில் எழுந்தருளி அடிகட்குபதேசித்ததமை, உலக மறிய நேர்ந்ததாகலின், ஞாலமே கரியாக என்றார். நச்சி நச்சிட - மிகவும் விரும்பிட. காலதத்துவம் - இறைவன் தொழிற்குத் துணையாதலின் அவன் வடிவமாகக் கூறுதல் மரபு. பக்குவ காலத்தையும், இறைவனையும் ஒன்றாகவே கருதினமை காண்க. (ரு)

பேதமில் லதொர் கற்பளித்த பெருந்துறைப் பெரு வெள்ளமே, ஏதமே பல பேச நீஎனை ஏதி லார்முனம் என் செய்தாய், சாதல் சாதல்பொல் லாமை யற்ற தனிச்ச ரண் சரணாமெனக், காத லால்உனை ஓதநீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

உரை:—உன்னிடமிருந்து வேறுபாடடைதற் கேது வில்லாத ஒப்பற்ற கற்பு நிலையை எனக்குக் கொடுத்தருளிய திருப்பெருந் துறையிற் றங்கிய இன்பப் பெருங் கடலானவனே, நான் உன்னைப் பற்றிக் குறைகளே கூறும்படி, அயலார் முன்னிலையில் என்னை விடுத்து, நீ யாது செய்தாய்? அழிவற்றதாய்த் தீங்கற்றதாய் ஒப்பற்றதாயுள்ள உன் திருவடியே புகலென்று நான் அன்பினாலே உன்னைத் துதிக்கும்படி, திருக்கழுக்குன்றிலே நீ உனது திருக் கோலங் காண்பித்தனை.

குறிப்பு :—கற்பு - கற்புடைப் பெண்டிர் பிற கணவரை நாடாமைபோலப் பிற தெய்வத்தை நாடா நிலை. கற்பு-கல்வி எனவு முரைப்பர். பேதமில்லதோர் கற்பு - அத்துவித ஞானம். இறைவன் உபதேசஞ் செய்தவுடன், தம்முடன் அடிகளை அழைத்துச் செல்லாமையின், ஏதிலார் முனம் என்செய்தாய் என்றார்.

சாதல் சாதல் - சாதலில்லாமை, அழிவின்மை. பொல்லாமை, பாசச சாாபாய குற்றம். உனை யோத-என்பதற்கு, உன்னை நான் ஓதவும், அஙஙனம் ஓதியபின் எனவு முரைப்பா. (௬)

இயக்கி மாராறு பத்து நால்வரை எணகுணம செய்த ஈசனே, மயகக மாயதொர் முமம லபபழ வல்வி னைக்குள் அழுநதவும, துயகக றுதெனை ஆண்டு கொண்டுநின் தூய் மலர்க்கழல் தந்தெனைக், கயக்க வைத்தடி யாாமு னேவந்து காட்டினாய் கழுக்குன் றிலே

உரை:—(உததரகோசமஙகையில் ஞானோபதேசஞ் செய்து) இயககப் பெணகளாகிய அறுபத்து நாலவரை இறைவனது எட்டுத் திருககுணஙகளின் வயமாககிய ஆண்டவனே! அறியாமைக் கேதுவாகிய இருள், வினை, மருள என்னு மும்மலஙகளினு லுளதாய பண்டைக கொடிய வினைப் பயன்களில் அடியேன் ஆழ்நது கிடப்பவும், அதனுலாய எனது தளர்சசியை யொழிதது என்னை ஆட்கொண்டருளி, உனது பரிசுத்தமான பூஙகழலகளைக் கொடுத்தருளி (உன்னுடன் அழைததுச செல்லாது) அஙஙனஞ் சென்ற அடியவர்கள் முன்பாக என்னைத துயருறுவிதது, இப்போது திருககழுக் குன்றத்திலே எழுநதருளி வநது, உனது திருவருட் கோலத்தைக காட்டியருளினை

குறிப்பு.—இயககர் - பதினெட்டுத் தேவகணஙகளுள் ஒரு வகையார். இயககியர் காதை உததரகோசமஙகைப் புராணத்துட் காண்க. எண் குணம் - முற்றறிவு, இயற்கை யறிவு, தம் வயமுடைமை, இயல்பாகக் கட்டின்மை, வாம்பிலாற்றல், வரம்பிலின்பம், தூய வுடம்புடைமை, பேரருளுடைமை என்பன. 'எண் குணததுளோமே' என்ற அப்பர் திருவாக்குங் காண்க மும்மலத்துட் சேர்ந்த வினை-மூலவினை. வல்வினை யென்றது, இருவினைப் பயன்களை. துயக்கு - தளர்சசி. கயகக - கசக்க, துனபுற. இதற்குச சிறக்க வென்று பொருள் கொள்வாரு முளர். (எ)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

கண்டபத்து

நிருத்த தரிசனம்

கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே.

உரை :—ஐம்பொறிகளின் வசப்பட்டு அறியாமையுற்று, இறந்தொழிவதற்கே ஏதுவாகி, இறந்தபின் வானிலே அலைந்து போய்க் கடத்தற்கரிய நரகத்தில் வீழும் இயல்புடைய எனக்கு, மனத்தைப் புனிதமாக்கிச் சிவமயமாகச் செய்து, என்னை ஆட்கொண்டருளிய முடிவில்லாத பேரின்பமானவனை அழகு கொண்ட தில்லைச் சபையிற் காணலாயினேன்.

குறிப்பு :—இந்திரியம்-பொறி. மயங்கி-மயக்க முற்று என்றுமுரைப்பர். திரிபுணர்ச்சி யெய்தி என்பது பொருள். இறந்தவுடன் வான் வழிச் சென்று பிற இடங்களுக்குப் போதல், நூல்களுட் கூறப்படும். சிந்தை-அறிவைக் குறிக்கும். சிவத்தின் வசப்படுதலே சிவமாதல் என அறிக. ஆனந்தம் இறைவனுக்கு ஆகுபெயர். (க)

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே

உரை :—வினைப்பயன் காரணமாக வருகின்ற பிறவியாகிய துன்பத்திலகப்பட்டு, இறைவனான தன்னைச் சற்றும் எண்ணாது சோர்வடைந்து கிடக்கின்ற என்னை, எவ்வளவோ பெரிய வகையில் ஆண்டருளி ஏற்றுக்கொண்டு என் பிறப்பினைத் தொலைத்த ஒப்பற்றவனை, உலக முழுதும் வழிபடுகின்ற தில்லைத் திருச்சபையிற் காணலாயினேன்

குறிப்பு —தனை யென்பதற்கு உயிராகிய தன்னை யென்று பொருள் கொள்ளுவாருமுளர். ஐம்புலனிற்பட்ட காலை, உயிர் தன்னையுந் தலைவனையு முணராமை காண்க. எனை-எத்துணை. (௨)

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லைகண்டேனே

உரை :—(இறைவனாகிய) தன்னுடைய வடிவத்தை யான் அறியாத காலத்திலேயே என் அறிவிற் புகுந்து, உள்ளத்தில் நிலைபெற்று, என் எண்ணத்தைத் திருத்தி, உடம்புகொண்டு எழுந்தருளிவந்து, திருவருளினால் என்னை ஆட்கொண்டருளியவனாகிய, திருத்துருத்தி யென்னுந் திருப்பதியில் வீற்றிருந்தவனது, இன்பம் பயக்கும் மங்கலமான திருவடியை ஆசையோடு, நாயனைய அடியேன் அழகுகொண்ட தில்லைத் திருச்சபையிற் காணலுற்றேன்.

குறிப்பு:—தான் இறைவனை அறிதற்குமுன், அவன் தன்னைப் பக்குவப்படுத்தினமை கூறினார். ஊன்புக்கு - என்பதற்குத் தனது உடலை யிடமாகக்கொண்டு என்று முரைப்பர். திருத்துருத்தி சோழநாட்டிலுள்ளது. பதம்-பாதம். சிவம்-மங்கலமான. அருத்தி-ஆசை, அன்பு. (௩)

கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனாய்வந்து வனப்பெய்தி இருக்கும் வண்ணம்

பலரொருங் காணஎன்றன பசுபாசம அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே.

உரை —ஞானம பெறாத சிற்றறிவுடையவனாய்க் கீழ்ப் பட்ட நாயனைய யானை, அறிவுத் திறமுடையவனாய்ப் போந்து அருளழகுடை- தினிதிருக்குமபடி, (அடியார்)பலருங்காண எனது பாசத்தன்மையும பசுத்தன்மையும தொலைத்தவனை, எல்லா உயிரும் வணங்குகின்ற தில்லைத் திருச்சபையிற் காணலாயினேன்.

குறிப்பு —வனப்பு - அழகு, புனிதம் பாசம - ஆணவம். பசு- தன்னுணர்ச்சி (௪)

சாதிகுலம பிறபபென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம பிறருருவம யான்எனதென் உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே

உரை .—வருணம, குலம், குடிப்பிறப்பு என்பவற்றின் சுழியி லகப்பட்டு, அவற்றால் ஏற்படும் பற்றுக்களால் அறிவு தடுமாறி, ஆதரவில்லாதேனாகிய நாயேனது பிறவித் துன்பத்தைத் தொலைத்து நாயேனை அடிமையாகக் கொண்டு என் அறியாமைக் குணம், பிறா வடிவின் நினைவு, யான் எனது என்ற செருக்கு மொழி என்பவற்றைக் களைந்து, குற்றமற்ற சாவாமருந்தானவனை, (அருள்) விளங்குகின்ற தில்லைச் சபையிற் கண்டேன்.

குறிப்பு —வருணம் - பெரும்பிரிவு. குலம்-அதனுட்பட்டது. அதனினுட்பகுதி, குடிப்பிறப்பு. ஆதம் - ஆதரவு. பிறருருவம் - பிற தெய்வத் தோற்றம் என்று முரைப்பர். ‘குலாவு’ என்பதற்கு ஞானம் விளங்கும் என்று முரைப்பர். (௫)

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம பலமமன்னி
மறையவரும வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

உரை :—பிறவிமுற்றிலும் மாறப்பெற்று, நோய், முதிரசபி என்பவையிரண்டும் சுற்றத்தார் பற்றிேேடு நீங்கும்படியாகப் போய், உலகத்தை உடைய ஒப்பற்ற முதலவனை, அடர்ந்த சோலை சூழ்ந்த தில்லை நகரததின்கணுள்ள ஞானசபையினை யடைந்து வேதியரும் விண்ணவரும் வழிபடுவதை நான் பார்த்தேன்.

குறிப்பு :—'பிணி மூப்பு உறவினெடு மொழிய' என்பதற்குப் பிணி, மூப்பு முதலியன தமக்கில்லாது சுற்றத்தாரோடு ஒழிய, என்று முரைப்பர். பிறவியொழிந்த விடத்தே, பிணி, மூப்பு, சுற்றப்பற்று முதலியன ஒழிதல் இயல்பே. (சு)

பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே

உரை :—எனது பசுத்தன்மையையும் மலககட்டினையும நீக்கியருளி, அன்பும் பண்புமில்லாத பித்தன் இவனுவன் எனறு என்னை உலகினர் கூறும்படி செய்வித்து, நான் பெயாநது போகாவணணம், நினைவு என்கின்ற வலிய கயிற்றினால் என்னைத திருவடியிற் கட்டுவித்த அறிஞராய பெருமானது திருவிளையாடலை (அருள) விளங்குகின்ற தில்லையின்கண பார்தேதேன்.

குறிப்பு :—பததிமை - அன்புடைமை. பரிசு - பண்பு பசு - தன்னினைவு. பாசம் - கட்டு. வித்தகனார் - கல்வியாளர், அறிஞர். (எ)

அளவிலாப பாவகத்தால் அழுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க்கிடப்பேனுக்(கு)
அளவிலா ஆனநதம் அளித்தென்னை ஆண்டானைக
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே.

உரை —அளவில்லாத எண்ணஙகளால் அழுத்தப்பெற்று நல்லறிவில்லாமல், செய்யும் வினையின் பயனைக எதிர்காலத்தில் வருவ

தொன்றையும் அறியாது, பயனற்றவனாய்க் கிடக்கு மியல்புடைய எனக்கு எல்லையிலாத பேரின்பம் ஈந்து என்னை ஆட்கொண்டவனை, வஞ்சமில்லாத தேவர்களுந் தொழுகின்ற தில்லையின்கட் கண்டேன்.

குறிப்பு —பாவகம - நினைவு, கற்பனை. அறிவின்றி - அறிவு விரிதற்கிடமின்றி. வெறுவியன - வெறுமையன், பயனற்றவன். களவிலாமையால், வானவர் தில்லையிற் றொழுவாராயினர் என்ற குறிப்புக் காண்க. களவிலா - சூழ்ச்சியற்ற, தூய்மையான. 'வானவரும்' என்பதில் உம்மை, பிற அடியாரையுந் தழுவியது. (அ)

பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமஅறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே

உரை —(இறைவனை நாடும்) முறையும் பயனும் ஒரு சிறிதும் தெரியாத நாயேனுக்கு உள்ளத்தே ஞானவொளியானது தழைத்து மிகும்படி முடிவில்லாத அன்பினைத் தந்தருளி, எனது வினைகளைத் தன்பாலேற்றுப் பாசத்தைக் களைந்து உயர்ந்த பேரருள் புரிந்தவனை, நான்கு வேதங்களும் முழங்குகின்ற தில்லைத் திருச்சபையிற் காணலாயினேன்

குறிப்பு —பாங்கு - முறை. பரிசு - பயன். 'உளத்தொளி ஓங்கி' என மாற்றுக. உளத்தொளி - உயிரினறிவிற் கலந்த இறையறிவு. உலத்தல் - வற்றிப்போதல். 'வாங்கு' என்பதற்குக் கழித்து என்றும் பொருளுரைப்பா. மலம் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள். நான்குமறை - நால்வகை வாக்குக்கள்.

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

உரை —ஐம்பூதங்களை வடிவாகக் கொண்டும், மனத்தால் அறியு மறிவாகியும், உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஆகியும், அப்பொருள்களின் வேறுபாடுகளெல்லாம் ஆகியும், தன்னியல்பில் மாற்றமில்லாத பெருந்தன்மையுடையானை, துன்பங்களைத் தொலைத்து ஆட்கொண்ட, தானே விளங்கும் ஒளிபோல்வானை, மரகதமலையானை, ஞான நூல்கள் வணங்கி வாழ்த்தும் அருள் விளங்கும் தில்லையிற் காணலாயினேன்.

குறிப்பு —எல்லாவற்றிலும் 'அத்துவிதமாய்க் கலந்திருத்தல் பற்றி எல்லாமாகி என்றார். புலன் - மன அறிவு. ஐம்பொறி யறிவென்றுங் கொள்ளுவர். வேதங்கள் பயின்றோர்க்கு 'வேதங்கள்' ஆகுபெயர். கேதங்கள் - துன்பங்கள். மரகதம், அம்மையின் நிறம். அருட்சத்தியும் அவன் வடிவேயாதலின், 'மரகதத்தை' என்றார். (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

பிரார்த்தனைப் பத்து

சதா முத்தி

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கலந்து நின்னடியா ரோடன்று வாளா களித்திருந்
தேன், புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்
னாள், உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பச்
சுடரானாய், அலந்து போனேன் அருள்செய்யாய்
ஆர்வங் கூர அடியேற்கே

உரை நடை —அன்று என்பதை முதலிற் கொள்க. அடியேற்கே ஆர்வங் கூர அருள் செய்யாய் எனக் கொள்க.

உரை —(நீ என்னை யாட்கொண்ட) அந்நாளில் உனதடியாரோடு கூடிச் சும்மா மகிழ்ந்திருந்தேன் அவர்கள் பிரிந்த பின் கூடிக்களித்த காலங்களெல்லாம் கழிந்து போயின பின்னாளில் துன்பம் ஏற்பட்டு நிலை பெற்றது. உடையவனே, அதனால் நான் வாடிப்போனேன். என்றுங் கெடாத பேரின்பத்தைத் தருகின்ற சோதியைப் பார்க்க விரும்பிப் பார்க்கப்பெறாது வருந்தினேன். அடியேனுக்கு அன்பு மிகும்படி அருள் செய்யவேண்டும்.

குறிப்பு —வாளா-என்பது அன்பு செலுத்தாமையைக் குறிக்கும் புலர்ந்து - விடிந்து. கழிந்த நாட்களும், மாதங்களும் பல வாயினமையின் காலங்கள் என்றார். மதுரையிற் பாண்டியன் முதலியோர்க்குப் பதிற் சொல்ல வேண்டியிருந்ததை 'இடர்' என்ற சொல் குறிக்கும். இறைவனைப் பிரிந்த ஆற்றாமையும் இடரே. அலந்து - எண்ணியது கிடைக்கப் பெறாது வருந்தி. (க)

அடியார் சிலருன் அருள்பெற்றார் ஆர்வங் கூர யான
அவமே, முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடி
யேன் மூக்கின்றேன், கடியே னுடைய கடுவினையைக் களைந்
துன் கருணைக் கடல்பொங்க, உடையாய அடியேன் உள்
ளத்தே ஓவா துருக அருளாயே.

உரை நடை :—உடையாய் என்பதை முதலிற் கொள்க. 'சிலா'
என்பதை 'ஆர்வங் கூர' என்பதோடு முடிக்க.

உரை :—முதல்வனே ! அடியார் சிலர் அன்பு மிகுதியினுலே
உன் திருவருளைப் பெற்றார்கள். யானோ வீணுகப் புலால் நாற்றம்
நிறைந்த பிண உடம்பிற்கு ஓர் முடிவின்றி அதிலிருக்கப் பெற்ற
வெறுப்பினால் அடியேன் முதிர்ச்சியுற்றேன். கடுமையான குணத்தை
யுடைய எனது கொடிய வினைகளைத் தொலைத்து உன்னுடைய
அருட்கடலானது அடியேனுடைய உள்ளத்திற் பொங்கும்படியாக
ஓயாது அன்பில் உருகுவதை எனக்கு அருள் செய்வாயாக.

குறிப்பு .—இழிவுபற்றியும், அன்பின்மை பற்றியும் உடம்பைப்
பிணமென்றார். முடை - புலால் நாற்றம், தீய வாசனை வெறுக்
கத்தக்க தன்மை தன்னிடத்தில் அதிகப்படுவதாகக் கூறுவார்
'முனிவால் மூக்கின்றேன்' என்றார். கடியேன் - உருக்கமில்லாத
நெஞ்சுடையேன். பொங்க - விளங்க வென்று முரைப்பர். (உ)

அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியா ரெல்லாம்
புக்கழுந்த, இருளா ராக்கை இது பொறுத்தே எய்த்தேன்
கண்டாய் எம்மானே, மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங் கெனைக்கண்டார், வெருளா வண்ணம்
மெய்யன்பை உடையாய் பெறநான் வேண்டுமே.

உரை :—முதல்வனே ! திருவருளாகிய கிடைத்தற்கரிய அமு
தப் பெருங்கடலின்கண் அடியாரெல்லாம் புகுந்து திளைத்தாடவும்,
அறியாமை நிறைந்த உடம்பாகிய இதனைச் சுமந்து இளைத்தேன்.

எமது தலைவனே! மருட்சி பொருந்திய மனத்தை உடைய ஒரு பித்தன் வருகின்றானென்று இவ்வுலகிலே என்னைக் கண்டவர்கள் சொல்லி அஞ்சாவண்ணம், (வீடடைதற்பொருட்டு) நான் உண்மையான அன்பைப் பெறுதல் வேண்டும்.

குறிப்பு:—உருமால என்பதில் ஆல் அசை. வெருளுதல் - மருளுதல், அஞ்சுதல். (௩)

வேண்டும் வேண்டும் மெய்யடியார் உள்ளே விரும்பி எனை அருளால், ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே அருமா மணிமுத்தே, தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்டனேற்கும் உண்டாங்கொல், வேண்டா தொன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே.

உரை நடை —வேண்டுமென்பதை மேவுதலே என்பதனோடு முடிக்கலாம்.

உரை:—தன்னை விரும்பி நின்ற மெய்யடியார்கள் நடுவே என்னை வைக்க விரும்பித் திருவருளாலென்னை யாட்கொண்டவனே! அடியேனுடைய பிறவித் துன்பத்தை நீக்கிய அருமருந்தே! கிடைத்தற்கரிய பெரிய மாணிக்கமே! முத்தே! தூண்ட வேண்டாது தானே யெரியும் விளக்கின் கொழுந்து போன்றவனே! அடியனேற்கும் விரும்பத் தகாத தொன்றையும் விரும்பாது உயர்ந்த அன்பினையே பொருந்துதலாகிய செய்கை யேற்படுமா? அஃதே எனக்கு வேண்டும்.

குறிப்பு:—வேண்டும் வேண்டுமென்பதற்கு இடைவிடாது விரும்புமென்றும் பொருள்கொள்வர். இறைவன் இயற்கை யறிவுடையனாகலின் 'தூண்டா விளக்கின் சுடரனையாய்' என்றார். (௪)

மேவும் உன்றன் அடியாருள் விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ பரமா னந்தப் பழங்கடல்சேர(ந்து)
ஆவி யாக்கை யானெனதென் றியாதும்இன்றி அறுதலே.

உரை நடை —'காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா' என்பதை முதலிற் கொள்க.

உரை —குவளை மலரின் தன்மை பொருந்திய கயல் போன்ற கண்ணையுடைய உமையம்மை பாகனே! உன்னுடைய அடியார் நடுவண் இருக்க விரும்பி யானும் உண்மையையே விரும்புகின்றேன். உன்னுடைய திருவருளினாலே, மேலாகிய பேரின்பமாகிய பழைய கடலிற் புகுந்து உயிர்ப்போதம், உடம்புணர்ச்சி, யானென தென்னுஞ் செருக்கு முதலிய யாது மில்லாமற் செயல் அற்றுப் போதலாகிய நிலை பாவியேனுக்கும் ஏற்படுமோ?

குறிப்பு :—விரும்பி என்பதை விரும்ப என்பதன் திரிபாகக் கொண்டு, அடியார் மெய்ம்மையையே உள்ளத்தில் விரும்ப, அவர்கள் சார்பு பற்றி யானும் மெய் விரும்புவேன் எனறலுமுண்டு. காவி - நீலோற்பல மலர். மேவும் என்பதை அடியாரொன்பதோடு முடித்தலும், மெய்ம்மையே என்பதைச் சேர்ந்து என்பதனோடு முடித்தலுமுண்டு. (௫)

அறவே பெற்றார் நின் அன்பர் அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே

உரை நடை :—பேரா வொழியா கடலே என்பதை முதலிற் கொள்க.

உரை :—நிலை பெயராத, என்றும் நிலைத்த, நம்மை விட்டு நீங்காத, மறப்பு, நினைப்பில்லாத, அளவற்ற, தொலையாத பேரின்ப சாகரமே! உன்னுடைய மெய்யன்பர்கள் முடிவில்லாமல் உள்ளம் உருகவே உன்னை முழுவதும் பெற்றுவிட்டார்கள். அவர்கள் கூட்டத்திற்கு வெளியே பயனில்லாமற் கிடந்து இழிந்த தன்மையுடைய நாயேன் பேரின்பம் வேண்டுமென்று புலம்புகின்றேன்.

நாதனே! அது பெறுதறகுரிய உண்மை யனபினை நான் கட்டாயம் பெறவேணடும

குறிப்பு :—அறவு எனபதற்கு நிராசை, ஆசையினமை எனப் பொருளுரைப்பாருமுளர். கடல் எழு ஆதலின் இனபமா கடலுக்கும் எழு அடைமொழி கொடுததார். இறைவன் போக்கு வரவிலலாதவ னாதலின் 'பேரா' எனறார். இனபம் இறைவனைவிட்டு நீஙகாமை யின் 'ஒழியா' எனறாா. உயிாகளோடு இறைவன் அததுவிதமாயக் கலந்திருததலின் 'பிரிவில்லா' என்றார். சகல அவத்தைகளைக கடநத அதீத நிலையில் அனுபவிககப் படுவதாதலின், 'மறவா, நினையா' என்றாா. வரமபிலின்பமாகலின் 'அளவிலா' என்றாா. பெற்ற பேரின்பம உயிரைவிட்டு நீங்காமையின் 'மாளா' என்றார். (௬)

கடலே அனைய ஆனந்தம் கண்டார் எல்லாங் கவர்ந் துண்ண, இடரே பெருக்கி ஏசற்றிங் கிருக்க லழகோ அடி நாயேன், உடையாய் நீயே அருளுதியென் றுணாந்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன், சுடரார் அருளால் இருள் நீங்கச் சோதீ இனித்தான் துணியாயே

உரை :—முதல்வனே! மேலே கூறிய கடல்போன்ற பேரின் பத்தைக கண்ட அடியாாகளெல்லாம் வலிதிற்பெற்று அனுபவிகக வும், துன்பத்தையே பெருக்கித் துயருற்று அடிமையாகிய நாயேன் இவவுலகில் சும்மா விருப்பது அழகாகுமா? என்னை உடைய நாதனாகிய நீயே நான் கேளாமலே அப்பேரின்பத்தைத தருவா யென்றெண்ணி உனக்கு என் விருப்பத்தைத் தெரிவியாது போய்க் கழிவுபட்டுவிட்டேன். ஒளிவண்ணனே! இனியாவது பிரகாசம் பொருந்திய (தினது) அருளாகிய (வாளினாலே) என்னுடைய அறி யாமையாகிய இருள் நீங்கும்படி அதனைச் சேதிப்பாயாக.

குறிப்பு :—கடலே என்பதில் ஏகாரம் தேற்றம் உணாததும. சுடர் - ஞானப் பிரகாசம். துணி யென்றமையால் அருள் என்பது வாளாக உவமிக்கப்பட்டது. (௭)

துணியா உருகா அருள்பெருகத் தோன்றுந் தொண்ட
ரிடைப்புகுந்து, திணியார் மூங்கிற் சிந்தையேன் சிவனே
நின்று தேய்கின்றேன், அணியார் அடியார் உனக்குள்ள
அன்புந் தாராய் அருளளியத், தணியா தொல்லை வந்தருளித்
தளிர்ப் பொற் பாதந் தாராயே

உரை :—சிவபெருமானே! நீ ஆதாரமென்று துணிவுற்று மன
முருகித் திருவருட் பொலிவு மிகும்படி விளங்குகின்ற அடியார்கள்
நடுவே புகுந்திருக்குந் திண்மை பொருந்திய மூங்கிலைப்போல உரு
காத மனமுடைய யான் இவ்வுலகில் நிலையுற்றுத் தளர்கின்றேன்.
அழகுபொருந்திய உன் தன்பர் உன்பால் வைத்துள்ள மெய்யன்பை
யும் எனக்குத் தரவேண்டும் தாமதஞ் செய்யாமல் விரைவில் என்
னுள்ளத்தில் அருள் கனியும்படி தோன்றியருளித் தளிர்போன்ற
உனது பொன்னடிகளை எனக்குத் தருதல் வேண்டும்

குறிப்பு :—துணியா - துணிந்து, உறுதியுடன். திணி -
திண்மை மூங்கிலானது மேற்செல்லாது வளைவுற்று நிற்றல்போல,
மனமானது கடவுளை நோக்காது உலகினை நோக்கினமை குறிக்கப்
பட்டது. அணி - அழகு, நோமை தாராய் தருக. அருளளியத்
தணியாதென்று சேர்த்து, அருள்தானே கனியுமளவும் தாமதி
யாது என்று பொருள் கொள்வதுமுண்டு. (அ)

தாரா அருளொன் றின்றியே தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும் அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே

உரை நடை :—'சீரார் அருளாற் ..சிவலோகா' என்பதை
முதலிற் கொள்க.

உரை :—சிறப்புப் பொருந்திய உனது திருவருளினால் எனது
உள்ளத்தைச் செம்மை செய்து ஆட்கொண்ட சிவலோகநாதனே,

உன் உறவினர்களாகிய அடியாரெல்லாம நீ அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய அருள் ஒன்றும் பாக்கியில்லாமற் கொடுத்தா யென்பதைத் தெரிந்து உன் பேரானந்தத்தை முழுதுந் துய்க்கின் றார்கள். அடியேன் மாத்திரம் உன்னருளுக்கு அயலானவர்கள் போலத் தளர்வேனோ? பேரின்ப நுகர்ச்சியானது எப்போதும் நீங்காதபடி, பெருமானே! எனக் கமைத்தருளவேண்டும்.

குறிப்பு —அயலார் - அருளுக்குப் புறம்பானவர்கள். ஆரா நின்றார் - உண்ணா நின்றார், அனுபவிக்கின்றார். அயர்வேன் - தளர்வேன். பேராமை - பெயருதலில்லாமை. (௯)

மானோர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனம் நெகா, நானோர் தோளாச் சுரையொத்தால் நம்பி இத்தால் வாழ்ந்தாயே, ஊனே புகுந்த உனையுணர்ந்தே உருகிப் பெருகும் உள்ளத்தைக், கோனே அருளுங் காலந்தான் கொடியேற் கென்றோ கூடுவதே

உரை :—மானைப்போன்ற பார்வையுடைய உமையம்மை பாகனே! வணங்குவார்க்கு இனிய கனிபோல்பவனே! மனம் நெகிழாத நான் தொளைக்கப்படாத பயனற்ற ஒரு சுரைக்குடுக்கை போன்றிருந்தால், அண்ணலே! நீ யிதனால் நன்கு வாழ்ந்துவிட் டாய்போலும்! உடம்பினை இடமாகக்கொண்ட உன்னை யறிந்து அன்பினாலுருகி அறிவு பெருகுதற்குரிய மனத்தைத், தலைவனே! நீ கொடுத்தருளுங் காலந்தான், கொடுமை யேனுக்கு எந்நாள் வந்து சேருமோ?

குறிப்பு :—தோளாச்சுரை - நீர்பாத்திர முதலிய எவ்வகை யான கருவியாகவும் பயன்படாதது. அதுபோல மனம் நெகிழ்ந்து அருள் தங்குவதற்குப் பயன்படாத இடத்து, அது தோளாச்சுரை போல்வதென்றார். பயன்படாத அடியவர் வாயிலாக இறைவன் பெருமை விளங்காமையின், 'நம்பியித்தால் வாழ்ந்தாயே' என்றார். 'ஊனே புகுந்த' என்பதற்கு மனித வடிவமெடுத்துவந்த என்று முரைப்பர். (௧௦)

கூடிக் கூடி உன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி ஆடி ஆனந்தம் அதுவே யாக அருள்கலந்தே

உரை.—உன்னுடைய தொண்டர்கள் தம்முள் இடைவிடாது சேர்ந்து சேர்ந்து கூத்தாடி, நகைத்து, இறுமாப்புக் கொள்வாராக, விருப்பமும், ஓயாது வாட்டமடைந்து உன்னை யடையும் வழியற்றுப் போன யான், உலர்ந்து போகின்ற மரம்போலப் பயனற்று நிற்பேனோ? என்னை யடிமை கொண்டவனாகிய உன்னோடு சேர்ந்து சேர்ந்து பிணங்கிப் பிணங்கி உள்ளமுருகி, அன்பு பெருகி, மனம் நெகிழ்ந்து, இடைவிடாது ஆனந்தக் கூத்தாடி, இன்ப மயமே யாகும்படி நீ அருள் செய்வாயாக.

குறிப்பு.—குனிப்பார், சிரிப்பார் என்பவற்றை முற்றெச்சமாகக் கொள்க. கலந்தே என்பதைக் கலந்து என்பதனோடு இசைத்து, மீட்டும் மீட்டும் கலந்தும் ஊடியும் எனப் பொருள் கொள்க. அன்பினால் கலத்தலும் குறைகண்ட விடத்து ஊடுதலும் நிகழ்வன. குறை நீங்கவே மீட்டும் கலத்தலுண்டாம். கலத்தலும், ஊடுதலும் காதலை மிகுதிப்படுத்துமாதலின், அவற்றை வேண்டினார். உள்ளுருகுதல்-தற்போதம் கழல்வதற்கிடமாகும். மனம் நெகிழ்ந்த இடத்தே அந்தக்கரணங்கள் ஓய்வடையும். ஆனந்தக் கூத்து-பேரின்பத்தின் மெய்ப்பாடு. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருந்துறையில் அருளிய

குழைத்தபத்து

ஆத்தும நிவேதனம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய் காவாய் உடையாய் கொடுவினையேன், உழைத்தா லுறுதி யுண்டோதான் உமையாள் கணவா எனையாள்வாய், பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ பிறைசேர் சடையாய் முறையோவென் (று), அழைத்தால் அருளா தொழிவதே அம்மானேஉன் அடியேற்கே

உரை நடை — கொடுவினை நோய் குழைத்தால் ..உடையாய் என மாற்றுக. உன்னடி யேற்கே என்பதை அருளாது என்பதற்கு முன்னமைக்க.

உரை —பழைய தீவினையாகிய வியாதி என்னை வாட்டினால், என்னை உடையவனே! நீ காப்பாற்றுவாயாக. தீவினை யுடையேன் முயற்சி செய்தால் மட்டும் உறுதியான பயன் ஏற்படுமா? உமையம் மையின் மணவாளனே! என்னை யாண்டருள்வாய். நான் பிழை செய்தால் நீ மன்னித்து அருளவேண்டாமா! இளமதி சூடிய சடையை யுடையவனே! ஓலமிட்டழைத்தால், தந்தையே! உன்னடி யானாகிய எனக்கு அருள் செய்யாது போவது தகுதியோ?

குறிப்பு :—முறையோ வென்பதை ஒழிவதே என்பதோடு சேர்த்துத் தகுதியோ வென்று பொருளுரைப்பின் சடையாய் என்றழைத்தால் என முடித்தல் வேண்டும். ஓலமிட் டழைப்பதை முறையோ வென்றழைப்பதாகவுங் கூறுவர். அம்மானே - தந் தையே! அழகிய பெரியோனே! எனவுங் கூறுவர். (க)

அடியேன் அல்லல் எல்லாம் முன்அகல ஆண்டாய்என்றிருந்தேன், கொடியே ரிடையாள் கூறுஎங் கோவே ஆ! ஆ! என்றருளிச், செடிசேர் உடலைச் சிதையாத தெத்துக்(கு) எங்கள் சிவலோகா, உடையாய் கூவிப் பணிகொள்ளா தொறுத்தால் ஒன்றும் போதுமே.

உரை நடை :—கொடியே ரிடையாள் கூறுஎங் கோவே என்பதை முதலிற் கொள்க.

உரை :—கொடிபோன்ற அழகிய இடையையுடைய உமையம்மை பாகனே! எமது தலைவனே! அடியேனுடைய துன்பமெல்லாம் முன்னமே நீங்கும்படியாக நீ யாட்கொண்டா யென்று எண்ணி யிருந்தேன். ஐயோ வென் றிரக்கங்கொண்டு, தீவினை சேருதற்கிடமாகிய உடலை அழித்து ஒழியாதது எதற்காக? எங்கள் சிவலோக நாயகனே! எங்களை உடையவனே! எங்களை யழைத்து ஏவல்கொள்ளாது தண்டிப்ப தொன்றுமே போதுமா?

குறிப்பு :—முன் என்றது திருப்பெருந்துறையில் அடிகளை ஆட்கொண்ட காலத்தே. செடி - பாவம், தீவினை ஒறுத்தால் - தண்டித்தால். உடம்பில் தம்மை வைத்திருப்பதே தண்டனை யென்பது அடிகள் கருத்து. (உ)

ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின் கருணை, இன்றே இன்றிப் போய்த்தோதான் ஏழை பங்கா எங்கோவே, குன்றே அனைய குற்றங்கள் குணமா மென்றே நீகொண்டால், என்தான் கெட்ட திரங்கிடாய் எண்தோள் முக்கண் எம்மானே.

உரை நடை :— ஏழைபங்கா, எங்கோவே, எண் தோள் முக்கணெம்மானே என்பதை முதலிற் கொள்க.

உரை :—உமையொரு பாகனே! எம்பிறைவனே! எட்டுத் தோள்களும், மூன்று கண்களுமுடைய தந்தையே! ஒன்றுக்கும்

பற்ற நாயேனாகிய எனனைப் பிழைக்கும்படி யாட்கொண்ட உன்னுடைய கருணையானது இப்போது இல்லாமற் போயிற்றோ? மலைபோன்ற குற்றங்களைக் குணங்களென்றே நீ ஏற்றுக்கொள்வா யாகலை எனனதான் கெட்டுப்போயிற்று? அதனால் என் குற்றங் களைப் பொறுத்து இரங்கியருள்க.

குறிப்பு:—என் குணங்களை என் தோள்களாகக் கூறுவ துண்டு அன்பர் செய்த மலைபோன்ற குற்றங்களைக் குணமென்று இறைவனேற்றுக்கொளவானென்ற குறிப்புக்காண்க. போய்ததோ வென்பது போயிற்றோ என்பதன் மருவு. ஏழை - பெண். (௩)

மானேர் நோக்கி மணவாளா மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன தனை நூக்கி உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை அறிநது நீயே அருள்செயது
கோனே கூவிக்கொள்ளுநாள் என்றென் றுன்னைக் கூறுவதே.

உரை:—மான் பார்வை போன்ற திருநோக்குடைய உமை யாள் கணவனே! அரசே! உன்னுடைய புகழை மறக்குமபடி செய்து, இவவுடம்பிலே புகுநது தயகுமாறு என்னை யதன்கண் தள்ளி, என்னை யலையும்படி செய்துவிட்டாய். அது அப்படி யாயினும், அடியேனது அறிவில்லாமையைத், தலைவனே! நீயே தெரிந்து அருள்புரிந்து உன்பா லென்னை யழைத்துக்கொள்ளும் நாள் எப்போது எப்போது என்று உன்பால் முறையிடுவதே எனக்குத தொழிலாய விதிததாய்போலும்.

குறிப்பு:—நூக்கி - தள்ளி. கூறுவது - முறையிடுவது; கேட் பது எனவும் பொருள் கொள்ளலாம். கூறுவதே என் தொழில், நீ பயனளிக்க மாட்டாய்போலு மென்று இறைவனை நோக்கிக் கூறுங் குறிப்புக் காண்க. (௪)

கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம்நீ,
தேறும வகைநீ திகைப்புமநீ தீமை நன்மை முழுதும்நீ,

வேறோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில், தேறும வகைஎன் சிவலோகா திகைத்தால் தேற்ற வேண்டாவோ.

உரை நடை :—சிவலோகா வெனபதை முதலிற் கொள்க.

உரை :—சிவலோகநாதனே ! உண்மையாக உன் தன்மையை விரித்துப் பேசில, சொல்லுதற்குக் கருவியாகிய நாககு முதலாகப் பேசப்படுக கருவிகளெல்லாம் நீயே, திகைப்பதற்குக் காரணமும் நீயே, தெளிவடையும் வழியும நீயே, நன்மை தீமை முழுவதும் நீயே, உனககு வேறாக யாதொரு தனமையுமில்லை. நான் தெளி வடையும் வகை யாது? நான் திகைப்படைநதால் நீ என்னைத் தெளிவிக்க வேண்டாவா ?

குறிப்பு :—எல்லாவற்றையு மியக்குபவனும், எல்லாம் நிகழுவ தறகுக காரணமானவனுங கடவுளாதலானும் அவன் எலலாவற் றோடும் அத்துவிதமாய்க் கலந்திருத்தலானும் நா முதலிய யாவும் அவனே என்றார். தேறுதல் - தெளிதல். வீடு கிடைக்குமோ வென்ற தமது திகைப்பை இறைவன் மாற்றவேணடு மென்பது குறிப்பு (5)

வேண்டத் தக்க தறிவோயநீ வேண்ட முழுதுந தரு வோய்நீ, வேண்டும் அயன்மாற் கரியோயநீ வேண்டி என்னைப பணிகொண்டாய், வேண்டி நீயா தருள் செய்தாய் யானும அதுவே வேண்டின் அலலால், வேண்டும பரிசொன் றுண்டென்னில் அதுவும உன்தன் விருப்பன்றே.

உரை :—யான் விரும்பத தக்கனவற்றை யறிபவன் நீயே. அவற்றை உன்பாலிரந்து கேட்க முழுவதையுந் தருபவனும் நீயே. உன்னைக் காணவிரும்பிய பிரமனுக்குந் திருமாலுக்கும் காணுதற் கரியவனானவனும் நீயே. என்னை நீயே விரும்பிவநதாட்கொண் டாய் நீ எதனை விரும்பி யருள்செய்தாயோ யானுமதனையே விரும்பு வதல்லாமல்இன்னும் நான் விரும்பக்கூடியது யாதாகிலுமிருக்குமா யின் அதுவும் உன்னுடைய விருப்பத்தின்படி நிகழ்வதல்லவா ?

குறிப்பு :—இதனுள் இறையருள் வசப்பட்டு நிற்குந் தமது நிலையை அடிகளறிவுறுத்தினர். பணி - ஏவல். பரிசு - வகை, செயல் (௬)

அன்றே என்தன் ஆவியும் உடலும உடைமை எல்லா மும, குன்றே அனையாய் என்னை ஆட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண் எமமானே, நன்றே செய்வாய் பிழை செயவாய் நானோ இதற்கு நாயகமே.

உரை நடை :—'எண்தோள் முக்கண் எம்மானே' என்பதை முதலிற் கொள்க.

உரை :—எண்தோளும முககண்ணு முடைய எமது பெரி யோனே! என்னை யாட்கொண்ட அக்காலத்திலேயே என் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் மலைபோல்வாயாகிய நீ ஏற்றுக் கொள்ளவில்லையா? இப்போது எனக்கு இடையூறு எதாவ துண்டா? தககது செய்வாயாயினும், தவறு செய்வாயாயினும் செய்க. நானிதற்குத தலைவனோ? (உன் விருப்பமல்லவா?)

குறிப்பு :—அன்றே என்பதை ஆட்கொண்டபோதே என்பத னோடு முடிக்க. குருவுக்கு உடல், பொருள், ஆவி மூன்றையுங் கொடுத்தல் மரபு. பாதுகாப்புக்குச சிறந்த அரணை மலைபோல நீ யிருக்கும்பொழுது எனக்கு எப்படி இடையூறு வரும் என்ற குறிப்பைக் காண்க. உடைமை - பொருள். தனக்கு யாதொரு அதிகாரமுமில்லை. நன்மையுந் தீமையுங் கடவுளைப் பொறுத்தது என்று குறிப்பித்தார். (எ)

நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்ன தோஇங் கதிகாரம்
காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

உரை:—நாயினும் கீழ்ப்பட்ட நாய்த்தன்மையுடைய என்னை நீயே விரும்பி வந்து ஆண்டருளினை. கபடுமிக்க என் பிறவியை உன் வசமே ஒப்புவித்துவிட்டுச் சும்மா யிருக்குந் தன்மை யன்றி, அதனைப்பற்றி ஆராய உரிமை யுடையேனோ? அதைப்பற்றிய அதிகாரம் என்னுடையதோ? (அது உன்னுடையதே யாதலால்) நெற்றிக் கண்ணையுடைய பெருமானே! உடம்பி விடுவையோ? உன் திருவடியின்கீழ் வைப்பையோ? (எதுவும் உன் கட்டளைப படி நிகழ்வதே.)

குறிப்பு:—நாயின் கெடுதற்றன்மை யிருப்பினும் அதன் நற்றன்மை யில்லாமையினால் நாயிற்கடையாம் நாயேனை என்றார். மாயம் - தந்திரம். என்ன பிறவி வருமென்று எதிர்பார்க்க முடியாமையால் அவ்வாறு கூறினார். (அ)

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன கண்கள் களிகூர, எண்ணா திரவும் பகலும்நான் அவையே எண்ணும அதுவல்லால், மண்மேல் யாக்கை விடுமாறும வந்துன் கழற்கே புகுமாறும், அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால அழகுடைத்தே

உரை:—கண்பொருந்திய நெற்றியை யுடையவனே! உன்னுடைய திருவடிகளிரண்டையும் என் கண்குளிரக் காணப் பெற்றேன். அவற்றையே இரவும் பகலுமாய் எப்போதும் நான் நினைப்பு மறப்பில்லாது எண்ணிக்கொண் டிருப்பதல்லாமல், மண்ணுலகத்திலே இவ்வுடம்பு நீங்கும் வகையையும், அதனைவிட்டு உன் திருவடிக்கே போய்ச் சேரும் வகையையும் அப்பனே! நான் நினைக்க உரிமையுடையேனோ? அப்படி எண்ணினால் எனதடிமைத் தன்மை மிகவும் பொருத்தமுடைத் தாகுமோ?

குறிப்பு:—எண்ணாது எண்ணுவது -. சுட்டியறியாம லறிவது. அண்ணா - மேலோனே. மிகவும் அழகுடைத்தே என்று இகழ்ச்சி பற்றிக் கூறினா ரென்றலு முண்டு. (கூ)

அழகேபுரிந்திட் டடிநாயேன் அரற்றுகின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப் புராண நீதந் தருளாதே
குழகா கோலமறையோனே கோனேஎன்னைக் குழைத்தாயே.

உரை:—அழகனே! நாயேன் உன் திருவடியைப் பெற விரும்பி யலறுகின்றேன். என்னை உடையவனே! ஒளி விளங்குகின்ற உனது திருமேனியைக் காட்டி என்னை எவல்கொண்டாய். புகழ வடிவானவனே! பெரிய பேரின்ப நிலையை நீ கொடுத்தருளாமல், பழமையானவனே! இளமை வடிவனே! அழகிய வேதியனே! தலைவனே! என்னை நீ வாட்டினையே.

குறிப்பு:—அழகு என்பதை, குழைத்தாயே என்பதனோடு முடித்து, இது அழகோ என்று பொருளுரைத்தலு முண்டு. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

உயிருண்ணிப்பத்து

சிவானந்தம் மேலிடுதல்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும் புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாட்களித் தெந்நாள்இறு மாக்கேன் இனியானே.

உரை நடை:—பைந்நா அரவுபடம் ஏர் அல்குல் எனக் கொள்க. செந்நாவலர் பரசும் புகழ் ..உறைவாய் என்ற அடியை முதலிற் கொள்க.

உரை:—செவ்விய நாவன்மையுடைய புலவர் போற்றும் கீர்த்தியுடைய திருப்பெருந்துறையி லுறைகின்ற பெருமானே! பசிய நாவினையுடைய பாம்பின் படத்தையொத்த இடை முன்பகுதியுடைய உமைபாகனாய்த் தோன்றி, நாள்தோறும் எனது உடம்பை விட்டு நீங்காத வினையினைத் தொலைப்பவனே! காளைவாகனனே! இனிமேல் யான் எந்நாளிலே மகிழ்ந்து எந்த நாளிலே இறுமாந்திருப்பேன்.

குறிப்பு:—அல்குல்-இடைக்கு முன்பாகம். வினைப் போகமே தேகமாதலின், மெய் பிரியாவினை என்றார். ஞானிகளுக்கு வரும் வினைப்பயனை இறைவனே ஏற்றுக்கொள்கின்றானென்ற கருத்து இங்கே புலனாதல் காண்க. (க)

நானாரடி யணைவானொரு நாய்க்குத் தவிசிட்டிங்
கூனாருடல் புகுந்தான்உயிர் கலந்தான்உளம் பிரியான்

தேனார்சடை முடியானமன்னு திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர் வளம்ஈந்தனன் எனக்கே.

உரை நடை —நான் ஆர என்பதன பின், மூன்றாம் அடியை முதலில் கொள்க.

உரை :—நான் யார்? (யாதொரு தகுதியுமில்லாதேன்) வண்டு பொருந்திய சடைமுடியை யுடையானாகிய நிலைபெற்ற திருப்பெருந் துறையில் வீற்றிருந்த பெருமான், நான் தனது திருவடியை எய்துதற்பொருட்டு, ஒரு நாயாகிய எனக்கு இருக்கை யளித்து, இவ்வுலகிலே புலால் நிறைந்த உடம்பிலே புகுந்து உள்ளத்தைப் பிரியாதவனாய் உயிரிற் கலந்தான். மேலும் விண்ணவரும் அறிய வொண்ணாத வொரு (பேரின்பச்) செல்வத்தை எனக்கு நல்கி யருளினன்

குறிப்பு —அடிகட்கு உடலிலும் உள்ளத்திலும் உயிரிலுங் கலந்தவனாய இறைவன் விளங்கினமை, ரண்டு அரியற்பாலது. தேன் - வண்டு. சடையிலுள்ள மலரிலே வண்டு மொய்க்கு மென்பது கருத்து. (உ)

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தானெனை மத்தோன்மதத் தாக்கிச்
சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை உறை
பனவன்எனைச் செய்தபடி(று)அறியேன் பரஞ்சுடரே [யும்

உரை நடை —மனவாசகங் கடந்தான், சினமால் விடையான், உறையும் பனவன், பரஞ்சுடரே, எனைமத்தோன்மத்தனாகி எனைச் செய்த படிறு அறியேன். எனை நான் என்பதறியேன். பகலிரவாவது மறியேன்.

உரை :—மனத்தையும் சொல்லையும் (காயத்தையுங்) கடந்தவன், வலியுடைய திருமாலைக் காளை யூர்தியாகக் கொண்டவன், நிலைபெற்ற திருப்பெருந்துறையின்கண் வீற்றிருந்தவனாகிய வேதியன், மேலான ஒளிப்பிழம்பு போல்வான், என்னைக் களிப்பு

மிகுந்த பித்தனாக்கி எனக்குச் செய்த சூழ்ச்சியை அறியேன். நான் யாரென்ப தறிந்திலேன்; பகலு மிரவுங் கழிந்ததையும் உணர்ந்திலேன்.

குறிப்பு—தன்னுணர்ச்சியின்றி இறை நினைவேயுடைமையால், தான் யார் என்பதை அடிகள் தெரியாதவராயினர். சகலாவத்தையைக் கடந்து சுத்த நிலையிலிருப்பதால், கரணங்கள் கொண்டுணருங் காலத்தினியல்பை அறிந்திலர். மனமுஞ் சொல்லுங் கூறவே, காயத்தையு முடன் கொள்க. மத்த+உன்மத்தன் - களிப்புடைய பித்தன். மிகுந்த பித்தனென்றும் பொருள் கொள்ளலாம். ஞானோபதேசம் பெறுதற்குமுன், அறியப்படாத தன்மை தனக்கு வந்தெய்தினமையாற் பிதற்று என்றார். பனவன் - முனிவன், வேதியன். பரஞ்சுடரென்பதைப் பனவனென்பதோடியைத்துப் படர்க்கையாகக் கொள்ளுவதே பொருத்தம். (௫)

வினைக்கேடரும் உளரோபிறர் சொல்லீர் வியனுலகில்
எனைத்தான்புகுந் தாண்டான்என தென்பின் புரையுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லைபெருந் துறையில்உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான் மறுமாற்றத் திடையானே.

உரை நடை:—முதலடியை இறுதியிற் கொள்க. பெருந்துறையிலுறை பெம்மான் என்பதை முதலிற் கொள்க. தான் புகுந்து என்பின் புரையுருக்கிப் பினைத்தான் புகுந்தெல்லே எனை யாண்டான் என அமைக்க.

உரை:—திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பெருமான் தானே வலிதிற் போந்து என்னுடைய என்பின் உள் துளைப் பகுதிகளை யுருகுவித்து அவற்றினூடாகப் பின் பக்கமுஞ் சென்று ...யா, (என்னை முற்றிலும் வியாபித்து) என்னை ஆட்கொண்டருளினன். அவன் என் உள்ளத்திலுள்ளான், கண்ணிலுள் ளிருக்கின்றான்; தவிரவும் எனது சொல்லினிடையேயு முளன். அவனைப்போல வினையை யொழிப்பார் பிறர் யார் அகன்ற இவ்வுலகில் உளர்? சொல்லுவீராக.

குறிப்பு:—தான் புகுந்து - தானே வலிந்து. புரை-உட்டுளை. பின்னைத்தான்-பின்பக்கத்தாலும். எல்லே—இரக்கச் சொல். அவன் பெருமைக்குக் குறைவான செய்கை, கருணையாற் செய்தருளினன் என்பது கருத்து. 'என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக் கென்னுளே நிற்கும் இன்னம்பரீசன்' என்ற அப்பர் திருவாக்கை ஒப்பிடுக. பெம்மான் - பெருமான். விரும்பத்தக்க பெரியோன் எனவுங் கூறலாம் (பெம - விருப்பம் மான்-மகான்) மற்றும் - என்பது மற்று என்பதன் இடைக்குறை (அ)

பற்றாங்கவை அற்றீர் பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி அடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார் சடைமுடியான் மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே

உரை நடை.—கெடுவீர். பற்றாங்கவை .. .. ..எனில் ஓடி வம்மின் தெற்றார்... ..கலந்தே கூடுமின் என்க.

உரை.—உலகிற் கெட்டொழியு மியல்பினரே! உலகத்தே பற்றுயவைகளை ஒழித்தீராய், பற்ற வேண்டிய ஆதரவு தன்னைப் பற்றி, நல்லதாகிய நெறியை அடைவோமென்று நீங்கள் எண்ணினால், ஓடி வாருங்கள். தேன் துளிக்கு மாலை யணிந்த சடைமுடி யுடையவன், நிலைபெற்ற திருப்பெருந்துறைத் தலைவனுயிருப் பவனது புகழைக் கற்றுக் கற்றவாறே, அவன் திருவடியைத் தழு வின அடியாரொடுஞ் சேர்ந்து (அவனடியை) அடைவீர்களாக.

குறிப்பு:—ஆங்கு - அசை. உலகில் என்றும், விரைவில் என்றும் பொருள் கொள்ளலாம். பற்றும்பற்று என்பதில், பற்று - ஆதரவு. அது என்னுஞ்சொல் ஆதரவின் சிறப்புணர்த்துவது. நற்று - நன்று என்பதன் வலித்தல் விகாரம். தென் + தார்-தெற்றார். தென்-தேன் என்பதன் குறுக்கம். கலந்தே என்பதை, கூடுமின் என்பதோடு முடிக்க. (கூ)

கடலின்திரை யதுபோல்வரு கலக்கம்மலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந் தொழியாவண்ணம் நிறைந்தான்

சுடருஞ்சுடா மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்றான் செய்தபடிறே

உரை நடை.—பின்னிரண்டடியை முதலிற் கொள்க

உரை:—ஒளிபரப்புங் கதிர்களையுடைய பிறை சூடியவனாகிய திருப்பெருந்துறையிற் றங்கிய, விரிந்த சடையைக் கிரீடமாக வுடைய எங்கள் மேலோன் செய்த சூழ்ச்சி யாதெனில், கடலின் அலைபோல் ஓயாது வருகின்ற கலக்கத்தைச் செய்யும் பாசங்களைத் தொலைத்து, எனது உடம்பிலும் உயிரிலுங் கலந்து நீக்கமற நிறைந்து விளங்கினன்.

குறிப்பு:—சுடர்-கதிர். பரன்-மேலோன். படிறு-சூழ்ச்சி, வஞ்சகம். (௬)

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும், வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார்தமை நாளும், தீண்டேன்சென்று சேர்ந்தேன்
மன்னு திருப்பெருந்துறை இறைதாள், பூண்டேன்புறம்
போகேன இனிப் புறம்போக லொட்டேனே.

உரை:—புகழையும், பொருளையும், மண்ணுலக விண்ணுலக வாழ்க்கையையும், பிறப்பிறப்புக்களையும் விரும்பேன். தூய மங்கலப் பொருளான முழுமுதற் கடவுளை விரும்பாதவரை நான் ஒருநாளும் தொடமாட்டேன். நிலைபெற்ற திருப்பெருந்துறைப் பெருமான் திருவடிகளைப் போய்ச் சேர்ந்தேன். அவற்றை என் தலைமேற் கொண்டேன். அவற்றிற்குப் புறத்தே நான் போகமாட்டேன். இனிமேல், அவை என்னைவிட்டு அகலுவதற்கு இசைய மாட்டேன்.

குறிப்பு:—உறுதியால் விரும்பாமைபற்றி, வேண்டேன் எனத் தனிததனியே முற்படக் கூறினர். தீண்டேன் என்பது யாதொரு தொடர்பும் வைத்துக்கொள்ள மாட்டேனென்ற கருத்தைக் குறிப்பது. ஒட்டேன் - இசையேன். (௭)

கோற்றேன் எனக்கென்கோ குரை கடல்வாய் அமு தென்கோ
ஆற்றேன் எங்கள் அரனே அரு மருந்தே என தரசே
சேற்றாவயல புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்
நீற்றா தரு திருமேனிநின் மலனேஉனை யானே.

உரை நடை:—முதலடியை இறுதியிற் கொள்க. ஆற்றேன் என்பதை, யானே என்பதனோடு முடிக்க.

உரை:—எங்கள் பாசநீக்குபவனே! அரிய அமுதே! என் மன்னனே! சேறுநிறைந்த வயல்கள் மருங்கு சூழ்ந்த, நிலைபெற்ற திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் திருவெண்ணீறு நிறைந்த திருவடிவமுடைய குற்றமற்றவனே! (நீ கொடுத்த இன்பத்தைத்) தாங்கமாட்டாத யான், உன்னை எனக்குக் கொம்புத்தேன் போல்பவ னென்பேனோ? ஒலிக்கின்ற திருப்பாற்கடலி லெழுந்த அமுத மென்பேனோ? (கூறுக).

குறிப்பு —கோற்றேன் - கோல்+தேன். கோல் - கொம்பு; மரக்கிளை அதிலமைந்த தேன்; மிகச்சுவையுந் தூய்மையு முள்ளது. சேற்று - சேறு என்பதன் விரித்தல் விகாரம். நீற்றும் அனையதே. ஆர்தரு - ஆரும - பொருந்தும், நிறையும். (௮)

எச்சம் அறி வேன்நான் எனக் கிருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே அரு மருந்தே எனதமுதே
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை உறைவான்
நிச்சமென நெஞ்சில்மன்னி யானாகிநின் றானே

உரை நடை :—முதலடியை இறுதியிற் கொள்க; மூன்றாம் அடியை முதலிற் கொள்க.

உரை :—வெட்சிமலர் போன்ற சிவந்த திருமேனியுடையனாய்த் திருப்பெருந்துறை யுறையும் பெருமானாய், உறுதியாக எனது உள்ளத்தில் நிலைபெற்று அத்துவிதமாய் என்னோடு கலந்து யானாகி நின்றவனே! எங்கள் பாசநீக்குபவனே! கிடைத்தற்கரிய

அமுதமே! என்னுடைய சாவாமருந்தே! நான் இன்னும் பெற வேண்டிய மிச்சத்தை அறிவேன். எனக்குள்ள குறையை அறியேன். இது அழகிது!

குறிப்பு:—எச்சம் - குறை; பாக்கி. செச்சை - வெட்சி. சிவந்த மலர். நிச்சம் - நித்தம், நிச்சயமென்பதன் மரூஉ என்பார். நின்றானே என்பதை, விளியாகக்கொள்க. அச்சோ - வியப்பு அழகு என்பவற்றை யுணர்த்துஞ் சொல் (௯)

வான்பாவிய உலகத்தவர் தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந் தடவிமர மானேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந் துறைஉறைவாய்
நான்பாவியன் ஆனால்உனை நல்காய்என லாமே.

உரை.—வானிற்பரவிய உலகத்திலுள்ளவர்கள் தவஞ்செய்யவும், யான் வீணாகப் புலால் நிரம்பிய உடம்பினைத் தாங்கிக் காட்டு மரம்போலப் பயனிலேனாயினேன். தேன்பொழிகின்ற கொன்றை மலரை யுடையனாய்த் திருப்பெருந்துறையில் வீற்றிருப்பவனே! நான் (உன் பேரருள்பெறத் தகுதியில்லாத) தீவினையேனாயின், அருள் கொடுப்பாயாக என, உன்னை வேண்டுதல் கூடுமோ? (கூடாதோ.)

குறிப்பு:—வான்பாவிய உலகத்தவர் - விண்ணவர். அடிகள் தங்குறைக்காகத் தம்மை யிகழ்ந்து இறைவனைப் போற்றுங் குறிப்பு, இச்செய்யுளிலும் முந்திய செய்யுளிலும் காண்க (௧0)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

அ ச் ச ப் ப த் து

ஆனந்தம் உறுதல்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன், கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி, மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற், கற்றிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.

உரை:—புற்றிலே வாழுகின்ற ஒளியையுடைய பாம்பிற்கும் பயப்படமாட்டேன், பொய்யர்கள் (பிறரை ஏமாற்றும் பொருட்டுச் சொல்லும்) மெய்போலும் பொய்க்கும் பயப்படமாட்டேன். தொகுதியான நீண்ட சடையைத் தரித்த எமது பெருமானாகிய நெற்றிக்கண் கடவுளுடைய திருவடிகளை யடைந்து, அவனுக்கு வேறாகப் பிறிதொரு கடவுளை யிருப்பதாக நினைந்து எம்பெருமான் பொருட்டு பிற பொருட்பற்று, பிற கடவுட்பற்று என்பன நீங்காதவரைக் கண்டால், ஐயோ! நாம் பயப்படும் வகையை என் சொல்லுவோம்?

குறிப்பு:—வாள் என்பதற்கு, வாள்போன்ற என்றலு முண்டு. புற்றிலுறைந்து ஒளிமிக்க நாகரத்தின மணியைப்பெற்ற பாம்புகள் கொடிய விடமுடையனவாதலால் அதனை எடுத்துரைத்தார். கற்றிலாதவரை என்று பாடமுரைத்து, எம்பெருமான் தன்மைகளைக் கல்லாதவரை எனவுங் கொள்ப. அம்ம - அச்சத்தை உணர்த்தும் இடைச்சொல். (௧)

வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல் கொளினும்
இருவரால் மாறுகாணா எம்பிரான் தம்பி ரானாம் [அஞ்சேன்

திருவுரு அன்றி மற்றோர் தேவரெத் தேவ ரென்ன
அருவரா தவரைக் கண்டால் அம்மநாம அஞ்சு மாறே.

உரை :—ஆசை வந்து என்னைப்பற்றினாலும் நான் அஞ்சமாட்டேன். வினையாகிய கடல் என்னைக கவர்ந்தாலும் அதற்கு நான் அஞ்சமாட்டேன். பகைமை காரணமாக, அயன், மால் இருவருங் காணமுயன்று காணாத எமது தலைவனாய், தனக்குத் தானே தலைவனாயுள்ளவனுடைய திருவடிவத்தை அன்றி, மற்றொரு தேவர் எததகைய தேவராவரென்று வெறுப்புக் கொள்ளாதவரைக் கண்டால், அது நாம பயப்படும் வகையாகும்.

குறிப்பு :—வேட்கைவந்தால் வெருவரேன் எனமாற்றுக. மாறு—மாறுபாடு மாறுபாடுபற்றிக் காணவெனக் கொள்க. தம்பிரானார் - தம் வயமுடையவர். எல்லாப் பொருளும் அவன் திருவுருஆவதன்றி, அவனின் வேறாய ஒரு தனித் தெயவமிலலை யென்பது. (௨)

வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார் கடைககண்
என்பெலாம உருக நோக்கி அம்பலத தாடுகின்ற [அஞ்சேன்
என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால அம்மநாம அஞ்சு மாறே

உரை :—பிறாமீது பாய்நது வளமையுடைய மாமிசத்தைக் கொள்ளுங (கூர்மையுடைய) வேலாயுததிற்கும் அஞ்சமாட்டேன். வளையணிநத கையையுடைய மாதருடைய (உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்) கடைக்கண் பார்வைக்கும் பயப்படமாட்டேன். அன்பருடைய எலும்பெலா முருகும்படியாகத் திருநோக்கஞ் செய்து சபையிற் கூத்தியற்றுகின்ற பொள்ளலில்லாத எனது மாணிக்கம் போல்வானை வாழ்த்தி, இனிதாகிய அவனது திருவருளை நுகர மாட்டாத, அன்பில்லாதவரைக கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும். (௩)

கிளியனார் கிளவி அஞசேன் அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும மேனி வேதியன் பாதம் நண்ணித்

துளியுலாங் கண்ண ராகித் தொழுதழு துள்ள நெக்கு(கு)
அளியிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே

உரை :—கிளிபோன்ற மொழியையுடைய மகளிருடைய சொல் மயக்கிற் கஞ்சமாட்டேன். அவர்களது பொய்யான நகைப்பிற்கும் பயப்படமாட்டேன். வெள்ளிய திருநீறணிந்த திருமேனியுடைய அந்தணனாகிய பெருமானது திருவடிகளை யடைந்து, நீர்த்துளி சிந்துகின்ற கண்ணை உடையவராகி, வணங்கி கசிந்து உள்ள முருகிக் கனியுந் தன்மை யில்லாதவரை இவ்வுலகிற் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்.

குறிப்பு .—கிறி - பொய்; வஞ்சகம். இகுகு என்பதைக் கண்டா லென்பதோடு முடிக்க. அளி - அன்பு; கனிவு. உலவு மென்பது உலாமென்றாயிற்று. ஆடு - தரி; முழுகு. (௫)

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன், துணிநிலா அணியி னான்றன் தொழும்பரோ டழுந்தி அம்மால், திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ(று), அணிகிலா தவரைக் கண்டால் அம்ம நாம அஞ்சுமாறே

உரை :—நோய்களெல்லாம் வந்தாலும் அஞ்சமாட்டேன். பிறப்பும், இறப்பும் நேர்ந்தாலும் பயப்படேன். மதியின் துண்டாகிய இளம்பிறையை நகையாகத் தலையில் தரித்தவனது தொண்டரோடு ஆனந்தத்தில் ஆழ்ந்து, அழகிய திருமால் வளமை உடைய நிலத்தைக் கீறித் தேடியுங் காணாத இறைவனது செய்ய பாதங்களை வாழ்த்தித் திருவெண்ணீற்றை அணியமாட்டாதவரைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்.

குறிப்பு :—துணிநிலா-துண்டு மதி. மூன்றாம் பிறைச்சந்திரன் தோன்றுங் காலத்தே சந்திரனின் பிறபகுதிகள் தோன்றாமையால் இளம்பிறையைத் 'துணி நிலா' என்றார். அம்மால் என்பதற்கு அவ்வளவு பெருமையையுடைய திருமாலெனவுங் கூறுவர். திணி-திண்மையுடையது. (௬)

வாளுலாம் எரியும் அஞ்சேன் வரைபுரண் டிடினும்
அஞ்சேன், தோளுலாம் நீற்றன் ஏற்றன் சொற்பதம் கடந்த
அப்பன், தாளதா மரைகள்ஏத்தித் தடமலர் புனைந்து நையும்,
ஆளலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

உரை:—ஒளி நிலவுகின்ற நெருப்பிற்கும் அஞ்சமாட்டேன். மலை புரண்டுவந்தாலும் பயப்படேன். திருத்தோள்களிலே விளங்குகின்ற திருநீறுடையவனும், காளைவாகன முடையவனுமுள்ள சொல்லின் தரத்தைக் கடந்த அப்பனாகிய பெருமானுடைய திருவடிகளாகிய தாமரை மலர்களை வாழ்த்தி, பெருமை பொருந்திய அம் மலர்களைத் தலைமேலணிந்து. மனம் நெகிழும் அடிமையல்லாதவரைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையே.

குறிப்பு:—ஏற்றன் - காளையை யுடையவன். பதம் - தரம். சொற்பதம் என்பதற்குப் பேசப்படுகின்ற பதவி யெனவுங் கூறுப. தாள் தாமரை - தாளென்பது குறிப்புப் பெயரெச்சம். தட - பெருமையை யுடைய. ஆளலாதவர் - ஆட்படாதவர். ஒளி வீசாத நெருப்பினும் ஒளியோடு கூடிய நெருப்பு விரைவாகப் பொருள்களை எரித்துவிடுமாகலின் அதனை விதந்தோதினர். (௬)

தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப் பொலிந்தஅம் பலத்துள் ஆடும்
முகைநகைக் கொன்றை மாலை முன்னவன் பாதம் ஏத்தி
அகம்நெகா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே

உரை:—நீக்கமுடியாப் பழிக்கும் அஞ்சமாட்டேன். இறப்பதற்கு முன்னமே பயப்படேன் புகையைக் கொண்ட அனலைத் திருக்கரத்தின்கண் வைத்துப், பொலிவுபெற்ற சபையின்கண் அனற் புகை வீசும்படி கூத்தியற்றுகின்ற மொட்டுகள் விரியும் கொன்றை மாலையணிந்த முதல்வனது திருவடிகளைத் துதித்து மனம் நெகிழாதவரைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்

குறிப்பு :—தகைவு - தடுத்தல்; நீக்குதல். முகந்த எரி என்பது முகந்தெரி என்றாயிற்று. முகை - மொட்டு. நகை - விரிதல்; விளங்குதல். முன்னவன் - பழமையோனெனவுங் கூறுவர். (௭)

தறிசெறி களிறும் அஞ்சேன் தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன் விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.

உரை :—கட்டிய தறியைச் சினந்து அசைகின்ற யானைக்கும் அஞ்சமாட்டேன். தீப்பொறி போன்ற கண்ணினை உடைய புலிக்கும் பயப்படேன். தேன் மணங்கமழ்கின்ற சடையினை யுடையவனாகிய தந்தையினது, தேவருமறிய முடியாத வீரக்கழல்கள் செறிந்த திருவடிகளை வாழ்த்திச் சிறப்புற்று, இனிய முறையி லிருக்கமாட்டாத ஞானமில்லாதவர்களைக் கண்டால், அம்ம! அது நாம அஞ்சும் வகையாகும்.

குறிப்பு :—தறி - யானைகட்டிய கம்பம். செறி - செறு. செறுதல் - தாக்குதல். மதமிகுதி, வலிமிகுதி முதலியவற்றால் கட்டுத் தறியை யானை தாக்கும். சடையில் நறும்பூத் தரிப்பதால் வெறிகமழ் என்றார். கழல்கள் திருவடிக்கு ஆகுபெயர். (௮)

மஞ்சுலாம் உருமும் அஞ்சேன் மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும் நம்பிரான் எம்பி ரானாய்ச் (௯)
செஞ்சவே ஆண்டுகொண்டான் திருமுண்டம் தீட்டமாட்டா
அஞ்சுவா ரவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே

உரை :—மேகத்தில் உண்டாகி நிலவுகின்ற இடிக்குப் பயப்படமாட்டேன். சமயத்திற் கைவிடக்கூடிய அரசருடைய நட்பிற்கும் பயப்படமாட்டேன். விடத்தை அமுதமாக உட்கொண்ட இறைவனாகிய நமது தலைவன், மிகச் செவ்வையாக நம்மை யாட்கொண்டவன். செல்வமாகிய அவனது திருவெண்ணீற்றை

நெற்றியில் அணியமாட்டாது அதற்குப் பயப்படுகின்றவர்களைக் கண்டால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையேயாகும்.

குறிப்பு —திரு - செல்வம். அதாவது திருவெண்ணீறு. விபூதி என்ற சொல்லும் இக்கருத்தை யுடையது. முண்டம் - நெற்றி. முண்டம், திரு, தீட்டமாட்டாவென முடிக்க. (௯)

கோணிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே

உரை.—கொலைத்தன்மையுடைய அம்பிற்கும் அஞ்சமாட்டேன். யமனுடைய கோபத்திற்கும் பயப்படேன். நீண்ட பிறையினை நகையாகச் சூடிய பெருமானை எண்ணிக் கசிந்து மனம் நெகிழ்ந்துருகி ஒளியுடைய கண்கள் நீரைச் சிந்தும்படி துதித்து உறுதியாய் வழிபடமாட்டாத ஆண்மையுடையவர் அல்லாதாரைப் பார்த்தால், அம்ம! அது நாம் அஞ்சும் வகையாகும்

குறிப்பு:—கோள்-உயிரைக் கொள்ளுந் தன்மை. அதாவது கொலைத்தன்மை. பிறையினகலத்திலும் அதனை நீளம் அதிகமானதால் நீள்நிலா என்றார். வாள் நிலாவு மெனபது வாள்நிலாவென் றாயிற்று. சோர - வடிய. ஏத்தமாட்டா என்பது வழிபடமாட்டா என்ற பொருளில் வழங்கியது. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருப்பாண்டிப் பதிகம்

சிவானந்த விளைவு

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஒருவரை ஒன்றுமிலாதவரைக் கழற்போ திறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி யாதென்றன் உள்ளமதே.

உரை :—பெரிய மலையாகிய இமயமலை யரசன் புதல்வியைப் பாகமாக வுடையாரைப், பாண்டிய மன்னனுக்குப் பெறுதற்கரிய அமுதமான ஒப்பற்றவரை, பெயர், வடிவு முதலிய ஒன்றும் இல்லாதவரை, நான் தமது திருவடிமலரை வணங்கும்படி வெளிப்பட்டு நின்று மனத்தை உருகுவித்துக் குதிரைமேல் ஏறிவந்த வீரர் ஒருவரையல்லாது பிற எவருடைய வடிவத்தையும் என் உள்ளமானது அறியமாட்டாது.

குறிப்பு :—பரு - பருத்த; பெரிய. வரை - மலையரசன். மங்கை-புதல்வி. இறைஞ்சி - இறைஞ்ச. உரு என்பதற்கு இயல்பு என்றும் பொருளுரைப்பர். (க)

சதுரைமறந்தறிமால்கொள்வர் சார்ந்தவர்சாற்றிச்சொன்னோம்
கதிரை மறைத்தன்னசோதி கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே.

உரை நடை :—இரண்டாவது மூன்றாவது அடிகளை முதலிற் கொள்க.

உரை:—கதிரவனைத் தன் ஒளிமிகுதியால் மறைத்தாலன்ன செஞ்சோதியானவன் மூவிலைச் சூலத்தைக் கையிற்கொண்டு, குதிரைமேல் ஏறி வெளிப்பட்டு நமது நடுவே வந்து கூடிவிடுவா னாயின், அவனைக் கண்டவர்களது பிறப்பு நாசமாகும் என்றறிவீராக ளாக. அவனை அடைந்தவர்கள் தமது திறமையை மறந்து ஞானப் பித்துக் கொள்ளுவார்கள். உறுதியாக(ப் பறை சாற்றினாற்போலச்) சொன்னோம். மதுரை வாழுகின்றவர்களது அரசனாகிய பாண்டிய னது மறுபிறப்பினை மேல் நிகழவொட்டாதபடி அச் சோதியான வன தடுத்து விடுவானாயினன்.

குறிப்பு—சதுர் - திறமை. தற்போத மிழந்ததலையே சதுரை மறத்தலாகக் கூறினர். சிவஞான அவாவே அறிமால எனப்பட்டது. கழுக்கடை-சூலம; மூவிலை வேல். குடிகேடு - குடியின் முடிவு; அதாவது பிறவியின் அழிவு. ஓட - மேல் நிகழ. மறு பிறப்பாகிய ஓடத்தை மேற்செல்லாது தடுத்து விடுமென்றலுமொன்று. (஌)

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர், பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார், ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண் டரை உள்ளங் கொண்டார், பேரின்ப வெள்ளத்துட் பெய் கழலேசென்று பேணுமினே.

உரை:—நீங்கள் இன்பச்சுனையில் நீந்திக்குளிக்கின்ற எண்ண முடையீர் ஆயின், உலகத்தை யெல்லாம் ஆனந்த வெள்ளம் மூடிக் கொள்ளும்படி குதிரைமேல் ஏறிவந்த பாண்டியனாராகிய பெரு மான், ஒப்பற்ற பேரின்ப வெள்ளமே திருவுருவாகக் கொண்டு வந்து அடியவரது உள்ளத்தைக் கவர்ந்துகொண்டார். பேரின்ப வெள்ளத்துள் விளங்கும் அவனது வீரக்கழல் நிறைந்த திருவடி கள்பாற் சென்று அவற்றையே வழிபடுவீராக.

குறிப்பு—இன்பப்பெருக்கை விரும்புவீர். இறைவன் பேரின் பச் சேவடியே நாடவேண்டுமென்பது குறிக்கப்பட்டது. பார் - நிலம்; பூமி. தொண்டரை-தொண்டருடைய; உருபு மயக்கம். (௬)

செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின் தென்னன்
நன்னாட்(டு), இறைவன் கிளர்கின்றகாலமிக் காலம்எக் காலத்
துள்ளும், அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த மாக்
கடவி, எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள இருநிலத்தே

உரை நடை :—முதலடியில் 'செல்லன்மின்' என்பதுவரை இறுதியிற் கொள்க.

உரை :—பாண்டியனது நல்ல நாட்டிலே கடவுள் புறப்பட்டு விளங்குகின்ற காலம். இது எக்காலத்திலும் நல்ல காலம். இறைவன் அறிவாகிய ஒளிக்கதிர் வீசும் வாளினை உறை நீக்கி யெடுத்துக்கொண்டு, ஆனந்தமாகிய குதிரையைச் செலுத்தி, எதிர்த்தவர்கள் மண்மிசை விழுந்து புரண்டு பணியும்படியாக அவர்களது பிறப்பை வாள் வீசிச் சேதிப்பன்; ஆதலால், மிகுதியாக அடரும் பிறவிக்கு இணக்கமானவர்கள் அவர்முன் செல்லாதொழியுங்கள்.

குறிப்பு :—எக்காலத்துள்ளும் என்பதை எறியும் என்பதனோடு முடித்தலுமுண்டு. செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின், என்பதற்கு, அடரும் பிறவியைத் தொலைத்தற்குக் கடவுள் நல்லவர். பிறவிதொலைய விரும்புவார், புறநாட்டிற்கு இக்காலத்தே செல்லாதீர்களென்றலுமொன்று. எதிர்ந்தார் பிறப்பை எறியும் என மாற்றுக. எதிர்ந்தார் இருநிலத்தே புரள, என மாற்றுக. (௨)

காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே

உரை :—(உய்தி கூடுங்) காலம் கிடைத்திருக்கும்போதே அன்பு செய்து பிழையுங்கள்; நினைத்தற்கரிய பெருமையுடைய மண்ணினை யுண்ட திருமாலும் அயனும் பிற தேவர்களும் அடைதற்கரிய, ஆலகால விடத்தை யுண்ட எங்கள் பாண்டி நாயகன்; தனது அடியவர்கட்கு மூலமாகவுள்ள நிதியினை எடுத்தளிக்கின்றான் விரைந்து வந்து முற்படுங்கள்.

குறிப்பு :—வாழ்நாளை வீணாக்காது உய்யுங்கள் என்ற குறிப்புங் காண்க. பண்டாரம் - பொக்கிஷம்; நிதிக் களஞ்சியம். மூல பண்டார மென்பது பேரின்பச் செல்வம். பாண்டி நாட்டிலே தமக்கு அருளினமையின 'பாண்டிப் பிரான்' என்றார். (௫)

ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல வல்லன் அல்லன்
வேண்டிய போதே விலக்கில் ஐவாய்தல் விரும்புமின் தாள்
பாண்டிய னார் அருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே

உரை :—நெருங்கிய மாயாமலமாகிய இருள் நீங்கவும், எல்லாப் பொருளும் விளங்கவும், குதிரையைச் செலுத்தி வந்த ஒளியானவனைப் பாண்டியனும் இன்னதென்று சொல்ல இயலாதவனே. ஐந்து வாயில்களாகிய ஐம்பொறிகளை விரும்பிய பொழுதே விலக்க வேண்டுமாயின், அவனது தாள்களை விரும்புவீர்களாக. பாண்டியனாகிய சிவபிரான் அன்பர்க்கு நல்கியருள்கின்ற வீடாகிய பரிசில் அவனது திருவடியாகிய இதுவே.

குறிப்பு :—மாயாவிருள் என்பது மாயா மலத்தாலுண்டாகிய திரிபுணர்ச்சி. நில்லாதன வற்றை நிலையின வென்றுணரும் அறிவு. தூண்டிய - செலுத்திய, குதிரையை என்பது தொக்கு நின்றது. எப்பொருளும் விளங்க உயிரினறிவை இயக்கிய என்றும் பொருள் கொள்ளலாம். ஐவாய்தல்-ஐவாசல்; ஐம்பொறி. விலக்கில் - விலக்கின் 'தாள் விரும்புமின்' என மாற்றுக. பாண்டியனாரென்பது சிவபிரானுக்கு வழங்குதல் அடிகள் மரபு. அறியப்படாது வந்து விரைவில் அருள்புரிதலையே 'முத்திப்பரிசு' என்றார். (௬)

மாயவ னப்பரி மேல்கொண்டு மற்றவர் கைக்கொள்ளலும்
போயறும் இப்பிறப் பென்னும் பகைகள் புகுந்தவருக்
காய அருப்பெருஞ் சீருடைத் தன்னரு ளே அருளும்
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே.

உரை :—பாண்டியன் மாயமாகிய அழகிய பரிமேல் வந்து, பிறரைத் தன் வசப்படுத்துதலும் இப்பிறப்புக்குக் காரணமாகிய

அறுபகைகள் கழிநதொழியும் தன்பாற் சேர்ந்தவர்கசூ, (வீட்டிற் குச சாதனம) ஆகிய அரிய பெரிய சிறப்புடைய தனது திருவரு ளேயே நல்குவன். செமமையாகிய பெரிய கொடை வள்ளலாகிய பாண்டியனுகிய சிவபிரானது செய்ய பாதஙகளேயே சேருஙகள்.

குறிப்பு:—தென்னவன் பரிமேல் கொண்டு மற்றவர் கைக் கொளளும் என முடிக்க. செய்மையாகிய பெருங கொடையெனப் பொருள் கொணடு, அது முத்திப் பெருங கொடை யென்றலு மொன்று. பிறப்பென்னும்-பிறப்பிற்குக் காரணமாய பகைகள் - மும்மலஙகள், அல்லது காமக்குரோத லோபமோகமத மாற்சரிய மாய அறுபகைகளை. பகைகள் போயறுமென முடிக்க. (எ)

அழிவின்றி நின்றதொா ஆனந்த வெளளத திடையழுந்திக்
கழிவில் கருணையைக காட்டிக கடிய வினையகற்றி
பழமலம பற்றறுத்து ஆண்டவன் பாண்டிப பெருமபதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று முந்துமினே.

உரை —அழிவில்லாமல் நிலைபெற்ற ஒப்பற்ற பேரானந்த வெள்ளத்தின்கண் அழுந்துவித்து, நீக்கமில்லாத அருளேக காண் பித்துக, கடுமையாகிய இருவினைகளே யொழித்துப், பழமையாக வரும் ஆணவமலப்பற்றைத் தொலைத்து ஆட்கொணடவன், பாண் டியனுகும் பெரும் பதவி மாததிரமன்றி உலகமுழுதுந தரவல்லன். அவனது முததிக் கொடையையே முற்படடுப் போய்ப் பெறுங்கள்.

குறிப்பு:—பாண்டிப் பெருமபதமேயோ, அன்றி உலக முழு தும், எனககொள்க. பாண்டியனுகிய அவனது பெருமை வாய்ந்த திருவடியே சென்று அவனது கொடையே முந்துமின், என முடிப்பது முண்டு. பதம் - பதவி: திருவடி. (அ)

விரவிய தீவினை மேலைப பிறப்புமுந நீகடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாம்அறி யார்மறந்தே.

உரை —உயிரிற் கலந்துள்ள தீய வினைகள் காரணமாக வருகின்ற முற்பிறப்புகளாகிய கடலைக் கடக்கும்படி தன்னை வழிபட்ட அன்பரது எலும்பையும் உருகுவிக்கும் மேலான பாண்டியனார், குதிரைமேல் வந்தபோது அவரால் அறிவு கவரப்பெற்ற அழகிய கொடிபோன்ற மங்கையர், மரத்தினியல்பைப் பெற்றுத் தம்மையு மறந்து தாம் தம்மை அறியாராயினர்.

குறிப்பு :—முந்நீர்-ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்ற மூன்றுங் கலந்தது. நிலம் உண்டாவதற்கு முற்பட்ட என்ற பொருளில், முன்னீரென்று பாடங் கோடலுமுண்டு. பூங்கொடியார்-மெய்யன்பர்க்கு உருவகம். மரம இயல்-மரத்தின் தன்மை. புந்தி - அறிவு, தன்னுணர்ச்சி கெட்டு இறையன்பு வயமாயினர் என்பது கருத்து. (௯)

கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானுமொர் மீனவன்பால்
ஏற்றுவந் தாருயி ருண்ட திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர்! சேவடி சிக்கெனச் சேர்மின்களே

உரை — யமனை வென்று, அவ்வாறே ஐம்புல அரசர்களையும் தோல்வியடைவித்துத் தானும் தனது பெரிய சத்தியும், (அன்பர்க் கருளுதற் பொருட்டு) அழகாக எழுந்தருளியிருந்தானாகிய பெருமான், ஒரு பாண்டியன்பால் இரந்து வந்து, அவனது உயிரினைத் தன்பால் அடக்கிக்கொண்ட வீரமுடைய ஓர் ஆண்மகனாயினன். தெளிவில்லாதவர்களே! அவன் செய்ய பாதங்களையே உறுதியாகச் சேர்ந்து பற்றுமின்கள்.

குறிப்பு :—ஐவர் - ஐம்புலன். கோ - அரசன். மீனவன் — மீன் கொடியுடையவன். பாண்டியற்குக் கொடி, கயற் கொடி. உயிர் உண்ட-உயிர்ப் போதத்தைக் கவர்ந்துகொண்ட. சேவகனே என்பதில ஏகாரத்தை அசையாய்த் தள்ளி அதனைச் சேவடி யென்பதோடு முடிக்கலாம். வீற்றிருந்தான் சேவகன் சேவடி சேர்மின்களே என முடிக்க. (௧0)

திருச்சிற்றம்பலம்

திருத்தோணிபுரத்தில் அருளிய

பிடித்தபத்து

முத்திக் கலப்புரைத்தல்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

உரை :—விண்ணவர்களுக்கு மன்னனே, எங்கும் நீக்கமில்லாது வியாபித்த அத்துவிதக் கலப்புடைய பொருளே, மன அழுக்குடையேனாகிய எனக்குப் புதுமை என்று சொல்லும்படி அருள் கனிந்து வந்து என் குடும்ப முழுவதையும் ஆட்கொண்ட, இவ்வுலக வாழ்வு நீங்கும்படி (பேரின்பத்தில்) வாழச்செய்த அமுதமே, செவ்விய நூற்பொருளின் முடிவே சிறப்புடைய திருவடிகளை யுடையவனே, (நிலைத்த) செல்வமாயிருப்பவனே, சிவபெருமானே, யாங்களுய்யும் பொருட்டு உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ இனிமேல் எங்கே என்னை விட்டு எழுந்தருளிச் செல்வது?

குறிப்பு :—யோகமே - கலப்பே. உயர்வு என்ற பொருளுமுண்டு. குடி என்பதற்குக் குலமென்ற பொருளுமுண்டு. வாழ்வற- பிறவியற. கழல்-ஆகுபெயர். எம்பொருட்டென்றது தானுந் தன்னைச் சேர்ந்தாரையு முளப்படுத்தி. ஞானி ஒருவனுடைய தவத்தினால் அவன் குடி முழுதும் உய்யுமென்பது நூற் கருத்து. (க)

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைப்படா வண்ணம் காத்தெனை யாண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உரை:—(திருமால் காளையாகத் தாங்க விரும்பிய காலை) காளையை நீக்காது வாகனமாக விரும்பிக்கொண்ட வானவர் தலைவனே, தீவினையேனை (அடிமையாக) உடைய மெய்ப் பொருளே, புலால் நாற்றம் நீங்காத முழுவதும் புழுவினாலாகிய கூட்டிற் கிடந்து முதிர வெய்திப் பாழாகி அடியேன் கீழ்மைப் படா வண்ணம் என்னைத் தடுத்தாட்கொண்ட தெய்வமே, அருட் பெருங் கடலே, இடையறாமல் உன்னை உறுதியாகப் பற்றினேன். நீ, இனிமேல் என்னைவிட்டு எங்கே எழுந்தருளிச் செல்வது?

குறிப்பு:—விடாது - நீக்காது. திருமால் விடையானபடியினால் அதனை வாகனமாகக் கொண்டவரென்று திருச்சாழலிற் குறித்த கருத்தை நோக்குக. முடைவிடாத அடியேன் என்றது முடைவிடாதடியேன் என்றாயிற்று. முடைவிடாத என்பதைக் குரம்பை என்பதோடு முடிக்க. குரம்பை - கூடு, அதாவது இவ்வுடம்பு. முடைவிடாது என்பதை வினையெச்சமாகக் கொண்டு மூத்து என்பதோடு முடித்தலுமுண்டு. அறமண்ணாய் - முற்றிலும் பாழாய். புலால்நாற்றம் நீங்கப்பெறாது அடியேன் கிடந்து மூத்துக் கடைப்படா வண்ணமென முடிக்க. (௨)

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்

செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உரை :—தாயே, தந்தையே, நிகரற்ற மாணிக்கமே, அன்பாகிய கடலில் விளைந்த கிடைத்தற்கரிய அமுதமே, நிலையாதவற்றின் கண்ணேயே அறிவினைப் பெருகச்செய்து, நேரத்தைப் பயன்படாது கழிக்கின்ற புழுப்பற்றி யலைகின்ற கீழ்மைக்குண முடையே னாகிய எனக்கு, பெருநன்மைக் கேதுவாகிய சிவமாந்தன்மை கொடுத்தருளிய நிலைத்த செல்வமானவனே, சிவபெருமானே, இப்பிறவியிலேயே உன்னை உறுதியாகப் பிடித்தேன்; நீ என்னைவிட்டு இனி எங்கெழுந்தருளிச் செல்வது ?

குறிப்பு :—பொய்ம்மை - பயனற்றவை ; நிலையாதவை பயனற்றவைகளை மிகுதிப்படுத்திப் பயன்படுஞ் செயலுக்குரிய நேரத்தைக் குறைப்பது இங்கே குறிக்கப்பட்டது. புழுத்தலை - புழுதத்து அலைதல். உடம்பு புழுமயமாய் இருத்தலால் உடம்பொடு திரிதலைப் புழுததலைதல் என்றார். புழுத்தலை என்று கொண்டால் புழுப்பற்றிய தலையை உடைய என்பது பொருளாகும். செம்மை-நன்மை, நேர்மை பதம் - நிலை. (௩)

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உரை :—கருணை நயமுடைய விளக்கே, கனிந்த நிலையிலுள்ள ஒப்பற்ற பழம்போல்வானே, பேராற்றலுடைய செயற்கரிய தவத்

தைச் செய்தவர்களுக் கரசே, மெய்ப்பொருள் விளக்கும் நூலான வனே, புகழ்தலைக் கடந்த சிவானுபவமானவனே, யோகத்தின் விளக்கமான பயனானவனே, தெளி வெய்திய இடத்து அடியா ருள்ளத்தில் தங்கிய செல்வமானவனே, சிவபெருமானே, அறி யாமை நிறைந்த இடமாகிய இவ்வுலகத்தின் கண்ணே உன்னை உறுதியாகப் பற்றினேன். இனி நீ எங்கெழுந்தருளிச் செல்வது?

குறிப்பு.—படிப்படியாகப் பக்குவப்படாது எப்போதும் ஒரே தன்மையான இன்ப நிலையிலிருப்பதால் அளிந்ததோர் கனியே என்றார். தவர் என்பது சரியையாளரையும், அருந்தவரென்பது கிரியையாளரையும், திறலருந்தவரென்பது யோகிகளையும், பெருந் திறலருந்தவரென்பது ஞானிகளையும் குறிக்குமென்பர். வீடடை தற்குரிய மெய்க்கலை ஞானத்தை இறைவன் ஆசிரிய பரம்பரையில் வைத்து நல்கினமையால் பொருளுடைக் கலையே என்றார். சிவானு பவம் சொல்லினால் கூறப்படாமையின், புகழ்ச்சியைக் கடந்த போகமே என்றார். சிந்தை தெளிந்த இடத்திலேதான் இறைவன் விளங்குதலின், தெருளிடத்தென்றார். இருளிடத்தே என்பதை வினைத்தொகையாகக் கொண்டு, உய்திக்கு வழி தெரியாது திகைக் கின்ற இடத்து எனப் பொருள் கொள்வாரு முளர். (௯)

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
  உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
  விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
  செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
  எங்கெழுந் தருளுவ தினியே.

உரை:—தனக்கு யாரும் நிகரில்லாத ஒருவனாயுள்ளவனே, அடியேனது மனத்தில் உள்ளீடாக விளங்குகின்ற அறிவொளியே, உண்மை நிலையறியமாட்டாத சிறப்பில்லாத எனக்கு உயர்ந்த

நிலையைக் கொடுத்த ஒப்பற்ற அன்பு வடிவமானவனே, புனைந்துரைக்க முடியாத வளம் பொருந்திய ஒளி வடிவானவனே, நிலைத்த செல்வமே, சிவபெருமானே, யான் இளைத்த இடத்தே உன்னை உறுதியாகப் பற்றினேன். இனி என்னை விட்டு நீ எங்கெழுந்தருளிச் செல்வது ?

குறிப்பு — வீறு - சிறப்பு. மூர்த்தி - வடிவுடையவன். வீட்டினை நாடிப் பிறவித் துயரால் இளைத்த இடமே சத்திநிபாத நிலையாகும். (௭)

அறவையேன் மனமே கோயிலாகக் கொண்டாண்(டு)
அளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உரை :—திக்கற்றவனாகிய என்னுடைய உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு, எழுந்தருளி யாட்கொண்டு, எல்லையற்ற பேரின்பத்தைக் கொடுத்து, என் பிறப்பின் மூலத்தைக் களைந்து, என் குடும்பம் முழுவதையும் ஆட்கொண்ட, தலைக்கோல முடையவனே, எமது பெரிய பொருளே, தெளிவாக யான் கண்ட காட்சியானவனே, அடியேனுடைய நிலைத்த செல்வமே, சிவபெருமானே, முடிவிலே உன்னையே உறுதியாகப் பற்றினேன். இனி நீ எங்கெழுந்தருளிச் செல்வது ?

குறிப்பு :—அறவை - எல்லாமற்றவன்; யாதொரு கதியுமில்லாதவன். பிஞ்ஞகம்-இறைவனது சடைமுடி, பிறை, அவனது தலைக்கோலமாகும். திறவு - திறத்தல், வெளிப்படை, தெளிவு. இறவு - முடிவு; இறுதி. இறவு என்பதற்கு அபாயம் எனவுங் கொள்க. (௮)

பாசவே ரறுக்கும் பழம்பொருள்! தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உரை :—மும்மலமாகிய கட்டுக்களின் மூலத்தைக் களையும் பழம் பொருளானவனே, தனக்கு அன்பு செய்யும் வகையை அடியேனுக் கருள்செய்து, எனது வழிபாட்டை விருப்புடன் ஏற்று, எனதுள்ளத்துட் புகுந்து, அழகிய திருவடிகளைக் காட்டிய மெய்ப் பொருளே, இயற்கை ஒளியுடைய விளக்கே, வளமிக்க கதிர்வீசும் ஒளிவடிவானவனே, நிலைத்த செல்வமே, சிவபெருமானே, ஆண்டவனே, உன்னை உறுதியாகப் பற்றினேன் இனி நீ எங்கெழுந் தருளிச் செல்வது ?

குறிப்பு :—பழம் பொருள் என்பதற்குப் பழைய உபாயம் என்றலுமுண்டு. அதாவது ஞானத்தைப்பற்றி நிற்றல். தேசுடை விளக்கே என்றது இறைவனது தனி நிலையையுஞ், செழுஞ்சுடர் மூர்த்தி என்பது அவனது பல அருள் வடிவங்களையுங் குறிக்கும்.

அத்தனே அண்டா அண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தா சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

உரை:—அப்பனே, விண்ணவர்க்கு ஓராதாரமாய் நின்ற முதல்வனே, சற்று முடிவில்லாத திருவிளையாட்டுடையவனே, அல்லது ஞானவடிவனே, அன்பர்கள் உறுதியாகப் பற்றிய நிலைத்த செல்வமே, சிவபெருமானே, அன்பர்பால் விருப்புடையவனே, எல்லா வுயிர்களோடு கலந்து அவையேயாய், அவை உண்டாகி நிலைபெற்று, நிற்பதற்குக் காரணமாய்த் தான் அவையல்லாமல் வேறு பொருளாய நிற்குந் தந்திரக்காரனே, உன்னை உறுதியாய்ப் பற்றினேன். இனி என்னைவிட்டு, நீ எங்கே எழுந்தருளிச் செல்வது?

குறிப்பு.—அண்டமாய்-ஆதாரமான உலகமாய் என்பாருமுளர். யாதும் - ஒரு சிறிதும். பித்தன் - விருப்பமுடையவன். தழைத்து, பிழைத்து என்பவை, தழைப்பித்து, பிழைப்பித்து என்ற பொருளில் வந்தன. (௮)

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உரை:—பாலினைக் குழந்தைக்குப் பசிக்குங் காலத்தே அது அழுமுன்னே அறிந்து ஊட்டுகின்ற தாயைப் பார்க்கிலும் மிகவு மிரங்கித் தீவினையேனுடைய உடம்பை உருகுவித்து, உள்ளத்தே அறிவொளியை வளர்த்து வற்றுதலில்லாத பேரின்பமாகிய தேனைப் பொழிந்து, இடந்தொறும் உடன் திரிந்த செல்வமே! சிவபெருமானே! உன்னை யான் இடைவிடாது உறுதியாகப் பற்றினேன். இனி என்னை விட்டு நீ எங்கெழுந்தருளிச் செல்வது?

குறிப்பு:—மறப்பு நினைப்புடைய தாயினும், மறப்பு நினைப் பில்லாது எப்போதும் உதவும் கடவுளது கருணை பெரிதாதலின்,

சாலப்பரிந்து என்றார். ஊனினை உருக்கி என்பதற்குப் பிறவியை ஒழித்து என்று முரைப்பர். புறம் - இடம். சென்ற இடமெல்லாம் உடன் நின்றுதவுதலின், 'புறம் புறந்திரிந்த' என்றார். (௯)

புனபுலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உரை.—தசையாலாகிய என் சிற்றுடம்பு மயிர்க் கால்கள் தோறும் நெகிழ்ச்சி யடையுமாறு அதனைப் பொன்னினாலாகிய பெரிய கோவிலாகக் கருதி அதன்கண் எழுந்தருளி, என் எலும்பை எல்லா முருகுவித்து எனக்கு எளிதில் வெளிப்படுபவனாகி என்னை யாட்கொண்ட ஆண்டவனே! குற்றமில்லாத மாணிக்கமே! பிறப்பு, இறப்பு, வாழ்வின் துன்பங்கள், அறியாமை என்னுமிவற்றின் சார்புகள் எல்லாவற்றையு மொழித்த நல்ல ஒளி வடிவனே! பேரின்பமானவனே! உன்னை உறுதியாகப் பற்றினேன். இனி நீ எங்கெழுந்தருளிச் செல்வது?

குறிப்பு.—யாக்கை என்பதைக் கோயிலா என்பதனோடு முடிக்க. துன்பமே பிறப்பே என்பவைகளில ஏகாரம் எண்ணுப் பொருளில் வந்தது. (௧0)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருவேசறவு

சுட்டறிவு ஒழித்தல்

கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே

உரை நடை :—இரண்டாமடியில் கழலிணைகள் கரும்புதரு சுவை காட்டினை யென மாற்றுக. மூன்றாமடியை முதலிற் கொள்க.

உரை :—கங்கையில் அடங்கிய அலைகள் உலவுகின்ற சடையினை யுடையவனே! இரும்பின் தன்மையைப் பயக்கும் உள்ள முடையேனை இழுத்து இழுத்து எலும்பினை உருகுவித்து, நினது திருவடிகள் இரண்டின், கரும்பின் சுவைபோன்ற இனிமையை எனக்குக் காண்பித்தருளினை. நரிகள் எல்லாவற்றையும் பெரிய குதிரைகளாகிய வகை உனது பேரருளினா லாயதன்றோ?

குறிப்பு :—இரும்பு-இரும்பின் தன்மை. எளிதில் உருகாமை. கங்கை சடையில் அடங்கினமையால், 'ஒருங்குதிரை' என்றார். ஒருங்கு - அடங்கு. அன்றே என்பதைப் 'பேரருள்' என்பதனோடு சேர்த்துப் பேரருளல்லவா, என்று கொள்க. அன்றே, என்பதை ஆக்கியவாறு என்பதனோ டியைத்து, அந்நாளில் ஆக்கியவாறு என்று முரைப்பர். (க)

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் ஆளானார்க்(கு)
உண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணார உய்ந்தவா றன்றேஉன் கழல்கண்டே

உரை:—பண் நிறைந்த சொல்லுடைய உமையம்மை பாகனே! உன் அடிமையானவர்கட்கு நுகர்வதற்குரிய நிறைந்த கிடைத்தற்கரிய அமுதமானவனே! முதல்வனே! மண்ணுலகில் பொருந்திய என் பிறவிகளைத் தொலைத்து அடியேனை ஆண்டருள்பவனே! நீ என்னை வாவென்று சொல்ல, உன் திருவடிகளைக் கண்ணாரக் கண்டல்லவா நான் உய்ந்த முறை ஏற்பட்டது?

குறிப்பு:—உண்ணார்ந்த - உண் + ஆர்ந்த; நுகரும்படி நிறைந்த. கண்ணார என்பதை உன் கழல் கண்டேனே என்பதனோடு முடிக்க. அன்றே - அன்றோ. உன் திருவடியைக் கண்டுதானே நான் உய்ந்தேன் நீ ஆண்டகாலத்திற் போலவே, இன்று முதல் திருவடியைக் காட்டவேண்டுமென்று குறிப்பித்தவாறு.
(௨)

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆதமரும் இன்றியே அழுந்துவேற் (கு) ஆ!ஆ!என்(று)
ஓத(ம்)மலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேஎம் பரம்பரனே.

உரை நடை:—எம்பரம்பரனே என்பதை முதலிற் கொள்க.

உரை:—எமது மிக்க பெரியோனே! ஆதரவில்லாதேனாய்ப் பிறவி, சாவு என்கின்ற கடத்தற் கரிய நரகத்திலே உறவினர் யாதும் உதவுதற் கில்லாமலே அழுந்து மியல்புடையேனாகிய அடியேனுக்கு, ஐயோ வென்றிரங்கியருளிய, கடலிற் சீறியெழுந்த விடமுண்ட நாதனே! உன் திருவடிக் கமலங்களைக் காட்டிய விதம் என்னே!

குறிப்பு :—ஆதம - ஆதரவு. அழுந்துவேற்கு அடியேற்கு என்பதனோடு முடிக்க. ஓதம - கடல். மலி - மிக்கெழுதல். அன்றே - அசை. (ரு)

பசசைததாள் அரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உசசத்தார பெருமானே அடியேனை உய்யக்கொண்(டு)
எசசத்தார சிறுதெய்வம ஏத்தாதே அச்சோ என்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேஉன் திறம்நினைந்தே.

உரை :—பசிய நாவினையுடைய பாமபினை ஆட்டுபவனே! விரிந்த சடையை யுடையானே! உனது திருவடித் தாமரையைத் தலையுச்சியிலுடைய பேரன்பராது தலைவனே! குறைவுகள் நிறைந்த சிறு தெய்வங்களை வழிபடாமல், உனது தன்மையையே நினைந்து, அந்தோ என் நினைவின் முறைப்படியே அடியேனை நீ உய்யக் கொள்ள, நான உய்திகூடிய முறைதான் என்னே!

குறிப்பு :—தாள்-தால். தாலு - (வடமொழி) நாக்கு. தாள் என்பதை ஆட்டி என்பதோ டியைத்து இளந் திருவடியுடைய பாம்பாட்டி என்பது முண்டு. இறைவன் பாம்பினைக் கச்சாக வுடையவன். திருப்புறம்பயத்தில் பாம்பாட்டுவானாக விடந்தீர்த்த கதை முறகூறப்பட்டது. உய்யக் கொண்டு - உய்யக்கொள்ள. எசசத்தார - எசசத்து + ஆர் - எசசம் - குறை. ஆர் - நிறைந்த. சித்தத்தாறு - சித்தத்து + ஆறு - நினைவின் முறை. அது இறைவ னொருவனையே நினைதலாகிய முறை. (சு)

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே.

உரை :—ஞான நூல்களைப் படித்தறியேன்; உள்ளங் கனிந் துருகமாட்டேன். ஆயினும், உன்னையன்றி வேறு தெய்வம் எதனை

யும் அறியமாட்டேன். உனது திருவாக்கினியல்பினால, உனது நீண்ட கழல்களைச் சேர்ந்து இறுமாப்புற்றேன். எம்பெருமானே! நினது மாறில்லாத பொன்போன்ற அருள் அடியேனுக்கு நல்கியது பொன் இருக்கையை நாய்க்கிட்ட முறைபோலா மன்றோ?

குறிப்பு:—வாக்கு - இறைவன் உபதேசமொழி. எம்பெருமானே! என்பதை முதலிற் கொள்க. (௫)

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேனெம் பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேஅம் பலத்தமுதே.

உரை நடை:—எம்பெருமானே, உடையானே, அம்பலத் தமுதே என்பவற்றை முதலிற் கொள்க.

உரை:—எமது பெரியோனே! நாதனே! சிறசபையிலாடும் அருமருந்தே! பஞ்சின் தன்மையையுடைய பாதங்களையுடைய மாதரது கடைககண் பார்வையால், இடைஞ்சற்பட்டு, நஞ்சு போன்ற துன்பம் மிகுதலினால், (அஞ்சி) நடுங்கு மியல்பினனாகிய நான், உனது இனிய அருளாற் பிழைத்தேன். அடியேனை நீ அஞ்சாதே யென்று ஆட்கொண்ட வகைதான் என்னே?

குறிப்பு:—பஞ்சாய என்பதற்குச் 'செம்பஞ்சூட்டிய' என்று முரைப்பர். கூர - மிக. நஞ்சாய - நஞ்சுத்தன்மை யுள்ள. (௬)

என்பாலைப்பிறப்பறுத்திங் கிமையவர்க்கும் அரியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட(து)
என்பாலே நோக்கியவா றன்றேஎம பெருமானே.

உரை நடை:—'எம்பெருமானே' என்பதை முதலிற்கொள்க.

உரை :—எமது தலைவனே! இவ்வுலகத்தே என்மாட்டிருந்த பிறவியைக் களைந்து, வானவருமறிய வொண்ணாத, தென்றிசையி லுள்ள திருப்பெருந்துறையிற் றங்கியருளுஞ் சிவபெருமானாகிய நீ, என்மீது வைத்த தயவால், உள்ளம் நெகிழும்படி அதனுட் போந் தருளி ஆண்டுகொண்டது, நீ என்னிடமே திருநோக்கஞ் செலுத் திய முறைபற்றி யல்லவா?

குறிப்பு :—பாலை - இடத்தே; ஐ-சாரியை. அன்பால் - தய வால், அருளால் (எ)

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஓத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
போத்தேநீ ஆண்டவா றென்றேஎம் பெருமானே

உரை :—எமது தலைவனே! (எல்லாவற்றிற்கும முற்பட்டமை யால்) மூத்தவனே! மூப்பு எய்தாத ஆதியே! எல்லையற்ற அருள் நூல் வடிவானவனே! அவற்றின் பொருளானவனே! மெய்யர்க்கு மெய்யாயும் அல்லாதார்க் கல்லாதானாகியும் தோன்றினவனே! இவ் வுலகிலே போந்து நின்று உலகவாழ்விற் புரள்கின்ற என்னைத் திருவருளினால் நீ அந்நிலைநின்று நீக்கி ஆண்டமுறைதான் என்னே?

குறிப்பு :—ஓத்து - ஓதப்படுவது, நூல். ஓத்தானே, பொரு ளானே, என்பதற்குச் சொல்லுலகமும் பொருளுலகமு மானவனே யென்று முரைப்ப. போத்தே-மீண்டுமெனவு முரைப்ப (அ)

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா (று)
அருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே.

உரை நடை :—இடைமருதே யிடங்கொண்ட அம்மானே, என்பதை முதலிற்கொள்க.

உரை:—திருவிடைமருதைத் தனது திருப்பதியாகக்கொண்ட எந்தையே! பொருந்துதற்கினிய உனது திருவடி மலர்கள் எனது உள்ளத்தில் நிலவி யோங்கி, உள்ளமுருகவும், தெருவெல்லாம் மிக வும் ஓலமிட்டுச் சிவபெருமான் என்றியம்பி வழிபட்டு நின்னருளைப் பருகவும், உனது மேலான திருவருட் பெருங்கடலில் மூழ்குதலாகிய வித்தத்தை இவ்வுலகத்திலே நீ எனக்கு அருள்செய்க.

குறிப்பு—உள்ளுருக என்பதற்கு உயிர்ப்போதங்கெட எனவு முரைப்பர். பருகிய-பருக, செய்யிய வென்னும் வினையெச்சம் (௯)

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

உரை நடை—இறுதியடியை மூன்றும் அடியில் 'புகுந்து' என்பதனை அடுத்தமைக்க.

உரை:—நானோ (வீடடைதற்குரிய) நற்றவஞ் செய்தேன்? (வீடு விரும்புவார் புகலும் நட்பவைந் தெழுத்தாய) சிவாயநம வெனபதைச் சொல்லப் பெற்றேன். தேன்போலவும், இனிய பாலமுதம்போலவும் இனிமை பயக்குஞ் சிவபெருமான் தானே வலிதில் எழுந்தருளிவந்து என்னுடைய மனதிற் புகுந்தருளிப் புலால் நிறைந்த உடம்பில் உயிர் வாழ்தலைக் கண்டித்து அதனை வெறுத்திடும்படி அடியேனுக்கு அருள் செய்தான்.

குறிப்பு:—நமசிவாய வென்பது தூல பஞ்சாட்சரம், போக மளிப்பது. சிவாயநம வென்பது சூட்சும பஞ்சாட்சரம்; வீடளிப்பது.

(௧௦)

திருச்சிற்றம்பலம்

———

திருவாரூரில் அருளிய

திருப்புலம்பல்

சிவானந்த முதிர்வு

கோச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே.

உரை:—அழகிய தாமரை மலரில் தங்கும் நான்முகனும் திருமாலுமறியாத ஞானநெறியால் அடையப்படுபவனே! கோங்கம் பூவையொத்த நகிலையுடைய உமையம்மை பாகா! திருவெண்ணீறு முற்றிலும் பூசப்பெற்றவனே! உயர்ந்த மதில் சூழ்ந்த திருவாரூரினை இடமாக வுடையானே! அடியேன் உன்னுடைய கழலணிந்த திருவடிகளிரண்டினையு மல்லாமல் வேறெவற்றையும் ஒரு சிறிதும் புகழமாட்டேன்.

குறிப்பு:—திருமாலுக்கும் பிரமனுக்கும் கடவுளையறியும் சிவ ஞானம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லாமையால் அவர்கள் அறியாத நெறியான், என்றார். கோங்கின் அரும்பை நகிலுக் குவமையாகக் கூறுவர். அலர் என்பது விரியும் பருவத் தரும்பு. வெண்ணீறாடி என்பதற்குத் திருவெண்ணீற்றில் முழுகினவனே என்றலு முண்டு. (க)

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன் நான்
உடையானே உனையல்லா துறுதுணைமற் றறியேனே.

உரை:—சடையவனே! தழலின்கண் கூத்தியற்று பவனே! மூன்று இலைபோன்ற கிளைகளை உடைய சூலாயுத முடையவனே! மேலான அறிவொளியே! உயிர்களுக்குத் தலைவனே! வெண்ணிற முடைய இளங்காளையை வாகனமாக வுடையவனே! எங்கும் பரவிய சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையானே! முதல்வனே! உன்னை யல்லால் வேறு உற்ற துணையை நானறிகிலேன.

குறிப்பு:—அக்கினியின் இதயத்தி லிருப்பவன் சிவபிரானாக லின், தழலாடீ என்றார். தயங்கு - விளங்கு. பசு - கட்டப்பட்ட உயிர்கள். உறுதுணை - இடருற்றகாலத் துணை; பெரிய துணை யெனவுங் கூறுவர். (௨)

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டே
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும் [ன்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

உரை:—திருக்குற்றாலத்திலே விரும்பி வீற்றிருக்குங் கூத்தப் பெருமானே! உறவினரை யான் வேண்டுவனல்லேன், ஊரும் பேரும் எனக்கு வேண்டுவனவல்ல. (திருவடிஞானம் பெறாத) கலைஞான முடையாரை யான் விரும்பேன். கற்கவேண்டியனவும் இனிப் போதுமானவையே. கழல்கள் ஒலிக்கின்ற உனது திரு வடிக்கே கன்றை உடைய பசுவின் மனம்போலக் கனிந்து உருகு வதையே யான் உன்பால் வேண்டுகின்றேன்.

குறிப்பு:—கற்பனவெல்லாம், சுட்டறி வுடையார்க்கே பயன் படுவன. அகண்ட அறிவுடையார்க்குச் சுட்டறிவாற் பெறுங் கலை ஞானம் புதிது புதிதாக வேண்டியதின்மையின் கற்பனவும் இனி யமையு மென்றார். கற்றா - கன்று + ஆ - கன்றினையுடைய பசு. பசு கன்றின்பா லன்புடைமையாற் பால் சுரத்தலின், அதனை எடுத்து விதந்தனர். (௩)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

குலாப்பத்து

அநுபவம் இடையீடுபடாமை

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை நடை :—குலாத்தில்லை யாண்டானைக் கொண்டு என்பதைத் தெளிந்து என்றதன் பின் வைக்க.

உரை :—அடியேன் திருவோடுங் கோவணமுமே பற்றுவன என்று நினைந்து, உள்ளமுருகித் தேடுகின்றபொருள் சிவனது திருவடியே எனத் தேறி, விளங்குகின்ற தில்லை யாண்டவனைப் பற்றிக் கொண்டு உயிரும் அதன் கூடாகிய உடம்பும் ஆனந்தத்தால் நிறைந்து தள்ளாட யானும் வளைந்து கூத்தாடுவேன்.

குறிப்பு :—குமண்டையிட - நிறைவினால் அசைந்திட ; தெவிட்ட. (க)

துடியேர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

உரை நடை :—எனைத்தனதாள் முயங்குவித்த குலாத்தில்லை யாண்டானை அடியேன் கொண்டன்று, துடியேரிடு...பிறவேன்

உரை :—என்னைத் தனது திருவடியின்கண் புணர்வித்த, விளக்கம் மிக்க தில்லையாண்டவனை அடியேன் பற்றினேன். ஆகலால் உடுக்கைபோல அழகிய நுணுகிய இடையை உடைய, புனிதச் சொல்லுடைய பெண்டிர் தோள்கள்பாலுள்ள விருப்பத்தால் பாவ மிகுதற்கு இடமாகிய தீய செயல்கள் எத்தனை செய்துவிட்டாலும் நான் இறக்கமாட்டேன், பிறக்கவுமாட்டேன்.

குறிப்பு :—ஞானிகளுக்கு நேரும் பிராரத்த வினைகளை இறைவன் ஏற்றுக்கொள்வானாதலின் தனக்கு மேற் பிறவிக்கு இடமில்லை யென்பது குறிப்பித்தார். (௨)

என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை :—எலும்புகளை உள்ளுருகச் செய்து, இருவினைகளின் வலியினை ஒழித்து, பிறவித் துன்பத்தை நீக்கி, உடன்பாடாகவும் எதிர்மறையாகவுமுள்ள இருவகைப் பற்றுக்களையுங் களைந்து, புனிதஞ்செய்து, எதிர்காலத்தில் வரக்கூடிய வினைப் பயன்களை முழுவது மழித்தற்பொருட்டு என் நெஞ்சத்தே எழுந்தருளிய அன்பு வடிவான விளக்கமிக்க தில்லை யாண்டவனை யான் பற்றிக் கொண்டேன்.

குறிப்பு :—என்பினுட் பகுதியும் அன்பினால் உருகுதல்பற்றி 'என்புள்ளுருக்கி' என்றார். ஈடழித்து - இருவினைப் பயனையும் சமமாக அழித்து எனவு முரைப்பர். துவந்துவம் - விருப்பு வெறுப்பு, போற்றல் இகழ்தல், தழுவல் அடித்தல் என்பனபோல எதிரிடையாய இருவகைச் செயல்களும் குணங்களுமாம். முன்பு - எதிர்காலம். அன்பின் என்பதில் இன் சாரியை. அன்பு என்பதை ஆண்டானை என்பதோடு முடிக்க. (௩)

குறியும் நெறியும் குணமுமிலார் குழாங்கள் தமைப்
பிரியும் மனத்தார் பிரிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில் உருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை:—அடையாளமும், வழியும், நற்குணங்களும் இல்லாதவராயப் பாசக்கூட்டங்களை விட்டு நீங்கு மெண்ணத்தினராய் உள்ள அடியார்கள் தன்னைப் பிரிதற்கரிய தன்மையுடையவனை, அன்பு மிகுகின்ற உள்ளத்திற் றோன்றி அவைகட்கு அமுத மயமாக விளங்கும் தூய நிலையுடையானை, எல்லாவற்றையும் அறிகின்ற விளக்கமிக்க தில்லை யாண்டவனைப் பற்றிக்கொண்டேன்

குறிப்பு:—குறி என்றதற்குப் பெயரென்றுங் கூறுப. நெறி என்பது சமயவழி. குழாங்கள் என்பதற்குச் சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்களென வுரைப்பர். பெற்றி - தன்மை. செறியும் - (அன்பு) நிறையும். உருத்து - உருவோடு தோன்றி (௨)

பேருங் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை:—பேரும் பல்வகைக் குணங்களும் நம்மைக் கட்டுப் படுத்தற் கேதுவாகிய இந்தப்பிறவியைத் தூர்ந்தொழியும்படி மலமாகிய குற்றத்தை யறுத்து, அடியார்கள் எல்லாரும் இறைவனைக் கூடும் முறையிலே சிவபெருமானது அருளாகிய தேனினையுண்டு நிறைவடைதற் கேதுவாகிய விளக்கமிக்க தில்லையாண்டவனைப் பற்றினேன்

குறிப்பு:—உடம்பு காரணமாக உயிரிற்கொரு பேரும் தன்மைகளும் பேசப்படுதலின் பிறவியே அதற்குக் காரண மென்றார்.

தாரும் பரிசு - பற்றறக் கழியும் வண்ணம். வகையால - வகையினைப் பின்பற்றி. ஆரும், என்பதைத் தில்லைக்கு அடையாக்குவாருமுளர். (௨)

கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை :—மரக்கொம்பில் அரும்பாகவும், குவிமலராகவும், காயாகவும் ஆய கனி உதிர்தல்போல உடம்பும் அவ்வாறாக வீணே பழுத்து முதிர்ந்து இவ்வாறு பயனில்லாமல் அழிந்துபோகாதபடி நான் நம்பித் துணையாகக் கொண்ட என் மனமானது கடவுளைச் சேரும்படி நான் விரும்பும் அழகிய பொன்னிறமாகிய விளக்கமிக்க தில்லையாண்டவனைப் பற்றிக்கொண்டேன்.

குறிப்பு.—கொம்பு உலகத்திற்கும், அரும்பு, மலர், காய் முதலியன உடம்பின் வளர்ச்சி நிலைகளுக்கு முவமையாகும். போகாமே, வண்ணம் அணுகும், தில்லை, கொண்டன்றே என முடிக்க. (௩)

மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் எனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை :—எல்லாரும் புகழ்தற்குரிய வலிமை வாய்ந்த மன வன்மையுடைய இராவணனுடைய தோள் நெரியும்படி மிதித்த இறைவன் திருவடியானது எனது தலைமேற் பொருந்தியிருக்குங் கால், எழுந்து தோன்றக்கூடிய பசுபாச வுணர்ச்சி யாதும் இல்லேமாகினேமென்று மகிழ்ந்து ஆரவாரித்தற்கேதுவாகிய விளக்கமிக்க தில்லையின்கண் ஆண்டவனைப் பற்றிக்கொண்டேன்.

குறிப்பு:—இராவணன் கதை வெளிப்படை. கதிக்கும் - மேற்பட்டு எழும். பசு - உயிரின் தன்னிலைவு. பாசம் - மும்மலமாகிய கட்டு. இங்கு - இவ்வுலகில் அதிர்க்கும் - ஆரவாரிக்கும். (எ)

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என்தலைமேல் நட்டமையால்
கடக்குந் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை:—பூமியைத் தோண்டும் இயல்புடைய கரிய விறகுக் கட்டையை ஒத்த பன்றியின் பின்னே காட்டகத்தில் நடந்த திருவடியை என் தலைமேல் நாட்டினமையால், என்னை வெல்லுந் திறமையுடைய ஐம்பொறிகளாகிய கொடியவரது வலிமையுடைய ஆட்டை அடக்கவல்ல விளக்க மிக்க தில்லையாண்டவனைப் பற்றிக் கொண்டேன்.

குறிப்பு:—'கருமுருடு' என்றது பன்றியின் நிறத்தையும், வலிமையையும் குறித்தவாறு. அர்ச்சுனன் தவத்திற்காக இறைவன் வெளிப்பட்டு அருள்புரியக் கருதிய காலை, இறைவன் வேட்டுவ வடிவங்கொண்டு, மூகாசுர னென்பவன் கொண்ட பன்றி வடிவத்தின் பின், அதனை ஓட்டிச் சென்றமை பாரதத்திற் காண்க. கண்டகர் - கீழ்மக்கள்; கொடியவர். வல்லாட்டை - வலிமிக்க ஆட்டங்களை. அடக்கும் என்பதை ஆண்டானென்பத னோடு முடிக்க. (அ)

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

உரை:—விளையாத பாழான வயலினையடைந்து நன்மையின்றிக் கிடக்கு மியல்புடைய எனக்கு, முற்பிறப்பிற் செய்த தவத்தால் முடிந்து வைத்த நிதி கிடைக்கப் பெற்றுச் சிவந்த

தாமரை போன்ற திருவடிகளையுடைய சைவனாகிய கடவுளுக்கு இழிவான எனது தலையினால் அடிமைத் தொழில் செய்தற்குரிய விளக்க மிக்க தில்லை யாண்டவனாகிய கூத்தப் பெருமானைப் பற்றினேன்.

குறிப்பு:—பாழ்ச் செய் - பாழான வயல் இங்கே பயனில்லாத உடம்பினைக் குறிக்கும். தலைத்தால்-தலையினைப் பயனால். கிழியீடு - புதையல் போல் துணியிற் கட்டியிடப்பட்ட நிதி. செய்ய தாமரைத் தாள் என மாற்றுக. 'ஐயாறதனிற் சைவனாகி' யென்றபடி இறைவன் திருவையாற்றில் சைவனாக உருவங்கொண்டதனை முன் கூறப்பட்டது. ஆள் - அடிமைத் தொழில். [illegible]

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்(கு)
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே

உரை:—திரட்சியும் வரிகளுமுள்ள முலை உடைய பூங்கொம்பை யொத்த உமையம்மை பாகனுக்கு நேர்மை உடைய உள்ளத்தோடு பணிவிடை செய்கின்ற எனக்கு, இப்பிறப்பில் நிகழக்கூடிய வினைப் பயன்களனைத்தையும் இவ்வுலகிலேயே ஒழிக்கவல்ல, தாய்போன்ற, விளக்க மிக்க தில்லையாண்டவனைப் பற்றிக்கொண்டேன். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருந்துறையில் அருளிய

அற்புதப்பத்து

அனுபவம் ஆற்றாமை

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மையலாயிந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியுள் அகப்பட்டுத், தையலாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான் தலைதடுமாறாமே, பொய்யெலாம்விடத் திருவருள் தந்துதன் பொன்னடியிணைகாட்டி, மெய்யனாய்வெளி காட்டிமுன் நின்றதோர் அற்புதம் விளம்பேனே.

உரை.—(நில்லாதவற்றை நிலையென்றுணரும்) மயக்கவுணர்ச்சியுடையனாய இந்த மண்ணுலகிலே வாழ்க்கையென்னும் கடலினுள் அகப்பட்டு, பெண்கள் என்கிற சுழியிற் சிக்கி, நான் அறிவு மாற்றமுறாமல், நிலையாத பயனற்றவை யெல்லாம் விட்டு நீங்கும்படி திருவருள் கொடுத்துத் தனது அழகிய திருவடிகளிரண்டையுங் காட்டியருளி, நிலைபேறுடையனாகும் பொருட்டு அருள் வழி காட்டி என் முன்பாக வெளிப்பட்டு நின்றதொரு வியப்பான செயலை இன்னதென்று சொல்ல அறியேன்

குறிப்பு:—மையல் - மயக்கம். வாழ்வெனுமாழி - பிறவிக் கடல் பெண்டிரை மணப்பதால் மக்களுஞ் சுற்றமுஞ் சூழப்பெற்று அவர்கள் பாசத்தினின்று புறம்போதலருமையாகலின் 'சுழித்தலைப்பட்டு' என்றார். தலை - அறிவுக்கு இடம். மெய்யனாய் என்பதற்குத் திருமேனி உடையனாய் என்றும், வெளிகாட்டி என்பதற்கு அதனை வெளிப்படக் காட்டி என்று முரைப்பர். (க)

ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோர் இயல்பொடும் வணங்காதே, சாந்த மார்முலைத் தையலநல் லாரொடும் தலை தடு மாறாகிப், போந்து யான்துயர் புகாவண்ணம் அருள் செய்து பொற்கழ லிணைகாட்டி, வேந்த னாய்வெளி யேஎன் முன் நின்றதோர் அற்புதம் விளம்பேனே

உரை —பொருத்தமான அழகிய பூக்களைத் தூவி, முட்டுப் படாத நல்லியல்போடு இறைவனை வழிபடாது, சந்தனக் குழம்பு நிறைந்த நகிலை உடைய அழகிய பெண்டிர்களோடு கலந்து தடு மாறிப் போய யான் துன்பத்தில் வழுந்தாதபடி திருவருள் புரிந்து, கழலணிந்த இரண்டு பொன்னடிகளையுங் காட்டி, என்னரசனாய் வெளிப்பட என்முன் நின்ற ஒப்பற்ற வியப்புச் செய்கையை இன்ன தென்று சொல்ல அறியேன்.

குறிப்பு :—ஏய்ந்த மாமலர்-பழுதில்லாத வாசனையுடைய நன மலர் முட்டாத தோரியல்பாவது - நன்மை வரினும் தீமைவரினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், பயன் கருதாது வழிபடுதல். சாந்தம் - சந்தனம். தையல - அழகு. (௨)

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நானென தெனும்மாயக், கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக் கழறியே திரிவேனைப், பிடித்து முன்னின்று பெருமறை தேடிய அருபபொருள் அடியேனை, அடித்தடித்துஅக் கார முன் தீற்றிய அற்புதம் அறியேனே

உரை :— மண்ணுலகத்திலே தக்கவன்போல நடித்துப் பொய் யான பல காரியங்களைச்செய்து, யானெனதென்னுஞ் செருக்கில் விளைந்த மயக்கமாகிய பாம்பு கடித்த இடத்திலே முன் வினையா கிய விடந்தங்கி மிகுதிப்படவே, புலம்பியலையு மியல்புடையேனைத் தானே பிடித்து எதிரே எழுந்தருளி நின்று அந்தப் பெரிய வேதங் கள் தேடி அடைதற்கரிய பரம்பொருள் அடியேனை எளிதாகத்

தணடித்துத தணடிததுப் பேரின்பமாய சர்க்கரையை முற்படத் தின்பிதத அருஞ்செயலை இன்னதென்று நான்சொலல அறியேன்.

குறிப்பு —மாயம் - மயககம. அறியாமை பற்றி வருஞ் செருககு செருக்கினால் ஒரு காரியத்தைச செயதவுடன் அதன் பயன் முறசெய்த வினைப் பயனாக கேற்ப வருதலால் முன்வினை யெனறார். அககாரம் - சர்க்கரை; பேரின்பத்திற்கு உருவகம். தீற்றிய - தின்பிதத, நுகாவிதத. (௩)

பொருந்தும இப்பிறப பிறபபினை நினையாது பொய் களே புகன்றுபோய்க், கருங குழலினார் கண்களால் ஏறுண்டு கலங்கியே கிடப்பேனைத். திருந்துசேவடிச் சிலம்பவை சிலம் பிடத் திருவொடும் அகலாதே, அருந்துணைவனாய் ஆண்டு கொண்டருளிய அற்புதம் அறியேனே

உரை —(மாறிமாறி வநது) பொருந்துகின்ற இந்தப் பிறப் பிறப்புககளைக் களையும் வழிகளை எண்ணாது, நிலையாதனவற்றையே விருமபிப் போய் அல்லது பொய்களையே சொல்லித திரிந்து, கரிய கூநதலையுடைய பெண்களுடைய கண்களினாலே தாக்குண்டு, கலக்க முறறுக் கிடககும் இயல்புடைய என்னை, இறைவன் யான் திருநது வதற கேதுவாகிய தனது செய்ய பாதஙகளிலுள்ள சிலம்புகள் ஒலித்திடத தனதருட் சததியோடு நீங்காது, பெறுதற்கரிய உதவி யாளனாய் ஆட்கொண்டருளிய அருஞ்செயலை நான் இன்னதென்று அறியமாட்டேன்.

குறிப்பு —இவை - என்பது பிறவியை நீக்கும் வழிகளைக் குறிதது நின்றது. புகன்று-விரும்பி; சொல்லி ஏறு-இடி; எறி யப்படுதல. கண்களாகிய வேலினாலே எறியுண்டு எனவும் கொள்க. சிலம்பவை என்பது பிரணவம் முதலிய மந்திர ஒலிகளைக குறிக்கு மென்ப. திரு - அருட்சத்தி. (௪)

மாடும் சுற்றமும் மற்றுள போகமும் மங்கையர் தம் மோடும், கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு குலாவியே

திரிவேனை, வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி, ஆடுவித்தெனை அகம்புகுந் தாண்டதோர் அற்புதம் அறியேனே

உரை:—செல்வமும் உறவும் ஏனைய போகப் பொருளும் பெண்களுமாகிய இவற்றோடு தொடர்புற்று அவற்றின் மயக்கங்களால் தாக்குண்டு அவற்றைப் பாராட்டித் திரிவேனை, எனது தீவினைகளை அழிக்கும் வண்ணம் தனது மெல்லிய திருவடித் தாமரையைக் காட்டி வீட்டின்பத்தைக் கொடுத்தருளி, என்னை ஆனந்தத்தால் கூத்தாடச்செய்து எனதுள்ளம் புகுந்து ஆட்கொண்ட அருட்செயலை இன்னதென்று அறியமாட்டேன்.

குறிப்பு:—குலாவுதல் - பாராட்டுதல். வீட்டுதல்-அழித்தல். வீடு - பாச நீக்கமெனவும், முடிவாய்த் தங்குமிடமெனவும் கூறுப. விடுபடுதல்-வீடு, விடுதல்-தங்குதல், தங்குமிடம், வீடு என இருவகையாகவும் பொருள் கொள்க. அகம் - உள்ளம். (௩)

வணங்கும் இப்பிறப் பிறப்பிவை நினையாது மங்கையர் தம்மோடும், பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான் பித்தனாய்த் திரிவேனை, குணங்களும் குறிகளும் இலாக் குணக்கடல் கோமளத் தொடுங்கூடி, அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே

உரை:—வளைந்து வளைந்து வருகிற இந்தப் பிறப் பிறப்புக்களை நீக்கும் வழிகளை எண்ணாது, மாதர்களோடு கலந்து அவர்களது அதரத்தினின்று பெருகும் எச்சில் நீர்ப் பெருக்கி லாழ்ந்து மயக்க முடையேனாய் அலைவேனை, (முக்குணச் சார்பாய) இயல்புகளும் (தத்துவச் சார்பாய) அடையாளங்களு மில்லாத அருட்குணக் கடலாகிய பெருமான், இளமைச் செவ்வியையுடைய அம்மையொடு கூடி வந்து என்னைச் சேர்ந்து ஆட்கொண்டருளிய அருஞ்செயலை நான் இன்னதென்று அறியமாட்டேன்.

குறிப்பு.—சுழல்போலப் பிறப்பிறப்பும் மாறிமாறி வருதலால் வணங்குமென்றார். அஞ்சி யீடுபடுதற்குரிய எனவும் கொள்க.

பிணைந்து - நெருங்கிச் சேர்ந்து. கோமளம் - பசிய நிறமென்றும் கொள்ப. (௬)

இப்பிறப்பினில் இணைமலர் கொய்து நான் இயல்பொ டஞ்செழுத்தோதித் தப்பிலாது பொற் கழல்களுக் கிடாது நான் தடமுலையார் தங்கள் மைப்புலாங் கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை மலரடி காட்டி, அப்பன் என்னை வந்தாண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே

உரை —இந்தப் பிறவியில் இசைவான பூக்களைப் பறித்து முறையாகத் திருவைந்தெழுத்தினைச் சொல்லித் தவறுதலில்லாமல் அவனது திருவடிகளில் அவற்றைத் தூவாது, பெரிய தகிலை உடைய மாதர்களது கருமையின் தன்மை பொருந்திய கண்களினாலே தாக்குண்டு, பயனின்றிக் கிடக்கும் இயல்புடைய எனக்குத் தனது திருவடித் தாமரை இரண்டையும் காட்டியருளி, அப்பன் தானே ஆட்கொண்ட பெரிய பேறு இன்னதென்று அறியமாட்டேன்.

குறிப்பு :— இணைமலர் - தமக்குத்தாமே ஒத்த பூக்கள் என்றுமுரைப்பர். இயல்பு - முறை நலவியல்பு - நன்மனமென்றுங் கொள்க. இறைவழிபாட்டில் தவறக்கூடாதென்பார், தப்பிலாது என்றார். மைப்பு - மைதீட்டிய தன்மை எனவுங் கொள்வர். மைப்பு - கருமேகம். உலவுமென்பது உலாம் என்றாயிற்று. உலவும் - பொருந்தும். கிடப்பேனை - கிடப்பேனுக்கு. (எ)

ஊசலாட்டும் இவ்வுடலுயி ராயின இருவினை அறுத்தென்னை, ஓசையால் உணர்வார்க் குணர்வரியவன் உணர்வு தந்தொளியாக்கிப், பாசமானவை பற்றறுத் தாண்டவன் பரம்பெருங் கருணையால், ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புதம் அறியேனே

உரை . —இந்த உடம்பையும் உயிரையும் ஊஞ்சல்போல் அங்கும் இங்கும் ஆட்டுகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டையுங் களைந்து, நாலுணர்வினால் அறியலுறுவார்க்கு அறியமுடியாத பெரு

மான் எனக்கு ஞானத்தைத் தந்து, உண்மையை வெளிப்படுத்தி, மும்மலக் கட்டுக்களின் தொடர்பைத் தொலைத்து, மிக மேலான தனது பேரருளால் (வாசனா மலமாய) அவாவை யறுத்து, அடியார்களுடைய திருவடியினகண் என்னைச் சேர்ப்பித்த அருள் செயலை இன்னதென் றறியமாட்டேன்

குறிப்பு.—இவ்வுட லுயிராயின ஊசலாட்டும் என மாற்றுக. நல்வினை மேலுலகிற் கிழுக்க, தீவினை கீழுலகிற்கிழுக்க உடலும உயிரும் ஊஞ்சல்போல் அங்குமிங்கும் அலைதலால் 'ஊசலாட்டு' என்றார் ஓசை என்பது நூற்கல்விக் காகுபெயர். 'நூலுணர் உணரா நுண்ணியோன் காண்க' என்றதுமறிக. உணர்வு - பர ஞானம். ஒளியாக்கி - வெளிப்படுத்தி. உயர்ந்தபரம் - மிக உயர்ந்த. ஆசை - வாசனாமலத் தொடர்பு என்பாருமுளர். (அ)

பொச்சை யானஇப் பிறவியிற் கிடந்துநான் புழுத்தலை நாய்போல, இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங் கிணங் கியே திரிவேனை, இச்ச கத்தரி அயனுமெட் டாததன் விரை மலர்க் கழல்காட்டி, அச்சன் என்னையும் ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே

உரை—காட்டினைப்போன்ற இந்தப் பிறவியிற் பொருந்திப் புழுப்பற்றிய தலையையுடைய நாய்போலப் பெண்களுக்கே விருப்ப மானவற்றைச்செய்து அவர்களோ டிசைந்தே அலைகின்ற எனக்கு, இவ்வுலகத்திலே திருமாலும் பிரமனும் எட்டமுடியாத தனது வாசனை பொருந்திய திருவடித்தாமரைகளைக் காட்டியருளி, அப்பன் அடியேனையும் ஆட்கொண்டருளிய அருள் செயலை இன்னதென்று அறியமாட்டேன்.

குறிப்பு:—பொச்சை - காடு. வழிதெரியாது அலைதற்கு இடமாகிய காடுபோல உண்மை நெறி இன்னதென்று அறிய முடியாத வண்ணம் இடர்நிறைந்த பிறவி என்பார் பொச்சையான பிறவி என்றார். புழுத்தலை - புழுத்து அலை என்பாருமுளர். அங்கு - அவ்வாறே - அவர்களிசைப்படியே. அச்சன் - அப்பன். (கூ)

செறியும் இப்பிறப் பிறப்பினை நினையாது செறிகுழ
லார்செய்யும், கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களும்
உன்னியே கிடப்பேனை, இறைவன் எம்பிரான் எல்லையில்
லாததன் இணைமலர்க் கழல்காட்டி, அறிவு தந்தெனை ஆண்டு
கொண் டருளிய அற்புதம் அறியேனே.

உரை —நெருங்கி மேன்மேல்வரும் இந்தப் பிறப்பிறப்புக்களை நீக்கும் வழியை எண்ணாமல், அடர்ந்த கூந்தலை உடைய மாதர் செய்யும் பொய்ச் செயல்களையும் கீழான தன்மைகளையும் கெண்டை மீன் போன்ற அவர்களது அழகிய கண்களையும் நினைந்தே பயனற்றுக் கிடக்குமியல்புடைய எனக்குக், கடவுளாகிய எமது தலைவன் அளவற்ற பெருமையுடைய தனது திருவடித் தாமரைகளிரண்டையும் காட்டியருளி, உண்மை யறிவினைக் கொடுத்து என்னை யாட்கொண்டருளிய அற்புதச் செயலை இன்னதென்று அறியமாட்டேன்.

குறிப்பு :—தான் எடுத்த பிறவியைக் குறித்தலால் இப்பிறப்பு என்றார். கிடப்பேனை - கிடப்பேனுக்கு, உருபு மயக்கம். திருவடிகள் கிரியாசக்தியும் ஞானசக்தியு மாதலால் எல்லையில்லாத வென்றார். (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

சென்னிப்பத்து

சிவ விளைவு

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேவ தேவன்மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொ ணாமுத லாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்பரன்றி அறியொ ணாமலர்ச் சோதியான்
தூயமா மலர்ச் சேவடிக்கணம் சென்னி மன்னிச் சுடருமே

உரை —விண்ணவாகளுத தலைவன், மெய்யான வீரன், அழகிய திருப்பெருந்துறை மன்னன், மும்மூர்த்திகளாலும் அறியக் கூடாத ஆதியான பேரின்ப வடிவினன், அன்பர் தவிரப் பிறர் எவராலும் அறிய முடியாத பூவொளி மேனியன், அவனது பரிசுத்தமான பெருமை பொருந்திய தாமரைபோன்ற செய்ய திருவடியின்கண் நமது தலை நிலைபெற்றுப் பொருந்தி விளங்கும்.

குறிப்பு —மும்மூர்த்திகளுள், பிரமனும், திருமாலும் ஞானம் பெறாதவர்கள். உருத்திரன் ஞானம்பெற் றிருப்பினும், அதிகார மலமுடையா. ஆதலான் மூவரையுங் கூறினர். மலர்ச்சோதி - மென்மையுங் குளிர்ச்சியு முடைய சோதி (க)

அட்டமூர்த்தி அழகன் இன்னமு தாய ஆனந்த வெள்ளத்தான், சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன் தென்பெருந்துறைச் சேவகன், மட்டு வார்குழல் மங்கை யாளையோர் பாகமவைத்த அழகன்தன், வட்ட மாமலர்ச் சேவ டிக்கண் நம சென்னி மன்னி மலருமே.

உரை:—எட்டு வடிவங்களையுடைய அழகன், இனிய அமுதமயமான பேரின்பப் பெருக்குடையான், பெரியோன், சிவலோகத் தலைவனாகிய மெய்ப்பொருள், அழகிய திருப்பெருந்துறையில் வீற்றிருந்த வீரன், தேன்மணங் கமழும் நீண்ட கூந்தலையுடைய உமையைத் தன் திருமேனியில் ஒரு பாகத்தே வைத்த வனப்பன். அவனது வட்டவடிவாகிய தாமரை மலர்போன்ற செய்ய பாதங்களின்மாட்டே நமது தலையானது நிலைபெற்று விளங்குவதாக.

குறிப்பு:—நிலம், நீர், தீ, கால், வான், ஞாயிறு, திங்கள், உயிர் என்பன இறைவனது அட்டமூர்த்தம். சிட்டன் - ஆசாரமுடைய பெரியோன். மட்டு - தேன். மலரும் - விளங்கும். (௨)

நங்கைமீர்! எனை நோக்குமின் நங்கள் நாதன் அம்பணி கொண்டவன், தெங்கு சோலைகள் சூழ்பெருந்துறை மேய சேவகன் நாயகன், மங்கைமார் கையில் வளையுங் கொண்டெம் உயிருங் கொண்டெம் பணிகொள்வான், பொங்கு மாமலர்ச் சேவடிக்கணம் சென்னி மன்னிப் பொலியுமே.

உரை:—பெண்களே, என்னைப் பாருங்கள் நமது தலைவன் கங்கையை அணியாகக் கொண்டவன் தென்னமரச் சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் வீற்றிருந்த வீர முதல்வன். பெண்களது கையிலுள்ள வளையல்களையும் எமது உயிரையும் கவர்ந்துகொண்டு எமது பணிவிடைகளையும் ஏற்றுக்கொள்வானாகிய அவனது விளங்குகின்ற தாமரை மலர்போன்ற செய்ய பாதங்களின் கண்ணே நமது தலைகள் நிலையாகப் பொருந்திச் சிறப்புறுவனவாக.

குறிப்பு:—அம்பு - அப்பு என்பதன் மெலித்தல் விகாரம். அப்பு - நீர், கங்கை. 'நம்பணி' யெனப் பாடமோதி, நமது வேலையை ஏற்றுக்கொண்டவன் என்பாருமுளர். சேவகன் - ஆண்மை யுடையவன். உடம்பு மெலியும்படி உருக்குதலால், வளைகள் கழல்வன வாயின என்ற கருத்துப்பற்றி, 'வளையுங் கொண்டு' என்றார். உயிர்ப்போதத்தை யொழித்தலால், 'உயிருங்

கொண்டு' என்றார். பசுபாசத்தை யறுத்தல் கூறியவாறு. பொங்கு-விளக்கு. (௩)

பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்து பாரப்பானெனச், சித்தர் சூழச் சிவபிரான் தில்லைமூதூர் நடஞ்செய்வான், எத்தனாகிவந் தில்புகுந்தெமை யாளுங்கொண்டெம் பணி கொள்வான், வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னி மலருமே.

உரை :—அன்பர்கள் புடைசூழ மிகமேலோனாகிய பெருமான் அந்தணனாக வடிவங்கொண்டு நிலமிசை எழுந்தருளிவந்தமையோடு, ஞானிகள் சூழ அச் சிவபெருமான் தில்லையாகிய பழைய பதியிலே சபையின்கண் கூத்தியற்றுவான். தந்திரக்காரனாக வந்து எமது வீட்டிற் புகுந்து எம்மை அடிமையாக்கி எமது பணிவிடையை ஏற்றுக்கொள்ளுவான். அவன் சென்னிமிசை வைத்த திருவடித் தாமரைக்கணணே நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாக

குறிப்பு :—பராபரன், சிவபிரான் வந்து நடஞ்செய்வான் . புகுந்து பணிகொள்வான், வைத்த ..மலருமே, யென முடிக்க சித்தர்-சித்துடையவர், ஞானிகள் இல்-உள்ளத்திற் கறிகுறி. (௪)

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்திடா வகை நல்கினான், வேய தோளுமை பங்கன் எங்கள் திருப் பெருந்துறை மேவினான், காயத் துள்அமு தூறஊறநீ கண்டு கொள்ளென்று காட்டிய, சேய மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னித் திகழுமே.

உரை நடை :—இரண்டாமடியை முதலிற் கொள்க.

உரை .—மூங்கிலின் தன்மையுடைய தோளினளாகிய உமை பாகன், திருப்பெருந்துறையில் விரும்பி வீற்றிருந்தவன், பொய் யாகிய உலகவாழ்க்கையை மெய்யென்று கருதி அதனைப் பொருட் படுத்தாத முறையை எனக்கு அளித்தான். உடம்பிலே ஆனந்த

அமுதமானது சுரக்கச் சுரக்க, நீ பேரின்ப நிலையை அறிந்து கொள்வாயென, அடையாளங் காண்பித்த செம்மையாய திருவடித் தாமரைக்கண்ணே நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

குறிப்பு :—மாயம் - பொய், சூழ்ச்சி, மயக்கம். வேய - மூங்கில். வேய - குறிப்புப் பெயரெச்சம். திருவண்டப்பகுதியுள், காயத்தமுதூறலை வாணித்தமை காண்க. பங்கன், மேவினன், நல்கினன், சேவடிக்கண் திகழுமே யென முடிக்க. (௫)

சித்தமே புகுந்தெம்மை யாட்கொண்டு தீவினைகெடுத்துய்யலாம், பத்தி தந்துதன் பொற்கழற்கணே பன்மலர் கொய்துசேர்த்தலும், முத்தி தந்திந்த மூவுலகுக்கும் அப்புறத்தெமை வைத்திடும், அத்தன் மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னிமன்னி மலருமே.

உரை :—உள்ளத்தே புகுந்தருளி எம்மை அடிமையாகக் கொண்டு, தீவினைகளை யொழித்து, உய்வதற்குரிய அன்பினைத் தந்து, அவ்வன்பு காரணமாகத் தனது அழகிய திருவடியின் கண்ணே நாம் பல்வகைப் பூக்களைக்கொய்து சாத்துதலும், வீடளித்து, நம்மை மேல் நடு கீழ் என்ற மூவிடத்துமுள்ள உலகங்களுக்கு அப்பால் உள்ள பேரின்ப நிலையில் வைத்திடும் அப்பனுடைய செவ்விய திருவடித் தாமரைக்கண், நமது தலைகள் பொருந்தி மகிழ்ச்சியுடன் விளங்கும்.

குறிப்பு :—சித்தம் - நினைவெனபாருமுளர். பொன்-அழகிய. தத்துவச் சார்பாய உலகங் கடந்த முதல்வனோடு கலத்தலாகிய நிலையென்பார் 'மூவுலகுக்கு மப்புறத்தே' என்றார். (௬)

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன் பேரருள் தந்தருளினான், அறவை யென்றடி யார்கள் தங்கள் அருட்குழாம் புக விட்டுநல், உறவுசெய்தெனை உய்யக்கொண்ட பிரான்தன் உண்மைப் பெருக்கமாம், திறமை காட்டிய சேவடிக்கண்நம் சென்னி மன்னித் திகழுமே

உரை —பிறவியாகிய இந்தக் கடலை நீந்துவதற்குத் தன் பேரருள் கொடுத்தருளினான். என்னை ஆதரவில்லாதவனென்பது கருதி அடியார்களுடைய அருட்கூட்டத்திற் புகுவித்து, அவர்களை எனக்குச் சுற்றத்தாராக்கி, என்னைப் பிழைக்கும்படி ஆட்கொண்ட வள்ளலின் மெய்யான மிகுதிப்பட்ட சிறமைகளைக் காண்பித்தரு ளிய சேவடிக்கண் நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

குறிப்பு —அறவை - எல்லாம் அற்றவன், அநாதை. பெருக்க மார் திறமை - மிகுதியான திறமை (எ)

புழுவினாற் பொதிந்திடு குரம்பையிற் பொய்தனை யொழி வித்திடும், எழில்கொள் சோதியெம் ஈசன் எம்பிரான் என்னுடையப்பன் என்றென்று, தொழுத கையின ராகித் தூயமலர்க் கண்கள் நீர்மல்கு தொண்டருக்கு, எழிலார் மலர்ச் சேவடிக்கண்நம் சென்னி மன்னி மலருமே.

உரை :— புழுக்களினால் பொதியப்பட்டுள்ள உடம்பிலே நிலை யாத வாழ்க்கையை நீக்கிவிடும் எழுச்சியுடைய ஒளியான எமது ஆண்டவனே, எம்பெருமானே, என்னுடைய தந்தையே என்று சொல்லிச் சொல்லிக் கூப்பிய கையையுடையராய புனிதமான பூப்போன்ற கண்களிலே நீர் பெருகப்பெற்ற அடியார்கட்குத் தவறாது நலம் பயக்குஞ் செய்ய திருவடித் தாமரையின்கண் நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

குறிப்பு :—பொய் - நிலையில் வாழ்க்கை. எழில் - எழுச்சி; அழகு. உள்ளம் புனிதமாகவே, கண்களும் புனிதமாயினபோலும்; ஆதலால், 'தூய்மலர்க்கண்கள்' என்றார். (அ)

வம்பனாய்த்திரி வேனை வாவென்று வல்வினைப்பகை மாய்த்திடும், உம்ப ரான்உல கூடறுத்தப் புறத்த னாய்நின்ற எம்பிரான், அன்ப ரானவர்க் கருளி மெய்யடி யார்கட் கின் பந் தழைத்திடுஞ், செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னித் திகழுமே.

உரை :—வீணாய் அலைவேனை 'நீ இங்கே வா' என்றழைத்து எனது கொடிய வினையாகிய பகையினை அழித்திடும் வானவன், உலகங்களெல்லாவற்றினூடும் இயைந்து அவற்றிற்கப்பாற்பட்டவனாய் நின்ற எமது தலைவன், அன்பராயினோர்க்குப் பேரின்பத்தைப் பெருக்கும் அவனது செவ்விய பொன்போன்ற தாமரை மலரையொத்த திருவடியின்கண், நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

குறிப்பு :—வம்பன் - பயனற்றவன். உம்பரான்-மேலுலகத்தான். 'உலகூடறுத்து' என்றது அனற்பிழம்பாய் அயன்மால் அடிமுடிதேட நின்ற நிலையைக் குறிக்கும். (௯)

முத்தனைமுதற் சோதியை முக்கண் அப்பனை முதல்
வித்தினைச், சித்தனைசிவ லோகனைத்திரு நாமம் பாடித்
திரிதரும், பத்தர் காள்இங்கே வம்மின்நீர் உங்கள் பாசந்தீரப்
பணிமினோ, சித்த மார்தரும் சேவ டிக்கணம் சென்னி
மன்னித் திகழுமே.

உரை :—இயல்பாகவே பாசநீக்கமுள்ளவனை, ஆதியான ஒளியானவனை, மூன்று கண்களுடைய தந்தையை, எல்லாவற்றிற்கும் அடிப்படையான வித்துப்போல்வானை, ஞானவடிவனை, சிவலோக நாதனை, அவன் திருப்பெயர் கூறிப்பாடி அலையும் அன்பர்களே, இங்கே வாருங்கள்; நீங்கள் உங்கள் மலமறும்படி வணங்குங்கள்; என் உள்ளத்தில் நிறைந்த செய்ய திருவடிக்கீழ் நமது தலைகள் பொருந்தி விளங்குவனவாம்.

குறிப்பு :—இறையன்பர்களைத் திருப்பெருந்துறை ஞானாசாரியன்பால் வந்து மலமறப் பெறுமாறு அண்டுதல் இதனுட் கூறப்பட்டது. சித்தம் என்பது நினைவையுங் குறிக்கும். (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருவார்த்தை

அறிவித்து அன்புறுதல்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன் மாமலர் மேய
சோதி, கோதில் பரங்கருணையடியார் குலாவு நீதிகுண
மாகநல்கும், போதலர் சோலை பெருந்துறையெம் புண்ணி
யன் மண்ணிடை வந்திழிந்(து), ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறிவார் எம்பிரா னாவாரே

உரை :—பெண்ணமர்ந்த பாகத்தனை, மந்திரங்கள் பொருந்திய மொழி உடையான், இதயமலரில் வீற்றிருக்கும் ஒளியானவன், குற்றமற்ற மேலான அருள்வடிவன், அடியார்கள் கொண்டாடும் நீதியானவன், நீதியினையே குணமாகக் கொண்டருள் புரிகின்ற அரும்புகள் மலர்கின்ற சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையில் தங்கியருளிய எமது புண்ணியமூர்த்தி, மண்ணுலகத்தே இறங்கி வந்து எல்லாவற்றிற்கு முதலாகிய பெரும்பொருளை வெளிப்படுத்திய அருட்செய்கையை அறியுந்தன்மையார் எமது தலைவராவார்.

குறிப்பு :—இவர்தல் - ஊர்தல், அமர்தல். மறை-இரகசிய மெனக்கொண்டு உபதேசமொழி பயின்ற வாசகனென்பாருமுளர். கைம்மாறு கருதாத கருணை யாதலால் 'கோதில பரங்கருணை' என்றார். மலர் என்பது இதயத்திற்கு ஆகுபெயர். 'அடியார் குலாவு நீதி குணமாக நல்கும்' என்பதற்கு அடியார் கைக்கொண்டொழுகு முறையைக் குணமாகக் கொண்டருளுமெனவுங் கூறுவர். போது-விரியும் பருவத்தரும்பு. வெளிப்படுத்த என்பது 'வெளிப்படுத்திய' என்பதன் குறுக்கம். (க)

மாலயன் வானவர் கோனும வந்து வணங்க அவர்க் கருள் செய்தஈசன்,ஞாலம் அதனிடை வந்திழிந்து நன்னெறி காட்டி நலந்திகழுங, கோல மணியணி மாடநீடு குலாவும் இடவை மடநல்லாட்குச, சீல மிககருணை யளிக்கும் திற மறிவார் எமபிரா னுவாரே

உரை —திருமாலும பிரமனும் தேவாகட்கரசனுகிய இநதிர னும வநது பணிய அவர்கட்கு அருள்புரியும் ஆண்டவன், உலகத் தினிடை குருவாகி இறஙகிவந்து ஞானநெறியினை அறிவுறுத்தி, அழகு விளஙகுகின்ற நல்ல வடிவுடைய ரத்தினஙகளால் அலங் கரிககப்பட்ட மாடங்களை உடையதாய் நெடுநாள் விளஙகுகின்ற திருவிடைமருதூரில் ஒரு பெணணடியவர்கருக் குணநய மிகும் படியாக அருள் செய்த வகையினை அறிபவர்கள் எமது தலைவ ராவார்.

குறிப்பு :—வநதிழிந்து என்பதை இழிந்துவநது என மாற்றுக. நலம் - அழகு. கோலம - வடிவு. இடவை-திருவிடைமருதூர். அது பழம்பதியாதலின் 'நீடுகுலாவு' மென்ருர. இதனை 'நல் லாட்கு' என்பதோடு முடித்து நெடிது அன்பு பாராட்டு மெனவு முரைப்பர். சீலம்-நல்லொழுக்கம். சீலமிகுதலைக் கண்டு அருள் செய்தா ரென்றலுமுண்டு. (௨)

அணிமுடி ஆதி அமரர்கோமான் ஆனந்தக் கூத்தன் அறுசமயம், பணிவகை செய்து படவதேறிப் பாரொடு விண்ணும் பரவியேத்தப், பிணிகெட நல்கும் பெருந்துறை யெம் பேரரு ளாளன்பெண் பாலுகநது, மணிவலை கொண்டு வான் மீன்விசிறும வகையறிவார் எம்பிரா னுவாரே.

உரை :—அழகிய சடைமுடியை உடைய முதல்வன், விண்ண வர் தலைவன், ஆனநதக கூத்துடையவன், அறு சமயங்களும தன்னை வணஙகும்படி செய்து மண்ணுலகததாரும் விண்ணுலகத தாரும் வாழ்ததி வழிபட அவர்கள் பிறவிநோய் ஒழியும்படி அருள் செய்யும் பெருந்துறையையுடைய நமது பெருங் கருணையாளன்,

(வலைஞர் மகளாகிய) உமையம்மையாகிய பெண்ணினை மணக்க விரும்பித் தோணியேறி, அழகிய வலைகொண்டு பெரிய கெளிற்று மீனை வீசிப் பிடிக்குந் திறத்தை அறியாத தன்மையார் எமது தலைவராவார்.

குறிப்பு:—அறுசமய மென்றது உட்சமயங்களை. அவை, கணபதி வழிபாடு, முருகன் வழிபாடு, அம்மை வழிபாடு, திருமால் வழிபாடு, கதிரவன் வழிபாடு, சிவ வழிபாடு என்றுரைக்கலாம். படவேறி என்பதை மணிவலை கொண்டு என்பதனோடு முடிக்க. இதனுட் கூறப்பட்டதைத் திருவிளையாடற் புராணம் வலைவீசிய படலத்துட் காண்க. (௯)

வேடுரு வாகி மகேந்திரத்து மிகுகுறை வானவர் வந்து தன்னைத், தேட இருந்த சிவபெருமான் சிந்தனை செய்தடி யோங்கள் உய்ய, ஆடல் அமர்ந்த பரிமாவேறி ஐயன் பெருந் துறை ஆதிஅந்நாள், ஏடர் களையெங்கும் ஆண்டுகொண்ட இயல்பறிவார் எம்பிரா னாவாரே.

உரை:—மகேந்திர மலையில் வேட்டுவ வடிவங்கொண்டு தன்பா விரத்தற்குரிய மிகுந்த குறைகளை உடைய விண்ணவர் போய்த் தன்னைத் தேடும்படியாக வீற்றிருந்தருளிய சிவபெருமான், அடியோங்கள் உய்வதை எண்ணி வலிமை பொருந்திய குதிரையில் ஏறினவன், தலைவனாகிய திருப்பெருந்துறை முதல்வன், அக்காலத்தில் தன்னுடைய நண்பர்களை எவ்விடத்தும் ஆட்கொண்டருளிய தன்மையை அறியவல்லா ரெமது தலைவராவார்.

குறிப்பு:—'வேடுருவாகி' யென்பதை, 'தேட இருந்த' என்பதனோடு முடிக்க. மகேந்திரம்-பொதிகை மலைக்குத் தெற்கேயுள்ள தென சிவதருமோத்திரம் கூறும். அதனைக் கயிலாய மென்பாரு முளர். வேடுருவாகி யென்பதற்கு வேண்டுருவாகி யெனப்பொருள் கொண்டு இறைவனியக்க வடிவங் கொண்டிருந்தா ரென்பர். அக் கதை கேனோபனிடதத்திற் கூறப்பட்டது. அடியோங்களுய்யச் சிந்தனை செய்து என மாற்றுக. சிந்தனை செய்து என்பதைச் சிவ

பெருமானுக்கும், அடியோங்கள் என்பதற்கு மியைப்பதுண்டு. ஆடல் - வலிமை. ஏறி என்பதை வினையெச்சமாகக் கொண்டு ஆண்டுகொண்ட என்பதனோடு முடிப்பது முண்டு. ஏடர்கள் - நண்பர்கள (௪)

வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கருணைக்கட லாய் அடியார், பந்தனை விண்டற நல்குமெங்கள் பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள், உந்து திரைக்கட லைக்கடந்தன் றோங்கு மதிலிலங் கைஅதனிற், பந்தணை மெல்விர லாட்கரு ளும் பரிசறிவார் எம்பிரா னாவாரே.

உரை:—விண்ணவர்கள் வந்து தன்னை வணங்கி வாழ்த்த அவர்கட்குப் பேரருள் புரியுங் கடலாய், அன்பர்களுடைய பாசக் கட்டு நீங்கி யொழியும்படி அருள செய்யுமெங்கள் மேலோனாகிய திருப்பெருந்துறை முதல்வன், அக்காலத்திலே, திரைவீசுகின்ற கடலைக் கடந்து உயர்ந்த மதில் சூழ்ந்த இலங்கையின்கண், பந்தின் வடிவமைந்த மெல்லிய விரலை உடைய வண்டோதரிக்கு அருள் புரிந்த வகையினை யறிவார் எமது தலைவராவார்.

குறிப்பு.—கடலாய என்பதை நல்கும் என்பதோடு முடிக்க. பந்தனை - கட்டு, பாசம். விண்டு - பிரிந்து, நீங்கி. உந்துதிரை என்பதைத் திரை உந்து என மாற்றுக. அன்று - சாரியை. (௫)

வேவத் திரிபுரம் செற்றவில்லி வேடுவ னாய்க்கடி நாய் கள்சூழ, ஏவற்செ யல்செய்யுந் தேவர்முன்னே எம்பெரு மான்தான் இயங்குகாட்டில், ஏவுண்ட பன்றிக் கிரங்கிஈசன் எந்தை பெருந்துறை ஆதிஅன்று, கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த கிடப்பறிவார் எம்பிரா னாவாரே.

உரை:—திரிபுரங்கள் வெந்துபோகும்படி கோபித்த வில்லா ளன், வேட வடிவங்கொண்டு, காவல் நாய்கள் சூழ்ந்துவரத் தாம் ஏவுகின்ற பணியைச் செய்யும் விண்ணவர் முன்செல்ல எம்பிரான் தான் செல்லுகின்ற காட்டில் அம்பு தைத்திறந்த தாய்ப் பன்றிக்கு

இரங்கி ஆண்டவன், அப்பன், திருப்பெருந்துறை முதல்வன், அந் நாளில் தனிப் பன்றி வடிவங்கொண்டு, பன்றிக் குட்டிகளுக்குப் பால்கொடுத்த திருவுள்ளக் கருத்தை யறியுந் தன்மையார் எமது தலைவராவர்.

குறிப்பு:—கடி - காவல். ஏவு - அம்பு. கேவலம் - தனிமை. வில்லி, எம்பெருமான், ஈசன், எந்தை, ஆதி, காட்டில் இரங்கி அன்று, கொடுத்த, கிடப்பு, அறிவார் என முடிக்க. (சு)

நாதம் உடையதோர் நற்கமலப் போதினில் நண்ணிய நன்னுதலார், ஓதிப் பணிந்தலர் தூவியேத்த ஒளிவளர் சோதியெம் ஈசன்மன்னும், போதலர் சோலைப் பெருந்துறை யெம் புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப், பேதங் கெடுத்தருள் செய்பெருமை அறியவல்லார் எம்பிரா னாவாரே.

உரை:—வண்டின் ரீங்கார ஒலியினையுடைய அழகிய தாமரை மலர்களில் விரும்பி வைகும், அழகிய நெற்றியையுடையாராகிய கலைமகளும், திருமகளும் தாழ்த்தி வணங்கி மலர்தூவி வழிபடும் படி ஒளி மிகுகின்ற சோதி வடிவனாகிய எமது ஆண்டவன் வீற் றிருக்கும், மலர்கள் விரிகின்ற பொழில் சூழ்ந்த திருப்பெருந் துறையின்கண் எமது புண்ணியமூர்த்தி மண்ணுலகத்தே குரு வாய்த் தோன்றியருளி வேற்றுமையைக் கெடுத்து அருள்செய கின்ற பெருமையை அறிய வல்லவர் எமது தலைவராவார்.

குறிப்பு:—நாதம் - வண்டுகளினொலி. நன்னுதலார் என்றமை யாற் கலைமகளுந் திருமகளுங் கூறப்பட்டனர். சோதி என்பதைப் பெருந்துறை என்பதோடு சேர்ப்பது முண்டு. பேத மென்பது பாசத்தாலேற்பட்ட வேற்றுமை. பாசத்தை நீக்கி அத்துவிதக் கலப்பினை யருள் செய்தலால் 'பேதங் கெடுத்து' என்றார். (எ)

பூவலர் கொன்றைய மாலைமார்பன் போருகிர் வன்புலி கொன்றவீரன், மாதுநல் லாளுமை மங்கைபங்கன் வண்

பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன், ஏதில் பெரும் புகழ் எங்கள்ஈசன் இருங்கடல் வாணற்குத் தீயில்தோன் றும், ஓவிய மங்கையர் தோள்புணரும் உருவறிவார் எம்பிரா னாவாரே

உரை —அழகு விளங்குகின்ற கொன்றைப் பூவினாலாகிய மாலையை யணிந்த மார்பன், போர் செய்தற்குரிய நகங்களைக் கொண்ட வலிமை மிகுந்த புலியினைக் கொன்ற வீரன், உமை மங்கை பாகன், வளம்பொருந்திய சோலைசூழ்ந்த அழகிய திருப் பெருந்துறைமன்னன், குற்றமற்ற பெரும்புகழை யுடைய எங்கள் ஆண்டவன், பெரிய கடலரசனுக்கு நெருப்பிற்றோன்றிய சித்திரம் போன்ற அழகிய நங்கையர் தோள்களைச் சேர்ந்தருளும் அவன் திருவடியை அறியவல்லார் எமது தலைவராவார்.

குறிப்பு.—பூ - அழகு. அலர் - விளங்கு. உகிர் - நகம். தாருகாவனத்து முனிவர் விடுத்த வேள்விப் புலியினைக் கொன்று அதன் தோலை யுரித்துப் போர்த்த கதை வெளிப்படை. ஏதில் - குற்றமில்லாத. ஈசன் என்பதை உரு என்பதனோடு முடிக்க. வாணன் - வாழ் + நன் - வாழ்பவன். இங்கே அரசனென்ற பொருளில் வந்தது. ஓவியம் - சித்திரம். (அ)

தூவெள்ளை நீறணி எம்பெருமான் சோதிமகேந்திர நாதன்வந்து, தேவர் தொழும்பதம் வைத்தஈசன் தென்னன் பெருந்துறை ஆளிஅன்று, காதல் பெருகக் கருணைகாட்டித் தன்கழல் காட்டிக் கசிந்துருகக், கேதங் கெடுத்தென்னை ஆண்டருளும் கிடப்பறிவார் எம்பிரா னாவாரே.

உரை :—பரிசுத்தமான திருவெண்ணீறணிந்த எமது பெருமா னாகிய ஒளி வடிவமான மகேந்திரமலைக் கதிபதி, தானே வந்தருளி விண்ணவர் வணங்குகின்ற திருவடியை (என்தலை மீது) வைத் தாண்டவன், அழகிய நல்ல திருப்பெருந்துறை மன்னன், அந் நாளில் எனக்கு அன்பு மிகும்படி அருள்காட்டித்தனது திருவடி

களையுங் காட்டி யருளி, உள்ளங் கனிந்துருகும்படி, துன்பங்களைத் தொலைத்து என்னை ஆட்கொண்டருளுந் திருவுள்ளக் கருத்தை அறிவாரெமது தலைவராவார்.

குறிப்பு :—ஆளி-ஆள்பவன். கேதம்-துன்பம் எம்பெருமான், நாதன், ஈசன், ஆளி, அருளுங் கிடப்பு அறிவார் என முடிக்க (௯)

அங்கணன் எங்கள் அமரர்பெம்மான் அடியார்க் கமுதன் அவனிவந்த, எங்கள் பிரான்இரும் பாசநீர இகபரம் ஆயதோர் இன்பமெய்தச், சங்கங் கவர்ந்துவண் சாத்தினோடும் சதுரன் பெருந்துறை ஆளிஅன்று, மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த வகையறிவார் எம்பிரா னாவாரே.

உரை :—அழகிய அருட் கண்ணை உடையவன், எங்கள் விண்ணவர் தலைவன், அடியார்கட்குச் சாவா மருந்தானவன், நிலவுலகிலே குருவாகிவந்த எங்கள் பெருமான், மிக்க திறமையுடையவன், திருப்பெருந்துறை மன்னன், அவன் அடியார்களுடைய பெரிய மும்மலப் பற்று நீங்கவும் இம்மை மறுமையில ஆவதோர் பேரின்ப மடையும் பொருட்டும், அந்நாளில் சங்கினாலாகிய வளையல்களை எடுத்துக் கொண்டு மிகுந்த சரக்கோடு (வளையல் விற்பதற்குப்) பெண்கள் நிறைந்த மதுரைப்பதியை அடைந்த விதத்தை யறியவல்லார் எமது தலைவராவார்.

குறிப்பு —அங்கணன், பெம்மான், அமுதன், பிரான், சதுரன், ஆளி, நீர, எய்த, கவர்ந்து, சேர்ந்தவகை யறிவாரென முடிக்க. சங்கங் கவர்ந்து என்பதற்குச் சங்கங் கவர எனப் பொருள் கொள்வாருமுளர். பெண்களுடைய சங்க வளையல்களைக் கவர்வதற்கு மதுரை சேர்ந்தார் என்பது கருத்து. சாத்து - சரக்கு. (௧0)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

எண்ணப்பதிகம்

ஒழியா இன்பத்து உவகை

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பாருரு வாய பிறப்பற வேண்டும் பத்திமை யும்பெற வேண்டும், சீருரு வாய சிவபெரு மானே செங்கமல மலர் போலும், ஆருருவாயஎன் ஆரமுதேஉன் அடியவர் தொகை நடுவே, ஓருரு வாயநின் திருவருள் காட்டி என்னையும் உய்யக்கொண் டருளே.

உரை நடை —சீரு ..சிவபெருமானே . . அமுதே என்பதை முதலிற் கொள்க.

உரை :—சிறப்புடைய திருவடிவங் கொண்டருளுஞ் சிவபெருமானே, செந்தாமரைப் பூப்போன்ற அரிய செம்மேனியினனாகிய எனது கிடைத்தற்கரிய அமுதமாவானே, நிலவுலகிலே உடம்பெடுப்பதாகிய பிறப்பு ஒழியவேண்டும். அன்புடைமையைப் பெறவேண்டும். உனது அன்பர் கூட்டத்தின் நடுவே ஒப்பற்ற திருவடிவுடைய உன திருவருள்காட்டி அடியேனையும் உய்திக்கு ஏற்றுக்கொண் டருள்க.

குறிப்பு :—பார்-நிலவுலகம். 'செங்கமல மலர்போலும்' என்பதைச் 'சீருவாய' என்பதனோ டியைக்கலாம். ஆருருவாய - என்பதற்கு, அரிய இயல்புடைய என்றும் பொருள் கொள்ளலாம். ஓருரு வென்றது, ஞானாசாரிய வடிவத்தை. (க)

உரியேன் அல்லேன் உனக்கடிமை உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும், தரியேன் நாயேன் இன்னதென்(று) அறி

யேன் சங்கரா கருணையினால், பெரியோன் ஒருவன் கண்டு
கொள் என்றுன் மெய்கழல் அடிகாட்டிப், பிரியேன் என்
றென் றருளிய அருளும் பொய்யோ எங்கள் பெருமானே

உரை நடை :—'எங்கள் பெருமானே' என்பதை முதலிற் கொள்க.

உரை :—எமது தலைவனே! சங்கரனே! உனக்கடிமையா யிருத்தற்கு உரிய தகுதிஉடையேனல்லேன். ஆனால் உன்னைவிட்டு நீங்கி ஒரு சிறிது நேரங்கூட நான் (தனியே இருத்தலைப்) பொறுக்க மாட்டேன். நாயனைய யான இது என்ன காரணம என்றறிந்திலேன். பெரியோன் ஒருவன் என்மீது வைத்த இரக்கத்தால் உன்னுடைய கழல் செறிந்த திருவடிகளைக் காட்டி, அவற்றைப் பார்த்துக்கொள் என்று கட்டளையிட்டு, உன்னைப் பிரியமாட்டேனென்று என்னிடம் கூறிப்போனது பொய்யாகுமோ ?

குறிப்பு —திருப்பெருந்துறையில் இறைவன் உபதேசம் பண்ணினதைக் கூறி, அது பொய்யாமோ என்றது அது உண்மையானால், இறைவன் தன்னைப் பிரியாதிருத்தல் வேண்டுமென்று குறிப்பித்தார். 'பெரியோன்' என்று இறைவனைப் படர்க்கையாகக் கூறியது ஒரு நயம (௨)

என்பே உருக நின் அருள் அளித்துன் இணைமலர் அடி
காட்டி, முன்பே என்னை ஆண்டு கொண்ட முனிவா முனி
வர் முழுமுதலே, இன்பே அருளி எனையுருக்கி உயிருண்
கின்ற எமமானே, நண்பே யருளாய் என்னுயிர நாதா நின்
னருள் நாணாமே

உரை நடை :—கடைசியடியை என் உயிர் நாதா நாணாமே நின்னருள் நண்பே யருளாய், என அமைத்துப் பொருள் கொள்க.

உரை :—எலும் புருகும்படியாக நின் திருவருளை மிக நல்கி, உன் தாமரை யடிகள் இரண்டையுங் காட்டிப், (பக்குவம் வரு) முன்னரே என்னை ஆட்கொண்டருளிய தவவடிவனே, துறவி

களின் முழுத்தலைவனே, பேரின்பமே கொடுத்தருளி என்னை உருகுவித்து எனது உயிர்ப்போதத்தைத் தொலைக்கின்ற எமது பெரியோனே, எனது உயிர்க்குயிரானவனே, கூசாமல் உன்னுடைய திருவருள் எனது நட்பாகும்படி அருள் செய்யவேண்டும்.

குறிப்பு :—முனிவா - துறவியே என்று முரைப்பர். உயிருணடல் - தற்போத மிழப்பித்தல். (௩)

பத்திலனேனும் பணிந்திலனேனும்உன் உயர்ந்தபைங் கழல்காணப, பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப் பாய்எம பெருமானே, முத்தனை யானே மணியனை யானே முதல்வனே முறையோஎன்(று), எத்தனை யானும் யான் தொடர்ந் துன்னை இனிப்பிரிந் தாற்றேனே.

உரை நடை —எம்பெருமானே-என்பதை முதலிற் கொள்க.

உரை :—எமது தலைவனே! அடியேன் உன்னிடத்திற் பற்று இல்லாதவனாயினும, உன்னை வழிபடேனாயினும், உனது மேலான பசுமையான திருவடிகளைக் காண்பதற்கு ஆசைப்படேனாயினும், உன்னைத் துதித்திலேனாயினும, எனது பிறப்பைக் களையவேண்டும். ஏனெனில், முத்துப் போன்றவனே, மாணிக்கம் போன்றவனே, ஆதியானவனே, உன் பெயரைக் கூறி ஓலமிட்டு உன்னை எந்த அளவிலாவது யான் தொடர்ந்து பற்றினமையால், இனிமேல் உன்னைப் பிரிந்து, பிரிவாற்றாமையைப் பொறுத்திருக்க மாட்டேன்.

குறிப்பு :—பத்து-பற்று என்பதன் மருவு. பத்தி என்பதன் குறை யென்பாருமுளர். முறையோ, என்றல் தகுதியோ என்று கேட்டல். (௪)

காணும தொழிந்தேன் நின்திருப் பாதம் கண்டுகண் களிகூரப், பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன் பின்னைஎம் பெருமானே, நாணுவே அழிந்தேன் நின்னினைந் துருகும் தன்மைஎன் புன்மைகளால், காணும தொழிந் தேன் நீயினி வரினும் காணவும் நாணுவனே.

உரை:—எம்பெருமானே, நினது திருவடிகளைப் பார்ப்பதை விட்டேன். பார்த்து எனது கண்கள் மகிழும்படியாகப் போற்று வதை விட்டேன். புகழுவதையும் விடுத்தேன். உறுதியானவனே, (பின் வேறு யாதுசெய்தேன் என்னில்) நான் அறிவு அழிவுற் றேன். உன்னை நினைந்துருகுகின்ற (அடியார்) தன்மைகளையும், எனது கீழ்மை காரணமாக, பார்ப்பதை விடுத்தேன். ஆதலால், நீ இனிமேல் பழைய வடிவந் தாங்கி வந்தாலும் உன்னைப் பார்ப்ப தற்குங் கூசுவேன்.

குறிப்பு:—காணுமது-காணுஞ் செயல். பேணுதல் - வணங் குதல். பின்னை - வினைமாற்றுப் பொருளில் வந்தது. (௫)

பால்திரு நீற்றெம் பரமனைப் பரங்கருணையோடும் எதிர்ந்து, தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்கும் சோதியை நீதியிலேன், போற்றியென் அமுதே எனநினைந் தேத்திப் புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே, ஆற்றுவ னாக உடையவ னேஎனை ஆவஎன் றருளாயே.

உரை நடை:—'உடையவனே' என்பதை முதலிற் கொள்க.

உரை:—முதல்வனே, பால்போலும் வெள்ளிய திருநீறணிந்த பெரியோனாகிய உன்னை உனது மேலான திருவருட் சத்தியோடு எதிர்ப்பட்டுத் தோன்றி உண்மையன்பர்க்கு அருள்வழி நல்கும் ஒளியான உன்னை அறவழி நில்லாத நான், வணங்கி, எனது சாவா மருந்தே யென வெண்ணி வழிபட்டுத் துதித்துக் கூவி யாற்றி என் நெஞ்சகத்தே ஆறுதலுடையவனாகும்படி, ஐயோ வென் றிரங்கி அருள் செய்வாயாக.

குறிப்பு:—கருணை-அருட்சத்தி. தோற்றி-தோன்றி; செய்யுள் பற்றி வலித்தது. (௬)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

யாத்திரைப்பத்து

அநுபவ அதீதம் உரைத்தல்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னனெம் புயங்கப் பெருமான் சிறியோமை, ஓவா துள்ளங் கலந்துணர்வாய் உருக்கும் வெள்ளக் கருணையினால், ஆ! ஆ! என்னப் பட்டன்பாய் ஆட்பட்டீர்வந் தொருப் படுமின், போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட் டுடையான் கழல்புகவே

உரை:—மலர் நிறைந்த முடியுடைய அரசனாகிய எமது பாம்பணிந்த பெருமான், சிறியோங்களாகிய நம்மை ஓயாமல் உள்ளத்திற் புகுந்து அறிவில் அத்துவிதமாய்க் கலந்து உருகுவிக்கும் அருள்வெள்ளங் காரணமாக, இரங்கி அருள் அளிக்கப்பெற்று அன்பராய் ஆட்பட்டவர்களே, வந்து ஒருங்கு சேருங்கள். நிலையா வுலகை விடுத்து, நம்மையுடையவனது திருவடியை அடைதற்குப் போவோமாக. அதற்குரிய சமயம் வந்துவிட்டது.

குறிப்பு:—புயங்கம் - பாம்பு; அல்லது ஒருவகைக் கூத்து. உடையான் கழல்புகவே பொய்விட்டு என மாற்றுக. 'போவோம்' என்பதைப் புகவே என்பதோடு முடிக்க. 'காலம் வந்தது காண்' என்பதை இறுதியிற் சேர்க்க. (க)

புகவே வேண்டா புலன்களில்நீர் புயங்கப் பெருமான் பூங்கழல்கள், மிகவே நினைமின் மிக்கவெல்லாம் வேண்டா. போக விடுமின்கள், நகவே ஞாலத் துள்புகுந்து நாயே

அனைய நமையாண்ட, தகவே யுடையான தனைசசாரத் தளராதிருப்பார் தாந்தாமே

உரை நடை :— இறுதியிரண்டடியை முதலிற் கொள்க.

உரை:— தெளிவாக உலகததே போநது நாய்போன்ற (இழிவுடைய) நம்மை ஆட்கொண்ட தகுதியுடைய பெருமானை அடைவதற்குத தளராது ஊக்கமாயிருப்பவா தாம (பிறபொருள வசபபடாது) தாமாகவே இருககுந் தம வயமுடையராவர். ஆதலால், ஐம்புல விடயஙகளில நீஙகள் செலலவே கூடாது. புயஙகக கூத்துடைய பெருமானது அழகிய திருவடிகளையே மிகுதியுஞ் சிந்தியுஙகள். ஒழிநதன வெலலாம் நமககு வேணடப்படா. அவற்றைப் பற்றாது அவைதாமே அகன்றொழிய விட்டு விடுஙகள்.

குறிப்பு :— புலனகள்-பொறிக்கு விடயமானவைகள். மிகவே, என்றது இறைநினைவே மிகுதிப்பட்டுப் பிற நினைவுகள் இலவாதலை வேண்டி. மிக்க - மிகையான. இறைநினைவொழிந்த பிற நினைவுகள் மிகையாமெனற கருததுப்பற்றி 'மிக்க வெல்லாம்' எனறார். நகவே - விளஙகவே, யாரும் அறிய. மெய்யன்பா சிரிக்கும்படியென்றுரைப்பாரு முளர். தகவு - பெருந்தன்மை. (௨)

தாமே தமக்குச் சுற்றமுந்தாமே தமக்குவிதி வகையும்,
யாமார எமதார் பாசமார் என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப்பே குறிகொண்டு, போமா றமைமின் பொய்நீக்கிப் புயங்கன் ஆளவான் பொன்னடிககே.

உரை நடை — இறுதியடியில் பொய்நீககிப் பொன்னடிக்கே போமாறமைமின் என மாற்றுக.

உரை :— தம வயமுடையார் தாமே தமக்கு உறவினராவா. தாமே தமககுக் கட்டளை விதிக்கும் வகையினா. நாம ஆர், எம்முடையது யாது, நமமைப் பந்திதத மலக்கட்டு யாது, இவைக

னெல்லாம் என்ன மயக்கங்கள். இவை யொழியும்படி, நமது அரசனுடைய பழைய அடியாரோடு சேர்ந்து அவனது திருவுள்ளக் குறிப்பே நமது நோக்கமாகக் கொண்டு, நிலையாதனவற்றை விடுத்து, புயங்கக் கூத்தனாய் நம்மை யாள்கின்றவனது அழகிய திருவடிக்கே போய்ச் சேருமாறு தகுதியாகுங்கள்.

குறிப்பு :—சிவமாநந்தனமை யுடையார்க்குச் சுற்றமும் விதி வகையும தாமேயாவா. மேலே, 'செய்தனவே தவமாக்கும்' என்றது காண்க. ஆர என்பதை 'எமது' 'பாசம்' என்பவற்றோடு சேர்நதமை வழுவமைதி. சிவமே நோக்குவார், தமமையும தம துடைமையும் பாசமுமாகிய இவற்றை நினைத்தல் கூடாதென்பது குறிக்கப்பட்டது (ஙு)

அடியார் ஆனீர் எல்லீரும அகல விடுமின் விளையாட் டைக், கடிசே ரடியே வந்தடைந்து கடைகொண் டிருமின் திருக்குறிப்பைச், செடிசே ருடலைச் செலநீக்கிச் சிவலோ கத்தே நமைவைப்பான், பொடிசேர மேனிப் புயங்கன்றன் பூவார் கழற்கே புகவிடுமே.

உரை :—அடியாராகிய நீங்கள் எல்லாரும், உலகில் விளையாடுதலைத் தூரவிட்டிடுங்கள் மணம்பொருநதிய இறைவன் திருவடியையே போய்ச சேர்நது அவனது திருவுள்ளக் குறிப்பைக் கடைப் பிடித்திருங்கள். பாவங் ஏறுதற்குரிய உடம்பு ஒழியக் களைநது சிவலோகததிலே நம்மை அமர்த்துவானாகிய நீறணிந்த திரு மேனியையுடைய புயங்கக் கூததுடையானது மலர் நிறைந்த திருவடிககே உங்கள் உள்ளத்தைச செலுத்துங்கள்.

குறிப்பு :—விளையாட்டென்றது, தம்மையும் உலகையும் பற்றிய நினைவுகளின் சார்பாயுள்ளவற்றை. அவை பயனிலவாதலின் விளையாட்டென்றார். கடி - மணம். திருக்குறிப்பை என்பதைக் கடைக்கொண்டு என்பதனோடு முடிக்க. செடி - பாவம்; வரும் பிறவிககேதுவாய ஆகாமிய மென்பாருமுளர். பொடி - திருநீறு. (சு)

விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர காலம் இனியில்லை, உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டுடன் போவதற்கே ஒருப்படுமின், அடைவோம நாம்போய்ச் சிவ புரத்துள் அணியார் கதவு தடையாமே, புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்கன் ஆளவான் புகழ்களையே

உரை —கோபம, ஆசை முதலிய பிணிகளைக களையுங்கள். மேன்மைப்பட வேறொரு சமயம இனிமேல் இல்லை. முதல்வனது திருவடிக்கீழ்ப் பெரிய அடியார் கூட்டத்துடன் போயடைவதற்கே இசையுங்கள். சிவலோகத்தின் அழகு நிறைந்த கதவுகள அடைபடு முன்னமே போய்ச சேர்வோம். அதன் மருங்கு பொருந்தி, உள்ள முருகிப் புயங்கப் பெருமானாகிய நம்மை யாள்பவனது கீர்த்திகளையே துதிப்போமாக.

குறிப்பு :—வெகுளியை விடுமுன், வேட்கை நோய் மிக, ஓர் காலம் இனியில்லையென் றோதிப் பொருளுரைப்பாரு முளர். சாத்து - திரள், கூட்டம். சிவபுரம் - வீட்டிற்கு உருவகம். அதன் புடை அபரமுத்தித் தானம்போலும். ஊழிமுடிவிற் சாயுச்சியத்திற் குரியரல்லார் மீட்டும் பிறத்தல்கூடுமாதலின், 'அணியார் கதவு தடையாமே' என்றார். 'புடைபட்டு' என்பதற்கு உடம்பின் பகுதிகளெல்லாம் உருக்கத்திலீடுபடும்படி எனப் பொருளுரைப்பதுமுண்டு. (ரு)

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின் புயங்கன் தாளே புந்திவைத்திட்(டு),இகழ்மின் எல்லா அல்லலையும இனியோர் இடையூ றடையாமே, திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கிநாம், நிகழும் அடியார முன்சென்று நெஞ்சம் உருகி நிற்போமே.

உரை :— புயங்கப் பெருமானது திருவடிகளையே புகழுங்கள், வணங்குங்கள், அவைகளுக்கே மலர் சூடுங்கள். அவைகளையே அறிவிற்பதித்து எல்லாத் துன்பங்களையும் இகழுங்கள். இனிமேல் நாம், ஒருவகையான தீங்கும் நம்மை யடையாவண்ணம், விளங்கும்

புகழ நிறைந்த சிவபுரத்துக்குப் போய்ச் சேர்ந்து அங்கே சிவபெருமான் திருவடிகளை வணங்கி, அங்கே வாழும் அன்பர்முன் போய் மனமுருகி நிற்போமாக

குறிப்பு.—'புயங்கனதாளே' என்பது நடுநிலைத் தீபகமாய்ப் 'புகழுமின்' முதலிய வினைமுற்றுக்களோடும், 'புகுதிவைத்திட்டு' என்பதனோடு மியைவது (௬)

நிற்பார்நிற்க நில்லாவுலகில் நில்லோம் இனிநாம் செல்வோமே, பொற்பால் ஒப்பாந் திருமேனிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே, நிற்பீர் எல்லாந் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின், பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற் கரியன் பெருமானே

உரை:—நிலையில்லாத உலகிலே நிற்க விரும்புவார் நிற்பாராக. அங்கே நாம் நிற்கமாட்டோம். இனி நாம், அழகினால் தன்னையே ஒத்த திருமேனியுடைய புயங்கப் பெருமானாகிய நம்மை யாள்பவனது பொன்போன்ற திருவடிகட்கே நாம் செல்வோமாக. அவனது பொன்னடி யடைதற்கே நிற்கின்றீ ரெல்லீரும். தாமதியாமல் நிற்கு முறையையே கடைப்பிடியுங்கள். பிற்பட்ட பகுதியில் நின்று பெருமை பாராட்டினால் இறைவன் பெறுதற் கரியனாவன்.

குறிப்பு:—பொற்பால், என்பதற்குப் பொன்னின் தன்மையெனப் பொருள் கொண்டு பொன்னினொளி போலும் திருமேனியென்று உரைத்தலுமொன்று. 'பொன்னடிக்கே' என்பது நடுநிலைத் தீபகம். பேழகணித்தல் - தன்னைப் பெரிதும் மதித்தல். விழித்தல் என்று பொருளுரைப்பாரு முளர். (எ)

பெருமான் பேரானந்தத்துப் பிரியா திருக்கப் பெற்றீர்காள், அருமா லுற்றுப் பின்னைநீர் அம்மா அழுங்கி அரற்றாதே, திருமா மணிசேர் திருக்கதவந் திறந்தபோதே சிவபுரத்துத், திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே.

உரை :—சிவபெருமானது பேரின்பம் நீங்காதிருக்கப் பெற்றீர்கள். நீர் (அதனை விடுத்து) கடத்தற்கரிய உலக மயக்கமுற்றுப் பிற்பாடு, துன்புற்று அம்மா வென்றலறாதே, சிவபுரத்தின் அழகிய பெரு மணிகள் பதித்த திருக்கதவுகள் திறந்திருக்கும்போதே, திருமாலறிய வொண்ணாத திருப்புயங்கப் பெருமான் திருவடிகளைப் போய்ச் சேர்வோமாக.

குறிப்பு —பேரின்ப நுகர்ச்சியை நெகிழ விட்டால், யாசஞ்சு மலத்தாற் கேடு வருதல் கூறப்பட்டது மூன்றாமடியில், 'சிவ புரத்து' என்பதைத் திருமாமணிக்கதவம் என்பதோடு முடிக்க. ()

சேரக் கருதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின், போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அருளமுதம், ஆரப் பருகி ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர், போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற் கிடந்து புரளாதே.

உரை :—சிவபுரஞ்சேர்வதை யெண்ணி, உள்ளத்தைத் திருத்தமாக அமைத்து (இறையடியையே) நினையுங்கள். போரில் விளங்கிப் பயன்படும் வேல்போன்ற கண்ணையுடைய உமைபாகனாகிய புயங்கப் பெருமானது திருவருள் அமுதத்தை நிரம்ப உண்டு முடிவுறாத அன்பு மிகுதிப்பட (ப்பேரின்பத்தில்) ஆழ்வீர்கள். நிலையற்ற பொய்வாழ்விற் கிடந்து புரளாமல், சிவனது திருவடியையே போய்ச் சேர விரும்புங்கள்.

குறிப்பு :—வாசனா மல மொழிதற் பொருட்டுத் திருவைந்தெழுத்தை நினைத்தலும், அயரா அன்பினாற் சிந்தித்தலும் கூறப்பட்டன. போர-போதவென்பதன் மரூஉ. 'போத' வென்பதன் மரூஉவாகக்கொண்டு, 'போதிய அளவு' என்று முரைப்பர். 'சிவன் கழற்கே போரப் புரிமின்' என மாற்றுக. (௪)

புரள்வார் தொழுவார் புகழ்வாராய் இன்றே வந்தாள் ஆகாதீர், மருள்வீர் பின்னை மதிப்பாரார் மதியுட் கலங்கி மயங்குவீர், தெருள்வீர் ஆகில் இதுசெய்மின் சிவலோகக்

கோன் திருப்புயங்கன், அருளார் பெறுவார் அகலிடத்தே அந்தோ அந்தோ அந்தோவே.

உரை :—(அன்பினாலே) புரண்டு வலம் வருவாராயும், வணங்குவாராயும் இறைவனைப் போற்றித் துதிப்பாராயும் இப்பொழுதே வந்து ஆளாகாமற் போனீராயின், பிறபாடு மருட்சி யடைவீர். அறிவினுட் கலக்கமடைந்து மயங்குவீர்கள் உங்களை யார் மதிப்பார்? (ஒருவரும் மதியார்.) தெளிவடைவீராகில், ஆட்படுதலாகிய இதனைச் செய்யுங்கள். சிவலோக நாதனாகிய புயங்கப் பெருமானது (வீடுநல்கும்) திருவருளை உலகத்தே யார் பெறுதல் கூடும்? ஐயோ! ஐயோ!! ஐயோ!!!

குறிப்பு :—இப்பதிக முழுவதும் விரைவில் வீடுபெற விரும்புவார்க்கு அடிகள் மொழிந்த எச்சரிக்கை அறிவுரையாக இருக்கின்றது. இறையன்பில்லாரை மக்களும் பொருட்படுத்தா ரென்ற கருத்துப்பற்றி, 'மதிப்பார் ஆர்' என்றார். உலகவாழ்வைக் கருதின் ஆண்டும் நயமில்லை யென்றவாறு. 'நின்னருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே' என்ற தேவாரமுங் காண்க. மயங்குதல் - வழியறியாது திகைத்தல். அகலிடம் - பூமி. அந்தோ- ஐயோ. இரக்கம்பற்றி மும்முறை கூறினர். (௧௦)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

திருப்படையெழுச்சி

பிரபஞ்சப் போர்

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப் படைவாராமே.

உரை:—சிவஞானமாகிய வாளினைக் கையிலேந்திய தலைவர்து பிரணவ நாதமாகிய பறையை அறையுங்கள். பெருமை பொருந்திய விடையிலேறுந் தலைவர்க்குத் திங்களாகிய (அறிவாகிய) வெள்ளைக் குடையை எடுத்துப் பிடியுங்கள். ஆக்கத்தைத் தரும் திருவெண்ணீறாகிய மெய்ப்பையினுள்ளே முழுவதும் புகுந்து கொள்ளுங்கள். மாயாகாரியமாகிய சேனைகள் வந்து நம்மைத் தாக்கு முன்னே அருள்வானிலுள்ள இன்பப்பதியை நாம் கைப்பற்று வோமாக.

குறிப்பு:—பிரணவ பஞ்சாக்கரம், வாசனாமலம் நீங்க ஒலிக்கப்படுவது. சிவஞானமாகிய அறிவினுள் இறைவனை விளங்குதலின், 'மதிவெண்குடை' என்றார். ஆன - நன்மைக்கான. வானம் - சிதாகாசம் அல்லது அருள். அடைய - முற்றிலும். (க)

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்டிறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற் படைவாராமே.

உரை :—தொண்டர்களே! முன்னணியாகச் செல்லுங்கள். அன்பர்களே! புடைசூழ்ந்து செல்லுங்கள். ஒளிமிகுந்த வலிமையுடைய யோகிகளே! பெரும்படைப் பகுதியைச் செலுத்துங்கள். திடமான உடல்வன்மையுடைய சித்தர்களே! பிந்திய அணிவகுப்பிற் செல்லுங்கள். துன்பப்படை வாராமல் தேவநாட்டை நாம் ஆள்வோமாக.

குறிப்பு :—ஞான நிலையிலுள்ள அடியார்களை முன்னும், கிரியை வல்லாரை மருங்கிலும், யோகிகளைப் பெரும்படை நிலவும் நடுவிலும், உடல்வலியின் பொருட்டுக் காயசித்தி முதலியவற்றிற் சிறந்த சித்தர்களைப் பின்னணியிலும் வைத்தனர். 'அண்டர் நாடு' என்பது வீட்டுலகத்தைக் குறிக்கும். (௨)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

திருவெண்பா

அணைந்தோர் தன்மை

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப
பொய்யும பொடியாகா(து) என்செய்கேன்—செய்ய
திருவார் பெருநதுறையான் தேனுந்து செநதீ
மருவா திருந்தேன் மனதது

உரை நடை: - இறுதி இரண்டடியை முதலிற்கொள்க.

உரை:—செம்மையுடைய அழகு பொருந்திய திருப்பெருந் துறை முதல்வனுகிய தேன்போன்ற இன்பம் நல்குகின்ற செஞ் சோதியை உளளத்தே பொருநதா திருந்தேன். கொடிய இருவினை யும் வெந்தொழியுமாறு உடம்பு உருகி இப் பொய் வாழ்வும் நீறிப் போகா திருக்கிறதே, நான் என் செய்வேன்?

குறிப்பு:—உடம்புள்ளவரை பிராரத்தவினை நுகரக் கிடத்த லின், உடம்பும் வாழ்க்கையும ஒழிய விரும்பினமை கூறினர். இறைவனை அயரா அன்பினுல் வழிபட்டால், உடல் வாழ்க்கை யொழிநதிருககுமென்று குறிப்பிக்கிருா. (க)

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன்—தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து

உரை நடை:—இறுதியடிக ளிரணடையும் முதலிற்கொளக.

உரை:—மேலான மேலோரின் மேலோனே, நீக்க முடியாத பேரின்பப் பித்தினை மிகுவிக்கின்ற அப்பன் திருப்பெருந்துறைப்

பெருமானே என்று எனனிடம் யாா ஒருவா கூறுவரோ அவரை நான் வணஙகி, ஆரவாரிப்பேனு. அலறுவேனு, ஆடுவேனு, பாடுவேனு, பாாப்பேனு, என்ன செய்வேன்?

குறிப்பு:—தாழ்ந்து என்பதை ஆர்கசோ என்பதோடு முடிக்க துணை யன்பரின்றித தாம் ஆனநத உணர்சசியைப் புலப்படுத்த முடியாது வருந்துவதை இதனுட் குறிததார். (உ)

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும வகையின் உயிர்பபறியேன—வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்சே கோத்தான்
பெருநதுறையில் மேய பிரான்.

உரை நடை:—இறுதி யிரண்டடியை முதலிற் கொள்க.

உரை:—திருப்பெருந்துறையில் வீற்றிருநத பெருமான் உலகத்தே வந்திருந்து, அவனது ஆயுதப் பையுட் கிடநத வேலினை எடுத்து என் உள்ளத்தே அழுந்தும்படி எய்துவிட்டான். அவன் அஙஙனஞ் செய்தற்கு யான் செய்த தவறியாதெனை அறிநதிலேன் அவனது செவவிய திருவடிக் கமலஙகளையே கை கூப்பினேன். உய்தி கூடு முறையின் தோற்றமும் அடியேன் அறிநதிலேன்.

குறிப்பு:—வேல்-ஞானத்திற்கு அறிகுறி. வழிபாடொன்றே யன்றி வேறுபாயத்தை நாடாதிருக்கவும் இறைவன் குருவாய் வந்து ஞான மளித்தனன் என்றார். மடுத்துக் கோத்தான் - அழுத்திப் பொருத்தினுன். (௩)

முன்னை வினையிரண்டும் வேரறுதது முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுககும் பேராளன்—தென்னன்
பெருநதுறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து.

உரை:—அழகிய நல்ல திருப்பெருநதுறையில் வீற்றிருந்த பேரருளாளன், எனது முற்பிறப்பிற்செய்த இருவினைகளை அடியோடறுத்து எனககு எதிர்ப்பட்டு நின்றான். இனி வரும் பிறப்பினைத்

தொலைத்த பெருந்துறையாளன், இப்பிறப்பில் வரக்கூடிய துயரத்தைத் தீர்க்கும் மருந்துமாவான்.

குறிப்பு:—முன்னை வினை சஞ்சிதத்தையும், பின்னை வினை ஆகாமியத்தையும், இப்பிறப்புத் துயர் பிராரத்தத்தையுங் குறிக்கும். 'முன்னின்றான்' என்பதை முதலடியின் முதற்கண் கொண்டு, முன்னின்று, வேரறுத்து என முடிப்பது முண்டு. (௬)

அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும்—இறையோன
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று.

உரை:—எல்லா வுலகையும் படைத்த வேதியனாகிய பிரமனும் திருமாலும் அடிமுடி காணாது மயக்கங் கொள்ளுதற் கேதுவாய இறைவன் திருப்பெருந்துறையின்கண் வீற்றிருந்த பிரான், இப்போது எனது உள்ளத்திலே நீங்காது தங்கி வாழ்வான். இதனை அறிவார்க்குப் பந்தயம் (பரிசிலளிப்பேன்).

குறிப்பு:—அறையோ-பந்தயத்துக் கழைத்தல். சொல் என்ற பொருளுமுண்டு. அறிவார்க்கறையோ என்பதை இறுதியிற் கொள்க. (௭)

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே ஆக்குமவந் தென்மனத்தை—அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து.

உரை:—அப்பனாகிய திருப்பெருந்துறையாளன் என்னை ஆண்டருளிப் பேரருளால் பார்க்கும் அமுதமாவான். அழியாத பேரின்பமாவானாகிய சிவபெருமான் எழுந்தருளிவந்து, என்னை மிக்க ஆசை மிகுகின்றவனாக்குவான், பிறப்பினைத் தொலைப்பான், என் மனத்தைச் சொல்லுதற்கரிதாய மிக்க களிப்பு வடிவமே யாக்குவான்.

குறிப்பு.— அத்தன், பெருந்துறையான் மருந்து இன்பம் வந்து பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் என் மனத்தை வந்து பேச சரிதாம் ஆகும் என முடிக்க. (சு)

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி.

உரை:—சிறப்புப் பொருந்திய அழகிய தெற்கின்கண் உள்ள திருப்பெருந்துறைப் பெருமான், எனது உள்ளத்திற் பொருந்திய ஒப்பற்றவன் வளர்க்கும் அருளொளியானது, பிறவிக்கு மீண்டு வாரா வழியினைக் கொடுத்து, எனக்கு மாறுபடாது வந்து தெவிட்டாத அமுதமாய் அமைந்தது.

குறிப்பு:—மாறின்றி - பகையின்றி, பகையிலதாக்கி என்றுமுரைப்பர். (எ)

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

உரை:—எல்லார்க்கும் மேம்பட்ட எல்லையற்ற சிறப்புடைய பெருமானே, எல்லார்க்குங் கீழ்ப்பட்ட அடியேனை, யாருக்குங் கிடைத்தறியாத பேரின்பத்தினுள் அமைத்தனையாகிய உனக்கு, எமது பெரியோனே, கைம்மாறு செய்யும் விதத்தை அறிந்திலேன். (அ)

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும்.

உரை:—மும்மூர்த்திகளும், முப்பத்துமூன்று தேவர்களும், அவர்களல்லாத பிற தேவர்களும் காணமுடியாத சிவபெருமான்,

குதிரையேறி நிலவுலகத்தே இறங்கிவந்து காட்டியருளிய நீண்ட திருவடிகளை வணங்கவே, உடம்பினுள்ளே பேரின்ப வுணர்ச்சி வளரும்.

குறிப்பு:—முப்பத்துமூவர்: உருத்திரர் - பதினொருவர், ஆதித்தர் - பன்னிருவர், அசுவினிதேவர் - இருவர், வசுக்கள் - எண்மர். திக்குப் பாலகர் முதலியோர் பிறதேவர்கள். மா - குதிரை. (கூ)

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாம்—தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து

உரை:—திருப்பெருந்துறையில் வீற்றிருந்த பேரருளாளன், அமுதவடிவமாய் என் உள்ளத்தே வந்திருந்து என்னை ஆட்கொண்டருளினன். அவனது திருவடிகளிரண்டையுமே (இடைவிடாது) நினைந்திருந்து, நெஞ்சமே, (நீ வேண்டிய) எல்லாவற்றையும் யாசித்துக்கொள். அவன் எல்லாந் தந்தருள்வான்.

குறிப்பு:—பெருங் கருணையாளன், மனத்தேவந்து இருந்தென்னை ஆண்டான், நெஞ்சே, இணையடியே சிந்தித்திருந்து இரந்துகொள், எல்லாந் தருங்காண் என முடிக்க. (கo)

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

உரை:—சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறை முதல்வன், பிறவித் துன்பத்தின் தொடர்ச்சியை அறுத்து அருளொளியாய், அறியாமை இருளை நீக்கி, என்றுமுள்ள பேரின்பத்தைப் பெருக்கி அன்பினை உளதாக்கி என்னுடைய உள்ளத்தையே தனது பதியாக விரும்பிக்கொண் டருளினன். (கக)

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

பண்டாய நான்மறை

—•○✿○•—

அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரு மில்லைக் கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை

உரை :—பழமையாகிய நான்குவேதங்களும் அவன்பாற்சேரா. திருமாலும் பிரமனும் அவனைக் கண்டதுகூட இல்லை. கீழ்ப்பட்ட என்னை அடிமையாகஆட்கொண்டருளும் எமது திருப்பெருந்துறை அரசனுக்கு, மனமே, பதிலுபகாரம் உண்டோ? சொல்.

குறிப்பு :—கோகழி - திருவாவடுதுறையையுங் குறிக்கும். (க)

உள்ள மலமூன்றும் மாய உருபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த—வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு.

உரை :—உயிரைப் பற்றிய மும்மலமும் நீங்கியொழிய, குதிரையின்மேலேறிவந்த அருட்கொடையாளனாகிய பெருமான் சொரிகின்ற தேனனைய பேரின்ப வெள்ளத்தைத் தரும். அவன் வீற்றிருக்குந் திருப்பெருந்துறையைத் துதியுங்கள். துதிக்கவே, பிறவிக் காட்டின் மூலமுங் கெட்டொழியும்.

குறிப்பு —மும்மலம் - ஆணவம், கன்மம், மாயை. 'வெள்ளந் தரும்' என்பதற்கு, 'வெள்ளந் தருகின்ற' எனப் பொருள் கொண்டு 'தரும்' என்பதை வள்ள லென்பதோடு முடிப்பதுமுண்டு. கரு - மூலம், வேர். (௨)

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து

உரை :—காட்டிலே வேடனாகியும், கடலில் வலைஞனாகியும், நாட்டிலே குதிரைப்பாகனாகியும் தோன்றியருளி (உயிர்களாகிய) நமது வினையைத் தொலைத்து அருள்புரியுந் திருப்பெருந்துறைப் பெருமானது அழகிய திருவடிக் கமலங்களை, நெஞ்சே, மயக்கந் தீரும்படி துதிப்பாயாக.

குறிப்பு:—பார்த்தன் பொருட்டு வேடனாயினமை பாரதத்துட் காண்க. பிறகதைகள் திருவிளையாடலுட் காண்க. மருளும் என்பதில் உம்மை இறந்தது தழுவியது. வினையோடு மயக்கமும் என்பது கருத்து. (௩)

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர்.

உரை :—தேவர்போய் வலம்வந்து வணங்கித் துதிக்கும் சிறப்பமைந்த திருப்பெருந்துறையை நன்கு வணங்கித் துதிக்கும் நம்மவர் (உலகில் பயனுற) வாழ்ந்தார்களும், கொடிய வினையைத் தொலைப்பாரும், ஞாலமே வணங்கி வாழ்த்தத் தக்கவருமாவர். (௪)

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப்—பண்ணின்

மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.

உரை —எழுசரியுடைய திருவாவடுதுறைப் பதிக் கரசனை, நமது துன்பங்கள் போயொழியும்படி திருவுள்ளங்கொண்டு, திருப் பெருந்துறை அடைந்து, பின், பண்போன்ற சொல்லினளாகிய உமையம்மையோடு உத்தரகோசமங்கை சேர்ந்து, அதனைவிட்டு நீங்காதிருந்த பெருமானைக் காண்க.

குறிப்பு —நெஞ்சிற்கு இது கூறப்பட்டது. எழுகோகழிக் கரசை நம்பிடர்கள் போயகல எண்ணி, பெருந்துறையை நண்ணிப் பண் ..காண், என முடிக்க. (௫)

காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக்—காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு.

உரை :—அறிதற்குரிய கருவிகளெல்லாம் பேரின்ப மயமாகக் கண்டு போற்றும் அன்பர்கள், தமது பிறப்பு நீங்கும்படி கண்டு வணங்கும் பெருமை யுடையானை, எப்போதுந் திருப்பெருந் துறையைவிட்டு நீங்காதவனை, மனமே, நீ வாயாரப் புகழ்வாயாக.

குறிப்பு :—காணும் - அறியும். கரணம் - அகக் கருவி, புறக் கருவி முதலியன. (௬)

பேசும் பொருளு க்கு இலக்கிதமாம் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து.

உரை நடை :—'நல்லமருந்......வைத்து' என்பதை முதலிற் கொள்க.

உரை.—(பிறவி நீக்குவதற்கு) நல்ல மருந்தான பெருமான திருவடிகளை உள்ளத்தே கொண்டு, பேசப்பட்ட உண்மைப் பொருள்களுக்கு எல்லையான முடிவாய், இன்பமாய், சொல்லினைக் கடந்த, குற்றமற்ற மாணிக்கம் போன்றவனது புகழை யுரைத்துப் பெரிய வழியானவனே எனத் துதித்துப் பிறப்பினை யொழிந்தேன்.

குறிப்பு :—பெருந்துறை - அப்பெயருடைய பதிக்கும், பெருநெறியாய பிரானுக்கும் வழங்குவது. (எ)

திருச்சிற்றம்பலம்.

தில்லையில் அருளிய

திருப்படையாட்சி

சீவ உபாதி ஒழிதல்

பன்னிரு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வுகடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப்பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே

உரை நடை :—'மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே' என்பதை முதலிற் கொள்க.

உரை:—மீன்பொருட்டு வலைவீசிய, வேடனாகிய கடவுள் வந்து நமக்கு வெளிப்பட்டு விட்டால், இரண்டு கண்களும் அவனுடைய திருவடியைக் கண்டு மகிழ்வன ஆதல் நிகழாது. பெண்களுடைய வாழ்க்கையில், என்னுடைய வாழ்க்கை கீழ்ப்படுதல் நிகழாது. உலகங்களிற் போய்ப் பிறந்திடும் வண்ணம் கடவுள் திருவடிகளை மறந்திடுதல் நிகழாது. திருமாலறியாத இறைவன் திருவடித் தாமரை இரண்டையும் வழிபடுதல் நிகழாது. பண்ணோடு கூடிய மகிழ்ச்சியைத் தருகின்ற பாடலுமாடலும் பழகுதலுமாகாது. நல்ல பாண்டிய நாட்டினை உடைய பெருமானது படையின் வீரச்செயல்களைப் பாடுதலும் நிகழாது. விண்ணுலகினர் மகிழ்வதற் கேதுவாகிய வேறுபடுத்திக் காட்டுஞ் சிறப்புத் தோன்றுதலு மாகாது.

குறிப்பு:—இறைவன் வெளிப்பட்டு உயிர் அவனோடு அத்து விதமாயக் கலந்த இடத்தே, சிவானுபவ உணர்ச்சியே நிலைத்து உயிர் புறச்செயலற்று இருத்தலின் செய்யுளிற் கூறிய புறச்செயல்கள் நிகழ இடமில்லை. 'வாழ்வில' என்பதற்கு, வாழ்வினைப் பாரகிலும் என்று பொருள் கொள்வாருமுண்டு. வேதகம் என்பது விண்ணவர்களினும் உயர்த்திக் காட்டுந் தனிச் சிறப்பு. உயிர் சிவனோடு இரண்டறக் கலந்த இடத்தே, ஏனைத் தேவரை யெண்ணுமையின், அச் சிறப்புத் தோன்றுதென்க. (க)

ஒன்றினோடொன்று மோரைந்தினோடைந்து முயிர்ப்பது மாகாதே
உன்னடி யாரடி யாரடி யோமென உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த கணக்கது வாகாதே
காரண மாகும் அநாதி குணங்கள் கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம் நடந்தன வாகாதே
நாமுமெ லாமடி யாருடனே செல நண்ணுது மாகாதே
என்றுமென் அன்பு நிறைந்த பராவமு தெய்துவ தாகாதே
ஏறுடை யான்எனை ஆளுடை நாயகன் என்னுள் புகுந்திடிலே.

உரை நடை:—ஈற்றடியை முதலிற் கொள்க.

உரை:—காளைவாகன முடையனாகிய, என்னை அடிமையாக வுடைய தலைவன் என்னறிவினுள் புகுந்து நிலைத்துவிடில், உயிரினோடு உடம்பும், ஐம்பொறிகளோடு, அவற்றிற்குரிய பொருளாகிய ஐம்புலன்களும் கலந்து நிலைபெறுதல் நிகழாது. உன்னடியார்களுடைய அடியார்க்கடியோமென்று கூறி உய்தற்கேதுவாய செயல்கள் நிகழமாட்டா. தனது கன்றை நினைந்து (அன்போடு) எழுந்து செல்லும் தாய்போல உயிர்கள்பாற் கருணை காட்டச் சென்ற முறையும் நிகழாது. மனம் முதலியவற்றிற்குக் காரணமாகும் முக்குணங்கள் அறிவிற் பொருந்துதலுமியலா. இது நல்லதோ, இது தீயதோ என்று ஒன்றினையாய்ந்தகாலை யேற்படுங் கலக்கம் நிகழ்தலுமியலாது. நாம் எல்லாம் அடியாரோடு உடன

செல்லக் கருதலுமியலாது. என்றைக்குமெனது நிறைந்த அன்பிற்குரிய மேலான அமுதமானவனைப் போயடைதலென்பதும் நிகழாது.

குறிப்பு —ஒன்றினோடொன்றும் என்பதற்கு உடம்பினொடு பிராணனுமென்று கூறுவாருமுளர். உயிர்ப்பது - கலந்தியங்குவது. தாயென வந்த என்பதைக் கடவுளுக் கேற்றித் தாய்போலக் குருவாகி வந்ததெனப் பொருள் கொள்வது முண்டு. பராவமுதை யடைந்து விட்டபடியால் எய்தலாகாது என்றார் (உ)

பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடும் ஆகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த பராஅமு தாகாதே
அந்த மிலாத அகண்டமும் நம்முள் அகப்படும் ஆகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர் அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை சிந்திடும் ஆகாதே
சேலன கண்கள் அவன் திருமேனி திளைப்பன ஆகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துயர் ஏகுவ தாகாதே
என்னுடை நாயக னாகிய ஈசன் எதிர்ப்படு மாயிடிலே.

உரை —என்னுடைய தலைவனாகிய ஆண்டவன் எதிர் தோன்றிக் கலந்தருளுமாயின், பாசத் தொடர்பான வேற்றுமைப்பட்ட பல வியல்புகள் மறைதலும் மீட்டுத் தோன்றுதலும் நிகழா. கடவுளைப் பாவிப்பதால் உள்ளத்திற்றோன்றிய கற்பனைத் திருவடிவக் காட்சியாலுளதாம் மேலான அமுதமும் அனுபவித்தலாகாது. எல்லையற்ற கட்டுப்படாத வடிவக்காட்சி நமதுள்ளத்தே புலனாதலும் நிகழாது. படைப்பு முதல் உதவிய மேலான சோதிப் பொருளைப் போயடைதல் நிகழாது. செவ்விய பவளவாயையுடைய பெண்டிரால் வரும் இடையூறுகள் ஒழிதல் என்பது நிகழாது. சேல்மீன் போன்ற கண்கள் இறைவனது திருவுருவத்தை நுகர்தலும் நிகழாது. இந்திர சாலம்போல மாயமான இடைஞ்சலான பிறவித்துன்பம் ஒழிதலென்பதும் நிகழாது.

குறிப்பு :—இச் செய்யுளுட் கூறியன வெல்லாங் கடவுளோடு இரண்டறக் கலப்பதற்கு முன் நிகழ்வன வென்றும், பின் நிகழா

வென்று மறிக. ஆதிமுதற் பரமாய பரஞ்சுடரென்றது, ஐந்தொழில் செய்யுந் தடத்த இலக்கணமுடைய கடவுளைக் குறிக்கும். இந்திர ஜாலவித்தையை அறுபத்து நான்கு கலைஞானங்களி லொன்றென்ப. (௯)

என்னணி யார்முலை ஆகம் அளைந்துடன் இன்புறு மாகாதே
எல்லையில் மாக்கரு ணைக்கடல் இன்றினி தாடுது மாகாதே
நன்மணி நாதம் முழங்கியென் உள்ளுற நண்ணுவ தாகாதே
நாதன் அணிதிரு நீற்றினை நித்தலும் நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரில் என்பணி முந்துற வைகுவ தாகாதே
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
இன்னியல் செங்கழு நீர்மலர் என்தலை எய்துவ தாகாதே
என்னையுடைப் பெருமான் அருள் ஈசன் எழுந்தருளப் பெறிலே

உரை:—என்னை அடிமையாகவுடைய பெருமானாகிய கருணை முதல்வன் தோன்றி வீடருளப்பெறறால், எனது நகைகளா நிலவிய நகில்கள் அவனது திருமேனியிற் படிந்து இன்புறுதல் நிகழாது. எல்லையில்லாத பெருங்கருணைக் கடலில் இப்பொழுது நன்கு திளைத்தல் நிகழாது. நல்ல மணியோசை முதலியன என்னுள்ளே மிகுதியாகப் பொருந்தி முழங்குதல் நிகழாது. இறைவனணிகின்ற திருநீற்றினைப் பூசுதலும் ஏற்படாது. நிலைபெற்ற அன்பருள் எனது பணிவிடை முற்பட்டு இருத்தல் நிகழாது. பெருமை பொருந்திய மறைநூல்களறியாத திருவடிக் கமலங்களை வழிபடுதலும் நிகழாது. இனிய இயல்புடைய செங்கழுநீர்ப் பூப்போன்ற திருவடிகள் எனது தலையிற் பொருந்துதலும் நிகழாது.

குறிப்பு.—இறைவர் திருமேனியைத் தழுவுதல் அவனது திருவடிவத்தில் ஒடுங்குதலாகும். அது தத்துவச் சார்புடையதாதலின், தத்துவங் கடந்த அத்துவிதக் கலப்பில் அது நிகழாது என்றார். திரு அருட்பேறு சிவப்பேற்றிற்கு முற்பட்டதாகலின் சிவப்பேற்றின் பின் அது நிகழாது என்றார். மணிநாத முழங்குதல் யோகியர் உடம்பில் நிகழ்வது. அது ஞானநிலையில் நிகழாதென்றனர். (௰)

மண்ணினில் மாயை மதித்து வகுத்த மயக்கறும் ஆகாதே
வானவ ருமறி யாமலர்ப் பாதம வணங்குதும ஆகாதே
கண்ணிலி காலம னைத்தினும் வந்த கலக்கறும் ஆகாதே
காதல்செ யுமடி யார்மனம் இன்று களித்திடும் ஆகாதே
பெண்ணலி ஆணென நாமென வந்த பிணக்கறும் ஆகாதே
பேரறி யாத வநேக பவங்கள் பிழைத்தன ஆகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை எய்துவ தாகாதே
என்னையுடைப் பெருமான் அருளாசன் எழுந்தருளப் பெறிலே.

உரை :—என்னையுடைய பெருமானாகிய கருணை யாண்டவன் எழுந்தருளப் பெற்றால் மண்ணுலகத்தினில் மாயா காரியங்களைக் கருதி அவற்றின் வகையாக எழுந்த மயக்க வுணர்ச்சி ஒழிதல் என்பது நிகழாது தேவர்களு மறியாத திருவடிக் கமலங்களை வழிபடுதலும நிகழாது. ஞானமில்லாதவனாய் இருந்த காலமெல்லாம் ஏற்பட்ட கலக்கங்கள் என்பது நிகழா அன்பு செய்யும் அடியார் உள்ளம் இப்பொழுது மகிழுதல்நிகழாது. பெண் ஆண் அலி யெனவும், நாமெனவும் நீயெனவும் பேசவந்த மாறுபாடுகள் ஒழிதல் என்பதும் நிகழாது. பேர் கூடச் சொல்ல முடியாத பல பிறவிகளுள் நின்று தப்பிப் பிழைத்தல் என்பதும் நிகழாது. எண்ணிலடங்காத அற்புதத்திறன்கள் என்னை வந்தடைதல் நிகழாது.

குறிப்பு :—மாயையினாலாகிய மயக்கத்தை முதற்கண் குறிப்பித்தார். அது ஆணவத்தால் வந்த மயக்கின் வேறாகும். கண் - ஞானத்திற் கறிகுறி. கண்ணிலி காலம் - கண்ணிலியா யிருந்த காலம். கலக்கு - கலக்க மென்பதன் கடைக்குறை. பவங்கள் - பிறவிகள். (௬)

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறுபொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னியல நுண்ணிடையார்கள் கருத்து வெளிப்படுமாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம் மிகுத்திடு மாகாதே

தன்னடி யாரடி என்றலை மீது தழைப்பன ஆகாதே
தானடி யோமுட னேஉ(ய்)ய வந்து தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை யீசனை என்அத்தன் எழுந்தருளப் பெறிலே.

உரை.—என்னை முன்னாளிலே யாட்கொண்டருளிய முதல்வன் என் அப்பன் எழுந்தருளப் பெற்றால், பொன்னின் தன்மையோடு விளங்கும் திருமேனிமீது வெள்ளிய திருநீறு விளங்குதலும் நிகழாது. பெருந் தவத்தினரது கரங்கள் கூப்பி மலர் மழையை இறைவன் திருவடிக்கண் சொரிந்திடுதலும் நிகழாது. மின்னலைப் போல அசையும் நுண்ணிய இடையையுடைய பெண்டிரது உள்ளக் கருத்து வெளிப்படுதலும் நிகழாது. வீணை முழங்கி உண்டாகின்ற இன்னிசையில் இன்பம் மிகுதிப்படுதலும் நிகழாது. இறைவனது அடியார்களின் திருவடிகள் எனது தலைமீது விளங்குதலும் நிகழாது. இறைவன் அடியார்களாகிய நாங்கள் உய்யும்படி எழுந்தருளி வந்து தோன்றுதலும் நிகழாது. இனிய வாத்தியங்கள் எவ்விடத்தும் நிறைந்து இனிதாக ஒலித்தலும் நிகழாது.

குறிப்பு.—பூ மழை என்பதை பொழிந்திடு மென்பதனோடு முடிக்க. அடியோம் என்பதை உடனே என்பதோடு முடித்தலு முண்டு. இயம் - வாத்தியம். (அ)

சொல்லிய லாதெழு தூமணி யோசை சுவைதரு மாகாதே
துண்ணென என்னுளம் மன்னிய சோதி தொடர்ந்தெழு மாகா[தே]
பல்லியல் பாய பரப்பற வந்த பராபர மாகாதே
பண்டறி யாதப ரானுப வங்கள் பரந்தெழு மாகாதே
வில்லியல் நன்னுத லார்மயல் இன்று விளைந்திடு மாகாதே
விண்ணவரும் அறியாத விழுப்பொருள் இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை எய்திடு மாகாதே
இந்து சிகாமணி எங்களை ஆள எழுந்தருளப் பெறிலே.

உரை:—சந்திரனைத் தலையின்கண் அணியாக வைத்த பெருமான் எங்களை யாட்கொள்ள எழுந்தருளப் பெற்றால், சொல்

லோசை கலவாது எழுகின்ற பரிசுத்தமான மணிஒலி சுவை பயத்தல் நிகழாது. திடனென எனதுள்ளத்திற் பொருந்திய சோதியானது தொடர்பாகத் தோன்றுதல் நிகழாது. பல தன்மைகளை உடைய மனவிரிவு கெடும்படி தோன்றிய மிக மேலான பொருள் தோன்றுதல் நிகழாது. முன்பு அறியாத மேலான அனுபவங்கள் விரிந்து மேற்படுதலும் நிகழாது. வில்லின் வடிவுடைய அழகிய நெற்றியையுடைய பெண்டிரது மயக்கம் இப்போதுபோல் உண்டாதல் இல்லை. வானவரு மறியாத உயர்ந்த பரம்பொருள் விளங்கு மிவ்வடிவோடு தோன்றுதல் நிகழாது. அளவில்லாதனவாகிய இறைவனது எண்குணங்கள் அடைந்திடுதலும் நிகழாது.

குறிப்பு:—சொல் கலவாது ஒலிக்கின்ற மணி ஓசையைச் சிலம்பொலி என்பர். அது ஞானயோகத்தால் அறியற்பாலது. துண்ணென மன்னிய சோதி என்றது, ஞானநிலையின் தொடக்கத்தி லுண்டாகும் விளக்கத்தை. பாப்பற வந்த பராபரமென்றது, மனோலயத்தை உளதாக்கு மிறைவன் திருவடிவம். பரானுபவங்களென்றது, அபரமுத்திப் போகங்கள். இப்பொருளென்றது அடிகளுக்குத் தோன்றிய ஆசிரிய வடிவத்தை. எண்குணங்களை அடைந்து முடிந்த இடமாதலின் புதிதாக எய்திடுதற் கிடமில்லையென்றார். இந்து சிகாமணி எனபதற்குச் சந்திரனைத் தலையிற் றரித்தவனாகிய மணிபோன்றவன் என்றுங் கூறுப. (௭)

சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நமமோடு சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனும் மாயை அடங்கிடு மாகாதே
ஆசை எலாம் அடி யாரடி யோமெனும் அத்தனை யாகாதே
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன ஆகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்கள் தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர் எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோனெனை ஆள எழுந்தரு ளப்பெறிலே.

உரை :—முடிவுணரப்படாத இரகசியப் பொருளாகிய பெருமான் என்னை யாட்கொள்ள எழுந்தருளப்பெற்றால், சங்குகள் பல ஒன்று சேர்ந்து முழங்கினாற்போ லெழுவதாகிய ஓசை மிகுதிப் படுதல் நிகழாது. சூலம் காரணமாக வருகின்ற குணங்கள் நம்மோடு இயங்குதல் நிகழாது. அவ்விடத்தே இது நல்லது இது நல்லது என்ற மயக்கம் அடங்கி ஒழிதல் நிகழாது. பற்று முழுவதும் இறைவனடியார்க் கடியோம என்னு மவ்வளவே என்றலுங் கூறவொண்ணாது. சிவந்த கயல்மீன்போன்ற ஒளியையுடைய கண்ணை உடைய பெண்டிர் மனம் பூரித்தலும் நிகழாது. சிறந்த அடியார்களது சிவானுபவங்களை இன்னதென விசாரித்தலும் நிகழாது. எவ்விடத்தும் நிறைந்து அமுதூறுதற்குக் காரணமாகிய பரஞ்சோதியை யடைதலும் நிகழாது.

குறிப்பு :—சங்கோச யோகானுபவம், சாத்திக்குணங்கள் பழக்க மிகுதியால் உண்டாவன. மாயை என்றது புதுமைபற்றிய உணர்ச்சி. அமுதூறு பரஞ்சுட ரென்றது, உடம்பினிற் காணப் படும் உத்தமனை. (அ)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

ஆனந்தமாலை

சிவானுபவ விருப்பம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மின்னே ரனைய பூங்கழல்கள் அடைந்தார் கடந்தார் வியனுலகம், பொன்னே ரனைய மலர்கொண்டு போற்றா நின்றார் அமரரெல்லாம், கல்நே ரனைய மனக்கடையாய்க் கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த, என்னே ரனையேன் இனியுன்னைக் கூடும் வண்ணம் இயம்பாயே.

உரை :—மின்னலைப்போன்ற அழகிய இறைவன் திருவடிகளை யடைந்தவர்கள் பெரிய உலகநெறியைக் கடந்தவர்களாவர் தேவர்களெல்லாம் பொன்போன்ற அழகிய மலர்களைத் தூவி இறைவனை வணங்கா நின்றார். கல்லையொத்த மனத்தினனாய்க் கீழ்ப்பட்டவனாய், அறிஞரால் கழிக்கப்பட்டுக் கவலைக்கடலில் வீழ்ந்த என்னையே போன்ற யான் இனிமேல் உன்னை வந்தடையும் விதத்தைக் கூறி யருள்க.

குறிப்பு :—பூங்கழல்கள் - பொலிவுடைய திருவடிகள் இழிவில் தனக்குத்தானே நிகரென்பார், என்னேரனைய என்றார். (க)

என்னால் அறியாப் பதம்தந்தாய் யானதறியா தேகெட்டேன், உன்னால் ஒன்றுங் குறைவில்லை உடையாய் அடிமைக் காரென்பேன், பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும் பழைய அடியா ரொடுங்கூடா, தென்நா யகமே பிற்பட்டிங் கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே.

உரை :—என்னாலறிய வொண்ணாத பெருமையுடைய பதவியை நீ தந்தருளினை. யான் அதன் தன்மையறிந்து (பாதுகாவாது)

கெடுகியுற்றேன். உன்னால் யாதொரு குறையு மேற்படவில்லை நாதனே, அடியேனுக்கு யாரைத் துணையென்பேன் என் தலைவனே, பலநாளாக உன்னை வழிபட்டுத் துதிக்கும் பழமையான அன்பர்களோடுஞ் சேராது பின்னிட்டுப் பிணிக்கு விருந்தாக இவ்வுலகி லிருப்பேனாயினேன்

குறிப்பு:—என்னுடையகமே எனபதை முதலிற் கொளளலாம. நோய்க்கு விருந்தாயிருந்தேன் என மாற்றுக. பதமெனபதற்குத் திருவடியென்று முரைப்பா. நாதனே நீ யடிமைகளு எவவகைத் தொடாபுடையாய் எனவும் பொருள் கொள்வா (உ)

சீல மின்றி நோன்பின்றிச் செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்றுவிழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி வாரா வுலக நெறியேறக் [னை
கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே

உரை —நலலொழுக்க மின்றி, விரதமின்றி, அன்பிலலாமல, அறிவில்லாமல், தோற் பதுமையின் கூத்தாட்டத்தைப் போலச் சுற்றி யலைந்து பயனற்றுக் கிடக்கும் எனக்குத், தன்பால் விருப்பங் காட்டி நன்னெறி காட்டிப் பிறவிக்கு மீளாது போய்ச் சேரும் வழியிலே மேற்கொண்டு செல்லுமாறு தனது திருவடிவத்தையுங் காட்டி யாட்கொண்ட பெருமானைக் கொடுமையுடையேன் எந்நாள் போய்ச் சேருவது? (௩)

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடி லாதாய் பழி கொண்டாய், படுவேன் படுவ தெல்லாம்நான் பட்டாற்பின்னைப் பயனென்னே, கொடுமா நரகத் தழுந்தாமே காத்தாட் கொள்ளுங் குருமணியே, நடுவாய் நில்லா தொழிந்தக்கால் நன்றோ எங்கள் நாயகமே.

உரை:—கெடுதியுறு மியல்புடைய யான் எப்படிக் கெடக்கூடுமோ அப்படிக் கெடுகின்றேன். தீங்கில்லாதவனே, (நீ என்னை யாட்கொண்டமையான்) நான் கெடுதலால் வரும் பழியை நீ ஏற்றுக் கொள்ளலாயிற்று. துன்பப்படுதற்குரிய யான் படக்கூடிய துன்ப

மெல்லாம் அனுபவித்து விட்டால் அதற்குப்பின் நீ காப்பதில் என்ன பயன்? கொடிய பெரு நரகத்திலே ஆழாத வண்ணம் தடுத் தாட்கொள்ளுகிற குருவாகிய மாணிக்கமே, எங்கள் தலைவனே, நீ நியாய நிலையிலில்லாமற்போனால் அது நன்றாகுமா?

குறிப்பு.—பிராரத்துவ வினையை முற்றிலும் அனுபவிப் பதற்கு முன்னமே வீட்டினைத் தந்தருள வேண்டுமென்பது அடி கள் குறிப்பு. அன்பர் துன்பப்படுங்காலை அதனை நீக்குதல் இறை வன் கடன். அதனைச் செய்யாமை நடுவு நிலைக்கு மாறாகுமென்று குறிப்பித்தார். (ச)

தாயாய் முலையைத் தருவானே தாரா தொழிந்தாற் சவலையாய், நாயேன் கழிந்து போவேனோ நம்பி யினித் தான் நல்குதியே, தாயே யென்றுன் தாளடைந்தேன் தயாநீ என்பால் இல்லையே, நாயேன் அடிமை உடனாக ஆண் டாய் நான்தான் வேண்டாவோ

உரை:—தாயாகி வந்து நகிலினின்றும் பொழியும் பாலைத் தருபவனே (அதாவது தாய் முலையூட்டுதல்போல ஞானப்பாலளிப் பவனே), அதனைத் தாராதுபோனாற் பாலின்றி மெலியுங் குழந்தை யைப்போல் நாயேன் (அறியாமையினாற்) கழிவாய்ப் போவேனோ? அண்ணலே, இனியாவது அருள் தருவாயாக. உன்னைத் தாயே யென்றெண்ணி உன்னுடைய திருவடியை யடைந்தேன். நீ என்னிடத்தில் கருணையில்லா திருக்கின்றாய். நானுன்னை யடைந்த வுடன் என்னை யடிமையாக ஆட்கொண்டாய். (இப்போது) அடி மையாகிய நான் உனக்குத் தேவையில்லையோ?

குறிப்பு:—தாயாய், சவலையாய் என்பவற்றில் ஆய் என்பதை உவமை யுருபாகக் கொள்ளுதலுமுண்டு. (ரு)

கோவே யருள வேண்டாவோ கொடியோன் கெடவே அமையுமே, ஆ! ஆ! என்று விடில் என்னை அஞ்சேல் என்பார் ஆரோதான், சாவார் எல்லாம் என்னளவோ தக்கவாறன் றென்றோ, தேவே தில்லை நடமாடீ திகைத்தேன் இனித் தான் தேற்றாயே.

உரை :—அரசனே, நீ யருள்புரிய வேண்டியதில்லையா? கொடுமையேன் கெட்டுப்போதலே போதுமா? நீ ஐயோவென் றிரங்காவிடில், அஞ்சாதே யென்றெனக் குரைப்பார் வேறு யார் தான்? பயன்பெறாது இறப்பவர்களெல்லாம் என்னோடு சரியோ? நான் பயன்பெறாது இறந்தால் அது தக்க முறையன்றென்று அன் பர்கள் சொல்லாரோ? கடவுளே, தில்லைத் திருக்கூத்தியற்று பவனே, யான் திகிலடைந்தேன். இனியாவது நீயே அதனைத் தெளிவிப்பாயாக. (௬)

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித் தப, பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சேற்றும பெருந்துறையாய், அரிய பொருளே அவிநாசி அப்பா பாண்டி வெள்ளமே, தெரிய அரிய பரஞ்சோதி செய்வ தொன்றும் அறியேனே.

உரை :—நரிகளைக் குதிரை வாகனமாக்கி, உலகம் எல்லாம் தெரியும்படி செய்து, பாண்டியனது பெரிய ஊராகிய மதுரையி லுள்ளவர்களுக்கெல்லாம் திகைப்பினை மிகுதிப்படுத்துந் திருப் பெருந்துறைப் பெருமானே, பெறுதற்கரிய மெய்ப்பொருளே, அவிநாசி என்னுந் திருப்பதியின்கண் வீற்றிருக்கு மப்பனே, பாண்டியனுனை கருணைவெள்ளமே, அறிதற்கரிய மேலான வொளி யானவனே, வீடடைதற்குச் செய்யு முபாயமொன்றும் அறிந்தி லேனே.

குறிப்பு :—பரி - தாங்குவது என்ற பொருளில் இங்கே வந் தது; பிற இடங்களில் அது குதிரையெனப் பொருள்படும். நிகழ் வித்து - செலுத்தி எனவுங் கொள்ளலாம். பெரிய தென்னன் எனப் பிரித்து பெருமையுடைய பாண்டியனெனவுங் கொள்ப. அவிநாசி என்பது கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ளது. சுந்தர மூர்த்திகள் முதலைவாய்ப் பிள்ளை எழுப்பிய இடம். (௭)

திருச்சிற்றம்பலம்

தில்லையில் அருளிய

அச்சோப் பதிகம்

அனுபவ வழி அறியாமை

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

உரை :—வீடடையும் வழியினை யறியாத முரண்பட்டவரோடு சேர்ந்து, அவர் நெறி நிற்க முயல்கின்ற எனக்கு அன்பு நெறியை யறிவுறுத்தித், தொல்லை வினைகளற்றொழியும் வண்ணம் மன மாசினை நீக்கிச், சிவமயமாக்கி, எனையாட்கொண்டருளிய அப்பன் எனக்கு அருள் செய்த முறையை வேறு யார் பெற வல்லார்? இது அதிசயமே. (க)

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்(கு)
அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே.

உரை :—நன்னெறி யல்லாத வழியை நன்னெறியாக நினையு மியல்புடையேன் கீழ்ப்பட்ட நெறிகளை யடையாது திருவருளி னையே கைகூடும்படி, (பெயர் வடிவு முதலிய) அடையாளங்கள் யாவும் இல்லாத திருநடப் பெருமான் தனது திருவருட் கூத்தினை அறியும்படி அடியேனுக்கு அருள் செய்தவாறு வேறு யார் பெற வல்லவர்? இஃதே அதிசயம். (உ)

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளி
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

உரை :—நிலையாதனவற்றை நிலையின வென்றெண்ணி, நெருங்கிய நகிலையுடைய பெண்டிரது அனுபவத்தின்கண் மயக்க முறுதற்குரிய என்னை, (அதனிடை) மாண்டு போகாமற் றடுத்தருள் செய்து, பெண்ணை இடப்பாகங் கொண்ட பெருமானாகிய தலைவன், தன்னுடைய திருவடியையே அடையும் வண்ணம் எனக்கருள் செய்த படி வேறு யார் பெறவல்லவர்? இஃதே அதிசயம். (௩)

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

உரை :—மண்ணுலகிற் பிறந்திளைத்துச் செத்து வீழ்தற்குரியேனை, நினைப்பதற்கரிய அன்பினைக் கொடுத்து ஆட்கொண்டு, அடியேனையுந் தனது திருவெண்ணீற்றுப் பொடியை அணியச்செய்து புனிதமான உயர் நெறியையே அடையும்படி, பெருமான் எனக்கருளிய முறையை வேறு யார் பெறவல்லார்? இது அதிசயமே.

குறிப்பு :—எண்ணமிலா - மனத்தால் எதிர்பாராத என்று முரைப்பர். சுண்ணம் - பொடி. (௪)

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன் (௫)
அஞ்சேல்என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே.

உரை :—பஞ்சு போன்ற பாதமுடைய மாதர் கடைக்கண் பார்வையால் இடைஞ்சற்பட்டு, நெஞ்சிலே உண்டாகிய துயர்

மிருமபடி நிற்கும்இயல்புடையேன் உனது திருவருளைப் பெற்றேன் நான் உய்ந்தேன். என்னை உடையவனே. அடியேனை 'நீ வா, பயப்படாதே' என்று அருள் செய்த முறை வேறு யார் பெற வல்லார்? இது அதிசயமே (கு)

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்(து)
அந்தமெனக் கருளியவா ருர்பெறுவார் அச்சோவே

உரை:—வெந்து விழும் உடம்பின் சார்பாய பிறப்பை நிலையான தென்றெண்ணித் தீவினைகளை மிகச்செய்து, பூங்கொத்துக் களை யணிந்த கூந்தலையும் சங்கினாலாய வளையல்களையு மணிந்த பெண்டிரது குவிந்த நகிலின் மேல் விருப்பம் வைக்குமியல்புடைய எனது பாசத்தை நீக்கி, ஆட்கொண்டு, என் உயிர்ப்போதம் கெடும்படி என் குற்றத்தை யொழித்து, முடிவான பேற்றை எனக்கருள் செய்த முறையை வேறு யார் பெறவல்லார்? இது அதிசயமே.

குறிப்பு.—கொத்து என்பதன் மெலிவு, கொந்து. கோல் - சங்கு துரிசு - குற்றம். அந்தம் - முடிவான இன்பம், முடிவான நிலை (சு)

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு (ஓ)ங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா ருர்பெறுவார் அச்சோவே.

உரை:—பெண்டிர் மயக்கிலே அமிழ்ந்து விழுதற்குரியேனை மெதுவாகக் கொண்டுபோய் மலமாகிய அடிப்படையை உருவி (எறிந்து), உய்தி கூடும் வழியைக் காண்பித்து, ஓங்காரத்தின் உண்மைக் கருத்தினை அப்பன் எனக்கருள்செய்த விதம் வேறு யார் பெறவல்லார்? இது அதிசயமே. (எ)

சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

உரை:—பிறப்பு இறப்பென்னும் பெரிய சுழியிலகப்பட்டுத் தடுமாறிக் காமமிகுந்து அழகிய நகையுடைய மாதர் புணர்ச்சியிலே விழு மியல்புடைய என்னை, உமையொருபாகன் தனது திருவடியே அடையும்படி, (எவற்றிற்கும்) ஆதியாகிய அவன் அருள் செய்தவாறு யார் பெறவல்லார்? இது அதிசயமே (௯)

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாயசிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

உரை:—எவற்றிற்கும் ஆதியாகிய தலைவன், நேர்மையின் நயம் அறியாத மூடரொடு திரியு மியல்புடைய எனது மூவகைப் பாசங்களையுங் களைந்து, (ஒன்றுக்கும் பற்றாத) அடியேங்களையும் ஒரு பொருளாக மதித்து, நாயைச் சிவிகையி லேற்றினாற்போல உயர்வித்த தாய்போல்வான் எனக்கருளிய விதம் வேறு யார் பெற வல்லார்? இது அதிசயமே. (௰)

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் முற்றிற்று.

ஆகத் திருப்பதிகங்கள் ருக-க்குப் பாடல் தொகை-சுருஅ.

திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

நால்வர் திருநக்ஷத்திரம்

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்தவை காசி மூலம்
அந்தரைப் பணிசம் பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ்வாதவூரர் முதியநல் ஆடிதனனில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

நால்வர் வயசு

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம்—இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்(கு)
அந்தம் பதினா றறி.

சில திருத்தக் குறிப்புக்கள்

[கீழ்வரும் குறிப்புக்களை உரிய இடங்களில் சேர்த்து வாசித்துக்கொள்க.]

இவை, திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் திருத்தக் குறிப்புக்களைத் தழுவிச் சேர்க்கப்பட்டன:—

திருவாசகப் பொழிப்புரை ௩-ம் பக்கம். ௭-வது அடி—பின்ஞகம-(அன்னை என்பது அஞ்ஞை எனச் சிலப்பதிகாரத்து வந்துள்ளதுபோல) 'பின்னல்' என்பதனடியாகப் பிறந்து 'சடை' என்னும் பொருள்படுமோ என்று நினைக்கிறேன், அதுவே அவனுக்குச் சிறந்த தலைக்கோலமாகலின்.

௭-ம் பக்கம். ௩௨-வது அடி—மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு - உண்மையாகவே நினது திருவடிகளைக்கண்டு, எனவும் பொருள் கொள்ளலாம். 'கண்ணார் நுதலாய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர' என்பதுபோலப் பலவிடங்களில் வருதலின்.

௮-ம் பககம். ௩௬-வது அடி—வெய்யாய் தணியாய - 'தண்ணியல் வெம்மையினான்' என்பது ஆளுடைய நம்பிகள் அருளிப்பாடு.

௮-ம் பககம ௪௦-வது அடி—'அஞ்ஞானம்'—ஐயம், திரிபு, அறியாமை என்னு மூன்றையு மடக்கி அஞ்ஞான மென்றார். இஃது உபலக்கணம்.

௧௫-ம் பக்கம். ௮௫-வது அடி—என்றென்று - தனித்தனிக கூவிக் கூவி, என்று கூட்டிக்கொண்டால் 'ஆற்றேன்' என்னும் ஒருமையுடன் 'மெய்யானார்' என்னும் பன்மை பொருந்திவிடும்.

௮௭-ம் பக்கம். ௨0௧-வது அடி—தானி அறுகினை - தானியாகிய அறுகின்.

௮௮-ம் பக்கம். ௨௨0-வது அடி—சொன்மாலை - பாமாலை.

௮௯-ம் பக்கம். ௨௨௫-வது அடி—சயசய - வெற்றி ஓங்குக.

௯௧-ம் பக்கம். மெய்தான் அரும்பி - அரும்பி முதலிய எச்சங்கள் வினைவினை யாகலின் முதலொடும் பொருந்தும்.

௧00-ம் பக்கம். ௧௨-வது பாட்டு—மண்ணுளான் மதித்து மிரேன் - புவியினை ஆளக் கருதியுமிரேன்.

௧0௧-ம் பக்கம். ௧௩-வது பாட்டு—அருளமுதம் - அருளாகிய அமுதம். அத்தமியேன் - அத்தகு தனிமையினேன்

௧0௨-ம் பக்கம். ௧௭-வது பாட்டு—சாமாறே விரைகின்றேன் சதுராலே - சதுராலே சாமாறு விரைகின்றேன் எனக் கொண்டு இகழ்ச்சிக் குறிப்பாக்கலுமாம். சார்வான்-எல்லாப் பொருளும் சார்தற்கு இடமானவன்.

௧௧௭-ம் பக்கம். 'ஆடுகின்றிலை' என்ற பாட்டில், கூத்துடையான் - ஐந்தொழில் திருக்கூத்தாடும் முதல்வன்.

௧௨௫-ம் பக்கம். ௨௧-வது வரியில் 'அவன் பிரிவினை புணராமையால்' என்பதற்குப் பதிலாகக் 'காணப் பெறாமையத்தும்' என்பதை யமைத்துக் கொள்க.

௧௨௯-ம் பக்கம் ௪௯-வது பாட்டு—பட்டிமண்டபம் - வித்தியாமண்டப மாகும். சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதை, ௧0௨-வது அடி-'பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும்' என்பதற்கு அடியார்க்குநல்லா ருரைத்ததை நோக்குக. பட்டி-நாய் என்று அகராதியி லிருப்பினும் ஆன்றோர் வழக்கி லில்லை.

௧௩௬-ம் பக்கம். 'தேனைப்பாலை' என்னும் ௫௮-வது பாட்டின் உரைக் குறிப்பில் 'காண்க' என்பதற்குப்பின் 'உம்பரானை - மேலாய தேவனை என்றுமாம்' என்றதைச சேர்த்துக்கொள்க.

௧௫௪-ம் பக்கம், மாறிலாத என்ற ௯௧-வது பாட்டின் இறுதியடியில் 'நெஞ்சுடைய நாயினேன்' என்பதை, 'நெஞ்சுடையன் ஆயினேன்' எனத திருததிக்கொள்க.

௧௫௭-ம் பக்கம். ௯௪-வது பாட்டின் குறிப்பில், ௧-வது ௨-வது வரிகளில் 'என்பதற்குவானன்' என்பதை எடுததுவிட்டு 'என்பதன் இறுதி மகரத்திற்கு னகரம்' என்பதை அமைத்துக் கொள்க

௧௫௮-ம் பக்கம். 'வானநாடரும்' என்ற ௯௫-வது பாட்டின் குறிப்பின் இறுதியில், 'வையகததுடைய இசையே' யென்று பாடங்கொண்டு, 'உலகினுடைய வித்தானவனே' எனப் பொருள் கொள்வது முண்டு. அவவாறு கொள்ளுமிடத்து நைய என்ப தற்கு உள்ளம் நைய எனப் பொருள் கொள்க' என்பதைச சேர்த்துகக்கொள்க.

௧௬௩-ம் பக்கம் அடிக்குறிப்பில் 'கொள்ளப் படும்' என்பதறகுப்பின், 'விடாதி' 'விட்டிடாதி' யென்பன 'விடுதி' 'விட்டிடுதி' யெனத் திரிந்துள்ளன என்பதைச சேர்க்க.

௧௬௭-ம் பக்கம். 'தீர்க்கின்ற' என்னும் ௮-வது பாட்டின் உரையில் 'பயப்படும்படி' யென்றதற்குப்பின், 'ஒலிக்கின்ற' என்றதைசசேர்த்துக்கொள்க.'எப்பொழுது' என்பதற்குப்பின் 'அல்லது எஙஙனம்' என்பதைச சேர்த்துக் கொள்க.

௧௭௧-ம் பககம். 'களிவந்த' என்ற ௧௫-வது பாட்டின் உரையுள், 'தந்தையாயினார் தலைவனே' என்பதற்குப் பதிலாக 'எந்தையாகிய பெருமானே' யென்பதை அமைக்க.

௧௭௩-ம் பக்கம். 'இருந்தென்னை' என்ற ௧௮-வது பாட்டினுரையுள், 'ஒற்றிவைப்பாய்' என்பதறகுப் பதிலாக 'ஒற்றி வைதது கொள்ளுக' என்பதை அமைக்க.

கஅO - ம் பக்கம். 'புலன்கள்' என்ற உஅ - வது பாட்டின் குறிப்பின் முடிவில், கருணாகரன் - கருணைக்கு நிலையமானவன்; ஆகரம் - சுரங்கம், தொழுகுலம் தெய்வம் என்பதைச் சேர்க்க

கஅஉ - ம் பக்கம் 'சசைசயனே' என்னும் நக - வது பாட்டின் உரையுள், 'வெளிப்படையான' என்பதற்குப் பதிலாக 'மிக்க குளிர்ச்சியுடைய' என்பதை அமைத்துக் கொள்க.

கஅஉ - ம் பக்கம். 'அடற்கரி' என்ற பாட்டின் குறிப்பின் முடிவில், 'கரிதாய்' எனப் பாடங்கொண்டு, 'கருமை நிறமுடைய' என்றும் பொருள் கொள்ளலாம்' என்பதைச் சேர்க்க

கஅஎ - ம் பக்கம். 'வலைதலை' என்னும் சO வது பாட்டினுரையுள், 'உச்சியாய்' என்பதற்குப் பதிலாக 'யிலிருக்கும் தலைவனே' என்பதை அமைத்துக்கொள்க

கஅகூ - ம் பக்கம் 'மன்னவனே' என்னும் சந - வது பாட்டினுரையுள், 'இப்படைப்பு' முழுதும் என்பதற்குப் பதிலாக, 'இவை எல்லாமும்' என்பதை யமைத்துக் கொள்க.

ககூசு - ம் பக்கம். 'பாசம' என்ற உ - வது பாட்டின் குறிப்பினுள், 'என்பாய் என்றா' என்றதற்குப் பின் 'என்று கூறுவாய்' எனப் பொருள் கொள்ளலுமாம்' என்பதைச் சேர்க்க

உOஉ - ம் பக்கம். 'கோழி சிலம்ப' என்ற அ - வது பாட்டின் குறிப்பில், ஆழியான் - வஞ்சகன, கள்வன் என்னுஞ் சொற்களை எடுத்து விடுக.

உOரு - ம் பக்கம். 'ஆரத்த பிறவி' என்ற கஉ - வது பாட்டின் உரையுள், 'ஆடைகள்' என்பதற்குப் பதிலாக 'அணிகலன்கள்' என்று அமைக்க.

உOசு - ம் பக்கம். 'பைங்குவளை' என்ற கந - வது பாட்டின் உரைக்குறிப்பில், 'தங்கள்' என்பதற்குத் 'தங்கண' என்று பாடங் கொள்வாருமுளர், என்பதைச் சேர்க்க.

௨௫௦-ம் பக்கம். 'ஒன்றாய்' என்ற ௮-வது பாட்டின் குறிப்பினுள, 'என்றா' என்பதற்குப் பின் 'சிவதததுவம் முதலிய வற்றில் இறைவன் அத்துவிதமாய்க் கலநது அவற்றைத் தோற்று வித்தலின் இறைவனை அவையேயா யிருப்பதாகக் கூறினார்' என் பதைச சோத்துக் கொள்க

௨௫௧-ம் பக்கம். 'நோயுற்று' என்னும் ௧௦-வது பாட்டி னுரையுள், 'குளிர்ந்த' என்பதை எடுதுவிடவும்.

௨௫௩-ம் பக்கம். 'கருவாய்' என்னும ௧௪-வது பாட்டி னுரையுள், 'பூப்போன்ற' என்பதற்குப பதிலாகப் 'பூவினையுடைய' என்றமைத்துக் கொள்க

௨௯௬-ம் பக்கம் 'கனவேயும' என்பதன் ௧௦-வது பாட்டி னுரையுள், 'வேல்போன்ற' என்பதற்குமுன 'பகைவா பாற் சினநது கொல்லும்' என்றதைச சேர்த்துக்கொண்டு, 'பருத்த' என்ற சொல்லை எடுத்து விடுக.

௩௦௯-ம் பககம். 'தீ தில்லை' எனற ௭-வது பாட்டின் குறிப் பில், 'மாணபுடையவன்' என்பதறகுப்பின் 'பிரமசாரி என்றுங் கொளக' என்பதைச சேர்க்க.

௩௧௨-ம் பக்கம் 'சீரார் பவள' என்ற ௧-வது பாட்டின் குறிப்பில் 'வேற்கண்' என்பதற்குப்பின் 'என்றார்' என்பதைச சேர்த்து முற்றுப் புள்ளியிடுக.

௩௪௦-ம் பககம. ௪-வது வரியில் 'உதயவொளி' என்பதற்குப் பின், 'உதய மென்பதற்கு உதயகிரியெனப் பொருள் கொண்டு அதனை எழ என்பதனோடு சேர்த்தலுமுண்டு', என்பதைச சேர்கக.

௩௯௫-ம் பக்கம். 'புற்றுமாய்' என்னும் பாட்டின் உரையில், 'தன்மைத்தாண' என்பதைத் 'தன்மையனை' என்று திருத்திக் கொள்க.

௩௯௯-ம் பக்கம். 'புலையனேனையும்' என்ற பாட்டின் உரை யுள், 'மலைவில்லானே' என்பதற்குப்பின் 'திருப்பெருந்துறையில் விரும்பி யமர்ந்த சிவபெருமானே' என்றதைச் சேர்க்க.

௩௬அ-ம் பக்கம். 'ஆட்டுத்தேவர்' என்ற பாட்டின் குறிப் பில் 'அதாவது' என்பதை 'அவரை' என்று திருத்துக.

௩அ௦-ம் பக்கம். 'கருடக் கொடியோன்' என்ற பாட்டின் குறிப்பினிறுதியில், 'பொல்லல்-பொள்ளல், துளையிடல்' என்ற தைச சேர்க்கவும்.

௪௧௧-ம் பக்கம். 'திருத்தனே' என்ற பாட்டின் குறிப்பி னிறுதியில், 'எல்லாவற்றையும் ஒடுக்கிய காலத்தில் ஒடுக்கினமைக்கு அறிகுறியான நீற்றினை இறைவன் அணிந்து விளங்குதலின் ற்றனே என்றார்' என்பதைச சேர்த்துக் கொள்க.

௪௧௧-ம் பக்கம். 'எங்கள் நாயகனே' என்ற பாட்டின் உரை யின் ௨-வது வரியில், 'என விருவர்' என்பதை 'என்னு மிருவர்' 'ன்று திருத்திக் கொள்க.

௪௩௬-ம் பக்கம். 'கூடிக்கூடி' என்ற பாட்டின் உரையில், ீ' என்பதற்குப் பின் 'என்னொடு அத்துவிதமாய் இணைந்து' ன்பதைச சேர்த்துக்கொள்க. குறிப்பினிறுதியில் 'அருள் லந்தே' என்பதை 'கலந்தே அருள் என மாற்றுக', என்பதைச சர்த்துக் கொள்க

௪௬எ-ம் பக்கம். 'வம்பனாய்த் திரிவேனை' என்னும் பாட்டி ரையில் 'அன்பராயினார்க்கு' என்பதற்குப் பின் 'அருள் புரிந்து ண்மையடி யார்பால்' என்பதைச சேர்த்துக் கொள்க.

௫௧௩-ம் பக்கம். 'திற்பார் திறக' என்ற பாட்டின் உரையில், அருமை பாராட்டினால்' என்பதற்குப் பதிலாக 'தலைசாய்த்தால்' ரறு அமைத்துக் கொள்க. குறிப்புள், பேழ்கணித்தல் முதல் தி வரையுள்ள பகுதியை எடுத்து விடுக.

௫௨அ-ம் பக்கம். 'ஒன்றினோ டொன்று' என்ற பாட்டினுரை ௪-வது வரியில் 'நிலைபெறுதல்' என்பதற்குப் பதிலாக 'பின் ஙெ்குதல்' என்பதை அமைத்துக் கொள்க.

௫௨௯-ம பக்கம். 'பநதவிகார' என்ற பாட்டின் உரையுள் ௯-வது வரியில் 'இடையூறுகள' என்பதற்குப்பின் 'தோன்றுதல்' என்பதைச சேர்த்துக் கொள்க.

௫௩௧-ம பககம். 'மண்ணினில்' என்ற பாட்டின் உரையுள் ௬-வது வரியில் 'கலக்கஙகள்' என்பதற்குப்பின் 'எழுநதொழி தல்' எனபதைச சேர்த்துக் கொள்க.

சைவத்திருவாளர் - அ மு. சரவண முதலியாரவர்கள் திருத்தக் குறிப்புக்கள் —

௧௧௧-வது பக்கம். ௨௫ - வது பாட்டு—வண்ணந்தான் அது காட்டி வடிவு காட்டி மலர்க்கழல்கள் அவைகாட்டி - வண்ணம், வடிவு, கழல் என்னு முறை உண்மைக் காட்சியைப் புலப்படுத்து கின்றது. மக்கள் காட்சியில் சேய்மையில் வடிவும், நெருங்க நெருங்க உறுப்பும, அண்மையில் வந்த பின் ஒளி அல்லது நிறமுந் தோன்றும். 'கடவுள் காட்சியில் முதலில் ஒளியும் பின்னா வடிவும அதன் பின் திருவடி முதலிய உறுப்புங் காணப்படும.

௧௧௨ - வது பக்கம். ௨௬ - வது பாட்டு—வாக்குன் மணி வார்த்தைக் காக்கி-எனது வாயைத் தேவரீர விஷயமாகப் பேசும் மாணிக்க வாசகங்கட்கு உரியதாக்கி எனினும பொருந்தும். பிறண்டும் 'மாசில் மணியின் மணிவார்த்தை பேசிப் பிறப்பறுத் தேன்' என்பார.

௧௧௫-வது பக்கம். ௨௭ - வது பாட்டு—கிடக்கின்றேனை .. கரை காட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே—கரைகாட்டி யாட்கொண்டாய் என்பதை விகுதி பிரித்துக் கூட்டிக் கிடக்கின் றேனை ஆட்கொண்டு, மூர்க்கனேற்குக் கரைகாட்டினாய் என இயைக்க. கிடக்கின்றேனை என்னும் வினையாலணையும் பெயர் கிடந்த என்ற பொருளில் வருவது அரிது. 'ஐ' யைச் சாரியை யாகவும் கொள்ளலாம்

௧௨௫-௧௨௬-வது பக்கங்கள். ௩௦ - வது பாட்டு—தயிராகி... போகேன்.... உண்டுடுத் திருந்தேனே—நேர் முறையிலேயே பொருள் கொள்ளலாம்—தயிராகிப் போகேன்...ஊனில் ஆவியை ஓம்ப உண்டு உடுத்து இன்னமிருந்தேன் என வினைமுடிவு செய்க. 'போகேன்' என்பதை முற்றெச்சமாகப் பொருள் கொள்க.

௧௨௬-வது பக்கம். ௩௧-வது பாட்டு—யானையை ஒத்திருந்து-ஒத்திருந்து கண்டிலேன் எனக் கூட்டி, யானை தன்னை (- தனது

உடலை) அறியாததுபோல யான் உள்ள கருவைக் கண்டிலேன் எனவும் பொருள் கொள்ளலாம்.

௧௨௪-வது பக்கம். ௪௧-வது பாட்டு—கிற்றிலேன் கிற்பன் உண்ணவே—வருதற்குக் கிற்றிலேன், ஆனால் உண்ணுதற்குக் கிற்பேன்-உணவை என்றே பொருள் கொள்ளலாம். மேற்பாட்டிலும் ‘உண்டுடுத் திருந்தேன்’ எனக் கூறுதல் காண்க

௧௨௮-வது பக்கம். ௪எ-வது பாட்டு—அஃதிலான்—அத் தொடர்பிலான் எனப் பொருளுரைப்பின் தினையும் எண்ணும் வழுவாதலில்லை.

௧௩௦-வது பக்கம். ௫௦-வது பாட்டு—ஆண்டநாள் அறிவனோ அல்லனோ—தேவரீர் ஆண்ட பின்னர் யான் அறிஞனோ மூடனோ எனவுங் கொள்ளலாம்.

௧௫௪-வது பக்கம் ௬௦-வது பாட்டு—அன்பும் பொய்—என் அன்பும் பொய்யானால் வினையேன் பொய்யாக அழுதால் உன்னை அடைதல் கூடுமோ? எனக் கொள்ளலுமொன்று.

௧௬௮-வது பக்கம். ௬௫-வது பாட்டு—ஆடுவித்தவா...நைய...இசைவே—ஆடுவித்தவாறும் இசைவே நையவே (நைதற் பொருட்டே) எனவும் கொள்ளலாம்.

௧௬௦-வது பக்கம். ௬அ-வது பாட்டு—துப்பனே - நுகர்ச்சிப் பொருளாயுள்ளவனே என்றுங் கொள்ளலாம்.

௧௬௧-வது பக்கம். ௬௬-வது பாட்டு—பன்ன ..என்னை .. பாடவே—‘பன்னவும் பாடவும் வருகவென் எனை’ என்றுங் கூட்டலாம்.

௧௯௦-வது பக்கம். ௨௬-வது பாட்டு—குலங்களைந்தாய் களைந் தாய் என்னைக் குற்றம் - எனது குலப்பற்றை முன்னர்க் களைந்து பின்னர் ஏனைய குற்றங்களைக் களைந்தாய் எனக் கூறுதலமையும். குல நினைவு வீடுபேற்றுக்கு ஒரு பெருந்தடையென்பது திருநாளைப் போவாரை இறைவன் நெருப்பில் இறங்குமாறு செய்து அந்நினைவைப் போக்கி வீடு அருளியமையால் நன்கு புலனாவது தோன்றும்.

மீண்டும் அடிகள் 'சாதிகுலம் பிறப்பென்னும் சுழி' எனக் கூறுதல் காண்க.

௧௮௨-வது பக்கம். ௩௨-வது பாட்டு—கடற்கரிதா யெழு நஞ்சு-கடலினைக் கரிதாய் எழும் நஞ்சு எனவுங் கொள்ளலாம்.

௧௮௨-வது பக்கம். ௩௩-வது பாட்டு—கண்டது செய்து .. மிண்டுகின்றேனை - 'கருணைமட்டுப் பருகிக் களித்தும் கண்டது செய்து மிண்டுகின்றேனை' என்று கொண்டு கூட்டி, "தேவரீர் ஆட்கொண்ட ஞான்று கருணைத் தேனைப் பருகி மகிழ்ந்தும், அருள் வழிச் செல்லாது கண்டது செய்து திரியுமென்னை விட்டுவிடாதே, முன்போல் இன்னொரு முறை ஆட்கொள்க" எனக் * கொளின் நன்கு பொருந்தும்.

௧௮௬-வது பக்கம் ௩௭-வது பாட்டு—திரைசேர் மடந்தை- கங்காதேவி எனப் பொருள் கொளல் சேரிது.

௧௮௯-வது பக்கம். ௪௪-வது பாட்டு—தொழுது செல்வான் - வணங்கிச் செல்வதற்கு எனப் பொருள் கோடலே அமையும்.

௧௯௧-வது பக்கம். ௪௭-வது பாட்டு—வெண்மணிப் பணிலம்.... பந்தப் பெருமை—உம்மைத் தொகையில் வல்லினம் மிகாதாகலின் முத்தைத் தருகிற சங்கு, அழகின் பெருமை எனக் கோடலே யமையும்.

௧௯௪-வது பக்கம். ௧-வது பாட்டு—ஏதேனும் ஆநாள் இடந்தாள்—ஆகாள் என்பதை முற்றெச்சமாக்கி ஆகாமற் கிடந்தாள் எனக் கொண்டு 'நின் செவிதான்' என்பதுவரை தூங்கிய வளை முன்னிலைப் படுத்தியதாகவும் பின்னர்த் தன்னோடு இருந்தவர்களை முன்னிலைப்படுத்திக் கூறியதாகவும் கொள்ளலாம். அன்றேல், தனக்குள் எண்ணியதாகவும் கொள்ளலாம்.

௧௯௫-வது பக்கம். ௨-வது பாட்டு—பாசம் பரஞ்சோதி .. அமளிக்கே—'இரவும் பகலும் நாம் பேசும்போதெல்லாம் பாசம்

பரஞ்சோதிக கென்பாய், இப்போது போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ' எனறும் கொள்ளலாம

ககூரு - வது பக்கம். உ-வது பாட்டு—ஈசனார்க் கன்பார் யாம் ஆர்—' அன்பு நிறைந்த யாம எத்தன்மையோம, அரனடியில் அயரா அன்பினையுடைய யாம் அஙஙனம் செல்வேமா' எனக் கொள்ளின் இனை வழுவமைதி வேணடுவதில்லை.

ககூசு - வது பககம். ங - வது பாட்டு—பத்துடையீர் .. .. இததனையும் வேண்டும எமக்கு—பதகுடையீர் முதலிய சொற்களைக் கேட்டு எழுப்ப வநதவர்கள் அவறறைத் தம்மை எளனஞ் செயயக் கூறியவையாகக் கொண்டு சிததமழகியார் பாடாரோ எனக கூறி நினனை எழுப்ப வநத எஙகட்கு இத்துனை அவமதிப்பும் வேண்டியதே எனக் கோடலும் அமையும்.

ககஎ - வது பககம. ச - வது பாட்டு—எண்ணிக்கொடுள்ளவா . .. எம்பாவாய் - எணணிக கொடுள்ளவா சொல்லுகோம். ஆனால் அததுனை நேரம்வரை இறைவனைப் பாடிக கசிநதுருக எமக்கு இயலாமற் போய்விடும். அதனால் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காமல் நீயே வநது எண்ணிக குறையிற்றுயில் எல், எனக கோடலும் அமையும்.

உ0ரு - வது பக்கம் கஉ - வது பாட்டு—வார்கலைகள் ஆர்ப்பரவஞ் செய்ய—ஆடையில் ஒலியெழுதலின்மையால் மேகலைகள் என்ற அணிகள் என்றே பொருள்கோடல் அமையும்.

உ0சு - வது பக்கம். கரு - வது பாட்டு—பைங்குவளை ... அரவத்தால் - குவளை, தாமரை முறையே அம்மைககும் அப்பனுக்கும் ஆனமைபோல, குருகு, அரவம் முறையே ஆகுமெனக் கோடலே அமையும். இன்றேல் வலிந்து பொருள்கோடலும் உமாதேவிக்குப் பாம்பணி கூறலும் நேரும்.

உஉச - வது பக்கம். கச - வது பாட்டு—பிறவாய் ..ஓட்டுகந்து - பிறவு - பிறப்பு; தொழிற்பெயர். ஓட்டு - முதனிலைத் தொழிற்பெயர்.

௨௩௦-வது பக்கம். ௧-வது பாட்டு—இசையின்-இஃது ஏவற்பன்மை யாகலின் இதனைப் பாடுவாராக எனப் படர்க்கையில் வைத்துப் பொருள்கோடல் பொருந்தாது.

௨௩௪-வது பக்கம். ௬-வது பாட்டு—உலக்கைபல வந்து நின்றார் - உலகமனைத்தும் உரலாயினும் போதாதெனச் சொல்லுமாறு பல உலக்கைகளை வரவிடுவார் பெரியார். உலகங்களே இடம் போதா எனச் சொல்லுமாறு காணப் பலவடியார்கள் வந்து நின்றார்.

௨௩௭-வது பக்கம். ௧௦ வது பாட்டு—செங்கயற் கண்பனி- மீன் போன்ற கண்களில் நீர்.

௨௩௮-வது பக்கம். ௧௧-வது பாட்டு—பாடுமின்...வண்ணமும் - ஆண்டவாறும் வண்ணமும் வாய்திறந்து பாடுமின் என முடிக்க.

௨௩௯-வது பக்கம். ௧௩-வது பாட்டு—எம்பெருமான் இமவான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்—'வாயு மனமுங் கடந்த மனோன்மணி, பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை, ஆயுமறிவுங் கடந்த அரனுக்குத், தாயு மகளு நற்றாரமுமாமே' (திருமந்திரம்), 'கனகமார் கவின்செய் மன்றினில், அனக நாடகற்கெம் மன்னை, மனைவி தாய் தங்கை மகள்' (குமரகுருபரர்) என்ற வாக்குகளை நோக்குக. 'தவளத்த நீறணியுந் தடந்தோ ளண்ணல் தன்னொருபால் அவளத்த னாமகனாந் தில்லையான்' என்னும் திருக்கோவையாரும், 'சிவதத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் அவளத்தனென்றும், சத்தி தத்துவத்தினின்றுஞ் சிவதத்துவம் தோன்றலின் மகனென்றுங் கூறினார். இமவான்மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன் என்பதும் அப்பொருண்மேற்று வந்தது' என்னும் பேராசிரியருரையும் ஈண்டு உன்னற் குரியன.

௨௪௧-வது பக்கம் ௧௬-வது பாட்டு—ஆவகை...வண்ணங்கள் பாடி - உய்யுமாறு நாமும் அன்பரோடு வந்து அடிமைசெய்யுந் திறங்களைப் பாடி எனக்கோடலே யமையும்.

௨௭௨-வது பக்கம். ௧௭-வது பாட்டு—உய்ய அன்று-அன்று எனுஞ்சொல் எதிர்காலத்திலும் வருவதை 'அன்றறிவா மென்னா தறஞ்செய்க' என்னும் திருக்குறளா னுணர்க.

௨௭௭-வது பக்கம் ௧௧-வது பாட்டு—கவித்தகைமேல் இட்டு நின்றாடும் அரவம்-திருக்கூத்தனது கவித்த (இடது) திருக்கரத்தில் இடப்பட்டு படமெடுத்து நின்றாடும் அரவம்.

௨௭௯-வது பக்கம் ௬-வது பாட்டு - குலங்கல்வியென்னும் பித்த உலகு இறப்பென்னுஞ் சித்தவிகாரம்—'என்னும்' இரண்டடிகளிலும் வருதலால் கல்விவரையி லுள்ளவற்றைப் பித்த வுலகிற்கு அடையாகவும் பிறப்பிறப்பு என்பவற்றைச் சித்த விகாரத்துக்கு அடையாகவும் கொள்ளுத லமையும்.

௨௮௫-வது பக்கம். ௧௦-வது பாட்டு—யானிங்கிருந்து செல்வம் நயந்தறியா வண்ணம் எல்லாவற்றானும் தாய்போன்று வந்து ஆண்டுகொண்ட என முடிக்கலாம்

௨௯௩-வது பக்கம். ௧௩-வது பாட்டு—ஆனகருணையும் அங்குற்றேதான் அவனிடம் என் பொருட்டுண்டான கருணையும் அங்கு திருந்தத்தோற்றான் (என் தகுதியன்று, அவன் பெருங் கருணைதான்) என்றபடி.

௨௯௭-வது பக்கம் ௧௫-வது பாட்டு—ஆண்டிலனேல்-ஆண்பாலும் பெண்பாலும் விரவி சிறப்பினால் ஆண்டிலன் என ஆண்பால் முடிபைப் பெற்றன.

௨௯௯-வது பக்கம். ௧௭-வது பாட்டு—என்றவன்றன்-என்று என்றால் துதிக்கப்பெறும் அவன்றன்னடி என இயைக்க. அன்றேல், செல்வத்தில் அழுந்திக் கிடந்தமை யெல்லாம் வண்டின் வினையாகி விடும்.

௩௦௫-வது பக்கம் ௨௦-வது பாட்டு—இறுமாக்க-வீடு ஊர்த்துவ முகமும் பிறப்பு அதோ முகமும் ஆதலின் இறுமாக்க என்பதற்கு வீடடைய எனப் பொருள் கொள்ளலாம். இதனை

'என்றும் வீடடைந்தவர்' எனத் தொடங்கும் வைராக்கிய சதகச் செய்யுளாலும் அதற்குச் சிதம்பர சுவாமிகள் எழுதிய அரிய உரையாலும் அறியலாம்.

உசுக - வது பக்கம். ரு - வது பாட்டு—உருவாந்து கொண்டருளி - பூதலத்து ஓர் உருவந்து யான் உகப்பெய்த என்னை ஆட்கொண்டருளி எனவும் இயைக்கலாம்.

உசுஉ - வது பக்கம். அ - வது பாட்டு—மறந்தேயுந் தன் கழல் நான் மறவாவண்ணம் - அதனை மறந்தும் செய்யேன் யான் என்பதுபோல இததொடா அமைந்திருக்கிறது. மறந்தும் பிறன் கேடு சூழற்க, வழுக்கியும் வாயாற் சொலல் என்பவற்றை நோக்குக

உசுரு - வது பக்கம் க0-வது பாட்டு—சினவேல்-உடையான் சினத்தை உடைமைமே லேற்றியது உபசாரம்.

உசுரு - வது பக்கம். கஉ - வது பாட்டு— பத்திக் கடலுட் பதித்த - பத்திக் கடலுள் தன்னைப் பதித்த எனவும் கொள்ளலாம்.

உஎரு - வது பக்கம். கூ - வது பாட்டு—எய்திவீடுவா - இதைவிகுதி பிரித்துக்கூட்டி, யோகத்தால் உடலை விட்டு விண்ணுலகத்தை யடைவர் எனப் பொருள்கோடலே பொருந்தும். விண்ணையடைய இறப்பார் என்று அமைதலரிது.

உஅ0 - வது பக்கம் சு - வது பாட்டு—எரிமூன்று தேவர்க்கிரங்கி ..சிரமூன்றற—எரிகின்ற சோம சூரிய அக்கினி என்னு மூன்று தேவர்கட்கும இரங்கி அவர்கள் ஒளிப்பொருளாக ளாமாறு அருளி - ('மெய்ச் சுடருக் கெல்லாம் ஒளிவந்த பூங்கழலுத்தரகோச மங்கைக் கரசே' என்றார் பிறரும்.) சிரமூன்றற—தக்கன், எச்சன், பிரமன் இம் மூவர் தலை இதனை 'தக்கனை றறலைய யோச் சனவன் றலையுந் தாமரை நான்முகனறலையும், ஒக்கவரிந்து ஒண்டிருப் புருவம் நெரித்தருளிய வுருத்திரனே' என்னுந் திருமாளிகைத் தேவர் திருவிசைப் பாவாலறிக. மூன்று தேவர்க்கருளி

மூன்று சிரங்கொய்து மூன்றுருவமாகி மூன்று புரமெரித்தார் என்ற மும்மை நயத்தை யோர்க.

௩௧௩-வது பக்கம். ௩-வது பாட்டு—தன்கருணைவெள்ளத்து மன்றாற மன்னும - தன்கருணைப் பெருக்கோடு பெருமை சாரக நிலைபெற்ற என இயைக்க. ஊன்ற என்னும் பெயரெச்சம் ஊற என இடைகுறையாது குறையின வினையெச்சமாதல் காண்க.

௩௨௦-வது பக்கம். ௧-வது பாட்டு—இறைவன் மனவாக்கிற் கெட்டாதவனாயினும் இசைப் பிரியனாதலின் நின் இன்னிசையைக் கேட்டவளவில் வருவானென அடிகள் அருளுகின்றார்.

௩௩௪-வது பக்கம். ௪-வது பாட்டு—செய்யவாய்ப் பைஞ் சிறகிற் செல்வீ - (செல+வீ - பறந்து செல்கின்ற கிளியே—வீ - பறவை. செய்யவாயும் பைஞ்சிறகு முடைமையான் ஈண்டு கிளியை உணர்த்திற்று.)

௩௫௧-வது பக்கம் ௭-வது பாட்டு—இரங்கும் நமக்கம்பலக் கூத்தன் - இரங்கு எனவேகொண்டு அம்பலக்கூத்தன் என்பதை அண்மைவிளியாகக் கொண்டு 'நீ' என்னு மெழுவாயை வருவித் துரைப்பின் இடமயக்கம் ஏற்படாது.

௩௭௯-வது பக்கம். ௧௦-வது பாட்டு—வழங்குகின்றாய்க்குன் அருளாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன் - உன் அருளாரமுதத்தை வழங்குகின்றாய்க்கு - வழங்குகின்ற நின் பொருட்டு எனப் பொருள் கொள்க. விளையாட்டு நினைவில் இருக்கும் குழந்தைக்குத் தாய் வலிந்து ஊட்டுங்கால் அது அத் தாயின் பொருட்டு உண்ணுமேயன்றித் தன்பொருட்டென வெண்ணி யுண்ணாது. அதுபோல இக் கருத்து முன்னும் பின்னு முள்ள பாக்களா லறியப்படும்.

௩௮௨-வது பக்கம். ௫-வது பாட்டு—புளியம்பழமொத்திருந் தேன் - புளியம்பழம் உள்ளே கசிவு முதலிய உடைத்தாயிருப்

பினும் புறத்தே திண்ணிய தோல் மூடியிருத்தலளவிலே உவமையாகக் கொள்ளினுமாம்.

௩௮௪-வது பக்கம். ௮-வது பாட்டு—தலைமேல் வைத்து என்பதுவரை உடற்றொண்டு; அரற்றி என்பதுவரை உரைத்தொண்டு; அழல்சேர் மெழுகொப்ப ஆசைப்படல் (- உருகுதல்) உளத்தொண்டு. எனவே முத்தொண்டும் செய்ய விரும்பினேன் என்றபடி.

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்
அ	
[illegible]	[illegible]
[illegible]	[illegible]
அட..புல	[illegible]
அ..ரகரி	[illegible]
அடிபா..	௧௧
அடியார	௬௩0
அடியே, ..ல	௬௩௮
அடியே, மேல	௧௫0
அட்டமூர்த	௬௯உ
அணிமுடி	[illegible]
அணைடப்பகுதி	௬0
அண்ணாமலை	உ௧0
அதுபடிச	௩௬௩
அந..னை	௪௯௮
அந்தியரி..	உ௯உ
அமு..தேவா	உ௬௮
அப்பனே	௧..0
அம..மாம	உ௮0
அம்பலத்தே	உ௭௯
அமைமயே	௫௯௪
அயனே	உ௭0
அய..லை	உ௪௩
அரிகரும	உ௫௧
அரியானே	௧0௫
அருணைனிர்	௩௩௯
அருக்க..ருக்	உ௮௧
அருமந்த	உ௯௧
அருளாரெதா	௩௫உ
அருளாரமுத	௬௩0
அருளுடை	௬௯௫
அரைசனே	௩௫௭
அரை, பொ	௩௫..
அரைசே..	௧௮..
அடையாடு	உ௯௧
அலரவனும்	..௭உ
அலலிக்கமல	௩௯௫
அவமாய	உ௯0
அழுகேபுரிந	௬௬௩
அழிவின்றி	௬௯௯
அழுகேன்	௧௫௩
அளவறு	௧உ0
அளவிலாப்	௬உ௯
அளிதக	௩௭உ
அளிபுண்	௩௮உ
அறவையே	௬௯௭
அறிவேபெற்	௪௩உ
அறிவனே	௧௩0
அறிவிலாத	௧௧௮
அறுகெடு	உ௩௩
அறுக்கிலே	௩௯௯
அறையோ	௫உ0
அன்பராகி	௩௯௭
அன்பிறை	௩௫௯
அன்றாலநீழ	உ௮௯
அன்றேறெ	௪௬௧
அன்னேயிவை	உ00
ஆ	
ஆடரப்பூ	௩உ0
ஆடுகின்றிலை	௧௧௭
ஆட்டின்	உ௯௮
ஆட்டுத்தேவர்	௩௯௮
ஆனேறைவலி	௩௧௬
ஆதாபிலி	௬௭உ
ஆகியுமநதமு	௧௯௬
ஆமாறுன்	௧0உ
ஆயநான்	௧0௯
ஆயமொ	௩௩௯
ஆர்ககோ	௫௧௮
ஆரதபிறவி	உ0௫
ஆவகைநாமும்	உ௬௧
ஆவாதிரு	உ௯௯
ஆவாஅரி	உ௯உ
ஆற்றகில்லே	௩௯௬
ஆனையாய்க்	உஉ௬
ஆனைவெம்	௧௭௫
இ	
இடககுங	௬௮௩
இணையார்	உ௮உ
இநதிரனும்	உ௧௯
இந்திரிய	௬உ௩
இப்பாடே	௩௩௫
இப்பிறப்பி	௬௮௯
இயக்கிமார	௪உஉ
இரஙகுநம	௩௫௧
இரநதிரந	௩௫௯
இருகை	௧உ௬
இருள்திணிந்	௩௯உ
இருதலை	௧௯௮
இருநதெ, டா	௫உஉ
இருநதெ, டு	௧௭௩
இருப்பு	௧௬௮
இரும்பு	௬௭௧

பாட்டு	பக்கம்
இலலை	௧௫௭
இழிந்தனன	௧௬௦
இன்பந	௩௨௮
இன்பம்	௫௨௨
இன்பால்	௩௩௯
இன்றெனக	௩௯௦
இன்னிசை	௩௬௧
ஈ	
ஈசனே நீ	௧௬௭
ஈசனேயென்	௧௩௦
ஈணடிய	௬௯௦
ஈரம்பு	௨௯௪
உ	
உகந்தானே	௩௬௯
உங்கையிற்	௨௧௧
உடைய	௧௫௯
உடையானு	௩௬௭
உடையானே	௧௩௬
உணர்ந்த	௩௫௮
உண்டொ	௧௨௫
உண்ணப்	௨௯௮
உத்தமனத்த	௯௩
உம்பா	௬௯௩
உயயவல்லா	௨௯௫
உரியேனல்	௫௦௫
உருகிப்பெ	௨௯௯
உருதெரியா	௬௨௬
உரைமாண்ட	௩௧௦
உலகக்கை	௨௩௬
உலவாக	௧௩௨
உவலைச	௨௯௭
உழிதரு	௯௭

பாட்டு	பக்கம்
உழைதரு	௧௯௦
உளளப்	௨௫[illegible]
உள்ளமல	௫௨௩
உள்ளன	௧௭௭
உற்றவாக	௩௪௧
உறுரை	௪௭௮
உனனற், சீரு	௩௨௨
உன்னற், திரு	௩௧௯
உன்னையுகப்	௩௨௯
ஊ	
ஊசலாட்டு	௪௮௯
ஊனுயுயிராய்	௨௪௫
எ	
எங்கணுயக	௬௧௧
எசசமறிவே	௪௬௯
எண்ணிலேன்	௩௮௯
எண்ணுடை	௩௦௭
எநதையாய்	௧௨௮
எநதையெ	௨௮௨
எம்பிரான்	௧௪௧
எய்தலாவ	௧௬௭
எய்ததே	௩௮௩
எரிமூன்று	௨௮௫
எறும்பிடை	௧௭௭
எனைநானெ	௬௬௫
என்பாலைப்	௬௭௬
என்புள்ளுரு	௬௮௦
என்பே	௫௦௯
என்றும்	௩௦௩
என்னணி	௫[illegible]௦
என்னப்பன்	௨௯௯

பாட்டு	பக்கம்
என்னுலறியா	௫௩௫
எனனை	௧௭௧
ஏ	
ஏகாசமிட்ட	௩௦௨
ஏசாநிற்ப	[illegible]
ஏசினும்	௧[illegible]௩
ஏதமிலா	௩[illegible]
ஏய்ந்த	௬௮௯
ஏராாிவூங்கு	௩௩௨
ஏர்தரு	௩௨௯
ஏழைத்தொ	௩௦[illegible]
ஏனையாவ	௧௨௨
ஐ	
ஐயநின்	௧௪௬
ஒ	
ஒள்ளித்தில	௪௯௭
ஒண்மை	௧௭௫
ஒப்புனக்	௪௯௯
ஒருவனே	௧௬௧
ஒனறுய	௨௫௦
ஒன்றினே	௫[illegible]௮
ஒன்றும	௪[illegible]௮
ஓ	
ஓடுங்கவந	௪௭௯
ஓயாதே	௨௧௮
ஓய்விலா	௧[illegible]
ஓரொருகால	[illegible]௦௮
க	
கடகரியும்	௨௭௭
கடலினுள்	௧௭௦

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
				கே	
கடலின்றிரை	௪௪௭	காதார்	௨௦௭		
கடலேயனைய	௪௩௩	காப்பாய்	௪௦௦	கேட்டாயோ	௨௧௮
கடவுளே	௧௩௯	காமனுட	௩௦௮	கேட்டாரும்	௧௧௪
கடையவ	௧௬௩	காருடைப்	௩௩௦		
கட்டறு	௧௨௯	காருறு	௧௬௪	**கை**	
கணகளிரண்	௫௨௭	காலமூண்	௪௫௯	கையார்	௨௨௩
கணடது	௧௮௨	காஞாபுலித	௨௭௫	கையாற்	௩௮௪
கணணரு	௩௨௦				
கண்ணபயன்	௨௪௮	**கி**		**கொ**	
கணஞரா	௪௪௨	கிஞ்சுக	௩௩௪	கொநதணவு	௩௩௧
கதியடி	௧௮௮	கிளியனார்	௪௫௨	கொம்பரில்	௧௭௪
கமலநான்	௪௧௧	கிளிவநத	௨௨௭	கொம்பில்	௪௮௨
கடல்மாண்ட	௨௬௪	கிற்றவா	௧௧௯	கொம்மை	௪௮௪
கரணஙகளஉ	௩௫௧			கொழுமணி	௧௭௯
கருடககொ	௩௮௦	**கீ**		கொள்ளுங்	௧௨௮
கருவாய்உல	௨௫௩	கீதமினிய	௩௨௫	கொளளர்	௧௬௪
கலநதுகின	௪௨௯			கொள்ளேன்	௯௨
கலலாதபுல்	௪௨௪	**கு**		கொன்றை	௩௨௪
கல்லாமணதது	௨௧௭				
களிவநத	௧௭௧	குதுகுதுப்	௧௮௩	**கோ**	
களவன்கடி	௨௫௬	குலஙகளை	௧௮௦	கோணிலா	௪௫௬
கறஙகோலை	௨௬௨	குலம்பாடி	௨௬௮	கோயில்சுடு	௨௭௦
கற்போலும்	௩௦௪	குழைத்தாற்	௪௩௭	கோலமேனி	௪௨௦
கற்றறியேன்	௪௭௩	குறியுநெறி	௪௮௧	கோலவரை	௩௧௭
கனவேயும்	௨௬௩	குறைவிலா	௩௫௯	கோலாலமா	௨௭௩
கன்றுருரித	,,			கோவே	௫௩௭
		கூ		கோழிசிலம்ப	௨௦௧
கா				கோற்றேன்,எ	௪௪௯
		கூடிக்கூடி	௪௩௬	கோற்றேன்	௩௩௫
காசணி	௨௩௨	கூவினை	௩௪௦		
காட்டகத்து	௫௨௪	கூறுநாவே	௪௩௯	**ச**	
காணலாம்	௧௨௬	கூற்றை	௪௬௨	சங்கம்அரற்றச்	௨௪௦
காணுங்	௫௨௫	**கெ**		சங்கரா	௧௪௦
காணும	௫௦௭			சங்கு	௫௩௩
காணுமாறு	௧௫௦	கெடுவேன்	௫௩௬	சசைசயனே	௧௮௧

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்
சடையா	௪௭௭
சட்டோதினை	௨௪௯
சதுரை	௪௫௭
சந்திரனை	௨௨௫
சலமுடைய	௨௭௯
சா	
சாடிய	௨௯௯
சாதல	௪௪௨
சாதிகுலம	௪௨௫
சாவமுன்	௯௪
சி	
சித்தமேபுகு	௪௯௫
சிந்தனை	௧௧௨
சிந்தை	௧௪௮
சிரிப்பார்	௬௫௬
சிரிப்பிப்பின்	௧௯௨
சீ	
சீரார்திரு	௨௯௨
சீரார்பவ	௬௧௧
சீலமின்றி	௫௬௯
சீவாநதீ	௬௮௧
சு	
சுடர்பொற்	௬௯௬
சுந்தரத	௬௨௭
சுந்தரா	௨௬௨
சுருள்புரி	௬௭௯
சூ	
சூடகந்தோள்	௨௬௫
சூடுவேன்	௨௨௯
சூரியனார்	௬௦௦
செ	
செங்கணவன	௨௦௯
செங்கணநெடு	௨௧௪
செடியாராக்	௬௮௪
செப்பார	௨௨௧
செம்மை	[illegible]௪௨
செய்த	[illegible]௧௯
செய்யவாய	௬௬௪
செய்வதறி	௧௬௧
செல்வநல்	௧௨௯
செழிகின்ற	௧௯௯
செழுகமல	௬௭௪
செறியுமி	௪௯௧
செறியும்	௪௫௯
சே	
சேரக்கருதி	௫௧௪
சொ	
சொல்லிய	௫௬௨
சோ	
சோதியாய்	௬௯௨
சோதியே	௪௦௯
சோலைப்ப	௬௬௭
ஞா	
ஞாலமிந்தி	௬௭௧
ஞானககரு	௨௪௧
ஞானவாள	௫௧௯
த	
தகைவிலா	௪௫௪
தக்கனு	௬௦௦
தக்கனையும	௨௭௧
தசகவிடு	[illegible]
தநதனுன்	[illegible]
தரிககினைன	[illegible]
தவமே	[illegible]
தறிசெறி	[illegible]
தனிததுணை	[illegible]
தனியனென	[illegible]
தனமை	[illegible]
தா	
தாதாடு	[illegible]
தாதாய்மூவே	[illegible]
தாமேதம	[illegible]
தாயாய	[illegible]
தாரகை	[illegible]
தாராய்	[illegible]
தாவாவரு	[illegible]
தாளியறுகி	[illegible]
தானஅநதமில	[illegible]
தி	
திகழுததிகழு	[illegible]
திண்போர	[illegible]
திருநதுவார	[illegible]
திருமாலும்	[illegible]
திருவார	,,
தில்லைமூதூர்	[illegible]
தினைததனை	[illegible]
தீ	
தீதில்லை	[illegible]
தீர்க்கின்ற	[illegible]
தீர்நதஅன்	[illegible]

பாட்டு	பக்கம்
து	
துடிகொ	[illegible]
துடியேரிடு	[illegible]
துணியாவுரு	[illegible]
துண்டப்	[illegible]
துப்பனே	௪௧௯
தூ	
தூவெள்	௬0௯
தெ	
தெயகுலவு	[illegible]
தென்பால்	௨௭௯
தே	
தேனாகிறுதகி	௯0௧
தேவதேவன்	௫௯௨
தேவாகோ	௧௩௬
தேனகமாம	[illegible]
தேரெடுகொ	[illegible]
தேனேப்	௧௯௫
தேன்பழச	௯௨௭
தேன்புக்க	௨௭௭
தை	
தையலார்	௫௫௧
தையலோர்	௯௨௯
தொ	
தொண்டர்கா	௫௧௬
தோ	
தோலுந்து	[illegible]
ந	
நயனாய்	[illegible]
நகைமீதெ	[illegible]
நஞ்சனர்	[illegible]
நடி..று	[illegible]
நண்ணிப்	[illegible]
நமசிவாய	௧
நரியை	[illegible]
நல்ல	[illegible]
நல்லமலரின்	௯0௧
நன்றாக	௨௭௮
நா	
நாடகத்தால்	[illegible]
நாதமுடைய	௫0௨
நாமகள்	௨௧௧
நாயிற்கடைப்	௨௮௯
நாயிறகடை	௫௫௧
நாயேனை	[illegible]
நாறொடி	௫௫௫
நாணோரென	[illegible]
நாறும்என்	[illegible]
நானேயோ	௫௭௬
நான்மறை	௨௧௧
நான்முகன்	[illegible]
நான்தனக்	[illegible]
நி	
நித்தமணு	௯௨0
நிருத்தனே	௫௧0
நிலம்நீர்	௯0௫
நிற்பார்	[illegible]
நினைபப	௧௪௬
நினையப்பிற	௯௧௭
நீ	
நீகதிமுன்	[illegible]
நீண்டகர	௯௨௧
நீண்டமாலு	[illegible]
நீதியாவன	[illegible]
நீரினபவெ	[illegible]
நீலவுரு	[illegible]
நெ	
நெகருநெக்	[illegible]
நெடுநதை	[illegible]
நெறிசெய்	[illegible]
நெறியல்லா	[illegible]
நோ	
நோயுற்று	[illegible]
ப	
பங்கயமா	[illegible]
பசைத்தா	௫௭௯
பஞ்சாயஅடி	௪௭௫
பஞ்சாயவ	[illegible]
பஞ்சின்மெல்	[illegible]
படமாக	[illegible]
பணிவார்	[illegible]
பண்சுமந்த	[illegible]
பண்டாய	[illegible]
பண்ணோர்	௫௭௨
பண்ணினேர்	[illegible]
பண்பட்ட	[illegible]
பத்தர்சூழப்	[illegible]
பத்திமை	[illegible]
பத்திலனே	[illegible]
பாததணைவிர	[illegible]

பாட்டு முதற்குறிப்பகராதி

பாட்டு	பக்கம்
பாதவிகார	௫௨௯
பப்பற	௩௪௨
பாநதுபல்	௯௫
பரம்பரனே	௧௮௪
பரவுவார்	௧0௪
பரவுவாரவர்	௩௮௮
பரிதிவாழொ	௪0௫
பரிநதுவநது	௩௯௭
பருவரை	௪௫௭
பலனெம்	௯௭
பழிப்பில்	௧௯௧
பழுதில்தொல	௪0௭
பற்றுஙகவை	௪௪௭
பன்றைட்பரவி	௨௮௭
பா	
பாஙகிறைடு	௪௨௭
பாசம்பரஞ்	௧௯௫
பாசவே	௪௬௮
பாடவே	௧௬௧
பாடிமால்புக	௪0௨
பாடிற்றிலேன்	௧௯0
பாதாளம்	௨0௩
பாராரவிசும்	௨௧௫
பாருருவாய	௫0௫
பாரொரடு	௪0௧
பாரோரா	௩௮௩
பாாபத	௩௬௧
பாாபாடும்	௨௯௫
பாாபபதி	௨௯௭
பாலகனூர்க்	௩00
பாலும்அமுத	௨௮௮
பால்ஙினைந்	௪௬௯
பாவநாசா	௪0௭
பாழசசெய்	௪௮௩
பாற்றிரு	௫0௮
பி	
பிட்டுநேர்	௪௧௮
பிணைகிலாத	[illegible]
பிணியெலா	௪௫௩
பித்தனென	௩௮௮
பிதனென்னை	[illegible]௨0
பிரமனரி	௩0௯
பிறவிதனை	௪௨[illegible]
பிறவியென்	[illegible]
பிறிவறியா	௩௭௮
பு	
புகவே	௯௮
புகவேவே	௫0௯
புகழ்மினை	௫௧௨
புகுவதாவ	௧௨௧
புகுவேன்	௧௩௬
புணாப்ப	௧௪௩
புததன்புரந	௨௬௬
புததன்மு	௩0௫
புரநதரனூர்	௨௯௭
புரள்வாா	௫௧௪
புலன்கள்	௧௭௯
புலையனே	௩௬௬
புவனியிற்	௩௪௬
புழுவிறைற	௪௯௬
புறமே	௧[illegible]௨
புற்றில்	௪[illegible]௧
புறறுமாய்	௩௬௫
புன்புலால்	௪௭0
பூ	
பூஙகமல	௪௭௭
பூசவதும்	௨[illegible]௯
பூறைறைத	௪௨0
பூதஙகடோ	[illegible]௪௧
பூதஙகளை	௪௨௭
பூததாரும	௩0௩
பூமேலஅய	௨௫௯
பூவலா	௫0௨
பூவார்	[illegible]0௫
பூவியல	௨[illegible]௧
பூவேறு	[illegible]௪௬
பெ	
பெருநீரற	௧௭௮
பெருமான்	[illegible]௧௩
பெரும்பெரு	௩௭[illegible]
பெற்றது	[illegible]௭[illegible]
பெற்றிபிறர்க்	[illegible]௨௯
பே	
பேசப்பட்	[illegible]
பேசில்தா	[illegible]0
பேசும	[illegible]
பேதமில்	[illegible]
பேராரை	[illegible]
பேருஙகுணை	[illegible]
பை	
பைஙகுயனை	[illegible]0[illegible]
பைநநாப்ப	[illegible]
பொ	
பொச்சை	[illegible]0
பொறும்புறு	[illegible]

பாட்டு	பக்கம்
பொத்தை	௩௮௯
பொய்யவ	௧௬௭
பொய்யனே	௩௬௪
பொய்யாய	௨௫௫
பொய்யெல்லா	௫௪௦
பொருட்பற்றி	௩௦௪
பொருந்த	௧௬௬
பொருந்து	௪௮௭
பொருளே	௧௭௨
பொலிகின்ற	௧௬௮
பொழிகின்ற	௩௭௩
பொன்னிய	௫௩௧
போ	
போகம	௧௪௪
போதுசேரய	௩௭௧
போரேறே	௧௩௨
போற்றியரு	௨௧௨
போற்றியிப்	௧௪௨
போற்றி-போ	௧௩௮
போற்றி-வாழ	௩௩௮
போற்றியென்	௧௨௭
போற்றியோ	௧௩௮
ம	
மஞ்சுலா	௪௫௫
மடங்க	௧௭௩
மண்ணை தணிற்	௫௪௦
மணிணிணின்	௫௩௧
மதிக்கு	௪௮௨
மதத்துறு	௧௮௧
மருவிணிய	௪௭௫
மருளனேன்	௪௧௫
மலங்கினேன்	௪௧௯
மலைமகளை	௨௭௨
மலையரையன்	௩௭௬
மறுத்த	௧௬௬
மன்னதனே	௧௮௯
மன்னஎம	௧௬௦
மா	
மாடுஞ்சு	௫௮௭
மாடுநகை	௨௩௮
மாதாடு	௩௧௫
மாதிவா	௪௯௮
மாயவனப்	௪௬௦
மாயவாழக்	௪௯௪
மாயனை	௩௭௦
மாலயன்	௪௯௯
மாலறியா	௧௯௮
மாவேலிரம	௨௬௫
மாவிடுவகிர	௩௭௮
மாவா	௨௯௩
மாழாமை	௩௭௭
மாறி-ஏறன்	௩௫௫
மாறி-ஏறனே	௧௧௯
மாறிலாத	௧௬௪
மாறுபட்	௧௬௯
மானமழிந்	௩௦௬
மானனே	௧௯௬
மானேர்-க்கிம	௪௩௯
மா-க்கியுமை	௧௫௧
மானே-உமை	௧௩௩
மானேற்	௪௩௩
மி	
மிடைந்தெ	௩௮௧
மின்கணி	௩௭௭
மின்னிடை	௨௩௯
மின்னேர	௫௩௫
மு	
முடித்த	௧௩௪
முதலே	௧௮௮
முத்தணி	௨௩௭
முத்தனே	௪௧௪
முத்தனை	௪௩௭
முத்தன்ன	௧௯௬
முத்திக்குழ	௨௬௪
முத்திநெறி	௫௩௯
முத்துநல்	௨௩௦
முத்திய மூத	௩௮௪
முழுதயில்	௧௮௯
முழுமுதலே	௪௪௯
முழுவதும்	௯௬
முனையே	௨௬௧
முன்னை	௨௨௮
முன்இக்	௨௦௯
முன்னின்று	௩௪௮
முன்னீறு	௩௧௩
முன்னைப்	௬௦௨
முன்னையெ	௩௮௭
முன்னைவி	௫௧௯
மூ	
மூத்தானே	௪௭௫
மூவரு	௫௬௧
மூன்றங	௩௧௨
மெ	
மெய்தா	௯௧
மெய்யனே	௪௧௪

பாட்டு	பக்கம்
மே	
மேலைவா	௪௯
மேவுமுன்ற	௬௩௧
மை	
மைப்பொலியு	௨௨௨
மையமர்	௨௩௮
மையலா	௬௮௫
மையிலங்கு	௧௫௫
மொ	
மொயப்பா	௩௮0
மொய்யார	௨0௬
யா	
யாவாகரு	௫௨௧
யானைதும	௧00
யானைபொய்	௧௫௬
வ	
வட்டமலர்	௨௬௩
வணங்கத்	௨௮௯
வணங்கும்பின்	௧௬௫
வணங்குமி	௬௮௮
வண்ணைந	௧௧௧
வந்திமை	௫0௧
வம்பனுய்த்	௬௯௯
வம்பினேன்	௬0௨
வருந்துவன்	௧0௧
வலைத்தலை	௧௮௭
வல்லைவா	௬0௩
வழுங்குகின்	௩௭[illegible]
வளாகின்ற	௧௫[illegible]
வளைநத்து	௨௪௬
வண்புலால்	௬௫௨
வன்னெஞ்ச	௨௫௧
வா	
வாளாதடங்	௨௩௫
வாராவழி	௫௨௧
வாவிங	௩௩0
வாழ்கின்	௧0௯
வாழ்த்துவ	௧0௩
வாழ்ந்தார்	௫௨௬
வாளுலா	௬௫௬
வானநாட	௧[illegible]௮
வானவன்	௨௮௮
வானுகி	௧0௨
வான்கெட்டு	௨௧௭
வான்பாவிய	௬௫0
வான்வந்த	௨௧௭
வி	
விசச	௧௯௮
விசசுக	௧௬௯
விசசைதான	௧௧௫
விடுமின்	௫௧௨
விடைவிடா	௬௯௬
விண்ணைகத	௩௬௫
விண்ணுறு	௨௨௧
விண்ணோர்	௨௧௭
விரவிய	௬௯௧
வினைகேட	௬௬௯
வினைப்பிறவி	[illegible]
வினையிலே	[illegible]
வினையென்	[illegible]
வெ	
வெயர்ந்தின	[illegible]
வெருட்டுலை	[illegible]
வெ[illegible]து	[illegible]
வெய்யவனை	[illegible]
வெய்ட[illegible]	[illegible]
வெருவுமீனா	[illegible]
வெள்ளைக்குவி	[illegible]
வெள்ள[illegible]	[illegible]
வெள்ளைக்	[illegible]
வெறுப்பன	[illegible]
வே	
வேதிருவாகி	[illegible]
வேண்டத்தக்க	[illegible]
வேண்டுவ	[illegible]
வேண்டும்	[illegible]
வேண்டிடன்	[illegible]
வேதமுழ	[illegible]
வேதமோ	[illegible]
வேவத	[illegible]
வேனிலக	[illegible]
வேனிலம	[illegible]
வை	
வைத்தநிதி	[illegible]
வையபடிய	[illegible]
வையகம	[illegible]

திருமகள் அச்சகம், சென்னை-1,—1954.